# அகதா கிறிஸ்டி

Agatha Christie

# ஸ்டைல்ஸில் நடந்தது என்ன?

THE MYSTERIOUS AFFAIRS AT STYLES

கண்ணதாசன் பதிப்பகம்



Scanned by CamScanner

2925

# ஸ்டைல்ஸில் நடந்தது என்ன?

*The Mysterious Affairs At Styles*

அகதா கிறிஸ்டி

பாட்டாளிகள் பதிப்பகம்
சுப்பிரமணியர் கோவில் அருகில்
காவேரி சாலை,
ஈரோடை – 638 003

(நூ)

தமிழில் :

**கொரட்டூர் ஸ்ரீனிவாஸ்**

கண்ணதாசன் பதிப்பகம்

23, கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
போன் : 2433 2682
*கிளைகள்:* மதுரை ❖ பாண்டி ❖ கோவை ❖ வேலூர்

Scanned by CamScanner

# மொழிபெயர்ப்பாசிரியரின் உரை

அகதா கிறிஸ்டியின் காலத்தை வென்று நிற்கும் நாவல்களில் - குரூர வீடு, மன்மதக் கொலை மற்றும் ரத்த மேகங்கள் - ஆகிய மூன்று நாவல்களுக்கு சட்ட ரீதியான அனைத்து உரிமைகளைப் பெற்று அவற்றைக் கண்ணதாசன் பதிப்பகம் எனது மொழிபெயர்ப்பில் தமிழில் கொண்டு வந்துள்ள இத் தொகுப்பில் 'ஸ்டைல்ஸில் நடந்தது என்ன?' என்ற தலைப்பில் உங்கள் கைகளில் தவழ்ந்துக் கொண்டிருக்கும் இந்நாவலும் இணைந்துக் கொண்டு, நான்காவதாக அமைகின்றது.

துப்பறியும் புதினங்கள் என்றாலே, ஏதோ... கடைசி அத்தியாயத்தை எழுதி விட்டு அதற்கேற்றாற் போல் பத்து பதினைந்து அத்தியாயங்களை முன்கூட்டியே எழுதி முடிப்பதுதான் - என்று இலக்கியவாதிகளிடையே நிலவும் பொதுக் கருத்தினைச் சவுக்கடி கொடுத்துத் தகர்த்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க நாவல் இது!

மேற்குறிப்பிட்டது போன்றது அல்ல, ஒரு துப்பறியும் கதை. மாபெரும் மனோதத்துவ மருத்துவர் படித்தாலும் சரி... அல்லது உலகின் முதன்மையான துப்பறியும் நிபுணர் படித்தாலும் சரி... 'ஆஹா... இப்படி ஒரு கொலை சாத்தியமே..!' என அங்கீகரிக்கும் அளவுக்கு மாபெரும் திட்டமிடலுடன் கதை அமைய வேண்டும் என்ற துப்பறியும் புதினத்தின் இலக்கணத்தை, இலக்கிய ரீதியாக இக்கதையில் அறிமுகப்படுத்தியிருக்கிறார், அகதா கிறிஸ்டி!

துப்பறியும் புதினத்தின் சக்ரவர்த்தினியாக பிற்காலத்தில் அறியப்பட்டு, 'இலக்கிய வரலாற்றில் ஷேக்ஸ்பியருக்கு அடுத்து மிக அதிகமான பிரதிகள் விற்கும்படி புதினங்கள்

Scanned by CamScanner

படைத்தவர்!' என்ற நீங்கா பெருமையுடன் வரலாற்றில் இடம் பிடித்துள்ள அகதா கிறிஸ்டியின், முதல் நாவல் இது!

இரு வேறு வசனங்கள். இரண்டும் புருஷன் - பெண்டாட்டி சண்டை குறித்த வசனங்கள் தான். சின்ன வசனங்கள். மொத்தமே ஐந்து வரிகள் நீண்டால் ஜாஸ்தி. இந்த இத்துனூண்டு வசனத் துண்டுகளை வைத்துக் கொண்டு, வாசகனின் துப்பறியும் கதைக்கான தீனியை அள்ள அள்ளக் குறையாமல் மேதாவித் தனமாய் அளித்திருக்கிறார், அகதா.

நான் முதல் பத்தியில் கூறிய மூன்று கதைகளுடன் தான் திரு. காந்தி கண்ணதாசனைச் சந்தித்தேன். அவற்றில் மிக திருப்தியடைந்தவராய் தோன்றிய அவர், ''ம்! பிடியுங்கள்..! இந்த ஸ்டைல்ஸ் கதையையும் தமிழாக்குங்கள்...!'' என்று ஊக்குவித்தார். இதோ, புத்தகமாக்கி விட்டார். அவருக்கு என் நன்றிகள்.

இதற்கு வழிவகுத்துத் தந்துள்ள நான் பூஜிக்கும் துர்க்கா தேவியான திருவேற்காடு கருமாரியம்மனுக்கும், எனக்கு ஓயாமல் ஊக்குவிப்புத் தந்துள்ள என்னைப் பெற்ற தாய் தந்தைக்கும், நான் ஆசையாய் செய்துள்ள இந்த மொழியாக்கம் - ஒரு சின்னஞ்சிறு காணிக்கை.



முனைவர் கொரட்டூர் ஸ்ரீனிவாஸ்,
252, இரண்டாவது தெரு,
கொரட்டூர், சென்னை-80
srinivaskns@yahoo.co.in

Scanned by CamScanner

## ஸ்டைல்ஸில் நடந்தது என்ன?

### முக்கிய கதாபாத்திரங்கள்

| | |
|---|---|
| ஸ்டைல்ஸ் | : கதை இடம்பெறும் எஸ்டேட் மாளிகை |
| கேவண்டிஷ் | : கேவண்டிஷ் பரம்பரையின் மூத்த நபர் |
| திருமதி எமிலி | : கேவண்டிஷின் மனைவி |
| திரு. ஜான் கேவண்டிஷ் | : எமிலி - கேவண்டிஷ் தம்பதியினரின் மூத்த மகன் |
| திருமதி மேரி ஜான் | : ஜானின் மனைவி |
| திரு. லாரன்ஸ் | : எமிலி - கேவண்டிஷ் தம்பதியினரின் இளைய மகன் |
| திரு. ஆல்ஃபிரட் | : எமிலியின் இரண்டாவது கணவன் |
| செல்வி எவிலின் ஹோவோர்ட் | : எமிலியின் உயிர்த் தோழி |
| செல்வி சிந்தியா | : எமிலி வளர்க்கும் ஓர் அனாதைப் பெண் |
| திரு. பௌரீஸ் மற்றும் திரு வில்கின்ஸ் | : மருத்துவர்கள் |
| **திரு. ஹெர்குல் பொய்ரெட்** | : **துப்பறியும் நிபுணர்** |
| **திரு. ஹேஸ்டிங்ஸ்** | : **பொய்ரெட்டின் உற்ற நண்பர்** |

மற்றும் வேலையாட்கள் (நானி, ஆனி) தோட்டக்காரர்கள், வக்கீல்கள்....

Scanned by CamScanner

அத்தியாயம் ஒன்று
நான் ஸ்டைல்ஸ் சென்றடைந்தேன் 9

அத்தியாயம் இரண்டு
ஜூலை 16 மற்றும் 17 30

அத்தியாயம் மூன்று
துயரம் சம்பவித்த இரவு 43

அத்தியாயம் நான்கு
பொய்ரெட் துப்பறிய வந்தார் 55

அத்தியாயம் ஐந்து
"அது ஸ்டிரிச்நைன் கிடையாது, இல்லையா?" 85

அத்தியாயம் ஆறு
மரண விசாரணை 124

அத்தியாயம் ஏழு
பொய்ரெட் கடன்களை அடைத்தல் 142

அத்தியாயம் எட்டு
புதிய சந்தேகங்கள் 158

Scanned by CamScanner

அத்தியாயம் ஒன்பது

டாக்டர் பௌரீஸ் 182

அத்தியாயம் பத்து

கைது 202

அத்தியாயம் பதினொன்று

நீதிமன்றம் சென்ற வழக்கு 226

அத்தியாயம் பனிரெண்டு

அந்தக் கடைசி இணைப்பு 253

அத்தியாயம் பதின்மூன்று

பொய்ரெட்டின் விளக்கம் 269


Scanned by CamScanner

## கண்ணதாசன் பதிப்பகம்

*வெளியிடும்*

### நாவல்கள்

| | |
|---|---|
| ரத்த மேகங்கள் - *அகதா கிறிஸ்டி* | -100.00 |
| குரூர வீடு - *அகதா கிறிஸ்டி* | -100.00 |
| மன்மதக் கொலை - *அகதா கிறிஸ்டி* | -100.00 |
| ஸ்டைல்ஸில் நடந்தது என்ன? - *அகதா கிறிஸ்டி* | - 90.00 |
| கோடைகால வேளை - *ஜேம்ஸ் ஹாட்லி சேஸ்* | - 80.00 |
| புலிவாலைத் தொடர்ந்து - *ஜேம்ஸ் ஹாட்லி சேஸ்* | |
| ஆகாய ஆசைகள் - *ஜேம்ஸ் ஹாட்லி சேஸ்* | |
| வானவில்லைத் தேடியவன் - *ஜேம்ஸ் ஹாட்லி சேஸ்* | - 50.00 |
| அந்தப் பறவைகளிடம் சொல்லுங்கள் - *ஜேம்ஸ் ஹாட்லி சேஸ்* | - 50.00 |

Scanned by CamScanner

Mohanpreethi0707.mp@gmail.com

## அத்தியாயம் ஒன்று

# நான் ஸ்டைல்ஸ் சென்றடைந்தேன்

'ஸ்டைல்ஸ் எஸ்டேட்டின் மர்மம்' என்று மிகப் பிரபலமாய் அறியப்பட்ட கொலை வழக்கு, அது நடந்த சமயத்தில் பொது மக்களிடையே தீவிரமான பரபரப்பையும், விறுவிறுப்பையும் உண்டு பண்ணியிருந்தது. அந்தத் தாக்கம், இப்பொழுது ஏறக்குறைய முழுக்க அமுங்கி மறைந்தே விட்டது. 'இப்படி ஒரு வழக்கை இனி வரலாறு சந்திக்காது' என்ற அளவுக்கு உலகளாவிய அளவில் விதவிதமான வாத - பிரதிவாதங்களுக்கு இவ்வழக்கு களமமைத்துத் தந்ததைக் கருத்தில் கொண்டு, துப்பறியும் நிபுணரும் என் ஆத்ம நண்பனுமான ஹெர்குல் பொய்ரெட் மற்றும் ஸ்டைல்ஸ் எஸ்டேட் குடும்பத்தினர் உட்பட, இரு தரப்பினராலும், வழக்கின் முழு விவரத்தையும் பதியும்படி அறிவுறுத்தப்பட்டேன். இது ஒன்றுதான், வழக்கு குறித்து இன்றும் விதவிதமாய் உலவிக் கொண்டிருக்கும் அனைத்து வதந்தி களையும் மூட்டை கட்டும் என்பது எங்களது நம்பிக்கை.

எனவே, இவ்வழக்கோடு என்னை எந்தெந்த சந்தர்ப்பங்கள் இணைத்து முடிச்சுப் போட்டு வைத்தன என்பதை, முதலில் நேயர்களுக்கு விளக்கி விடுகிறேன்!

நான் பணியாற்றி வந்த ராணுவ மருத்துவமனையில் தொடர்ந்து வேலை செய்ய முடியாத அளவுக்கு எனக்கு உடலில் தளர்ச்சி உண்டானது. காரணம் தெரியவில்லை. எனவே மருத்துவ விடுப்பு கேட்டு பெற்றுக் கொண்டேன். ஓய்வெடுத்தால் எல்லாம் சரியாகி விடும் என நம்பினேன். விடுமுறை அளிக்கப்பட்டது. ஆனால் எங்கு போவது என்றுதான் தெரியவில்லை. நண்பர்களும் உறவினர்களும் காத தூரத்தில் அல்லவா இருக்கிறார்கள்...?!

Scanned by CamScanner

எப்படி, எங்கு ஓய்வெடுக்கப் போகலாம் என நான் எனது சிந்தனையை விரட்டிக் கொண்டிருக்கும்போது தான், ஜான் எனும் ஜான் கேவண்டிஷ்ஷைக் கடக்க நேரிட்டது. சில வருடங்களாக இவனைப் பற்றி சிறு தகவல் கூட என் பார்வைக்கு வந்ததில்லை. சொல்லப் போனால், இவனைப் பற்றி அப்படியெல்லாம் எனக்கு ஒன்றும் விமரிசையாய் தெரியாது. என்னைவிட பதினைந்து வருடங்கள் பெரியவன் ஜான். பார்க்க அப்படித் தெரியாவிட்டாலும் நாற்பத்தைந்தைக் கடந்தவன்தான்! நான் சின்னப் பையனாயிருந்த காலங்களில், இவனது தாயார் மாளிகையான 'ஸ்டைல்ஸ் எஸ்டேட்டில்' நிறைய தங்கியிருக்கிறேன்.

சிறிது நேரம் செலவழித்துக் கொஞ்சமாய் நினைவிலிருந்த கடந்த காலங்களைத் திருப்பிப் புரட்டிக் கொண்டோம். இந்த மலரும் நினைவுகள், ஓய்வெடுக்க என்னை அவன் எஸ்டேட்டுக்கு வருமாறு அழைப்பதில் போய் முடிந்தது!

''உன்னை மறுபடியும் பார்க்கிறதுல பாட்டி குதூகலிச்சுப் போயிடுவா - மறக்க முடியாத அந்நாட்கள்!'' என்றான் அவன்.

''உங்க அம்மா நல்லாயிருக்காங்க தானே?'' - நான் கேட்டேன்.

''ம், சௌக்கியமே. அவங்க மறுபடியும் கல்யாணம் பண்ணிக்கிட்ட சேதி உனக்குத் தெரியுமில்லே?''

அடக்க முடியாத ஆச்சரியத்தை மறைக்கத் தெரியாது முகத்தில் காட்டி விட்டேன் நான். திருமதி எமிலி கேவண்டிஷ்...! மனைவியை இழந்த தனி மரமாக இரு மகன்களுடன் நின்ற ஜானின் தகப்பனார் கேவண்டிஷை மணந்துக் கொண்டபோது நடுத்தர வயதிலிருந்தார் எமிலி. ஆனாலும் - கொள்ளை அழகு! இன்றைய தேதியில் நிச்சயம் எழுபதுக்குக் குறைவாயிருக்க மாட்டார். என் ஞாபகத்துக்கு உட்பட்டு... எமிலி, ஊக்கம் செறிந்த உற்சாகத்தின் மனித உரு. ஏகாதிபதி... தன்னை எவரையும் நெருங்க விடாதவர். தான தருமங்கள் செய்வது மற்றும் பொது வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வது ஆகியவற்றில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். அந்தத் திறப்பு விழா, இந்த அனாதை இல்ல விழா, இன்னொரு முதியோர் விடுதி விழா என பறந்துக் கொண்டேயிருக்கும் பிறவி. தர்மம் செய்ய சுணங்காதவர். அதற்கு ஏற்றவாறு அதிக சொத்தும் அமையப் பெற்றிருந்தார்.

திரு. கேவண்டிஷ், மறுமணம் செய்துக் கொண்ட துரித காலத்தி லேயே, அவர் பிறந்த கிராமமான ஸ்டைல்ஸ்-ன் மையப்பகுதியை

Scanned by CamScanner

அப்படியே விலைக்கு வாங்கி, 'ஸ்டைல்ஸ் எஸ்டேட்'டினை எழுப்பினார். அவரது இரண்டாவது மனைவியாய் வாய்த்த எமிலியின் முழு கட்டுப்பாட்டிலிருந்த திரு. கேவண்டிஷ், இறக்கும் போது, அந்தக் கட்டுப்பாட்டுக்குக் கட்டுப்பட்டு, ஸ்டைல்ஸ் எஸ்டேட் முழுவதையும், மற்றும், சொத்தின் மிக அதிகமான பகுதியையும், தனது புது மனைவிக்கு, அவளுடைய ஆயுசு முழுக்கவும் இருக்கும்படி உயில் எழுதி வைத்து விட்டுக் காலமானார். அவரது இரு மகன்களுக்கும் தீர்க்கமாய் அநீதியை இழைத்த உயில். இருந்தாலும், மகன்கள் கேட்ட அத்தனைக்கும் அள்ளி அள்ளித் தரும் அசாதாரண சித்தியாகவே இருந்தார் எமிலி. ஜானின் தந்தையார் இவரை மறுமணம் செய்துக் கொண்ட போது இரு மகன்களும் சின்னக் குழந்தைகளாய் இருந்த காரணத்தால், பிஞ்சுகளைத் தன்னுடைய சொந்தக் குழந்தைகளாய் பாவித்து, சித்தி கொடுமையற்ற சிறந்த தாயாகவே வளர்த்தார்.

லாரன்ஸ், இந்த ஜானின் இளைய தம்பி, ஓட்டுக்குள் ஒடுங்கும் குணம் கொண்டிருந்தார். ஒரு மருத்துவராய் பட்டம் பெற்றிருந்தாலும் ஆரம்பத்திலேயே மருத்துவப் பணியைத் துறந்து விட்டு வீட்டுக்குள்ளேயே கிடந்தார். கலை இலக்கியம் என கொடி கட்டிப் பறக்க ஆயத்தங்களில் இறங்கினார். எழுதினார்... ஆனால் ஒன்றுகூட குறிப்பிட்டு வெற்றி பெறவில்லை.

ஜான், ஆரம்பக் காலங்களில் கொஞ்ச நாட்கள் வக்கீலாய் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தார். பிறகு, அவருடைய மனதுக்கு இணக்கமாய் ஒத்து வந்த கிராம வாழ்க்கையில் குவிந்து, அவரது தந்தையார் வாழ்ந்த கிராமத்தின் முக்கியப் புள்ளியாக ஆகி விட்டார். இரண்டு வருடங்களுக்கு முன்னால் கலியாணம் செய்துக் கொண்ட ஜான், தற்சமயம் மனைவியோடு 'ஸ்டைல்ஸ் எஸ்டேட்டில்' தான் இருக்கிறார்; இருந்தாலும், தனது தாயாருடன் பேசிப் பார்த்து, சொத்தில் சிறு பகுதியைக் கேட்டு, தனக்கென ஒரு குட்டி பங்களாவை நிர்மாணித்துக் கொள்ள முயற்சி செய்திருப்பார் என என்னுள் எழுந்த விவேகமான சந்தேகத்தை, நான் உள்ளுக்குள் அனுமதிக்கத் தான் செய்தேன்! ஆனால் திருமதி எமிலி கேவண்டிஷ் ஒப்புக் கொண்டிருப்பாரா....?! தன்னிச்சையாக திட்டங்களையும் முடிவுகளையும் மேற்கொள்ளத் துடிக்கும் ஒரு ஜீவன், எமிலி! அம்முடிவுகளுக்குள் ஏனைய அனைவரும் வரிசையாய் வந்து விழுந்து

Scanned by CamScanner

விட வேண்டும் என கறாராய் எதிர்பார்க்கும் பெண்மணி! ஜானின் முயற்சியை மறுத்திருப்பார்.

அவருடைய தாயாரின் மறுமணம் பற்றிக் கேட்டதும் என்னுள் விளைந்த ஆச்சரியத்தைக் கவனித்து விட்ட ஜான், சற்று விசனம் தெறிக்க சிரித்தார். ''நேர்மையற்ற ஏமாற்றுக்காரன்'' என்று முரட்டுத் தனமாயும் குறிப்பிட்டார். ''எங்க வாழ்க்கையின் சந்தோஷமும் உற்சாகமும் போய்விட்டன ஹேஸ்டிங்ஸ். அந்த எவி...! ஓஹ்.... உனக்கு 'எவி'யை நினைவிருக்கா?''

''எவி? இல்லை.''

''உன் காலத்துக்குப் பிறகு அவ வந்திருக்கணும். அவதான் அம்மாவின் விவகாரங்களை நிர்வகிப்பவள் - காரியதரிசி போல. தோழி. எல்லா விஷயங்களும் தெரிஞ்சவ. கிழ எவி! சின்ன வயசு கிடையாது. கிழவிக்கு சொல்லிக்கிற மாதிரி அழகும் கிடையாது. ஆனா எல்லா விஷயங்களையும் கச்சிதமா செஞ்சு முடிக்கிற கூட்டம்.''

''என்ன சொல்ல வரீங்க? இந்த --------''

''ஓஹ்...! இந்த ஏமாத்துப் பேர்வழியைத் தான்! இவன் அவளுக்குக் கூட்டாளி! எங்கேயிருந்து வந்து குதிச்சான்னே தெரியாதுப்பா. எவியோட தூரத்து தம்பி உறவுமுறைனோ என்னவோ சொல்லிக்கிட்டு வந்தான். ஆரம்பத்துல இப்படி அவன் சொன்ன உறவு முறையை எவி கூட ஆமோதிச்சு ஏத்துக்கிட்ட மாதிரி தெரியலை. ஆக முழுக்க முழுக்க வெளியாள் இவன்... எல்லாருக்கும் பொதுப்படையா இது தெரியும். அசிங்கமா முகம் முழுக்க கறுப்பு தாடி.... ஏதோ பாறாங்கல்லுல நடக்கற மாதிரி பூதாகாரமா ஒரு ஷூ - எப்பவும்! ஆனா இந்த அம்மா.... ஓஹ்.... கண்டதும் அப்படியே வசியமாயிட்டாங்க! அவனைத் தூக்கி எவிக்கும் மேல வெச்சு தனக்குத் தேவையான 'அந்தரங்கக் காரியதரிசி'னு அறிவிச்சாங்க - அவங்க தான் ஒரு சங்கம் விடாம எல்லாத்துலயும் அங்கத்தினர்னு உனக்குத் தெரியுமே!''

நான் ஒப்புதலாய் தலையசைத்தேன்.

''கால்ல சக்கரத்தை மாட்டிக்கிட்டு ஓடுற அவங்களுக்கு ஒரு காரியதரிசி தேவைப்பட்டிருக்கு... சரியான உதவியாளனா ஆனான் இவன். ஆல்ஃப்ரட். ஆனால், மூணு மாசத்துக்கு முன்னாடி, திடீர்னு அவங்க, ஆல்ஃப்ரட்டோட கலியாணம் பண்ணிக்க நிச்சயம்

பண்ணிக்கிட்டதா அறிவிச்சபோது, குப்பை மாதிரி எல்லாரும் குடும்பத்தோட ஒட்டு மொத்தமா பெருக்கித் தள்ளப்பட்டோம்...! அவங்களைவிட குறைந்தபட்சம் இருபது வயசு இளையவன்பா இந்தப் பய...! முழுக்க முழுக்க ஜாக்பாட் அதிர்ஷ்டம் இவனுக்கு...! அம்மா இவனுடைய முதலாளி - பை கொள்ளாத சொத்துக்கு அதிபதி - இந்த நிலைமையில், அவங்க இவனைக் கலியாணம் பண்ணிக்கிட்டாங்க....!''

''உங்க அத்தனை பேருக்கும் இந்தக் கலியாணம் மிகவும் இக்கட்டான கட்டமா இருந்திருக்கணும்.''

''இக்கட்டா....! கன்றாவி....! தண்டிக்க வேண்டிய அவமானம்....!''

இவ்வாறாய் எங்களது அறிமுகப் படலம் முடிய, மூன்று நாட்கள் கழித்து, 'இப்படி ஒரு ரயிலடி யாருக்காக உயிர் வாழ்ந்துக் கொண்டிருக்கிறது....' என்ற அபத்தமான அர்த்தத்தைத் தந்த ஸ்டைல்ஸ் ரயில் நிலையத்தில் வந்திறங்கினேன். ஆளரவம் அதிகமற்ற மிகச் சிறிய ரயிலடியின் தண்டவாளங்கள், சுற்றிலுமிருந்த வயல்வெளிக்கு நடுவே முளைத்த இரு சிறு இணை கோடுகளாய் சென்றது. ஜான் எனக்காக ரயிலடியில் காத்திருந்தான். அன்பாய் அழைத்துப் போய் காரில் ஏற்றினான். காரை ஓட்டும்போது, ''ஒரு துளியோ ரெண்டு துளியோ தான் பெட்ரோல் இருக்கு. எப்பப்பாரும் வண்டியைத் தூக்கிக்கிட்டு தருமம் பண்றேனு அம்மா கிளம்பிடறாங்க'' என குறிப்புத் தந்தபடி பயணப்பட்டான்.

இவர்கள் குடும்பம் இருந்த 'ஸ்டைல்ஸ் புனித மேரி' எனும் கிராமம், ரயிலடியிலிருந்து இரண்டு மைல்கள் தள்ளியிருந்தது; அங்கிருந்து மேலும் ஒரு மைல் தள்ளி, ஸ்டைல்ஸ் எஸ்டேட்ஸ். இளங்காலையே ஆனாலும் கதிரவனின் ஆதிக்கம் தூக்கலாயிருந்தது. பச்சைப் பசேல் எனும் மண்ணின் கமகம வாசமும் கிராமத்தின் மோன அமைதியும்... இதோ... கைக்கெட்டும் தொலைவில் சொர்க்கபுரியாய் தென்படும்போது, சண்டையும் பூசலும் நிறைந்து திமிறும் நகரத்தின் நினைப்பு, அங்கு வாழ்ந்துக் கொண்டேயிருக்கும் எனக்கே கூட இப்போது அச்சத்தை ஏற்படுத்தியது! வேறொரு புது உலகுக்குக் களவாடப்பட்டவனாய் உணர்ந்தேன்.

எஸ்டேட்ஸின் பிரதான மதில் சுவருக்கான 'கேட்'டை அடைந்து நுழைந்தபோது ஜான் சொன்னான்:

Scanned by CamScanner

''இயக்கமே இல்லாதது போன்ற கிராம அமைதி உன்னை பயமுறுத்துதோனு நெனக்கிறேன், ஹேஸ்டிங்ஸ்...!''

''என்னருமை நண்பா! இதை... இதைத் தான், நான் ஏங்கி ஏங்கி எதிர்பார்த்துக்கிட்டிருந்தேன்!''

''ஓஹ்....! உனக்கும் தனிமையான கிராம வாழ்க்கை தான் பிடிக்கும் என்பதைக் கேட்கறதுக்கே இனிமையா இருக்கு. கிராம முன்னேற்றத்துக்கு அவ்வப்போது உதவ வரும் இளைஞர்களோடு தோளுக்கு தோளா நின்னு உழைப்பேன். வயல்வெளியில இறங்கி வேலை செய்றேன். என் மனைவி கூட நாள் தவறாது நிலத்துல உழைக்கிறா. காலைல அஞ்சு மணிக்கு பால்காரனோட எழுந்திடுவா. அதே தெம்பு குறையாம மதிய உணவு இடைவேளை வரைக்கும் சுழலுவா. இதையெல்லாம் அனுபவிக்கிறதுக்கு இணையான சுகானுபவம் வேற கிடையாது - அந்த ஆல்ஃபிரட் பயலோட ஞாபகம் வராத வரைக்கும்!''

அப்போது சட்டென வண்டியின் வேகத்தைத் தணித்த ஜான் தனது கைக்கடியாரத்தை ஒருமுறை பார்த்துக் கொண்டார். ''ஓஹ்... சிந்தியாவையும் அழைச்சுக்கிட்டு வந்திருக்கலாமோ? நேரமிருந் திருக்குமா? ம்ம்...! அவ மருத்துவமனையை விட்டுக் கிளம்பி யிருப்பா....!'' என தனக்குத் தானே கேட்டு, பதிலும் சொல்லிக் கொண்டார்.

''சிந்தியா? அவங்களா உன் மனைவி?''

''இல்லையில்லை. அம்மாவுடைய பள்ளித் தோழி ஒருத்தி... நீதிமன்றத்துல வேலை செஞ்ச ஒரு மாபாதக ஏமாத்துக்காரனை கலியாணம் பண்ணிக்கிட்டவ.... அவளோட பொண்ணு இவ. நடுவுல விட்டுட்டு ஓடிட்டான். அந்தத் தோழி தம்புடியில்லாத அனாதையா தெருவுல நின்னா. ஆபத்பாந்தவனா அம்மா போனா. இவற்றின் விளைவா கடந்த ரெண்டு வருஷமா இந்த சிந்தியா பொண்ணு எங்க வீட்டில இருக்கு. இங்கிருந்து ஏழு மைல் தள்ளியிருக்கும் டேட்-மினிஸ்டர் தாலுக்காவிலுள்ள ரெட் க்ராஸ் சங்கத்து மருத்துவமனை ஒண்ணுல இது வேலை செய்யுது.''

கடைசி வார்த்தையை ஜான் முடித்தபோது பழங்காலத்திய அலங்காரத்தில் தோன்றிய மாபெரும் மாளிகை ஒன்றின் முன்னே நுழைந்து நின்றது கார். குண்டாய், தோட்டத்து உடையில், மண் மேட்டில் குனிந்து வேலை செய்துக் கொண்டிருந்த பெண்ணொருத்தி

Scanned by CamScanner

எங்களது வருகையைக் கண்டு நெட்டைக் குத்தலாய் நிமிர்ந்து நிற்க, ''ஹலோ எவி....'' என அவரை அழைத்த ஜான், ''இது ஹேஸ்டிங்ஸ்... டாக்டர்'' என அறிவித்தார். என்னிடம் ''வருவது எவி. முழுசா - எவிலின் ஹோவோர்ட்'' என்றார்.

முழு மனதோடு, ஆனால் உள்ளங்கை கொஞ்சம் வலிக்கும் அளவுக்கு அழுத்திப் பிடித்துக் கை குலுக்கினார் அவர். 'மெல்லிய நீல நிறத்தினாலான விழிகள் நெருப்பாய் தகதகத்த ஒரு சிவப்பு முகத்தில் இருந்தன' என, எவியின் முகத்தினை நான் வர்ணித்துக் கொண்டேன். பார்ப்பதற்கு நட்புடன் கூடிய பரவசத்தை உண்டு பண்ணித் தரவல்ல நாற்பது வயது பெண்மணி, எவி. ஆழ்ந்த தடித்த ஏறத்தாழ ஆணின் தொனி உள்ள குரல். பெரிய உடம்பு. அதனைத் தாங்கவல்ல பரந்தக் கால்கள். அவற்றில் முட்டி வரை ப்ளாஸ்டிக் உறை கொண்ட காலணி. துண்டுத் துண்டாய் தந்தி செய்தி போல அவர் பேசிய வாக்கியங்கள் அமைந்திருந்ததைக் கொஞ்ச நேரத்திலேயே அறிந்துக் கொண்டேன்.

''பற்றிக் கொண்ட நெருப்பு போல மளமளவென களைகள் வளர்ந்திடுது. நடுவுல முள் கூட இருக்கும். அதுங்களோட நம்மால வாழ முடியாது. காலை பதம் பார்த்துடும். ஜாக்கிரதையா நடக்கிறது நல்லது.''

இப்படிச் சொன்ன எவிக்கு, ''எப்படியிருந்தாலும் நான் இங்கே வந்ததுக்கு உங்களுக்கெல்லாம் ஏதாவது ஒரு வழியில ஒத்தாசையா இருந்தா - நான் மகிழ்வேன்'' என பேசினேன் நான்.

''அதெல்லாம் சும்மா. இவன் கூட்டிட்டு வர எல்லாரும் இப்படித்தான் சொல்றாங்க. ஆனா பண்றது தான் இல்ல.''

''ஏதாவது குத்தங்குறை சொல்லிக்கிட்டு இருக்கணும் எவி உனக்கு! சிடுமூஞ்சி எவி! சரி சொல்லு... இன்னிக்கு காபி எங்கே? உள்ளேயா வெளியேயா?''

''வெளியே தான். பனியில்லாம நல்லா வெயிலடிக்குது. இது அதிசயம். உள்ளேயா முடங்கிக் கிடக்கிறது?''

''இதுலயும் குறையா...?!'' என்ற ஜான், ''நீயும் கூட வா. நீ நிறைய தோட்ட வேலை செஞ்சாச்சு. வந்து இளைப்பாறுவாயாக!'' என சிரித்தார்.

''அதுவும் சரி தான்'' என்றபடி தனது தோட்ட வேலைக்கான கையுறைகளைக் கழற்றினார். ''நீ சொல்றதுலயும் அர்த்தமிருக்கு!''

Scanned by CamScanner

ஒரு பெரிய அத்தி மர நிழலில் தேநீர் பரிமாறப்பட்டுக் கொண்டிருந்த பகுதிக்கு என்னை இருவரும் அழைத்துப் போயினர். அங்கிருந்த ஒரு கூடை நாற்காலியிலிருந்து எழுந்திருந்த ஒரு பெண்மணி எங்களை நெருங்கி வந்தார்.

''என் மனைவி, ஹேஸ்டிங்ஸ். மேரி'' என்று அறிமுகம் செய்தான் ஜான்.

மேரியை நான் பார்த்த அந்த முதல் பார்வையை என் வாழ்க்கையில் நான் மறக்க மாட்டேன். ஒடிந்து விடுமோ என பார்ப்போரை மசிய வைக்கும் உயரத்தின் வீச்சு...! அதுவும், பளபளத்த அந்த வெள்ளை சூரிய வெளிச்சத்தில்....! துடிதுடிப்பும் உற்சாகமும் வழிய கனன்றுக் கொண்டு... காண்போரை கிறக்கி அடிக்கும் நெருப்புக் கங்காய் தகித்தெடுக்கும் அந்த சாம்பல் நிறக்கண்கள் --- குறிப்பிட வேண்டிய அக்கண்கள் --- நான் இதுவரை அறிந்திருந்த எந்தப் பெண்ணிலும் காணாமல் வித்தியாசமாய் தனித்து ஈர்க்கும் அக்கண்கள்....! அவர் சொந்தமாக்கி வைத்திருந்த மாசக்தி வாய்ந்த சாந்தம்...! சாந்தமேயானாலும், அது, ஏனோ அந்த நவநாகரீக மங்கையின் முகத்தில், துஷ்டக் கதிர்களைப் பரப்பிய ஒரு கொடிய உள்ளத்தைப் பிரதிபலித்தது! இவை எல்லாம் என் நினைவில் அழியாது புதைந்தன. நான் எப்போதும் இவற்றை மறக்கப் போவதில்லை.

மிக தணிந்த ஸ்பஷ்டமான குரலெடுத்து சில இனிமையான வரவேற்பு வார்த்தைகளை இட்டு நிரப்பி என்னை வரவேற்றார் மேரி. ஜான், இந்த வீட்டுக்கு என்னை வரவேற்றதில், இப்பொழுது தான் நான் மிக மகிழ்கிறேன் என்பதை முகத்தில் காட்டியபடி, இன்னொரு கூடை நாற்காலியில் என்னை நான் திணித்துக் கொண்டு அமர்ந்தேன். எனக்கு டீ தந்தார் திருமதி மேரி ஜான். அப்போது அவர் உதிர்த்த சில குறிப்புகள் அற்புதப் பெண் என்று அவர்மீது நான் ஏற்படுத்திக் கொண்டிருந்த கருத்தை இன்னும் மேலே மேலே உயர்த்தி நிறுத்தின. நாம் சொல்வதை ஆர்வமாய் போற்றிக் கேட்கும் நேயர், பேசும் நம்மைக் கிண்டி விடும் ஒர் அற்புத கிரியா ஊக்கி... எனவே, நான் வாழ்ந்த சிறு பிராய வாழ்க்கை முதல் பலவற்றை ஹாஸ்யம் கலந்து விட்டுக் கொண்டேயிருந்தேன்... கேட்கும் அழகியின் தோற்றத்தில் மூழ்கி உள்ளே போனபடி! ஜான்... அழகு தான்.. நல்லவன்தான்... ஆனால் பெண்ணை ஈர்த்து வைக்கும் அளவுக்குப் பேசக் கற்காதவன்... பாவம்....!

Scanned by CamScanner

இந்தத் தருணத்தில் மிக பழக்கப்பட்ட ஒரு குரல் ஜன்னல் வழியாக கழன்று வந்து விழுந்தது :

''டீ முடிந்த பிறகு நீங்க அரசியார்க்கு கடிதம் எழுதறீங்களா, ஆல்ஃபிரட்? ரெண்டாவது நாளைக்கு வந்து சிறப்பிக்க முடியுமானு கேட்டு மந்திரிக்கு நானே என் கைப்பட கடிதம் போட்டுடறேன். ஒருவேளை அரசியாரால முடியலேனா... அவங்க கிட்டேயிருந்து பதில் வர்ர வரைக்கும் காத்திருப்போமா? அவங்க மறுத்துட்டா, மந்திரியே முதல் நாள் துவக்க விழாவுல பங்கெடுத்துக்க நேரிடும்.... ரெண்டாவது நாளைக்கு வேற யாரையாவது பிடிப்போம். என்ன?''

பிறகு ஆண் குரல் ஒன்றின் முணுமுணுப்பான ஏதோ ஒரு பதில் இடம்பெற்றது. இதற்கு திருமதி எமிலியின் குரல் பதில் தந்து உயர்ந்தது:

''ஆமாம். சரி. டீக்குப் பிறகு செஞ்சாலே போதும். நீங்க பலதை சிந்திச்சு முடிவு செய்றீங்க, ஆல்ஃபிரட் டியர்.''

அந்த ஜன்னல் இருந்த அறையின் வாயிற்கதவு இப்போது திறக்கப்பட, முழுக்க முழுக்கத் தலை நரைத்த வயதான ஒரு பெண்மணி, அதிகார தொனி தெறிக்கும் நடை-உடை பாவனை யோடு வெளிப்பட்டார். தயக்கமான முறையில் ஓர் ஆண் அவரைத் தொடர்ந்து வெளியே வந்தார்.

பொங்கிப் பொழியும் வகையில் என்னை வரவேற்றார் திருமதி எமிலி.

''எங்கே போயிருந்தே இத்தனை வருஷமா, ஹேஸ்டிங்ஸ்?! உன்னைப் பார்க்கிறதுல எனக்கு எத்தனை பூரிப்பு தெரியுமா? ஆல்ஃபிரட் டார்லிங்.... இது ஹேஸ்டிங்ஸ்.''

நான் கொஞ்சம் ஆர்வமாய் 'ஆல்ஃபிரட் டார்லிங்' கைப் பார்த்தேன். இந்தக் கூட்டத்தில் சத்தியமாய் ஒரு வேற்றுக் கிரக மனுஷனாய்த் தான் அவர் இருந்தார். அந்தத் தாடியை ஜான் வெறுத்ததை இப்போது நான் மறுக்காமல் ஆமோதித்தேன்! இத்தனை கருமையும், தேவையில்லாமல் இத்தனை நீளமும் கொண்ட ஓர் ஆட்டுத் தாடியை இப்போதுதான் என் வாழ்க்கையில் நான் முதல் முதலாய் பார்க்கிறேன். கண்ணாடி மாட்டியிருந்தார். விநோதமான - தூண்டப்பட்டது போன்ற ஓர் உக்ரம் அவருள் தெரிந்தது. எனக்கென்னவோ, இப்படி ஒரு தோற்றத்தில், நிஜ வாழ்க்கையை விட நாடக மேடையில் மிக விமரிசையாய் இவர் பொருந்துவார்



Scanned by CamScanner

என்று தோன்றியது. அவரது மரம் போன்ற கையினை என் மேல் பதித்து சொன்னார்:

''இது மிக சந்தோஷமானது, ஹேஸ்டிங்ஸ்.'' (அதாவது என்னை சந்தித்தது!)

பிறகு சட்டென மனைவி பக்கமாய் முழுக்கத் திரும்பிக் கொண்டு, ''எமிலி கண்ணே.... அந்த தலகாணியில மெத்தை கம்மியாயிருக்கோனு தோணுதும்மா'' என்றார்!

மனைவிமீது தளிரான கவனம் தன் மனம் முழுவதும் நிரம்பி யிருப்பதை அணு அணுவாய் செய் விளக்கம் செய்து காட்டுவது போல் பண்ணிக் கொண்டு, எமிலி அவரை பாசம் பொங்கப் பார்க்கப் பார்க்க, மற்றொரு தலையணையை மாற்றி வைத்தார் ஆல்ஃபிரட்! நல்ல புத்திசாலியான அற்புத பெண்மணியைப் பீடித்துள்ள தேவையற்ற ஆண்பால் ஈர்ப்பு!

ஆல்ஃபிரட் கூட்டத்தில் ஒருவராய் அங்கிருந்ததால், நிர்ப்பந்திக் கப்பட்ட ஓர் இறுக்கமும், பிணைக் கைதிபோல அமர்ந்திருக்கும் ஒரு சூழ்நிலையும், கூடியிருந்த ஏனையோரின் மீது இறங்கி வியாபிப்பிதைக் கவனிக்க முடிந்தது. இவ்வாறு படர்ந்த இக்கட்டான சூழலை ஒருவரும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஆனாலும், எந்தக் குற்றத்தையும் சுட்டிக் காட்டத் தயங்காதவராய் தோன்றிய இந்த ஹோவோர்டால், இதை எக்காரணம் கொண்டும் மூடி மறைக்க முடியவில்லை... கடுகடுவென்று இருந்தார்! இருப்பினும், திருமதி எமிலி, தனது கணவனின் இருப்பால் இப்படி ஓர் அசாதாரண நிலை காற்றில் நிலவிக் கொண்டிருப்பதை உணர்ந்தவராகவே தெரிய வில்லை....! அவர் ஏற்பாடு செய்து அமைத்து வரும் ஏதோ ஓர் அளவளாவல் நிகழ்ச்சி பற்றி மடை திறந்த வெள்ளமாய் கொட்டிப் பேசியபடியிருந்தார். அவரது தொண்டையின் கணீர் சப்தம், இடைப்பட்ட வருடங்களில் துளியும் சிதையாது அப்படியே இருப்பதை ஆச்சரியமாய் கவனித்தேன். நடுநடுவே யாருடைய பெயர் பற்றியோ.... அல்லது தேதி பற்றியோ.... அல்லது இடம்பெற வேண்டிய நேரம் பற்றியோ... 'ஆல்ஃபிரட் டார்லிங்' பக்கமாய் திரும்பிக் கேட்டு, அறிந்து, பின் சரளமாய் பேசினார். பார்த்த முதல் பார்வையிலிருந்தே ஆழமான மற்றும் உறுதியான ஓர் அருவெறுப்பை நான் இந்த ஆல்ஃபிரட் மீது உணர்ந்தேன்.... எனது முதல் தீர்ப்பு பற்பல சமயங்களில் மிகச் சரியாய் இரூக்கும் என்பதில் மட்டும் நான் மிகப் பெருமை உள்ளவன்.

Scanned by CamScanner

தற்சமயம், கடிதங்கள் சிலவற்றைப் பற்றி குறிப்புகள் கொடுக்க எவிலின் ஹோவார்ட் பக்கமாய் திருமதி எமிலி திரும்பிக் கொள்ள, கவர்ச்சியற்றக் குரலில் என்னிடம் பேசலானார் அவருடைய கணவர்:

''நீங்க பட்டாளத்துல டாக்டரா இருக்கிறதா சொன்னாங்க.''

''ம்.''

''விடுப்பு முடிஞ்சதும், மறுபடியும் அங்கே திரும்பிப் போகப் போறீங்களா?''

''பின்னே?''

இப்போது மேரி ஜான் முன்வந்து கேட்டார்:

''உங்களுக்கு எதைப் பிடிக்குதோ அதைத் தேர்ந்தெடுங்கனு ஒரு வாய்ப்பு தந்தா... உங்களுடைய தொழிலா நீங்க எதை தேர்ந்தெடுப்பீங்க?''

''ம்... அது... அது...! அது, அப்போதுள்ள நிலைமையைப் பொறுத்தது.''

நான் சொன்ன பதில் திருப்தியாய் அமையவில்லை என நினைக்கிறேன். கேட்ட கேள்வியையே, வேறு தினுசாய் ஆக்கினார்.

''ரகசியப் பொழுதுபோக்கு எதுவும் கிடையாது?'' - அவர் கேட்டார். ''சொல்லுங்க! நீங்க எதன் பக்கமாவது ஈர்க்கப்பட்டிருக் கீங்களா? சும்மா சொல்லுங்க...! ஒவ்வொருத்தருக்கும் ஒரு பொழுதுபோக்கு நிச்சயமா இருக்கும்...! அது வழக்கமா முட்டாள்தனமானதாகத்தானிருக்கும்...!''

''சொன்னா... நீங்க என்னைப் பார்த்து சிரிப்பீங்க.''

இதற்கே திருமதி மேரி ஜான் மெலிதாய் சிரித்தார். ''இருக்கட்டுமே.''

''ஒரு துப்பறியும் ஆளா என்னை நானே நினைச்சுக்கிட்டு ஆடறது உண்டு!''

''ஆஹ்...! எந்த மாதிரி...? ஸ்காட்லாண்ட் துப்பறியும் அதிகாரி...? இல்லே... ஷெர்லக் ஹோம்ஸ்...?''

''ஓஹ்... சந்தேகமில்லாம ஷெர்லக் ஹோம்ஸ் தான். உண்மையா சொல்லணும்னா... சுழல்ல சிக்கிக்கிட்ட மதகு மாதிரி துப்பறிதல் பக்கமாய் நான் ஈர்க்கப்பட்டிருக்கேன். பெல்ஜியம் போயிருக்கும் போது ஒரு மனுஷனைச் சந்திச்சேன். ரொம்ப பிரபல துப்பறியும் நிபுணர்.... மேதை. குள்ளன்.... ஆச்சரியங்கொள்ள வைக்கும் குள்ளன்....! இன்னிக்குத் தேதியில நாங்க ரெண்டு பேரும்

Scanned by CamScanner

இணைபிரியா நண்பர்கள்....! அவனால தான் எனக்குள்ளே இந்த நெருப்புப் பொறி பத்திக்கிச்சு. துப்பறிவதுனா என்னன்னு அற்புதமா விளக்குவான். எல்லா சிறந்த துப்பறியும் வேலைகளும் - ஒழுங்கா... சீரா.. நிகழ்வுகளைத் தர்க்க ரீதியா வரிசையா வகைப்படுத்துவதால் விளைவல்ல முடிவு – என்பதை பிரமாதமா சொல்வான். அவன் வழியில என் காதுகளில் விழும் வழக்குகளை நானே ஆராய்ந்து பார்ப்பேன்...! ஒரு த்ரில் தான்...! அவன் பார்க்க குள்ளமாயும் சராசரியாயும் இருந்தாலும்... ஓஃப்... மூளை - கற்பூர ஜாதி...! படு படு புத்திசாலி.''

''ம்கும்'' என்று மறுத்துப் பேச இடைபுகுந்த ஹோவோர்ட், ''துப்பறியும் வேலை, துப்பறியும் கதைகள்... இதெல்லாம் படு முட்டாள்தனமானவை. யார் குற்றவாளி.... இது கடைசி அத்தியாயத்துல குதிக்கும்! அதுவரைக்கும் இந்த எழுத்தாளர் அங்கே ஒண்ணும் இங்கே ஒண்ணுமா கொடுக்கிற துப்புகளைப் பிடிச்சுக்கிட்டு மாங்கு மாங்குனு திக்கு திசை தெரியாம நாம ஓடணும்...! சே...! நிஜ வாழ்க்கையில, இப்படி ஓடும் அத்தியாயங்கள்லாம் கிடையாது...! யார் கொலைகாரன்.... இதை அப்பட்டமா கண்டுபிடிச்சுடலாம்...!''

''அர்த்தமில்லாம பேசறீங்க ஹோவோர்ட்'' என வாதம் செய்தேன் நான். ''அப்படினா, கற்பனையல்லாத எத்தனையோ நிஜக் கொலைகள் இன்னும் தீர்க்கப்படாமலே இருக்கே... அது ஏன்?''

''போலீஸ் கண்டுபிடிக்கும்னு சொல்ல வரலே. அந்தக் கொலை சம்பந்தப்பட்ட குடும்பத்தார்... நண்பர்கள்... அந்தக் கொலையின் மையக்கருவா இருக்கிற இவங்களைச் சொல்றேன். இவங்க, யாரையும் ஏய்க்க முடியாது. இவங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்...! தெரியும்.''

''அப்படினா'' என்று ஆர்வமான நான், ''ஒரு குற்றத்துல நீங்க சம்பந்தப்பட்டீங்கன்னா... கொலைனே எடுத்துக்குவோமே... சங்கடமில்லாம, நேரா கொலைகாரனை உங்களால கை நீட்டிக் காட்டிட முடியும்னா நினைக்கிறீங்க...?!'' என்றேன்.

''பின்னே...! என்னால முடியணும்...! கொத்துக் கொத்தா வந்து நிக்கற வக்கீல்களுக்கு வேணும்னா என்னால சாட்சி ரீதியா விளக்க முடியாமப் போகலாம்...! ஆனா நிச்சயமா என்னால அடையாளம் கண்டு விட முடியும்னு நம்பறேன். கொலைக்குப் பிறகு என்

முன்னால *அவன்* வந்தா... என்னால கச்சிதமா மோப்பம் பிடிச்சிட முடியும்...!''

''அது, 'அவளா' கூட இருக்கலாம்'' - நான் ஆலோசித்தேன்.

''ம். ஆனா கொலை ஒரு ஈவிரக்கமற்ற குற்றம். அதை அதிகமா ஆண்கள் பக்கமே பொருத்திப் பார்....!''

''விஷம் கொடுத்துக் கொல்வதற்கு உங்களுடைய விளக்கம் பொருந்தாது இல்லையா...!'' என்று இடைபுகுந்த திருமதி மேரியின் குரல் என்னைத் துணுக்குற வைத்தது. ''டாக்டர் பௌரீஸ் நேத்து விளக்கிக்கிட்டிருந்தார்... 'மருத்துவத் துறையில, ரொம்பப் பிரபலமில்லாத விஷங்கள் பற்றிய ஞானம் அதிகம் இல்லாததால, சந்தேகத்துக்கிடம் தராமல் விஷத்தால் நிகழும் மரணங்கள், இத்துறையில எண்ணிலடங்கா' அப்படினு சொன்னார்.''

''அடடடடா...! என்ன மேரி இது....! எத்தனை கொடூரமான உரையாடல்...!'' என முகஞ்சுளித்தார் திருமதி எமிலி. ''என் பக்கத்துலயே யாரோ அப்படி சுத்தற மாதிரி நினைக்கத் தோணுது. ஓஹ்...! யாரிது பக்கத்துல...? அட.... சிந்தியா...!'

இளம் காரிகை. விளையாட்டுச் சீருடையில். தோட்டத்துக்குக் குறுக்கே பறந்து வந்தது போல திடுமென வந்து நின்றாள்.

''ஏன் சிந்தியா இன்னிக்கு இவ்வளவு நாழியாயிடுச்சு? இது ஹேஸ்டிங்ஸ் - செல்வி சிந்தியா.''

சிந்தியா, தளதளவென பூரித்து நிற்கும் துளிர் இளந்தண்டு. இளமை இப்போதுதான் மொட்டவிழ்ந்திருக்க வேண்டும்.... உடம்பு முழுக்க வீரியமும், உயிர்ப்பும் புடைத்து நின்றன. விளையாட்டுத் தொப்பியை இப்போது அவள் தலையிலிருந்து அகற்றியதும், அவிழ்ந்து, கொட்டி விடுமோ என பார்ப்போர் அஞ்சுமளவுக்குப் பரவிய செந்நிறக் கூந்தல், என்னைத் தலை வணங்க வைத்தது. சின்னதாய் வெண்மையாய் வெண்டரியாய் டீ-க்காக நீண்ட அவளது கைக்கும், மற்றொரு முறை தலை வணங்கினேன்! கரிய நிற விழிகளும், சராசரிக்கும் அதிகமான அந்தக் கருகரு குடை இமைகளும் - அவளை அழகி எனும் அந்தஸ்துக்கு சிரமமின்றி தூக்கிப் போயின.

ஜானுக்கு முன்னால் பொசுக்கென்று தரையில் உட்கார்ந்து விட்ட அவளுக்கு ரொட்டித் துண்டுகளுக்கு இடையே அடைக்கப்பட்ட 'சாண்ட்-விச்' சினை ஒரு தட்டு நிறைய பரப்பி நீட்டினேன். இதற்கு நட்புறவாட அவள் என்னை நோக்கி சிரித்தாள்.

Scanned by CamScanner

''ம். என்னோட கீழே வந்து உட்காருங்க. இதைப் போல புல் வழுவழுனு அமையறது ரொம்ப அபூர்வம்.''

மரியாதையாய் கீழிறங்கி நான் அமர்ந்துக் கொண்டேன்!

''ஆஸ்பத்திரியில வேலை செய்றீங்க, இல்லே, செல்வி சிந்தியா?''

அவள் ஒப்புதலாய் தலையசைத்தாள். ''பண்ணின பாவங் களுக்காக.''

''அப்படியா உயிரெடுக்கிறாங்க...?!'' என்றேன் நான் சிரித்துக் கொண்டே.

''அதான் சொல்லிட்டேனே... பண்ணின பாவங்களுக்காகனு.''

''எனக்கு ஓர் உறவுக்காரப் பெண்ணிருக்கா... நர்ஸா'' என்று இதற்கு குறிப்புத் தந்த நான், ''அவ 'செவிலி'ங்கிற வார்த்தையே கேட்டாலே போதும்... அலறிடுவா.''

''இதுல ஆச்சரியமேயில்லை. செவிலிங்க *அப்படித்தான்* ஹேஸ்டிங்ஸ். *அவங்க அப்படியே தான்...!* இந்த நோயாளிங்க அலற வெச்சுடுவாங்க...! உங்களுக்கு அதெல்லாம் தெரியாது... புரியாது. ஆனா நல்ல வேளையா நான் நர்ஸ் கிடையாது. ஆஸ்பத்திரியில மருந்தகத்துல இருக்கேன்.''

''அப்போ எத்தனை பேருக்கு நீங்க விஷம் வெக்கிறீங்க'' என்றேன் நான், புதுச் சிரிப்போடு.

''ஓ.... நூற்றுக்கணக்கா!'' - சொன்னாள் அவள்.

''சிந்தியா'' என இப்போது அழைத்த திருமதி எமிலி, ''எனக்காக சில குறிப்புகள் எழுதித் தர முடியுமா, உன்னால?'' என கேட்டார்.

''நிச்சயமா எமிலி அத்தை'' என்றாள் இவள் பதிலுக்கு.

உடனே துள்ளிக் குதித்தெழுந்தாள். இப்படி அவள் எழுந்த துரிதத்தைக் கவனித்த போது, எதையோ சார்ந்தே அவள் இந்த எஸ்டேட்டில் வாழ்ந்து வருவதாய் என் நினைவு உணர்த்தியது. திருமதி எமிலி பொது இடத்தில் மிகக் கனிவாய் பேசிப் பழகினாலும், தான் சொன்னதை சிந்தியா மறந்துவிடக் கூடாது என்பதை அப்போது ஸ்திரமாக்கியதும் என் உணர்தலுக்கு வலு சேர்த்தது.

வீட்டுத் தலைவி என் பக்கமாய் இப்போது திரும்பினார்.

''ஜான், நீ தங்க வேண்டிய அறையைக் காட்டுவான். ராத்திரி சாப்பாடு ஏழரைக்கு. நேரங்கழிச்சு ராத்திரி சாப்பாடை எடுத்துக்

Scanned by CamScanner

கிறதை நாங்க நிறுத்தி கொஞ்ச காலம் ஆகுது. இதனால நிறைய செலவு மிச்சமாகுது. எல்லாரும் சீக்கிரமே படுத்துடறோம் இல்லையா! விளக்கு செலவு அது இதுனு எல்லாம் மிச்சம். ராணுவ ஒழுங்கு இந்த வீட்டுல உண்டு. எதுவுமே வீணாக்கப்படாது. துண்டு பேப்பர் உட்பட. அதையும் சேகரிச்சு பழைய பேப்பர்காரன்கிட்டே போட்டு காசாக்கிடுவோம்.''

இதற்கு என் பாராட்டுதல்களை உரித்தாக்கினேன். பிறகு ஜான் என்னை வீட்டுக்குள் அழைத்துப்போய் அகண்ட படிகளின் வழியாக மாடிக்குக் கொண்டு போனான். படிகள் முடிவில் இடவலமாக பிரிந்து கட்டிடத்தின் இன்னபிற திசைகளுக்கு வழிவகுத்துத் தந்தன. என் அறை, அந்த மாடியின் இடப்புற பிரதேசத்தில், பூங்காவைக் காட்டியபடி அமைந்திருந்தது.

ஜான் என்னை விட்டுப் போய்விட, சற்று நேரத்திலேயே, அவர், கீழே பிரம்மாண்டமாய் படர்ந்துக் கிடந்த புல்வெளியில் சிந்தியாவோடு கரமிணைத்துக் கொண்டு நடந்துப் போய்க் கொண்டிருப்பதை நான் என் ஜன்னலின் வழியாக பார்த்தேன். அப்போது பொறுமையிழந்து ''சிந்தியா'' என திருமதி எமிலி அலறலாய் அழைத்ததைக் கேட்டேன்.... அப்பெண்ணும் விருட்டென்று ஓட்டமாய் கிளம்பி வீடு நோக்கி விரைந்தது! அதே கணத்தில், அங்கிருந்த மர மறைவிலிருந்து ஓர் உருவம் வெளிப்பட்டு, சிந்தியா விரைந்த திசையிலேயே மெதுவாக நடக்கத் தொடங்கியது. நாற்பது வயது இருக்கும்படி தோன்றிய அவ்வுருவத்தின் முகம் சற்றே வருத்தம் தோய்ந்திருந்தாலும் மழுங்க சவரம் செய்யப்பட்டிருந்தது. புயலாய் ஓர் உணர்ச்சிப் போராட்டம் அதனை ஆண்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. நடக்கும்போது, என் ஜன்னல் பக்கமாய் நிமிர்ந்து அவ்வுருவம் பார்க்க, என்னால் அதனை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது...நாங்களிருவரும் கடைசியாய் சந்தித்துக் கொண்டு பதினைந்து வருடங்களுக்கும் மேல் கடந்து முடிந்திருந்தன. ஆகையால், பலமான மாற்றம் அவ்வுருவத்தின் உடலில் நிகழ்ந்திருந்த போதிலும் நான் புரிந்துக்கொண்டு விட்டேன்! அது ஜானின் இளைய சகோதரன் லாரன்ஸ். இவரது முகத்தில் அப்படியொரு தொய்வினை எது ஏற்படுத்தியிருக்கும் என அப்போது நான் ஆச்சரியப்பட்டுத்தான் போனேன்.

Scanned by CamScanner

காட்சி மறைந்ததும் அவரை என் சிந்தனையிலிருந்து அகற்றிய நான், அடுத்து செய்ய வேண்டிய என் சம்பந்தப்பட்ட விஷயங்களில் புகுந்தேன்.

மாலை நேரம் முடிந்த அளவுக்கு ரம்மியமாக கழிந்தது... விளக்கயியலா புதிர்ப் பெண்ணாய் என்னுடன் பழகியிருந்த திடமான திருமதி மேரி ஜானை, வேண்டிய அளவு கனவில் கண்டேன்!

மறுநாள் விடியலே முழுச் சூரியனைப் பளபளப்பாகக் காட்டி மந்தாரமின்றி விடிந்தது. இன்பமான சந்திப்புகளை மனம் முழுதும் எதிர்நோக்கி நான் வெளியே வந்தேன்.

திருமதி மேரியை நான் பகல் வரை பார்க்கவேயில்லை. மதியம் கழிந்த போது வந்தார். என்னைத் தனியாய் சந்தித்து வலுக் கட்டாயமாக ஒரு சிறு நடைக்கு அழைத்துப் போனார். பகல் முழுவதும் எஸ்டேட்டின் நீண்ட நீண்ட மரங்களுக்கிடையே குளுமையாய் நகர்ந்து.... கதகதப்பாய் நடந்து.... மனங்கவர்ந்து... அதனால் உள்ளுக்குள்ளேயே மயங்கி... இருவருக்குமே அது வாழ்நாளின் ஒரு வசீகரமான பகல் பொழுதாய் அமைந்தது. மீண்ட போது மணி மாலை ஐந்துக்கும் மேல்!

நாங்களிருவரும் விசாலமான வரவேற்பறைக்குள் நுழைந்த கணமே சைகை காட்டி இருவரையும் பக்கத்திலிருந்த ஒரு தனியறைக்கு அழைத்துப் போனார் ஜான்.

''எங்கே போயிட்டு வர்றே?''

''புதுசா வந்திருக்கார்... நம்ம எஸ்டேட், தோட்டம், காடு... இதையெல்லாம் சுற்றிக் காட்டி...''

''நிறுத்து. காட்டைக் காட்ட நல்ல நேரம் பாத்தே!''

அவர் முகத்தைப் பார்த்தேன். ஏதோ மனக் குமைச்சலில் அவர் இருப்பது விளங்கியது.

''கவனி மேரி. பிரளயம் நடந்து முடிஞ்சிருக்கு. எவி, அந்த ஆல்ஃபிரட்டோட மல்லுக்கு நின்னா. அப்படி ஒரு சண்டை. அவ மனசொடிஞ்சு போயிருக்கா.''

''எவி? நொந்துப் போயிருக்காளா?''

ஜான், மேகமூட்ட முகத்தோடு ஆமோதித்தார்.

''ஆமாம். நேரா கிளம்பி அம்மா கிட்டே போயிட்டா. ஓஹ்.... இதோ எவியே....!''

Scanned by CamScanner

எவிலின் ஹோவோர்ட் உள்ளே நுழைந்தார். அவரது இதழ்களிரண்டும் கடுமையாய் இறுகிக் கிடந்தன. கையில் சிறு துணிப் பெட்டியிருந்தது. கிளர்ந்து வெடித்தவராயும் ஏதோ ஒரு முடிவில் நுழைந்திருப்பவராயும் தெரிந்தார்... நியாயங்களை எடுத்து முன்வைத்து விட்ட திருப்தியிலும் தெரிந்தார்.

''எப்படியோ'' என்று வெடித்துச் சொன்னவர் ''என் மனசிலிருந்ததையெல்லாம் பேசிட்டேன்... பேசிட்டேன்'' என்றார்.

''ஓ... எவி....! அருமை எவி...!'' என அல்லாடியபடி குறிப்பிட்ட ஜான், ''இதெல்லாம் உண்மையாயிருக்காது'' என்றார் பரிதாபமாய்.

முறுக்காய் தலையசைத்தார் எவி.

''எதெல்லாம்?! வாயை மூட்றியா! எல்லாம் வேணுங்கிற அளவுக்கு நிஜம்... நிஜம்! கோப தாபத்துல எமிலிகிட்டே சில விஷயங்களை நான் சொல்லிட்டேன். அவற்றை அவ மறக்கவோ மன்னிக்கவோ போறதில்லே. போய்த் தொலையட்டும்.... யாருக்கு கவலை! நான் சரியெதுவோ அதை சொல்லிட்டேன். 'நீ ஒரு வயசான பொம்பளை எமிலி.... முட்டாள்கள்ல கிழ முட்டாள் மாதிரி ஒரு வடிகட்டின முட்டாளைப் பார்க்க முடியாது'னு சொல்லிட்டேன்! 'அந்த மனுஷன் உன்னை விட இருபது வயசு குறைஞ்சவன். உன் மரமண்டைக்கு அவன் எதுக்காக உன்னை கலியாணம் கட்டியிருப்பான்னு உறைக்கவே இல்லியா? பணம்டீ பணம்! ஏதோ நடந்துடுச்சு.... ஆனா உன் பணத்துலிருந்து அதிகமான பகுதியை அவன்கிட்டே விட்டுவைக்காதே! ரமோலா சின்னஞ்சிறு, சிக்குனு இருக்கிற இளவட்டம். இந்த ஆல்ஃபிரட்டு எத்தனை நேரம் அவ கூட இருக்கான்னு கேளு. நீயே கேளு'னு மூஞ்சியைப் பார்த்தே கேட்டுட்டேன். எனக்கென்ன பயம் - உண்மையைச் சொல்ல....! வந்தது பாரு கிழவிக்குக் கோபம்... ஊஃப்...! அவன்னா இவளுக்கு உயிரால்ல இருக்கு.... அப்ப கோபம் வர்றது இயற்கைதானே! நான் நிறுத்தலே. 'த பாரு... உனக்குப் பிடிக்குதோ பிடிக்கலையோ... உன்னை எச்சரிக்க விரும்பறேன். உன் கண் முன்னாலேயே உன் மெத்தையிலியே உன்னை அவன் கொலை பண்ணக் கூடியவன்... கூடியவன் என்ன சந்தேகமா... பண்ணுவான்...! அவன் ஒரு பொறுக்கி மூட்டை. ஏய்... ஏய் நிறுத்து. உன் வாய்ல வருவதையெல்லாம் தூக்கி இப்ப என் பக்கம் வீசுவே! பேசு.... ஆனா நான் கடைசியா சொன்னதை மட்டும் மறக்காதே! அவன் -

Scanned by CamScanner

ஒரு - பொறுக்கி - மூட்டை!' இப்படி நறுக்குனு நாலு வார்த்தைப் பேசிட்டேன்.''

''அதுக்கு அவங்க என்ன சொன்னாங்க?''

இதற்கு எவிலின் ஹோவோர்ட் நாடகப் பாணியில் அட்டகாசமாய் பதில் சொன்னார்:

'' 'டார்லிங் ஆல்ஃபிரட்....' - 'டியர் ஆல்ஃபிரட்...' - 'உயிரே, உடலே, ஆவியே....' இப்படின்னா. தூ. வெட்கமாயில்லே...! என்னைப் பார்த்து, 'எல்லாம் பொறாமைப் பொய்' - 'பிசாசுக் கூட்டம்'னு அலறினா. இவ வீட்டை விட்டு எவ்வளவு சீக்கிரம் போறேனோ எனக்கு அவ்வளவு மரியாதை. அதான் கிளம்பிட்டேன்.''

''ஆனா இப்பவே எதுக்கு?''

''இந்த நிமிஷமே...!''

ஒரு நொடி நாங்கள் அப்படியே உட்கார்ந்து விட்டோம். எவியையே முறைத்தோம். இறுதியில், எந்தப் பிரயத்தனமும் எவியின் பிடிவாதத்துக்கு முன் எடுபடாது என்பதை உணர்ந்தவராய் எழுந்து போய் ரயில் கால அட்டவணையைப் புரட்டலானார் ஜான். இந்தக் கசமுசாவை எப்படியாவது ஆற்றும்படி உசுப்பேற்றிக் கொண்டே அவர் பின்னாலேயே விரைந்தார் ஜானின் மனைவி.

இருவரும் அறையை விட்டு அகன்றதும், எவி ஹோவோர்டின் முகபாவம் மாறியது. என்னை நோக்கி ஆர்வமாய் நெருங்கினார் அவர்.

''திரு ஹேஸ்டிங்ஸ்... நீ உண்மையானவனாப் படறே. உன்னை நான் நம்பலாமா?''

சற்று துணுக்குற்றேன். தாமதியாது அவருடைய கையை என்னுடைய உள்ளங்கைகளுக்குள் புதைத்துக் கொண்டார். ரகசியக் குரலில் பேசினார்.

''அவளைக் கவனிச்சுக்கோ ஹேஸ்டிங்ஸ். அவ வெகுளி. என்ன முழிக்கிறே... எமிலியைச் சொல்றேன்! நீ கிளம்பும்போது அவளுக்கு நம்பகமான காவலாளியை நியமிச்சுட்டுப் போறே... பண்ணுவியா...?! இங்கேயிருக்கும் எல்லாமும் திமிங்கிலங்க - எல்லாமும். நம்பு. என்னப் பேசறேன்னு புரிஞ்சு தான் சொல்லிக்கிட்டு இருக்கேன். இந்தக் கூட்டத்துல, எமிலியை எப்படியாவது மடக்கிப் போட்டுப் பணத்தை சுருட்டிட்டு ஓட முயற்சி செய்யாத ஒரு ஜீவன் கூட கிடையாது. எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரத்துக்கு நான் அவளைப் பொத்தி வெச்சு பாதுகாத்துட்டேன். இப்போ நான்

Scanned by CamScanner

தடையா இல்லாம விலகறேன். உடனடியா திட்டங்களை நிறைவேற்ற எல்லாம் பாய்வாங்க.''

''நிச்சயமா ஹோவோர்ட்'' என்ற நான், ''நிச்சயமா என்னால முடிஞ்ச அத்தனை பாதுகாப்புகளையும் நான் தருவேன்'' என்றேன். ''ஆனா நீங்க கோவத்துல எகிறிப் போயிருக்கீங்க. அதிர்ச்சியில இருக்கீங்க. இப்பப் போய்...''

மெதுவாய் ஆள்காட்டி விரலை அசைத்து இடைமறித்தார் அவர். ''சின்னப் பையா... நான் சொல்றதை நம்பு. இந்த பாழாப் போன உலகத்துல உன்னைவிட பல வருஷங்கள் அதிகமா வாழ்ந்தவ நான். நான் உன்னைக் கேட்கறதெல்லாம் ஒண்ணு தான்... கண்களை அகல விரிச்சுக்கிட்டே இரு. கணமும் மூடிடாதே. நான் எதை மனசுல வெச்சுக்கிட்டு இத்தனை சொல்றேனோ --- அதை நீ பார்ப்பே.''

வாசலில் டாக்ஸி வந்து நின்றதற்கான அறிகுறி கேட்டது... ஹோவோர்ட் எழுந்து கதவு வரை சென்றார். வெளியிலிருந்து ஜானின் குரல் கேட்டது. அப்போது கூட, கதவைத் திறக்க அதன் பிடியில் வைத்த கையை அழுத்தித் திறக்காமல், அவருடைய கழுத்தை மட்டும் திருப்பி தோளுக்குப் பின்னால் என்னைப் பார்த்தார். கூர்மையாய். ''எல்லாத்தையும் விட, ஹேஸ்டிங்ஸ்....'' என்று அப்போது முக்கியப்படுத்தி ஆரம்பித்த அவர், ''அந்தப் பிசாசை மட்டும் விடாம கண்காணி --- அவளுடைய புருஷன்!'' என்றார்.

மேற்கொண்டு இதில் தொடர்ந்துப் பேச அவகாசமிருக்க வில்லை. கிளம்பும் ஹோவோர்ட் மீது, கோரஸாய் காற்றில் கலந்து வந்த காட்டமான எதிர்ப்புரைகள்... விடை பெறுதல்கள்... இவற்றில் மூழ்கிக் கிளம்பினார் அவர். ஆல்ஃபிரட் தம்பதியினரைக் காணவில்லை.

வாடகைக் கார் கிளம்பிய கையோடு கூடியிருந்தோரிடமிருந்து திடுமென தன்னைக் கழற்றிக் கொண்ட திருமதி மேரி, மாளிகை வளாகத்துக்குள் நுழைந்துக் கொண்டிருந்த உயரமான தாடி வைத்த ஆசாமியை அடைய, வாசலை நோக்கி அவசரமாய் நகர்ந்தார். அவனுக்குக் கை குலுக்கல் தந்த போது மேரியின் முகத்தில் வண்ணம் கூடியது.

என் உள்ளுணர்வு உடனடியாய் அவன் மீது அவநம்பிக்கையை உண்டு பண்ணியதால், ''யாரது?'' என்றேன் நான்.

இதற்கு அருகிலிருந்த ஜான், ''அது டாக்டர் பௌரீஸ்'' என்றான்.

''அந்த டாக்டர் பௌரீஸ் யார்?!''

Scanned by CamScanner

''ஒய்வுக்காக கிராமத்தில் வந்து தங்கியிருக்கிறார். ஏதோ மோசமான நரம்புத் தளர்ச்சியாம். ஜாகை லண்டனில் - லண்டன் ஸ்பெஷலிஸ்ட். ரொம்ப அறிவு... படு புத்திசாலி... உலகளாவிய அளவில நம்மிடையே உள்ள மாபெரும் மருத்துவர் இவர்னு கேள்விப்பட்டிருக்கேன் - விஷங்கள் பற்றிய துறையில....!''

அடக்க முடியாத குறிப்பாக, ''மேலும் – அவர் மேரியோட அற்புத நண்பர்'' என்று போட்டாள் சிந்தியா!

ஜான், வேகமாக முனைந்து, பேச்சை மாற்றினார்.

''தோட்டத்துக்குள்ளே காலாற நடந்துட்டு வரலாம், வா ஹேஸ்டிங்ஸ். இது ஓர் அழுகிப் போன சமாச்சாரம். அவளுக்கு எப்பவுமே நாக்கு ரம்பம் மாதிரி நாலு முழ நீளம்...! பேசினா...! கிளம்பிட்டா. ஆனாலும், அவள மாதிரி, விட்டே கொடுக்காத பரிசுத்தமான கொள்கைகளோட வாழ்க்கையை ஒழுங்கா நடத்தற இன்னொருத்தரை இந்த இங்கிலாந்துல பார்க்க முடியாது.''

தோட்டத்தைக் கடந்து அழைத்துப் போனான். ஸ்டைல்ஸ் எஸ்டேட்டின் ஒரு பக்கத்துப் பட்டி போல அமைந்திருந்த கிராமத்துக்குள் இறங்கி நடந்தோம். இவ்வாறு போய்க் கொண்டிருந்த போது அழகு பொங்கி வழியும் ஒரு பெண் எங்கள் எதிர்ப்பக்கத்திலிருந்து வந்துக் கொண்டிருந்தாள். நாடோடிப் பெண் போல படு அலங்காரத்திலிருந்தாள். எங்களைக் கண்டதும் பவ்யமாய் முதுகு வளைத்து குனிந்து நிமிர்ந்தாள். பின் வசீகரமாய் சிரித்தாள்.

''அழகு'' என்று பாராட்டிச் சொன்னேன் நான்.

இதற்கு ஜானின் முகம் இறுகியது.

''இது திருமதி ரமோலா.''

''அதாவது, ஹோரவோர்ட் சொன்ன ---''

''ஆங்... ஆங்...! அதே...!'' என தேவையற்ற அவசரத்தில் முடித்தான் ஜான்.

தலை நரைத்து மாளிகையில் இருக்கும் அந்தக் கிழப் பெண்மணியை நான் நினைத்தேன்... கூர்மையும் அதே சமயம் நரித்தனமும் ஒன்றாய் கண்களில் ஒளிர இப்போது எங்களைப் பார்த்து சிரித்த இந்த முகத்தையும் நினைத்துக் கொண்டேன். முதுகுத் தண்டில் இனம் புரியாத ஐஸ் நீர் பாய்ந்து என்னை உள்ளுக்குள் குலைத்தது. தற்போதைக்கு இந்த ஒப்பிடுதலைப் பெருக்கி மூலைக்குத் தள்ளி வைத்தேன்.

Scanned by CamScanner

''ஸ்டைல்ஸ் - நிஜமாவே, மரியாதை.... பாரம்பரியம்... மாட்சிமை எல்லாம் பொருந்திய ஒரு பழைமை சொத்து'' - ஜானுக்கு சொன்னேன்.

சற்றே இருளடைந்து ஒப்புக் கொண்டான். தொடர்ந்தான் : ''நீ சொல்றது சரிதான். அற்புதமான சொத்து. என்னுடையதா ஒரு நாள் ஆயிடும் --- இப்பவே என்னுடைய உடைமையாகி இருக்கணும்... எங்கப்பன் மட்டும் தப்பில்லாம உயில் எழுதியிருந்தான்னா...! அப்படி ஆகியிருந்தா... ஆஹா... இது மாதிரி ஜிங்கி அடிச்சுக்கிட்டா நான் இருப்பேன்...?!''

''நீயா ஜிங்கி அடிச்சுக்கிட்டு இருக்கே?''

''நண்பா... உன்கிட்டே சொல்றதுல என்ன இருக்கு... நான், என் கடைசி தம்புடிகளைச் செலவழிச்சுக்கிட்டு இருக்கேன்.''

''உன் தம்பி உனக்கு உதவக் கூடாது...?''

''யார்...? லாரன்ஸ்...? அதை எழுதறேன்... இதை எழுதறேன்னு பண்ணியே, ஒப்பேறாத குண்டு குண்டு புத்தகங்களா எழுதி, அவனுடைய கடைசி அணா வரைக்கும் தின்னுட்டான். இப்ப நாங்க எல்லோருமே... ஹேஸ்டிங்ஸ்... உண்மையா சொல்லணும்னா.... பிச்சைக்காரங்க! பிச்சைக்காரக் கூட்டம்! எங்க அம்மா.... சித்தியாவே இருந்தாலும் தாள முடியாத அளவுக்கு அன்பு வெச்சு தான் வளர்த்தாங்க... குறையே சொல்ல முடியாது. அதெல்லாம் நேத்து வரைக்கும். அவங்களோட கலியாணத்துக்குப் பிறகு ---''

உடைந்துப் போனார். மடிந்துக் குறுகினார்.

மாளிகையின் காற்றோடு கலந்தேயிருந்த வர்ணிக்க முடியாத ஏதோ ஒரு பிணைப்பு, எவிலின் ஹோவோர்டின் பிரயாணத்தோடு அவரோடு கூட சேர்ந்து போயே விட்டதாய், இப்போது முதல் முறையாய் உணர்ந்தேன் நான். அவரது இருப்பு - பாதுகாப்பை உரைத்துக் கொண்டே இருந்தது. அந்தப் பாதுகாப்பு இப்போது துடைத்தெறியப்பட்டு விட - காற்று முழுவதும் வெறும் சந்தேகங்கள் மட்டும் நிறைந்து நின்றன. கள்ளமும் கபடமும் நிறைந்த டாக்டர் பௌரீஸின் முகம் அசிங்கமாய் என் நினைவுக்குள் புகுந்தது. ஒவ்வொருவரின் மீதும்... ஒவ்வொன்றின் மீதும்... விவரிக்க முடியாத ஒரு சந்தேகம் எனக்குள் நிறைந்தது.

விளக்கத் தெரியவில்லை நேயர்களே... நொடிப் பொழுது... ஒரே ஒரு நொடிப்பொழுது... அத்தருணத்தில், எதிரே வந்துக் கொண்டிருக்கும் பயங்கரக் கொடூரம் ஒன்றை நான் கணித்தேன்.

Scanned by CamScanner

## அத்தியாயம் இரண்டு

# ஜூலை 16 மற்றும் 17

~

ஜூலை ஐந்தாம் தேதி நான் 'ஸ்டைல்ஸ் எஸ்டேட்ஸ்' வந்து சேர்ந்தேன். அந்த மாதத்தின் 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில் நடந்த முக்கிய சம்பவங்களை இப்போது முன்வைக்கப் போகிறேன். நேயர்களின் புரிதலுக்கு ஏதுவான வகையில் இது அமைய வேண்டிய அவசியம் இருப்பதால், எத்தனை துல்லியமாக தொகுத்துக் கூற முடியுமோ அத்தனை சுத்தமாக நினைவுகூரப் போகிறேன்.

எவிலின் ஹோவோர்ட் வெளியேறிய ஓரிரு நாட்கள் கழித்து, அவரிடமிருந்து ஒரு கடுதாசி எனக்கு வந்தது. அதில், இங்கிருந்து 15 கல் தூரத்தில் இருக்கும் ஒரு பெரிய மருந்து தயாரிக்கும் கம்பெனியில் தாதியாகப் பணியாற்ற வேலை கிடைத்திருப்பதாக சொல்லியிருந்தார். சமாதானமாகி தன்னுடன் ஒன்று சேர்வதற்கு திருமதி ஆல்ஃபிரட் கொஞ்சமாவது ஈடுபாடு காட்டுகிறாரா என்பது பற்றி மிக ஆவலாகக் கேட்டிருந்தார்.

முழு அமைதியுடன் நான் எதிர்பார்த்து வந்த ஓய்வோடு நகர்ந்துக் கொண்டிருந்த அந்நாட்களில், திருமதி மேரி ஜான் அந்த டாக்டர் பௌரீஸின் பால் வைத்திருந்த கூட்டுறவு, என்னைப் பொறுத்தமட்டில், அசாதாரணமாயும் ஏற்றுக் கொள்ளவே முடியாத தினுசிலும் விசனப்பட வைத்தது. அந்த மனிதனிடம் அப்படி எதைத் தான் மேரி கண்டாரோ... என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. ஆனால் பௌரீஸை வா வா என எஸ்டேட்டுக்கு அழைத்த வண்ணமிருந்தார்; எதையோ தேடிக் கண்டுபிடிக்கப் போவது போல அவருடன் கிளம்பி அடிக்கடி வெளியேறிக் கொண்டிருந்தார்.

Scanned by CamScanner

டாக்டரிடம் எவ்வித கவர்ச்சியையும் காண முடியவில்லை என்பதை முழுதுமாக நான் சொல்லித் தான் ஆக வேண்டும்.

ஜூலை 16, ஒரு திங்கட் கிழமையன்று வந்தது. தகராறுகளும் கலக்கங்களும் நிறைந்த ஒரு குழப்ப நாள், அது. சனிக்கிழமை அன்று ஒரு சிறு அளவளாவல் விழா ஏற்பாடாகியிருந்தது; தொடர்ந்து ஒரு சிறு கலைநிகழ்ச்சிக்கும். திருமதி ஆல்ஃபிரட் உறுப்பினராக இருக்கும் நூறு தரும ஸ்தாபனங்களில் ஏதோ ஒன்று இதற்கெல்லாம் ஏற்பாடு செய்திருந்தது. விழாவில், திருமதி எமிலி ஆல்ஃபிரட்டும் ராணுவ வீரர்களின் தியாகத்தை முன் நிறுத்தி ஒரு கவிதை வாசிப்பதாக ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தக் காலை முழுவதும், விழா ஏற்பாடாகியிருந்த கிராம மண்டபத்தை அலங்கரிப்பதிலேயே கழிந்தது. இதனால் மதிய உணவு காலந்தாழ்த்தித் தான் கிடைத்தது. களைப்பு காரணமாக மண்டபத்திலிருந்த தோட்டத்திலேயே பிறகு எல்லோரும் சின்ன ஓய்வெடுத்துக் கொண்டோம். அப்போது, ஜானின் நடத்தை எப்போதுமில்லாத மாதிரி அசாதாரணமாய் இருந்ததை நான் கவனித்தேன். உள்ளுக்குள்ளேயே இருந்த குழப்பத்தாலோ அல்லது ஏதோ ஓர் உத்வேகத்தாலோ அவர் தன்னிலை இழந்து அமைதியற்றுத் தோன்றினார்.

மாலை தேநீர் முடிந்ததும், அளவளாவலில் சுறுசுறுப்பாய் பங்கேற்க சற்றே ஓய்வெடுத்து வருவதாய் சொல்லி விட்டு திருமதி ஆல்ஃபிரட் உள்ளே சென்றுவிட, ஒருவருக்கொருவராய் டென்னிஸ் விளையாட நான் மேரியைப் போட்டிக்கு அழைத்தேன்.

விழா சிறப்பான வெற்றி கண்டது. திருமதி எமிலி ஆல்ஃபிரட், கவிதையைத் தங்கு தடையின்றி உணர்வுபூர்வமாக ஒப்பித்தது, பெரும் கரவொலியைப் பரிசாக பெற்றுத் தந்தது. இதன்பின் வெறும் நடிப்பாலேயே சில சரித்திர நிகழ்வுகளை விளக்கும் மௌன நாடகம் ஒன்று தொடர்ந்தது. சிந்தியா பங்கேற்றாள். அவளுடன் நடித்த சக நடிகர்களுடன் இரவு விருந்து சாப்பிட்டு விட்டு அவர்களுடனேயே அன்றிரவு முழுவதையும் கழிக்க சிந்தியா வரவேற்கப்பட்டதால், அவள் எங்களுடன் எஸ்டேட் திரும்பவில்லை.

மறுநாள் மிகுந்த அசதியாய் இருப்பதாகச் சொல்லி விட்டு காலை சிற்றுண்டியைத் தனது படுக்கையறையிலேயே முடித்துக் கொண்ட திருமதி ஆல்ஃபிரட், மதியம் பனிரெண்டரை மணிக்கு தனக்கே

உரித்தான துடிப்புடனும் உற்சாகத்துடனும் வெளிப் பட்டார். வந்தவர், அருமையான ஒரு மதிய வேளை விருந்து காத்திருப்பதாக அறிவித்து விட்டு என்னையும் லாரன்ஸையும் கையோடு இழுத்துக் கொண்டு கிளம்பினார். டாக்டர் பௌரீஸுடன் முன்பதிவு இருப்பதாய் சாக்குபோக்கு சொல்லி விட்டு இதிலிருந்து தானாக வழுக்கிக் கொண்டார் மேரி.

அற்புதமான விருந்து. அதனை முடித்து விட்டு கிளம்பிய போது, வழியில், ஒரு கல் தூரத்தில் அமைந்திருந்த சிந்தியா பணியாற்றும் மருந்து தயாரிக்கும் கிடங்குக்குச் சென்று அவளை ஓர் எட்டுப் பார்த்துவிட்டு வரலாம் என்றார் லாரன்ஸ். சிறந்த ஆலோசனையாய் இதனை திருமதி எமிலி ஏற்றுக் கொண்டாலும் பதில் எழுத வேண்டிய கடுதாசிகள் ஏராளமாய் குவிந்துக் கிடப்பதால், தன்னால் கிடங்குக்குள் வந்து கால விரயம் செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்... எங்களை இறக்கி விட்டுவிட்டு இந்தக் காரை எடுத்துச் சென்று விடுவதாயும், எங்களிருவரையும், சிந்தியாவைப் பார்த்து விட்டு அவளது வண்டியில் எஸ்டேட் திரும்பி விடுமாறும் ஒரு தீர்வினைத் தந்தார்.

சிறு சந்தேகத்தின் பேரில் நானும் லாரன்ஸும் கிடங்கின் வாசலிலேயே நிறுத்தப்பட்டோம் - சிந்தியா வந்து, அவளுக்கே உரிய பூப்பூவான புன்னகையை வீசி எங்களைத் தன்னகப் படுத்தும் வரை...! அவளுடைய பிரத்யேக அறைக்கு எங்களை அழைத்துப் போனாள். பார்க்கவே சற்று பயங்கரமான தனது சக பணியாளை அங்கு அவள் அறிமுகப்படுத்தினாள். ''பெயர்: நியான்'' என்றாள்.

அந்த அறையை என் கண்கள் ஒரு சுற்று சுற்றி நோட்டமிட்டு முடித்ததும், ''ஆஹ்....!'' என ஆச்சரியம் காட்டிய நான், ''எத்தனை யெத்தனை விதவிதமான பாட்டில்கள்!'' என்றேன். ''ஏய், சிந்தியா...! இவையத்தனையிலும் என்னென்ன இருக்குனு உனக்கு நிச்சயமா தெரியுமா...?''

''அடடா...'' என கடுகடுப்பான சிந்தியா ''ஏதாவது சொந்தமா சொல்லுங்களேன்!'' என்றாள். ''இங்கு வரும் ஒவ்வோர் ஆளும் இதையே தான் சொல்றான். முதல் தடவையா இங்கே வந்து, ஆனா, 'ஆஹ்...! எத்தனையெத்தனை விதவிதமான பாட்டில்கள்!' அப்படினு எவன் *சொல்லாம* இருக்கானோ அவனுக்கு விருதே

கொடுத்துடணும்னு இருக்கோம்...! இனி அடுத்து நீங்க என்ன கேட்கப் போறீங்கனு எனக்குத் தெரியும்...! 'இந்த விஷங்களை நீங்க எத்தனை பேருக்கு கொடுத்திருப்பீங்க...?' சரிதானே!''

மெலிதான புன்னகையோடு ஏற்றுக் கொண்டேன்!

''இவையெல்லாம் கடும் விஷங்கள். ரகசியமா - ஒருத்தருக்கும் தெரியாம - யாருக்காவது இந்த விஷங்களைத் தந்து, அடுத்த கணமே அவங்களைப் பரலோகம் அனுப்பிடலாம் என்கிற உண்மை மட்டும் தெரிஞ்சிருந்தா... நீங்க யாருமே இந்த விஷயத்தைக் கேலியா பேசமாட்டீங்க! அதோ... அது... அந்த அலமாரி... அது இல்ல லாரன்ஸ் ... அதுக்கு பக்கத்துல பெரிசா இருக்கு இல்லே... அது...! ஆங்.... அதுதான் விஷ அலமாரி. பற்பல வகையான ரகசிய விஷங்கள் அதுல இருக்கு. ம்... குடிங்க...! ஓஹ்... டீ'யைப்பா!''

இனிப்பும் கடும் சூடும் கொண்ட சுவையான தேநீர் வந்திருந்தது... குடித்தோம். கோப்பைகளைக் கழுவ பிறகு சிந்தியாவுக்கு ஒத்தாசை செய்தோம். கடைசியாய் கழுவிய தேநீர் கரண்டியை அதற்கான ஆணியில் மாட்டிய போது கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. உற்சாகக் கொம்மாளத்திலிருந்த சிந்தியா மற்றும் நியானின் முகங்கள், சட்டென களையிழந்து கல்லாய் இறுகிப் போயின.... வரக் கூடாதது உள்ளே வந்து விடுமோ என்ற அதிர்வு அலைகள் இருவரது முக பாவங்களிலும் நிறைந்தன.

''ம். வரலாம்'' என்று அதிகார குரலில் அறிவித்தாள் சிந்தியா.

கையில் ஒரு குடுவையுடனும் முகமெங்கும் ஒருவித பயக் கலவரத்துடனும் உள்ளே நுழைந்த இளைய தாதி, கையிலிருந்த பாட்டிலை நியானிடம் கொடுக்க முன்வர, அவனோ, சிந்தியாவை நோக்கி புயலாய் வலக்கையை வீசிக் காட்டி, புரிந்துக் கொள்ள முடியாத புதிராய் பின்வரும் குறிப்பினைத் தந்தான்:

''இன்னிக்கு *நான்* இங்கே டியூட்டியில் இல்லவே இல்லை.''

பாட்டிலைப் பெற்றுக் கொண்ட சிந்தியா, ஒரு நீதிபதியின் ஈடுபாட்டோடு அதனை பரீட்சித்தாள். பின் கண்டிப்பாகச் சொன்னாள்:

''இன்று காலையிலேயே இதை அனுப்பியிருக்கணும்.''

''ஸிஸ்டர் மறந்துட்டாங்களாம். ரொம்ப வருத்தப்பட்டாங்க.''



Scanned by CamScanner

''இந்த மருந்தகத்தின் சட்ட திட்டங்களை ப்ரிண்ட் போட்டு, அதோ, தொங்க விட்டிருக்கோம் இல்லே...? அதை உங்க ஸிஸ்டரை நல்லா படிக்கச் சொல்லு...!''

இதை சிந்தியா சொன்னபோது, அந்த இளைய தாதியின் முகத்தில் தெரிந்த பிரதிபலிப்பினை வைத்து, சிந்தியா குறிப்பிட்ட சேதியை அப்படியே கொண்டு போய் 'ஸிஸ்டரிடம்' சொல்லும் துணிவு அவளுக்குத் துளிகூட கிடையாது என்பதை என்னால் கிரகிக்க முடிந்தது.

''ஆக - நாளை காலை வரை இதை ஒண்ணும் செய்ய முடியாது'' - அதிருப்தியாய் முடித்தாள் சிந்தியா.

''இன்னிக்கு ராத்திரி நாம இதை அனுப்பிடலாம், இல்லையா மேடம்?'' என்றாள் வந்தவள், பவ்யமாய்.

''ஆமாமாம்... ராத்திரி...? ம்...? ராத்திரி...? தலைக்கு மேல வேலை பிய்யுது இல்லே'' என்று பாசாங்காய் இரக்கம் காட்டிய சிந்தியா, ''அந்த தலை போற வேலையெல்லாம் முடிஞ்சு நேரம் கிடைச்சா... இதை முடிச்சிடலாம்'' என்றாள்!

வந்த பரிதாப தாதி, மேற்கொண்டு நிற்காமல், பின்னுக்கு நகர்ந்து பின் மறைந்தாள். சிந்தியா சிரத்தையோடு அலமாரியிலிருந்து ஒரு பெரிய ஜாடியை எடுத்து, கொண்டு வந்த குடுவையிலிருந்ததை அதனுள் கொட்டி மூடி, பிறகு அதனை அருகிலிருந்த மேஜையில் வைத்தாள்.

''ம். இப்படி கூட வாங்க. பால்கனி வரைக்கும் போவோம். எங்ககிட்டே இருக்கிற நோயாளிகளை இங்கிருந்து காட்டறேன்.''

சிந்தியாவையும் அவளுடைய நண்பனையும் தொடர்ந்தேன். பல நோயாளிகளைச் சுட்டிக் காட்டி சிறு சிறு விளக்கங்கள் தந்தாள். திரும்பி, எங்களிருவருக்கும் சற்று பின்னாலேயே நின்று விட்ட லாரன்ஸைப் பார்த்து, அவரையும் வந்து சேர்ந்துக் கொள்ளும்படி அழைத்தாள் சிந்தியா. பிறகு கைக்கடியாரத்தைப் பார்த்தவள், ''வேறு ஒன்றும் ஜோலி கிடையாதா, நியான்?'' என்றாள்.

''ம்ம்.''

''சரி. அப்ப பூட்டிட்டுக் கிளம்பலாம்.''

அன்றைய மதியப்பொழுதில், முழுவதும் புதுக் கோணத்தில் என்னால் லாரன்ஸைக் காண முடிந்தது. ஜானைப் போலல்லாமல்,

Scanned by CamScanner

'இவன் எப்படிப்பட்டவன்' என்பதையே கணிக்க முடியாத அளவுக்கு வித்தியாசமான ஒரு பேராச்சரிய மலைப்பாய் இருப்பவர், லாரன்ஸ். ஒவ்வொரு விஷயத்திலும், தனது சகோதரனுக்கு முழுக்க முழுக்க எதிர்ப்பதமாய் வாழ்கிறார் இவர். தேவையற்ற கூச்சம்... மனம் விட்டுப் பேசாத தனிமை. இருந்தாலும், லாரன்ஸிடம் ஓர் ஈர்ப்பு இருக்கத்தான் செய்கின்றது. லாரன்ஸை சரியாய் புரிந்துக் கொண்ட ஒருவரால், அவர் மீது தீரா பிரியம் கொண்டு ஆழ்ந்து நெருங்கியிருக்க முடியும் என்றது என் மனது.... அப்படி ஒரு வசீகரம் அவருக்குள் ஒளிந்து தானிருக்கிறது. சிந்தியாவோடு லாரன்ஸ் பழகும் விதம் ஏதோ வற்புறுத்தி கட்டாயப்படுத்தப்பட்ட ஒன்றாய் தான் எனக்கு பல தருணங்களில் பட்டிருக்கின்றது. அவளை எடுத்துக் கொண்டால், லாரன்ஸ் என்றாலே சற்றே கூச்சப்பட்டு விலகுவதாய் தோன்று கின்றது! ஆனால் இன்றென்னவோ, குதூகலத்தின் உச்சத்தில், இரு சிறு குழந்தைகளாய் அவர்கள் தாளாது லூட்டி அடித்துக் கொண்டிருந்தனர்.

கிராம தெருக்களில் திரும்பிக் கொண்டிருக்கும்போது, சில தபால் தலைகள் வாங்க வேண்டியிருப்பது என் ஞாபகத்துக்கு வர, தபால் அலுவலகத்தில் கொஞ்ச நேரம் வண்டியை நிறுத்தினோம். வாங்கிக் கொண்டு திரும்பும்போது, உள்ளே நுழைந்துக் கொண்டிருந்த சற்றே குள்ளமான ஒரு மனிதனின் மீது, எதிர்பாராது தோளோடு தோளாக மோதி விட்டேன். தவறு என்னுடையது. எனவே மன்னிப்புக் கேட்டுக் கொள்ள நான் அவர் பக்கமாய் சட்டென திரும்பிய சமயத்தில், சத்தமான ஓர் ஆச்சரிய கதறலோடு, என்னை அப்படியே இழுத்து அணைத்து கன்னத்தில் கதகதப்பாய் அன்பு முத்தமிட்டார் அவர்.

''நண்பா! ஹேய்... ஹேஸ்டிங்ஸ்...!'' என்று மனமார சிரித்தபடி அழைத்தார். ''இது ஹேஸ்டிங்ஸே தான்.. கள்ளா...!'' என்று வேறு ஆனந்தமானார்.

''பொய்ரெட்...!'' - ஆச்சரியம் மட்டுமல்ல... பேரானந்தத் திகைப்பில் மூழ்கிப் போனேன்!

எங்கள் வண்டியிருந்த திசை நோக்கித் திரும்பினேன். ''என்னை சந்தோஷத்தின் உச்சிக்கே கொண்டு போகும் சந்திப்பு இது, செல்வி சிந்தியா...! இது என் ஆத்ம நண்பன். திருமிகு பொய்ரெட்...

Scanned by CamScanner

ஹெர்குல் பொய்ரெட்! ஓரிரு வருடங்களாக இருவரும் பார்த்துக் கொள்ள முடியாமல் போய்விட்டது!''

''எங்களுக்கு பொய்ரெட்டைத் தெரியுமே...!'' என்று பிரகாசமாய் பதில் தந்தாள் அவள். ''இவர் உங்களுடைய ஆத்ம நண்பர் என்பதுதான் எனக்குத் தெரியாது!''

''ஆமாம்'' என மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டான் பொய்ரெட். ''எனக்கு செல்வி சிந்தியாவைத் தெரியும். திருமதி எமிலியின் தரும ஸ்தாபனம் ஒன்றின் அழைப்பின் பேரில் தான் நான் இங்கே வந்திருக்கேன்.''

அப்படியா என விசாரிக்கும் தொனியில் நான் பார்க்க, காவல் துறை மற்றும் உளவுத் துறையின் நன்மதிப்பை அளப்பற்கரிய பெற்று, முதல் தர துப்பறியும் மேதையாய் விளங்கிக் கொண்டிருக்கும் அவன் விளக்கினான்:

''என்னைப் போன்ற ஏழு முக்கியஸ்தர்ககளை அழைத்து மரியாதை செய்ய முன்வந்திருக்கிறார் - புண்ணியவதி திருமதி எமிலி. பரோபகாரி. தர்ம தேவதை.''

அவனும் அவன்கூட வந்திருப்போரும் சேர்ந்து தங்கியிருக்கும் சிறு வீட்டினைச் சுட்டிக் காட்டினான். உடனடியாக அங்கு வந்து எல்லோரையும் சந்திப்பதாய் வாக்குறுதி தந்தேன் நான். எல்லோருக்கும், குறிப்பாக சிந்தியாவுக்கும் இன்முகம் காட்டி அவன் விடைபெற்றுக் கொள்ள, எங்கள் வண்டி பறந்தது.

''பழக மிக இனிமையானவர்'' என்றாள் சிந்தியா. ''உங்களுக்கும் அவருக்கும் நட்பிருக்கும் என்பது நான் எதிர்பாராதது.''

''உலகம் போற்றும் ஒரு பிரபலஸ்தர் அவன்... என்பதே தெரியாது கூட்டிட்டு வந்து அவனைக் கொண்டாடிக்கிட்டு இருக்கீங்க'' என நான் மறுபதில் தந்தேன். இப்படிச் சொன்னதை நிரூபிக்க, திரும்பும் வழி நெடுகிலும், பெருமிதம் கொள்ளும் அளவுக்கு ஹெர்குல் பொய்ரெட் தீர்த்துத் தந்துள்ள மிகக் கொடூரமான குற்ற வழக்குகளின் மாபெரும் வெற்றிகள் பற்றியும், அவனுடைய நுணுக்கமான துப்பறியும் மூளை பற்றியும் வரிசையாய் அடுக்கிக் கொண்டே வந்தேன். இதனால், குதூகலமான மனோநிலையில் வீடு திரும்பினோம்.

Scanned by CamScanner

நாங்கள் உள்ளே நுழையும் போது தன்னுடைய பிரத்யேக அறையிலிருந்து வெளிப்பட்டார் திருமதி எமிலி. முகம் சிவந்து குலைந்த மனநிலையிலிருந்தார். ''ஓ.... வந்தது நீ தானா?!'' என்றார்.

''ஏதாவது சங்கதியா?'' - கேட்டாள் சிந்தியா.

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே'' என்றார் கூராய். ''என்ன சங்கதி இருக்கணும்?'' என அதிகாரமாய் கேட்டு விட்டு, அந்தப் பக்கமாய் போய்க் கொண்டிருந்த ஒரு பணியாளை அழைத்தார். சில தபால் தலைகளை எடுத்துக் கொண்டு தன்னுடைய அறைக்கு வருமாறு பணித்தார்.

''சரிம்மா'' என்ற அந்த வயதான வேலைக்காரி, கொஞ்சமாய் தயங்கி நின்று பின்பு கரிசனையாய் சொன்னாள்: ''கொஞ்ச நேரம் போய் படுத்துக்கக் கூடாதாம்மா? முகமெல்லாம் ஒரே அசதியா தெரியுது.''

''நீ சொல்றதும் சரிதாண்டீ. ஆனா, இப்ப முடியாது. அடுத்த தபால்ல சேர்த்தே ஆகணும்கிற அவசரத்துல சில கடுதாசிகள் இருக்கு. என் அறையில் கணைப்பு மூட்டச் சொன்னேனே.... அதை நீ செஞ்சிட்டியா?''

''தயார்மா.''

''அப்ப வேலை முடிஞ்சதும் சாப்பிட்டுட்டு உடனடியா படுக்கப் போயிடறேண்டீ.''

சொல்லிவிட்டு தன்னுடைய பிரத்யேக அறைக்குள் திருமதி எமிலி போய்விட, அவர் முதுகைக் கண்ணகல வெறித்தபடி நின்றுக் கொண்டிருந்தாள் சிந்தியா.

''என்னாயிற்று இவங்களுக்கு?'' என்று லாரன்ஸிடம் சொன்னாள்.

இப்படி சிந்தியா பொதுவாய் சொன்னது லாரன்ஸ் காதுகளுக்கு விழுந்ததாகவே தோன்றவில்லை... அப்படியே திரும்பியவர் வீட்டிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தார்.

உணவு சாப்பிடப் போவதற்கு முன் ஒரு செட் டென்னிஸ் விளையாடலாம் என்று நான் ஆலோசித்ததை சிந்தியா ஏற்றுக் கொள்ள, டென்னிஸ் மட்டையை எடுக்க நான் மாடிக்கு ஓடினேன்.

அப்போது திருமதி ஜான் மாடியிலிருந்து இறங்கி வந்துக் கொண்டிருந்தார். எனது அதீத கற்பனையாகக் கூட இருக்கலாம்....

Scanned by CamScanner

ஆனால் அவரும்கூட வித்தியாச மனோநிலையிலும் சற்று உலுக்கப்பட்டவராயும் தான் தோன்றினார்.

''என்ன... டாக்டர் பௌரீஸூடன் ரொம்ப தூரம் நடந்து வந்ததன் களைப்பா?'' என, குரலில் சிறு தூரம் உருவாக்கிக் கொண்டு கேட்டேன்.

''நான் போகலே'' என ஒரு துண்டு பதில் தந்தார் அவர். ''திருமதி எமிலி எங்கே?''

''அவருடைய பிரத்யேக அறையில.''

அவருடைய இரு கை விரல்களும் இப்போது தன்னிச்சையாக முடிச்சுப் போட்டுக் கொண்டு அல்லாடின. பிறகு ஏதோ ஒரு சண்டையை எதிர்கொள்ள தன்னைத் தானே தயார்படுத்திக் கொள்வது போல அவர் முகம் இறுகுவதைக் கவனித்தேன். பின் மளமளவென எனக்குப் பின்னால் படியிறங்கி வரவேற்பறையைக் கடந்தவர், திருமதி எமிலியின் அறைக்குள் புகுந்துக் கொண்டார். தனக்குப் பின்னால் அறைக் கதவினை அறைந்து சாத்தினார்.

சில நொடிகளுக்குப் பிறகு டென்னிஸ் மைதானத்துக்கு நான் விரையும் போது, திருமதி எமிலியுடைய பிரத்யேக அறையின் திறந்த ஜன்னல்கள் சிலவற்றைக் கடந்து வெளியேற வேண்டியிருந்தது. அப்போது, பின்வரும் துண்டு வசனங்கள், காற்றில் கலந்து என் காதுகளில் வந்து விழுந்ததை என்னால் தவிர்க்க முடியாமல் போனது.

மெனக்கெட்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் ஒருவரது குரலில், திருமதி மேரி கேட்டுக் கொண்டிருந்தார்:

''அப்படினா நீங்க அதை எனக்குக் காட்ட மாட்டீங்க?''

இதற்கு திருமதி எமிலியின் பதில்:

''மேரி...! இதுக்கும் அந்த விஷயத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. விடேம்மா.''

''தொடர்பு இல்லை இல்லே...! அப்பக் காட்டுங்க.''

''நீ கற்பனை செய்யற மாதிரி இதுல ஒண்ணும் கிடையாது. உனக்கும் இதுக்கும் கடுகத்தனை கூட சம்பந்தம் இல்ல.''

இதற்கு அதிகபட்ச கசப்புடன் மேரி சொன்ன மறுபதில்:

''தெரிஞ்சிருக்கணும்...! நீங்க அவரைப் பொத்திப் பொத்தி தான் பாதுகாப்பீங்கன்னு எனக்குத் தெரிஞ்சிருக்கணும்....! ஆனா - - -''

Scanned by CamScanner

விளையாடுவதற்காக விறுவிறுப்பாய் காத்திருந்த சிந்தியா ''ஏய்... விஷயம் தெரியுமா... சுயமரியாதையைத் தட்டி உசுப்பேத்தற மாதிரி சகிக்க முடியாத சண்டை நடத்திருக்கு! நானி மூலமா அத்தனையும் உருவிட்டேன்!'' என்றாள்.

''என்ன சண்டை?''

''எமிலி அத்தைக்கும் *அவனுக்கும்*. அவனைப் பத்தி கடைசியில் அத்தை தெரிஞ்சுக்கிட்டாங்கனு நினைக்கிறேன். வேணும் படவா.''

''அந்த சமயத்துல நானியும் இருந்திருக்காளா?''

''சேச்சே... அப்ப 'கதவு பக்கத்துல அவ இருக்கிற மாதிரி' சூழல் உருவாயிருக்கு. வெடிச் சண்டையாம். அடடா...! எதனால சண்டை... என்னென்ன பேசி கத்தினாங்க.... இதெல்லாம் எனக்கு இப்பவே தெரிஞ்சுடக் கூடாதா...?!''

ரமோலாவின் அலங்கார முகத்தையும் எவிலின் ஹோவோர்'டின் எச்சரிக்கைகளையும் இப்போது நான் நினைத்தேன். ஆயினும் எதையும் காட்டிக் கொள்ளாமல் அமைதி காக்க நான் முயல, சிந்தியாவோ, அவளுக்குள் உருவாகிப் பெருகிய விதவிதமான ஊகங்களை அடுக்கிக் கொண்டேயிருந்தாள். ''எமிலி அத்தை இனி அவனோட பேசவே மாட்டா. அவனைத் துரத்திடுவா. நிச்சயமா. ஊஃப்'' என விடுதலைப் பெருமூச்சு விட்டாள்.

உடனே ஜானைப் பிடித்துவிட நான் துடித்தேன். ஆனால், அவரைக் கண்ணுக்கெட்டிய தூரத்தில் எங்குமே பார்க்க முடியவில்லை. மிக முக்கியமான ஏதோவொன்று அந்த மதியப் பொழுதில் நடந்துள்ளது என்பது மட்டும் வெளிப்படையாய் தெரிந்தது. என்ன அது? காற்றில் வந்து என் காதுகளுக்குள் விழுந்த நான் சம்பந்தப்படாத அவ்வார்த்தைகளை மறந்துத் தொலைத்துவிட நான் முயன்றேன். இதற்காக நான் என்ன பிரயத்தனப்பட்டாலும் அவற்றை முழுவதுமாக துடைத்து எறிய என்னால் முடியாமல் போனது. அந்த விஷயத்தில் திருமதி மேரி ஜானின் சம்பந்தம் தான் என்ன?

நான் சாப்பிடுவதற்காக திரும்பிய போது, திரு ஆல்ஃபிரட் வரவேற்பறையில் உட்கார்ந்திருந்தார். அவரது முகம் எப்போதும் போலவே படபடப்பற்று இருந்தது... ஆனால் அப்படிப்பட்ட நிதான முகத்தில், விளக்கயியலாமல் தோன்றிய ஒரு போலித்தனமான விழிப்பு - ஒரு பொய்மை - அது மிகப் புதிதாக என்னைத் தாக்கிற்று.

Scanned by CamScanner

இறுதியாக திருமதி எமிலி ஆல்ஃபிரட் இறங்கி வந்தார். அவர் இன்னமும் அமைதியற்று தானிருந்தார். உணர்ச்சி வயப்பட்டிருந்தார். சாப்பிடும் போது அவரிடம் விடாப்பிடியான மவுனம் நிலவியது. திரு ஆல்ஃபிரட்டும், எப்போதும் இருப்பது போல சாதாரணமாயில்லாமல், மௌனக்கெட்டு அமைதி காத்தார். தனக்கு அவரே இட்டுக் கொண்ட சட்டப்படி, தனது மனைவியை அன்பாய் முற்றுகையிடுவது... அவர் உட்காரும் போது நாற்காலியில் தலையணை வைத்து வசதி செய்து தருவது... என ஒரு விசுவாசமான கணவன் செய்யும் சேவைகளை வாய் திறக்காது செய்தார். சாப்பிட்டதும் உடனே கை கழுவி சட்டென தனது பிரத்யேக அறைக்குப் போய்விட்டார் திருமதி எமிலி.

''காபியை உள்ளே அனுப்பிடு, மேரி'' என்றார். ''இன்னும் அஞ்சு நிமிஷத்துல கடுதாசிகளை நான் தபால்ல சேர்த்தாகணும்.''

நானும் சிந்தியாவும் நகர்ந்து போய் திறந்திருந்த வரவேற்பறை ஜன்னலருகே உட்கார்ந்துக் கொண்டோம். திருமதி மேரி எங்களுக்கான காபியைக் கொண்டு வந்து தந்தார். அவர் மறைக்க இயலாத ஏதோ ஒரு படபடப்பில் இருப்பதை உணர்ந்தேன். ''திருமதி எமிலிக்குக் காபி கொண்டு போய் தர்றியா, சிந்தியா?'' என்று கேட்டார் அவர். ''நான் டம்ளர்ல விட்டுத் தர்ரேன்.''

இதற்கு ''அவளைத் தொந்தரவு செய்யாதே மேரி'' என்றார் ஆல்ஃபிரட். ''நான் எமிலிக்குக் கொண்டு போறேன்.''

அவரே முன்வந்து காபியைக் கோப்பையில் ஊற்றிக் கொண்டார். சிரத்தையாய் அதை எடுத்துக் கொண்டு நகர்ந்தார்.

லாரன்ஸ் அவர் பின்னாலேயே செல்ல, திருமதி மேரி எங்களருகே அமர்ந்துக் கொண்டார்.

நாங்கள் மூன்று பேருமே கொஞ்ச நேரம் அமைதியாய் உட்கார்ந்திருந்தோம். அது ஓர் அற்புதமான அந்திப் பொழுது. எங்கும் சலனமேயில்லை. தாவரங்களெல்லாம் வரைந்தாற் போலிருந்தன. மெல்லிய சூடு குவிந்து இந்த இங்கிலாந்தில் சுலபமாய் அனுபவிக்கக் கிடைக்காத கதகதப்பு நிலவியது. திருமதி மேரி சிறு விசிறியால் விசிறிக் கொண்டு சிலுசிலுப்பை ஏற்படுத்திக் கொண்டார்.

''இன்று வெயில் ஜாஸ்தி'' என முணுமுணுத்தார். ''இடி மழை இருக்கும் பாருங்க.''

பிடித்தவர்கள் அருகாமையில் அமர்ந்திருந்த அந்த ஒத்த தருணம், நெடுநேரம் நீடிக்கவில்லை! நான் அனுபவித்த சொர்க்கம் போன்ற மணித்துளிகள், சமீபத்தில் எனக்குப் பழகியிருந்த ஆனால் நான் முழுக்க வெறுக்கும் ஓர் இடிக் குரலால் முடிவுக்கு வந்தன!

திரும்பிப் பார்த்த சிந்தியா, ''டாக்டர் பௌரீஸ்!'' என்று ஆச்சரியமாய் குறிப்பிட்டாள். ''கோமாளி மாதிரி இந்த ராத்திரி எதுக்கு வராரு!''

நான் சட்டென மேரியைப் பொறாமையாய் கீழ் பார்வைப் பார்த்தேன்... ஆனால் அவர் துளியும் குழப்பமடையாதவராய் தான் தென்பட்டார். அவருடைய வெளிர் நிற முகவாயில் நிற மாற்றம் நிகழவில்லை!

சில நொடிகளில் டாக்டரின் வருகையை மிக மரியாதை கொடுத்து ஆல்ஃபிரட் முன்மொழிந்துக் கொண்டே உடன் நுழைந்தார். வாயகல சிரிப்போடு உள்ளே வந்த பௌரீஸ், அசுத்தங்களற்ற வரவேற்பறைக்குள் நேரடியாக நுழையும் நிலையில் தான் அப்போது இல்லை என்ற தன் நிலைமையினை வெளிப்படுத்தினார். அப்பொழுது தான் அவரை அனைவரும் உன்னிப்பாய் கவனித்தோம். உடம்பு முழுவதும் களிமண்ணால் பூசப்பட்ட கதியில் அவர் நின்றுக் கொண்டிருந்தார்.

''என்ன செஞ்சிக்கிட்டிருந்தீங்க, மருத்துவரே?!'' என கிண்டலாய் கேட்டாள் சிந்தியா.

''நேரங்கெட்ட நேரத்துல தொந்தரவு கொடுப்பதுக்கு மன்னிக்கணும். நான் உள்ளே வர்ரதாகவே இல்லை. ஆல்ஃபிரட் தான் விடாப்பிடியா இழுத்துக்கிட்டு வந்துட்டார்.''

''ஓ, டாக்டர்... நீங்க சகிக்க முடியாத நிலையில இருக்கீங்க'' என்றார் ஜான், பக்கத்து அறை ஒன்றிலிருந்து இங்கு நுழைந்தபடி. ''முதல்ல காபி குடிங்க. பிறகு இப்படி எப்படி மாறினீங்கனு எங்களுக்கு சொல்லுங்க!''

''குடிக்கிறேன், குடிக்கிறேன்'' என்று தனக்குத் தானே நொந்துக் கொண்டு சிரித்தபடி சொன்னார் அவர். காணக் கிடைக்காத ஒரு மருத்துவ தாவரத்தை... அது கொடி வகையாம்... அதை, நெருங்க முடியாமல் மண்டிக் கிடந்த ஒரு புதருக்குள் கவனித்ததை விவரித்தார். அந்தக் கொடியை வேரோடு பத்திரமாக பிடுங்க இவர்

Scanned by CamScanner

மேற்கொண்ட முயற்சிகளில் கால் வழுக்கியிருக்கிறது. கீழே இருந்த ஒரு சாக்கடைக் குட்டைக்குள் விழுந்து, இப்படி வெட்கக்கேடாய் வந்து நிற்கிறார்!

''இந்த அழகுல கதகதப்பான காத்தும் கூட சேர்ந்து எல்லாத்தையும் காய வெச்சிடுச்சு'' என்று கூடுதலாய் சொன்ன அவர், ''என்னைப் பார்த்தா எல்லாருக்கும் கேலியா இருக்குனு நினைக்கிறேன்'' என்றார்!

இக்கட்டத்தில், திருமதி எமிலி, அருகிலிருந்த ஓர் அறையிலிருந்து சிந்தியாவுக்குக் குரல் தந்தார்.... இந்தப் பெண்ணும் உடனே குரல் வந்த திசை நோக்கி ஓடினாள்.

''கண்ணா... இந்தச் சின்ன பெட்டியைத் தூக்கிக்கிட்டுக் கூட வாயேன். நான் தூங்கப் போறேன். செய்வியா?''

அந்த அறையின் நுழைவாயில் கதவு பெரிது. சிந்தியா சொன்னதை செய்யும் போது நான் எழுந்துக் கொண்டிருந்தேன்... எனக்கு மிக அருகாமையில் ஜான் இருந்தார். ஆக, இன்னும் குடிக்காத தனது காபி கோப்பையைக் கையில் சுமந்துக் கொண்டு திருமதி எமிலி இருந்தார் என்று தலையிலடித்து சத்தியம் செய்ய, மொத்தம் மூன்று சாட்சிகள் அங்கு இருந்தனர்.

நான் முங்கி முங்கி அனுபவித்திருக்க வேண்டிய ஓர் அருமையான மாலைப் பொழுது, டாக்டர் பௌரீஸின் வருகையால், முழுவதும் அழித்து நாசமாக்கப்பட்டது. சீக்கிரத்தில் இங்கிருந்து மனிதன் கிளம்பப் போவதில்லை என்பது எனக்குப் புரிந்துப் போயிற்று. இருந்தாலும் கடைசியாய் கிளம்பினார்.... நான் நிம்மதிப் பெருமூச்சு விட்டேன்.

''நான் உங்ககூட காலாற கொஞ்ச தூரம் நடந்து வரேனே'' என்று அப்போது டாக்டருடன் சேர்ந்துக் கொண்ட ஆல்ஃபிரட், ''எஸ்டேட் கணக்குப் பற்றி எங்களுடைய கணக்கரைப் பார்த்தாகணும். நாம போற வழியில் தான் அவர் இருக்காரு'' என காரணம் சொல்லி விட்டு, எல்லோருக்கும் பொதுவாய் அறிவித்தார்:

''எனக்காக யாரும் உட்கார்ந்திருக்க வேண்டாம். நான் மாற்று சாவியை எடுத்துக்கிட்டுத் தான் போறேன்.''

Scanned by CamScanner

அத்தியாயம் மூன்று

# துயரம் சம்பவித்த இரவு

கதையின் இப்பகுதியை என்னால் இயன்ற அளவுக்குத் தெளிவாய் வழங்க, ஸ்டைல்ஸ் மாளிகையின் முதல் தளக் கட்டிட வரைபடத்தை நேயர்களுக்குத் தருகிறேன். வேலைக்காரர்கள் இருந்த அறைகளைக் கதவு எண் இரண்டின் வழியாக அடையலாம். ஆல்ஃபிரட் குடும்ப அறைகள் அமைக்கப்பட்டிருந்த வலப்புறப் பகுதிகளோடு, வேலைக்காரர்கள் எவரும் தொடர்பு வைத்துக் கொள்ள இயலாது.




முதல் தளத்தின் வலப்புறப் பகுதி
(இடப்புறப் பகுதி வேலையாட்களுக்காக)

Scanned by CamScanner

நள்ளிரவு இருக்க வேண்டும் என நினைக்கிறேன்... லாரன்ஸால் நான் எழுப்பப்பட்டேன். அவர் கையில் மெழுகுவர்த்தி கொளுத்தி வைத்திருந்தார். அவர் முகத்தில் தெறித்துக் கொண்டிருந்த கலவரம், கொஞ்சமும் தாமதிக்காது, எதுவோ மோசமாக நடந்துள்ளது என்பதை உடனடியாய் எனக்கு விளக்கியது.

எனவே ''என்னாச்சு?'' என துரிதமாக படுக்கையிலிருந்து எழுந்தபடியே நான் கேட்டேன். சிதறிக் கிடந்த சிந்தனைகளை அடக்கி ஸ்திரமாக சில நொடிகளாயிற்று.

''அம்மாவுக்கு என்னவோ ஆயிடுச்சோனு எங்க எல்லாருக்கும் பயமாயிருக்கு. வெட்டு வெட்டுனு துடிக்கிறாங்க. ஏதோ ஒரு வகை வலிப்பு போல. இந்த சமயம் பார்த்து அவங்க அறையை உள்பக்கமா தாழிட்டிருக்காங்க, ஹேஸ்டிங்ஸ்.''

''கிளம்புங்க.''

நழுவிய இரவு உடையைப் பிடித்துக் கொண்டு படுக்கையினின்றும் துள்ளியெழுந்தேன். லாரன்ஸைப் பின்தொடர்ந்து வராண்டா நடைபாதைகளைக் கடந்து முதல் தளத்தின் வலப்பக்கப் பகுதிக்கு ஓடினேன்.

வழியில் எங்களுடன் ஜானும் இணைந்துக் கொண்டார். பணிவும் அச்சமும் பீடிக்கப்பட்ட நடுநடுக்கத்தில் திருமதி எமிலி அறையின் வாசலில் சில வேலைக்காரர்கள் நின்றுக் கொண்டிருந்தனர்.

லாரன்ஸ் தனது மூத்த சகோதரர் பக்கம் திரும்பினார். ''இப்ப எதை செஞ்சா ரொம்ப நல்லதாயிருக்கும்னு நீ நினைக்கிறே?'' என கேட்டார்.

இந்தக் கேள்விக்கு ஜானிடம் பிரதிபலித்து வழிந்த அவருடைய - மனவுறுதி குலைந்த - முடிவெடுக்க இயலாத - பரிதவிப்பு குணாதிசயம், வேறு எப்போதும் இந்த அளவுக்கு பிரத்யட்சமாய் வெளிப்பட்டிருக்காது எனலாம்.

ஜான், திருமதி எமிலியுடைய பிரத்யேக அறையின் கைப்பிடியைப் பிடித்து மூர்க்கத்தனமாக ஆட்டிப் பார்த்தார். எதுவும் பெயரவில்லை. நிச்சயமாய் கதவு உள்பக்கமாய் பூட்டப்பட்டோ அல்லது தாளிடப்பட்டோ தானிருந்தது. வீட்டின் அனைத்துப் பிரஜைகளும் இப்போது எங்களை வட்டமிட்டிருந்தனர். கலவையான களேபரக் குரல்கள் வீட்டின் அனைத்து திசைகளிலிருந்தும் கிளம்பின. சந்தேகத்துக்கிடமின்றி ஏதாவது ஒரு தீர்வினை உடனடியாக நடத்தியாக வேண்டும்.

Scanned by CamScanner

கிழ வேலைக்காரி, ''அய்யய்யோ... ஆல்பிர்ரட்டு ஐயா அறை வழியா அம்மா உள்ளுக்குப் போகப் பாருங்களேன்... அய்யய்யோ'' என அழுதாள். ''அம்மா... அம்மா.... அம்மா....''

சட்டென துளிர்த்தேன். ஆல்ஃபிரட் இங்கு இல்லை என்பதை - அவர் மட்டுமே, தான் இங்கு இருந்ததற்கான எந்தத் தடயத்தையும் தரவில்லை என்பதை - உணர்ந்தேன். அவரது அறையை ஜான் திறந்தார். கும்மிருட்டு. லாரன்ஸ் காட்டிய மெழுகுவர்த்தி ஒளிப் பாதையைத் தொடர்ந்து விரைந்துக் கொண்டிருந்தோம். அந்த அவசரத்திலும், தெரிந்த மெல்லிய ஒளியில் படுக்கையைப் பார்த்தோம். அதில் ஒருவர் படுத்திருந்ததற்கான அறிகுறி இல்லை. அந்த அறையில் சற்று முன் வரை யாராவது இருந்ததற்கான எந்த குறிப்பும் இல்லை.

நேராக இவ்விரு அறைகளையும் சேர்க்கும் கதவினை அடைந்தோம். பலனில்லை. அதுவும் அந்தப் பக்கமாய் தாழ்ப்பாளோ அல்லது பூட்டோ போடப்பட்டிருந்தது.

என்னதான் செய்வது?

கூடவே வந்திருந்த வேலைக்காரி நானி, ''அய்யய்யோ அய்யய்யோ'' என தனது கதறலைத் தொடர்ந்தபடி, எனக்குள் எழுந்த கேள்விக்கு பதிலாய், ''எதையாவது செய்யுங்களேன்'' என கத்தினாள்.

எனவே ''எப்படியாவது முயற்சித்து கதவை உடைச்சுத் தான் உள்ளே போயாகணும்'' என்றேன் நான். ''ரொம்பக் கடினமான வேலை தான் இது. ஆனால் வேறு வழி எதுவும் தெரியல. இந்தாப்பா... இங்கே வா.... நேரா கீழே போ.... காவல்காரனை எழுப்பு... உடனடியா அவனை டாக்டர் பௌரீஸ் வீட்டுக்குப் போகச் சொல்லு. அவரை கையோடு கூட்டிட்டு வரச் சொல்லு.''

கூடியிருந்தவர்கள் பக்கம் திரும்பினேன். ''இப்போ, கதவை உடைக்கப் பார்ப்போம். அதுக்கு முன்னாடி ஒரு நிமிஷம். இங்கிருந்து சிந்தியா அறைக்குப் போகவும் ஒரு கதவிருக்கு இல்லே?''

''ஆமாம் ஸார். ஆனால் அது எப்பவும் தாழிடப்பட்டே இருக்கும். அதை திறந்ததே இல்லே.''

''சும்மா பார்ப்போமே.''

பதில் சொன்ன வேலைக்காரன் சிந்தியாவின் அறை நோக்கி வராண்டாவில் துரிதமாக ஓடினான். அங்கு மேரியிருந்தார்.

சிந்தியாவை உலுக்கி உலுக்கி எழுப்பிக் கொண்டிருந்தார். அசாதாரணமாய் ஆழ்ந்த தூக்கத்தில் சிந்தியா இருப்பது தெரிந்தது.

சில நிமிடங்களில், ''இதுவும் பிரயோஜனமில்லை'' என்றபடி போன அதே வேகத்தில் திரும்பி ஓடி வந்தான் வேலைக்காரன். ''அந்தக் கதவும் உள்பக்கமா தாழிடப்பட்டிருக்கு ஐயா'' என்றான். ''ஒவ்வோர் அறையிலிருந்தும் அம்மா அறையை இணைக்கும் கதவுகளை விட, இந்த நிலைக்கதவு, மிக மிகக் கடினமானதா தோணுது'' என தனது கருத்தைத் தாழ்மையாய் முன்வைத்தான்.

நாங்கள் எல்லோரும் ஒன்றுகூடி, மிக்கப் பிரயாசைப் பட்டு, உடல் தெம்பையெல்லாம் திரட்டி அழுத்திக் கதவினை முழு விசையோடு தள்ளினோம். கதவு பொருத்தப்பட்டிருந்த மர நிலை, எஃகு பலத்தில் அமைந்திருந்தது. ஆகையால் எங்களது உதையலையெல்லாம் நீண்ட நெடுநேரம் அது தாங்கியது. ஆனால் ஒரு கட்டத்தில் பொங்கிய எங்களுடைய ராட்சஸ பலத்துக்கு முன்னால் கதவு அடிபணிந்தது... கடைசியில், முறிந்து விழும் மரக் கிளையின் அகால ஓசையோடு அது கிழிந்து திறந்தது.

லாரன்ஸ் அணையாமல் மெழுகுவர்த்தியை இன்னும் கையில் பிடித்துக் கொண்டேயிருக்க, விழுந்தடித்துக் கொண்டு ஒட்டு மொத்தமாக நாங்களனைவரும் உள்ளே நுழைந்தோம். ஆவேசமாக நிகழ்ந்திருக்கவல்ல வலிப்பின் காரணமாக, அங்கு படுக்கையில், திருமதி எமிலி ஆல்ஃபிரட், களேபரமான கோலத்தில் கிடந்தார். அவர் துடித்த துடிப்பில் அருகிலிருந்த மேஜையையே அவர் தலைகீழாக்கி விடும் அளவுக்கு ஒரு வீரியம் அமைந்திருக்க வேண்டும் - மேஜை கவிழ்ந்திருந்தது. இருந்தாலும் நாங்கள் உள்ளே நுழையும் நேரத்தில் அவரது அங்க அவயங்கள் தளர்ந்து தணிந்து ஓய்ந்திருந்தன. தலையணை மீது திரும்பி விழுந்திருந்தார்.

ஜான், அறைக்குக் குறுக்காய் நடந்து போய் காஸ் விளக்கினைப் பொருத்தி பிரகாசமாக்கினார். பிறகு ஆனே - வீட்டைப் பார்த்துக் கொள்ளும் மற்றொரு வேலைக்காரி - அவளை அழைத்து, திடீரென மயக்கமடைந்தால் மருந்தாய் உதவவல்ல பிராண்டியைக் கீழேயிருந்து எடுத்து வர பணித்தார். பிறகு அவருடைய அம்மா நோக்கி அவர் செல்ல, நான் வராண்டாவுக்கு வழி தரும் கதவினைத் தாழ்ப்பாள் அகற்றித் திறந்து வைத்தேன்.

Scanned by CamScanner

அப்போது லாரன்ஸிடம் சென்று, என்னுடைய சேவை அவர்களுக்கு மேற்கொண்டு அப்போது தேவையில்லை என்பதை சொல்லி விட்டு தற்போதைக்கு அங்கிருந்து நான் கிளம்பப் போவதாக கூறுவதற்காக, அவரை நெருங்கினேன். ஆனால் உதடு வரை வந்த இந்த ஆலோசனை வெளியே வார்த்தைகளாய் வந்து விழாது, அங்கேயே அப்படியே உறைந்து நின்று விட்டன. எந்த மனிதனின் முகத்திலும் அப்படி ஒரு பிரேதக் களையை நான் அதுவரை கண்டவனில்லை. உணர்ச்சியற்றுக் கல் மரமாய் நின்றுக் கொண்டிருந்தார் அவர் - லாரன்ஸ். முகம், ரத்த ஓட்டமற்று வெளிறி விட்டிருந்தது. அதிர்வு கொண்ட அவரது கரத்திலிருந்த மெழுகுவர்த்தி, கீழே விரிக்கப்பட்டிருந்த தரைவிரிப்பில் பொட்டுப் பொட்டாய் சிந்திய வண்ணமிருந்தது. அவரது கண்களின் பார்வை - ஓஃப் - கிலியாலோ அல்லது அது போன்ற ஏதோவோர் உணர்வாலோ அறையப்பட்டு, உணர்ச்சி இழந்து இறுகிப் போய், என் தலையின் மேல் வழியாக பாய்ந்து, பின்னால் தூரத்திலிருந்த சுவரில் நிலை குத்திக் கிடந்தது. அவரது சலனமற்று மரித்துக் கிடந்த அந்தப் பார்வையின் கோட்டினையே தொடர்ந்து நானும் திரும்பிப் பார்த்தேன். அசாதாரணமாய் எதுவும் அங்கு எனக்குத் தெரிய வில்லை. அப்பகுதியில் மெலிதாய் மினுமினுத்தபடி இன்னும் எரிந்துக் கொண்டிருந்த நெருப்புக் கனப்பும் கலைநயம் மிக்க அலங்காரப் பொருட்கள் நிரம்பி அடுக்கப்பட்டிருந்த அலமாரியும், சர்வ சத்தியமாய் அபாயமற்றவையே!

திருமதி எமிலியைத் தாக்கியிருந்த வலிப்பின் வீச்சு மெல்ல மெல்லக் கரைவதாய் தோன்றியது. அவரால் மூச்சிழுத்து இழுத்து கொஞ்சம் பேச முடிந்தது.

''இப்ப பரவாயில்லை --- என்னது இது திடீர்னு --- நான் ஒரு முட்டாள் --- உள்ளே தாழ்ப்பாள் போட்டுக்கலாமா---''

திருமதி எமிலியின் படுக்கையில் ஒரு நிழல் படர்ந்தது. நிமிர்ந்து பார்த்தேன். திருமதி மேரி, சிந்தியாவைக் கர வளையம் இட்டுக் கூட்டி வந்திருந்தார். இரவு உடை அகற்றி, வீட்டு உடையிலிருந்தார் அவர். நான் நினைத்ததை விட நேரமாகியிருக்க வேண்டும் என்பது அப்போது எனக்குப் புலப்பட்டது. மிக மெல்லிய சூரிய ஒளியின் பரவல் பூமியெங்கும் நிகழ்ந்திருந்ததை, திரைச்சீலைப் போடப் பட்டிருந்த ஜன்னல்கள் விளக்கின.... சுவர்க் கடிகாரத்தில், மணி, ஏறத்தாழ ஐந்து!

Scanned by CamScanner

அப்போது படுக்கையிலிருந்து, குரல் வளையை நசுக்கி மூச்சுப் பாதையை நிறுத்துவது போன்று எழுந்த பேரழுகை ஓசை, என்னை ஆபத்தாய் உலுக்கியது. அந்த துரதிர்ஷ்டவசக் கிழவியை, வலிமையான மற்றுமொரு புது வலிப்பு ஆட்கொண்டது. தடுத்து நிறுத்த முடியாத வெறித் தன்மையாய் இருந்தது அந்த வலிப்பு. எல்லாமும் குழப்பமாயின. எல்லோரும் திருமதி எமிலி பக்கத்தில் குவிந்தோம். அவருக்கு உதவவோ அல்லது துன்பத்தைக் குறைக்கவோ ஒருவருக்கும் திராணியில்லாமல் ஆனது - அப்படி ஒரு மிருக பல துடிதுடிப்பு. ஓர் இறுதி இழுப்பு... வலிமையான கடைசி வலிப்பு வந்தது - அது, அவரை திடுமென படுக்கையினின்றும் பாதி வரை எழ வைத்தது... பிறகு தொப்பென அவருடைய தலையையும் கைகளையும் கால்களையும் உணர்ச்சியற்று மெத்தையில் விழ வைத்து, அவருடைய உடலையே விந்தையான ஒரு வில் வடிவில் மடித்துப் போட்டு ஓய்ந்தது. மேரியும் ஜானும் அதிகமாய் பிராண்டியை அவருடைய வாய்க்குள் ஊற்ற முயற்சித்தனர். வீணாய்ப் போனது. நொடிகள் பறந்தன.

அந்தக் கட்டத்தில், டாக்டர் பௌரீஸ், மருத்துவ உத்வேகத்தோடு தனக்கான பாதையை வகுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார். படுக்கையில் அசாதாரண வடிவில் வளைந்துக் கிடந்த மனித உருண்டையைப் பார்த்த கணத்தில் விக்கித்துப் போனார் அவர். அதே கணத்தில் கண் திறந்து டாக்டர் பௌரீஸைப் பார்த்துவிட்ட திருமதி எமிலி, அவரது பார்வை முழுவதும் டாக்டர் மீதே பதிந்துப் போயிருக்க, உடைந்தக் குரலில், ''ஆல்ஃபிரட்... ஆல்ஃபிரட்...'' என கத்திக் கொண்டே போனார். லேசாய் தலை தூக்கினார். பிறகு அசைவற்று தலையணைக்குள் மறுபடியும் விழுந்தார்.

அகட்டி வைத்த அடிகளோடு படுக்கையை நெருங்கிய டாக்டர், அவரது கைகளையும் கால்களையும் வேகவேகமாக தேய்த்து சூடாக்க முயன்றார். செயற்கை சுவாசம் அதிகரிக்க செய்யும் முதலுதவி. வேலைக்காரர்களுக்கு கூரான குறைந்த வார்த்தைகள் கொண்ட கட்டளைகளை மளமளவென பிறப்பித்தார். அதிகாரமாய் அவர் வீசிய கையசைப்புக்குக் கட்டுப்பட்டு நாங்களனைவரும் கதவு பக்கமாய் நகர்ந்து ஒடுங்கினோம். ஆச்சரியமாய் அவர் நகர்த்தல்களை நாங்கள் பார்த்துக் கொண்டேயிருந்தாலும், காலம் கடந்து விட்டதோ என்ற எண்ணமும் இனி எதுவுமே செய்வதற்கில்லையோ என்ற

பயமும் மட்டும் எங்களுடைய ஒவ்வொருவர் மனங்களிலும் விளைந்தது. டாக்டரின் முகத்தில் தெரிந்த பாவத்தை வைத்து, அவருக்கே கூட பிடிப்பு இல்லையோ என்றே எனக்கு சந்தேகம் வந்தது.

இறுதியில் தன்னுடைய அனைத்து முயற்சிகளையும் அவர் நிறுத்திக் கொண்டார். தலையைப் பரிதாபமாக மறுத்து அசைத்தார். இப்படி முடிந்த தருணத்தில், அந்த அறைக்கு வெளியே காலடிச் சத்தங்கள் சில கேட்டன. டாக்டர் வில்கின்ஸ் - திருமதி எமிலியின் பிரத்யேக டாக்டர் - தன்னை அவசரமாய் திணித்துக் கொண்டு உள்ளே வந்துக் கொண்டிருந்தார்.

அந்தப் பக்கமாய் காலை நடை போய்க் கொண்டிருந்தவர் இளங்காலையிலேயே எதற்காக கார் எஸ்டேட் மாளிகையிலிருந்து வெளியே போகிறது என்ற ஆச்சரியத்தில் வேக வேகமாய் உள்ளே நுழைந்ததை ஓரிரு வார்த்தைகளில் அவருக்கு விளக்கிய டாக்டர் பௌரீஸ், தொய்ந்த கையசைவில், படுக்கையில் கிடந்த திருமதி எமிலியைச் சுட்டிக் காட்டினார்.

''பரிதாபம் - பரிதாபம்'' - முணுமுணுத்தார் டாக்டர் வில்கின்ஸ். ''பாவப்பட்ட பெண்மணி. என் அறிவுரைகளுக்கு எதிரா ரொம்ப செய்தார் - ரொம்ப. நான் எவ்வளவோ அறிவுரை பண்ணிப் பார்த்திருக்கேன். அவருடைய இருதயம் மிக மிக பலஹீனமா யிருந்தது. 'அவங்க அவங்க விதிப்படி தான் எல்லாம் நடக்கும். எதுக்காக மத்தவங்களுக்காக இப்படி உணர்ச்சி வயப் படறீங்க'னு எத்தனையோ சொல்லிப் பார்த்திருக்கேன். ப்ச். கேட்கலே. நல்ல தர்ம விஷயங்களுக்கான அவங்களுடைய சிரத்தை - அக்கறை - மிகப் பெரிது. இயற்கை ஜெயிச்சிடுச்சு. இய---ற்கை--- ஜெயி---ச்சி---டுச்சு---''

டாக்டர் பௌரீஸ், பிரத்யேக டாக்டரை மிக அருகாமையில் ஜாக்கிரதையாக கவனித்துக் கொண்டேயிருந்ததை நான் குறித்துக் கொண்டேன். அவர் பேசப் பேசக் கண்களைக் கிஞ்சித்தும் அகற்றாமல் அவர் மேலேயே ஒட்டி வைத்திருந்தார் டாக்டர் பௌரீஸ்.

''வந்த அசாதாரணமான வலிப்பு, ரொம்ப விசித்திரமான உக்கிரத்தோடு இருந்தது, டாக்டர் வில்கின்ஸ். நீங்க நேரடியா பார்க்க இங்கே இல்லாம போயிட்டீங்களேனு வருத்தப்படறேன். தாடை முழுக்கக் கிட்டிப் போய்... வாயைத் திறக்கவே முடியாத அளவுக்கு இறுக்கித் தள்ளி.... இளகிய தன்மை கொண்ட தசையெல்லாத்

தையும் கடுமையா விறைக்கச் செய்து நாசமாக்கி... என்னத்தை சொல்றது. இப்படி ஒரு குணாதிசயம் கொண்ட வலிப்பையெல்லாம் நாம படிச்சதே கிடையாது.''

''ஆஹ்'' என்றார் டாக்டர் வில்கின்ஸ், தனது தெள்ளிய மருத்துவ அறிவில் ஊறியபடி.

''இப்ப உங்களுடன் கொஞ்சம் தனியா நான் பேசணும் டாக்டர்'' என்றார் பௌரீஸ். ஜான் பக்கமாய் திரும்பினார். ''உங்களுக்கு ஆட்சேபணையில்லையே?''

''துளியும் கிடையாது.''

இரு மருத்துவர்களையும் தனியாய் விட்டு விட்டு நாங்களனை வரும் வரிசையாய் வராண்டாவுக்கு வந்து விட்டோம். கதவு தாளிடப்படும் ஓசை கேட்டது.

நேரம் நகர்த்த முடியாமல் இருந்தபடியால், எல்லோரும், அவரவர் வசதிப்படி, தனித்தனியாய், மெதுவாய், படிகளிறங்கிக் கீழே வந்தோம். நான் கட்டுப்படுத்த இயலாத கிளர்ச்சியிலிருந்தேன். பொய்ரெட்டோடு பல வழக்குகளில் பணியாற்றிய பலனாய், என்னாலும் சில முக்கியமான முடிவுகளுக்கு வர இயலும். டாக்டர் பௌரீஸ் நடந்துக் கொண்ட விதம் எனக்குள் புது ஊகங்களை மந்தைக் கூட்டம் போல குவிய வைத்தது. இப்படி நான் நின்றுக் கொண்டிருக்க, திருமதி மேரியின் கைகள் என்னுடைய விரல்களைப் பற்றி நின்றன.

''என்னது இது?'' என்று கேட்டார். ''டாக்டர் பௌரீஸ் ஏன் இப்படி விசித்திரமா நடந்துக்கணும்?''

நான் அவரைக் கவனித்தேன். ''நான் என்ன நினைக்கிறேன்னு புரியுதா?''

''என்ன?''

''கவனியுங்க!'' என்று சுற்றுமுற்றும் பார்வையை ஓட விட்ட நான், கேட்கும் தொலைவில் அருகில் யாரும் இல்லை என்பதை ஊர்ஜிதம் செய்துக் கொண்டேன். ''அவருக்கு யாரோ விஷம் வெச்சுட்டாங்கனு நான் நம்பறேன்! இப்படியே தான் டாக்டர் பௌரீஸும் சந்தேகப்படறார். ஆமாம்!'' என்றேன்.

*''என்னது?''* - சுவரில் சாய்ந்து சுருங்கிப் போனார் அவர்! அவரது கண்மணிகள் அகண்டு, உள்ளே தடுமாறி அல்லாடின! பிறகு என்னைத் திக்குமுக்காடச் செய்யும் வகையில் திடீரென அவரிடம் வெகுண்ட ஓர் அலறலோடு கதறினார்:

Scanned by CamScanner

''கிடையாது! அப்படி கிடையாது! அப்படி எதுவுமே கிடையாது! நீங்க கதை கட்டறீங்க!''

என்னிடமிருந்து விடுபட்டுக் கொண்டு, படிக்கட்டுகளின் மேலேறி பறந்தார். படிகளில் மயங்கி விழுந்து விடுவாரோ என்ற அச்சத்தால் நானும் நாலடிப் பாய்ச்சலில் அவரைத் தொடர்ந்தேன். மேலே, கைப்பிடிகளின் தயவோடு வெளிறிப் போய் நின்றுக் கொண்டிருந்த நிலையில் அவரைக் கண்டேன். தயவுசெய்து அருகில் வராமல் போய்விடுமாறு பொறுமையிழந்து சைகை காட்டினார் அவர்.

''வராதீங்க. வரக் கூடாது. என்னை விட்டுடுங்க. தனியா. கொஞ்ச நேரம் பேசாம நான் இருக்கேன். கீழே போங்க. அங்கே ஒரு கூட்டமே இருக்கு. அதுங்களோட போங்க. ப்ளீஈஈஈஸ்.''

மனமில்லாவிட்டாலும், அவரது அவசரத்துக்கு ஒப்புக் கொண்டேன். ஜானும் லாரன்ஸூம் சாப்பாட்டு மேஜையருகே இருந்தனர். அவர்களோடு நான் இணைந்துக் கொண்டேன். எல்லோருமே மவுனமாகவே இருந்தோம். ஆனாலும், எங்கள் அனைவரது கருத்திலும் இருந்த பின்வரும் கேள்வியைக் கேட்டு நான் தான் அமைதியை உடைத்ததாய் ஞாபகம்:

''திரு ஆல்ஃபிரட் எங்கே?''

ஜான் மறுத்துத் தலையசைத்தார். ''அவர் வீட்டில் இல்லை.''

எங்களிருவரது கண்களும் சந்தித்தன. ஆல்ஃபிரட் எங்கே *இருக்கிறார்?* அவர் இல்லாதது, தெளிவாகக் காரணம் கூறி விவரிக்க முடியாத ஓர் அதிசயமாயிருந்தது. திருமதி எமிலி, கடைசி மூச்சு விடும் போது சொன்னவை சட்டென என் நினைவுக்குள் வந்தன. அந்த வார்த்தைகளுக்கு அடியில் என்ன ஒளிந்திருக்கின்றது? உயிர் நீடிக்க இன்னும் கொஞ்சமேனும் அவகாசம் கிடைத்திருந்தால், எங்களுக்கு கூடுதலாக இன்னும் அவர் என்னவெல்லாம் சொல்லியிருப்பார்?

சற்று நேரத்தில் இரு மருத்துவர்களும் படியிறங்கி வந்துக் கொண்டிருக்கும் ஓசை கேட்டது. டாக்டர் வில்கின்ஸ் எதையோ முக்கியமாய் சிந்தித்துக் கொண்டு அதனால் உண்டான கிளர்ச்சியில் இருப்பவராய் தோன்றினார்; கௌரவமான மருத்துவ அமைதியைக் கடைப்பிடிப்பதன் மூலம் அவருக்குள் உண்டாகியிருந்த மாபெரும் ஆரவாரக் களிப்பினை மறைப்பதும் தெரிந்தது. டாக்டர் பௌரீஸ் பின்னாலேயே நின்றிருந்தார். அவருடைய கடுமையான தாடி முகம்

Scanned by CamScanner

அப்படியே நீடித்தது. இருவருக்காகவும் டாக்டர் வில்கின்ஸ் தான் பேசினார். ஜானிடம் முதலில்:

''திரு ஜான்...! பிரேதப் பரிசோதனை செய்றதுக்கு உங்களோட சம்மதம் வேணும்.''

''அது தேவைதானா?'' என கடுமையாய் கேட்டார் ஜான். உள்ளூர ஒரு வலி பரவுவதை அவர் முகம் காட்டிக் கொடுத்தது.

''நிச்சயமாக.''

''அப்படினா ----? என்ன சொல்ல வரீங்க ----?''

''நடந்துள்ள சூழ்நிலையில், என்னாலோ டாக்டர் பௌரீஸாலோ, மரணச் சான்றிதழ் தரமுடியாதுனு சொல்ல வரேன்.''

ஜான் அவருடைய தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார். ''இப்படிச் சொன்னா எனக்கு வேற என்ன வழியிருக்கு - ஒத்துக்கறதைத் தவிர.''

''நன்றி'' என்று சுறுசுறுப்பானார் பௌரீஸ். ''நாளை இரவு பிரேதப் பரிசோதனையை செய்து முடிச்சுடணும்னு நினைக்கிறோம். முடிஞ்சா, இன்றிரவே!''

சொல்லிவிட்டு படர்ந்துக் கொண்டிருந்த காலைச் சூரிய வெளிச்சத்தை நோட்டமிட்டார். ''மரணம் சம்பவித்துள்ள சூழ்நிலைகளை வெச்சுப் பார்க்கும் போது, தீவிரமான போலீஸ் விசாரணைகளையெல்லாம் தவிர்க்க முடியாதுனுதான் தோணுது - இப்படிப்பட்ட சம்பிரதாயங்களெல்லாம் அவசியம். ஆனால் இதுக்காகவெல்லாம் மனசுடைஞ்சு போயிடக் கூடாதுனு உங்களை நான் கேட்டுக்கறேன்.''

சிறு அமைதி. பிறகு தனது சட்டைப் பையிலிருந்து இரண்டு சாவிகளை எடுத்து ஜானிடம் ஒப்படைத்தார், டாக்டர் பௌரீஸ்.

''அந்த ரெண்டு அறைகளின் சாவிகள். ரெண்டு அறைகளையும் நான் பூட்டிட்டேன். மேலும், என்னோட அபிப்பிராயப்படி அப்படியே அந்த ரெண்டு அறைகளும் இப்போதைக்கு பூட்டியே இருக்கிறது தான் நல்லது.''

இதற்கு பிறகு இரு மருத்துவர்களும் கிளம்பிப் போயினர்.

என் மண்டைக்குள் ஓர் ஊகத்தைப் போட்டு அதனைப் பலவாறாக திருப்பிப் பார்த்து சிந்தித்துக் கொண்டேயிருந்த நான் - இந்த சமயத்தில் - அதனை முதன் முதலாக அறிவிக்க நேரம் வந்து விட்டதாக உணர்ந்தேன்; இருந்தாலும் உடனே அப்படிச் செய்வதில் நான் கொஞ்சம் முன்னெச்சரிக்கையாக தான் இருந்தேன்.

Scanned by CamScanner

என் கணிப்பில், ஜான், இவ்விஷயத்தில் எவ்வித விளம்பரமும் தரப்பட்டு விடக்கூடாது என நடுக்கத்தில் இருந்தார் - வாழ்க்கைப் பிரயாணத்தில் எவ்வித கஷ்ட நஷ்டங்களும் இடைபுகுந்து விடக்கூடாது என்கிற எதிர்பார்ப்பில் வாழ்பவர் ஜான் - எல்லாம் சுலபமாக போய்விட வேண்டும் எனும் பயந்த சுபாவ குணம் கொண்டவர்.

இன்னொரு பக்கத்தில், லாரன்ஸ். வாழ்க்கையின் சம்பிரதாயம் மரபு போன்றவற்றை அதிகம் பொருட்படுத்தாதவர் - கற்பனையில் சரியென எது வசதியாய் படுகிறதோ அதற்கு உடனே துணை போய்விடக் கூடியவர் - எனவே, சரியெனும் பட்சத்தில் ஒரு கூட்டாளியாய் சேர்ந்து விடக்கூடிய வகையில் தான் என்னால் லாரன்ஸைப் பொருத்த முடிந்தது.

இப்படி ஒரு நிலையில் நின்றுவிட்ட சூழலை, நான் முன் நின்று கொண்டு செல்ல வேண்டிய கட்டம் வந்துவிட்டது என்பதில் சந்தேகமற்று ஆனேன். ஆகவே பிரச்சினைக்குள் இறங்கினேன்.

''ஜான்'' - அழைத்தேன். ''நான் உங்களை ஒண்ணு கேட்கப் போறேன்.''

''ம்.''

''என் உயிர் நண்பன் பொய்ரெட் பற்றி நான் பேசினது உங்களுக்கு நினைவிருக்கா?''

''ஆமாம்.''

''அவனை இங்கே உள்ளே அழைத்து வர எனக்கு நீங்க அனுமதி தரணும் - இந்த மரணத்தைத் துப்பறிய.''

''என்ன - இப்பவா? பிரேதப் பரிசோதனைக்கு முன்னாடியேவா?''

''ஆமாம். இதுல அநீதியா... அதர்மமா... ஏதாவது குற்றம் இணைஞ்சிருந்தா.... காலந்தாழ்த்தாது இயங்க வேண்டியது ரொம்ப அவசியம். ஒவ்வொரு நொடியும், நழுவ விடக்கூடாத ஓர் அனுகூலம்.''

''அபத்தம்'' - கோபமாய் குமுறினானர் லாரன்ஸ். ''என்னைப் பொறுத்தவரைக்கும், எல்லாமும் டாக்டர் பௌரீஸின் மாயாஜாலக் கட்டுக்கதைகள்! திரு. வில்கின்ஸுக்கு துளி கூட இப்படியெல்லாம் சந்தேகமே கிடையாது - அவரோட தலையில இந்த பௌரீஸ் அப்படி ஒரு சந்தேகத்தைத் திணிக்கிற வரைக்கும். எல்லா மருத்துவ நிபுணர்களுக்கும் இருக்கிறது போலவே, தன்னோட துறையில இந்த

Scanned by CamScanner

பௌரீஸுக்கும் தலைக் கவசம் உண்டு - தலைக் கனத்தைச் சொல்றேன்! குழப்பத்துக்கெல்லாம் இதான் காரணம். விஷம் - அவரோட பொழுதுபோக்கு! விஷ நிபுணர் இல்லையா! அதான் எங்கே பார்த்தாலும் அவருக்கு நீல நீலமா தெரியுது!''

லாரன்ஸுடைய இந்த அணுகுமுறை என்னை ஆச்சரியத்தின் உச்சிக்குக் கொண்டு போனது என்பதை நான் சொல்லியாக வேண்டும்! எந்தவொரு தலை போகிற விஷயத்துக்கும் இப்படியொரு வெடிப்பை அவர் காட்டியதே இல்லை.... காட்டவும் முடியாது என்பேன்!

ஜான் தடுமாறினார். ''உன்னை மாதிரி என்னால நினைக்க முடியலே லாரன்ஸ்'' என்றார் கடைசியில். ''எனக்கென்னவோ ஹேஸ்டிங்குக்கு சுதந்திரமா இயங்க ஒரு வாய்ப்பு கொடுத்துப் பார்க்கலாம்னு தான் தோணுது. ஆமாம்... அதுதான் சரி. இருந்தாலும் சற்று பொறுக்கலாம் என்பது என் விருப்பம். விஷயம், தேவையில்லாம வெளி உலகுக்கு முக்கியப்படுத்தப்பட்டு விடக் கூடாது.''

''இல்லை இல்லை'' என ஆவேசமாய் முன்வந்தேன் நான். ''அப்படி எதுவும் நடக்காது. நான் உத்திரவாதம். பொய்ரெட், விவேகமும் அறிவுடைமையும் ரொம்ப உள்ளவன். அவனே அப்படித்தான்!''

''ரொம்ப நல்லது... உன் வழியில நடத்து. உன் கைகளில் விட்டுடறேன். நாம் சந்தேகித்துப் பேசின மாதிரி இருந்தா... நிச்சயமா துப்பறிய வேண்டிய வழக்கு தான் இது.''

நான் என் கைக்கடியாரத்தைப் பார்த்தேன். ஆறு. கணமும் வீணாக்கக் கூடாது என்பதில் ஸ்திரமானேன்.

ஆயினும் ஐந்து நிமிட தாமதத்தை அனுமதித்துக் கொண்டேன். இந்நேரத்தில் வீட்டு நூலகத்தைத் தலைகீழாக்கிப் போடுவதில் செலவழித்தேன். ஏனோ தோன்றியது - செய்தேன். அந்த நூலகத் தொகுப்பில் இருக்க வேண்டிய அவசியமில்லாது, ஒரே ஒரு மருத்துவப் புத்தகம் அப்போது கிடைத்தது. விதவிதமான விஷங்கள், அவற்றின் குணங்கள் பற்றியது அது.

அத்தியாயம் நான்கு

# பொய்ரெட் துப்பறிய வந்தார்

~

**பொ**ய்ரெட்டைப் பார்க்கக் கிளம்பியிருந்தேன். அவனும் அவனுடன் வந்திருந்த ஏனையவர்களும் தங்கியிருந்த ஜாகையை ஏறக்குறைய நான் நெருங்கி விட்டிருந்தேன்... அப்போது என்னை நோக்கி ஓடோடி வந்துக் கொண்டிருந்த ஒரு மனிதனின் மீது என் பார்வை இழுக்கப்பட்டு நின்றது. அது ஆல்ஃபிரட். அவர் எங்கே போயிருந்தார்? அவர் வீட்டில் இல்லாமல் போனதை எதைச் சொல்லி விளக்குவார்?

ஆர்வமாய் நெருங்கி அவரே முதலில் பேசினார் : ''அடக் கடவுளே! இது அநியாயம்! கொடுமை! அதிர்ஷ்டக்கட்டை எமிலி! என் மனைவி! ஓஹ்! இப்போதான் நான் கேள்விப் பட்டேன்!''

''நீங்க எங்கே இருந்தீங்க?'' என கேட்டேன் நான்.

''டார்வின் தான் நள்ளிரவுக்குப் பிறகும் என்னை நிறுத்தி வெச்சார். நாங்க எல்லாத்தையும் முடிக்கும் போது மணி ஒண்ணு. அப்போதான், மாற்றுச் சாவியை எடுத்துக்கிட்டுப் போறேன்னு சொன்னேனே தவிர அதைக் கொண்டு வரலேங்கறது எனக்கு உறைச்சது. நடு ராத்திரி கழிஞ்சு வந்து வீட்டையே எழுப்ப எனக்கு மனசு வரலை. படுக்க ஒரு மெத்தையை டார்வின்தான் தயார் செஞ்சுத் தந்தார்.''

''இப்போ எப்படி சேதி தெரிஞ்சுது?'' என்றேன்.

''வில்கின்ஸ் வந்து டார்வினை எழுப்பி தகவல் தந்தார். என்னருமை எமிலி! அவ ஒரு தியாகி. அத்தனை பரிசுத்தமான ஜீவன். அவளுடைய ஆரோக்கியத்தை மிஞ்சி உழைச்சா.''

திடுமென ஒரு மாற்ற அலை என்னை அறைந்துக் கடந்தது. என்ன ஒரு முழுமையான அயோக்கியன்! என்ன ஒரு பரிசுத்தமான வேஷதாரி!

Scanned by CamScanner

''நான் கொஞ்சம் அவசரமாய் போய்க்கிட்டிருக்கேன்'' என்றேன் நான். நல்லவேளை.... எதற்காக, எந்த திசையில் போய்க் கொண்டிருக்கிறேன் என்றெல்லாம் கேட்டு நிறுத்தவில்லை... அதற்காக அவருக்கு நன்றி செலுத்திக் கொண்டேன்.

ஒரு சில நிமிடங்களில், வரவழைக்கப்பட்டிருந்த விருந்தினர்கள் தங்கியிருந்த வீட்டினை அடைந்து அதன் கதவினை நான் தட்டிக் கொண்டிருந்தேன். பதிலேதும் வராது போக, பொறுமையிழந்து என் தட்டுதலைத் துரிதமாக்கினேன்.

மேல்மாடியில் ஒரு ஜன்னல் முன்ஜாக்கிரதையோடு திறக்கப் பட்டது. பொய்ரெட்டே எட்டிப் பார்த்தான்.

என்னைப் பார்த்ததில் எதிர்பாராத சந்தோஷ எக்காளத்தை அவன் வெளிப்படுத்தினான். ஓரிரு வார்த்தைகளில் நடந்து முடிந்த துயரச் சம்பவத்தை விளக்கிய நான், அவனுடைய மேலான உதவியை நாடி வந்திருப்பதைத் தெரிவித்தேன்.

''பொறுடா பொறு'' என்றான். ''முதல்ல உள்ளே வா. நான் வெளியே போக தயாராகிக்கிட்டு இருக்கும் போதே, நடந்த அத்தனையையும் பிட்டு பிட்டு வை.''

சில நொடிகளில் கதவு திறக்கப்பட, நான் அவனுடைய அறை வரை தொடர்ந்தேன். அங்கு என்னை ஒரு நாற்காலியில் தூக்கி வைத்தான். முழு கதையையும் சொன்னேன். எதையும் மறைக்கவில்லை. எந்த சந்தர்ப்ப சூழலையும் - அது எத்தனை சிறிதாக தோன்றினாலும் - நான் ஒதுக்கவில்லை. இயன்றவரை கோவையாய் சொல்லி முடித்தேன். அவனும் கறாரான கவனத்தோடு பட்டவர்த்தனமாக கேட்டுக் கொண்டிருந்தான். என்னை நட்ட நடு ராத்திரியில் எழுப்பியது - திருமதி எமிலி ஆல்ஃப்ரட்டின் மரணப் படுக்கை வார்த்தைகள் - அங்கு அவரது கணவன் இல்லாமல் போயிருந்தது - திருமதி எமிலிக்கும் அவருடைய மருமகளுக்கும் இடையே நடந்து, என் காதுகளில் விழுந்த அந்தத் துண்டு உரையாடல் - மேலும், எவிலின் ஹோவோர்ட் வீட்டை விட்டு ஓடிப் போனது - என எல்லாவற்றையும் கொட்டினேன்.

படு துல்லியமாய் ஒப்பிக்க வேண்டும் என்று நான் மனதார எண்ணினாலும், நினைத்த அளவுக்கு தொடர்பாய் சொல்ல இயலாமல் ஆங்காங்கே தடுமாறித் தான் போனேன். இதனால் சிலவற்றைத் திருப்பித் திருப்பி சொல்லும்படி ஆயிற்று; தொடர்பு அறுகிறது என புரியும் போது அதற்கு உதவும்படி அமைந்திருந்த ஒரு

Scanned by CamScanner

சில பழைய விடுபட்ட சங்கதிகளை விளக்கி விட்டுத் திரும்ப வேண்டியதாயிற்று! அப்போதெல்லாம் பொறுமையாய் 'பரவா யில்லை' என்பது போல் என்னைப் பார்த்து கனிவாய் சிரித்தான் பொய்ரெட். கேட்டான்:

''மூளை குழம்பியிருக்கு உனக்கு... இல்லே?! கொஞ்சம் நேரம் எடுத்துக்கிட்டு பிறகு வா நண்பா! நீ கலங்கியிருக்கே; கலவரப்பட்டிருக்கே; துடிப்பிலிருக்கே! இது இயற்கை தான்! முதல்ல அமைதியாகு. சாந்தமாகு. நாம இப்ப மீன் பிடிச்சாகணும் - குற்ற மீன்! கலங்கிய குட்டையில மீன் பிடிக்க முடியாது! தற்சமயம் அதிர்வடங்கியதும், நிகழ்ந்த உண்மைகளை அடுக்குவோம் - படு சுத்தமா - கச்சிதமா - அதனதன் இடங்களில்! அதையெல்லாம் பரிசோதிப்போம். எதெல்லாம் முக்கியமோ அதையெல்லாம் ஒரு பக்கமா பத்திரமாக்குவோம்; எதெல்லாம் அப்படி முக்கிய மில்லையோ, அதையெல்லாம்....'' என்றவன் வாயை ஊதுவது போல் உப்பி வைத்துக் கொண்டு ''ஊஃப்ப்ப்.... ஊதித் தள்ளிடுவோம்'' என்றான்.

''நீ சொல்றதெல்லாம் சரிதான்'' என அசூயையாய் குறுக்கிட்ட நான், ''எதெல்லாம் முக்கியம்.... அப்படினும், எதெல்லாம் அந்த அளவுக்கு முக்கியமில்லை என்பதையும், நீ எப்படி முடிவு பண்ணப் போறே? இது ஒண்ணுதான் எப்பவும் எனக்கு புரியாத பயங்கரமா இருக்கு.''

பொய்ரெட் அவனுடைய தலையை ஊக்கமாய் அசைத்துக் காட்டினான். தனது மீசையை ஆசையாய் தடவிக் கொடுத்தான். ''அப்படி ஒண்ணும் தலை போற வேலையில்லை அது'' என்று முன்னுரை சொன்னான். தொடர்ந்தான்:

''ஓர் உண்மை அடுத்த உண்மைக்குக் கொண்டு போய் நிறுத்தும். அல்லது நிறுத்துவது போல தோணும். அதைப் பிடிச்சுக்கிட்டு நாம் தொடர்வோம்.... தொடரணும்...! இந்தப் புது உண்மை சம்பவ நிகழ்வுகளோடு பொருந்தி நிக்குதா? வாவ்.... அப்படி பொருந்தி நின்னா, அதுதான் வெற்றி.... நல்லது... மேற்கொண்டு நாம் தொடரலாம். ஆனாலும் ஏதோ ஒண்ணு காணலை... தொடர்ச்சி இல்லாம இருக்கு... சங்கிலித் தொடரில் விடுபட்டுள்ள ஒரு சிறு கொக்கி...! என்னது அது? எங்கே அது?! உடனே நாம பரீட்சிக்கிறோம். தேடறோம். ஏதோ ஒரு சங்கதியை - வேண்டவே

வேண்டாம்.... இது உதவாதுனு நாம விட்டெறிஞ்ச சங்கதியை - விடுபட்ட கொக்கியாக பொருத்திப் பார்க்கறோம்.''

இப்படிச் சொல்லிவிட்டு தனது கையால் முழு சங்கிலி ஒன்றினை உண்டு பண்ணி விட்டது போல பெருமித சமிக்ஞை காட்டிய அவன், ''ஓ... இது பொருந்தி விடுகின்றது! மிகப் பெரிய பிரம்மாண்டம்....!'' என்றான்.

''ஆ...மா...ம்.''

''ஆங்... ஆங்....! ஒரு நிமிஷம்...! 'இது ஒத்தே வராது.... இதற்கும் வழக்குக்கும் சம்பந்தமேயில்லை.... இதை நான் மறந்தே விடுகிறேன்.... இது தேவையேயில்லை....!' - இந்த மாதிரி எதையுமே ஒதுக்கலாகாது. எல்லாவற்றையும் நினைவில் கொள்ள வேண்டும். சின்ன துப்பு... அது பொருந்தி நின்று கொலைகாரனை அடையாளம் காட்டும். இந்த மனோநிலையில் முன்னேறினால்... நண்பா... ஒரு போதும் புரியாம போகாது...!''

''எனக்கும் தெரியும் பொய்ரெட். நீ இதை எப்பவுமே எனக்கு சொல்லுவே. அதனால்தான் இந்த விஷயத்துல - முக்கியமா பட்டதோ, படலியோ..... பொருட்படுத்தாம - ஒவ்வொரு நிகழ்வுக்குள்ளும் நான் நுழைஞ்சு வந்தேன்.''

''நன்றி நண்பா - என் அறிவுரையைக் கடைப்பிடிச்சதுக்கு. உனக்கு நல்ல ஞாபக சக்தியிருக்கு. பல உண்மைகளை விசுவாசமா சொன்னே. நீ சொன்ன எல்லாத்தையும் அடுக்கி வெச்சுப் பார்க்கும் போது - நான் மறுக்கப் போறதே இல்லை - சந்தேகமில்லாம இது ஒரு வருந்தத்தக்கக் கொடூரம் தான். ஆனால் கூடுதலா நான் ஒரு சங்கதியைக் கூட்டிக்கப் போறேன். நீ சொன்ன விஷயங்களிலேயே இதுவும் இருக்கு... மலை உச்சி போல மிக மிக முக்கியமானது.... நீ கவனிக்காம விட்டிருப்பது.''

''என்னது அது?''

''சம்பவ இரவன்று திருமதி எமிலி நல்லா சாப்பிட்டாரா இல்லையானு நீ எனக்கு சொல்லவே இல்லை.''

நான் அவனைப் பார்த்து முறைத்தேன். பைத்தியக்காரன். ''எனக்கு நினைவில்லை'' என்ற நான், ''இருந்தாலும் இந்த தகவல் தெரிஞ்சு... ... ...'' என முடிப்பதற்குள், ''... ... ... இந்த தகவல் தெரிய வேண்டியதன் அவசரமே உனக்குப் புலப்படவில்லையா...!'' என ஆச்சரியமாய் தொடர்ந்தான் அவன்: ''இது தானப்பா முதலும் முடிவுமான முக்கியத் தகவல்!''

Scanned by CamScanner

''எனக்கு அப்படி ஒண்ணும் தெரியலை பொய்ரெட்'' என்றேன் நான் குழப்பமாய். வெறுப்பாய். ''என் நினைவுக்குத் தெரிஞ்சு - அவங்க நல்லா சாப்பிடலை. போதுமா! எதற்காகவோ ரொம்ப மனசுடைஞ்சுப் போயிருந்தாங்க. அந்தக் கவலை அவங்களுடைய பசியைப் பறிச்சிடுச்சு. இது இயற்கை தானே.''

''ஆமாம்'' என்றான் பொய்ரெட் திடீர் சிந்தனையாய். ''அது ஒன்றுதான் இயற்கை!''

இப்பொழுது மேஜையின் ஒரு தட்டினைத் திறந்தான் அவன். சிறு கைப்பையை உள்ளிருந்து எடுத்துக் கொண்டான். பிறகு என் பக்கமாய் திரும்பினான். ''இப்ப நான் தயார். கிளம்பு. சம்பவ இடத்துக்குப் போவோம். ஸ்தலத்திலேயே விஷயத்தைக் கிரகிப்போம். பார்... அவசர அவசரமா ஓடி வந்திருக்கே. உன் 'டை' ஒரு பக்கமா திரும்பிக்கிட்டு தொங்குது. ம்...'' என்றவன் உரிமையாய் அதை நடுவாய் நகர்த்தி சரிசெய்தான். ''எழுந்திருப்பா.''

கிராமத்து மாளிகைக்கு விரைந்தோம். மதில் சுவரின் பெரிய இரும்புக் கதவினைத் திறந்த போது பொய்ரெட் ஒரு கணம் நின்று, காலைப் பனித் துளிகளால் இன்னும் மினுமினுத்துக் கொண்டிருந்த, பரந்து விரிந்த அழகு பூந்தோட்டத்தைக் கவலை தோய ஆழ்ந்து கவனித்தான். ''அழகு... ஆனந்தம்... பேரானந்தம்...! இதை அனுபவிக்க முடியாமல் இக்குடும்பம் துயரத்தில் மூழ்கியுள்ளது.... மீளாத் துன்பத்தில் உறைந்துப் போயுள்ளது.''

இதைச் சொல்லும் போது கூர்மையாய் என்னைக் கவனித்த படி தான் பேசினான் ஹெர்குல். பேசி விட்டும் பார்வையை அகற்றாமல் என்னைக் குடைந்துக் கொண்டே போனான். எனக்கு சற்றே புரிந்தது.

இக் குடும்பம், மீளாத் துயரில் ஆழ்ந்தா உள்ளது? திருமதி எமிலியின் இழப்பு, மரத்தை சாய்க்கும் புயலாய் இவர்களை உலுக்கியுள்ளதா என்ன? இம்மாளிகையின் சூழலில் அப்படி ஒன்றும் உணர்ச்சிபூர்வமான வீழ்ச்சி இல்லை என்பதை நான் இப்போது சட்டென கவனித்தேன். இறந்து விட்ட துரதிர்ஷ்டசாலி பெண்மணி, அவர்மீது அளவில்லாது அன்பு செலுத்துவோரால் சூழப்படவில்லை என்பது மெல்ல விளங்கியது. அவரது மரணம், ஏனையோருக்கு ஓர் அதிர்வு தான்... கிலேசம் தான்.... ஆனால், திருமதி எமிலி, பிரிவு துயர் தாளாது சிந்தப்படும் அன்புக் கண்ணீரால் வருந்தப்பட மாட்டார்!

Scanned by CamScanner

என் மனத்தினைப் படித்து விட்டவனாய் தெரிந்தான் பொய்ரெட். என் நினைவை ஆமோதிப்பவனாய் தலையசைத்தான். ''நீ இப்போது நினைப்பது வெகு சரி ஹேஸ்டிங்ஸ்'' என்றான். ''ரத்த பந்தம் இல்லை பார்த்தாயா! இரு மகன்களையும் அவர் அன்பு பொங்க தான் வளர்த்திருக்கிறார்... ஆனால் அவர் பெற்றெடுத்த தாயார் கிடையாதே! ரத்த பந்தம் - நினைவிருக்கட்டும் - ரத்த பந்தம்!''

''இதை விடு'' என்ற நான் ''பொய்ரெட்'' என அவனை கூர்மையாய் அழைத்து விட்டு, ''சொல்'' என்று ஆணையாகவே கேட்டேன்: ''நேற்றிரவு அவர் நல்லா சாப்பிட்டாரா இல்லையானு நீ ஏன் தெரிஞ்சுக்க விரும்பினே? அந்தக் கேள்வியை என் மூளையின் எல்லா பக்கங்களுக்கும் கொண்டுபோய் யோசிச்சுட்டேன். ம்ம். இந்த வழக்குக்கு எந்த வகையில இந்த கேள்வி உதவும்னு எனக்குப் புரியலை.''

நடந்துக் கொண்டு உள்ளே போய்க் கொண்டிருந்தோம். இரு நிமிடங்கள் போல அவன் பதில் ஏதும் தரவில்லை. ஆனால் கடைசியாய் சொன்னான்: ''உன்கிட்டே சொல்றதுல ஒண்ணும் குறைஞ்சுப் போயிடப் போறதில்லே, ஹேஸ்டிங்ஸ். ஆனா, வழக்கின் இறுதி வரை, முக்கிய விளக்கங்கள் எதையும், இறுதியா முடிவு தெரியும் வரை சொல்லாம இருப்பது தான் என் வழக்கம். இப்போது நடந்துக் கொண்டிருக்கும் விவாதம் இதுதான் - திருமதி எமிலி, விஷம் வைத்துக் கொல்லப்பட்டிருக்கிறார் - ஸ்டிரிச்நைன் - அவர் குடித்த காபியில் கலந்து இருக்கலாம்.''

''ஓ...?''

''சரி...! காபி எத்தனை மணிக்கு அளிக்கப்பட்டது?''

''எட்டு மணிவாக்கில்.''

''ஆக, அவர், காபியை, இந்த சமயத்துக்கும் எட்டரை மணிக்கும் முன்னால தான் குடிச்சிருக்கார் - நிச்சயம் எட்டரைக்கு அப்புறமெல்லாம் இருக்க முடியாது. ஸ்டிரிச்நைன், சட்டென உயிர் குடிக்கவல்ல ஓர் எக்ஸ்பிரஸ் விஷம்! அதன் கைவரிசையை உடனடியாக அனுபவிச்சுடலாம் - ஒரு மணி நேரத்துக்குள்ளேயே! இப்படியிருக்கையில், திருமதி எமிலி விஷயத்துல, விஷம் ஏற்படுத்திய அறிகுறிகள் எதுவுமே மறுநாள் அதிகாலை ஐந்து மணி வரைக்கும் வெளிப்படையா தெரியலே. ஏகமா இரவுச் சாப்பாடு சாப்பிட்டிருந்தா, அதனால், விஷத்தின் வீரியம் தலை காட்ட கொஞ்சம் கால தாமதம் ஆகியிருக்கும்... அப்படியிருந்தாலும்,

Scanned by CamScanner

நிச்சயமா இந்த அளவுக்கு இருந்திருக்காது! ஆனா, உன்னுடைய வார்த்தைகளின்படி, திருமதி எமிலி நேற்றிரவு மிக மிக கம்மியா தான் சாப்பிட்டிருக்கார்.... ஆனாலும் கவனி ஹேஸ்டிங்ஸ், அறிகுறிகள் விடிகாலை ஐந்து மணி வரைக்கும் கிளம்பலை! இது ஒரு சிக்கலான சமாச்சாரம், நண்பா. இதை விளக்க பிரேதப் பரிசோதனையில் ஏதாவது கிளம்பும் பார். அது வரை மறந்துடாதே!''

நாங்கள் வீட்டு நிலையை அடைந்ததும், ஜான் வந்து எங்களை சந்தித்தான். அவரது முகம் குழப்பத்தால் சோர்வடைந்துக் கிடந்தது. ''தாங்க முடியலை திரு. பொய்ரெட்'' என்றார். ''எவ்விதமான வீண் பிரச்சாரமும் இந்த விஷயத்துக்குக் கிடைச்சுடக் கூடாதுனு நாங்க நடுநடுக்கத்துல இருக்கிறதை, ஹேஸ்டிங்ஸ் சொன்னானில்லையா?''

''எனக்கு முழுக்கப் புரியுது. கவலை வேண்டாம்.''

''வெறும் சந்தேகம்தான். சாட்சி எதுவும் கிடையாது.''

''ரொம்பச் சரி. ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை.''

ஒரு சிகரெட்டை எடுத்துக் கொளுத்தியபடி என் பக்கமாய் திரும்பினார் அவர். ''அந்த ஆல்ஃபிரட் பய திரும்பிட்டான்... தெரியுமா?''

''ம். வழியில பார்த்தேன்.''

''இனி அவரை எப்படி நடத்துறதுனே தெரியலை.''

''இந்தக் கஷ்டம் ரொம்ப நாள் நீடிக்காது'' என்றான் பொய்ரெட் அமைதியாய்!

தந்தி வாசகம் போல் விளங்காது பேசிய பொய்ரெட்டைப் புதிராய் பார்த்தார் ஜான். டாக்டர் பௌரீஸ் அவரிடம் கொடுத்து வைத்திருந்த இரண்டு சாவிகளை என்னிடம் தந்தார் அவர். ''திருமிகு பொய்ரெட் எதையெல்லாம் பார்க்க விரும்புகிறாரோ, அதையெல்லாம் நீ கூட்டிட்டுப் போய் காட்டு.''

''அறைகள் எல்லாம் பூட்டியிருக்கா என்ன?'' - கேட்டான் பொய்ரெட்.

''அதுதான் சரி என்பது டாக்டர் பௌரீஸின் நிலைப்பாடு.''

பொய்ரெட் சிந்தனையாய் தலையசைத்தான். ''அப்படினா அவர் ரொம்ப ரொம்ப நிச்சயமா தான் இருக்கார். இது - அதிகம் மெனக்கெட வெக்காம நம்முடைய வேலைகளையும் குறைக்குது.''

மறுபடியும் தந்தி வாசகம். எனக்குப் பரவாயில்லை... வருடக்கணக்காய் பட்டுக் கொண்டிருக்கிறேன். பாவம் ஜான்!

இருவரும் ஒன்றாய் மாடியேறி துயரம் சம்பவித்த அறைக்குள் நுழைந்தோம். நேயர்களின் வசதிக்கு... அறையின் அமைப்பையும் அதிலிருக்கும் முக்கிய சாமான்களையும் தருகிறேன்.




1. அலங்கார மேஜை
2. ஜன்னலை ஒட்டிய மேஜை
3. கனப்பு மூட்ட இருக்கும் நெருப்பு மேடை
4. ஆல்ஃபிரட் அறைக்கான வழி
5. சிந்தியா அறைக்கான வழி
6. மெழுகு சிந்தியிருந்த தரைப் பகுதி
7. கட்டில், மெத்தை
8. கவிழ்ந்திருந்த மேஜை
9. எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்ட மேஜை
10. துணிகள் தொங்கவிடும் அலமாரி
11. அலமாரி

பொய்ரெட் உள்பக்கமாய் கதவினைத் தாளிட்டுக் கொண்டு, அங்குலம் அங்குலமாக அறையைக் கண்காணிக்க இறங்கினான். அம்பாய் பாய்ந்து குறி தவறாது அமரும் வெட்டுக்கிளி போல, ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருளுக்கு லாகவமாக பாய்ந்து ஆராய ஆரம்பித்தான் அவன். கதவருகேயே நான் நின்று விட்டேன் - ஏதாவது முக்கிய தடத்தை நான் கலைத்து விடக் கூடாதே என்ற பயத்தினால்! ஆனால் பொய்ரெட்டோ என்னுடைய இந்தப் பொறுமையைப் பாராட்டுபவனாய் தோன்றவில்லை!

Scanned by CamScanner

''என்னடா....? என்னாச்சு...? எதுக்காக அங்கேயே.... ம்.... எப்படி சொல்றது... ஆங்... சுவரோட ஒட்டிக்கிட்ட பல்லி மாதிரி நின்னுட்டே...!'' என்றான் கிண்டலாய்.

சம்பவம் நடந்துள்ள இந்த அறைக்குள் பதிந்துக் கிடைக்கவல்ல ஏதாவது தடயத்தை நான் அழித்து விடக் கூடாதே என்ற முன்னேற் பாட்டால் இவ்வாறு ஒதுங்கி நின்றுவிட்டதாய் விளக்கினேன்.

''தடயங்கள்...?! ஆஹ்ஹா...! எத்தனை கரிசனம் உனக்கு...! சொல்லப்போனா ஒரு படையே அறைக்குள்ளே வந்து போயிருக்கு...! இதுல என்ன தடயம் நமக்காக அழியாம அப்படியே இருக்கும்...?! பேசாம இங்கே வா. எனக்கு உதவ முடியுமானு பார். என்னுடைய பெட்டியை இப்படி வைக்கறேன்.... கேட்கும்போது எடுத்துக் குடு.''

தான் சொன்னபடி செய்ய, ஜன்னலருகே இருந்த ஒரு வட்ட வடிவ மேஜையின்மீது சிறு பெட்டியை அவன் வைக்க.... அது சரியாக பொருத்தப்படாத மேஜை போல.... அதன் மேற்பகுதி ஸ்திரமாயில்லாது கவிழ... அப்படியே ஒரு பக்கமாய் காலைத் தூக்கிக் கொண்டு கவிழ்ந்த நிலையில் நின்றது அது. சிறு கைப்பெட்டி வழுக்கி விழுந்தது.

''அடடா...'' என எரிச்சலான அவன், ''மாளிகை போன்ற வீட்டில வாழ்ந்தாக் கூட, பாரு... துளியும் வசதியில்லாம தான் இருப்பாங்க போல'' என்றான்.

கண நேரத்துக்குப் பிறகு அறைக்குள் வந்ததற்கான பணியைத் தொடர்ந்தான்.

ஒரு சிறு ஊதா நிற கைப்பெட்டி.... பெண்களுக்கானது போல இருந்தது... அதன் பூட்டிலேயே சாவியும் இருந்தது... எழுதுவதற்காக மூலையிலிருந்த சற்றே பெரிய நாற்காலியில் இருந்த இது, கொஞ்ச நேரத்திற்கு ஹெர்குல் பொய்ரெட்டின் கவனத்தைக் கைது செய்து வைத்தது. பூட்டிலிருந்த சாவியை உருவினான். என்னிடம் தந்து பார்க்கச் சொன்னான். அப்படி ஒன்றும் புதிதான சமாச்சாரம் எதுவும் அதில் என்னால் பார்க்க முடியவில்லை. சிறு சாவி. சுருக்கப்பட்ட கொஞ்சமான 'வயர்' அத்தோடு இருந்தது.

அடுத்து நாங்கள் உடைத்து உள்ளே நுழைந்த கதவின் நிலையைப் பரீட்சிக்கலானான்; தாழ்ப்பாள் ஏற்கெனவே உடைத்தெறியப் பட்டிருப்பதைத் தனக்குத் தானே ஊர்ஜிதப்படுத்திக் கொண்டான். தொடர்ந்து சிந்தியா அறைக்கு வழி செய்து தரும் கதவருகே

Scanned by CamScanner

போனான். ஏற்கெனவே நான் சொல்லியிருந்தது போல அந்தக் கதவும் தாளிடப்பட்டிருந்தது. இருப்பினும் அதன் தாழ்ப்பாளைத் திறந்து பார்க்குமளவுக்கு முன்னேறிய அவன், அக்கதவினைத் திறப்பதும் மூடுவதுமாய் கொஞ்ச நேரம் செய்துக் கொண்டேயிருந்தான்; இதனை, அவன், துளிகூட ஓசையெழுப்பாது இருக்கும்படி, கடும் முன்னெச்செரிக்கையோடு செய்தான். அப்போது, அதன் தாழ்ப்பாளில் இருந்த ஏதோவொன்று, அவனுடைய கவனம் முழுவதையும் ஆணியறைந்தாற்போல், திடுதிப்பென்று நிறுத்தியது. அதைக் கவனமாய் பரிசோதித்தான்... பிறகு தனது கைப் பெட்டியிலிருந்து சிறு இடுக்கி ஒன்றினை சுறுசுறுப்பாய் வெளி யிலெடுத்து, அதன் மூலம் தாழ்ப்பாளின் அருகிலிருந்து சிறு சிறு துகள்களை இழுத்து, அவற்றை அப்படியே ஒரு சின்ன உறையில் விழச் செய்து ஜாக்கிரதையாய் பத்திரப்படுத்திக் கொண்டான்.

அங்கிருந்த பல தட்டுகள் கொண்ட திறந்த அலமாரியில்... ஒரு பெரிய தட்டில் வால் பாத்திரம் ஒன்றும் எண்ணெய் விளக்கு ஒன்றும் வைக்கப்பட்டிருந்தன. அந்த வால் பாத்திரத்தின் அடியில் கறுப்பு நிற திரவம் கொஞ்சம் மீதியிருக்க, குடித்துத் தீர்க்கப்பட்டிருந்த கோப்பையொன்று அருகில் வைக்கப்பட்டிருந்தது.

முக்கியத்துவம் கொடுத்து இதனைக் கவனிக்காத அளவுக்கு நான் எப்படி விட்டேற்றியாய் இருந்திருக்கலாம் என எனக்கே பேராச்சரியமாய் இருந்தது. பொய்ரெட் கொஞ்சமாய் தனது ஒரு விரலை பாக்கியிருந்த திரவத்துக்குள் முக்கியெடுத்து அதனை எச்சரிக்கையாய் சுவைத்தான். முகத்தைச் சுளித்து அதன் மூலம் வித்தியாசமாய் எதையோ தான் படித்து விட்டதை உணர்த்தினான் அவன்.

''கோகோ--- ம்--- கூடவே--- கொஞ்சம் 'ரம்' மும்--- என நினைக்கிறேன்.''

''காபி?''

''காபி வேற. இது கோகோ.''

படுக்கைக்கு அருகேயிருந்த மேஜை கவிழ்ந்ததால் தரையில் கொட்டிச் சிதறியிருந்த பொருள்கள் பக்கமாய் நகர்ந்தான். படிக்கும் போது எரிய விட்டுக் கொள்ளப்படும் ஒரு மேஜை விளக்கு, சில புத்தகங்கள், வத்திக் குச்சிகள், சாவிக் கொத்து ஒன்று, மேலும் நசுக்கப்பட்ட ஒரு காப்பிக் கோப்பை ஆகியவை சிதறிக் கிடந்தன.

Scanned by CamScanner

''இது எப்படி இங்கே?'' என்றான் பொய்ரெட்.

''எது? பொய்ரெட்... நீ இப்படி புருவத்தைக் குறுக்கி முக்கியத்துவம் தர்ர அளவுக்கு எனக்கு இங்கே எதுவுமே முக்கியமாத் தெரியலே.''

''உனக்குத் தெரியலே?! விளக்கைக் கவனி... அதனுடைய கண்ணாடி மூடி ரெண்டா உடைஞ்சிருக்கு. விழும்போது எப்படி உடைஞ்சுதோ அப்படியே இருக்கு. ஆனால், அந்தக் காபி கோப்பையைப் பாரு... தூள் தூளா ஆற அளவுக்கு நசுக்கப் பட்டிருக்கு.''

''பச்...'' என்று களைப்பாய் சொன்ன நான், ''யாராவது தெரியாம அதன் மேலே நடந்திருப்பாங்க. உருக் குலைஞ்சு தவிடு பொடியா ஆகியிருக்கு'' என்றேன்.

''அப்படிச் சொல்லு'' என்று, நான் சொன்னது மிகச் சரி என்பது போல குறிப்பிட்ட பொய்ரெட், ''யாரோ இதை ஏறி மிதித்து நடந்திருக்காங்க'' என்றான், வித்தியாசமான தொனியில்.

முட்டியிட்டு அமர்ந்திருந்த நிலையிலிருந்து எழுந்தான். கனப்புக்கு அருகில், சிறு பொருட்களை வைக்கயிருந்த கையடக்கமான அலமாரியில், கோணல்மாணலாயிருந்த பொருட்களை சரிசெய்து நேர்த்தியாக்கினான். சமாதானமற்ற சூழ்நிலைகளில் அதனை வெளிக்காட்டி விடாமலிருக்க பொய்ரெட் எடுத்துக் கொள்ளும் நிலைப்பாடு இது.

பிறகு ''நண்பா'' என என் பக்கமாய் திரும்பியவன், ''யாரோ, அந்தக் காபி கப் பொடிப் பொடியா ஆகிற அளவுக்கு அதன் மேலே ஏறியிருக்காங்க'' என்றான். தொடர்ந்தான் : ''ஏன்? இதற்கு காரணம்? கப்'பை இந்த அளவுக்கு நொறுங்கிப் போக செஞ்சதுக்கு - அதுல ஸ்டிரிச்நைன் இருந்தது ஒரு காரணமாயிருக்கலாம். இல்லைனா - இது படு பயங்கர காரணம் - அதாவது, கப்'புல - ஸ்டிரிச்நைன் இல்லாதது காரணமாயிருக்கலாம்!''

நான் எந்த பதிலும் தரவில்லை. பயந்துப் போனேன்... இருந்தாலும் அவனை விளக்கமாய் சொல்லும்படி கேட்டு ஆகப் போவது ஏதுமில்லை என்பது எனக்குத் தெரியும். சில நொடிகள் தான்... அம்பாய் பொங்கியெழுந்து தடயத் தேடலைத் தொடர்ந் தான். தரையில் கிடந்த சாவிக் கொத்தினைக் கைப்பற்றியெடுத்து அதனை தனது முகத்துக்கு நேராய் பிடித்து விரலால் மெதுவாய்



Scanned by CamScanner

சுழற்றிச் சுழற்றிப் பார்த்தான். கடைசியாய் அதில் பளபளவென்று புதிதாய் தெரிந்த ஒரு சாவியைத் தேர்ந்தெடுத்து தனியாக்கிக் கொண்டான். அதனால், ஊதா நிற கைப்பையைத் திறக்க முயன்றான். அது பொருந்தியது. திறந்தான். சில நொடிகள் தயக்கத்திற்கு பிறகு மறுபடியும் மூடிவிட்டான். பூட்டினான். அந்த சாவிக் கொத்தையும் கைப்பையில் ஏற்கெனவே விட்டு வைக்கப்பட்டிருந்த சாவியையும் சேர்த்து தனது சட்டைப் பைக்குள் நழுவ விட்டான்.

''இதோ... மேஜைக்குள்ளே கிடக்கும் இந்த ஆவணங்களைப் பார்க்கும் அதிகாரம் இப்போதைக்கு எனக்கு இல்லாட்டாலும், செய்துத் தான் ஆக வேண்டியிருக்கு... உடனடியா.''

மேஜையின் அனைத்து தட்டுக்களையும் ஒன்று விடாது மிக மிக கவனம் பொதித்து அதி ஜாக்கிரதையாக பரீட்சித்தான். பின், இடப்பக்கமாயிருந்த ஜன்னலை நோக்கி அவன் சென்ற போது, அடர்த்தியான நிறத்தில் கீழே விரிக்கப்பட்டிருந்த தரை விரிப்பில், சுலபமாய் கண்களுக்கு அகப்படாத நிலையில் சிந்திக் கிடந்த, ஒரு வட்ட வடிவக் கறை, அவனைக் குறிப்பிட்டு ஈர்த்ததாய் பட்டது. குனிந்து அது நன்றாய் கிட்டத்தில் தெரியும்படி முட்டியிட்டு அமர்ந்து பார்த்தான். குனிந்து அதன் மணத்தை முகரும் அளவுக்கு துல்லியமாய் ஆராய்ந்தான்.

இறுதிக் கட்டம் வந்தது. தன்னிடமிருந்த சோதனைக் குழாய்க்குள் சில துளிகள் கோகோ துளிகளை விட்டுக் கொண்டான். சிதறாது மூடி முத்திரையிட்டான். இதற்கு அடுத்த நகர்த்தலாக, சிறு குறிப்பேட்டினை எடுத்துக் கொண்டான்.

''ஹேஸ்டிங்ஸ்... இந்த அறையில நாம என்னென்ன சேகரிச்சருக்கோம்னா...'' என்றவன், எழுத ஆரம்பித்துக் கொண்டே, ''கவனத்தைக் குறிப்பிட்டு கவரும் ஆறு முக்கிய தகவல்களை சேகரிச்சிருக்கோம். நான் சொல்லட்டுமா.... இல்லே, நீ...?!'' என இழுக்க, ''அட அப்பா... நீயே சொல்லிடு'' என்றேன் நான் அவசரமாய்!

''நல்லதா போச்சு. முதலாவது - பொடிப் பொடியாய் அரைத் தெடுத்தது போல தூளாக்கப்பட்ட ஒரு காபி கப்; இரண்டாவது - பூட்டில் சாவியோடு கிடைத்த ஒரு கைப்பை; மூன்றாவது - தரையில் கிடந்த ஒரு கறை.''

Scanned by CamScanner

''அது சில நாட்களுக்கு முன்னால ஏற்பட்டதா கூட இருக்கலாம்'' என இடைமறித்தேன் நான்.

''கிடையாது. இன்னும் பிசுபிசுப்பு மாறாது காபியின் வாசத்தை உணரும்படி இருப்பதால்.... ம்ம்... நீ சொல்வது தோற்றுப் போகிறது நண்பா! நாலாவது - கரும்பச்சை நிறமுடைய நூலிழைகள்... ஏதோ துணியுடையது.... ஒரு சில இழைகள் தான்... ஆனா தனிப்பட்டு கண்ணுக்குத் தெரியுது... முக்கியமாப் படுது...!''

''ஆஹ்...'' என கண்ணகல சொன்ன நான் ''அதைத் தான் நீ உறையில போட்டு பத்திரப்படுத்தினாயா?!'' என்றேன்.

''ஆமாம். அவை, திருமதி எமிலியுடைய உடையிலிருந்து உருவினதா கூட தெரிய வரலாம்... ரொம்ப முக்கியமானதா இல்லாமலும் ஆகிடலாம். பார்ப்போம். ஐந்தாவது - *இது...!*''

வெற்றித் ததும்பும் நாடகப் பாணியில் கையினை வீசி, எழுதும் மேஜைக்கு அருகில் கீழே சிந்திக் கிடந்த மெழுகுப் பொட்டுக்களைச் சுட்டிக் காட்டினான். ''இது நேற்றுதான் சிந்தியிருக்கணும். அப்படி இல்லேனா ஒரு நல்ல வேலைக்காரி சுரண்டியெடுத்து நிச்சயமா இதை சுத்தம் செஞ்சிருப்பா.''

''நேற்று இரவுதான் சிந்தியிருக்கணும். எல்லாரும் குழம்பி நடுங்கிப் போயிருந்தோம். ஏன்... திருமதி எமிலியே கூட அவருடைய மெழுகுவர்த்தியைக் கைத்தவறுதலா சிதற விட்டிருக்கலாம்.''

''நீ ஒரே ஒரு மெழுகுவர்த்தியைத் தான் உள்ளே கொண்டு வந்தியா?''

''ஆமாம். லாரன்ஸ் தான் தூக்கிக்கிட்டு வந்தார். அவர் உடைஞ்சு போயிருந்தார்ப்பா. அவர், இதோ... இதுல எதையோ பார்த்துட்டதா பட்டுது...'' - நான் அலமாரியைச் சுட்டிக் காட்டி சொன்னேன். ''பார்த்ததுல, வாதம் வந்தவரைப் போல ஆயிட்டாரு.''

''ஒஹ்...! ஆச்சரியமா இருக்கு'' என்றான் அவன் தாமதமின்றி. சுவரெல்லாம் கண்களை மேய விட்டபடி, ''உதவக் கூடிய துப்பு – நீ சொல்வது'' என்றவன், ''ஆனால் அந்த மெழுகுவர்த்தியாலே இந்தக் கறை உண்டாகலை. இது வெள்ளை மெழுகுத் திட்டுக்கள். ஆனா, திரு. லாரன்ஸ் தூக்கிக்கிட்டு அலைஞ்ச வர்த்தி... இன்னும் கூட அது மேஜையில் தான் இருக்கு.... அது பிங்க் நிறம். இன்னொரு

Scanned by CamScanner

முக்கிய விஷயம்... திருமதி எமிலிக்கு மெழுகு அவசியமே கிடையாது. அவங்க விளக்கு பயன்படுத்தறாங்க.''

''அப்படினா?'' என்று சற்று பொறுமையிழந்தவனாக நான் கேட்டேன்: ''நீ என்ன முடிவுக்கு வர்ரே?''

இதற்கு, என்னுடைய சுய சிந்தனையை உபயோகப்படுத்தி விடை கண்டு கொள்ளுமாறு வெறுப்பேற்றும் பதிலைத் தந்தான் அவன்.

''சரி.... இதை விடு. அந்த ஆறாவது சமாச்சாரம்?''

''இப்போதைக்கு இல்லை'' என்றான் பொய்ரெட், சிந்தனையாய். ''என் மனசுக்கு பட்ட *அதை,* ஆறாவதாக சொல்லியிருப்பேன். ம்ம். இப்போதைக்கு அந்த ஆறாவது சமாச்சாரத்தை எனக்குள்ளேயே பத்திரப்படுத்திக்கறேன்.''

விரைவாக ஒரு முறை அறையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டான். ''இனி இந்த அறையில தேடித் துருவ எதுவும் பாக்கி இல்லை...'' என்றவன், கனப்புக் கூட்டுக்குள் எரிந்து சாம்பலாகியிருந்த விறகுகளை ஆழ்ந்து நீண்ட நேரம் பார்த்துக் கொண்டே, ''அந்த நெருப்புக் கங்குகள்... மற்றும் அதனுள் எரிந்தவற்றைத் தவிர...!'' என்றான். பிறகு உடனேயே, ''அதையும் ஏன் விடணும்... அதற்குள்ளேயும்... அதிர்ஷ்டவசமா ஏதாவது துப்பு இருக்கலாமில்லையா...! அதையும் தான் பார்த்துடுவோமே...'' என்றபடி அந்தப் பக்கமாய் போனான்.

கனப்புக்குள் எரிந்துக் கிடந்த சாம்பலனைத்தையும், அவற்றை வெளியே தூக்கி எரிவதற்கான சிறு மண்வெட்டி மூலம், சாமர்த்தியமாய் குத்திக் குத்தியெடுத்து, அருகிலிருந்த சிறு அலுமினிய தாம்பாளத்தில் அளவு கடந்த எச்சரிக்கையோடு கொட்டினான். செய்துக் கொண்டிருக்கும் போதே, சட்டென, சிறு ஆச்சரிய குரல் எழுப்பி, ''எனது சிறு இடுக்கி, ஹேஸ்டிங்ஸ்'' என்றான், இப்போதே வேண்டும் என்ற அவசரத்தில்.

உடனே அதனை அவன் கையில் நான் திணித்து விட்டேன். மிகத் திறமையாய், உள்ளேயிருந்து, பாதி எரிந்த நிலையிலிருந்த தாள் ஒன்றினை வெளியே எடுத்தான்.

''இதோ,.... இதோடா... இதோ'' என்று அதனைப் பார்த்தபடி அலறிய பொய்ரெட், ''இது என்னவாயிருக்கும்னு நெனக்கறே...?!'' என்றான் என்னிடம்.

அந்தத் துண்டினை நான் துளைத்துப் பார்த்தேன். நான் கீழே நேயர்களுக்குத் தருவது தான் - அந்தத் துண்டில் நான் பார்த்தது :

Scanned by CamScanner




புரியாத புதிராய் தோன்றியது. அசாதாரணமாய் தடித்திருந்த காகிதம் அது. சாதாரண நோட்டு புத்தகத் தாள் போலில்லை. இதை உணர்ந்ததும் சட்டென ஓர் எண்ணம் உள்ளே உதித்தது. ''பொய்ரெட்'' என கண்ணகல அழைத்த நான் சொன்னேன்: ''இது ஓர் உயிலின் துண்டு!''

''அப்படிப் போடு!''

நான் அவனை ஆழ பார்த்துவிட்டு, ''உனக்கு ஆச்சரியமா யில்லே?'' என கேட்டேன்.

''இல்லை'' என்றான். ''இதை நான் எதிர்பார்த்தேன்.''

நான் அதனைத் திருப்பி அவனிடமே கொடுத்துவிட, ஏனைய பொருட்களைத் தனது சிறு பெட்டிக்குள் அடைத்து வைத்து பத்திரப்படுத்தியது போலவே இதனையும் அவன் பத்திரப் படுத்திக் கொள்ள... என் மூளைக்குள் தான் பெரும் சுழல் உருவாயிருந்தது! இந்த உயில் ஏற்படுத்தித் தரும் குழப்பம் தான் என்ன? யார் அதை நெருப்புக்குள் இட்டு அழித்தது? எரிந்துக் கொண்டிருந்த மெழுகுவர்த்தி சிந்திய பொட்டுக்களைத் தரையில் சிந்தி கறை யேற்படுத்திய அதே ஆசாமி தானா? பிறகு வேறு யாராயிருக்க முடியும்! எப்படி உள்ளே நுழைய ஒருவருக்கு வழி கிடைத்திருக்கும்? எல்லா கதவுகளும் உள்பக்கமாய் பூட்டப்பட்டிருக்கின்றனவே!

''இப்போது ஹேஸ்டிங்ஸ்'' என்று உற்சாகமாய் அழைத்த பொய்ரெட், ''கிளம்புவோம். நான் அந்த வேலைக்காரியைச் சில கேள்விகள் கேட்க வேண்டியுள்ளது. நானி? அவ பேர்... சரி தானே?'' என்றான்.

நாங்கள் திரு ஆல்ஃபிரட் அறையின் வழியாக வெளியேறினோம். வெளியேறும் வரை பொய்ரெட் தாமதமாக்கிக் கொண்டு தான் நடந்தான் - அங்கிருப்பவற்றை பொதுப்படையாகவும் அதே

சமயத்தில் கூர்மையாகவும் கவனத்தில் பூட்டிக் கொண்டிருந்தான். இந்த அறையின் உள்ளிருந்தபடி திருமதி எமிலியின் அறைக் கதவையும், வெளியேறிய பிறகு ஆல்ஃபிரட் அறைக் கதவையும் பழையபடி பூட்டி விட்டு வெளியே வந்தோம்.

திருமதி எமிலியின் பிரத்யேக அறையைப் பார்க்க வேண்டும் என்று அவன் விருப்பம் தெரிவித்ததால் அவனை அங்கு அழைத்துக் கொண்டு போய் விட்டு விட்டு, நானியைத் தேடிக் கொண்டு நான் சென்றேன்.

நான் திரும்பிய போது பிரத்யேக அறை காலியாயிருந்தது.

''பொய்ரெட்...! ஹெர்குல் பொய்ரெட்...!'' - சற்று உரக்கக் கத்தினேன்.

''இங்கே இருக்கேன்டா.''

பிரெஞ்சு ஜன்னல்... அதாவது வெறும் கண்ணாடி கதவு மட்டுமிருக்கும் ஜன்னலது. அதில் கம்பிகள் இருக்காது. ஜன்னலின் கதவை விலக்கிக் கொண்டால் கதவு திறந்தது போலாகும்... அப்படியே அந்தப் பக்கத்துக்குப் போய் விடலாம்! பணக்கார வீடுகளின் சமாச்சாரம்! அப்படிப்பட்ட ஜன்னலின் வழியாக வெளியேறி தோட்டத்தில் நின்றுக் கொண்டிருந்தான். பலப்பல விதமாக அமைக்கப்பட்டிருந்த செடிகள் மற்றும் அவற்றின் அலங்காரப் பாத்திகளில் தன்னை இழந்து நின்றுக் கொண்டிருந்தான் அவன்.

''அதிசயம்!'' என முணுமுணுத்தான். ''அற்புதம்...! என்ன ஒரு வடிவமைப்பு! ஆஹ்.... அந்தப் பிறை வடிவ பாத்தியைக் கவனி.... ஆங்... அதுக்குப் பக்கத்துல அந்த டைமண்ட் வடிவ பாத்தி! செடிகளுக்கு நடுவுல விட்டிருக்கிற இடைவெளியும் பிரமாதம்! இப்ப தான் பண்ணியிருக்கணும்... இல்லே?''

''ஆமாம். நேத்து மத்தியானம் இங்கே வேலை பண்ணிக்கிட்டிருந்ததா ஞாபகம். சரி உள்ளே வா. நானி வந்திருக்கு.''

''கொஞ்ச நேரம் இறுக்கம் தளர்ந்து என்னை நிம்மதியா இருக்க விட்டுடாதே...!''

''இங்கே நடந்திருக்கிற சம்பவம் பாத்தியைவிட அதி முக்கியமானது... தெரியுமில்லே...?''

''இந்த சின்னஞ்சிறு பூச்செடிகளெல்லாம் முக்கியமான தில்லைனு உனக்கு எப்படித் தெரியும்!''

''சரியான ஆளுடா நீ'' என தோள்களைக் குலுக்கி என் வெறுப்பினைத் தெரிவித்தேன். இப்படித் தான் என்று ஒரு முடிவினை அவன் எடுத்துவிட்டால் அதனை மறுத்து விவாதிப்பதில் பைசா பெயராது.

''சரி சரி... கோபிக்காதே. நீ ஒத்துக்கலே. ஆனா இந்த மாதிரி விஷயங்களும் உதவியிருக்கு. வா. உள்ளே போவோம். துணிகர நானியோடப் பேசிப் பார்ப்போம்.''

இரண்டு கைகளையும் நெஞ்சுக்குக் குறுக்காய் கட்டிக் கொண்டு பிரத்யேக அறையின் வாசலில் நானி நின்றுக் கொண்டிருந்தாள். தலையில் சிறு வெள்ளைத் தொப்பி. அதனை மீறிக் கொண்டு காற்றிலாடும் நரை முடிகள். பொய்ரெட்டைப் பார்த்த போது அவரிடம் உண்டான சந்தேகத் தொய்வு அவனுடன் பேசத் துவங்கிய மறு கணத்திலேயே காணாமல் போனது.

ஒரு நாற்காலியை இழுத்து அவளுக்குக் காட்டி, ''ம். உட்காருங்கள்'' என்றான் பொய்ரெட்.

''நன்றி.''

''உங்க முதலாளியம்மா கிட்டே பல வருஷங்களா நீங்க வேலையில இருந்திருக்கீங்க... இல்லே?''

''பத்து வருஷங்கள் ஸார்.''

''ஓ...! அது ரொம்ப நாட்கள். முழு விசுவாசத்தோட இருந்திருக்கீங்க. உங்க முதலாளியம்மா மேலே மிகுந்த பாசமா இருந்திருக்கீங்க.... சரிதானே...?''

''அவங்க ஒரு மிக நல்ல முதலாளியம்மாவா எனக்கு இருந்தாங்க ஸார்.''

''அப்படினா... அந்த நல்லவங்களைப் பத்தின சில கேள்விகளுக்கு நீங்க பதில் சொல்ல சுணங்க மாட்டீங்கனு நினைக்கிறேன். உங்களைக் கேள்விக் கேட்கப் போறேன்னு ஜானுக்குத் தெரியும்... பயம் வேண்டாம்.''

''நிச்சயமா ஸார்.''

''நேத்து மத்தியானம் நடந்த சில விஷயங்களிலிருந்து ஆரம்பிக்கிறேன். உங்க முதலாளியம்மா சண்டை போட்டாங்களா?''

''ஆமாம் ஸார். அது பத்தியெல்லாம் எனக்கு ----'' - நானி தடுமாறினாள்.

பொய்ரெட் ஊடுருவிப் பார்த்தான்.

Scanned by CamScanner

''இத பாருங்க நானி.... அந்த சண்டை பத்தி, எத்தனை துல்லியமா சமாச்சாரங்களைத் தெரிஞ்சுக்க முடியுமோ அத்தனை துல்லியமா ஒண்ணுவிடாம நான் தெரிஞ்சுக்கணும். உங்க முதலாளியம்மாவோட ரகசியங்கள் சிலதை சொல்றோமேனு அஞ்சாதீங்க. உங்க முதலாளியம்மா பிணமா கிடக்கறாங்க. அதுக்குக் காரணமானவங்களைப் பழிக்குப் பழி வாங்கணும்னா - நாம எல்லாத்தையும் பேசித் தெரிஞ்சாகணும். எதுவும் போன அவங்களோட உயிரைத் திருப்பிக் கொண்டு வராது தான் - ஆனா, இந்த மரணம் கொலையாயிருந்தா, கொலைகாரனை நாம வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தே தீரணும்.''

தீவிர ஆக்ரோஷத்துடன், ''ஆமாம்'' என்றாள் நானி. ''இந்த வீட்டுல *ஒண்ணு* இருக்கு.... எங்க யாராலேயும் சகித்துக் கொள்ள முடியாதது அது...! பேர்...? வேணாம்...! சொல்ல முடியாது...! துரதிர்ஷ்டவசமான நாள் அது...! *அவன்* துளி அடையாளம் தெரியாம ஆரம்பத்துலிருந்தே இருட்டாக்கிட்டான்.''

அவளுடைய வெறுப்பும் கோபமும் சற்று தணியக் காத்திருந்த பொய்ரெட், போலீஸ்கார குரல் எடுத்துக் கொண்டு, ''அந்த சண்டை பற்றி? அதுல நீங்க முதல்ல கேட்டது என்ன?'' என்று துவங்கினான்.

''சொல்றேன் ஸார். முன்னறைப் பக்கமா நான் போக வேண்டியிருந்தது... போய்க்கிட்டிருந்தேன்... நேத்து.''

''அப்போ என்ன மணி?''

''சரியா சொல்ல முடியலே ஸார், இருந்தாலும் நாலு மணியிருக்கலாம்... இல்லே இன்னும் கொஞ்சம் கூட ஆகியிருக்கலாம். நான் சொன்ன மாதிரி அந்தப் பக்கமா போக நேர்ந்தது. அப்போ உள்ளேயிருந்து சத்தமாயும் கோபமாயும் வார்த்தைகள் வந்து விழுந்தன. நின்னு கேட்கணும்னு எல்லாம் எனக்கு நினைப்பு கிடையாது - ஆனா கேட்டது! நின்னேன். கதவு மூடியிருந்தது. ஆனா முதலாளியம்மா தெளிவாயும் சத்தமாயும் பேசினாங்க. எந்தத் தடையுமில்லாம அவங்கப் பேசினதை என்னால கேட்க முடிஞ்சுது. 'நீ என்கிட்டே பொய்ச் சொல்லிட்டே. என்னை ஏமாத்திட்டே. வஞ்சம் பண்ணிட்டே' - இப்படி சொன்னாங்க. இதுக்கு திரு. ஆல்ஃபிரட் சொன்னதை நான் கேட்கலே. அவரும் திருப்பி பதிலடி தந்தாரு, ஆனா தாழ்ந்த குரல்ல. இதுக்கு முதலாளியம்மா பதில் தந்தாங்க: 'மூடு வாயை. என்ன திமிரு உனக்கு? உனக்கு சோறு போட்டு துணி கொடுத்து இங்கே இருக்க

வெச்சவ நான். நீ என் அடிமை. இதான் நீ திருப்பி நன்றி செலுத்துற லட்சணமா! எங்க பேருக்கே இல்லே களங்கம் ஏற்படுத்திட்டே!' இதுக்கும் அவர் என்ன பதில் சொன்னார்ங்கறதை என்னால கேட்க முடியலே. பிறகும் முதலாளிம்மா நிறுத்தலே... போய்க் கிட்டே இருந்தாங்க: 'இனி நீ என்ன சொன்னாலும் எனக்குள்ளே எந்த மாற்றமும் விளைஞ்சிடப் போறதில்லே. என்ன செய்யணும்னு எனக்கு நல்லா தெரியும். நான் முடிவு கட்டிட்டேன். புருஷன் பொண்டாட்டி சண்டை, அப்படி இப்படினு, சேதி வெளியே தெரிஞ்சுடக் கூடாதுனு பொத்தி மறைச்சுடுவேன்னு மட்டும் நினைக்காதே. உன்னை வைச்சுக்கறேன்.' இப்போ ரெண்டு பேரும் வெளியே வருகிற அரவம் கேட்டுது.... வேகமா போயிட்டேன்.''

''நீங்க கேட்டது திரு. ஆல்ஃபிரட் குரல் தான் என்கிறதுல நிச்சயமா இருக்கீங்களா?''

''ஓ.... நிச்சயமா! வேற யாருதா அது இருக்கும்?''

''சரி. பிறகு அடுத்து நடந்தது?''

''அப்புறம் நான் வரவேற்பறைக்குள்ளேயே வந்துட்டேன். எல்லாம் படு அமைதியா இருந்தது. அஞ்சு மணியிருக்கும்... முதலாளியம்மா மணியடிச்சு, அவங்களோட தனியறைக்கு டீ கொண்டு வரச் சொன்னாங்க. சாப்பிட வேற எதுவும் கேட்கலே. படுபயங்கரமா இருந்தாங்க - வெளிறிப் போய்... பேயறைஞ்சா மாதிரி...! 'நானி'அப்படினு சொன்னாங்க. 'எனக்கு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டிருக்கு'னு சொன்னாங்க. 'அதுக்கு ரொம்ப வருந்தறேன்மா'னு சன்னமா சொன்ன நான், 'சூடா ஒரு கப் டீ குடிங்க. கொஞ்சம் முன்னேற்றம் கிடைக்கும்'னு சொன்னேன். கையில என்னவோ வெச்சிருந்தாங்க. அது ஒரு பேப்பரானு எனக்குத் தெரியலே, இல்லே வெறும் துண்டுச் சீட்டானும் தெரியலே. அதுல எழுத்துக்கள் இருந்தது.... அந்த எழுத்துக்கள் சொன்ன விஷயங்களைக் கொஞ்சம் கூட நம்ப முடியாதவங்களைப் போல அதையே முதலாளியம்மா அதையே முறைச்சுப் பார்த்த வண்ணமிருந்தாங்க. நான் அங்கே இருக்கிறதையே மறந்தவங்க மாதிரி, 'இந்த வார்த்தைகள்... எல்லாமும் மாறிடுச்சு' அப்படினாங்க. அப்புறம் என்கிட்ட சொன்னாங்க: 'என்றைக்கும் ஆம்பிளைங்களே நம்பாதே நானி.... அவங்க நம்பிக்கைக்கு உகந்தவங்களே இல்லே.' நான் படு வேகமா போய் ஒரு கப் சூடா டீ கொண்டு வந்தேன். நன்றி சொன்னாங்க.

அதைக் குடிச்சா நிச்சயமா ஆறுதலா இருக்கும்னாங்க. 'என்ன செய்யறதுன்னே எனக்குத் தெரியலேடீ.' எதுக்காகவோ இப்படிச் சொல்லிட்டு, 'கணவன் மனைவிக்கு இடையே சண்டைங்கறது ஒரு நரக வேதனைடீ. சீக்கிரத்துல இதைத் தீர்த்துடணும்.' அந்த சமயத்துல திருமதி மேரி உள்ளே வர மேற்கொண்டு அவங்க எதுவுமே சொல்லலை.''

''அப்பவும் கையில கடிதத்தை - அல்லது அது எதுவோ - அதை வெச்சிக்கிட்டிருந்தாங்களா?''

''ஆமாம் ஸார்.''

''அதே வெச்சிக்கிட்டு அவங்க அப்புறம் என்ன செஞ்சிருப் பாங்க?''

''அதைப் பத்தி எனக்குத் தெரியாது ஸார்.... அவங்களுடைய ஊதா நிற கைப்பையில போட்டு பூட்டியிருப்பாங்கனு நெனக்கிறேன்.''

''அதுக்குள்ளே தான் முக்கியமான பேப்பர்களையெல்லாம் அவங்க வைப்பாங்களா?''

''ஆமாம் ஸார். அதோட தான் அறையை விட்டு காலைலே வெளியே வருவாங்க. ராத்திரி உள்ளே போற வரைக்கும் அவர் கூடவேதான் அது இருக்கும்... திரும்பும் போது எடுத்துக்கிட்டு போயிடுவாங்க.''

''அதோட சாவியை எப்ப தொலைச்சாங்க?''

''நேத்து மதிய சாப்பாடு வேளையில முதலாளியம்மா அதைத் தவற விட்டுட்டாங்க, ஸார். அது எங்கேனு கண்ணுல விளக்கெண்ணெய் விட்டுக்கிட்டு என்னைத் தேடச் சொன்னாங்க. அது காணாம போனதும் சப்ஜாடா துவண்டுப் போயிட்டாங்க.''

''ஆனா அதோட இன்னொரு சாவி அவங்ககிட்டே இருந்தது?''

''ஓ, ஆமாம் ஸார்.''

நானி மிகுந்த பரபரப்புக் கொண்டு பொய்ரெட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.... ஏன், நானும் தான்! தொலைந்த சாவிக்குப் போய் எதற்காக இத்தனை முக்கியத்துவம்?

பொய்ரெட் சிரித்தான். ''பரபரப்பு வேண்டாம் நானி. என்னென்ன நடந்தது என்பதையெல்லாம் தெரிஞ்சுக்க வேண்டியது தான் என்னோட வேலை.... அவ்வளவு தான். இது தான் தொலைந்துப் போன அந்தச் சாவியா?'' - தனது சட்டைப்

Scanned by CamScanner

பையிலிருந்து, மாடியில் ஊதா கைப்பையின் பூட்டிலிருந்து எடுத்த சாவியைக் காட்டினான் பொய்ரெட்.

அவரது முகத்திலிருந்து கண்கள் பிதுங்கிக் கொண்டு வெளியே விழுந்து விடும் அளவுக்கு அதனை நானி பார்த்தார். ''இதான் ஸார். இதே தான். எங்கேயிருந்து எடுத்தீங்க இதை? இண்டு இடுக்கெல்லாம் இதை நான் தேடியிருக்கேன்.''

''ஆஹ்....! ஒண்ணு தெரியுமா... இன்னிக்கு இது எந்த இடத்துல இருந்ததோ அதே இடத்துல நேத்து இது இருந்திருக்கலே! சரி விடுங்க. அடுத்த விஷயத்துக்குப் போவோம். அவங்களோட துணி மணியில நல்லா கரும் பச்சை நிறத்துல துணி ஏதாவது இருந்திருக்கா?''

எதிர்பாராத இந்தக் கேள்வியால கொஞ்சம் தடுமாறிப் போன நானி, ''இல்லை ஸார்'' என்றாள் பிறகு.

''நிச்சயப்படுத்தி சொல்லுங்க.''

''ஓஹ்... படு நிச்சயமா ஸார்.''

''அந்த நிறத்துல வேற யாருக்காவது இந்த வீட்டுல உடையிருக்கா?''

நானி சற்று நிதானித்தார். ''செல்வி சிந்தியாவுக்கு வெளிர் பச்சை நிறத்துல ஒரு மாலை நேர உடையிருக்கு.''

''வெளிரா? கரும் பச்சையா?''

''வெளிர் பச்சை ஸார். என்னவோ சிஃபான் அப்படினு அதை சொல்றாங்க.''

''ம்ம். எனக்குத் தேவை அது இல்லே. வேற யார்கிட்டேயும் பச்சை கிடையாது?''

''கிடையாது ஸார் - எனக்குத் தெரிஞ்சு!''

இதனால் ஏமாற்றமடைந்தானா அல்லது வேறு மாதிரியா என்று, பொய்ரெட்டின் முகம் துளி கூட பிரதிபலிக்கவில்லை. ''நல்லது. இதை அப்படியே விட்டுட்டு அடுத்த சமாச்சாரத்துக்குப் போவோம்'' என்று தொடரலானான்: ''நேற்றிரவு உங்க முதலாளியம்மா தூக்க மாத்திரையோ அல்லது தூக்க பவுடரோ சாப்பிட்டிருக்கலாம்னு நீங்க நம்பற மாதிரி ஏதாவது?''

''நேத்து ராத்திரி கிடையாது ஸார். அவங்க எடுத்துக்கலைனு எனக்குத் தெரியும்.''

''எப்படி?''

''ஏன்னா தூக்க மாத்திரையெல்லாம் தீர்ந்திடுச்சு. கடைசி மாத்திரையை ரெண்டு நாளைக்கு முன்னாடி எடுத்துக்கிட்டாங்க. பிறகு எதுவும் வாங்கி வைக்கலை.''

''மறுபடியும் சொல்றேன்.... நிச்சயப்படுத்தி சொல்லுங்க.''

''ஓஹ்... மறுபடியும் சொல்றேன்... படு நிச்சயமா ஸார்!''

''அப்படினா அந்தக் குழப்பம் தீர்ந்தது. ஆங்.... எந்தத் தாளிலும் உங்களைக் கையெழுத்துப் போடச் சொல்லி நேத்து உங்க முதலாளியம்மா கேட்கலை, இல்லையா?''

''என்னையா? கையெழுத்துப் போடச் சொல்லியா? இல்லை, ஸார்.''

''ஹேஸ்டிங்கும் லாரன்ஸும் நேத்து சாயங்காலம் வந்த போது, உங்க முதலாளியம்மா மும்முரமா ஏதோ கடுதாசி எழுதிக்கிட்டிருந்ததைப் பார்த்திருக்காங்க. அந்தக் கடிதங்கள் யாருக்காக எழுதப்பட்டதுனு உங்களால சொல்ல முடியும்னு நினைக்கறேன்!''

''சொல்ல முடியும்னு தோணலை ஸார். நான் சாயங்காலம் வெளியே போயிருந்தேன். கொஞ்சம் விட்டேத்தியான பெண்ணானாலும், ஆனி சொல்லலாம்னு நெனக்கிறேன். அவ இருந்தா. இருந்தும் பிரயோஜனம் ஒண்ணுமில்லே. குடிச்ச காபி கோப்பைகளைக் கூட அவ நேத்து ராத்திரி எடுத்து சுத்தம் செய்யலே. இப்படித் தான் நடக்கும் - நான் இங்கே இல்லேனா!''

''நேத்து சாயங்காலம் எத்தனை மணிக்கு நீங்க வெளியே போனீங்க.''

''ஆறு மணி வாக்கில.''

''நன்றி நானி. இவ்வளவு தான் உங்ககிட்டே நான் கேட்க நினைச்சது.''

சொல்லி விட்டு எழுந்து பிரெஞ்சு ஜன்னலருகே போய் நின்றுக் கொண்டான். ''இந்தப் பூச்செடிகள்... நாற்றுகள்... வரிசையாய் அழகு சிதையாது கட்டப்பட்டுள்ள பாத்திகள்... வாவ்...! நல்ல பராமரிக்கிறீங்க நானி.''

''இப்ப குறைஞ்சிடுச்சு ஸார்'' என விளக்கம் தரலானாள் நானி. ''முதல்ல அஞ்சு தோட்டக்காரனுங்க இருந்தாங்க. எஸ்டேட் கொள்ளாத தோட்டம். கண்கொள்ளாத காட்சி. இப்ப மூணு பேர் தான். கிழ மேனிங்... வில்லியம்னு ஒருத்தன்... இன்னொரு சின்னவ. ம்... எல்லாம் காணாம போயிடுச்சு. கவலை மட்டும்தான் மிஞ்சியிருக்கு.''

Scanned by CamScanner

''கவலையற்ற சந்தோஷ நாட்கள் திரும்பி வரும், நானி. நம்புவோம். நீங்க போய் ஆனியை இங்கே அனுப்பறீங்களா...?''

''செய்யறேன் ஸார். நன்றி ஸார்.''

''திருமதி எமிலி தூக்க மருந்து சாப்பிடுவார் என்பது உனக்கு எப்படிடா தெரியும்?'' - நானி அறையை விட்டுக் கடந்ததும் பரபரப்புத் தொற்றிக் கொண்ட குரலில் கேட்டேன் நான். ''இது மட்டுமல்ல.... அந்தத் தொலைஞ்ச சாவி... அதுக்கு ஒரு மாற்று இருக்குங்கறது...!''

''ஒவ்வொண்ணா கேளு. தூக்க மருந்தைப் பொறுத்த வரைக்கும் ... இதிலிருந்து தெரிஞ்சுக்கிட்டேன்'' - ஒரு சின்ன அட்டைப் பெட்டியை என்முன் எடுத்தான். மருந்துக் கடைக்காரர்கள் உபயோகிப்பதைப் போன்ற ஒன்று அது.

''இதை எங்கேயிருந்து எடுத்தே?''

''திருமதி எமிலி படுக்கையறையிலிருந்த அலமாரியில். இதுதான் என் பட்டியலின் ஆறாவது சங்கதி.''

''இதிலிருந்த கடைசி மாத்திரை ரெண்டு நாளுக்கு முன்னாடியே தீர்ந்துட்டதாலே, இது இனி நமக்கு அப்படி ஒண்ணும் முக்கியமானது இல்லேனு நான் நினைக்கிறேன்.''

''இருக்கலாம்'' என்று ஒருபுறம் நான் சொன்னதை ஆமோதித்த பொய்ரெட், ''ஆனா இந்தப் பெட்டியின் பிரத்யேக அம்சமா எதையாவது நீ கவனிக்கிறியா? நல்லா பார்த்து சொல்லு'' என கேட்டான்.

அருகாமையில் வைத்துப் பார்த்தேன். ''இல்லை. பிரத்யேகமா எனக்கு எதுவும் படற மாதிரி தோணலே.''

''கம்பெனி முத்திரையைப் பாரு.''

முக்கியத்துவம் பதித்து கம்பெனி முத்திரையைப் படித்தேன்: '''படுக்கையின் போது ஒரு மாத்திரை எடுத்துக் கொள்ள வேண்டும் - தூக்கம் வராதபோது. திருமதி எமிலி.' இல்லை பொய்ரெட். அசாதாரணமா இதில எனக்கு எதுவும் தெரியலே.''

''கம்பெனியோட பெயர் இல்லையே.... அது...!''

''ஆஹ்...!'' - துள்ளினேன் நான். ''ஆமாமாம்.... இது விநோதமா தானிருக்கு.''

''தன்னோட கம்பெனி முகவரியில்லாத அட்டைப் பெட்டியில மருந்தை வெச்சு அனுப்பினதா நீ எந்தக் கடைக்காரனைப் பத்தியாவது கேள்விப்பட்டிருக்கியா?''

Scanned by CamScanner

''சுத்தமா - கிடையாது.''

சொன்ன நான் தடுக்கயியலாத பரபரப்புக்குள்ளானேன். ஆனால், உள்ளுக்குள் எழுந்த தாளாத ஓர் உற்சாகத்தால் அமுக்கப்பட்ட பொய்ரெட், ''இருந்தாலும் இதற்கான விளக்கம் ரொம்ப ரொம்ப சுலபமானது, ஹேஸ்டிங்ஸ்...! நீ உன் இஷ்டத்துக்கு ஏதாவது திட்டம் தீட்டிப் பார்த்துடாதே...!'' என்றான்.

அது என்ன விளக்கம் என நான் கேட்டு அறிவதற்குள், ஆனி வந்துக் கொண்டிருப்பதற்கான சர்ரக் சர்ரக் காலடியோசை கேட்டது. நிறுத்திக் கொண்டேன்.

ஆனி, நல்ல உயரமும் அழகும் கொண்ட பலமான பெண்ணாயிருந்தாள். எதனாலோ அவள் ஆழ்ந்த கிளர்ச்சியிலிருந்தாள்.... நடந்துள்ள துயரம் குறித்து பிசாசாய் அவளுள் உண்டாகியிருக்கும் ஆனந்தம் தான் இக்கிளர்ச்சிக்குக் காரணமோ என்று கூட எனக்கு பட்டது.

அதிகார தோரணை மிடுக்காய் வெளிப்பட, விஷயத்துக்குள் அப்பொழுதே நுழைந்து விட்டான் பொய்ரெட்.

''நேற்றிரவு திருமதி எமிலி எழுதிய கடுதாசிகள் பற்றி எங்களுக்கு ஏதாவது தகவல் தந்து நீங்கள் உதவலாம் என்ற எண்ணத்தில் தான் உங்களை வரச்சொன்னேன், ஆனி. உட்காருங்க. சொல்லுங்க. எத்தனை இருந்தது? மேலும் கடிதம் சம்பந்தமாய் ஏதாவது பெயரோ... முகவரியோ... சொல்ல முடியுமா?''

ஆனி கவனித்துக் கொண்டாள்.

''மொத்தம் நாலு கடிதங்கள் இருந்தன ஸார். ஒன்று ஹோவோர்டுக்கு. ஒன்று திரு. வேல்ஸ்... வக்கீலுக்கு. மீதியிரண்டு குறித்து எனக்கு ஞாபகம் வராதுனு நினைக்கிறேன். ஆங்...! ஆங்...! ஓ... ஸார்...! இன்னொன்று ரோஸ௵க்கு - சமையல்காரன். கடைசி - ம்ம். நினைவே வராது.''

''யோசிச்சுப் பாருங்க'' - கெஞ்சும் தொனியில் கேட்டான்.

மூளையைக் கசக்கி ஒன்றும் எடுக்காமல் நின்றாள் ஆனி. ''முடியலே ஸார். சுத்தமா போயிடுச்சு. அதை நான் கவனிச்சா மாதிரியே நினைவில்லே.'

''அப்ப விடுங்க... பாதகமில்லை'' என்று துளிகூட ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல் சொன்ன பொய்ரெட், ''இப்போ உங்க கிட்டே வேற ஒண்ணைப் பத்திக் கேட்க விரும்பறேன்'' என முன்னுரை தந்தான். ''திருமதி எமிலியின் அறையில், கொஞ்சமாய் கோகோ

Scanned by CamScanner

திரவம் மிஞ்சியிருக்கிற ஒரு வால் பாத்திரம் இருக்கு. ஒவ்வொரு ராத்திரியும் அதைக் குடிப்பாரா?''

''ஆமாம். ஒவ்வொரு நாளும் சாயங்காலம் தயார் பண்ணிக் கொண்டு போய் அவர் அறையில வெச்சிடுவோம். அவருக்கு எப்போ குடிக்கணும்னு தோணுதோ அப்போ சுடவெச்சு குடிச்சுப்பார்.

''அது என்னது? வெறும் கோகோ?''

''ஆமாம் ஸார். பாலோட தயாரிப்போம்... ஒரு சின்ன கரண்டி சர்க்கரை. கூட ரெண்டு கரண்டி 'ரம்' மும் விடுவோம்.''

''அதை யார் அவங்களோட அறைக்கு எடுத்துக்கிட்டுப் போனது?''

''நான் கொண்டு போனேன் ஸார்.''

''எப்பவுமே?''

''ஆமாம் ஸார்.''

''எத்தனை மணிக்கு?''

''திரைச்சீலையையெல்லாம் இழுத்து மூடி சரிபண்ணும் போது இதை வாடிக்கையா வெச்சுப்பேன் ஸார்.''

''அப்போ நேரா சமையலறையிலிருந்து தான் அதை எடுத்துக்கிட்டு வந்தீங்களா?''

''இல்லை ஸார். காஸ் அடுப்புக்கு பக்கத்துல போதுமான இடம் இல்லே.... இத்தனை பெரிய வீட்டுல இது ஒரு குறை. சமையல்காரன் முதல்ல தயார் பண்ணிடுவான்... நான் அதை அப்புறமா எடுத்துக்கிட்டு மேலே வந்து தள்ளுக் கதவுக்குப் பக்கத்துல இருக்கிற மேஜையில வெப்பேன். பிறகு தான் அவங்க அறைக்கு எடுத்துக்கிட்டுப் போவேன்.''

''தள்ளுக் கதவு இடப் பகுதியில இருக்கு, இல்லே?''

''ஆமாம், ஸார்.''

''அந்த மேஜை... அது கதவின் இந்தப் பக்கம் இருக்கா...? இல்லே, அந்தப் பக்கம்... பணியாட்கள் தங்கியிருக்கிற பக்கத்துல இருக்கா?''

''இந்தப் பக்கம் ஸார்.''

''நேற்றிரவு எத்தனை மணிக்கு எடுத்துக்கிட்டு மாடிக்குப் போனீங்க?''

''ஏழேகாலிருக்கலாம்.''

Scanned by CamScanner

''பிறகு எப்போ திருமதி எமிலியின் அறைக்குள்ளே கொண்டு போனீங்க?''

''அங்கே எல்லாத்தையும் மூடப்போன போது ஸார். எட்டு மணி வாக்குல. இதையெல்லாம் நான் பண்ணி முடிக்கிறதுக்கு முன்னாடியே திருமதி எமிலியம்மா படுக்கைக்கு வந்துட்டாங்க.''

''ஆக, ஏழே காலிலிருந்து எட்டு மணி வரைக்கும், அந்த கோகோ, இடப்பக்கத்து மேஜையிலேயே தான் இருந்திருக்கு...?''

''ஆமாம் ஸார்'' என்ற ஆனி, முகமெங்கும் சிகப்பு ஏறிக் கொண்டே போக மாறினார். இப்போது, யாரும் எதிர்பாராத நிலையில், ''அங்கே உப்பு இருந்திருந்தா... அது என்னால இல்லே ஸார்'' என்றாள். ''அதுக்குப் பக்கத்துல நான் உப்பை எடுத்துக் கிட்டே போகலே ஸார்.''

''இப்போ அதுல உப்பு இருந்ததுனு உங்களை எது சிந்திக்க வெக்குது?''

''அந்தத் தட்டில பார்த்ததனால, ஸார்.''

''அந்தத் தட்டுல கொஞ்சம் உப்பைப் பார்த்தீங்களா?''

''ஆமாம். சமையலுக்கான பொடி உப்பு போல. தட்டோட எல்லாத்தையும் மேலே கொண்டு போகும்போது அப்படி எதையும் நான் கவனிக்கலே. ஆனா அதை முதலாளியம்மா அறைக்குக் கொண்டு போக நான் திரும்பி வந்து பார்த்தபோது சட்டுனு கவனிச்சுட்டேன். அதை கீழே எடுத்துக்கிட்டுப் போய் கொட்டிட்டு சமையல்காரனை வேற புதுசா பண்ண சொல்லியிருக்கணுமோனு எனக்கு இப்ப தோணுது....! ஆனா அப்போ நானி வெளியேப் போயிருந்துச்சு... அதனால நான் மட்டும் கால்ல சக்கரத்தைக் கட்டிக்கிட்டு ஓடிட்டிருந்தேன்... இது மட்டுமில்லாம, உப்பு, கோகோ உள்ளே விழாம தட்டுல தான் தவறுதலா விழுந்திருக்கும்னு இருந்துட்டேன். இதனால் கையிலிருந்த துணியால அதைத் தட்டி விட்டுட்டு உள்ளே கொண்டு போனேன்.''

மறுபடியும் நான் தடுக்கவேயியலாத பரபரப்புக்குள்ளானேன். அவளையறியாமலேயே, எங்களிடம், மிக முக்கியமான ஒரு சாட்சியை சமர்ப்பித்து விட்டாள் இந்த ஆனி. அவள் ஊகித்த சமையல் உப்பு, உண்மையில் ஸ்டிரிச்நைன் - மனித இனம் அறிந்து வைத்துள்ள விஷங்களில் முதல் கொடிய விஷம் - என்று மட்டும் அறிந்து விட்டால், இப்படியா பேச்சு மூச்சோடு இவள் உட்கார்ந்

திருப்பாள்...?! இந்நிலையிலும் பொய்ரெட் கடைப்பிடித்த அப்பழுக்கற்ற அமைதியை நான் மனதாரப் பாராட்டினேன். அவனுடைய சுயக் கட்டுப்பாடு ஓர் அசாதாரணம். நான் அவனுடைய அடுத்த கேள்விக்காக பொறுமையின்றி காத்திருக்க, ஏமாற்றி விட்டான்! கேள்வி திசை மாறி விட்டது!

''நீங்க திருமதி எமிலியுடைய அறைக்குள் நுழைஞ்ச போது, செல்வி சிந்தியா அறைக்கு வழி பண்ணித் தரும் கதவு - தாழ்ப்பாள் போட்டு மூடியிருந்ததா?''

''ஓ... ஆமாம் ஸார். அது எப்பவுமே அப்படித்தான். அதை எப்பவுமே திறந்தது கிடையாது.''

''திரு. ஆல்ஃபிரட் அறைக்கு வழி பண்ணித் தரும் கதவு? அதுவும் தாளிடப்பட்டிருந்ததா என்று கவனிச்சீங்களா?''

ஆனி தயங்கினார்.

''சரியா சொல்ல முடியலே ஸார். அது மூடித்தான் இருந்தது. தாழ்ப்பாள் போடப்பட்டிருந்ததானு தெரியலே.''

''நீங்க கடைசியில அறையை விட்டு வெளியேறிய போது, உங்களுக்குப் பின்னாடி திருமதி எமிலி அவங்க அறைக் கதவைத் தாளிட்டாங்களா?''

''இல்லை ஸார். அப்போ பண்ணலே. ஆனா, அப்புறம் பண்ணியிருப்பாங்கன்னு நினைக்கறேன். வழக்கமா ராத்திரியில தாழ்ப்பாள் போட்டுடுவாங்க.''

''நேத்து அறையை சுத்தம் பண்ணும்போது, தரையில, உருகின மெழுகுவர்த்தியோட சொட்டுக்கள் இருந்ததைக் கவனிச்சீங்களா?''

''மெழுகுவர்த்தி சொட்டுக்கள்? கிடையாது ஸார். திருமதி எமிலியிடம் மெழுகு கிடையாது - படிக்கிறதுக்கு ஒரே ஒரு மேஜை விளக்கு தான்.''

''ஒருவேளை தரையில மெழுகுவர்த்தி சொட்டி தடிமனாக் கறை உண்டாகியிருந்தா, அதை நிச்சயமா நீங்க கவனிச்சிருப்பீங்கனு சொல்லலாமா?''

''பின்னே? ஆமாம் ஸார். அதைச் சுரண்டி எடுத்து சுத்தமும் செஞ்சிருப்பேன்.''

இப்போது நானியிடம் கேட்ட கேள்வியைத் திருப்பிக் கேட்டான் பொய்ரெட்:

''உங்க முதலாளியம்மா பச்சை நிறத்துல ஏதாவது உடை வெச்சிருந்தாங்களா?''

''இல்லை ஸார்.''

''மேலங்கி? துப்பட்டா? இல்லை குளிருக்கு அடக்கமான கம்பளிச் சட்டை?''

''பச்சையே அம்மா கிட்டே கிடையாது ஸார்.''

''வீட்டுல வேற யார்கிட்டேயாவது?''

ஆனி யோசித்துப் பார்த்தார். பிறகு ''கிடையாது ஸார்'' என்றாள்.

''நிச்சயம் தானே?''

''சர்வ நிச்சயம்.''

''இவ்வளவு தான் நான் தெரிஞ்சுக்க நினைச்சது. ரொம்ப நன்றி ஆனி.''

சிறு நரம்பதிர்வு ஆட்கொள்ள காலடிச் சத்தம் உயர்ந்துக் கேட்கும்படி நடந்து வெளியேறினாள் ஆனி. எனக்குள் வியாபித்துக் கிடந்த கட்டுக்கடங்கா பரபரப்பு வெடித்தது.

''பொய்ரெட்'' என அவசரமாய் அழைத்த நான், ''மனமார உன்னை வாழ்த்துகிறேன். இது மாபெரும் கண்டுபிடிப்பு'' என்றேன்.

''எது மாபெரும் கண்டுபிடிப்பு?''

''விஷம் கலக்கப்பட்ட அது - கோகோ... காபி அல்ல என்பது! இதனால் பல விஷயங்கள் புரியுதே. அதான் அதிகாலை வரை எவ்வித அசம்பாவிதமும் நடக்கலே... நடு ராத்திரிக்கு அப்புறமா எமிலி கோகோ குடிச்சிருப்பாங்க.''

''ஆக, கோகோ - அடிக்கோடு போட்டுக்கோ ஹேஸ்டிங்ஸ்... கோகோ - இதுலதான் ஸ்டிரிச்நைன் இருந்திருக்குனு நீ நினைக்கிறே?''

''பின்னே! தட்டிலிருந்த அந்தத் தூள்... அது வேற என்னவா இருந்திருக்க முடியும்?''

''அது உப்பாகவே இருந்திருக்கலாம்'' என்றான் பொய்ரெட் சாந்தமாய்.

நான் என் தோள்களைக் குலுக்கிக் கொண்டேன். மறுபடியும் குறிப்பிடுகிறேன்.... இப்படித் தான் என அவன் முடிவு செய்து விட்டால் அதனை எதிர்த்துப் போராடி வாதாடி பைசா பெயரப் போவதில்லை.

என்னைக் கண்களாலேயே அளந்த அவன், சிறு புன்னகையோடு ''என்னோட முடிவுல உனக்கு திருப்தியில்லை?'' என கேட்டான்.

Scanned by CamScanner

''டேய்... டேய்... டேய்...'' என்று சற்றே அதட்டலாய் அழைத்த நான், ''துப்பறியும் விஷயத்துல நான் உன்னை அதிகாரம் பண்ண முடியாது. உன் முடிவுகளை ஸ்திரப்படுத்த உனக்கு உரிமையிருக்கு'' என்று விட்டு உடனே அழுத்தமாய் ''அது போல எனக்கும்'' என்றேன்.

''ம்கும்...! மரியாதைக்குரிய அணுகுமுறை...? ம்...?'' என விமர்சித்த பொய்ரெட் உற்சாகமாய் எழுந்து நின்றான். ''இந்த அறையை முடிச்சாச்சு. ஆங்... அதோ மூலையிலேயிருக்கும் அந்த சிறு மேஜை யாருடையது?''

''ஆல்ஃபிரட்டுடையது.''

''ஆஹ்...!''

அதனை சிறிதாய் ஆராய்ந்தான்.

''பூட்டியிருக்கு. திருமதி எமிலியுடைய ஏதாவது ஒரு சாவி இதைத் திறக்கலாம்.''

பல முறை திருப்பியும் நெம்பியும் முயன்றான். ''அடச்சீ....'' என்று நிறைவாய் உணர்ந்தவன், ''இதுக்கு சாவியே வேண்டாம். ஓர் அழுத்து அழுத்தினா அதுலயே திறக்கும் மாடல் இது'' என்று விட்டு திறந்தான். உள்ளே செவ்வனே அடுக்கப்பட்டிருந்த தாள்களின் மீது கண்களை மேயவிட்டான். பிறகு மூடும் போது, ''எதையும் முறையாய், வழியாய் செய்யும் மனிதன் - இந்த ஆல்ஃபிரட் - நிச்சயமாய்'' என்றான்.

பொய்ரெட்டின் கணிப்பில் 'எதையும் முறையாய் செய்யும் மனிதன்' என்பது, அவன் ஒரு மனிதனுக்கு உவந்தளிக்கும் மாபெரும் பட்டமாகும்.

தொடர்ந்து, தொடர்புகள் அற்று, விஷயத்திற்குச் சம்பந்த மில்லாது அவன் பேசிக் கொண்டே போனதை வைத்து, அவன், அவனாக இல்லையோ என நான் உணர நேர்ந்தது:

''இவரோட மேஜையில் தபால் தலைகள் எதுவும் காணும்.... ஆனா இருந்திருக்கணும்... இருந்திருக்கலாம்! இருந்திருக்க முடியுமா? ஆமாம்....'' - அவனுடைய கண்கள் அறையைச் சுற்றிச் சுற்றி அலைந்தன. ''இந்த பிரத்யேக அறை மேற்கொண்டு நமக்குச் சொல்லப் போவது ஒண்ணுமில்லே. ரொம்ப முக்கியமா எதுவும் தந்துடவுமில்லே. இது மட்டும்தான்.''

Scanned by CamScanner

கசங்கிய ஓர் உறையைத் தன்னுடைய சட்டைப் பையிலிருந்து எடுத்தான். அதை என்னை நோக்கி உயர வீசி எறிந்தான். அது ஒரு விநோதமான ஆவணமாய் பட்டது. புரியாதபடி அவலட்சணமாய் சில வார்த்தைகள் குறுக்கே ஓடிய பழைய உறை. அதன் பிரதியை நேயர்களுக்குக் கீழே தருகிறேன்:


possesed
possessed
I am
He is possesed
possessed

Scanned by CamScanner

அத்தியாயம் ஐந்து

# ''அது ஸ்டிரிச்நைன் கிடையாது, இல்லையா?''

கிளர்ந்தெழும் நிஜமான உந்துதலில், ''இதை எங்கே கண்டுபிடிச்சே?'' என கேட்டேன் நான்.

''குப்பைக் கூடையில். கையெழுத்தை அடையாளம் காண முடியுதா?''

''முடியுது. இது திருமதி எமிலியுடையது. ஆனா... இதோட அர்த்தம்?''

பொய்ரெட் தோள்களைக் குலுக்கினான். ''என்னால் சொல்ல முடியலே. ஆனா... இது சில ஆலோசனைகளைத் தருது.''

சட்டென ஒரு மூர்க்கமான கருத்து என்னுள் ஒளிர்ந்தது. ஒரு வேளை... திருமதி எமிலியின் மூளை தாறுமாறாக பிறழ்ந் திருக்குமோ? தடுமாறிக் குலைந்து சீர்கெட்டுப் போயிருக்குமோ? பேய் பிடித்தது போல ஏதேனும் நடந்து அதன் படி ஆடியிருப்பாரோ? அப்படித்தான் என்றால், அவருடைய உயிரை அவரே தீர்த்துக் கொண்டிருக்கலாம் என்பதும்கூட சாத்தியம் தானே?

என்னுடைய இந்தக் கோட்பாடுகளைப் பொய்ரெட்டின் முன் நான் வைத்திருக்க வேண்டும்... ஆனால் அவனாய் முன்வந்து உதிர்த்த வார்த்தைகள் என்னைத் திசை மாற்றின:

''வா'' என சொன்னான்.... ''இந்தக் காபி கோப்பைகளை முதல்ல பரிசோதிப்போம்.''

Scanned by CamScanner

''அருமை நண்பா! இதனால இப்ப என்ன நன்மை விளைஞ்சிடப் போகுது? 'கோகோ தான்'னு ஒரு முடிவு வந்திருக்கும்போது, இப்ப ஏன் இது?''

''ஓஹோ...! அந்த கோகோ...!'' என்று, அற்பமான - பொறுப்பற்ற ஒரு தொனியில், சற்று உரக்கச் சொன்னான்.

எதிரிலிருப்பவரை வெறுப்பேற்ற வேண்டும் என்பதற்காகவே செய்வது போல, மரியாதை தெரியாத ஒரு கிராமத்தான் போன்று, கைகளிரண்டையும் 'உதவ யாருமே இல்லையா...' என கதறும் நாடகப் பாணியில் வானம் நோக்கி கிண்டலாய் நீட்டிக் காட்டி, எக்காளமிட்டு, கலகலவென சிரித்தான்.

''நீ என்ன செய்தாலும்...'' என்று விடுவதாய் இல்லாமல் தொடர்ந்த நான், கோபத்தை உள்ளே மறைத்துப் பேசும் ஒரு குரோதனாய், ''காபிக் கோப்பையை திருமதி எமிலி தன் கையோடு மாடிக்குக் கொண்டு போயிருக்காங்க.... அதனால, நீ அதுல வேற என்னத்தைத் தேடறேனு எனக்குப் புரியலே. அந்தக் காபி தட்டுலயிருந்தது ஸ்டிரிச்நைன் அப்படினு நமக்குத் தெரிய வரலாம்னு நீ நினைக்கிறியா?'' என்றேன்.

என்மேல் ஆத்திரப்படாமல், உணர்ச்சி வயமிழக்காத புத்தி நிதானத்தோடு, ''வா வா ஹேஸ்டிங்ஸ்... இப்ப எதுக்கு விறுவிறுனு ஆகறே'' என்று என் இடுப்பின் குறுக்கே கை கொடுத்து வாஞ்சையாய் இறுக்கியபடி, ''அதிராதே. என் காபி கோப்பைகளோட நான் ஈடுபட நீ என்னைக் கொஞ்சம் அனுமதிக்கக் கூடாதா...! உன் கோகோ புராணத்தை நான் மதிக்கிறேன். ஓகே! அதோ!'' என்றான்.

காபி கோப்பைகளைச் சுட்டிக் காட்டிய அவன் முழு ஹாஸ்யத்தில் இருந்ததால் என்னால் சிரிப்பைக் கட்டுப்படுத்தவே முடியாமல் போனது. நாங்கள் வரவேற்பறையில் வைத்து விட்டுப் போனது போல அசையாது அப்படியே இன்னுமிருந்த காபி கோப்பைகளையும் அந்தத் தட்டினையும் இருவரும் நெருங்கி யிருந்தோம்.

சம்பவ இரவன்று நடந்ததை என்னைத் திருப்பி ஞாபகப்படுத்திக் கொள்ளச் செய்தான் ஹெர்குல் பொய்ரெட்.

''ஆக - திருமதி மேரி ஜான் இந்தத் தட்டுக்கு பக்கத்துல நின்னுக்கிட்டு காபியை ஊத்தியிருக்கார். ஆமாம். பிறகு ஜன்னல் வரைக்கும் வந்து, அங்கே நீயும் செல்வி சிந்தியாவும் உட்கார்ந்

திருந்த இடத்தை நெருங்குறார். ஆமாமாம். இதோ.... அந்த மூணு தோப்பைகள். பாதி குடிச்ச நிலையில, அதோ, சிறு அலமாரிக் கிட்டே இருக்கும் கோப்பை, அது லாரன்ஸுடையதா தானிருக் கும். ஓகே. ஆனா தட்டுல இருக்கும் அந்த ஒரு கோப்பை?''

''ஜானுடையது. அவர் இங்கே வைக்கிறதை நான் பார்த்தேன்.''

''குட். ஒண்ணு, ரெண்டு, மூணு, நாலு, அஞ்சு --- ஆனா திரு. ஆல்ஃபிரட் பயன்படுத்திய கோப்பை?''

''அவர் காபி குடிப்பதில்லை.''

''அப்படினா எல்லாத்துக்கும் கணக்கு இருக்கு. ஒரு நொடி... நண்பா.''

மிகுந்த சிரத்தையோடு, ஒவ்வொரு கோப்பை அடியிலும் தங்கியிருந்த படிவத்திலிருந்து ஓரிரு சொட்டுக்களை எடுத்த பொய்ரெட், அவற்றை தனித்தனி சோதனைக் குழாய்களில் இட்டு மூடினான். அப்படிச் செய்யும்போது அவற்றைக் கொஞ்சமாய் சுவைத்தும் கொண்டான். அவனுடைய முக பாவம் அப்போ தெல்லாம் வினோத உணர்ச்சி கொண்டது. அவ்வாறு நான் கவனித்த அவனுடைய முக பாவங்களில் - பாதி புதிராகவும் பாதி கவலை அகன்றதாகவும் இருந்தன என்றுதான் நான் விவரிக்க வேண்டும்.

''ம்...!'' - என்று இறுதியாய் பெருமூச்சு விட்டான். சொன்னான்: ''இப்போ எல்லாம் வெளிப்படையா தெரியுது! எனக்கு ஓர் எண்ணம் இருந்தது - ஆனா அது முழுக்க முழுக்க தவறு. ஆமாம்... மொத்தமா நான் தப்பா இருந்திருக்கேன். இது அதிசயம்.... விசித்திரம்! பரவாயில்லை... போகட்டும்!''

அவனுடைய வழக்கமான அலட்சிய தோள் குலுக்கலை வெளியிட்டு, அவனுடைய மண்டையைத் துளைத்தெடுத்து கவலையளித்துக் கொண்டிருந்த அந்த எதையோ, அவன், தனது சிந்தனையிலிருந்து தூக்கி எறிந்தான். இந்தக் காபியின்மீது ஆவேசப் பிடிவாதமாய் அவன் இயங்கியது நிச்சயமாய் ஒரு குருட்டு மூலையில் தான் போய் முட்டிக் கொண்டு நிற்கப் போகின்றது என்பதை ஆரம்பத்திலேயே நான் அவனுக்கு சொல்லியிருப்பேன்... ஆனால் நாவடக்கம் காத்தேன். இப்போது போல எப்படியும் ஒரு நாள் தெரிந்து தானே ஆக வேண்டும்...!

Scanned by CamScanner

அறையிலிருந்து உள்ளே வந்துக் கொண்டிருந்த ஜான், ''காலை டிபன் தயார்'' என அறிவித்தார். ''நீங்களும் எங்களோட சாப்பிடலாமில்லையா, திருமிகு பொய்ரெட்?''

பொய்ரெட் பரிபூரணமாய் ஏற்றுக் கொண்டான்.

நான் ஜானைக் கவனித்தேன். ஜானுக்குத் தலைக்கு மேல் வேலையிருந்தது... தந்தி அனுப்புவது - முதல் தந்தி எவிலின் ஹோவோர்டுக்குப் போனது... செய்தித் தாள்களுக்கு துக்க சேதியை எழுதித் தருவது... இப்படியாக, வீட்டின் மூத்தவனிடமிருந்து ஒரு மரணம் கறக்கும் அத்தனை வருத்தந்தோய்ந்த கடமைகளிலும் கரைந்துப் போயிருந்தார் அவர்.

''விஷயம் எப்படி போயிட்டிருக்குனு சொல்ல முடியுமா?'' என கேட்டார். ''உங்க துப்பறியும் வேலையெல்லாம், என் அம்மாவின் மரணம் ஓர் இயற்கையான மரணம்னு சுட்டிக் காட்டுதா... இல்லே, எங்களை நாங்களே மோசமான விசாரணை களுக்குத் தயார்படுத்திக்கணுமா?''

''எனக்கு என்ன தோணுதுனா, திரு ஜான்...'' என்று ஆபத்தை உள்ளடக்கிய கடுமையான குரலில் ஆரம்பித்த பொய்ரெட், ''தப்புத் தப்பான கற்பனைகளில் உங்களைப் போட்டு நீங்களே பிசைஞ்சுக்காம இருந்தீங்கன்னா நல்லது'' என்றான். பிறகு ''உங்க மற்ற குடும்பத்தாருடைய அபிப்ராயங்கள்லாம் எப்படிப் போகுதுனு சொல்ல முடியுமா?'' என கேட்டான்.

''ஒண்ணுமில்லாத பாத்திரத்துக்குள்ளே புதையலைத் தேடிக்கிட்டு இருக்கோம்'னு ஸ்திரமா இருக்கான் என் தம்பி லாரன்ஸ். மாரடைப்பால மரணம் சம்பவிச்சது என்பதற்கு ஆதாரமா எல்லாமே சாட்சியா நிக்குது என்பது அவனுடைய பக்கம்.''

''அப்படியா... அப்படியா சொல்றாரு? இது என் ஈடுபாட்டை அதிகரிக்குது ஜான்.... ரொம்ப அக்கறையை எனக்குள்ளே உண்டாக்குது'' என மிருதுவாய் முணுமுணுத்தான் அவன். ''அவங்க...? திருமதி மேரி ஜான்?''

சிறு மேகமூட்டம் போன்ற உணர்வு ஜானின் முகத்தில் திரையிட்டது.

''இந்த விஷயத்துல அவளோட கருத்து என்னென்ன என்பது பற்றி எனக்கு சிறு துளி கூட தெரியாது.''

Scanned by CamScanner

இப்பதில், உரையாடலில் சில கண நேர இறுக்கத்தை உண்டு, பண்ணித் தந்தது. அசிங்கமாய் நிறைந்த அமைதியை சிறு பிரயத்தனப்பட்டு ஜானே உடைத்தார் : ''திரு. ஆல்ஃபிரட் திரும்பிட்டார்னு நான் சொன்னேன் இல்லே...? சொல்லலே...?''

பொய்ரெட் ஒப்புதலாய் தலையை வளைத்தான்.

''இது, நிம்மதியற்ற இந்த நிலைமையில கூட சேர்ந்துக்கிட்ட ஒரு தர்ம சங்கடமா இருக்கு... எல்லாருக்கும். எப்பவும் போல சாதாரணமா தான் அவரை நடத்தணும்... ஆனா, தூ... முடியலியே...! கொலைகாரனா இருக்குமோனு நாம சந்தேகப்படும் ஒருத்தனோட சரிசமமா உட்கார்ந்துக்கிட்டு சாப்பிடும்போது... ஊஃப்... உள்ளேயிருக்கிற வன்மம் தலையை விரிச்சுக்கிட்டு எழும்புதே...!''

பொய்ரெட் இதனைக் கருணையாய் ஏற்றுக் கொண்டான். ''எனக்கு நல்லா புரியது. உங்களுக்கு இது மிக கஷ்டமான நிலைமை தான், திரு. ஜான். இப்போ உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்பறேன். நேற்று இரவு திரு. ஆல்ஃபிரட் வீட்டுக்குத் திரும்பாததற்கு சொல்லப்படும் காரணம் - அந்த இன்னொரு சாவியை அவர் கூட எடுத்துக் கொண்டு போகவில்லை - இது தான்னு கேள்விப்படறேன்...! அப்படி தானா?''

''ஆமாம்.''

''அந்த மாற்றுச் சாவியை அவர் *மறந்துட்டுப்* போயிட்டார் - அதை அவர் கூட எடுத்துக்கிட்டுப் போகலே - என்பதுல நீங்க முழு நிச்சயமா இருக்கீங்கனு நினைக்கிறேன்...?''

''எனக்குக் கருத்து சொல்ல முடியலே ஸார். மாற்று சாவி இருக்கானு பார்க்கணும்னு எல்லாம் நான் நெனக்கலே. வரவேற் பறையில இருக்கிற அதற்கான இடத்துல வெச்சிருப்போம். வேணும்னா இப்பப் போய் பார்த்துட்டு வரேன்.''

களையிழந்த சிரிப்பை உதிர்த்தபடி எழுந்த அவரது கையைப் பிடித்து அமர்த்தினான் பொய்ரெட்.

''வேண்டாம், வேண்டாம், திரு. ஜான். இது ரொம்ப காலந்தாழ்த்திய செயல். அங்கே அதை நீங்க இப்போ பார்க்கலாம் என்பதுல எனக்கு சந்தேகமே கிடையாது. ஒருவேளை திரு. ஆல்ஃபிரட் அதைக் கையோடு கொண்டே போயிருந்தாலும்... அதை

Scanned by CamScanner

திருப்பிக் கொண்டு வந்து வைக்க அவருக்கு ஏகமா அவகாசம் இருந்திருக்கு.''

''அப்படினா --- நீங்க --- நினைக்கிறது ---''

''நான் ஒண்ணும் நினைக்கலே! அவர் இன்னிக்குக் காலையில திரும்பறதுக்கு முன்னாடியே மாற்றுச் சாவியைத் தேட யாராவது ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு, தேடி, சாவியையும் அங்கே பார்த்திருந்தாங்கன்னா, அது, அவருடைய பக்கத்துக்கு மிக சாதகமான சாட்சியமா அமைந்திருக்கும். அவ்வளவுதான்.''

ஜான் - கலங்கிக் குழம்பினார்.

இதைக் கவனித்த பொய்ரெட், ''கவலைப் படாதீங்க ஜான்'' என்றான் மிருதுவாய். ''இந்த விஷயம் உங்களைக் குழப்பற அளவுக்கு நீங்க விட்டுடக் கூடாது. அன்பா கூப்பிட்டீங்க.... வாங்க... போய் டிபன் சாப்பிடுவோம்.''

சாப்பாட்டு மேஜையில் எல்லோரும் கூடியிருந்தனர். நிகழ்ந்துள்ள அசம்பாவித சூழ்நிலையால், கூடியிருந்த எங்களில் யாருமே கலகலவென்று இல்லை. ஓர் அதிர்ச்சி ஏற்படுத்தும் பிரம்மாண்ட அதிர்வலை ஓய நாளாகும்... என்னைப் பொறுத்தமட்டில், அனைவருமே அப்படிப்பட்ட அதிர்வில் சிக்கிப் போயிருந்ததாய் தோன்றியது. ஆனால், நான் சொல்வது போல, இது வெறும் தோற்றமே என்பதிலும் நான் ஸ்திரமாயிருந்தேன். அழுதழுது சிவந்தக் கண்களைக் காணோம்... உள்ளுக்குள்ளேயே போட்டுக் கொண்டு கதறும் முகங்களும் காணோம்...! நானி ஒருத்தி தான் திருமதி எமிலியின் மரணத்தால் நெஞ்சாழம் வரை அடி வாங்கியவர் என்று நான் உணர்ந்ததில், தவறிருக்காது என்பது என் கருத்து...!

ஆல்ஃபிரட்டைக் கவனித்தேன். 'மனைவியை இழந்துக் கதறுபவன்' எனும் கபட நாடகத்தை, படு பொருத்தமான மாறுவேடத்தில் அவர் நிகழ்த்திக் கொண்டிருப்பதாய் பட்டது. அவரை நாங்கள் சந்தேகிக்கிறோம் என்பது அவருக்குத் தெரியுமா... சந்தேகமே! எங்களால் முடிந்த வரை அதை நாங்கள் மூடி மறைத்தாலும், நிச்சயமாய் அவருக்குத் தெரியாமல் போயிருக்காது. அவர் அகத்தில் ரகசியமாய் சுழலும் பயம் ஏதாவது முகத்தில் தென்படுகின்றதா? அல்லது அவர் செய்த பாதகம் வெளியே தெரிய வராது.... தண்டனை கிடைக்காது... என சர்வ நிச்சயமாய்

Scanned by CamScanner

இருக்கிறாரா? வீட்டின் சூழலுக்குள் பின்னிப் போயுள்ள அவர் மீதான சந்தேகக் காற்று, அவர் சந்தேகப் பட்டியலில் பிரதானமாய் குறிக்கப்பட்டிருக்கும் முதல் ஆள் என்று அவரை நிச்சயமாய் எச்சரிக்கை செய்திருக்கத் தான் வேண்டும்...!

இதே போல எல்லோரும் அவரை சந்தேகிக்கிறார்களா? மேரி ஜான்? அவரைக் கவனித்தேன். வீட்டின் தலைவி நாற்காலியில், புரிந்துக் கொள்ள முடியாத மனிதனாய், தனக்குள் தானே அடங்கி, அவரது வசீகரம் குலையாது இருந்தார். சாம்பல் நிற மிருதுவான உடையில், தோள், மணிக்கட்டு வழியாய் வழிந்து கைகளில் அலை பாய்ந்த மெலிசான துப்பட்டாவோடு, அழகு தவழ அமர்ந்திருந்தார். ஆயினும், அவராய் நினைத்து விட்டால், ராட்சஸத்தனம் வெளியே துளியும் தென்பட்டு விடாத முக பாவத்தோடு இருக்க, அவரால் முடியும்.... இது எனக்குத் தெரியும். மிக அமைதியாய், உதடுகளைத் திறக்கவே திறக்காமல், பிடித்த கல்லாய் அவர் இருந்தாலும், ஆளுமையான அவரது குணாதிசயத்தின் பலம், விளக்க முடியாத ஒரு மாய மந்திரமாய் எங்களனைவரையும் கட்டிப் போட்டு வைத்ததாய் தான் எனக்குப் புரிந்தது!

சின்னவள் சிந்தியா? அவள் எப்படி? அவள் இவரை சந்தேகிக்கிறாளா? மிக தளர்ந்தும் அசூயையாகவும் உடல் நலம் தொய்ந்தவராகவும் அவர் தோன்றினார். உடலிலும் உள்ளத்திலும் அவருக்கு ஏறியிருந்த துயரத்தின் கனம், மறைக்க முடியாததாய் தோன்றியது. உடம்பு சரியில்லையா என நான் கேட்டதற்கு, ''தலையை ரெண்டா உடைச்சுப் போடும் தலைவலியில நான் துடிச்சுக்கிட்டு இருக்கேன்'' என வெளிப்படையாய் பதில் தந்தாள் அவள்.

இதைக் கேட்ட பொய்ரெட், மரியாதை கலந்து, ''இன்னொரு கோப்பை காபி குடியுங்க, செல்வி சிந்தியா'' என்றான். ''புத்துணர்வு வரும். தலைவலிக்கு சூடான காபிக்கு இணை கிடையாது'' - கை நீட்டி அவளுக்கு ஒரு கோப்பையை எடுத்தான் அவன்.

''ம்ம்... சர்க்கரை வேண்டாம்'' என்றாள் சிந்தியா. அவன் சர்க்கரை பாத்திரத்துக்குக் கையை கொண்டு போவதைப் பார்த்து.

''சர்க்கரை வேண்டாம்?'' - ஆச்சரியமாய் கேட்டான் பொய்ரெட்.

Scanned by CamScanner

''வேண்டாம். நான் எப்பவுமே காபியோட சர்க்கரை எடுத்துக் கிறது கிடையாது.''

''தெய்வமே'' - என அவனுக்குள் முணுமுணுத்துக் கொண்டதை நான் மட்டும் கவனித்தேன். இது ஒரு வித்தியாச குறிப்பு. விறுவிறுவென்று அவனை ஆர்வம் மேலோங்க நோட்டம் விட்டேன். உள்ளுக்குள் அமுக்கப்பட்ட ஒரு கிளர்ச்சியில், ஒரு உத்வேகத்தில் அவன் விழுந்து விட்டதை, அவனுடைய முகம் காட்டிக் கொடுத்தே விட்டது. இரையை நெருங்கும் ஒரு பூனையின் விழி ஓட்டத்தில் - அவனுடைய நீலக் கண்கள். அவனை சட்டென்று உலுக்கியுள்ள எதையோ, இதோ.... இங்கே அவன் பார்த்து விட்டிருக்கிறான்... அல்லது கேட்டு விட்டிருக்கிறான்... எது அது? நான் என்னை முழு முட்டாள் என சொல்லிக் கொள்ள விரும்ப வில்லை... ஆனால் இப்பொழுது...?! சாதாரண நிலையிலிருந்து விலகி அசாதாரணமாய் *என்* கவனத்தை எதுவுமே இங்கு களவாடவில்லையே...! ஓ, காட்...!

அடுத்த கணம் கதவைத் திறந்துக் கொண்டு நானி உள்ளே வந்தாள்.

''திரு. வேல்ஸ் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார் ஸார்'' என்றாள் ஜானிடம்.

இந்தப் பெயர், திருமதி எமிலி, சம்பவத்துக்கு முந்தைய இரவு கடிதம் எழுதிய வக்கீலின் பெயர் என்பது நினைவிலிருந்தது.

ஜான் உடனடியாக எழுந்துக் கொண்டார்.

''என் அறையை அவருக்குக் காட்டு'' என்றவர் எங்கள் பக்கமாய் திரும்பி, ''என் அம்மாவின் வக்கீல்'' என்றார். பிறகு தணிந்த குரலில், ''இவர், எதிர்பாராது துர்மரணம் அடைகிறவர்கள் மீது விசாரணை நடத்தும் அதிகாரியும் கூட'' என்றார். ''நீங்க ரெண்டு பேரும் என்னோட வரணுமா?''

நாங்கள் ஒப்புக் கொண்டு அவரோடு சேர்ந்து இவ்வறையை விட்டு வெளியேறினோம். ஜான் நாலடி முன்னால் போக, அந்த அவகாசத்தை, பொய்ரெட்டோடு முணுமுணுப்பாய் பேச உபயோகப்படுத்தினேன்.

''அப்படினா மரணம் குறித்து விசாரணை இருக்குமா?''

பொய்ரெட் ஏதோ நினைப்பிலிருந்துக் கொண்டே, ஆம் என தலையசைத்தான். சிந்தனைகளுக்குள் இழுக்கப்பட்டவனைப்

Scanned by CamScanner

போலிருந்தான் அவன். இது தெரிந்ததும், என்னுடைய ஆர்வமும் இன்னும் மளமளவென கூடியது.

''என்ன நெனப்பு? நான் பேசுவதுல நீ கவனம் வைக்கலே.''

''ஆமாம், நண்பா. மனசு கவலையாயிருக்கு.''

''ஏன்?''

''ஏன்னா, செல்வி சிந்தியா அவளுடைய காபியோட சர்க்கரை எடுத்துக்கலே.''

''என்ன? விளையாடாம இருக்க மாட்டே?''

''நான் முழுக்க முழுக்க மனப்பூர்வமா - அலட்சியம் செய்யாமத்தான் பேசிக்கிட்டிருக்கேன் ஹேஸ்டிங்ஸ். விளை யாடலே. ஆஹ்... இதுல எனக்கு இன்னும் புரியாத ஏதோ ஒண்ணு இருக்கு. என் உள்மனம் சொல்லுது. அது எப்பவும் சரியாத் தான் சொல்லும்.''

''என்ன உள்மனம்? படுத்தறே.''

''உள் உத்தரவு - அந்தக் காபி கோப்பைகளைப் பரிசோதனை செய்... செய்'னு என்னை உந்தித் தள்ளிய உள் உத்தரவு. ஷூ. இப்போ மேல ஒண்ணும் வேணாம்.''

நாங்கள் ஜானுக்குப் பின்னால் அவருடைய அறைக்குள் நுழைந்ததும் கதவினை மூடிவிட்டார் அவர்.

கூர்மையான கண்களுடனும் ரம்மியமாயும் தோன்றினார் வக்கீல். எங்களிருவரையும் இங்கு நாங்கள் இருப்பதற்கான காரணத்தையும் விளக்கினார் ஜான். ''இங்கு நடந்துக்கிட்டிருக்கும் எல்லாமுமே மிகவும் அந்தரங்கமானவை என்பதை நீங்க புரிஞ்சுக்குவீங்கனு நினைக்கறேன், திரு. வேல்ஸ்'' என்று கூடுதலாய் சொன்னார் ஜான். ''எந்த விதமான துப்பறிதலும் விசாரணையும் தேவையில்லை என்கிற அளவுக்கு ஒரு திருப்பம் வந்து, எல்லாம் நலமா முடியும்னு, இன்னும் நாங்க எதிர்பார்க்கிறோம்.''

''அப்படியே நடக்கட்டும்'' என்று தடவிக் கொடுக்கும் பாணியில் சொன்னார் வேல்ஸ். ''உங்க வலியையும், விசாரணை மூலமா தேவையற்று உங்க குடும்பத்துக்கு ஏற்படவல்ல அவப்பெயரையும், நிச்சயமா நாங்க தடுக்கணும்னு தான் நெனக்கிறோம். ஆனா... மருத்துவச் சான்றிதழ் இல்லாத பட்சத்துல இதுகளைத் தவிர்க்கவே முடியாது.''

''ம். எனக்கும் புரியுது.''

Scanned by CamScanner

''திரு. பௌரீஸ் ஒரு மேதாவி. விஷங்கள் பற்றிய துறையில் மாபெரும் வித்தகர்னு கேள்விப்பட்டிருக்கேன்.''

''ஆமாமாம்'' என்றார் ஜான் சற்றே இறுக்கமாய். பிறகு தயங்கித் தயங்கி, ''நாங்க எல்லாம் விசாரணைக்கு வந்து நிக்கணுமா - குடும்பத்தார் எல்லாரும்?'' என கேட்டார்.

''நீங்க, தவிர்க்க முடியாதவர். அப்புறம்... திரு. ஆல்...ஃபி..ரட்.''

வக்கீலின் உரையாடலில் இப்போது சிறு நிறுத்தம் உருவானது. ஆனாலும் அவருடைய மிருதுவான பாணியில் தொடர்ந்தார் : ''மற்ற எந்த சாட்சியம் அழைக்கப்பட்டாலும் அதெல்லாம் சிறு சிறு கேள்விகளுக்காகத் தானிருக்கும்.''

''ஓஹோ.''

மறைமுகமான விடுதலை பாவம் ஜானின் முகத்தைத் தடவிப் போயிற்று. இதற்கு எக்காரணமும் இங்கு தென்படாததால் இது எனக்குப் புதிராய் பட்டது.

''அது பற்றி நீங்க இன்னும் ஒண்ணும் நினைச்சிருக்க மாட்டீங்கனு தெரியுது. வெள்ளிக் கிழமை வெச்சுக்கலாம்னு பார்த்தேன். மருத்துவர்களுடைய அறிக்கை வர்ரதுக்கு இது நல்ல அவகாசம் ஏற்படுத்தித் தரும். பிரேதப் பரிசோதனை இன்னிக்கு ராத்திரி தானே?''

''ஆமாம்.''

''எனில் இந்த ஏற்பாடு உங்களுக்கு வசதியா?''

''படு சுத்தமா.''

''தகவல் எனக்குக் கிடைச்சதும் நான் எந்த அளவுக்கு உடைந்துப் போனேன்னு சொல்ல முடியலே, திரு. ஜான்.''

''இதை முடிக்க உங்களால எந்த உதவிக்கரமும் நீட்ட முடியாதா... திருமிகு வேல்ஸ்'' - இடைமறித்தான் பொய்ரெட், நாங்கள் உள்ளே வந்ததிலிருந்து முதல் முறையாய்!

''நான்?''

''ஆமாம். நேற்றிரவு உங்களுக்கு திருமதி எமிலி கடுதாசி எழுதினதா தெரிய வந்திருக்கு. அந்தக் கடிதத்தை இன்னிக்குக் காலையிலேயே நீங்க கிடைக்கப் பெற்றிருக்கணும்.''

''ம். கிடைச்சுது. ஆனா அதுல எந்தத் தகவலும் இல்லை. ஏதோ வெகு முக்கியமான ஒரு சமாச்சாரத்துல என்னுடைய அறிவுரை வேணும்கிறதால, அவங்களை இன்னிக்குக் காலையில நான் வந்து பார்க்கணும்னு குறிப்பு இருந்த ஒரு சீட்டு.''

Scanned by CamScanner

''அது என்ன சமாச்சாரமாயிருக்கும் என்பது பற்றி ஒரு சிறு துப்பு கூட அதுல அவங்க உங்களுக்குத் தரலியா?''

''துரதிரஷ்டவசமா - இல்லை.''

''பரிதாபம்.''

அங்கு அமைதி. தன் சிந்தனைக்குள் இழந்து சில நிமிடங்கள் கிடந்தான் பொய்ரெட். பிறகு மீண்டும் வக்கீல் பக்கமாய் திரும்பினான்.

''திரு. வேல்ஸ்... ஒரு சிறு சமாச்சாரத்தை உங்க கிட்டே கேட்கப் பிரியப்படறேன். சட்டரீதியானது. நான் அதிகம் அறியாதது. இந்த இக்கட்டுல நீங்க வெளியில சொல்லலாமானும் தெரியலே. இருந்தாலும் கேட்கறேன். திருமதி எமிலி மரணிக்க நேர்ந்தால், யார் அவங்களுடைய பணமனைத்தையும் நேரடியா அடைவாங்க?''

வக்கீல் சற்று தயங்கிப் பின் பதிலளித்தார் : ''இது இன்னும் துரித காலத்துல ஊருக்கே தெரியப் போகுது. திரு. ஜான் எந்த ஆட்சேபணையும் காட்டலேனா ...''

''எந்த ஆட்சேபணையும் கிடையாது'' என முடித்தார் ஜான்.

''அப்படினா, உங்க கேள்விக்கு பதில் தராம மழுப்ப இப்போ ஒரு தடையும் கிடையாது. சொல்றேன். அவங்களுடைய கடைசி உயில் பிரகாரம் - கடந்த ஆகஸ்ட் மாதம் எழுதப்பட்டது - அவங்களுடைய வேலைக்காரங்க பல பேருக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட சிறு சிறு தொகைகளுக்கு பிறகு, அவங்களுடைய அத்தனை சொத்துக்களையும், வளர்ப்பு மகனான ஜானுக்கு விட்டு வெச்சிருக்காங்க.''

''இந்த உயில் - இப்ப நான் கேட்கப் போறதைத் தப்பா நினைச்சுடாதீங்க திரு. ஜான் - அவங்களுடைய இன்னொரு வளர்ப்பு மகனான லாரன்ஸுக்கு இழைக்கப்பட்ட ஓர் அநீதியா தெரியலையா?''

''இல்லை. நான் அப்படி நினைக்கலே. இவங்க அப்பா எழுதியுள்ள உயில் தரும் ஆணைகளின்படி, ஜான், பிதுர்-ராஜ்ய சொத்துக்கள் அனைத்தையும் அடைஞ்சிருக்கார்.... இப்போ அவங்களுடைய தாயார் மரணத்தால, பணமாய் உள்ள சொத்தின் பெரும்பகுதி லாரன்ஸ் கைகளுக்குத் தானாக வந்துடுது. இதுதான் ஒப்பந்தம்... இதைப் புரிஞ்சுக்கணும். இருந்தாலும், ஜான் தான் ஸ்டைல்ஸ் முழுவதையும் நிர்வகிக்கணும் என்பதால் திருமதி எமிலி

Scanned by CamScanner

சொத்து முழுவதையும் ஜானுக்கே விட்டிருக்கார். என் வக்கீல் மூளையைப் பொறுத்த வரை, இது ஒரு தராசுத்தனமான சரியான பங்கீடு தான்.''

''அப்படியா'' என்று பொய்ரெட் சிந்தனையோடு ஏற்றுக் கொண்டு விட்டு கேட்டான்: ''ஆனா, உங்களுடைய ஆங்கிலேய சட்டப்படி, எமிலி மறு கலியாணம் பண்ணிக் கொண்ட நொடியில, பசங்களோட அப்பா எழுதின பழைய உயில் ரத்தாகி விடுகிறது - எனும் என்னுடைய ஞானம், சரிதானா?''

வேல்ஸ் அவரது தலையை வளைத்து குனிந்து மரியாதை செலுத்துபவராய் பாவித்து விட்டு, ''நானே இப்ப சொல்ல ஆரம்பிச்சது போல, திருமிகு பொய்ரெட், அந்த உயில், இப்பொழுது உயிரற்றதே'' என்றார்.

''ஆங்...'' என்று தன் பக்கத்து நியாயத்தை அழுத்திக் காட்டிய பொய்ரெட், ''திருமதி எமிலிக்கும் இந்த உண்மை தெரிஞ் சிருந்ததா?'' என கேட்டான்.

''எனக்குத் தெரியாது. ஒருவேளை தெரிஞ்சிருக்கலாம்.''

''அவங்களுக்குத் தெரியும்'' என்று எதிர்பாராத கணத்தில் சொன்னார் ஜான். ''மறு கலியாணத்தால் அப்பாவின் உயில் ரத்தாகி விட்ட சமாச்சாரத்தை நாங்க நேத்துதான் பேசிக்கிட்டிருந்தோம்.''

''ஆஹ..! இன்னொரு கேள்வி திரு. வேல்ஸ். 'அவங்களுடைய கடைசி உயில் பிரகாரம்'னு சொன்னீங்க. அப்படினா, திருமதி எமிலி, இதுக்கு முன்னாடி நிறைய உயில் எழுதியிருக்காங்களா?''

துளியும் கலவரமடையாமல், ''சராசரியா, ஒரு வருஷத்துக்கு ஓர் உயில் எழுதுவாங்க'' என்றார் வேல்ஸ். ''உயில் மூலம் ஒருவருக்குத் தரப்படும் சொத்து பற்றிய விஷயத்துல அவங்க மனசை மாத்திக்கிட்டே இருப்பாங்க. இப்போ சொத்தெல்லாம் ஒருத்தருக்கு வர்ர மாதிரி எழுதுவாங்க... அதையே அப்புறமா வேற ஒரு குடும்ப அங்கத்தினருக்குப் போற மாதிரி எழுதுவாங்க.''

''ஒரு வேளை....'' என்று ஏதோ ஆலோசிக்கப் போவது போல தொடங்கிய பொய்ரெட், ''உங்களுக்கே கூட தெரியாம, குடும்ப அங்கத்தினர் எனும் வார்த்தைக்குத் துளியும் பொருந்தாத ஒரு புதிய நபருக்கு - உதாரணத்துக்கு 'எவிலின் ஹோவோர்ட்'னு சொல்வோமே - அத்தனை சொத்தும் போய் சேருவதாக அவர் புத்தும்புது உயில் எழுதியிருக்கார்னு வெச்சுக்குங்க... நீங்க ஆச்சரியப்படுவீங்களா?''

Scanned by CamScanner

''துளிகூட கிடையாது.''

''ஆஹ்...'' என்று தன் கேள்விகள் தீர்ந்தன என்பதை உணர்த்தினான் பொய்ரெட்.

ஜானும் வக்கீலும், திருமதி எமிலியின் சட்டரீதியான தாள்களைக் கையாள்வது பற்றி விவாதிக்கத் தொடங்கிய போது, நான் பொய்ரெட்டுக்கருகில் வருமாறு இன்னும் நெருங்கி அமர்ந்துக் கொண்டேன்.

''எவிலினுக்கு அனைத்தும் போய்ச் சேரும்படி ஓர் உயிலை அந்த எமிலி எழுதியிருப்பார்னு நினைக்கிறியா?''

பொய்ரெட் சிரித்தான். ''இல்லை.''

''அப்போ ஏன் அப்படி கேட்டே?''

''உஷ்.''

ஜான், பொய்ரெட் பக்கமாய் திரும்பியிருந்தான்.

''எங்களோட கொஞ்சம் வர முடியுமா, திருமிகு பொய்ரெட்? நாங்க என் அம்மாவோட சட்ட ஆவணங்களைப் பார்க்கப் போறோம். இந்த சமாச்சாரம் எல்லாத்தையும் என்னையும் திரு. வேல்ஸையும் பார்த்துக்கும்படி ஆல்ஃபிரட் விட்டுட்டாரு.''

''இதுவும் ஒரு விதத்துல நல்லது தான்'' என முணுமுணுத்தார் வேல்ஸ். ''சட்ட ரீதியா பார்க்கப்போனா, அவரே கூட ---''

அவர் வாக்கியத்தை முடிக்கவில்லை... ''முதல்ல அம்மாவோட பிரத்யேக அறையிலிருக்கும் மேஜையை பார்த்துடுவோம்'' என்றார் ஜான். ''பிறகு அவங்களுடைய படுக்கையறை வரை போவோம். மிக முக்கியமா அவங்க நினைச்சதையெல்லாம் அவங்களுடைய ஊதா நிற கைப்பெட்டியில் தான் வெப்பாங்க... அதை கவனமா பார்க்கணும்.''

இதற்கு ''ஆமாம்'' என்று ஆமோதித்த வக்கீல், ''என்கிட்டே இருக்கிற உயிலுக்கு அப்புறமா எழுதப்பட்ட புது உயில் இருப்பதற்கான சாத்தியக்கூறுகளும் இருக்கு'' என்றார்.

''பிறகு எழுதப்பட்ட உயில் ஒண்ணு *இருக்கு*'' - பேசியது பொய்ரெட்.

''என்ன..?'' - ஜானும் வக்கீலும் துணுக்குற்று அவனைப் பார்த்தனர்.

''இல்லேனா...'' என்று விடாமல் தொடர்ந்துக் கொண்டிருந்த என் நண்பன், சற்று திருத்தம் செய்து, அழுத்தமாய் சொன்னான்: ''ஒரு புது உயில் *இருந்திருக்கு.*''



Scanned by CamScanner

''இருந்திருக்கு'னு சொல்றதுல என்ன குறிப்பிட வரீங்க? அது இப்போ எங்கே?''

''எரிக்கப்பட்டு விட்டது.''

''எரிக்கப்பட்டு விட்டது?''

''ஆமாம். இதோ பாருங்க.''

திருமதி எமிலி அறையின் கனப்பிலிருந்து நாங்கள் கண்டெடுத்த பாதி எரிந்திருந்த அந்த சிறு துண்டினை வெளியிலெடுத்து, எங்கு எப்போது அதனைக் கண்டெடுத்தோம் என்கிற அறிமுகத்தோடு, அதனை வக்கீலிடம் ஒப்படைத்தான் அவன்.

''இது ஒரு பழைய உயிலாய் கூட இருக்கலாமே?''

''எனக்கு அப்படி தோணவேயில்லை. இது, நேத்து மத்தியானத்துக்கு முன்னால எழுதப்பட்டிருக்காது என்பதில் நான் தொண்ணூறு சதம் நிச்சயமா இருக்கேன்.''

''என்ன?'' என்பதும் ''அசாத்தியம்'' என்பதும் இரு ஆடவர்களிடமிருந்தும் வெடித்தன.

பொய்ரெட், ஜான் நோக்கித் திரும்பினான்.

''உங்க தோட்டக்காரனைக் கூப்பிட எனக்கு அனுமதி தந்தீங்கன்னா... நான் நிரூபிக்கிறேன்.''

''ஓ... நிச்சயமா. ஆனா--- இதுல--- எனக்கு--- ஒண்ணும்---''

பொய்ரெட் கைகளை உயர்த்தி நிறுத்தினான். ''நான் சொல்றபடி செய்ங்க. அப்புறமா எத்தனை கேள்வி வேணுமோ அத்தனையும் கேளுங்க. தயவுசெய்து.''

''நல்லது'' - மணியை ஒலித்தார் ஜான்.

நானி வந்து நின்றாள்.

''தோட்டக்காரன் மேனிங்.. வந்திருக்கிறானா?''

''இருக்கான் ஸார்.''

''நல்லது. மேனிங்' கை நான் கூப்பிட்டேன்னு வரச் சொல்லு.''

''இதோ'' - நானி வெளியேறினாள்.

அதிர்வுகளடங்கிய அமைதியில் இருந்தோம். பொய்ரெட் மட்டுமே நடுக்கமற்று காணப்பட்டான்... அவனுடைய தோளில் இருந்த சிறு அழுக்கினைத் தட்டி விட்டுக் கொண்டான்.

எஸ்டேட் தோட்டத்தில் வேலை செய்வதற்கான ஆணியறையப்பட்ட பிரத்யேக காலணி வாசல் தரையில் பதிந்து எழுப்பிய ஓசை தோட்டக்காரன் மேனிங்'கின் வரவினை முன் கூட்டியே அறிவித்தது.

Scanned by CamScanner

ஜான் கேள்விக்குறியாய் பொய்ரெட்டைப் பார்த்தார். இவன் தலையசைத்து பொறுமையாயிருக்கச் சொன்னான்.

''உள்ளே வா'' என்றான் ஜான். ''நான் உன்னோட கொஞ்சம் பேசணும்.''

மெதுவாகவும் தயக்கத்தோடும் உள்ளே வந்த தோட்டக்காரன், கதவோடு எத்தனை ஒண்டிக் கொள்ள முடியுமோ அத்தனை ஒண்டிக் கொண்டு பவ்யமாய் நின்றான். தொப்பியை அவனுடைய கையில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். அதன் விளிம்பினைப் பிடித்துக் கொண்டு கவனமாக சுற்றிக் கொண்டேயிருந்தான். கூன் விழுந்திருந்தாலும் பார்ப்பதற்கு அப்படி ஒன்றும் பெரிய வயசானது போல தெரியவில்லை. அவனது கண்கள் கூர்மையாகவும் புத்திசாலித்தனமாகவும் நகன்றுக் கொண்டிருந்தன.

''இவர் உன்கிட்டே சில கேள்விகள் கேட்கப் போறாரு. நீ பதில் சொல்லணும்'' என்றான் ஜான்.

''சரி ஸார்'' என தடுமாறிச் சொன்னான் அவன்.

பொய்ரெட் உற்சாகமாய் முன்னுக்கு வந்தான். ''நேத்து மத்தியானமா, மாளிகையின் தெற்குப் புறத்துல, புது பாத்திகளைக் கட்டி அதுல நிறைய பூச்செடிகளை நீ நட்டுக்கிட்டு இருந்தே, இல்லையா?''

''ஆமாம் ஸார். நானும் வில்லியமும்.''

''திருமதி எமிலி ஜன்னல் வரைக்கும் வந்து உன்னைக் கூப்பிட்டாங்க... செஞ்சாங்களா?''

''ஆமாம் ஸார். அவங்க செஞ்சாங்க.''

''அதுக்கு அப்புறம் என்ன நடந்தது என்பதை, உன் வழியிலேயே நீ எனக்கு சொல்லு.''

''ரொம்ப ஒண்ணும் இல்லே ஸார். அவங்க வில்லியமை சைக்கிள் எடுத்துக்கிட்டு கிராமம் வரைக்கும் போய் உயில் போன்ற ஒன்றை--- இல்லை அதுபோல எதையோ.... எனக்கு சரியா தெரியலே... என்ன அதுங்கிறதை அவன்கிட்டே எழுதிக் கொடுத்தாங்க --- வாங்கிக்கிட்டு வரச் சொன்னாங்க.''

''அப்புறம்?''

''அப்புறம்...?! அவன் அதை செஞ்சான் ஸார்.''

''இதுக்கு அப்புறம் அடுத்து என்ன நடந்தது?''

''பாத்தி கட்ட ரெண்டு பேரும் போயிட்டோம் ஸார்.''

Scanned by CamScanner

''திருமதி எமிலி உங்களை மறுபடியும் கூப்பிடலே?''

''ஆமாம் ஸார். என்னையும் வில்லியமையும், ரெண்டு பேரையும் கூப்பிட்டாங்க.''

''அதைச் சொல்லு. அதுக்கு அப்புறம்?''

''நேரா உள்ளே வரச் சொன்னாங்க. நீளமான ஒரு தாள்ல, கீழே, ரெண்டு பேரையும் கையொப்பம் இடச் சொன்னாங்க. அங்கே அவங்களே கூட கையொப்பம் போட்டிருந்தாங்க.''

''அவங்க கையொப்பத்துக்கு மேலே எழுதியிருந்த விஷயத்துல எதையாவது நீங்க பார்த்தீங்களா?''

''இல்லை ஸார். அந்தப் பகுதியை மறைச்சு ஒரு தாள் இருந்தது.''

''அவங்க எங்கே போடச் சொன்னாங்களோ அங்கே நீங்க போட்டுட்டீங்க.''

''ஆமாம் ஸார். முதல்ல நான். கீழே வில்லியம்.''

''அப்புறம் அவங்க அதை வெச்சுக்கிட்டு என்ன செஞ்சாங்க?''

''அப்புறம், அதை ஒரு பெரிய உறைக்குள்ளே போட்டாங்க ஸார். மேஜையில் இருந்த ஓர் ஊதா நிறப் பெட்டிக்குள்ளே வெச்சு மூடிட்டாங்க.''

''அவங்க உங்களை முதல்ல கூப்பிட்ட போது மணி என்ன இருக்கும்?''

''நாலு மணி...!''

''இன்னும் முன்னாடி இருந்திருக்காதா? மூணரை?''

''ம்ம். அப்படி சொல்ல முடியாது ஸார். நாலு மணியைத் தாண்டி வேணும்னா ஆகியிருக்கலாம். முன்னாடி வாய்ப்பே இல்லை ஸார்.''

''நன்றி. இதுபோதும் எனக்கு'' என்றான் பொய்ரெட் அமரிக்கையாக.

தன்னுடைய எஜமானனைத் தோட்டக்காரன் மேனிங் பார்க்க, அவர் கொடுத்த அனுமதிக்குப் பிறகு, பவ்யமாய் திரும்பி வெளியேறினான் அவன்.

நாங்கள் எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

''அடக் கடவுளே...'' என முணுமுணுத்தார் ஜான். ''என்ன ஓர் ஒற்றுமை...!''

''ஒற்றுமையா? எப்படி?''

''அவங்க மரணமடைஞ்ச அன்னிக்கே உயில் எழுதுகிற மாதிரி ஆகியிருக்கில்லே...?''

Scanned by CamScanner

வேல்ஸ் தொண்டையைச் செருமிக் கொண்டு வறட்சியாய் கேட்டார்: ''இது எதிர்பாராது நிகழ்ந்த ஓர் ஒற்றுமை... அப்படினு நிச்சயமா தான் குறிப்பிடறீங்களா, ஜான்?''

''என்ன சொல்றீங்க?''

''நேத்து மத்தியானம் யாருடனோ உங்க அம்மா கொடூரமான சண்டையில ஈடுபட்டதா சொன்னீங்க....?!''

''என்ன சொல்றீங்க?'' என, சற்றே குரல் உயர்த்தி, மறுபடி கத்தினார் ஜான். அவரது குரலில் நடுக்கமிருந்தது. முகம் வெளிறிப் போனது.

''அந்தச் சண்டையின் விளைவாக ரொம்ப சட்டுனு... வேகவேகமா ஒரு புது உயில் பண்றாங்க. அந்த உயிலின் சாராம்சம், நமக்கு எப்பவும் தெரிய வராது. அதுல செய்திருந்த பங்கீடுகளை அவங்க யாருக்கும் சொல்லவும் இல்லே. நிச்சயமா அதைப் பத்தி இன்னிக்குத் காலையில என்கிட்டே முழுக்கப் பேசியிருப்பாங்க --- ஆனா, அதுக்குத் தான் வாய்ப்பில்லாம போயிடுச்சு. உயில் காணாமப் போகுது... அதன் ரகசியங்களை அவங்க தன் கூடவே கல்லறைக்குக் கொண்டு போயிட்டாங்க. அதனால தான் ஜான்... இதுல எந்தவித எதிர்பாராத ஒற்றுமையும் இல்லேனு நான் பயப்படறேன். திருமிகு பொய்ரெட்... நம்முன்னே உள்ள அத்தனை நிஜங்களும் இப்படித் தான் சொல்லுதுனு நீங்களும் ஒத்துப்பீங்கனு நம்பறேன்.''

''எது சொல்லுதோ இல்லியோ'' - குறுக்கிட்டார் ஜான். ''விஷயத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியதற்காக திரு. பொய்ரெட்டுக்கு நாம ரொம்ப கடமைப்பட்டிருக்கோம். அவர் இல்லேனா இந்த இன்னோர் உயில் பற்றியெல்லாம் நமக்குத் தெரியவே வந்திருக்காது. திரு. பொய்ரெட்... ஒண்ணு கேட்கலாமா...? இப்படி ஒரு சந்தேகத்தை உங்களுக்குள் எழுப்பியது - எது?''

பொய்ரெட் புன்முறுவி விட்டு பதில் தந்தார் :

''அவசரக் கிறுக்கலாய் எழுதப்பட்டிருந்த ஒரு பழைய உறை. புதிதாய் அமைக்கப்பட்டிருந்த பூச்செடிகளுக்கான பாத்திகள்.''

ஜான், இதற்கான விளக்கங்களைக் கேட்டு மேலும் துளைத்திருப்பார். ஆனால், அந்த நொடியில் கேட்ட வாகனம் ஒன்றின் பெரிய ஓசை, அவரை அப்படி செய்ய விடவில்லை. எல்லோருமே ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தோம்.

Scanned by CamScanner

''எவி...!'' - அலறினார் ஜான். ''ஒரு நிமிஷம்...'' என்று சொல்லிவிட்டு வெளிப் பக்கமாய் ஓடினார் அவர்.

என்ன என்பது போல என்னை பொய்ரெட் பார்க்க, ''எவி எவிலின் ஹோவோர்ட்'' என விளக்கினேன் நான்.

''அவங்க வந்ததுல எனக்கு சந்தோஷம். ஆஹ்... அதோ...! நெஞ்சுல அக்னிக் குஞ்சும் உரமும் கொண்ட ஒரு பெண் கூட இருக்கா, ஹேஸ்டிங்ஸ். இறைவன் அவங்களுக்கு அழகைக் கொடுக்காட்டாதான் என்ன...?!''

முன்னறைக்குள் சென்றேன். அங்கு, முகமெங்கும் துக்க பாரமாய் முகாமிட்டிருந்த சொல்லொணா சோகத்தை மிகப் பிரயத்தனப்பட்டு மறைக்க முயன்று தோற்றுக் கொண்டிருந்தார், எவி. அவரது கண்கள் என்மேல் பதிந்து நின்ற போது திடுமென குத்திய குற்றவுணர்வு என்னைத் துளைத்தது. மிக உண்மையாய் என்னை எச்சரித்து விட்டுப் போன பெண்மணி இவர் தான்... அந்த எச்சரிக்கைகளுக்குத் துளியும் செவி சாய்க்காத மடையன் நான் தான்...! எத்தனை இறுமாப்பிருந்தால்... அவமதிப்பிருந்தால்... அந்த அத்தனை எச்சரிக்கைகளையும் நான் என்னிடமிருந்து இத்தனை துரிதமாய் துடைத்தெறிந்திருப்பேன்? ச்சே... இந்த அளவுக்கான உச்சகட்ட துயரத்தின் மூலம், அவர் சொன்ன அத்தனை எச்சரிக்கைகளும் கண் முன்னே நிரூபிக்கப்பட்டிருக்க... நான் வெட்கிப் போய் தலை குனிந்து நின்றுக் கொண்டிருந்தேன். இவருக்கு மட்டும் தான் அந்த ஆல்ஃபிரட்டைப் பற்றி நுனி வரை தெரிந்திருக்கின்றது. ஒரு வேளை இவர் ஸ்டைல்ஸில் தொடர்ந்து தங்கியிருந்தால் இந்தத் துயரச் சம்பவம் நடந்திருக்குமா என்றே எனக்கு சந்தேகம் உண்டானது...! இவருடைய கண்காணிக்கும் கண்களுக்கு முன்னால் அவனால் பயத்தோடு இயங்கியிருக்கவா முடியும்...?

அவருடைய வழக்கமான இரும்புப் பிடி கொடுத்து என்னுடைய கைகளை அவரே முன்வந்து குலுக்கியபோது சற்று லகுவானேன். அப்போது என் கண்களைச் சந்தித்த எவியின் கண்கள் சோக விசனத்தில் இருந்தன... ஆனால் கடிந்துக் கொள்ளவில்லை. சிவந்துப் போயிருந்த அவரது இமைகளைப் பார்த்து நெஞ்சுடைந்துப் போகுமளவுக்கு அவர் அழுதிருக்கிறார் என்பதை என்னால் உணர முடிந்தது... ஆயினும் அவருடைய முன் யோசனையற்ற முரட்டு சுபாவம் மட்டும் மாறாமல் தானிருந்தது.

Scanned by CamScanner

''விஷயம் கிடைத்த அந்த நொடியே கிளம்பி வந்திருக்கேன். ராத்திரி டியூட்டி. அப்படியே விட்டுட்டு வந்துட்டேன். வாடகைக் கார்ல. சீக்கிரமா வர அதான் வழி.''

''காலைல சாப்பிட ஏதாவது கிடைச்சுதா, எவி?'' - ஜான் கேட்டான்.

''இல்லை.''

''கிடைச்சிருக்காதுனு நெனச்சேன். கூட வா. டிபன் இன்னும் தீரலே. சூடா டீ தரவும் சொல்றேன்'' என்றவன் என் பக்கம் திரும்பினான். ''இவளைக் கொஞ்சம் கவனிச்சுக்க முடியுமா, ஹேஸ்டிங்ஸ்...? எனக்காக வேல்ஸ் காத்திட்டிருக்கார். ஓ... அதோ பொய்ரெட். எவி... இவர் நமக்கு பெரும் உதவியா இருக்கார்.''

''என்ன உளர்ரே...? நமக்கு உதவறாரா...?''

''துப்பறிய.''

''இங்கே துப்பறிய ஒண்ணுமில்லே. இன்னுமா அவனைக் கைது செஞ்சு சிறைக்குக் கொண்டு போகலே?''

எவியின் சுயரூபம் தலைதூக்க, மிரண்டான் ஜான். ''யாரைக் கைது செஞ்சு ஜெயிலுக்குக் கொண்டு போகலே?''

''உன் மாமனை...! என்னய்யா கேள்வி... அந்த ஆல்ஃபிரட் தான்...!''

''அருமை எவி... ஜாக்கிரதை... ஜாக்கிரதை...! மாரடைப்பால அம்மா தவறிட்டாங்க எனும் அபிப்ராயத்துல இருக்கான் லாரன்ஸ். இங்கே ஒவ்வொண்ணும் ஒவ்வொரு கோணத்துல பேசிட்டிருக்கு.''

''அவன் ஒரு மடையன். நீ ஒரு மடையன்'' - எதிர்த்தார் எவி. ''ஆல்ஃபிரட் *தான்* பரிதாபப்பட்ட எமிலியைக் கொன்னிருக்கான் - அவன் செய்வான்னு தான் நான் சொல்லிக்கிட்டே இருந்தேனேடா.''

''அய்யய்யோ... எவி.. இப்படியெல்லாம் முடிவை அறிவிச்சுகத்தாதே... ப்ளீஸ்! நாம என்னத்தையெல்லாம் நினைக்கிறோமோ... இல்லே சந்தேகப்படறோமோ... அதையெல்லாம் இப்போதைக்கு எத்தனை தூரம் மூடி வைக்க முடியுமோ அத்தனை தூரம் மூடி வைப்போம். சொன்னாக் கேளு. வெள்ளிக் கிழமை விசாரணை இருக்கு. பேசறது எல்லாம் அதுல போய் சேரும்.''

''அற்பம்... அற்பம்...'' - விசாரணையையே அற்பமாய் எவி ஒதுக்கித் தள்ளிய ஆளுமை - வெகு பிரமாதம்! ''உங்க எல்லாருக்கும் மூளை கழண்டு போயிருக்கு. நீங்க மீன மேஷம் பார்க்கறதுக்குள்ளே

அந்த ஆளு கிராமத்தை விட்டே ஓடியிருக்கப் போறான் பார். இந்தக் கொலையை மாதிரி... நான் சொல்லும் இதையும் இந்த மடக் கூட்டம் காலந்தாழ்த்தி தான் புரிஞ்சுக்கப் போகுது. அந்த ஆளுக்கு மட்டும் சரியான மூளை இருந்தா... இங்கே பொறுமையா காத்திருந்து கழுத்தைத் தூக்குக் கயிறுக்கு நீட்ட மாட்டான்.''

எவியை, நம்பிக்கையற்று பார்த்தார் ஜான்.

''இங்கே என்ன நடந்திருக்குனு எனக்குத் தெரியும்'' - ஜானைக் குற்றம் சுமத்திப் பேசினார் எவி : ''இந்த டாக்டர்ங்க சொல்றதை நீ கேட்டிருக்கே... எதைப் பண்ணக் கூடாதோ அதைப் பண்ணி யிருக்கே! அதுங்களுக்கு என்ன தெரியும்? ஒரு மண்ணும் தெரியாது --- அவங்களைப் பார்த்தால் நாம பயப்படற அளவுக்கு மட்டும் பண்ணத் தெரியும்...!அது இன்னொரு முட்டாள் கூட்டம்...! முட்டாள்களை சுலபமா கண்டுபிடிச்சுடற என்னாலேயே கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு படு முட்டாள் - இந்த டாக்டர் வில்கின்ஸ். மாரடைப்பாம்! இதைத் தான் அவன் சொல்வான்... டாக்டரில்லே...! மூளை இருக்கிற எந்த மனுஷனாயிருந்தாலும்.... அவளோட புருஷன் தான் விஷம் வெச்சு அவளைக் கொன்னிருக் கான்னு க்ஷணத்துல தெரிஞ்சுப்பான். அவளை, அவளோட படுக்கையிலேயே கொல்லுவான்னு நான் எப்பப்பாரும் சொல்லிக் கிட்டிருந்தேன்... பாவப்பட்டவ...! இப்ப பண்ணிட்டான்...! இத்தனை இருந்தும்... நீங்க எல்லாம் என்ன செய்வீங்க...?! கூடி நிப்பீங்க...! 'மாரடைப்பு...', 'விசாரணை...' இப்படினு முணுமுணுத்துக்கிட்டிருப்பீங்க. ஏய் ஜான்.. போ, போய் கண்ணாடி முன்னால நில்லு. உலகத்தின் முழுமுதற் முட்டாளைப் பார்த்தவனாவாய்...!''

''என்னை என்ன பண்ணச் சொல்றே எவி...?'' கேட்டார் ஜான் - உதட்டோரம் விளைந்த உணர்ச்சியற்ற புன்முறுவலைத் தவிர்க்க முடியாமல். ''எல்லாத்தையும் விடு எவி. அவர் கழுத்தைப் பிடிச்சு தரதரனு இழுத்துக்கிட்டு உள்ளூர் போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் - என்னால போக முடியாது எவி.''

''அப்போ வேற ஏதாவது உபயோகமா பண்ணலாமே. எப்படி செஞ்சான்னு கண்டுபிடி.. அவன் ஒரு நுட்பமான கடங்காரன்டா! விதவிதமான முறைகளைக் கையாண்டிருப்பான்... எது அதுனு தேடு.''

Scanned by CamScanner

இக்கட்டத்தில், இந்த எவிலின் ஹோவோர்டையும் அந்த ஆல்ஃபிரட்டையும் ஒரே கூரைக்குள் போட்டு வைத்து அமைதியையும் நீடிக்கச் செய்வது என்பது இயலவே இயலாத காரியம் என்று வேகமாய் எனக்குப் புரிந்தது. ஜான்... பரிதாபம்! உருவாகியிருக்கும் இந்த இக்கட்டினை அவரும் முழுவதுமாக உணர்ந்து விட்டார் என்பதை அவருடைய முகபாவத்திலிருந்து படிக்க முடிந்தது. தற்போதைக்கு அவருக்கு ஒரு தப்பிப்பு அத்தியாவசியமாய் தேவைப்பட்டது... வழிந்தோடும் நீரைப் போல அறையிலிருந்து நழுவி மறைந்தார்.

நானி சூடாய் டீ கொண்டு வந்தார். அவள் நகர்ந்ததும், ஜன்னலோரமாய் நின்றுக் கொண்டிருந்த பொய்ரெட் உள்ளே வந்து, எவிலினை நேருக்கு நேராய் பார்த்தபடி உட்கார்ந்துக் கொண்டான்.

''ஹலோ எவிலின் ஹோவார்ட்'' என முக்கியப்படுத்தி அழைத்த பொய்ரெட், ''உங்ககிட்ட சில விஷயங்களை நான் கேட்கணும்'' என்றான்.

அவனை விருப்பமற்று பார்த்தபடி, ''கேட்டுத் தொலை'' என்றார் எவி.

இதற்கு, ''உங்க உதவியை நீங்களே விரும்பித் தருமளவுக்கு உங்க நன்மதிப்பை சம்பாதிக்க நான் விரும்பறேன்'' என்றவுடன், எவியின் முகத்திலிருந்த விருப்பமற்ற தன்மை மளமளவென இளகியதைக் காண முடிந்தது.

பேசியே சாதிக்கும் எமகாதகன்!

''உங்களுக்கு உதவ விரும்பறேன். நீங்களும் உதவணும்.''

''அந்த ஆல்ஃபிரட்டைத் தூக்கில் ஏற்றுவதானால்... மனமுவந்து உதவ நான் தயார்'' என்றார் அவரது முரட்டுத்தனம் குறையாமல். உடனேயே, ''வேண்டாம்... வேண்டாம்'' என்றார். ''தூக்கில ஏத்தறது அவனுக்கு ரொம்ப இதமா முடிஞ்சுடும். ஒரு நொடி தானே வலி. இழுத்து வெச்சு வெட்டணும்... பழைய காலம் போல.''

''அப்படினா நாம ரெண்டு பேரும் ஒரே இலக்குல தான் இருக்கோம்'' என்று சொன்னதில், எவியை இழுத்தே விட்டான் பொய்ரெட்! ''நானும் கொலைகாரனைத் தூக்குல தொங்க விடணும்கிற ஒரே இலக்கோட தான் இருக்கேன்.''

''ஆல்ஃபிரட்...?''

''அவரோ... இல்லே வேற யாரோ...!''

''இன்னொருத்தன்கிற பேச்சுக்கே இடம் கிடையாது. *இவன்* குறுக்கே வரலேனா, பாவம் எமிலி கொலை செய்யப்பட்டிருக்கவே மாட்டா. அவளுக்கு எதிரிகளா, திமிங்கிலங்க கூடவே இல்லேனு நான் சொல்ல மாட்டேன்... இருந்தாங்க. ஆனா அந்த அத்தனை திமிங்கிலங்களும் அவளோட பணப்பைக்குப் பின்னாலே தான் சுத்தினதுங்க. அவ உயிர் போதுமான அளவுக்கு பத்திரமா தான் இருந்தது. ஆனா குறுக்கே ஆல்ஃபிரட் வரான்... பிறகு ரெண்டே மாசத்துல --- அவ பறந்துடறா.''

''ஒரு விஷயத்துல என்னை நம்புங்க எவி'' என்று மிகவும் உண்மையாய் ஆரம்பித்த பொய்ரெட், ''ஆல்ஃபிரட் தான் *அவனா* இருந்தா.. என்கிட்டேயிருந்து அவர் தப்பவே முடியாது. என் தொழில்மீது சத்தியமிட்டு சொல்றேன்... அவரைத் தொங்க விடாம ஓய மாட்டேன்.''

''அப்படிச் சொல்லு...'' என்றார் எவி, உற்சாகமாய்.

''ஆனா என்னை நீங்க நம்பணும்.... இது என் வேண்டுகோள். உங்களுடைய உதவிதான் இந்த நிலைமையில் எனக்கு விலைமதிப்பற்றது. ஏன் தெரியுமா... துக்ககரமான சம்பவம் நடந்துள்ள இந்த மாளிகையில... உங்களுடைய கண்கள் மட்டும் தான்... விம்மிப் புடைத்து அழுதிருக்கின்றன.''

எவி, ஆச்சரியமாய் விழிக்க, அவருடைய கரடுமுரடான குரலில், இப்பொழுது புது ஸ்ருதி ஒன்று உருவாகியிருந்தது:

''அவ மேலே நான் உயிரையே வெச்சிருந்தேன்னு நீங்க நெனச்சீங்கனா --- ஆமாம். அது உண்மைதான். அப்படித் தானிருந்தேன். இந்த எமிலி தெரியுமா... அவ படு சுயநலக்காரி. அவ பரோபகாரி தான், இருந்தாலும் ஒவ்வொரு தடவையும் அதுக்காக வட்டியோடு திருப்பி அவ எதிர்பார்ப்பா. மக்களுக்கு அவ செஞ்சதையெல்லாம் அவங்க மறந்துடறதை விரும்பவே மாட்டா... இந்த வகையில, அன்பை அவ இழந்திருந்தா. உதவியை வாங்கிக்கிற கூட்டம் உடனே மறைஞ்சுடும். அன்பின் தழுவல் அவளுக்கு கிடைக்கலேங்கிறதை, அவ முழுக்க உணர்ந்திருந்தா. ஆனாலும், 'எதிர்பார்க்காதே'னு சமாதானம் ஆகிப்பா. நான் வேற வழியில அவளுக்கு இதையே சொல்வேன். 'உனக்கு நான் பண்ற பணிவிடைக்கு நீ எனக்குக் கொட்டிக் கொட்டித் தரணும். பை நிறைய தரணும். ஆனா நீ செய்றியா. தோட்ட வேலைக்கு புதுசா ஒரு கையுறை...? ஓசியில வர்ற சினிமா டிக்கெட்ல ரெண்டு...? ஏதாவது,

தந்திருக்கியா? இல்லே, கூடுதலா ஒரு தம்புடி...?!' அவ மேல நான் முழு அன்பா இருக்கிறதால தான், அன்பை எதுக்கு வெளியில தேடிக்கிட்டு அலையறேனு நான் சுட்டிக் காட்டினேன். அதை அவ புரிஞ்சுக்க மாட்டா. மாறா, நான் ஏதோ அவளை எதிர்த்துப் பேசி முறியடிச்சுப் போட்டுட்டதா வெறியாயிடுவா. அவ மேலே முட்டாள்தனமா நான் பொறாமைப்படறேனாம்... சொல்லுவா. அவ பணத்து மேல எனக்கு ஒரு கண்ணாம்...! அதனால தான் அன்பு காட்டறேன்னு நாக்கு கூசாம பேசுவா, துடிச்சுடுவேன்.

''பணத்துக்காக நான் கதறலே... இதை எப்படி விளக்கறது...?! அன்புக்காக அவ ஏங்கினது தாங்காம சொன்னேன். ஆனாலும் என் சுய மரியாதையை நான் விட்டே கொடுக்கலே. ஆக, இந்தக் கூட்டத்துல நான் மட்டும் தனியாளா ஆனேன்....! அவளை வெச்ச கண்ணு எடுக்காம கண்காணிச்சுக்கிட்டு வந்தேன். இந்த மிருகக் கூட்டத்திலிருந்து அவளைக் காப்பாத்தற ஒரு பாதுகாப்பு வளையமா நான் இருந்தேன். அப்பத் தான் நாக்குல தேனும் உள்ளே வினையும் வெச்ச ஒரு பொறுக்கி உள்ளே வரான்... அப்புறம்... ஊஃப்... அத்தனை வருஷமா நான் வெச்சிருந்த அத்தனை அர்ப்பணிப்பும் வீணாப் போகுது.''

பொய்ரெட் பரிதாபத்தை உணர்த்தி தலையசைத்துக் கொண்டிருந்தான்.

''புரியுது, எவி புரியுது.... உங்களுடைய அத்தனை உணர்வுக் கொந்தளிப்பும் பூரணமா புரியுது.... இது இயற்கை தான். நீங்க, நாங்கல்லாம் ஒண்ணுத்துக்கும் உதவாத கூட்டம்னு ஒரு புழு மாதிரி நெனச்சிக்கிட்டிருக்கீங்க. அப்படி கிடையாது எவி.''

இந்தக் கட்டத்தில் தலையை உள்ளே நுழைத்த ஜான், அவரும் வக்கீல் வேல்ஸும் எமிலியின் பிரத்யேக அறையில் மேஜையைப் பார்த்து விட்டதாகவும், எனவே, எங்களிருவரையும் திருமதி எமிலியின் அறை வரை வருமாறு அழைத்தான்.

படிக்கட்டு ஏற நாங்கள் ஆரம்பிக்கும் போது திரும்பி சாப்பாட்டு மேஜையை ஜான் பார்த்தார்.... குரலை ரகசியமாய் குறைத்துக் கொண்டார்.... சொன்னார்: ''அதோ பார்.... இந்த ரெண்டும் சந்திச்சுக்கிட்டா என்னவெல்லாம் நடக்குமோ...!''

வேறு வழியில்லை என என் தலையை மறுத்து அசைத்துக் காட்டினேன்.

Scanned by CamScanner

''முடிஞ்ச வரைக்கும் ரெண்டையும் பிரிச்சே வைக்குமாறு மேரி கிட்டே சொல்லியிருக்கேன்.''

''அதை மேரியால செய்ய முடியுமா?''

''கடவுளுக்கே வெளிச்சம்! ஒரு வழி இருக்கு... ஆல்ஃபிரட் இவளைச் சந்திக்க எவ்விதமான ஆர்வமும் காட்ட மாட்டாரு.''

''இது காட்டினா...?!''

இப்போது பூட்டியிருந்த அறையினை நாங்கள் அடைந்திருந்த படியால், ''சாவி இன்னும் உன் கிட்டே தானே இருக்கு பொய்ரெட்?'' என கேட்டேன் நான்.

பொய்ரெட்டிடமிருந்து சாவியைப் பெற்றுக் கொண்டு கதவினை ஜான் திறக்க, நாங்களனைவரும் உள்ளே போனோம். வக்கீல் நேராக மேஜையை அடைந்தார். ஜான் பின்னாலேயே போனான்.

''அனைத்து முக்கியமான தஸ்தாவேஜுக்களையும் அம்மா இதுல வெச்சிருந்ததா நம்பறேன்.''

சாவிக் கொத்தை வெளியே எடுத்தான் பொய்ரெட். ''அனுமதி வேண்டும். ஒரு பாதுகாப்பு நடவடிக்கையா இன்னிக்குக் காலையில இதை நான் பூட்டினேன்.''

''ஆனா இப்ப இது பூட்டி இல்லியே... திறந்துல்லே இருக்கு...!''

''வாய்ப்பே கிடையாது.''

''பாருங்க.''

ஜான் சொல்லிக் கொண்டே அதன் மூடியைத் திறந்து காட்டினான்.

செயலற்றக் குழப்பத்தில், ''ஆ... ஆ... ஆ...'' என கதறினான் பொய்ரெட். ''நான்... நான்... ஓஹ்... ரெண்டு சாவிகளும் உன் கிட்டே இருக்கும் போது ---''

அவனே பெட்டியை எகிறி நெருங்கினான். ''இந்தப் பூட்டு உடைக்கப்பட்டிருக்கு.''

''என்ன...?'' - குழுவினராய் கேட்டோம்.

பொய்ரெட் பெட்டியை மறுபடியும் வைத்தான்.

''எனில் யார் உடைத்தது? ஏன் செய்யணும்? எப்போ? கதவு பூட்டியில்லே இருக்கு...?''

இக்கேள்விகள் எங்களிடமிருந்து தனித்தனியாய் எழுந்தன.

இவற்றிற்கு வரிசையாயும்... இயந்திரத்தனமாயும் பதில் தந்தான் பொய்ரெட்:

''யார்? இது கேள்வி. ஏன்? ஆஹ்... தெரியலியே. எப்போ? ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி நான் இங்கே இருந்திருக்கேன். கதவு

பூட்டியிருக்கே? இருந்தா என்ன.... அது வெறும் சாதா பூட்டு. இங்கேயிருக்கிற வேற எந்தப் பூட்டின் சாவியும் அதுக்குப் பொருந்தலாம்.''

வெறுமையாய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். பொய்ரெட் அலமாரி பக்கமாய் நகர்ந்திருந்தான். வெளிப்படையாய் அவன் அமைதியாய் இருப்பது போல தோன்றினாலும், நான் அவனது கைகளையே நோட்டமிட்டேன். அவை, நடுங்கிக் கொண்டிருந்தன. எல்லாவற்றிலும் நேர்த்தியை எதிர்பார்க்கும் அவனது கை விரல்கள், அங்கிருந்த ஒரு பூங்கொத்தில் வளைந்து அழகாயில்லாமல் இருந்த மலர்களை சரிசெய்துக் கொண்டே யிருந்தாலும், அதீத நடுக்கத்திலிருந்தன.

இறுதியில், ''கவனியுங்கள்... என்ன நடந்திருக்கிறது என்பதை'' என்றான். ''இந்தப் பெட்டியில என்னவோ இருந்திருக்கு. ஒரு சாட்சி. சின்னதா கூட இருக்கலாம். ஆனாலும், கொலையாளியை அடையாளம் காட்டக் கூடிய அளவுக்கு போதுமானது அது. அது கண்டுபிடிக்கப்பட்டு அதன் முக்கியத்துவம் பரவறதுக்கு முன்னாடி அந்த சாட்சியே இல்லாம பண்ணிடணும் என்பது அவனுக்கு மிக மிக முக்கியமாகிறது. ஆக, துணிந்து அபாயத்தைக் கையில் எடுத்துக்கறான். அறைக்குள் நுழையும் - ஒரு துணிகரச் செயல். கைப்பெட்டியோ பூட்டியிருக்கு. அவசரமா முடிச்சாகணும்... வேறு வழியில்லாம உடைக்கிறான்... இந்தச் செயலால தான் அவன் வந்துட்டுப் போனதே நமக்குத் தெரியுது. துணிந்து, அகப்பட்டுக் கொண்டால் உயிர் அபாயம் வரும்னு தெரிஞ்சிருந்தும், செஞ்சிருக் கான்னா.... அது, அதி முக்கியமான ஒண்ணாத்தானிருக்கும்.''

''ஆனா, என்னது அது?''

''ஆஹ்...'' என கத்தினான் பொய்ரெட், கோபமாய். ''அது எனக்குத் தெரியலியே! ஏதோ ஒரு வகையான ஆவணம்... இதுல சந்தேகமேயில்லை. நான்... நான்...'' - இப்பொழுது அவனுடைய கோபம் மடைதிறந்த காட்டாற்றாய் விரிந்தது - ''நான் ஒரு மூளையேயற்ற ஐந்தறிவு மிருகம். இப்படியா ஊகிக்காம விட்டிருப்பேன்! சித்த சுவாதீனமில்லாதவன் மாதிரியில்லே நடந்துக்கிட்டிருக்கேன்...! சே...! பெட்டியை இங்கே அப்படியே நான் விட்டுட்டு வந்திருக்கக் கூடாது. என்னோடவே தூக்கிக் கிட்டு நான் வெளியேறியிருக்கணும். பெட்டிக்குள்ளே இருக்கிறது முக்கியம்...

Scanned by CamScanner

முக்கியம்னு அலறிக்கிட்டு அதை பொதுவா ஒரு மேஜையிலேயேவா விட்டு வைக்கிறது...?! பன்னி... நான் ஒரு மூளையற்ற பன்னி!''

''பொய்ரெட்... பொய்ரெட்...''

''ஆமாண்டா...! எனக்கெதுக்கு ஆறாவது அறிவு...! சிந்திக்க முடியாதவனுக்கு எதுக்கு அறிவு...? இப்பப் பாரு... அது காணோம். அது அழிக்கப்பட்டிருக்கும். அப்படித்தானே... அழிக்கப் பட்டிருக்குமா? இன்னொரு வாய்ப்பு கிடைக்குமா?''

பைத்தியமானான். அறைக்குள்ளிருந்து பித்துப் பிடித்தவன் போல் வெளியேறினான். என் அவயங்களை என் கட்டுக்குள் கொண்டு வந்துவிட்ட அடுத்த கணமே, அவன் போன திசையில் நானும் அலையாய் ஓடினேன். ஆனால், படிக்கட்டுகளின் முதல் படியருகே வருவதற்குள், அவன் எனது கண் பார்வையிலிருந்து எங்கோ மறைந்திருந்தான்.

படிக்கட்டுகள் ஏறும் இடத்தில் திருமதி மேரி ஜானும் நின்றுக் கொண்டிருந்தார். அவன் இறங்கி நுழைந்து மறைந்துப் போன வரவேற்பறையின் பகுதியையே வைத்த கண் வாங்காது முறைத்தபடி அவர் நின்றுக் கொண்டிருந்தார்.

''உங்களுடைய அந்தக் குள்ள நண்பனுக்கு அசாதாரணமா என்ன ஆகிடுச்சு, ஹேஸ்டிங்ஸ்? என்னை வெறி பிடிச்ச மாடு மாதிரி முட்டித் தள்ளிக்கிட்டு ஓடறார்.''

''எது குறித்தோ உடைஞ்சு போயிருக்கான்'' என்றேன் நான் மெதுவாய். எந்த அளவுக்கு விஷயத்தை நான் வெளியே சொல்வது நல்லது என எனக்குத் தெரியவில்லை. திருமதி மேரியின் உணர்வுபூர்வமான உதடுகளில் ஓர் உயிர்ப்பற்ற சிறு புன்னகை விளைய ஆரம்பித்ததைக் கவனித்த நான், பேச்சை மாற்றி விடும் முடிவில் இறங்கி, ''இன்னும் அவங்க சந்திச்சுக்கலே, இல்லே?'' என்றேன்.

''எவங்க?''

''திரு. ஆல்ஃபிரட்... மற்றும் எவி.''

என்னைக் குழப்பும் தினுசில் பார்த்தார் அவர்.

''அவங்க ரெண்டு பேரும் பார்த்துக்கிட்டா அப்படி ஒரு பிரளயம் உருவாகும்னா நினைக்கிறீங்க?''

''பிறகு...! உங்களுக்குத் தோணலே?'' - திடுக்கிட்டவனாய் கேட்டேன் நான்.

Scanned by CamScanner

''இல்லே.''

அவருக்கு உரிய சிறு புன்னகையிலேயே இருந்தார். ''அப்படி ஒரு வெடிப் பிரளயத்தை மறுபடியும் பார்க்கணும்னு இருக்கு. மாளிகைக் காற்றுல அடைச்சிருக்கிற இறுக்கத்தை அது தான் தணிக்கும். இங்கே எல்லோரும் என்னெல்லாமோ நினைக்கிறோம்... அதுல ஒண்ணும் புரியாததாலே ரொம்பக் கம்மியா பேசறோம்.''

''ஜான் உங்களை மாதிரி நினைக்கலே'' என்று குறிப்பிட்டேன் நான். ''அவங்களைப் பிரிச்சே வைக்கணும் என்பதுல அவர் குறியா இருக்கார்.''

''ஓ, ஜான்!''

இப்படி அவர் சொன்னதில் எனக்குள் ஏதோ ஒன்று பற்றிக் கொண்டது.... அதனால் நான் யோசனையின்றி சொன்னேன்: ''ஜான்... ஒப்பிட முடியாத அளவுக்கு - நல்லவன்.''

ஓரிரு நிமிடங்கள் என்னை ஆர்வமாய் படித்த அவர், பிறகு என்னை ஆச்சரியமாக்கும்படி, ''நீங்க உங்க நண்பனுக்கு மிகவும் கடமைப்பட்டவரா இருக்கீங்க'' என்றார். ''எனக்கு இது பிடிச்சிருக்கு.''

''ஏன்... நீங்களும் கூட எனக்கு நண்பரில்லையா?''

''ஆனா... நான் ரொம்ப கெட்ட நண்பர்.''

''ஏன் அப்படி சொல்றீங்க?''

''ஏன்னா... இது தான் உண்மை. நான் என் நண்பர்களுக்கு மிக மிக சுகந்தமானவளா முதல் நாள் இருப்பேன்... மறுநாள் அப்படி இருந்த அத்தனையும் மறந்துடுவேன்.''

என்னை எது தூண்டி உந்தித் தள்ளியது என தெரியவில்லை... அர்த்தமின்றி கிறுக்குத் தனமாய் சொன்னேன்: ''அப்படியிருந் தாலும், நீங்க, அசைக்க முடியாத அளவுக்கு வசீகரமானவராய், திரு. பௌரீஸுக்குத் தெரியறீங்க!''

சொன்ன உடனேயே இவ்வார்த்தைகளுக்காக நான் வருந்தினேன். இளகியிருந்த அவரது முகம் இறுகியது. அந்த உயிரோட்டம் மிகுந்த பெண்ணின் முகத்தில் ஓர் இரும்புத் திரை வந்து கவிழ்ந்து எங்களைப் பிரிப்பதை என்னால் அறிய முடிந்தது. ஒரு வார்த்தை சொல்லாமல் திரும்பிக் கொண்டவர் மிகத் துரிதமாய் படிக்கட்டுகளில் ஏறி ஓடினார்... நான் ஒரு முட்டாளாய், அவர் ஏற ஏற எங்களுக்கிடையே விரிந்து கூடிய இடைவெளியையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

Scanned by CamScanner

அச்சுறுத்தும் வகையில் கீழே நடந்துக் கொண்டிருந்த ஒரு களேபரம் அப்போது என் கவனம் முழுவதையும் திசை மாற்றியது. வெடித்துப் போய் பொய்ரெட் கத்திக் கொண்டிருப்பது கேட்டது. இதனால் என்னுடைய மதிப்பும் மரியாதையும் கேள்விக் குறியாகிக் கொண்டிருப்பதைக் காணக் காண.... வெறுத்துப் போனேன். இந்தக் குள்ள மனிதன், மாளிகையின் அனைத்து சங்கதிகளையும் தனது ஆளுமைக்குள் எடுத்துக் கொண்டதாய் பட்டது. என்ன படித்து என்ன புண்ணியம்... பொது இடத்தில், அதுவும் புது இடத்தில் பழகத் தெரியா விட்டால்...! எதிர்பாராத சறுக்கல்களில் தன் கட்டுப்பாடு முழுவதையும் இழந்து விடும் என் ஆத்ம நண்பனின் நடத்தையைக் கண்டு, மற்றொரு முறை வருந்தி கடுப்பாவதை என்னால் தவிர்க்க இயலவில்லை... கடுப்பானேன். அதே எரிச்சலோடு வெறியாய் படியிறங்கினேன். என்னைப் பார்த்தான். அது அவனை அந்த நொடியிலேயே ஆசுவாசப்படுத்தியது. அவனை உள்பக்கமாய் இழுத்துப் போனேன்.

அங்கு அவனைப் பார்த்தேன். கோபம் வரவில்லை... பரிதாபமாயிருந்தது. ''என் அருமை நண்பா...'' - நான் சொன்னேன். ''இதுவா புத்திசாலித்தனம்? ம்? நடந்துள்ள விபரீதத்தை இந்த வீடு முழுக்க தெரிந்துக் கொள்வதில் உனக்கு நிச்சயம் சம்மதம் இருக்காது... இல்லையா? அப்படியிருக்கும் போது, நீ இப்படி செய்யறது தகுமா? கொலையாளியின் குகைக்குள்ளே நீ விளையாடிக்கிட்டிருக்கே.''

''நீ அப்படியா நினைக்கிறே, ஹேஸ்டிங்ஸ்?''

''இதுல நான் நிச்சயமா இருக்கேன்.''

''சரி சரி நண்பா. நீ சொல்றபடி நடந்துக்கறேன்.''

''நன்றி. ஆனா இந்த முடிவைக் கொஞ்சம் முன்னாடி எடுத்திருந்தா...''

''விடு.''

சொரணை இழந்து வெட்கி என் அருமை நண்பனும் துப்பறியும் மேதையுமான பொய்ரெட் நிற்பதைக் காண எனக்கு மிகப் பரிதாபமாய் போனது. ஆனாலும், நான் நுழைந்தது, மிகச் சரியான ஒரு தருணத்தில் செய்துள்ள புத்திசாலித்தனமான செயல் என்பதால், அமைதியானேன்.

Scanned by CamScanner

''ஹேஸ்டிங்ஸ்'' என இறுதியாய் அழைத்தவன், ''வா... நாம் கிளம்பலாம்'' என்றான்.

''இங்கே வேலையையெல்லாம் முடிச்சிட்டியா?''

''இப்போதைக்கு - ஆமாம். என்னோட, என் அறை வரைக்கும் கூட வருவியாடா?''

''மனப்பூர்வமாடா!''

அவனுடைய சிறு கைப்பெட்டியைத் எடுத்துக் கொண்டு வரவேற்பறை பிரெஞ்சு ஜன்னல் வழியாக வெளியேறினான். அப்போது சிந்தியா உள்ளே நுழைவதற்காக வர, அவளுக்கு வழி விட்டு ஒதுங்கி நின்றான். பிறகு, ''ஒரு நிமிடம், செல்வி சிந்தியா'' என்றான்.

''ம்...'' என்று என்ன விஷயம் என்பது போல் பார்த்தாள் அவள்.

''நீங்க, திருமதி எமிலிக்கு வேண்டிய மருந்துகளை எப்போதாவது செய்துக் கொடுத்திருக்கீங்களா?''

சிறு அலை அவளது முகத்தில் எழுந்து அடங்கியது... முன்னெச்சரிக்கையாய் ''இல்லை'' என்று மட்டும் சொன்னாள்.

''ஏதாவது மருந்து பவுடர்கள்?''

முகத்தில் அலை இன்னும் தீவிரமாகியது. ''ஓ... ஆமாம்! அவங்களுக்குத் தூக்கம் வர உதவும் சில தூக்க மாத்திரைகளை மட்டும் நான் ஒரு முறை செஞ்சு தந்திருக்கேன்.'' என்றாள்.

''மாத்திரையா... இல்ல பவுடரா?''

''பவுடர்.''

''இதுவா?''

பொய்ரெட், அத்தூள்களை அடக்கியிருந்த காலிப் பெட்டியைக் காட்டினான்.

அவள் ஒப்புதலாய் தலையசைத்தாள்.

''அவை என்ன என்று சொல்ல முடியுமா? சல்ஃபோனல்? வெரோனல்?''

''இல்லையில்லை. அவை ப்ரோமைட் பவுடர்.''

''ஆஹ்...! ரொம்ப நன்றி செல்வி.''

விறுவிறுவென நாங்கள் மாளிகையை விட்டுக் கிளம்பியதும் நான் அவனை ஓரிரு முறை பார்வையிட்டேன். பலமுறை கவனித்திருக்கிறேன்... அவன் எதனாலோ கிளர்ந்திருக்கும் போது, அவனுடைய கண்கள் வெகுண்டு பச்சை பூச்சுக் கொள்ளும்... பூனை



Scanned by CamScanner

போல்! இப்போது, அக்கண்கள், பச்சை மரகதமாய் கனன்றுக் கொண்டிருந்தன!

''இனியவனே'' என கடைசியில் அமைதியை உடைத்த அவன், ''எனக்குள் ஒரு சிறு ஊகம்... பைத்தியக்காரத்தனமா கூட இருக்கும்.. ஏன், அசாத்தியமானதா கூட இருக்கலாம்... ஆனாலும் நண்பா... அது - பொருந்துது'' என்றான்.

நான் தோள்களைக் குலுக்கிக் காட்டினேன். ரொம்ப ரொம்ப சிந்தித்து இதுபோன்ற பல வகையான ஊகங்களுக்கு உடனுக்குடன் அடிபணிந்து போகுமளவுக்கு இவன் ஆகி விட்டான் என உள்ளூர நினைத்துக் கொண்டேன். இவ்வழக்கைப் பொறுத்த வரை, உண்மை, பட்டவர்த்தனமாக இருக்கிறது... ஒளிவு மறைவின்றி தெரிகிறது... ஆனாலும் ஊகம் தருகிறான்!

''என்ன ஊகம்?'' என்ற நான், ''முகவரி ஒட்டப்படாத அந்த மருந்து டப்பாவா?!'' என்றேன். ''அதுக்கு இப்ப விடை கிடைச்சுடுச்சு... இல்லையா? ரொம்ப சுலபமா முடிஞ்சுடுச்சு. இப்படி ஒரு முடிவு இருக்கும்னு நான் நெனச்சே பார்க்கலே.''

பொய்ரெட் நான் சொல்வதைக் கவனிப்பதாகவே தோன்றவில்லை.

''அவங்க இன்னொரு கண்டுபிடிப்பு செஞ்சிருக்காங்க'' என்றான், அவனது கட்டை விரலை, தூரத்தில் தெரிந்துக் கொண்டிருந்த அகண்ட ஸ்டைல்ஸ் மாளிகையை நோக்கி சுட்டிக் காட்டியபடி. ''நாம மாடிக்குப் போய்க்கிட்டிருந்த போது வேல்ஸ் சொன்னார்.''

''என்னது அது?'' - விறுவிறுப்பானேன்.

''பிரத்யேக அறையில, மேஜையின் ஒரு பூட்டப்பட்ட தட்டுல, திருமதி எமிலியின் உயில் ஒன்றைக் கண்டெடுத்திருக்காங்க. திருமணத்துக்கு முன்னாடி தேதியிட்டது. அதன்படி அத்தனை சொத்தும் ஆல்ஃபிரட்டுக்குப் போகுது. அவங்க நிச்சயதார்த்தம் முடிஞ்ச கையோட இது எழுதப்பட்டிருக்கணும். உயில் ஆவணத்துல தான், தட்டச்சு செய்யப்பட்டிருக்கு. ரெண்டு வேலைக்காரங்க வேற சாட்சி கையொப்பம் இட்டிருக்காங்க - நானி இல்லே.''

''இது ஆல்ஃபிரட்டுக்குத் தெரியுமா?''

''அவர் தெரியாதுங்கறார்.''

''இந்த உயில் சமாச்சாரம் எல்லாம் குழப்புதுப்பா...'' என்றேன் நான் ஒட்டுறவு இல்லாமல். ''முதல்ல நீ சொல்லு... அந்த உறையில

கிறுக்கலா இருந்த எழுத்துக்கள், உயில் நேத்து மதியம் தான் எழுதப்பட்டிருக்குனு கண்டுபிடிக்க எப்படி உனக்கு உதவிச்சு?''

பொய்ரெட் சிரித்தான்.

''ஹேஸ்டிங்ஸ்...! கடிதம் ஒண்ணு எழுதிக்கிட்டிருக்கும் போது, எப்போதாவது, ஒரு குறிப்பிட்ட வார்த்தையோட அட்சரங்கள் சரியா தெரியலே எனும் காரணத்தால நீ திண்டாடியது உண்டா?''

''ஓ... பல தடவை! ஆங்கிலம் எழுதும்போது ரொம்ப வரும். இது எல்லோருக்கும் உள்ள மேனியானு நினைக்கிறேன்.''

''ரொம்பச் சரி. அப்படி குழம்பும் சமயங்கள்ல அந்த வார்த்தையை ஒரிரு முறை ஒரு துண்டுச் சீட்டுல எழுதி சரியா வருதானு... சரியா தெரியுதானு... நீ முயற்சிப் பண்ணினதில்லே?''

''வேற வழி?!''

''ஆங்...! இதைத் தான் திருமதி எமிலி செஞ்சிருக்காங்க. நீயே இதுல கவனிக்கலாம்.... Possessed எனும் வார்த்தை --- அதாவது, சொந்தமா வெச்சிருக்கிறது.... அல்லது கையகப்படுத்தி யிருப்பது... அல்லது வயப்படுத்தி பிடிச்சு அனுபவித்துக் கொண்டி ருப்பது... இப்படி எந்த அர்த்தம் வேணும்னா எடுத்துக்கலாம் --- இதை முதல்ல ஒரு S மட்டும் போட்டு எழுதிப் பார்த்திருக்காங்க... திருப்தி வரலே... அப்புறமா தொடர்ந்து ரெண்டு S போட்டு சரியா முடிவு பண்ணியிருக்காங்க. இன்னும் ஊர்ஜிதப்படுத்திக்க ஒரு வாக்கியமாவே எழுதிப் பார்த்திருக்காங்க... அது தான், 'நான் சொந்தமாக்கப்பட்டு விட்டேன்' எனும் அர்த்தம் தரும் "I am possessed'. இப்போ, இது எனக்கு என்ன உணர்த்தியதுனு பார்ப்போம். திருமதி எமிலி "Possessed' எனும் வார்த்தையை அன்னிக்கு மத்தியானம் எழுதியிருக்காங்க - இந்தத் துப்பு இதைத் தான் எனக்கு சொல்லிச்சு. கனப்புப் போடும் பகுதியில நான் பார்த்த அந்தத் துண்டு உயில் காகிதம் என் மனசுல பசுமையா இன்னும் இருக்க.... இந்த வார்த்தையை அவங்க உபயோகப்படுத்தினது ஓர் உயில் எழுதும்போது தான் என்று நான் தாமதமில்லாம உணர்ந்தேன். முன்னிரவு நடந்த குழப்பத்தாலே அவங்களுடைய பிரத்யேக அறை மறுநாள் காலைல பெருக்கப்படலே... அங்கே மேஜைக்கு அருகே மண் நிறத்துல காலணிகளுடைய தடங்கள் நிறைய இருந்தன. ஒரு வாரமா பனியோ மழையோ அற்ற சிறப்பான தட்பவெப்பம் தான் நிலவுது. அதனால சாதாரண வழியில வந்த யாருடைய காலணியும் இந்த மண் தடத்தை உண்டாக்கியிருக்காது.

Scanned by CamScanner

''இது மண்டையில புரிஞ்சவுடனே ஜன்னல் பக்கம் விரைந்தேன். பல பூச்செடிகளும் அவற்றிற்கான பாத்திகளும் அப்போதான் புதுசா உருவாக்கப்பட்டிருந்ததைக் கவனிச்சேன். அங்கே பாத்திக்குப் பக்கத்திலிருந்த மண்ணும் இங்கே அறையில கீழே பதிந்திருந்த மண் தடங்களும் வித்தியாசமில்லாம ஒத்திருந்தன. மேலும் செடிகளும் பாத்திகளும் முந்தைய நாள் மதியம் தான் நடப்பட்டன என்பதை உன்னிடமிருந்து நான் தெரிஞ்சுக்கிட்டேன். அப்போது நிச்சயமா ஒரு விஷயம் என்னுள் முடிவானது... ஒருத்தனோ அல்லது ரெண்டு பேரா கூட இருக்கலாம் --- ஏன்னா, பிரத்யேக அறையின் தரையிலே இரு வேறு தினுசான கால் தடங்களிருந்தன --- திருமதி எமிலியின் அந்த பிரத்யேக அறைக்குள்ளே நுழைஞ்சிருக்காங்க. ஒரு வேளை திருமதி எமிலி வெறுமனே அவங்ககூட ஏதாவது பேச மட்டும் கூப்பிட்டிருந்தாங்கன்னா, வேலைக்காரங்க பிரெஞ்சு ஜன்னல் வழியா உள்ளே வந்திருக்க மாட்டாங்க... வெளியே இருந்தபடியே பேசிட்டு போயிருப்பாங்க. ஆனா வந்திருக்காங்க! உள்ளே! இதனால, எனக்கு, இந்தக் கட்டத்துல, ஒரு முடிவு நிச்சயமாச்சு. திருமதி எமிலி, ஒரு புத்தம்புது உயிலைத் தயார் செஞ்சிருக்காங்க. அவங்க கையொப்பத்துக்கு சாட்சியா, ரெண்டு வேலைக்காரனுங்களையும் சாட்சி கையொப்பம் போட அழைச்சிருக்காங்க. பிறகு நடந்தவை எனது அபிப்ராயங்கள் சரியே என்று காட்டியுள்ளன.''

''மதி நுட்பமும் சாமர்த்தியமும் நிறைந்த துப்பறிதல். சபாஷ்'' - என்னால் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. ''அந்தக் கசங்கிய உறையில எழுதப்பட்டிருந்த இந்த வாசகங்களை வெச்சு நான் எடுத்திருந்த முடிவெல்லாம் மகா தப்பானவைனு இப்ப ஒத்துக்காம இருக்க முடியலே, பொய்ரெட்.''

அவன் சிரித்தான்.

''உன் கற்பனை உன்னை ஆள்வதற்கு ரொம்ப இடங் கொடுத்துட்டே. கற்பனை, ஒரு சிறந்த சேவகன்... படு மோசமான எஜமான்! ரொம்ப சாதாரணமான, எளிமையா தென்படுகிற விளக்கம் தான் எப்பவுமே சாதகமானது!''

''இன்னொன்னு... அந்தக் கைப்பெட்டியின் சாவி தொலைஞ் சிருக்கு என்று எப்படி உனக்கு தெரிஞ்சது?''

''அது சத்தியமா எனக்குத் தெரியாது! சின்ன ஊகம்.. சரியா ஆயிடுச்சு! அதோட கைப்பிடி அருகே வளைஞ்ச கம்பி ஒண்ணு தென்பட்டதை நீயும் பார்த்தே. இந்த சேதி, பலவீனமான ஒரு சாவிக்

Scanned by CamScanner

கொத்தைப் பிடிச்சு இழுத்ததால விடுபட்டுப் போன கம்பி அது என்பதை உடனடியா எனக்கு உணர்த்தியது. ஒரு வேளை தொலைஞ்ச சாவி உடனே கிடைச்சிருந்தா திருமதி எமிலி அந்த உபயோகப்படுத்தின பழைய சாவியையே கொத்துல மறுபடியும் போட்டிருப்பாங்க. ஆனா அவங்க கொத்துல நான் பார்த்தது உபயோகப்படுத்தின சாவி இல்லே.... மாற்று சாவி. அது பளபளனு புதுசா இருந்தது. ஆக வேற யாரோ நிஜச் சாவியை வெச்சு அந்தப் பெட்டியைக் கையாள முயற்சி செஞ்சிருக்காங்க எனும் ஆதாரமற்ற அனுமானம் என்னுள் உருவானது.''

''ஆமாமாம்'' என்றும் ''இருக்கலாம்'' என்றும் சொன்ன நான், ''அது - ஆல்ஃபிரட் தான்... சந்தேகமில்லாம'' என்றேன்.

பொய்ரெட் என்னை ஆர்வமாய் பார்த்தான்.

''நிச்சயமா தான் சொல்றியா?''

''வேற? புதுசு புதுசா கிளம்பற ஒவ்வொரு சூழலும் இக்கருத்தை விலாவாரியா ஊர்ஜிதப்படுத்துது, பொய்ரெட்!''

''மாறாக'' என்று மிருதுவாய் சொன்ன பொய்ரெட், ''பல விஷயங்கள் அவருக்கு சாதகமா இருக்கு'' என்றான்.

''ஆ...!''

''ம். ஆமாம்.''

''எனக்கு அப்படி ஒண்ணே ஒண்ணு தான் தெரியுது.''

''அது?''

''அவர் சம்பவ இரவன்று வீட்டுல இல்லாதது.''

''குறி தப்புது நண்பா! என் மூளையில் அவருக்கு எதிரா நிக்குற ஒரே ஒரு சம்பவத்தை நீ அவருக்கு சாதகமா எடுத்துக்கிட்டு இருக்கே!''

''அதெப்படி?''

''அவர் மனைவி விஷம் வைத்துக் கொல்லப் போகும் சதி அவருக்கு முன்னமேயே தெரிஞ்சிருந்தா... வீட்டை விட்டு அவர் அன்றிரவு வெளியே இருப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் எல்லாருக்கும் தெரியற மாதிரி முன்கூட்டி அவரே செஞ்சிருப்பார். ஆக அவர் அன்னிக்கு ராத்திரி வீட்டில இல்லேனு சொல்றது ஓர் உபாயம்... துருப்புச் சீட்டு! இது நமக்கு இரண்டு சாத்தியக் கூறுகளை விட்டு வைக்குது. ஒண்ணு, என்ன நடக்கப் போகிறது என்பது அவருக்கு தெரிஞ்சிருக்கணும்... மற்றொன்று, அவர் அங்கே இல்லாம போனதுக்கான காரணம் அவருக்கு மட்டுமே வெளிச்சம்.''

Scanned by CamScanner

''அந்தக் காரணம்?'' - நான், அவன் இப்போது பேசியவற்றில் அதிக நம்பிக்கையற்றுக் கேட்டேன்.

பொய்ரெட் தோள்களை வெறுமனே குலுக்கினான். ''எனக்கு எப்படித் தெரியும்? ஏதோ மலிந்த காரணம் தான் - இதில் சந்தேகமில்லே. இந்த ஆல்ஃபிரட் ஒரு வகையில் பொறுக்கி தான்... ஆனா அதனால இவனைக் கொலைகாரனா ஆக்கிப் பார்க்கவும் கூடாது.''

ஏற்றுக் கொண்டேன். ''ரொம்ப தர்க்க ரீதியா பார்க்கணும்.''

''ஆமாம்.''

''இப்போ என்னைக் கவனி! கதவுகள் தாழ்ப்பாள் *போடப் பட்டிருந்தன* --- நம்மக் கண்களால நாமே பார்த்தோம் --- இருந்தாலும், தரையில் கிடந்த மெழுகுவர்த்திப் பொட்டுகளும், பாழாக்கப்பட்டுள்ள உயிலும், ராத்திரி யாரோ உள்ளே வந்திருக்காங்க என்பதைப் பரிபூரணமாக்குது. இதுவரைக்கும் ஒத்துக்கிறியா?''

''மிகச் சரி. சுத்தமா விளக்கினே. ம்... தொடர்!''

''அப்புறம்...!'' என்று உற்சாகமாய் தொடர்ந்தேன் : ''அப்படி நுழைந்தவன் பிரெஞ்சு ஜன்னல் வழியா வரலே... மாய மந்திரம் செஞ்சு கூடு விட்டுக் கூடும் பாயலே! ஆக, உள் பக்கத்திலிருந்து திருமதி எமிலியாலேயே கதவு திறக்கப்பட்டிருக்கணும் - என்பது ஸ்திரமாகுது. இந்த முடிவு, அப்படி வந்து தட்டியது அவங்க கணவன் தான் எனும் கருத்துக்கு வலு சேர்க்குது. தனது சொந்தக் கணவனுக்கு நிச்சயமா அவங்க கதவைத் திறந்து விடுவாங்க.''

பொய்ரெட் மறுத்துத் தலையசைத்தான்.

''ஏன் அவங்க திறக்கணும்? இங்கிருந்து அவருடைய அறைக்கு வழி பண்ணித் தரும் கதவையே திருமதி எமிலி மூடி தான் வெக்கிறாங்க... அவங்க பக்கத்துல இதுவே ஓர் அசாதாரணமான நடவடிக்கை! தவிர, அன்னிக்கு மத்தியானம் ஆல்ஃபிரட்டோட மிருக பலத்தோட சண்டை போட்டிருக்காங்க. கிடையாது ஹேஸ்டிங்ஸ்... அவங்க உள்ளே அனுமதிக்கக் கூடிய கடைசி ஆளாய் தான் ஆல்ஃபிரட் இருக்கார்!''

''திருமதி எமிலியாலேயே தான் கதவு திறக்கப்பட்டிருக்கணும் என்பதை நீ ஏற்றுக்கிறியா?''

''இங்கே இன்னொரு சாத்தியக் கூறும் இருக்கு. படுக்கப் போகும் போது அறையைப் பூட்ட அவங்க மறந்திருக்கலாம். பிறகு

Scanned by CamScanner

எழுந்திருக்கும் போது, காலையை ஒட்டினு வெச்சுக்கோ, நினைவு வந்து தாழ்ப்பாள் போட்டிருக்கலாம்.''

''பொய்ரெட்... நிஜமா இப்படித் தான் நீ நினைக்கிறியா....?!''

''அடடா...! இப்படித்தான்னு நான் சொல்லலே.... ஆனா இருக்கலாம். இன்னோர் அம்சம் பற்றிப் பார்ப்போம்... திருமதி எமிலிக்கும் திருமதி மேரிக்கும் இடையே நடந்ததா நீ கொஞ்சமா கேட்ட உரையாடலிலிருந்து, நீ என்ன முடிவுக்கு வர்ரே...?''

''அதை இப்போ நான் மறந்தே போயாச்சு'' என்றேன் சிந்தனையாய். ''அது எந்த வழியிலும் புரிஞ்சுக்க முடியாத ஒரு துண்டு வசனம். தலைக்கனமும் கர்வமும் யாரோடும் சுலபமாய் கலக்காமல் தனித்தே இருக்கும் குணமும் கொண்ட வித்தியாசமான மேரி போன்ற ஒரு பெண், அவங்களுக்குத் துளியும் சம்புந்தமில்லாத ஒரு சமாச்சாரத்துக்குள்ளே போய் மூக்கை நுழைச்சுக்கிட்டு மிருகமானது --- நம்ப முடியாத ஆச்சரியமாகத் தானிருக்கு.''

''சரியா சொன்னே. இது, அப்படி ஒரு குணாதிசயம் கொண்ட பெண் செய்யக் கூடியதே அல்ல.''

''ஆச்சரியம் தான்'' என ஒப்புக் கொண்ட நான், ''போகட்டும்'' என்றேன். ''அது முக்கியமில்லாதது. நம்ம கணக்குல சேர்த்துக்க வேண்டாதது.''

பொய்ரெட்டிடமிருந்து உறுமல் உருவானது.

''நான் உனக்கு என்ன சொல்லியிருக்கேன்...?! எல்லாத்தையும் நாம் கணக்குல வெச்சுக்கணும்... நாம் கொண்டு போகிற கோட்பாட்டுக்கு உதவாட்டா, ஒதுக்கி வைப்போம்... பிறகு கோட்பாட்டோட தொடர்ந்து பயணிப்போம்... ஆனா தூர எறிஞ்சுடக் கூடாது. சரியா...!''

''என்ன சரியோ! ஓய்வெடுக்க வந்த இடத்துல தலைவலி! பார்ப்போம்!''

''சரி பார்ப்போம்!''

அவன் தங்கியிருந்த ஜாகையை நாங்கள் அடைந்திருந்தோம். என்னை அழைத்துக் கொண்டு முதல் தளத்திலிருந்த அவனது அறைக்குப் போனான் அவன். சிகரெட் எடுத்துக் கொண்டோம். திறந்திருந்த ஜன்னலின் அருகே, கீழேயிருக்கும் கிராமமே அமைதியின் சொர்க்கபுரியாய் தெரியும்படி அமைத்துக் கொண்டு, இரண்டு நாற்காலிகளை இழுத்துப் போட்டுக் கொண்டோம்.

Scanned by CamScanner

புத்தும்புது காற்று வெதுவெதுப்பாயும் மிக இதமாயும் தழுவிற்று. இன்றும் கொளுத்தும் வெயில் இருக்கப் போகின்றது.

அப்போது, கீழே, சற்று தொலைவில், உயரமான ஆனால் மெலிந்திருந்த ஒரு மனிதன், தலைதெறிக்க ஓடி வந்துக் கொண்டிருந்த காட்சி, சட்டென என் கவனம் முழுவதையும் கைது செய்தது. அவனை உற்றுப் பார்த்தேன்... அவனது முகத்திலிருந்த பாவம், அசாதாரணமாயிருந்தது... பயக் கலவரம் மற்றும் சமாதானமற்ற கிளர்ச்சி ஆகியவற்றின் கலவை அது.

''பார் பொய்ரெட்!'' - காட்டினேன்.

அவன் முன்னால் கொஞ்சம் வளைந்து வந்து நிமிர்ந்து பார்த்தான்.

''அட...'' என்றான். ''இவன் பெயர் மேஸ். அந்த வேதியியல் கடைக்காரன். அவன் இங்கேதான் வந்துக்கிட்டு இருக்கான். அப்பப்பா... என்ன ஓட்டம்...!''

நாங்களிருந்த வீட்டுக்கு முன்னால் வந்து நின்றான். அவனுக்கு அப்படி மூச்சிரைத்தது. சில நொடிகள் தயங்கி நின்றான். வலமும் இடமும் பார்த்தான். கண்கள் குழப்பத்தில் வெகுண்டு விரிந்திருந்தன. பிறகு, விட்ட வேகத்தில் ஓடி உள்ளே வந்தவன், கதவை அப்படி தட்டினான்!

''பொறுமை பொறுமை...! ஒரு நிமிஷம்...!'' - ஜன்னல் வழியாக இவனும் வேகமாய் கத்தினான்! ''வந்துக்கிட்டே இருக்கேன்.''

அவனைத் தொடரும்படி சைகைக் காட்டிக் கொண்டு, துரிதமாய் படியிறங்கிய பொய்ரெட், கதவைத் திறந்தான்.

குறையாத அதே ஓட்டத்தோடு திபுதிபுவென்று உள்ளே வந்து விழுந்தான் மேஸ்.

''ஓ, திரு. ஹெர்குல் பொய்ரெட்! தொந்தரவு செய்றதுக்கு மன்னிக்கணும்! நீங்க மாளிகையிலிருந்து கிளம்பி இங்கே வந்துட்டதா இப்போ தான் கேள்விப்பட்டேன்.''

''ஆமாம். ரெண்டு பேரும் இப்போதான் வந்தோம்.''

இளைய மேஸ் அவனுடைய உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டான். அவன் முகம் கிளர்ந்துக் கிடந்தது.

''திடுதிப்பென்று இறந்துவிட்ட திருமதி எமிலி பற்றியே கிராமமெங்கும் பேச்சு. எல்லாம் என்ன சொல்றாங்கன்னா ---'' என்றவன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, ''விஷம் வெச்சுட்டாங் களாமே...!'' என்றான்.

Scanned by CamScanner

எந்த பாவமுமற்றே இருந்தது பொய்ரெட்டின் முகம்.

''மருத்துவ அறிக்கை தான் அது பற்றியெல்லாம் நமக்கு விளக்க முடியும் - மேஸ்!''

''ஆமாம்... அது சரிதான்... பின்னே எப்படி...'' என்றெல்லாம் இட்டு நிரப்பித் தடுமாறினான் இளையவன். அமைதியற்ற அவனது துடிப்பு இப்போது கூடிக்கொண்டே போனது. பட்டென்று பொய்ரெட்டின் கையைப் பிடித்திழுத்து அவனது கையால் கவ்விக் கொண்ட அவன் மிக ரகசியமாய், ''ஒண்ணே ஒண்ணு மட்டும் என்கிட்டே சொல்லிடுங்க திருமிகு பொய்ரெட்... ப்ளீஸ்'' என்றான். ''அது ஸ்டிரிச்நைன் இல்லியே...? ம்...? அப்படித்தானே...? இல்லியே...?!''

பொய்ரெட் பதிலுக்கு என்ன சொன்னான் என்பது எனக்கு விழவேயில்லை. பட்டும் படாமல் தான் என்னவோ சொன்னான். உடனே வந்த மேஸ் ஓடியே விட்டான். கதவை மூடிய பொய்ரெட்டின் கண்கள் என் கண்களைச் சந்தித்தன.

''ஆமாம்'' என்று ஆழ்ந்து ஆமோதித்த அவன், ''விசாரணையின்போது வந்து சாட்சி சொல்லப் போகும் முக்கியமானவன் - இவன்'' என்றான்.

மிக மெதுவாக படியேறி சிந்தனையோடு மாடிக்கு வந்தோம். ஏதோ சொல்ல நான் வாய் திறந்தேன். ஆனால், அவனுடைய ஆளுமையான கைகளை அமர்த்தி என்னை அமைதி காக்க உணர்த்தி விட்டான்.

''இப்போ ஒண்ணும் வேண்டாம் நண்பா, ஒண்ணும் பேச வேண்டாம். கொஞ்சம் தனிமை எனக்கு வேணும். என் மனசு கொஞ்சம் தடுமாறியிருக்கு. அது சமாதானமா இல்லே.''

வரைந்த ஓவியம் போல, துல்லிய அமைதியில், பத்து நிமிடம் அமர்ந்திருந்தான் அவன். பல உணர்ச்சிகளைக் கொட்டி புருவ அசைவுகள் மட்டும் விளைந்துக் கொண்டிருந்தன.... அவனுடைய கண்கள் கொஞ்சங் கொஞ்சமாக பச்சை நிறங் கண்டன. கடைசியில் நீண்ட பெருமூச்சினை விடுவித்தான்.

''இனி நலமே. கஷ்ட காலம் போயிடுச்சு. இப்போ எல்லாமும் அடுக்கப்பட்டு விட்டன.... வரிசையா பிரிக்கப்பட்டு விட்டன. ஆனாலும், இன்னும் இந்த வழக்கு தெளிவாகலே - இல்லே, இல்லே! அத்தனை சிடுக்கு நிறைஞ்ச வழக்கு இது! இது என்னைப்

பைத்தியமாக்குது.... *என்னை* - ஹெர்குல் பொய்ரெட்டை...! நாம முக்கியமா கொள்ள வேண்டிய உண்மைகள் ரெண்டு இருக்கு.''

''அவை என்னென்ன?''

''ஒண்ணு, நேற்று நிலவிய தட்பவெப்பம். அது ரொம்ப முக்கியம்.''

''ஆனா, அது ரம்மியமாயில்லே இருந்தது!'' - நான் இடைமறித்தேன். ''பொய்ரெட்... நீ என்னைக் குழப்பறே...!''

''இல்லேப்பா, இல்லே. வாசல்ல வைக்கப்பட்டிருக்கும் வெப்பமானி 30 காட்டிச்சு. இதை மறந்துடாதே, என் இனிய நண்பா. நாம செய்யற சவாரியை வழிநடத்தற ஒரே சவுக்கு - இது.''

''அந்த ரெண்டாவது?''

''அந்த ரெண்டாவது உண்மை... திரு. ஆல்ஃபிரட் வித்தியாச மான விசித்திரமான உடைகளை அணிகிறார் என்பதும், அவர் தேவையேயில்லாம நீண்ட தாடி வளர்க்கிறார் என்பதும், அவர் மூக்குக் கண்ணாடி அணிகிறார் என்பதும்.''

''பொய்ரெட்... நீ விளையாடாம முக்கியமாத்தான் பேசிக்கிட்டிருக்கேனு என்னால நம்பவே முடியலே.''

''நான் துளியும் விளையாடலே ஹேஸ்டிங்ஸ்.''

''ஆனா நீ இப்போ சொன்னதெல்லாம் - சிறுபிள்ளைத் தனமானவை.''

''கிடையாது. இவை மிக முக்கியமானவை.''

''எப்படியா போ. இதோ பார்... ஒருவேளை விசாரணையின் போது திட்டமிட்டே இந்த ஆல்ஃபிரட் கொலை செய்திருக்கான்னு முடிவு எழுதி நீதிமன்றத்துக்கு அனுப்பறாங்கன்னு வெச்சுக்கோ... உன் கோட்பாடெல்லாம் என்ன ஆகும்?''

''எந்த வகையிலும் அதை அசைக்க முடியாது. ஏன்னா... எத்தனை மண்டைங்க விசாரணையிலே உட்கார்ந்தாலும்... ஒண்ணா சேர்ந்து அத்தனையும் தப்புப் பண்ணலாம்! சாத்தியமிருக்கு! ஆனா அது நடக்காது. ஒண்ணு தெரியுமா.... கிராமத்துப் பஞ்சாயத்து அத்தனை ஜூரரா ஒரு தீர்ப்பை எழுதி வம்புல மாட்டிக்கப்

பிரியப்படாது...! மேலும், திரு. ஆல்ஃபிரட், கிராமத்தை ஆளும் முதல் ஆள் எனும் தகுதியில இருக்காரு. இதெல்லாம் தவிர முக்கியமா'' என்ற பொய்ரெட், சாந்தமாய் சொன்னான் : ''அப்படி ஒண்ணு நடக்க நான் அனுமதிச்சுடக் கூடாது!''

''நீ அனுமதிக்க மாட்டியா?''

''ஆமாம். அப்படி நடக்கக் கூடாது.''

புரிந்துக் கொள்ளவே முடியாத ஆச்சரியமாய் எனக்கு முன்னால் அமர்ந்திருந்த அந்த அசாதாரண குள்ள மனிதனைப் பார்த்தேன். தற்போது நிச்சயப்படுத்தி அவன் குறிப்பிட்டதில், பிரம்மாண்டமான நம்பிக்கையில் இருந்தான் அவன். இப்படி நான் நினைப்பதை அறிந்துக் கொண்டவனாய் பேசினான்:

''ஆமாம், ஆமாம், நண்பா, ஆமாம். நான் என்ன சொன்னேனோ அதை நிச்சயம் செய்வேன்... செய்யத்தான் போறேன். ஆமாம்... நீ நினைச்ச மாதிரி நடக்கக் கூடாது.''

எழுந்துக் கொண்டான். கையை என் தோள்களில் பதித்து நின்றான். அவனுடைய உடலே பெரும் மாற்றம் கண்டது. அவன் கண்களில் கண்ணீர்த் துளிகள் பூத்தன. ''இப்போ... இறந்துப் போய்விட்ட அந்தப் பரிதாபத்துக்குரிய திருமதி எமிலியை நினைக்கிறேன். அவங்களை யாரும் அதிகப்படியா... மனசுக்கு மனசா... உளப்பூர்வமா நேசிக்கலே... உண்மை தான். இருந்தும் அவங்க எல்லோருக்கும் பல தர்மம் பண்ணியிருக்காங்க... குறிப்பா... என்னைப் போன்ற வேற்று நாட்டு மக்களுக்குக் கூட... பெல்ஜிய நாட்டவருக்குக் கூட...! நான் அவங்களுக்குக் கடன் பட்டிருக்கேன்.''

அவனை ஆசுவாசப்படுத்த குறுக்கிட்டேன்.... ஆனால் என் முயற்சியை அவன் பெருக்கித் தள்ளி விட்டான்.

''உனக்கு ஒண்ணு சொல்றேன் ஹேஸ்டிங்ஸ். அவங்களுடைய கணவனான திரு. ஆல்ஃபிரட்டை - என்னிடமிருந்து வரவுள்ள ஒரு வார்த்தை அவரைக் காப்பாத்திடும் எனும் நிலைமை இருக்கும் போது - அவரை மட்டும் நான் கைதாக விட்டுட்டேன்னா... திருமதி எமிலி என்னை ஜென்மத்துக்கும் மன்னிக்க மாட்டாங்க.''

அத்தியாயம் ஆறு

## மரண விசாரணை

~

மரண விசாரணைக்கு முன்னால் கிடைத்த இடைவேளையில், பொய்ரெட், மிகவும் நம்பத்தகுந்த உண்மையான துப்பறியும் நிபுணனாய் நடந்துக் கொண்டான். திரு. வேல்ஸூடன் இரண்டு முறை ரகசிய ஆலோசனை செய்தான். இடையே கிளம்பி கிராமத்துக்குள் சற்றே நீண்ட நடை போய் வந்தான். அவன் இப்படிச் செய்யும் போதெல்லாம், என்னை நம்பி, என்னையும் அவன் கூடவே வைத்துக் கொள்ளவில்லையே என்ற ஆதங்கம் என்னுள் எந்த அளவுக்குக் கூடிக் கொண்டே போனதோ, அந்த அளவுக்கு, எதை விரட்டிக் கொண்டு அவன் இப்படியெல்லாம் செய்கிறான் என்பதும் எனக்கு விளங்காமலே இருந்தது.

ஒருவேளை அந்த ரமோலாவின் பண்ணைக்குப் போய் ஏதாவது விசாரித்துக் கொண்டு வருகிறானோ என்று எனக்குப் பட்டது; இதற்கு காரணம் உண்டு. புதன்கிழமை சாயங்காலமாய் அவனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது.... நானும் வயல் வழி நடந்து அவன் இருப்பான் என்ற நம்பிக்கையில் அவன் ஜாகைக்குப் போனேன். அவன் அங்கு இருப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லாமல் போனது. திரும்பினேன். பண்ணை வரைக்கும் போய் பார்ப்போம் என்று அதிக நாட்டமில்லாமல் கிளம்பினேன். அப்போது நாடி தளர்ந்த ஒரு முதியவரை எதிர் கொண்டேன். என்னை ஏளனமாய் அவர் பார்த்தார்..

''நீங்க மாளிகையிலிருந்து தானே வர்றீங்க?'' - அவர் கேட்டார்.

''ஆமாம். என் நண்பனைத் தேடிக்கிட்டு வந்தேன். இந்தப் பக்கமா போயிருப்பானோனு சந்தேகம்.''

''குள்ளன்? இல்லே? பேசும்போது கையை வீசி வீசி பேசுவார்? சரியா? இங்கே தங்க வந்திருக்கிற பெல்ஜியன்களில் ஒருத்தர்.''

''ஆமாமாம்'' என்றேன் நான் ஆர்வமாய். ''அப்போ அவனைப் பார்த்தீங்களா?''

Scanned by CamScanner

''இங்கேயே அவர் வந்திருக்கார். ரெண்டு தடவை. உன் நண்பனா? எல்லாம் அந்த மாளிகையில கொட்டம் அடிக்க வந்திருக்கீங்க...? ம்...?'' - அவருடைய ஏளனம் இன்னும் கூடிக் கொண்டே போனது.

''சரி... மாளிகையில இருக்கிற ஆண்கள் எல்லாம் இங்கே ஏன் அடிக்கடி வராங்க?'' என்று எத்தனை தூரம் முக்கியத்துவம் தராதது போல் கேட்க முடியுமோ கேட்டேன்.

இதுகூட தெரியாதா என்பது போல என்னைப் பார்த்து கண் சிமிட்டினார் அவர்.

''ஒருத்தர் வருவார். பேர் சொல்ல மாட்டேன். செம தாராளமானவர்'' என்றவர் உடனேயே, ''அய்யைய்யோ... வாயைக் கிளறாதீங்க. பை-பை'' என்று மூட்டையைக் கட்டினார்.

நான் தீவிரமாய் நடக்கலானேன். எனில் எவிலின் ஹோவோர்ட் மனதிலிருப்பவை சரிதான்...! 'செம தாராளமானவர்...' - ஆல்ஃபிரட்டின் தாராள மனப்பான்மை நினைவுக்குள் வர, அதனால் சட்டென்று ஈட்டியாய் குத்திய வெறுப்புணர்வின் கடும் வலி, தாள முடியாத அளவுக்கு என்னைத் தாக்கியது. அந்த சுவாரஸ்யமும் விறுவிறுப்பும் நிறைந்த நாடோடிப் பெண் தான் நடந்துள்ள குற்றத்தின் அஸ்திவாரமா? அல்லது ஊற்றாய் பீறிட்டடிக்கும் பண ஆசையா? இரண்டின் கலவையாகவும் இருக்கலாம்!

ஒரு விஷயத்தில், விநோதமான பிடிவாதத்தினை இந்த பொய்ரெட் கொண்டிருப்பது பிடிபட்டது. சண்டை நடந்த நேரம் பற்றி முடிவெடுப்பதில், நானி தவறு செய்கிறாளோ என என்னிடம் ஓரிரு முறை அவன் குறைபட்டுக் கொண்டதுண்டு. குரல்கள் எகிறி ஒலித்ததை அவள் கேட்டது 4 அல்ல, அது 4.30 என, அவளிடம் திருப்பித் திருப்பிச் சொன்னான்.

ஆனால் நானியோ மசியவில்லை. இருந்தாலும்... அவள் கூக்குரலாய் குரல்களைக் கேட்ட நேரத்திற்கும், அவள் உள்ளே டீயை ஐந்து மணிக்குக் கொண்டு போனதற்கும் இடையே, ஒரு மணி நேரமோ அல்லது அதற்கும் மேலோ நகர்ந்திருக்கிறது.

மரண விசாரணை, ஸ்டைல்ஸ் எஸ்டேட்டை ஒட்டியே இருந்த 'ஸ்டைல்ஸின் கிளை' எனும் ஒரு பெரிய இடத்தில், வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. சாட்சியளிக்கத் தேவையேற் படாததால், நானும் பொய்ரெட்டும், அருகருகே, நடப்பவற்றைப் பார்க்க உட்கார்ந்துக் கொண்டோம்.

Scanned by CamScanner

ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் முடிக்கப்பட்டன. மரண விசாரணைக்கு வந்திருந்த நீதிமன்ற அதிகாரிகள் பிரேதத்தைப் பார்த்தனர்... அது திருமதி எமிலியே என சாட்சியம் தந்தார் ஜான்.

மேற்கொண்டு கேள்விகள் கேட்ட போது அன்று விடிகாலைப் பொழுதில் தூக்கத்திலிருந்து அவர் உலுக்கி எழுப்பப்பட்டதையும் அதையொட்டி பிறகு நடந்த சம்பவங்களையும் ஜான் விவரித்தார்.

அடுத்து மருத்துவ சாட்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. குண்டு மணி நிசப்தம் நிலவ, விஷம் குறித்த துறையில் மாபெரும் நிபுணத்துவம் வாய்ந்து விளங்கிய ஒரு சிலரில் முதன்மையான அந்த லண்டன் மருத்துவ நிபுணரின் மீது அனைத்துப் பார்வைகளும் குவிந்து நின்றன.

குறுகிய சில வார்த்தைகளில், பிரேதப் பரிசோதனை முடிவின் சாராம்சத்தை அவர் முன்வைத்தார். சாதாரணமாய் புரியாத மருத்துவப் பதங்களையும் வார்த்தைகளையும் வழித்து வெளியே போட்டு விட்டால் கிடைக்கும் தகவல் இதுதான்:

ஸ்டிரிச்நைன் விஷம் தாக்கப்பட்டதால் திருமதி எமிலிக்கு மரணம் சம்பவித்துள்ளது. விஷத்தை வைத்து கணித்ததன்படி, மூன்றரை மருந்துகளுக்குக் குறையாமல் அவர் உட்கொண்டிருக்க வேண்டும் என்று சொல்ல முடிகிறது.... அல்லது இன்னும் ஒரு மாத்திரை கூடவும் இருக்கலாம்.

''தெரியாம இத்தனை மாத்திரைகளை அவங்க எடுத்துக் கொள்ள வாய்ப்புகள் இருக்கா?'' - கேட்டார் மரண விசாரணை நீதிபதி.

''அப்படி நடக்க முடியாதுனு தான் சொல்லணும். பூச்சிகளைக் கொல்ல என்று பயன்படுத்தப்படும் வேறு சில விஷங்களைப் போல, ஸ்டிரிச்நைன், வீடுகளில் பயன்படுத்தப்படும் ஒரு விஷம் கிடையாது.... அதோட விற்பனையில் கூட நிறைய கட்டுப்பாடுகள் இருக்கு.''

''நீங்க மேற்கொண்ட பரிசோதனைகளில், ஏதாவது, விஷம் எப்படி அவங்க உடம்புல செலுத்தப்பட்டிருக்கும் என்பதை கண்டுபிடிக்க உங்களுக்குத் துப்பு தந்ததா?''

''ம்ம்.''

''டாக்டர் வில்கின்ஸ் வந்து சேருவதற்கு முன்னாடியே நீங்க ஸ்டைல்ஸ் மாளிகைக்கு வந்துட்டீங்க?!''

Scanned by CamScanner

''அப்படியே. வழியில வண்டியைப் பார்த்தேன்... எத்தனை சீக்கிரம் முடியுமோ அத்தனை சீக்கிரமா உள்ளே ஓடிப் போனேன்.''

''அப்புறமா சரியா என்ன நடந்ததுனு எங்களுக்குப் புரிய வைக்க முடியுமா?''

''நான் திருமதி எமிலியின் அறைக்குள்ளே நுழைந்தேன். அந்தக் கணத்துல... நரம்பெல்லாம் திருகின ஒரு பயங்கர வலிப்பில் அவங்க கிடந்தாங்க. என் பக்கமா திரும்பி, மூச்சு காற்றுத் தேடியபடி, 'ஆல்ஃபிரட்... ஆல்ஃபிரட்' அப்படினு தவிச்சாங்க.''

''இந்த ஸ்டிரிச்நைன், இரவு சாப்பாட்டுக்குப் பிறகு அவங்க கணவரால் கொண்டு போய் தரப்பட்ட இரவு நேரத்துக் காபியில கலந்து திருமதி எமிலிக்குக் கொடுத்திருக்க வாய்ப்புகள் இருக்கா?''

''வாய்ப்பு இருக்கு. ஆனா ஸ்டிரிச்நைன், சடுதியில் தன் வேலையை செஞ்சு முடிச்சுடும் ஒரு வீரிய விஷம். அதை முழுங்கின ஓரிரு மணி நேரங்களுக்குள்ளாகவே அதனுடைய விபரீத ஆபத்தான குணங்களெல்லாம் வரிசையா தெரிய ஆரம்பிச்சுடும். சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் அதனுடைய வீரியம் தெரிய சற்று தாமதமாகலாம்... ஆனால் அந்த சந்தர்ப்பங்கள் எதுவுமே இந்த வழக்குல காணலே. இரவு சாப்பாடு முடிஞ்சதும் எட்டு மணியையொட்டி திருமதி எமிலி காபி குடிச்சதா நான் நினைக்கிறேன்... ஆனா, அதன் அறிகுறிகளோ, மறுநாள் காலை வரை வெளியே தெரியவேயில்லை. இது, எவ்வித குழப்பத்துக்கும் இடம் தராம, நிச்சயமா ராத்திரி ரொம்ப நேரம் கழிச்சு தான் அது சாப்பிடப்பட்டிருக்கு என்பதை ஒளிவு மறைவின்றி குறிப்பிடுது.''

''திருமதி எமிலி, நடுராத்திரிக்குப் பிறகு கோ-கோ குடிக்கும் வழக்கத்துல இருந்திருக்காங்க. இந்த ஸ்டிரிச்நைன் அதுல கலந்து கொடுக்கப்பட்டிருக்கலாமா?''

''முடியாது. நானே, அந்த வால் பாத்திரத்திலிருந்த கோ-கோவின் காய்ந்த திரவத்தை எடுத்துக்கிட்டு போய் பரீட்சை செய்து பார்த்தேன். அதுல ஸ்டிரிச்நைனின் இருப்பே இல்லை.''

எனக்கு அருகில் உள்ளூர உண்டாகும் சிரிப்பில் இதமாக பொய்ரெட் மூழ்கியிருப்பதைக் கவனித்தேன்.

''இது உனக்கு தெரியுமா? எப்படிடா தெரியும்.'' - நான் முணுமுணுத்தேன்.

''பேசாம கவனி.''

Scanned by CamScanner

''இந்த ஸ்டிரிச்நைன் இருக்கே...'' - டாக்டர் தொடர்ந்துக் கொண்டிருந்தார்: ''அதுக்கு அசாத்திய கசப்பு குணம் உண்டு. 70,000 மடங்குல சும்மா ஒரே ஒரு மடங்கு ஸ்டிரிச்நைன் கலந்திருந்தாலும் கண்டுபிடிச்சுடலாம். கடும் சகப்பான சுவை கொண்ட திரவத்தால மட்டும் தான் இதன் கசப்பை மூடி மறைக்க முடியும். அப்படி ஒரு முகமூடியைத் தரும் வலிமையற்றது --- கோ-கோ!''

நீதிமன்றத்தின் இன்னோர் அங்கத்தினர், இதே குணம் தானா காபிக்கும் என அறிந்துக் கொள்ள விழைந்தார்.

''கிடையாது. காபிக்கென்று ஒரு கடும் கசப்பு குணம் உண்டு. ஸ்டிரிச்நைனின் கசப்பினை மறைத்து வைக்குமளவுக்கு அதிகமான கசப்பு அது.''

''எனில், காபியில தான் விஷம் கலந்து ஏற்றப்பட்டிருக்க முடியும்னு நீங்க கருதறீங்க... கண்களுக்குப் புலப்படாத ஏதோ விளங்கா காரணங்களால் அதனுடைய இயக்கம் தாமதமாகியிருக்கு.''

''ஆமாம். ஆனா, அந்தக் கோப்பை, உருத் தெரியாத அளவுக்கு சுக்குநூறா நொறுக்கப்பட்டு சிதைக்கப்பட்டு விட்டதால, அதனுள்ளிருந்த பொருட்கள் பற்றிய பரிசோதனை, சாத்தியமில்லாம ஆயிடுச்சு.''

டாக்டர் பௌரீஸ் அளித்த சாட்சியம் இத்துடன் நிறைவுக்கு வந்தது. அடுத்து வந்த டாக்டர் வில்கின்ஸின் சாட்சியம், பௌரீஸ் தந்த சாட்சியம் ஒவ்வொன்றையும் மேலும் உறுதிப்படுத்தும் வகையில் இருந்தது. தற்கொலையாயிருக்குமோ என்ற சந்தேகம் எழுப்பப்பட்ட போது அதனை அடி வரை மறுத்தார். மரண மடைந்தப் பெண்மணி பலஹீனமான இருதயத்தால் வாழ்ந்து வந்தாரே ஆனாலும் மிக ஆரோக்கியமான உடல்நலம் கொண்டிருந்த தாகவும், சந்தோஷமாகவும் மனச்சிதைவுகள் அற்றும் இருந்து வந்தார் என்றும் வில்கின்ஸ் கூறினார். தன் உயிரைத் தானே மாய்த்துக் கொள்ளும் ஒரு நிலையில் அவர் வாழவில்லை என்றார்.

அடுத்து லாரன்ஸ் அழைக்கப்பட்டார். அவரது சாட்சியம், அவருடைய சகோதரன் சொன்னது போலவே அமைந்திருந்ததால், முக்கியமற்றுப் போயிற்று. சாட்சிக் கூண்டிலிருந்து கீழே இறங்க வேண்டிய நேரம்... அப்போது சற்று நின்று, தயங்கி, பின் சொன்னார்:

''அனுமதிக்கப்பட்டால் ஓர் ஆலோசனை தர பிரியப்படுகிறேன்.''

மறுப்பாரோ என்று நீதிபதியை லாரன்ஸ் பார்க்க... அவரோ விறுவிறுப்பாய், ''நிச்சயமா திரு. லாரன்ஸ். இந்த வழக்கின் உண்மையை அடையத்தான் நாங்க எல்லாரும் இங்கே கூடியிருக்கோம். மேற்கொண்டு தெளிவுப்படுத்தும் எதுவும் வரவேற்கப்படுகின்றன'' என்றார்.

''இது என்னுடைய சிறு ஊகம்'' - விவரித்தார் லாரன்ஸ். ''நான் தப்பா கூட இருக்கலாம். ஆனா, இன்னும் எனக்கு, என் தாயாரின் மரணம் ஓர் இயற்கையான மரணமாக இருக்குமோனு தான் தோணிக்கிட்டே இருக்கு.''

''இப்படி ஒரு முடிவை எப்படி நீங்க எடுத்தீங்க, திரு. லாரன்ஸ்?''

''என் தாயார், மரணம் சம்பவித்த நாளிலும்... அதுக்கு முன்னாடி கொஞ்ச காலமாகவும், ஸ்டிரிச்நைன் அடங்கிய டானிக் ஒன்றை எடுத்துக்கிட்டிருந்தாங்க.''

''ஆஹ்...'' - சொன்னார் நீதிபதி.

ஏனைய விசாரணை அதிகாரிகளும் ஈடுபாடாய் கவனித்தனர்.

''இப்படி ஒரு மருந்தைத் தொடர்ந்து கொஞ்ச காலமா எடுத்துக்கறதாலே, எதிர்பாராத மரணம் நிகழ்ந்த சம்பவங்கள் இருக்க வேண்டும் என்பது என் எதிர்பார்ப்பு. இது மட்டுமில்லை...! அவங்களுக்கே தெரியாம.. எதிர்பாராம... இந்த டானிக்கைக் கொஞ்சம் அளவுக்கதிகமா எடுத்துக்கிட்டிருக்கலாமே.... இது சாத்தியமில்லையா என்ன...?''

''மரணமடைந்த திருமதி எமிலி அன்றைய தினம் வரை ஸ்டிரிச்நைன் சாப்பிட்டிருக்காங்கனு... இந்த வழக்குல இப்போ தான் முதல் முறையா கேள்விப்படறோம், திரு. லாரன்ஸ்.''

டாக்டர் வில்கின்ஸ் மீண்டும் இதற்காக அழைக்கப்பட்டார். சொல்லப்பட்ட ஊகத்தைக் கடுமையாய் அவர் விமர்சித்தார்.

''திரு. லாரன்ஸ் சொல்லும் ஊகம் சாத்தியமேயில்லாத ஒன்று. எந்த டாக்டரும் இதே கருத்தைத் தான் சொல்வாங்க. ஸ்டிரிச்நைன்... ஒரு வகையில சொல்லப் போனா... தொடர் விஷம் தான். ஆனா, அந்த குணம், இப்படி திடுதிப்பென்று மரணத்தை ஏற்படுத்துகிற அளவுக்குப் போகவே போகாது... ஏன்னா அதால அப்படி முடியாது. அவங்களுக்கு நீண்ட நாட்களா தீராத கொடும் வியாதி இருந்திருந்தா கூட இதை ஒத்துக்கலாம். அப்படி எதுவுமே திருமதி எமிலிக்கு இல்லாத பட்சத்துல, இந்த விவாதமே முழு முட்டாள்தனமானது.''



Scanned by CamScanner

''அவர் சொன்ன ரெண்டாவது ஊகம்...? திருமதி எமிலி அவங்களே அறியாம அதிக டானிக் குடிச்சிருப்பாங்க, என்பது?''

''மூன்று மடங்கு... அல்லது நான்கு மடங்கு குடிச்சிருந்தா கூட மரணம் சம்பவிச்சிருக்காது. திருமதி எமிலி, ஒருமுறை மருந்து தயாரிச்சு வாங்கும் போது நிறையா செஞ்சு வாங்கி கிடப்புல வெச்சுப்பாங்க... இது அவருடைய பழக்கம். பிரேதப் பரிசோதனையில் அளிக்கப்பட்ட ஸ்டிரிச்நைன் அளவை வெச்சு பார்க்கப் போனா, மரணம் சம்பவிக்க, ஒரு பாட்டில் டானிக் முழுக்க அவங்க குடிச்சிருக்கணும். தெரியாத செஞ்சிருந்தாலும், அப்படியா செஞ்சிருப்பாங்க...?''

''அப்படினா, அவங்க மரணத்தை உண்டாக்குவதற்கு, டானிக், நிச்சயமா ஒரு கருவியா இருந்திருக்க முடியாதுனு, நாங்க இந்த ஊகத்தை ஒதுக்கித் தள்ளிடலாமா?''

''நிச்சயமா. இது நம்பத்தகுந்த ஊகமே கிடையாது.''

சற்றுமுன் இடை புகுந்த அதே அதிகாரி, இப்போது முன் வந்து, இந்த டானிக்கைத் தயாரித்த மருந்துக்காரன் தவறுதலாக கலவையை செய்திருக்கலாமோ என்று சந்தேகத்தைக் கிளப்பினார்.

அது எப்போதுமே சாத்தியம் தான் என பதிலளித்தார் டாக்டர்.

ஆனால், அடுத்து அழைக்கப்பட்ட நானி, இந்த சாத்தியக் கூறையும் ஒதுக்கித் தள்ள வைத்தார். அந்த டானிக் மருந்து புதிதாக செய்யப்பட்ட ஒன்று அல்ல என்றார். பல நாட்களாக உபயோகப்படுத்தப்பட்டது என்றும் விளக்கினார். மரண இரவன்று, அந்த டானிக் குடுவையின் கடைசி மடக்கினைத் தான் திருமதி எமிலி உபயோகப்படுத்தியிருக்கிறார்.

ஆக டானிக் பற்றி இடையில் எழுந்த சிறு புயல் களையப் பட்டது. நீதிபதி தன்னுடைய பணியை விட்ட இடத்திலிருந்து தொடரலானார்; நானியிடமிருந்து... அவளுடைய எஜமானியின் அவசர மணி அலறலைக் கேட்டு அவர் அடித்து பிடித்துக் கொண்டு எழுந்தது... உடனேயே வீட்டிலுள்ள அனைவரையும் எழுப்பியது --- ஆகியவற்றைக் கறந்து முடித்ததும், அன்று மதியம் நடந்த வாய்த்தகராறுக்குத் தாவினார்.

நானி இங்கு இதற்கு தந்த சாட்சியம், நானும் பொய்ரெட்டும் ஏற்கெனவே விலாவாரியாக கேட்ட ஒன்று தான். ஆகையால், இங்கு இதனைத் திருப்பித் தராமல் தவிர்த்து விடுகிறேன்.

Scanned by CamScanner

அடுத்த சாட்சி - திருமதி மேரி ஜான்.

வந்து நிமிர்ந்து நின்றார். அதிக ஓசையற்ற, அதே சமயம் விளக்க மாய் கேட்கும்படியாய், படபடப்பற்ற முழு அமைதியில் பேசினார். நீதிபதியின் ஆரம்பக் கேள்விகளுக்கு, வழக்கம் போல் காலை 4.30 மணிக்கு அலாரம் ஒலிக்கத் தான் எழுந்ததையும், உடை மாற்றிக் கொண்டிருக்கும்போது, கனமான ஏதோவொன்று அதீத ஓசையெழுப்பி விழுந்ததைக் கேட்டுப் பதற்றம் அடைந்ததையும் சொன்னார்.

''ஒருவேளை அது கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த அந்த மேஜையாயிருக்கும்?'' என்று குறிப்பிட்டார் நீதிபதி.

''நான் என் அறைக் கதவைத் திறந்தேன்'' - தொடர்ந்தார் மேரி: ''கவனித்தேன். ஒரு சில நிமிடங்கள்ல ஓர் அபாய மணி சத்தமா அலறிச்சு. நானி ஓட்டமா வந்து என் கணவனை எழுப்பினாள். அத்தனை பேருமா சேர்ந்து என் மாமியார் அறைக்கு ஓடினோம்... ஆனா அது பூட்டியிருந்தது.''

நீதிபதி மேரியை நிறுத்தினார்.

''இந்த நிகழ்வு பற்றி மேலும் உங்களைத் தொந்தரவு செய்ய அவசியமில்லைனு நெனக்கிறேன். இதுக்கு அப்புறம் என்ன நடந்தது என்பது பற்றி எங்க எல்லோருக்குமே தெரியும். அதனால, இதுக்கு முன்னாடி நாள் நடந்த வாய்த் தகராறு பற்றி நீங்க கேட்ட அத்தனையையும் விளக்கிச் சொன்னீங்கன்னா எங்களுக்கு ரொம்ப உதவியாயிருக்கும்.''

''நானா?''

கேட்ட மேரியின் குரலில் மேட்டுமையான அகந்தை இருந்தது. தலையைத் திருப்பி அவரது கழுத்தில் தொங்கிய பெரிய சங்கிலியொன்றை அழகு செய்வது போல் சரிசெய்துக் கொள்ளலானார். ''எதுக்காகவோ நேரத்தைக் கடத்துகிறார்!'' - எனும் எண்ணம் தங்கு தடையின்றி எனக்குள் உதித்தது.

தாட்சண்யமின்றி, ''ஆமாம்... நான் கேள்விப்பட்டேன்...'' என்று தொடர்ந்த நீதிபதி, ''அந்த பிரத்யேக அறையின் அகலமான ஜன்னலை ஒட்டி வெளியே போடப்பட்டிருக்கும் நீளமான பெஞ்சில் உட்கார்ந்து, நீங்க படிச்சிக்கிட்டு இருந்ததா தகவல் இருக்கு'' என்றார்.

எனக்கு இது ஒரு புது செய்தி... ஓரக்கண்ணால் பொய்ரெட்டைப் பார்த்தபொழுது அவனுக்கும் அப்படியே என்பது தெரிந்தது.

Scanned by CamScanner

''ஆமாம்...'' என்று மேரி பதில் சொல்வதற்கு முன்னால், சீக்கிரத்தில் கவனித்துவிட முடியாத அளவுக்கு ஒரு சிறு இடைவெளி.... ஓரிரு நொடிகள் தயக்கம்.... அவரிடம் இருந்தது.

''பிரத்யேக அறையின் அந்த ஜன்னல் கதவு திறந்திருந்தது... இல்லையா?''

''ஆமாம்'' என இப்போது பதில் சொல்லும்போது அவருடைய முகம் சர்வ நிச்சயமாய் சற்றே வெளிறியது.

''அப்படினா நிச்சயமா உள்ளிருந்து வந்த குரல்களை உங்களால் கேட்காம இருந்திருக்கவே முடியாது... அதுவும் அந்தக் குரல்கள் கோபத்தின் உச்சத்தில் இருந்தபோது, வரவேற்பறையை விட, நீங்க உட்கார்ந்திருந்த இடத்துல நல்லாவே கேட்கும்.''

''இருக்கலாம்.''

''அந்தத் தகராறில் நீங்க கேட்டவற்றை இப்போ அப்படியே திருப்பிச் சொல்ல முடியுமா?''

''நான் எதையும் அப்போ கேட்டது மாதிரியே எனக்கு நினைவில்லை.''

''அதாவது... எந்தக் குரல் ஓசையையுமே கேட்கலே, அப்படினா சொல்ல வர்றீங்க?''

''ஓ... கேட்டேன்... குரலோசையைக் கேட்டேன்... ஆனா அந்தக் குரல்கள் என்னென்ன பேசின என்று நான் கேட்கலே'' - இப்போது அவரது முகவாய் சற்றே சிவந்துப் போனது. ''தனிப்பட்ட உரையாடல்களைக் கேட்கும் பழக்கமே எனக்கு கிடையாது.''

நீதிபதி விடாமல் துளைத்தார்.

''உங்களுக்கு *ஒண்ணு கூடவா* நினைவில்லை...? ஒண்ணு கூடவா, திருமதி ஜான்? காற்று வாக்குல வந்து விழுந்த ஒரு வார்த்தை அல்லது ஒரே ஒரு பதம்... அது தனிப்பட்ட உரையாடல் தான் என்று விளக்கும் ஒரே ஒரு அட்சரம் கூடவா உங்களுக்கு கேக்கலே?''

மேரி நிறுத்தினார். அவர் துணுக்குற்றுப் போனாலும், வெளியில் அவரது குணப்படி வழக்கம் போல் சாந்தமாகவே தோன்றினார்.

''ஆமாம்; எனக்கு நினைவிருக்கு. திருமதி எமிலி என்னவோ சொன்னார்... என்னனு நிச்சயப்படுத்தி சொல்லுமளவுக்கு எனக்கு நினைவில்லை... அது... கணவன் மனைவிக்குள்ளே பிணக்கு உண்டாவது குறித்து.''

Scanned by CamScanner

''ஆங்...'' என்ற நீதிபதி திருப்திகரமாய் சாய்ந்துக் கொண்டார். ''இது நானி என்ன கேட்டேன் என்றாரோ அதோட கூட ஒத்துப் போகுது. ஆனா, மன்னிக்கணும் திருமதி ஜான்... அது ஒரு தனிப்பட்ட குடும்ப உரையாடல்னு தெரிஞ்ச பிறகும் கூட நீங்க அங்கிருந்து அகன்றுவிட முயற்சி செய்யலையா? எங்கே உட்கார்ந்திருந்தீங்களா அங்கேயே இருந்தீங்களா?''

அவரது செக்கச் சிவந்துப் போயிருந்த கண்களின் ஒளியை நான் அப்போது கவனித்தேன்... அந்தக் கணத்தில், நிச்சயமாய் நீதிபதியைப் பிடித்து இழுத்துக் கிழித்துத் தான் போட்டிருப்பார் இந்த அகங்கார மேரி...! ஆனால் ஏனோ தெரியவில்லை... அப்படி செய்யவில்லை! கூடுமான வரைக்கும் அமைதியாய் பதில் சொன்னார்:

''நான் நகரலே. எங்கே உட்கார்ந்திருந்தேனோ அங்கே ரொம்ப வசதியா இருந்தேன் நான். என் கவனம் முழுவதையும் புத்தகத்து மேல வெச்சிருந்தேன்.''

''இவ்வளவுதான் நீங்க எங்களுக்கு தரக்கூடிய தகவல்களா?''

''இவ்வளவுதான்!''

மேரியுடனான விசாரணை முடிந்தது. ஆனாலும், நீதிபதி முழுவதுமாக திருப்தியடைந்தாரா என்பதில் எனக்கு சந்தேகமிருந்தது. நினைத்தால் திருமதி மேரியால் இன்னும் சொல்ல முடியும் என்ற சந்தேகம் அவருக்கு இருந்ததாய் தோன்றியது.

ஆமி... கடை ஊழியன்... அடுத்து அழைக்கப்பட்டான். ஸ்டைல்ஸில் தோட்டக்காரனாயிருக்கும் வில்லியமுக்கு 17 ஆம் தேதி மத்தியானம் ஓர் உயில் பத்திரத்தை விற்றதாக அவன் சாட்சியம் அளித்தான்.

தோட்டக்காரர்கள் வில்லியமும் மேனிங்கும், ஆமியைத் தொடர்ந்து வந்து, சாட்சி கையொப்பம் போட்டது குறித்து சொன்னார்கள். மேனிங் நாலரை மணிக்கு என்றான். வில்லியம் அதற்கும் முன்னாடி இருக்கும் என்ற கருத்திலிருந்தான்.

சிந்தியா அடுத்து.

அவள் சாட்சி சொல்வதற்கு விஷயம் கொஞ்சம் தானிருந்தது. நடந்த களேபரம் பற்றி அவளுக்கு ஒன்றுமே தெரியாமலிருந் திருக்கிறது... மேரி எழுப்பும் வரை.

''டேபிள் கவிழ்ந்து ஏற்படுத்திய ஓசையை நீங்க கேட்கவே யில்லையா?''

''இல்லை. நான் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தேன்.''

நீதிபதி சிரித்தார்.

''நல்ல மனசிருந்தால் நல்லா தூக்கம் வருது'' என்றார். ''நன்றி சிந்தியா. அவ்ளோ தான். அடுத்து எவிலின் ஹோவார்ட்.''

ஹோவார்ட், 17 அன்று மாலை திருமதி எமிலி இவருக்கு எழுதிய கடிதத்தை ஒப்படைத்தார். நானும் பொய்ரெட்டும் அதனை ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். நேர்ந்துள்ள துயரச் சம்பவத்துக்கு உதவும்படி மேற்கொண்டு புத்திசாலித்தனமாக அதில் எதுவும் கிடையாது. அது, நேயர்களுக்காக:

டியர் எவிலின், ஜூலை 17

நமக்குள் புகைந்துக் கொண்டிருக்கும் திடீர் பகையை, நாம் அணைத்து விடக் கூடாதா? என் அன்பான கணவனுக்கு எதிராக, நீ சொன்ன விஷயங்களை என்னால் மன்னிக்கவே முடியவில்லை. அதனால் தான் அத்தனை கோபம்.

எனக்கும் வயதாகி விட்டது. தாங்க முடியவில்லை... உன் துணை வேண்டுமடீ.

உன்னை அளவற்று நேசிக்கும்,

உன் அன்புநிறை

எமிலி

அங்கத்தினர்களிடம் அது அனுப்பப்பட்டது. அவர்கள் அதனை கவனமாக ஆராய்ந்தனர்.

''இதனால் நமக்கு எந்தப் பேருதவியும் ஏற்பட்டுடலே'' என்றார் மரண விசாரணை நீதிபதி, ஒரு பெருமூச்சுடன். ''அன்னிக்கு மத்தியானம் நடந்த நிகழ்வுகள் பற்றிய எந்தக் குறிப்பும் இதுல காணோம்.''

''என்ன காணோம்... கையில இருக்கிற நெய் போல விஷயம் தெளிவாயிருக்கு'' என்று துளியும் அஞ்சாது, சின்னதாய் சொன்னாலும் சுருக்கென்று சொன்னார் எவி. ''என்னருமை கிழவி.... திருமதி எமிலி... தான் ஒரு முழு முட்டாளாக்கப்பட்டிருப்பதை அப்போது தான் புரிந்துக் கொண்டிருக்கிறார் என்பதை, இது, குழப்பமில்லாம சுத்தமா காட்டுதே!''

''அப்படியெல்லாம் எதையும் இந்தக் கடிதம் காட்டிடலே'' என சுட்டிக் காட்டினார் நீதிபதி.

''ம்ம். நீங்க தப்பு! தான் தவறாயிட்டோம் என்பதை என்னிக்குமே இந்த எமிலியால் ஒப்புக்க முடியாது. ஆனா எனக்கு அவளை நல்லாத் தெரியுமே! அவ என்னைத் திரும்பி எதிர்பார்த்தா. அதே சமயத்துல நான் சொன்னதெல்லாம் சரியே என்பதையும் அவ ஒத்துக்க மாட்டா. அதனால தலையைச் சுத்தி மூக்கைத் தொட்டிருக்கா. ஈகோ, பலருக்கு இருக்கே.''

அவருக்கே உரித்தான தந்தி வாசகங்கள். நீதிபதி சிரித்துக் கொண்டார். வக்கீலும். வழக்கம்போல், எவிலின் ஹோவோர்ட், அனைவருக்கும் நெருங்கிய ஒரு பொது முகமாகி விட்டார்!

''இப்போ நடக்கிற கூத்தெல்லாம் - முழு முழு வீண்'' என்று விடாமல், அஞ்சாமல், நீதி சபையையே கேலியாய் மேலும் கீழும் பார்த்தபடி தொடர்ந்தார் எவி. ''இங்கே, பேச்சு... பேச்சு... பேச்சு...! இதுக்கெல்லாம் காரணம் யார்னு அத்தனை பேருக்கும் தெரிஞ்சிருந்தும் ---''

நீதிபதி போதும்டா சாமி எனும் தொனியில் இடைமறித்தார்.

''நன்றி எவிலின். போதும்!''

இதற்கு ஒப்புக் கொண்டு எவி இறங்கியதும், விடுதலை உணர்ந்து அவர் பெருமூச்சு விடுவித்தது போலிருந்தது!

இப்போது தான் அந்நாளின் முக்கியப் பகுதியே அரங்கேறியது. நீதிபதி, மேஸ்... மருந்துக் கடை வேதியியல் நபர்... அவனை அழைத்தார்.

Scanned by CamScanner

வெளிறிப் போய் அலறிப் புடைத்து ஓடிவந்த நமது இளையவன். நீதிபதியின் ஒரு கேள்விக்கு, தான் ஓர் அங்கீகரிக்கப்பட்ட மருந்துத் தயாரிக்கும் வேதியியல் பட்டதாரி என்றும், இந்தக் கடைக்கு இப்போது சமீபத்தில் தான் வேலைக்கு சேர்ந்ததாயும் சொன்னான்.

''திரு. மேஸ்... நீங்க, ஸ்டிரிச்நைன் எனும் பொருளை சட்ட விரோதமாக யாருக்காவது விற்றிருக்கீங்களா?''

''ஆமாம், ஸார்.''

''இது எப்போது நடந்தது?''

''கடந்த திங்களிரவு, ஸார்.''

''திங்களா? செவ்வாய் இல்லே?''

''இல்லே ஸார். திங்கள். 16.''

''யாருக்கு அதை வித்தீங்கன்னு சொல்ல முடியுமா?''

இந்தச் சமயத்தில் குண்டூசி கீழே விழுந்திருந்தால் கேட்டிருக்கும்... அப்படி ஒரு நிசப்தம்!

''தெரியும் ஸார். அது திரு. ஆல்ஃபிரட்டுக்கு.''

அனைத்துக் கண்களும், உடனடியாய், திரு. ஆல்ஃபிரட் எங்கு மரம் போல் உணர்ச்சிகள் காட்டாது அமர்ந்திருந்தாரோ அங்கு நகர்ந்தன. பழி சுமத்தும் வார்த்தைகள் இளைஞனின் உதடுகள் வழி வழிந்ததும், சிறு எதிர்ப்பு அவரிடம் ஏற்பட்டது. தனது இருக்கையிலிருந்து எழுந்து விடுவார் என்று கூட நினைத்தேன்... ஆனால் அவர் அமர்ந்தேயிருந்தார். தாள முடியா ஆச்சரியம் அவர் முகத்தில் உதித்தது.

''நீங்க என்ன பேசறீங்கன்னு தெரிஞ்சு தான் பேசறீங்களா?'' ஸ்திரமாய் கேட்டார் நீதிபதி.

''நிச்சயமா ஸார்.''

''ஸ்டிரிச்நைனை, யார் கேட்கிறாங்கன்னு வித்தியாசம் பார்க்காம உங்க கடையிலே விற்பீங்களா?''

இப்படிப் பாய்ந்த நீதிபதிக்கு முன்னால் ஏற்கெனவே நடுங்கி சுருங்கிப் போயிருந்த மேஸ், மயங்கியே போனான்.

''அய்யய்யோ... கிடையாது ஸார்... அப்படியெல்லாம் இல்லே ஸார். அது, கிராமத்துப் பெரிய மனுஷனை எதிர்த்துக் கொண்டு வரும் வாடிக்கையாளர்களை இழந்து விடக் கூடாது என்று செய்து விட்ட விபரீதம்.''

Scanned by CamScanner

''இதுபோன்ற கொடிய விஷங்களை வாங்குவோரின் கையொப்பத்தைப் பதிந்து வைத்துக் கொள்ளும் வழக்கம் கிடையாதா?''

''இருக்கு ஸார். திரு. ஆல்ஃபிரட்டும் போட்டிருக்காரே.''

''அந்தப் புத்தகத்தை இங்கே கொண்டு வந்திருக்கீங்களா?''

''இதோ ஸார்.''

அது தரப்பட்டது. சில அதிகார எச்சரிக்கை வார்த்தைகளைச் சொல்லி மேஸை நகர்த்தினார் நீதிபதி.

பிறகு, அப்பழுக்கற்ற அமைதிக்கு மத்தியில், ஆல்ஃபிரட் அழைக்கப்பட்டார். இந்த வழக்கு எத்தனை இறுக்கமாக அவருடைய கழுத்தினைச் சுருக்கிக் கொண்டு வருகின்றது... இதை அவர் அறிந்துள்ளாரா... எனக்கு சந்தேகமாகவே இருந்தது!

நீதிபதி நேரடியாக வழக்குக்குள் நுழைந்து விட்டார்.

''கடந்த திங்களன்று சாயங்காலம், ஒரு நாய்க்கு விஷம் வைக்க வேண்டும் என்கிற காரணத்துக்காக, நீங்க, ஸ்டிரிச்நைன் விஷத்தை வாங்கினீங்களா?''

ஆல்ஃபிரட் பிசகாத அமைதியோடு பதில் தந்தார்:

''இல்லே. நான் வாங்கலே. ஸ்டைல்ஸில் எந்த நாயும் கிடையாது. ராத்திரியிலே வெளியிலே காவலுக்கு அவிழ்த்து விட ஒரே ஒரு நாய் மட்டும் இருக்கு. அதுவும் பிரமாதமான உடல்நலத்தோட இருக்கு.''

''கடந்த திங்களன்று திரு. மேஸின் மருந்து தயாரிக்கும் கூடத்திலிருந்து ஸ்டிரிச்நைன் வாங்கவே இல்லைனு நீங்க திட்டவட்டமா மறுக்கிறீங்களா..?''

''மறுக்கிறேன்.''

''அப்போ *இதையும்* மறுக்கிறீங்களா?''

அவருடைய கையொப்பம் பதியப்பட்டிருந்த ஏட்டினை நீதிபதி அவரிடம் ஒப்படைத்தார்.

''நிச்சயமா மறுக்கிறேன். இந்தக் கையொப்பம் போடப்பட்ட கையெழுத்து... என்னுடைய கையெழுத்திலிருந்து ரொம்ப விலகியிருக்கு. இப்போ காட்டறேன்.''

தனது சட்டைப் பையிலிருந்து பழைய உறை ஒன்றினை எடுத்த அவர் அதில் அவருடைய பெயரினை எழுதி அங்கிருந்த நீதிமன்ற அங்கத்தினர் ஒருவரிடம் கொடுத்தார். அது சுத்தமாக வித்தியாசமாயிருந்தது.

''அப்படினா திரு. மேஸ் கொடுத்த தகவலுக்கு நீங்க என்ன சொல்றீங்க?''

துளிகூட கலவரப்படாது ஆல்ஃபிரட் மிக சாந்தமாகவே சொன்னார்:

''திரு. மேஸ் தவறுதலா புரிஞ்சுக்கிட்டிருக்கணும்.''

நீதிபதி சில நொடிகள் தயங்கி விட்டு பிறகு சொன்னார்:

''திரு. ஆல்ஃபிரட்... விஷயங்கள் விளங்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாலும், சட்ட ரீதியான தேவை இப்போது விளைந்துள்ள தாலும்... ஜூலை 16, திங்களன்று, சாயங்காலத்துக்கு மேல் நீங்க எங்கே இருந்தீங்கன்னு சொல்ல முடியுமா?''

''உண்மையா சொல்றேன் --- என்னால நினைவுபடுத்த முடியலே.''

''இது முட்டாள்தனம், திரு. ஆல்ஃபிரட்'' - கடுமையாய் சொன்னார் நீதிபதி. ''ம்... மறுபடி யோசிங்க.''

ஆல்ஃபிரட் மறுத்துத் தலையசைத்தார்.

''என்னால சொல்ல முடியலே. வெளியே நடை போக போயிருக்கலாமோ அப்படினு நினைக்கிறேன்.''

''எந்தத் திசையிலே?''

''என்னால உண்மையா நினைவுபடுத்த முடியலியே.''

நீதிபதியின் முகத்தில் கோபம் கூடியது.

''அப்பொழுது யாருடைய துணையோடாவது இருந்தீங்களா?''

''இல்லை.''

''உங்க நடையின் போது வழியிலே யாரையாவது சந்திச்சீங் களா?''

''கிடையாது.''

''இது உதவாது'' என்றார் நீதிபதி வறட்சியாய். ''திரு. மேஸ் சர்வ நிச்சயமா நீங்கதான் மருத்துவக் கூடத்துல நுழைஞ்சு ஸ்டிரிச்நைன் வாங்கிக் கொண்டு போனீங்க என்று சாட்சி சொல்லியிருக்கும் நேரத்துல நீங்க இப்படி முரண்டு பிடிக்கிறீங்க... ஆகவே, அந்த சமயத்துல நீங்க எங்கே இருந்தீங்க எனும் விவரத்தைத் தராம, வேண்டும் என்றே நீங்க மறைப்பதா தான் நான் எடுத்துக்குவேன்.''

''அப்படி தான் எடுத்துக்கணும்னு நீங்க விரும்பினீங்கன்னா... எடுத்துக்குங்க.''

''ஜாக்கிரதை, திரு. ஆல்ஃபிரட்.''

பொய்ரெட் நிலையற்று பரபரவென்று சலனமடைந்தான்.

Scanned by CamScanner

''கடவுளே...!'' என முணுமுணுத்தான். ''இந்த முட்டாள் மனுஷன் கைது ஆகணும்னு விரும்பறானா?''

ஆல்ஃபிரட், அங்கு, அவர் மீது தவறான அபிப்ராயத்தைத் தான் உண்டாக்கிக் கொண்டிருந்தார். அவருடைய உப்பு சப்பற்ற சப்பைக் கட்டுகள் எதுவும் ஒரு சிறு குழந்தையைக் கூட சமாதானப்படுத்தாது. இருந்தாலும் கூட நீதிபதி உற்சாகமிழக்காமல் அடுத்த கட்ட விசாரணைக்குள் நுழைந்தார். இதற்காக பொய்ரெட் நீண்ட விடுதலைப் பெருமூச்சினை விடுவித்தான்.

''நீங்க, அன்று மதியம் உங்க மனைவியோட விவாதம் பண்ணியிருக்கீங்க... இல்லியா?''

''மன்னிக்கணும்'' என்று இடைமறித்தார் ஆல்ஃபிரட். ''தவறான தகவல் உங்களுக்குத் தரப்பட்டிருக்கு. என் அருமை மனைவியோட எவ்வித விவாதமோ, சச்சரவோ நான் பண்ணலே. சொல்லப் பட்டிருக்கும் முழு கதையும் முழுக்க பொய். உண்மையற்றது. மதியத்திலிருந்தே நான் வீட்டுல இல்லே.''

''இதை நிரூபிக்க உங்களுக்கு யாராவது இருக்காங்களா?''

பிடிவாதமும் பெருமையும் கலந்து, ''நான் சொல்லும் வார்த்தை இருக்கு'' என்றார்.

இதற்கு பதிலடி தர நீதிபதி மெனக்கெடவில்லை.

''உங்களுக்கும் உங்க மனைவிக்கும் இடையே நடந்த மனஸ்தாபத்தை, சூடம் ஏற்றி சத்தியம் செய்து சாட்சி தர, ரெண்டு சாட்சிகள் இருக்கு.''

''அந்த ரெண்டு சாட்சிகளும் நடந்ததைத் தப்புத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டிருக்காங்க.''

எனக்குப் புதிராய் போனது. மனுஷன் துளிகூட ஐயமின்றி ஸ்திரமாய் சொன்ன ஒவ்வொரு பதிலும் என்னை உலுக்கின. நான் பொய்ரெட்டைப் பார்த்தேன். அவன் முகத்தில் பூரிப்பினால் விளைந்த களிப்பு பரவிக் கிடக்க, காரணம் எனக்கு தென்பட வில்லை. கடைசியாய், 'ஆல்ஃபிரட் தான்...' என்பதில் அவனுக்கு நிறைவு வந்து விட்டதா?

''திரு. ஆல்ஃபிரட்...'' என்ற நீதிபதி, ''உங்க மனைவி இறக்கும் தறுவாயில் சொன்ன வார்த்தைகள் இங்கே திருப்பித் திருப்பி ஒப்பிக்கப்பட்டதை நீங்களும் கேட்டிருக்கணும்'' என்றார். ''அது பற்றி ஏதாவது விளக்கம் உங்களால தர முடியுமா?''

Scanned by CamScanner

''நிச்சயமா. என்னால முடியும்.''

''உங்களால முடியுமா?''

''எனக்கு இது ரொம்ப ரொம்ப வெளிப்படையான... சுலபமான ஒண்ணா தெரியுது. அந்த அறையில் வெளிச்சம் கம்மியாயிருந்தது. டாக்டர் பௌரீஸ், என்னைப் போலவே உயரமும் ஆகிருதியும் கொண்டவர்... மேலும், அவரும், என்னைப் போலவே தாடி வெச்சிருக்கார். மங்கலான வெளிச்சத்தில், அவள் துடித்துக் கொண்டிருந்த காரணத்தால், பரிதாபத்துக்குரிய என் அருமை மனைவி... அவரை, நான் தான்னு நெனச்சிருக்கா.''

''ஆஹ்...'' என நிமிர்ந்து முணுமுணுத்தான் பொய்ரெட். ''அப்படிப் போடு...! இது தான்... இதே தான்... இதுக்குப் பேர் தான் --- சர்ர்ர்ரியான ஊகம்...!''

''இது உண்மைனா நீ நெனக்கிறே?'' - கிசுகிசுத்தேன் நான்.

''நான் அப்படி சொல்ல வரலே. ஆனா இது நிச்சயமா பகுத்தறிவுள்ள புத்திசாலித்தனமான எண்ணம்... கருத்து.''

''நீங்க என் மனைவி கடைசில சொன்ன வார்த்தைகளை என் மேல் தெரிவிக்கப்பட்ட கண்டனமா பார்க்கிறீங்க---'', ஆல்ஃபிரட் தொடர்ந்துக் கொண்டிருந்தார். ''---மாறாக... அவை என்கிட்டே அபயமாய் முறையிடப்பட்ட வார்த்தைகள்.''

நீதிபதி இதனைச் சிந்தித்தார்.... பிறகு சொன்னார்:

''திரு. ஆல்ஃபிரட்... அன்று இரவு சாப்பாடு முடிஞ்சதும், நீங்களே காபியைக் கோப்பையில ஊற்றி உங்க மனைவிக்குக் கொண்டு போனதா என்கிட்டே தெரியப்படுத்தியிருக்காங்க.''

''நான் தான் ஊற்றினேன் என்கிற வரை - ஆமாம். ஆனால் நான் அதை அவளுக்கு எடுத்துக்கிட்டுப் போகலே. நான் தான் கொண்டு போகணும்னு இருந்தேன்... ஆனா, அதுக்குள்ளே, என் நண்பன் யாரோ ஒருத்தன் வந்து வாசல்ல காத்திருக்கிறதா சொன்னாங்க. ஆகவே காபியை அறையிலிருந்த மேஜையில வெச்சேன். ஒரு சில நிமிடங்களில் நான் மறுபடியும் அறைக்கு திரும்பிய போது, அது போயிடுச்சு.''

இந்த வாக்குமூலம் உண்மையாகவோ, அல்லது அப்படியில்லாமலோ, இருக்கலாம். ஆனால் இது திரு. ஆல்ஃபிரட் தரப்பில் முன்னேற்றம் ஏற்படுத்துவதாக அமையவில்லை. எப்படி

Scanned by CamScanner

யிருந்தாலும், அதில் விஷத்தைச் சேர்ப்பதற்கு இவருக்கு வேண்டிய அளவுக்கு கால அவகாசம் இருந்திருக்கிறது.

இந்தக் கட்டத்தில் பொய்ரெட் என்னை லேசாய் கிள்ளி, கதவருகே ஒன்றாய் உட்கார்ந்திருந்த இரண்டு நபர்களைச் சுட்டிக் காட்டினான். ஒருத்தன் குள்ளமாய், கூர்மையாய், கருமையாயிருந்தான். மற்றொருவன் உயரம், சிகப்பு.

ஓசையின்றி பொய்ரெட்டை என்ன விஷயம் என்று கேட்டேன். அவன் தனது உதடுகளை என் காதுக்குள் பொருத்தினான். ''அந்தக் குள்ளன் யார் என்று உனக்கு அடையாளம் தெரியுதா?''

நான் மறுத்துத் தலையசைத்தேன்.

''அது, உலகின் முதன்மை போலீஸ் துறையான ஸ்காட்லாண்ட் துறையின் துப்பறியும் இன்ஸ்பெக்டர் ஜேம்ஸ் ஜேக்கப் என்கிற ஜேப். இன்னொருத்தனும் அங்கிருந்து தான்'' என்றவன் முக்கியப் படுத்தி சொன்னான்: ''நடவடிக்கைகள் துரிதமா ஆரம்பிச்சிருக்கு நண்பா.''

அந்த இருவரையும் வேண்டுமென்றே உற்றுப் பார்த்தேன். போலீஸ்காரர்கள் என்று கண்டுபிடிக்க சர்வ நிச்சயமாய் அவர்களிடம் எவ்வித அறிகுறியும் காணப்படவில்லை. இவன் விளக்காவிட்டால், துப்பறியும் இலாக்காவினர் என நிச்சயமாய் நான் அவர்களை சந்தேகப்பட்டிருக்கவே மாட்டேன்.

இப்படி நான் அவர்களையே வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டிருக்கும் போது, காதுகளில் விழுந்த நீதிபதியின் விசாரணை முடிவு, என்னை உலுக்கியது:

''அடையாளம் தெரியாத நபராலோ அல்லது கூட்டத்தாலோ, மனதறிய செய்யப்பட்டுள்ள - கொலை.''

Scanned by CamScanner

அத்தியாயம் ஏழு

# பொய்ரெட் கடன்களை அடைத்தல்

~

நாங்கள் ஸ்டைல்ஸில் நடந்த விசாரணையிலிருந்து வெளியே வந்ததும், உடனடியாக என் கைகளை சிறு அழுத்தம் தந்து பிடித்து, ஓர் ஓரமாக இழுத்தான் பொய்ரெட். இதற்கான அவனுடைய காரணத்தை என்னால் புரிந்துக் கொள்ள முடிந்தது. ஸ்காட்லாண்ட் அதிகாரிகள் வெளியே வரட்டும் என காத்திருந்தான்.

சில நொடிகளில் அவர்கள் வெளியே வந்தார்கள். பொய்ரெட் தாமதிக்காது அவனாய் வலிய முன் சென்று இருவரில் சற்றே குள்ளமாய் இருந்தவரிடம் பேச்சினைத் துவங்கினான்.

''இன்ஸ்பெக்டர் ஜேப்... நீங்க ஒருவேளை என்னை மறந்துட்டீங்களோனு நினைக்கிறேன்...!''

''அதெப்படி பொய்ரெட்டைப் போய் மறக்க முடியும்...!'' - பீறிட்டார் ஜேப். அவரோடு வந்தவர் பக்கமாய் திரும்பிக் கொண்டார். ''நான் அடிக்கடி பொய்ரெட் என்பவர் பற்றி குறிப்பிட்டது நினைவிருக்கா? 1904ல் நானும் இவரும் சேர்ந்து உழைத்தோம் --- கள்ளக் கையெழுத்து குறித்த ஒரு கொலை வழக்கு அது. பிரேஸில் ஓடிட்டான் அவன். ஆஹ்... அதெல்லாம் எங்களுடைய பொன்னான நாட்கள்! பிறகு அந்த ப்ரௌன்...? லண்டனின் ஒண்ணாம் நம்பர் கேடி.... ரௌடி.... கொள்ளைக்காரன்... கொலைகாரன்... எல்லாம்...! அத்தனை போலீஸ்காரங்க மென்னியையும் பிடிச்சு திருகியவன் இந்த ப்ரௌன். திணறித் தத்தளிச்சுப் போனோம். பிறகு அவனை ஒரு குக்கிராமத்தின் கைக்கெட்டாத மூலையில மடக்கினோம் --- இதுக்கெல்லாம் திருமிகு பொய்ரெட் செய்த சாதுர்யமான உதவிகளுக்கு எத்தனையெத்தனை வந்தனங்கள் வேணும்னாலும் தரலாம்...!''

இத்தகைய நட்பு ரீதியான நினைவுகள் முடிந்ததும், நான் வட்டத்துக்குள் அழைக்கப்பட்டு துப்பறியும் இன்ஸ்பெக்டருக்கு

Scanned by CamScanner

அறிமுகப்படுத்தப்பட்டேன். இதற்கு பதிலாக, அவருடன் வந்திருப்பவரை, இன்ஸ்பெக்டரின் அலுவலக சூப்பரின்டெண் டென்ட் திரு. ஸாம்ஸன் என்று அறிமுகப்படுத்தினார்.

''இருவரும், இங்கே என்ன விஷயமா வந்திருக்கீங்கன்னு நான் கேட்க வேண்டிய தேவையிருக்காதுனு நினைக்கிறேன்...!'' என ஆரம்பித்தான் பொய்ரெட்.

உனக்கா தெரியாது என்று கேட்பது போல் கண்ணடித்த ஜேப், ''அவசியமே இல்லே'' என்றார். பிறகு, ''என்னைப் பொறுத்த வரைக்கும் இது ரொம்ப ரொம்ப தெளிவான வழக்கு'' என கருத்து தந்தார்.

ஆனால் இதற்கு பொய்ரெட் கவலையாய் பதில் தந்தான்: ''இந்தக் கருத்தில், உங்ககிட்டேயிருந்து நான் மாறுபடறேன்.''

''அட என்னப்பா நீங்க...'' - முதல் முறையாய் உதடு திறந்தார் ஸாம்ஸன். ''பளீர்னு அடிக்கும் சூரிய வெளிச்சம் போல வழக்கு, முழுசா, பிரகாசமா தெளிவாகுது. அந்த ஆள் கையும் களவுமா பிடிபட்டிருக்கான். இப்படியும் ஒரு முட்டாள் இருப்பானா என்பது தான் என்னை பிரமிக்க வைத்திருக்கும் விஷயம்.''

ஆனால், ஜேப், பொய்ரெட்டை மிகக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்.

''கொஞ்சம் பொறு ஸாம்ஸன்'' என்று சிறு புன்னகையோடு குறிப்பிட்டார் ஜேப். ''நானும் திருமிகு பொய்ரெட்டும் பல தடவை இதுக்கு முன்னால சந்திச்சிருக்கோம். இவருடைய தீர்ப்பைத் தவிர வேறு யாருடையதையும் நான் அவ்வளவு சீக்கிரத்துல ஏத்துக்க மாட்டேன். அவருக்குள்ளே ரகசியமா என்னவோ தெரிஞ்சு வெச்சிருக்கார் என்பது என் கணிப்பு... எனது இந்தக் கணிப்பு தப்பு கிடையாது... அப்படித் தானே பொய்ரெட்?!''

பொய்ரெட் சிரித்தார்.

''நான் சில ஸ்திரமான முடிவுகளுக்கு வந்திருக்கேன் --- ஆமாம்!''

ஸாம்ஸன் இன்னமும் நம்பிக்கையற்றவராகவே தெரிந்தார்.... ஆனால் ஜேப், ''கொஞ்சம் கவனி...'' என்று விட்டு பொய்ரெட் பற்றிய தனது பரிசீலனையைத் தொடர்ந்துக் கொண்டிருந்தார்:

''இதுவரைக்கும், இவ்வழக்கை, நாம வெளியிலிருந்து தான் பார்த்திருக்கோம். இது போன்ற வழக்குகளில் ஸ்காட்லாண்ட்

Scanned by CamScanner

போலீஸ் துறைக்கு நேரும் துரதிர்ஷ்டம் இதுதான். கொலையாளி வெளியே எங்கேயோ இருக்க... நாம தேடிக்கிட்டே இருப்போம்... விசாரணை முடிஞ்சும் கூட...! 'சம்பவ ஸ்தலத்தில் ஆரம்பக் கட்டத்திலேயே இருந்துவிட்டால்... அதன் அனுகூலங்களே அலாதி தான். இந்த இடத்தில் தான், பொய்ரெட் போன்றவர்கள் நம்மை விட ஏகமா முன்னேறிடறாங்க. பொய்ரெட் ஆரம்பக் கட்டத்திலிருந்து அங்கேயே இருக்கார்... சின்னச் சின்னதா ஏதாவது துப்பினைக் கண்டெடுத்திருப்பார். மரண விசாரணையின் சாட்சிகளை வைத்துப் பார்க்கும்போது, நீங்களும் நானும் இங்கிருப்பது எவ்வளவு நிஜமோ, அத்தனை நிஜம், திரு. ஆல்ஃபிரட் அவருடைய மனைவியைக் கொலை செய்திருப்பது...! ஆனா இதுக்கு எதிரா, திரு. பொய்ரெட்டைத் தவிர வேற யாராவது கருத்து சொல்லியிருந்தா... கேலிக் கூத்தாக்கியிருப்பேன். 'ஆல்ஃபிரட்டால் மனமறிய செய்யப் பட்டுள்ள கொலை' அப்படினு தீர்ப்பினை எழுதாம இந்த நீதிமன்றம் ஏன் பூசி மெழுகி விட்டுடுச்சுனு எனக்கு ஆச்சரியமா இருக்கு. அங்கத்தினர்கள் எல்லாரும் ஒண்ணா சேர்ந்து இப்படித் தான் தீர்ப்பு சொல்லியிருப்பாங்க... இந்த நீதிபதி தான் இழுக்கறார்னு தோணுது.''

''நீங்க பேசறதைப் பார்த்தா, ஆல்ஃபிரட்டைக் கைது பண்ண வேரண்ட்டோட வந்திருக்கிறா போல தோணுது'' என ஆலோசித்தான் பொய்ரெட்.

''இருக்கலாம்... இல்லாமலும் இருக்கலாம்...!'' - வறட்சியாய் சொன்னார் ஜேப்.

பொய்ரெட் அவரையே சிந்தனையாய் பார்த்தார். ''திரு. ஜேப்... நான் ரொம்ப பரபரப்பா இருக்கேன் தெரியுமா --- அவர் கைதாகி விடக் கூடாது என்பதில்!''

இதற்கு ஸாம்ஸனின் முகத்தில் எதிர்மறையான போர்வை தோன்றி விலகியது.

ஜேப், பொய்ரெட்டைக் கோமாளியைப் பார்ப்பது போல் பார்த்தார்.

''திரு. பொய்ரெட்... இப்படி ஏன் சொல்றீங்கன்னு கொஞ்சம் ஆழமா போய் விளக்க முடியுமா? நீங்க ஸ்தலத்திலேயே இருந்திருக்கீங்க. முடிவெடுப்பதுல எவ்வித தவறும் செய்திடக் கூடாது என்பதுல ஸ்காட்லாண்ட் எப்போதுமே ஸ்திரமா இருக்கு.''

Scanned by CamScanner

பொய்ரெட் சற்றே கவலையாய் தலையசைத்தான்.

''மிகச் சரியா... இதையே தான் நானும் நினைக்கிறவன். இப்போதைக்கு ஒண்ணு சொல்ல முடியும். உங்களுடைய வாரண்ட்டை உபயோகப்படுத்துங்க... ஆல்ஃபிரட்டைக் கைது செய்யுங்க. ஆனால் அது உங்களுக்கு எந்த நற்பெயரையும் பெற்றுத் தந்துடாது. அவருக்கு எதிரா நீங்க எடுக்கும் இந்த நடவடிக்கை உடனடியா தள்ளுபடியாயிடும். ஆமாம்.''

இதுதான் நடக்கும் என அதிகாரமாய் தனது விரல்களைச் சொடுக்கி நின்றான் அவன்.

ஜேப்'பின் முகம் கவலை கொண்டது. ஸாம்ஸனோ, சந்தேகம் தொனிக்க சப்புக் கொட்டினார். ஆச்சரியத்தால் அறையப்பட்ட நானோ குருடும் செவிடுமாய் ஆனேன்! பொய்ரெட்டுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று மட்டும் தான் என்னால் அப்போதைக்கு முடிவு கட்ட முடிந்தது.

வெளியிலெடுத்த கைக்குட்டையால் நெற்றிப் பரலைத் துடைத்து விட்டபடி, ''நான் உங்களுடைய வார்த்தையை ஒதுக்கி விட மாட்டேன், பொய்ரெட்'' என்றார் ஜேப். ''உங்க வார்த்தையை நான் அப்படியே ஏத்துக்கிறேன்... ஆனா எனக்கு மேல அதிகாரிங்க இருக்காங்களே... இப்படி எப்படிடா சொல்றேனு என்னை உலுக்கி எடுத்துடுவாங்களே...! மேற்கொண்டு நடவடிக்கைக்கு... எனக்கு இன்னும் கொஞ்சம் நீங்க விளக்கங்கள் தரக் கூடாதா?''

பொய்ரெட் இந்த அணுகுமுறையை ஏற்றுக் கொண்டவனாய் தோன்றியது.

''முடியும்'' என்றான் இறுதியில். ''இப்போதே சொல்வதற்கு எனக்கு சம்மதமில்லை தான். ஆனாலும் நிலைமை என்னை உந்துது. இப்போதைக்கு, இருவருக்கும் விளக்காமல், எனக்கு நானே ஓர் இருட்டறையில் அமர்ந்து வழக்கினை அணுகத் தான் விரும்பறேன். ஆமாம்... திரு. ஆல்ஃபிரட் கைது செய்யப்படக் கூடாது. இது எனக்கு நானே செய்துக் கொண்டுள்ள சத்தியம் --- இதோ, இங்கே உட்கார்ந்திருக்கும் என் நண்பன் ஹேஸ்டிங்ஸுக்கு இது தெரியும்! ஆங்... ஜேப்...'இப்போ நீங்க உடனடியா ஸ்டைல்ஸ் போறீங்களா?''

''ம்.... இன்னும் அரைமணி நேரத்தில். நீதிபதியையும் டாக்டரையும் முதலில் சந்திக்கப் போறோம்.''



Scanned by CamScanner

''சரி. கிளம்பும் போது என்னையும் கூப்பிடுங்க... இதோ... இந்த வழியில கடைசி வீட்டுல இருக்கேன். நானும் வரேன். அங்கே ஸ்டைல்ஸில திரு. ஆல்ஃபிரட்டே தருவார்.... அப்படி அவர் மறுத்தார்னா --- இதைத் தான் எதிர்பார்க்கிறேன்... நான் உங்களுக்கு அத்தனை நிரூபணங்களையும் தரேன்...! அவருக்கு எதிரான எந்த நடவடிக்கையும் கொஞ்ச நேரங்கூட தாக்கு பிடிக்காது என்பதற்கு, உங்களுக்கு முழு திருப்தி ஏற்படுத்துமளவுக்கு சாட்சிகளை நான் தரேன். சவால்?''

''ம்... சவாலே!'' - ஜேப்'பும் சந்தோஷமாய் ஒப்புக் கொண்டார். ''உங்களுக்கு, நான் சார்ந்த ஸ்காட்லாண்ட் துறை சார்பா பன்மடங்கு கடமைப்பட்டிருந்தாலும், இப்போதைக்கு, நீங்க சொல்றதுக்கு சாதகமா என்னால ஒரு சின்னஞ்சிறு துப்பினைக் கூட பார்க்க முடியலே. இதுதான் நிஜம். ஆனா நீங்க ஒரு சாதுரியம் அதிகம் நிறைந்த துப்பறியும் மேதை... இந்த வகையில அதிசயமானாவர்... ஆச்சரியமானவர். எனவே காத்திருக்கேன்.''

இரு துப்பறியும் துறையினரும் கிளம்பினர். நம்பிக்கையற்ற இறுக்க முகத்துடன் தான் போனார் ஸாம்ஸன்.

''இப்போ சொல்லு ஹேஸ்டிங்ஸ்'' - நான் மேற்கொண்டு ஒரு வார்த்தைப் பேசுவதற்குள், அவசரமாய் என் பக்கமாய் திரும்பினான் பொய்ரெட். ''நீ என்னடா நினைக்கிறே? சில எதிர்பாராத தருணங்களை நான் அந்த மரண விசாரணையின் போது எதிர்கொண்டேன். எதுவுமே பேசாம அந்த அளவுக்கு அழிச்சாட்டியம் பண்ணுவார்னு நான் துளிகூட எதிர்பார்க்கலே - ஆல்ஃபிரட்டைச் சொல்றேன். நிச்சயமா இது ஒரு கோழைத் தனமான... மனோதிடமில்லாத நடவடிக்கை.''

''ஹூம்...! 'கோழைத்தனமான' எனும் விளக்கத்தைத் தவிர இதுக்கு வேற விளக்கங்கள் இருக்கு'' - நான் குறிப்பிட்டேன். ''வழக்கு அவருக்கு எதிரா ஸ்திரமா இருந்தா, அவரால் எப்படி எதிர்த்து வாதாட முடியும் --- அமைதியா ஒத்துக்கிறதைத் தவிர...!''

''ஏன்... மறுக்க ஆயிரம் புத்திசாலித்தனமான வழிகள் இல்லையா என்ன..?'' என கத்தினான் பொய்ரெட். ''இதோ பார்... இந்தக் கொலையை நான் செஞ்சேன்னு எடுத்துப்போம். அதை மறைக்க என்னால ஏழு பாராட்டுதற்குரிய கற்பனைக் கதைகளை உருவாக்க முடியும்...! ஆல்ஃபிரட் கல்லா நின்னுக்கிட்டு மறுக்கிறதை விட, அற்புதமா ஒப்புக் கொள்ளும்படியா இருக்கும் இவை...!''

Scanned by CamScanner

நாங்கள் அவனது ஜாகைக்குள் நுழைந்திருந்தோம். இப்போது வழக்கப்பட்டிருந்த படிகளில் மளமளவென ஏறினோம். பொய்ரெட் தான் தொடர்ந்தான்:

''விஷயத்தை இப்போ நான் சொல்றா மாதிரி எடுத்துக்கிட்டு ஆராய்வோம். யாரோ ஒருவன்... பேச்சுக்கு எடுத்துப்போம்... அவனுடைய மனைவிக்கே விஷம் வைக்க முன்வரான். அவனுடைய புத்தி சாமர்த்தியம், உலகமறிஞ்ச ஒரு விஷயமா இருக்கட்டும். ஆக, அவனுக்கு சாதுர்யம் நிறைய இருக்கு. அவனை முழு முட்டாளா நினைக்கக் கூடாது. சரி.. எப்படி முடிக்கிறான்? தைரியமா, கிராமத்துல உள்ள மருந்துக் கிடங்குக்குப் போறான்... அபத்தமான கதை என்று நிரூபிக்கவல்ல ஒரு நாய் கதையை அங்கே முழக்கமாய் சொல்லி, அவனுடைய சொந்தப் பெயரிலேயே ஸ்டிரிச்நைன் வாங்கறான். அந்த விஷத்தை, வாங்கிய அன்றிரவே அவன் பிரயோகிக்கலே. மனைவியோட, மிருகத்தனமா ஒரு வாக்குவாதம் நடக்கும் நாள் வரைக்கும் காத்திருக்கான்... அப்போது தானே வீட்டிலுள்ள அனைவரது சந்தேகமும் இயற்கையா அவன்மீது குவியும்! தன்னைக் காத்துக் கொள்ள எவ்வித ஏற்பாடும் அவன் செஞ்சுக்கலே. தான் வேறிடத்தில் இருந்தது போன்ற நிழல் கதைகளையெல்லாம் அவன் ஏற்படுத்திக்கலே. விஷயம் கசிஞ்சதும் மருந்துக் கிடங்கிலிருந்து ஒருத்தன் நிச்சயம் முன் வந்து உண்மைகளை உடைப்பான் என்பதும் அவருக்குத் தெரியும். பொறு... பொறு... ஹேஸ்டிங்ஸ்...! எந்த முட்டாளும் இப்படி பண்ணமாட்டான் என்றும், தூக்குக் கயிறில் தொங்கும் தற்கொலையை செய்துக் கொள்ள நினைக்கும் புத்தி பேதலித்தவன் தான் இப்படி செய்வான் என்றும்... ப்ளீஸ், வாதாடாதே!''

இப்படி கேட்க நினைத்த நான் அமைதியானேன். ''ஆனாலும் --- பொய்ரெட்--- இன்னும் கூட--- எனக்கு இதுக்கெல்லாம்--- எந்த வித காரணமும் ---''

''எனக்கும் தான் ஹேஸ்டிங்ஸ். நான் சொல்றேனே... இது எனக்கும் புதிரா இருக்கு. எனக்கு – ஹெர்குல் பொய்ரெட்டுக்கு!''

''அவர் குற்றமற்றவர் என்று நீ நம்பினால், அவரே போய் ஸ்டிரிச்நைன் வாங்கியிருப்பதை நீ எப்படி கையாளப் போறே?''

''இது ரொம்ப சுலபம்டா. அவர் அதை *வாங்கலே.*''

''ஆனா திரு. மேஸ் இவரை அடையாளம் காட்டறார்.''

''ப்ச்... கண்ணைத் திற... கண்ணைத் திற...! திரு. ஆல்ஃபிரட் போலவே தாடி வைத்திருந்த ஒருவரைத் தான் மேஸ் பார்த்திருக்கான். ஆல்ஃபிரட் போலவே கண்ணாடி... அவரைப் போலவே பார்ப்போரின் கவனத்தைக் கவரவல்ல ஒரு வகையான உடை...! ஒரு குறிப்பிட்ட தூரத்துல இப்படி முகமும் உடலும் மறைக்கப்பட்ட நிலையில நின்றுக் கொண்டிருக்கும் ஒரு மனிதனை, மேஸால பிரத்யேகமா அடையாளம் காண முடியாதுடா! அதுவும் இந்த மேஸ் வேலைக்கு சேர்ந்தே ரெண்டு வாரம் தான் முழுசா ஆகுது. திருமதி எமிலியோ இதுவரை இன்னொரு மருந்துக் கிடங்கில தான் தொடர்புல இருந்திருக்காங்க. இத்தனை உண்மைகள் உள்ளே இருக்கு ஹேஸ்டிங்ஸ்.''

''அப்படினா --- நீ --- நினைப்பது ---''

''நண்பா... நான் அதிகம் முக்கியத்துவம் கொடுத்த ரெண்டு விஷயங்கள் உனக்கு நினைவில இருக்கா? இப்போதைக்கு முதலாவதை விட்டுவிடு... அந்த ரெண்டாவது?''

''விதவிதமா தோற்றம் தரும் வித்தியாசமான உடைகளை ஆல்ஃபிரட் அணிவது... கன்னங்கரு தாடி வெச்சிருப்பது... கண்ணாடி உபயோகிப்பது... ஆகிய உண்மைகள்.'' - நான் சொன்னேன்.

''மிகச் சரி. இப்போ ஒரு கேள்வி. யாரோ ஒருவன் ஜான் மாதிரியோ அல்லது லாரன்ஸ் மாதிரியோ தோற்றம் தர முயற்சி செய்யறாங்கன்னு வெச்சுப்போம். இது சுலபமா?''

''இல்லை'' என்றேன் நான் சிறு சிந்தனையோடு. ''ஒரு சிறந்த நடிகனால் ---''

''ஏன் அது சுலபமா இருக்காது?'' என இடைபுகுந்துக் கொண்டான் அவன். ''நான் சொல்லட்டுமா நண்பா! ஏன்னா, அவங்க ரெண்டு பேருமே மழுங்க சவரம் செய்யும் கேஸுங்க. பளபளன்னு வெளிச்சம் நிறைந்த உலகில இவங்களைப் போல வேஷம் கட்டணும்னா நடிப்பின் சிகரத்தைத் தொட்ட நடிகன் ஒருத்தன் தேவைப்படுவான்... மேலும் முக ஒற்றுமை கொஞ்சமாவது இருக்கணும்! இதெல்லாம் ஆல்ஃபிரட் போல தோன்ற தேவையேயில்லை. அவருடைய உடையலங்காரம்... கண்களை மறைக்கும் கண்ணாடி... இதெல்லாம் அவருடைய தோற்றத்துக்கே உரித்தான அடையாளங்கள். கேளு... கொலைகாரனுடைய முதல் திட்டம் என்னவாயிருக்கும்? சந்தேகத்தை அவனிடமிருந்து

Scanned by CamScanner

இன்னோர் இடத்துக்குத் திருப்பி விடுவது... அப்படித்தானே? இதை அவன் எந்த அளவுக்கு முழுமையா செய்யமுடியும்? வேறு யார் மீதாவது சந்தேகத்தைத் திருப்பி விட்டு விடுவதால்... சரியா?! இதுக்கு, அவனுடைய கைகளில் ஒரு மனிதன் தயாரா இருக்கான். ஆல்ஃபிரட் தான் குற்றவாளினு எல்லோரும் ஏற்கெனவே முடிவோடு இருப்பது ஓர் அனுகூலம். அவர்மீது உடனடியா சந்தேகம் திரும்பிவிடும் என்பது எழுதப்படாத சட்டம். ஆனா இதை நிரூபிச்சு நிலைநாட்ட ஒரு திடமான தெளிவான நிரூபணம் அவசியம்... அவரே போய் விஷம் வாங்கியதா சொல்றாங்க இல்லே.... அது மாதிரி...! இந்த வழக்குல ஆல்ஃபிரட் மாதிரி உடம்பு முழுக்க மறைத்து வாழும் விநோத தோற்றம் கையில இருக்கும் போது, இதை செய்யறதுல, என்ன கஷ்டமிருந்து விட முடியும்...! முக்கியமான ஒரு விஷயத்தைக் கவனத்துல வெச்சுக்கோ... இந்த மேஸ் பய திரு. ஆல்ஃபிரட் கூட பேசினதே கிடையாது. அப்படியிருக்கும் போது, ஆல்ஃபிரட் மாதிரியே உடை, கண்ணாடி, தாடி வெச்சுக்கிட்டு ஒருத்தன் வந்து நின்னா, அவன், ஆல்ஃபிரட்டா இல்லாமலும் இருக்கலாம் என்பது இவனுக்கு எப்படி தெரியும்...?!''

''இருக்கலாம்... இருக்கலாம்...'' என்றேன் நான் - பொய்ரெட்டின் விளக்கும் சாமர்த்தியத்துக்கு முன்னால் அடி பணிந்து! ''நீ சொல்றபடி தான் நடந்திருக்கு என்றாலும், திங்கட்கிழமை சாயங்காலம் எங்கே இருந்து தொலைஞ்சாருன்னு விளக்க இந்த மனுஷன் ஏன் வாய் திறக்கவே இல்லே?''

''ஆஹ்...! அதானே...! ஏன் சொல்லலே...?!'' என்றபடி அமைதியானான் அவன். ''ஒருவேளை கைது பண்ணியிருந்தா, நிலைமையின் தீவிரம் உணர்ந்து பேசியிருக்கலாம். ஓ... கைது வரைக்கும் வர்ரதை நான் விரும்பலே.. என்ன மாதிரியான ஓர் இக்கட்டுல நின்னுக்கிட்டு இருக்கார் எனும் நிலைமையின் தீவிரத்தை முதல்ல அவருக்கு நான் உணர்த்தணும். அவருடைய அமைதிக்குப் பின்னால அசிங்கமான ஏதோ ஒரு காரணம் தான் இருக்கு. அவர், அவருடைய மனைவியைக் கொல்லலே என்று நான் வாதாடினாலும் கூட... அவர் ஒரு பொறுக்கி வகை. கொலை இல்லாம மறைத்து வைக்க வேண்டிய அத்தியாவசியம் உள்ள வேறு ஏதாவது குற்றமாகூட இருக்கலாம்.''

''அது என்னவா இருக்கும்?'' என நான் மெதுவாய் கேட்டுக் கொண்டேன்.

Scanned by CamScanner

''உன்னால ஊகிக்க முடியலியா?'' என்றான் பொய்ரெட் சின்னதாய் சிரித்தபடி.

''இல்லை. உன்னால?''

''ஓ, பின்னே! கொஞ்ச நாளா எனக்கு ஒரு சிறு சந்தேகம் இருந்து வந்தது... அது சரியே என முடிவாயிடுச்சு.''

''நீ அதை என்னிடம் சொல்லவே இல்லே.'' - நான் எதிர்த்து வருத்தமாய் சொன்னேன்.

பொய்ரெட் அவன் இரு கைகளையும் மன்னிப்புக் கோரும் பாவனையில் விரித்தான்.

''மன்னித்து விடு நண்பா'' என்று என்னை நோக்கி உண்மையாய் சொன்னவன், கேட்டான் : ''இப்போ சொல்லு--- அவர் கைது பண்ணப்படக் கூடாதுனு இப்போது உனக்கு தெரியுதா?''

''இருக்கலாம்'' என்றேன் நான் சிறு சந்தேகமாய்.

என்னை வைத்தகண் வாங்காமல் கவனித்துக் கொண்டிருந்த பொய்ரெட் நீண்ட பெருமூச்சு விட்டான்.

''வாடா'' - பேச்சை மாற்ற எத்தனித்து சொன்னான். ''திரு. ஆல்ஃபிரட்டை விடு... மற்றபடி, நடந்த விசாரணையின் சாட்சிகள் பற்றி உனக்குள் என்னென்ன தோன்றின?''

''எல்லாம் நான் நெனச்ச மாதிரி தான் இருந்தது.''

''ஒட்டாம தனித்து நிற்கிற மாதிரி ஒரு சாட்சியும் உனக்குத் தோணலையா?''

இதற்கு, என் நினைவுகள் மேரி தந்த சாட்சிகளுக்கு சென்றன... ஆனால் அதை மறைத்து விட்டேன்.

எனவே அவனே ஆரம்பித்து வைத்தான்: ''லாரன்ஸோட வாக்குமூலத்தையே எடுத்துக்குவோமே...?''

நிம்மதியானேன். தொடர்ந்தேன் : ''ஓஹ்... லாரன்ஸ்...! இல்லியே... இதுல அசாதாரணமா எனக்கு ஒண்ணும் தெரியலியே! அவர்தான் எப்பவுமே நரம்பதிர்வு பேர்வழியாச்சே!''

''அவர் சொன்னாரே... அவங்க அம்மா குடிச்சுக்கிட்டு வந்த டானிக்கால தெரியாத்தனமா அவங்களுக்கு விஷம் ஏறியிருக்க லாம்னு... இது? இது அந்நியமா தெரியலே?''

''இல்லை. எனக்கு அப்படி தெரியலே. மருத்துவர்களே இது முட்டாள்தனமான பேச்சுனு சொல்லிட்டாங்க. ஆனா பொய்ரெட்... ஒரு சராசரி மனிதன் தருகிற இயற்கையான ஆலோசனை தானே இது...!''

Scanned by CamScanner

''ஆனா திரு. லாரன்ஸ் ஒரு சராசரி மனிதன் கிடையாதே. அவர் மருத்துவத் துறைக்கு படிக்க ஆரம்பிச்சவர் --- இது நீயே என் கிட்டே சொன்னது.''

''ஆமாம். உண்மை தான். நான் இதைப் பற்றி நினைக்கவே இல்லை'' - நான் உண்மையில் துணுக்குற்றுப் போனேன். ''இது *விசித்திரம்* தான்.''

பொய்ரெட் ஒப்புக் கொண்டான்.

''ஆரம்பத்திலிருந்தே இவரது நடத்தை ஒட்டும் ஒட்டாமலும் தனித்தே இருக்கு. வீட்டிலிருக்கும் எல்லோரையும்விட, இவர் ஒருத்தருக்கு மட்டும் தான் ஸ்டிரிச்நைன் விஷம் உள்ளே போயிருந்தா உருவாகவல்ல அறிகுறிகளை அடையாளம் காண முடியும்... இப்படியிருந்தும், குடும்பத்திலிருப்பவர்களில், இவர் ஒருவர் மட்டும் தான், அம்மா இயற்கை மரணம் அடைஞ்சிருக்கணும் எனும் கருத்தைத் திரும்பத் திரும்பத் தூக்கிப் பிடிச்சுக்கிட்டு இருக்கிறதை நாம் பார்க்கிறோம். இது விசித்திரம்... ஹேஸ்டிங்ஸ்! இதையே திரு. ஜான் சொன்னா நான் புரிஞ்சுப்பேன்... சந்தேகப்பட மாட்டேன். அவருக்கு எவ்வித மருத்துவ அறிவும் கிடையாது... ஆகவே இயற்கையா வரும் கருத்துனு உணரலாம். ஆனா இந்த லாரன்ஸ்... ம்ம். இன்னிக்கும் பாரு... அதே கருத்தை வலிய வந்து முன் வைக்கிறார். இதுல நாம நிறைய சிந்திக்க இடம் இருக்கு நண்பா.''

''ரொம்பக் குழப்புது'' - நானும் ஏற்றுக் கொண்டேன்.

''அப்புறம் - மேரி'' - அவனே தொடர்ந்தான்: ''தெரிஞ்ச எல்லாத் தையும் கொட்டாததுல, இது இன்னொன்று! அவங்களுடைய மனோபாவம் பற்றி நீ என்ன முடிவுக்கு வர்ரே?''

''என்ன முடிவு பண்றதுனே எனக்குத் தெரியலே. அவங்க திரு. ஆல்ஃபிரட்டை மூடி பாதுகாப்பாங்கன்னு நம்பவே முடியலே. இருந்தாலும் நடந்ததெல்லாம் அப்படித் தான் இருக்கு.''

இதையே பிரதிபலித்து தலையசைத்தான் பொய்ரெட்.

''ஆமாமாம். பைத்தியக்காரத்தனமா தானிருக்கு. அவங்க வெளியே சொல்ல மறுத்தாலும்.. ஒண்ணு மட்டும் நிச்சயம்... 'தனிப்பட்ட உரையாடல்' என்பதையும் மீறி அவங்க எல்லாத்தையும் முழுக்கக் கேட்டிருக்காங்க.''

''இருந்தாலும் அவங்க தான் குற்றவாளி பட்டியலில் கடைசியில வருவாங்க. அப்படி ஒரு பலம்.''

Scanned by CamScanner

''ரொம்ப சரிடா. அவங்களுடைய சாட்சி, ஒரு விஷயத்தை எனக்குக் *காட்டியிருக்கு*. நான் ஒரு தவறு செய்திருக்கேன் - இது தான் அது. நானி தான் சரி. அவங்க சொன்ன மாதிரி, தகராறு, ரொம்ப முன்னாடி, நாலு மணிக்கே --- *நடக்கலே.''*

நான் பொய்ரெட்டை ஆர்வமாய் பார்த்தேன். இதையே கறாராய் அவன் பிடித்துக் கொண்டிருப்பதற்கான காரணத்தை என்னால் புரிந்துக் கொள்ளவே முடியவில்லை.

''இன்னொரு அசாதாரணமான விஷயமும் இன்றைய விசாரணையின் போது வெளியே வந்தது'' என தொடர்ந்துக் கொண்டிருந்தான் பொய்ரெட். ''இப்போ, டாக்டர் பௌரீஸ். விடியற்காலையிலேயே முழு அலங்காரத்தைத் தயாரா செய்துக்கிட்டு *அவர்* என்னதான் பண்ணிக்கிட்டிருந்தார்? நம்முடைய புத்திசாலி டாக்டர் பௌரீஸ் மீது, நான் என்னோட கண்களை சற்று ஆழமாகவே பதித்து வைக்கணும்.''

''ம்...'' என்று கடிந்துக் கொள்வது போல சொன்ன நான், வஞ்சப் புகழ்ச்சி பாணியில், ''சாட்சிகளிடம் இன்னும் ஏதாவது குற்றங்குறை பாக்கி இருக்கா?'' என்றேன்.

புரிந்துக் கொள்ள மறுக்கிறாயே என்ற வருத்தத்தோடு ''நண்பா...'' என்று குறிப்பிட்டான் அவன். ''ஹேஸ்டிங்ஸ்... உன்கிட்டே முழு உண்மைகளும் சொல்லப்படவில்லை அப்படினு நீ உணரும் போது --- நிறைய பார்! முடிஞ்சா கொஞ்சம் வெளியே பார்! இப்போ இன்றைய விசாரணையையே எடுத்துப்போம்... நான் கிரகிச்சது தப்பா இல்லாத பட்சத்தில் --- ஒருத்தர்... அல்லது அதிகபட்சம் ரெண்டு பேர் --- எவ்வித ஒளிவு மறைவின்றி உண்மையை பேசினாங்க.''

''ஓ, பொய்ரெட்! நிச்சயமா லாரன்ஸையும் மேரியையும் இதுல நான் சேர்க்க மாட்டேன். ஆனா ஜான் இருக்காரு... எவிலின் ஹோவோர்ட் இருக்கு... அவங்க நிச்சயமா உண்மையைத் தானே பேசினாங்க...?''

''இவங்க ரெண்டு பேருமா, என்னருமை ஹேஸ்டிங்ஸ்...! ஒருத்தருக்கு நான் ஓ போடறேன் --- ஆனா, ரெண்டாவது நபருக்கு---''

அவனது பதில் எனக்கு அதிர்வைத் தந்தது. ஹோவோர்டின் சாட்சியம்... அது முக்கியத்துவம் இல்லாததாக இருந்த போதிலும்,

Scanned by CamScanner

கபடமற்று... நேருக்கு நேராய்... ஒளிவு மறைவேயில்லாது... மிக உண்மையாய், எவ்வகையிலும் எனக்குள் சந்தேகம் உண்டுபண்ணும் வகையில் அமையாது இருந்தது. ஆயினும், பொய்ரெட்டின் அதிநுட்ப புத்திக் கூர்மைக்கு முன்னால்... அவன் சொல்வதையே ஒப்புக் கொள்ளாது வேறன்ன செய்ய...!

''நீ அப்படி தான் நினைக்கிறியா?'' - கேட்டேன் நான். ''ஹோவோர்ட், வெளிப்படையாக உண்மையாக இருப்பவராய் தான் எனக்கு எப்பவுமே தெரியறார்... எப்பவுமே.''

பொய்ரெட் என்னை ஒரு தினுசான பொருளாக பார்த்தான். எதுவோ பேசத் தான் முனைந்தான்.... ஆனால் கட்டுப்படுத்திக் கொண்டு விட்டான்.

''செல்வி சிந்தியா கூட!'' என்று தொடர்ந்த நான் ''அவ கிட்டேயும் எவ்விதமான பொய்மையும் எனக்கு தட்டுப்படலே.'

''இல்லை தான். ஆனால் எந்த சப்தமும் கேட்கலேனு அவ சொல்றது மிக அந்நியமா இருக்கு, ஹேஸ்டிங்ஸ். கதவை ஒட்டி தூங்கிக்கிட்டு இருந்திருக்கா! ஆனா, திருமதி மேரி, தளத்தின் மறுபுறத்துல இருக்கிறவங்க, அவங்க மேஜை திரும்பி விழுந்த ஓசையைத் துல்லியமா கேட்டிருக்காங்க.''

''இவ சின்னவப்பா. கவலை கிடையாது. உலகம் மறந்து தூங்கலாம்.''

''ஆஹ், ஆமாம், அப்படித்தான்! அவ மிகச் சிறப்பா தூங்கிறவ...! ம்...!''

பொய்ரெட் இதைச் சொன்ன பாவத்தை நான் விரும்பவில்லை. ஆனால் மேலே பேச விடாது அப்போது ஒரு கூரிய தட்டும் ஒலி எங்களிருவருடைய செவிகளை அடைந்தது. ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த போது வெளியே இரு துப்பறியும் அதிகாரிகளும் காத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

பொய்ரெட் அவனது தொப்பியைக் கைப்பற்றி எடுத்துக் கொண்டான்... மீசையை முறுக்காய் ஒருமுறை முறுக்கி விட்டுக் கொண்டான்... தோள்பட்டை பகுதிகளை ஓரிரு முறை தூசு தட்டிக் கொண்டான்... பின்தொடருமாறு ஜாடை காட்டிக் கொண்டு படிகளிறங்கினான்.... அங்கே இரண்டு அதிகாரிகளுடனும் இணைந்துக் கொண்டு ஸ்டைல்ஸுக்குப் பறந்தோம்.

துப்பறியும் அதிகாரிகளின் வருகை சிறு அதிர்வினை ஸ்டைல்ஸில் உண்டுபண்ணியது... குறிப்பாக ஜானிடம்! விசாரணை முடிவில் தீர்ப்பாய் சொல்லப்பட்ட வாசகங்கள் அவரிடம் சிறு இளைப்பாறலை உண்டுபண்ணியிருந்தது.... ஆயினும் வீட்டில் போலீஸ் அதிகாரிகளின் நடமாட்டம் மறுபடியும் அவர் வயிற்றில் புளிக் கரைசலை ஏற்படுத்தியது.

பொய்ரெட்டும் ஜேப்'பும் வழிநெடுக குறைந்த ஒலியில் எதையோ பேசிக் கொண்டே வந்தனர்... இதன் விளைவாக, ஜேப் தான், ஸ்டைல்ஸில், வேலையாட்கள் தவிர ஏனைய அனைவரும் வரவேற்பறையில் கூட வேண்டும் எனும் வேண்டுகோளை முன் வைத்தார். என்னால் இதன் முக்கியத்துவத்தை உணர முடிந்தது. எல்லாம் இந்த பொய்ரெட் ஜம்பமடித்துக் கொள்ள செய்யச் சொன்ன ஏற்பாடாய் இருக்க வேண்டும்!

என்னைப் பொறுத்த வரைக்கும், நான் நம்பிக்கையற்றே இருந்தேன். இந்த பொய்ரெட், திரு. ஆல்ஃபிரட் குற்றமற்றவர் என்பதை முன்வைக்க அற்புத அற்புதமான காரணங்களை வைத்திருக்கலாம்... ஆனால், இதோ நின்றுக் கொண்டிருக்கும் ஸாம்ஸன் போன்ற ஆட்கள் அதை நம்ப வேண்டுமானால், பொய்ரெட், சந்தேகம் துளியும் ஏற்படாத சாட்சிகளை முன்னால் கொண்டு வந்து நிறுத்த வேண்டும்... பொய்ரெட்டால் அப்படிப்பட்ட சாட்சிகளைத் தரமுடியுமா என்பதில் எனக்கு சந்தேகமே.

நாங்கள் எல்லோரும் வரவேற்பறைக்குள் கூடி நின்ற உடனேயே கதவினைத் தள்ளி சாத்தினார் ஜேப். பொய்ரெட் பவ்யமாய் அனைவருக்கும் இருக்கைகளைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தான். ஸ்காட்லாண்ட் அதிகாரிகள் இருவரும்தான் அனைவரது காட்சிப் பொருட்களாயிருந்தார்கள். இப்படிக் கூடி நிற்கும் போது தான், நடந்துள்ளது பொய்யல்ல... ஒரு கோர உண்மை என்னும் புரிதலே, வீரியமாக எடுபடுகின்றது. இப்படிப்பட்ட காட்சிகளைப் படித்திருக்கிறோம்... பார்த்திருக்கிறோம். இங்கு நாங்களே பாத்திரங்களாக நடிக்கிறோம். நாளை இங்கிலாந்தின் அனைத்து செய்தித் தாள்களிலும், கொட்டை எழுத்துக்களில் செய்திகள் அச்சாகி விடும்... இனி தடுப்பதற்கில்லை.

**மர்மமான கொலை - ஸ்டைல்ஸில்.**
**பெரும் பணக்காரி - விஷம் வைத்துக்**
**கொல்லப்பட்டார்.**

ஸ்டைல்ஸின் புகைப்படங்கள் இருக்கும்... 'விசாரணை முடிந்து வெளியே வரும் குடும்பத்தினர்கள்' என்ற குறிப்போடு படங்களிருக்கும்...!

பொய்ரெட் பேச ஆரம்பித்தான். அனைவரும், வந்திருக்கும் அதிகாரிகள் ஆரம்பிக்காமல், பொய்ரெட் பேச ஆரம்பிப்பதைக் கேட்டு, சிறு ஆச்சரியம் கொண்டனர்.

''அன்பு நண்பர்களே...'' என்ற பொய்ரெட், ஏதோ ஓர் உரை நிகழ்த்தப் போகிறவன் போல பவ்யமாய் குனிந்து வணக்கமும் செலுத்தினான்! ''ஒரு முக்கிய காரணமாகத் தான், உங்கள் எல்லோரையும் ஒன்றாகச் சேர்ந்து இங்கே வரச் சொன்னேன். அந்தக் காரணம் --- திரு. ஆல்ஃபிரட் சார்ந்தது.''

இவனுக்கு மிக அருகில் தான் ஆல்ஃபிரட் உட்கார்ந்திருந்தார். அவரவர் அறியாமலேயே, அனைவரும், தங்களது நாற்காலிகளை அவரிடமிருந்து சற்று தள்ளி இழுத்துப் போட்டுக் கொண்டிருந்தனர். தற்சமயம் பொய்ரெட் அவருடைய பெயரைச் சொன்னதும் சிறு துள்ளலை அவர் காட்டினார்.

''திரு. ஆல்ஃபிரட்'' - அழைத்தான் பொய்ரெட். அவரை நேருக்கு நேராய் பார்த்தான். ''ஒரு கரும் நிழல் ஸ்டைல்ஸின் இந்த மாளிகையின் மேலே படிந்துள்ளது --- கொலைகாரனின் நிழல்.''

வருத்தந்தோய்ந்து தனது தலையை அசைத்து ஏற்றுக் கொண்டார் ஆல்ஃபிரட். ''என்னருமை மனைவி....'' என முணுமுணுத்தார். ''என்னருமை எமிலி.... துரதிர்ஷ்டசாலி எமிலி.... இது கொடூரம்... கொடுமை.''

''நடந்துள்ள சம்பவம் உங்கள் பக்கமாய் திரும்பி எத்தனை மோசமா சூழ்ந்துள்ளது என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா... என்பது எனக்கு சந்தேகமாகவே உள்ளது'' என்றான் பொய்ரெட்.

இதைப் புரிந்துக் கொண்டவராய் ஆல்ஃபிரட் தோன்றாததால், ''திரு. ஆல்ஃபிரட்... நீங்கள் தப்பிப்பே அற்ற ஓர் அபாயத்தின் இக்கட்டில் அகப்பட்டுள்ளீர்கள்'' என்று குறிப்பிட்டான்.

Scanned by CamScanner

இரு துப்பறியும் அதிகாரிகளும் அமைதியிழந்து சஞ்சல மடைந்தனர். ஸாம்ஸன், ''நீங்கள் என்ன சொன்னாலும் அது உங்களுக்கு எதிரான சாட்சியமாக எடுத்துக் கொள்ளப்படும்'' என்றார்.

பொய்ரெட், ''இப்போதாவது புரிகின்றதா, திரு. ஆல்ஃபிரட்?'' என்றான்.

''இல்லை. நீங்க எல்லாம் என்ன சொல்றீங்க?''

''விஷயம் என்னன்னா...'' என்று வெளிப்படையாக ஆல்ஃபிரட் அளவுக்கு இறங்கி வந்த பொய்ரெட், ''உங்க மனைவிக்கு நீங்க தான் விஷம் வெச்சீங்கன்னு --- சந்தேகப்படறாங்க'' என்றார்.

பொய்ரெட்டின் பட்டவர்த்தனமான அறிவிப்பில் அனைவரிடமும் ஒரு மூச்சடைப்பு உண்டாகி மறைந்தது.

''அடக் கடவுளே!'' - கதறியபடி எழுந்தார் ஆல்ஃபிரட். ''என்ன ஒரு பிசாசுத் தனமான கற்பனை. நான்... நான்... நானா என்னருமை எமிலிக்கு விஷம் கலந்தவன்?''

ஆல்ஃபிரட்டை நெருக்கமாய் கவனித்த பொய்ரெட் சொன்னான்: ''விசாரணையின் போது நீங்க தந்த அந்த ஏற்றுக் கொள்ள முடியாத சாட்சியம் உருவாக்கவல்ல விளைவுகளை... நீங்க இன்னும் உணரலே. திரு. ஆல்ஃபிரட்... நான் இப்போ தந்த முன்னுரைக்குப் பிறகும், திங்கள் மாலை ஆறு மணிக்கு எங்கே இருந்தீங்கன்னு சொல்லாம அதை நீங்க இன்னும் மறைச்சு வைக்கத் தான் போறீங்களா?''

ஒரு உறுமலோடு தனது இருக்கையில் விழுந்து புதைந்த ஆல்ஃபிரட், தனது கைகளுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டார். பொய்ரெட் அவரை நெருங்கினான். அருகில் நின்றான்.

''பேசுங்க'' - பயமுறுத்தும் குரலில் கத்தினான்.

சிறு முயற்சிக்குப் பிறகு தனது முகத்தைக் கைப் புதையலி லிருந்து தூக்கினார். பிறகு மெதுவாகவும், பிடிவாதமாகவும் மறுத்துத் தலை அசைத்தார்.

''ஏய்...'' - பயமுறுத்தும் பொய்ரெட்டின் குரல் எகிறியது. நான் விக்கித்துப் போனேன். ''பேச மாட்டீங்க?''

''மாட்டேன். நீங்க சொன்னது மாதிரியான ஒரு பழியை என் மீது சுமத்துமளவுக்கு ஒரு படுபாதகன் இருக்கான்னு என்னால நம்ப முடியலே.''

Scanned by CamScanner

''இது பேச்சை மாத்தற வித்தை. கேட்டதுக்கு பதில்.''

மறுத்தார். ஸ்திரமாக.

பொய்ரெட் தற்போது, முடிவாய் துணிந்துவிட்ட ஒரு மனிதனின் முகபாவத்தில் தலையை அசைத்துக் காட்டினான். ''அப்படின்னா, நான் உங்களுக்காகப் பேச வேண்டியிருக்கும்.''

ஆல்ஃபிரட் மறுபடியும் துள்ளி எழுந்தார்.

''நீங்க? நீங்க எப்படி பேச முடியும்? எனக்காக என்ன பேச முடியும்? உங்களுக்கு... அது... அது... '' - பட்டென முறிந்தது அவரது வார்த்தைகள்.

அவரை விட்டு விட்டு எங்களனைவர் பக்கமும் திரும்பிக் கொண்டான் பொய்ரெட். ''குடும்ப அங்கத்தினர்களே! அதிகாரிகளே!'' என்று மரியாதையாய் குறிப்பிட்டான். ''நான் பேசப் போறேன்! கேளுங்க! கவனமா! நான், ஹெர்குல் பொய்ரெட், உறுதியாகத் தெரிவிக்கிறேன் --- கடந்த திங்கட் கிழமை அன்று மாலை ஆறு மணிக்கு மருந்துக் கிடங்குக்குச் சென்று ஸ்டிரிச்நைன் விஷத்தை வாங்கி வந்த நபர் --- திரு. ஆல்ஃபிரட் கிடையாது. அதே நாள்... அதாவது கடந்த திங்கட்கிழமை மாலை அதே ஆறு மணிக்கு, திரு. ஆல்ஃபிரட், திருமதி ரமோலாவுக்குத் துணையாக இருந்து, பக்கத்திலிருந்த பண்ணைப்புரத்திலிருந்து அவரது வீடு வரைக்கும் கொண்டு போய் சேர்ப்பித்திருக்கிறார். அன்று மாலை ஆறு மணி மேலும் அதற்குப் பிறகும் --- இவங்க ரெண்டு பேரையும் ஒண்ணா, கண்ணால பார்த்த ஐந்துக்கும் மேற்பட்ட ஸ்திரமான சாட்சிகளை என்னால நொடியில கொண்டு வந்து சமர்ப்பிக்க முடியும். திருமதி ரமோலாவின் வீடு... 'ஆபி பண்ணை' எனும் அந்த பண்ணைப் புரம்... இவையிரண்டும் ஸ்டைல்ஸிலிருந்து குறைந்தபட்சம் இரண்டரை மைல்கள் தூரத்திலிருப்பது நீங்க அறிந்ததே. ஆள் மாறாட்டம் என்பதற்கு இதுல கொஞ்சமும் இடமே கிடையாது.''

Scanned by CamScanner

Mohanpreethi0707.mp@gmail.com

## அத்தியாயம் எட்டு

# புதிய சந்தேகங்கள்

அனைவரும் உணர்ச்சியிழந்து திகைத்துப் போயினர். இயக்கம் முடங்கிய அமைதி நிலவியது. அங்கு மிகக் குறைவாக ஆச்சரிய மடைந்திருந்தவர் ஜேப் தான்... ஆகவே அவர்தான் அமைதியை முதலில் கலைத்தார்.

''அடக் கடவுளே...'' என ஆச்சரியத்தவர், ''நீங்க மனுஷனா இல்ல காற்றா! துளியும் தவறில்லாம எப்படி தெரிஞ்சுக்கிட்டீங்க, திரு. பொய்ரெட்! உங்க சாட்சிகள்ல தப்பிருக்காதுனு நம்பறேன்!'' என்றார்.

''அதுல நான் ஆணித்தரமா இருக்கேன்'' என்ற பொய்ரெட், ''அவங்க பட்டியலே என்கிட்டே இருக்கு. பெயர்கள்... முகவரிகள், நீங்களும் அவற்றைப் பார்க்கணும். எத்தனை சரியானவை அவை என்பது அப்போ உங்களுக்கே புரியும்'' என்றான்.

''அதுல என்றுமே எனக்கு சந்தேகம் இருந்ததில்லே'' - என்றபடி குரலைத் தாழ்த்திக் கொண்டார் ஜேப். ''நான் உங்களுக்கு ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன் திருமிகு பொய்ரெட். அவரை மட்டும் நான் கைது பண்ணியிருந்தேன்னா... ஓஹ்... என் மதிப்பு மரியாதையெல்லாம் காத்துல பறந்திருக்கும்'' என்றபடி ஆல்ஃபிரட் பக்கமாய் திரும்பிய ஜேப், ''நீங்க தப்பா நினைக்கலேனா, திரு. ஆல்ஃபிரட்... இதையெல்லாம் நீங்க மரண விசாரணையின் போதே சொல்லியிருக்க முடியாதா...?'' என்று கேட்டார்.

''அது ஏன்னு நான் சொல்றேன்'' என இடைபுகுந்தான் பொய்ரெட். ''ஒரு புரளி இருந்தது ---''

கோபத்தால் வெகுண்ட குரலில், ''பொறாமையும் குரோதமும் உள்ளடங்கிய அப்பட்டமான முழு பொய் அது'' என்று இடையில் சொன்னார் ஆல்ஃபிரட்.

Scanned by CamScanner

''இப்போதைக்கு வேறெந்த அவதூறும் மறுபடியும் முளைக்கக் கூடாது என்பதில் ரொம்பக் கறாரா இருந்தாரு ஆல்ஃபிரட்...! சரிதானே?''

''ரொம்பச் சரி'' என்று தலையசைத்து ஒப்புக் கொண்டார் ஆல்ஃபிரட். ''என்னருமை எமிலி இன்னும் புதைக்கக்கூடப் படாத பொழுதில், புதுசா வேறெந்த பொய்க் கிசுகிசுவும் கிளம்பிடக் கூடாது என்று நான் கருத்தா இருந்ததுல ஆச்சரியம் இல்லையே!''

''ஆனா ஒண்ணு, திரு. ஆல்ஃபிரட்...'' என்று குறிப்பிட்டு ஆரம்பித்தார் ஜேப்: ''உங்களைப் பற்றி வண்டி வண்டியா புரளிகள் என்னை வந்தடைந்து, உங்களைக் கைது செய்வதுல துளிகூட தப்பே இல்லை எனும் கருத்துக்கு அவையத்தனையும் சாட்சியா நின்னிருக்கும். உங்க அருமை மனைவினு சொல்றீங்களே... அவங்களுக்கு நீங்க எப்படியெல்லாம் துரோகம் செய்திருக்கீங்கனு உங்களை வெறுக்குமளவுக்கு நான் போயிருப்பேன். ஓ... திருமிகு பொய்ரெட்! அவர் மட்டும் இத்தனை சிக்கலையும் 'ப்பூ...' என ஊதுவது போல கண்டுபிடிச்சு தரலேனா... உங்களுடைய கைது... உள்ளங்கை நெல்லிக்கனி...!''

''இனி...'' என்றபடி சுறுசுறுப்பாய் ஜான் பக்கம் திரும்பிய ஜேப், ''துரதிர்ஷ்ட எமிலியின் அறையை நான் பார்க்க வேண்டும், ப்ளீஸ். பிறகு உங்க வீட்டு பணியாளர்களுடன் கொஞ்சம் பேசணும். நீங்க ரொம்ப சிரமப்பட வேண்டாம். திரு. பொய்ரெட் எனக்கு வலக்கரமா இங்கே இருக்கார். அவர் என்னை கவனிச்சுப்பார்'' என்றார்.

எல்லோரும் அறையை விட்டு வெளியேறி அறை காலியானதும், பொய்ரெட் என் பக்கமாய் திரும்பி, அவனைப் பின் தொடர்ந்து மாடிப் பகுதிக்கு வருமாறு சைகையில் விளக்கினான். அங்கு போனதும் என்னைக் கையால் இறுகப் பற்றி ஒரு பக்கமாய் இழுத்துப் போனான். ரகசியமானான். ''சீக்கிரமா எதிர்பக்கம் போ. அங்கேயே நில்லு --- கதவுக்கு இந்தப் பக்கமா. நகரக்கூடாது, நான் வர்ர வரைக்கும்.''

துரிதமாய் திரும்பி இரு துப்பறியும் அதிகாரிகளுடனும் இணைந்துக் கொண்டான்.

நான் அவன் அறிவுறுத்தியதை செய்தேன். கதவின் அருகே நான் நிற்க ஓரிடத்தைப் பிடித்துக் கொண்டு, இந்த வேண்டுகோளுக்குப் பின்னால் என்ன தான் அர்த்தம் இருந்து விடமுடியும் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டே நின்றுக் கொண்டிருந்தேன். இந்தக்

Scanned by CamScanner

குறிப்பிட்ட இடத்தில் எதற்காக நான் காவல் காத்துக் கொண்டிருக்க வேண்டும்?! என் முன்னால் இருந்த வராந்தாவைக் கவனித்தேன். ஓர் எண்ணம் உதித்தது. சிந்தியாவின் அறையைத் தவிர ஏனைய அனைவரது அறையும் இந்த இடப்பக்கத்தில் தானிருக்கின்றன. இந்தக் குறிப்பு நான் நின்றுக் கொண்டிருப்பதற்கு ஏதாவது காரணம் தருமா?! யார் வந்தார்கள்... போனார்கள்... என்று சொல்ல வேண்டியிருக்குமா?! நான் சிரத்தையோடு நின்றுக் கொண்டிருந்தேன். நிமிடங்கள் கரைந்தன. யாரும் வரவில்லை. எதுவும் நடக்கவில்லை.

பொய்ரெட் மறுபடியும் என்னோடு வந்து இணைந்துக் கொள்ள இருபது நிமிடங்கள் ஆயின.

''நீ எங்கேயும் போகலியே?''

''விளையாடறியா? பாறை மாதிரி நின்னுக்கிட்டே இருக்கேன். ஒண்ணும் நடக்கலே.''

''ஆஹ்...!'' - நிறைவா அல்லது ஏமாற்றமா! ''ஒண்ணையுமேவா நீ பார்க்கலே?''

''இல்லே.''

''ஆனா நீ ஏதாவது கேட்டிருக்கணுமே! பெரிய சத்தம்... முட்டற மாதிரி... மோதற மாதிரி...!''

''போப்பா!''

''இல்லியா? ஒஹ்...! இது சாத்தியமா? எனக்குள்ளே எரிச்சலாகுதுடா. நான், எப்பவும் போல, கைத்தாங்கலாத் தான் தொட்டேன்'' --- ஒரு மேஜைக்கு அருகில் நிற்க நேர்ந்தால், அதில் மெலிதாய் கையூன்றியபடி அவன் நிற்கும் பாங்கினை நான் நன்கு அறிந்தவன் தான் --- ''இடது கையால, ரொம்ப உடல் கனத்தை இறக்காமத்தான்...! ஆனா இதுக்கே அந்த மேஜை வளைந்து கட்டிலுக்குப் பக்கத்துல சரிஞ்சுடுச்சு.''

வெறுப்படைந்த சிறுபிள்ளை போலானான் அவன். முகமெங்கும் எரிச்சலின் போர்வை விழ அவன் நிற்க, அவனை வேகமாய் சமாதானப்படுத்தும் தேவை எழுந்தது.

''விடுடா. அதனால என்ன இப்போ? நீ ஜீமே வாங்கின நற்பெயரால புளகாங்கிதம் அடைஞ்சிருக்கே. நீ சொன்னது ஒவ்வொருத்தருக்கும் எத்தனை அதிசயம்... ஆச்சரியம் தெரியுமா! நீ சொன்ன கசமுசாவைப் பொறுத்தவரை, நாங்க நினைச்சு

வெச்சிருந்ததைவிட ஆழமான தொடர்பு இந்த ஆல்ஃபிரட்டுக்கும் ரமோலாவுக்குமிடையே இருக்கணும். அதனால தான் மனுஷன் வாயைத் திறக்கவே திறக்காம அத்தனை கமுக்கமா இருந்திருக்கான். இப்போ நீ என்ன செய்ய உத்தேசம்? ஸ்காட்லாண்ட் போலீஸ் பயலுங்க எங்கே?''

''கீழே வேலைக்காரங்களைப் பார்த்துப் பேச போயிருக்காங்க. நாம் ஸ்தலத்தில் சேகரிச்ச அத்தனையையும் பற்றி சொன்னேன்... காட்டினேன். இந்த ஜேப்பைப் பொறுத்த வரைக்கும் எனக்கு ஏமாற்றம் தான். வழக்கை எப்படி கொண்டு போகணும்னு துளி கூட ஒரு முறையே இல்லை மனுஷனுக்கு.''

''ஹேய்... ஹேய்...'' என்றேன் பொய்ரெட்டுக்கு, ஜன்னல் வழியே வெளியே பார்த்தபடி. ''டாக்டர் பௌரீஸ். அவரைப் பற்றி நீ சொன்னதை இப்போ நான் நம்பறேன்டா. எனக்கு அவனைப் பிடிக்கலே.''

''அவர் புத்திசாலி. மகா. மெகா!'' என்றான் சிந்தனையுள்.

இதற்கு, ''பிசாசைப் போல!'' என்றேன் நான். ஏதோ நினைவுக்குள் நுழைந்தவனாய் தொடர்ந்தேன்: ''செவ்வாய்க் கிழமை அவர் உள்ளே நுழைந்த தினுசைப் பார்த்து நான் அப்படி சிரிச்சிருக்கேன்! அளவிடாத முடியாத அளவுக்கு கேலி... சந்தோஷம்... எனக்குள்ளே! பிசாசைப் போல வந்தார். அப்படி ஒரு காட்சியை நீ ஜென்மத்துல பார்த்திருக்க முடியாது.'' பிறகு டாக்டரின் வீராவேச அட்டகாசத்தைச் சொன்னேன். ''அச்சு அசலா சோளக்காட்டு பொம்மை போல இருந்தார். தலையிலிருந்து கால் வரை களிமண் பூச்சு.''

''நீ அவரைப் பார்த்தே... அப்போ?''

''ஆமாம். பின்னே! அவரா உள்ளே வரலே. இது சாப்பாட்டுக்கு அப்புறம் நடந்தது. ஆல்ஃபிரட் தான் வா வானு வற்புறுத்தினார்.''

''என்ன?'' - என் தோள்களை வன்முறையாய் பிடித்து உலுக்கினான் பொய்ரெட். ''டாக்டர் பௌரீஸ் செவ்வாய்க் கிழமை ராத்திரி இங்கே இருந்தாரா? இங்கேடா, இங்கே?! நீ இதை என்கிட்டே சொல்லவே இல்லை? ஏன்டா என்கிட்டே சொல்லலே? ம்? ஏன்? ஏன்?''

பைத்தியக்காரத்தனமான ஆவேசத்தில் மூழ்கித் தெரிந்தான்.

''அருமை பொய்ரெட்'' என்று சிநேகபாவத்துடன் ஆட்சேபித்தேன் நான். ''இது உன்னை ஈர்க்கும்னு நான் கொஞ்சங்கூட

நினைக்கலேப்பா. இதுல எந்த முக்கியத்துவமும் எனக்குத் தென்படலே.''

''முக்கியத்துவம்? முதன் முதலான முக்கியம், இப்போ நீ சொன்னியே, இதுதான்! ஆக, டாக்டர் பௌரீஸ் இங்கு செவ்வாய்க் கிழமை இரவு இருந்திருக்கிறார் --- அதாவது கொலை நடந்த இரவு! ஹேஸ்டிங்ஸ்... இப்படி சொல்லியுமா உனக்குத் தெரியலே? இது, எல்லாத்தையும் மாற்றுது ஹேஸ்டிங்ஸ்... மாற்றுது.''

இப்படி ஒடிந்துப்போய் இவனை நான் எந்தத் தருணத்திலும் பார்த்ததில்லை. என்னைப் பிடித்திருந்த குரங்குப் பிடியைத் தளர்த்தினான். அங்கிருந்த இரண்டு மெழுகுவர்த்தித் தாங்கிகளைப் பின்வருமாறு முணுமுணுத்துக் கொண்டே இயந்திரத் தனமாய் நேர்த்தி செய்தான்: ''ஆமாம். இது எல்லாவற்றையும் மாற்றுது. எல்லாக் கணக்குகளையும் மாற்றுது.''

திடுமென ஒரு முடிவுக்கு வந்தவனாய் ஆனான்.

''ரெடி'' என்றான். ''உடனடியா நாம இயங்கியாகணும். ஜான் எங்கே?''

ஜான் தனியாய் நின்று புகைப்பிடித்துக் கொண்டிருந்தார். பொய்ரெட் நேராய் அவரை அடைந்தான்.

''திரு. ஜான். டேட்மினிஸ்டரில் எனக்கு முக்கியமான ஜோலி ஒண்ணு இருக்கு. ஒரு புத்தம்புது துப்பு. நான் உங்க காரை எடுத்துக்கலாமா?''

''தாராளமா! உடனடியாவா?''

''உங்களுக்கு ஆட்சேபணையில்லைனா.''

ஜான், வேலைக்காரனை அழைக்கும் மணியை அடித்தார். உடனே காரை முன்பக்கம் கொண்டு வர ஆணையிட்டார். அடுத்த பத்தாவது நிமிடத்தில் வாசல் தோட்டத்தைக் கடந்து நெடுஞ் சாலையில் விழுந்து டேட்மினிஸ்டர் பகுதியை நோக்கி விரைந்துக் கொண்டிருந்தோம்.

''நீ இப்போவாவது எதுக்காக இப்படியெல்லாம் நடந்துக்கிட்டு இருக்கேனு என்கிட்டே சொல்லுவியா?''

''நண்பா... சிறந்த துப்பு... நீயாகவே கண்டுபிடிக்கலாம்! திரு. ஆல்ஃபிரட் வழக்கிலிருந்து வெளியே உள்ளவராக ஆகிய பிறகு வழக்கின் நிலைமையே மாறிடுச்சு... இதை நீ உணர்ந்திருப்பே. நமக்கெதிரா இப்போ முகத்துக்கு முகம் காட்டி நிற்பது - முழுக்க

முழுக்க புது வழக்கு. இதுல சில குழப்பங்களை நாம விடுவிச்சிருக்கோம். உன்னோட டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்த சிந்தியாவைத் தவிர, வீட்டிலிருக்கும் வேறு யாராவது தான், ஆல்ஃபிரட் போல ஆள்மாறாட்டம் செஞ்சு திங்கட்கிழமை சாயங்காலம் மருந்துக் கிடங்குக்குப் போயிருக்கலாம் என்பதை நான் நிரூபிச்சுட்டேன். காபியை அறையின் மேஜையில் வைத்திருக்கிறார் எனும் வாக்குமூலமும் அவர் வழியாகவே நமக்குக் கிடைச்சுது. மரண விசாரணையின் போது இந்த வாக்கியத்தை யாருமே முக்கியப்படுத்தலே --- ஆனா இப்போ இதுக்கு வேற மாதிரியான முக்கியத்துவம் கிடைச்சிருக்கு. திருமதி எமிலியின் அறைக்கு இறுதியா யார் காபியைக் கொண்டுபோனது... இதை நாம கண்டுபிடிச்சே ஆகணும். இல்லே, காபி அங்கே இருக்கும்போது அதைக் கடந்து அதன் பக்கமா யார் போனது? நீ சொன்ன சங்கதியை வைச்சு, சர்வ நிச்சயமா ரெண்டு பேர் காபி பக்கத்துல போகவே இல்லைனு சொல்லிட முடியும். திருமதி மேரி. செல்வி சிந்தியா.''

''ஆமாம். அதுதான் சரி.''

என் இதயம் லகுவாவதை உணர்ந்தேன். ஆமாம்... மேரி மீது எவ்வித சந்தேகப் பார்வைகளும் பட்டுவிடக் கூடாது. ''நினைச்சதெல்லாம் வீணாகிப் போயிடுச்சு. விளம்பரமாயிட்டேன். குற்றவாளியை அவனுக்குத் தெரியாமலே நான் தொடர்ந்துக் கிட்டிருந்தேன்... இதனால அவனுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லாமலிருந்தது. ஆனா இப்போ... நான் யார்னு வெளியாகி விட்ட இப்போ... அவன் ரெட்டிப்பு ஜாக்கிரதையில் இருப்பான். ஆமாம்... ரெட்டிப்பு பாதுகாப்பு போட்டுப்பான்.''

திடுமென்று என் பக்கம் திரும்பியவன், ''சொல்லு ஹேஸ்டிங்ஸ்... உனக்குள்ளே யார் மீதும் சந்தேகமேயில்லையா?'' என்றான்.

நான் தயங்கினேன். உண்மையில் சொல்லப் போனால், அன்று காலையில் , ஓர் ஊகம்... மிருகத்தனமாகவும் மிதமிஞ்சியும் தோன்றக் கூடிய ஓர் எண்ணம்... ஓரிரு முறை என் மூளையை வெட்டிச் சென்றது. அது ஒரு முட்டாள்தனம் என நான் ஒதுக்கியிருந்தேன். இன்னமும் மூளையை விட்டுப் போகாமல் கனன்றுக் கொண்டு தானிருக்கின்றது.

Scanned by CamScanner

''அதை நீ கிண்டலா எடுத்துக்கக் கூடாது'' - முணுமுணுப்பாய் சொன்னேன். ''அத்தனை முழு முட்டாள்தனமானது அது.''

''வெளியே துப்புடா'' - ஊக்குவித்துக் கத்தினான் அவன். ''பயப்படாதே. உன் மனசைத் திறந்துப் போடு. நீ எப்பவுமே உன் உள்ளுணர்வுக்கு காது கொடுத்தே ஆகணும் - தவறக் கூடாது.''

''அப்போ சரி'' என வெடித்தேன். ''முட்டாள்தனம் தான்... இருந்தாலும் சொல்றேன்... எனக்கென்னவோ எவிலின் ஹோவோர்ட் அவளுக்குத் தெரிஞ்சுள்ள எல்லாத்தையும் இன்னும் சொல்லலையோ என்று நான் சந்தேகப்படறேன்.''

''எவிலின்?''

''ஆமாம்... சொன்னேன் இல்லே... நீ என்னை பார்த்து கேலியா சிரிப்பேனு...''

''கிடையவே கிடையாது. நானே உன்னை சொல்லச் சொல்லிக் கேட்டுட்டு பிறகு எதுக்குடா சிரிக்கணும்?''

''அப்படி நினைக்காம என்னால இருக்க முடியலே'' - துப்பறிவதில் நான் திறமையற்றவன் என்பதை உணர்த்துவது போல் குறிப்பிட்டு விட்டு தொடர்ந்தேன்: ''சம்பவ இடத்துல அவங்க இல்லை எனும் ஒரே ஒரு காரணத்திற்காக, நாம எவிலினை சந்தேகப் பட்டியலிலிருந்து அவசியமே இல்லாமல் தூக்கி விட்டோமோனு தோணுது. ஆனா, அவங்க, சும்மா ஒரு பதினைந்து மைல் தூரம் தான் தள்ளியிருந்திருக்காங்க. ஒரு கார் போதும்... அரைமணி நேரத்துல அவங்களைப் பிரிச்சு வைக்க. ஆகவே... அவங்க கொலை நடந்த இரவன்று சர்வ நிச்சயமா ஸ்டைல்ஸில் இல்லை அப்படினு நம்மால அடிச்சு சொல்ல முடியுமா?''

''சொல்ல முடியும் நண்பா'' என்றான் பொய்ரெட் நான் எதிர்பாராத ஒரு தருணத்தில். ''நம்மால் சொல்ல முடியும். நான் எடுத்த முதற்கட்ட நடவடிக்கைகளில் முதலாவது... அவங்க வேலை பண்ற மருத்துவமனைக்கு போன் செஞ்சது தான்.''

''அதனால?''

''அதனால, எவிலின் செவ்வாயன்று பகல் நேர டியூட்டியில இருந்திருக்காங்க என்பது தெரிய வந்தது. அப்போ, எதிர்பாராம அவங்களுக்கு ஒரு பாதுகாப்பு தானா ஏற்பட்டிருக்கு.... இரவு நேர டியூட்டியையும் அவங்களே தொடரணும் எனும் வேண்டுகோள் தான் அது. அவங்களும் மறுக்காம பெருந்தன்மையா ஒத்துக்

கிட்டிருக்காங்க. இதெல்லாம், அவங்களை சுலபமா வட்டத்துக்கு வெளியே நிற்க வெச்சுடுது.''

''ஓஹ்...!'' - செய்வதறியாது திகைத்தேன். ''உண்மையா...!'' என்று தொடர்ந்தேன்: ''அவங்களுக்கு ஆல்ஃபிரட் மேலே இருக்கிற கட்டுக்கடங்காத உக்கிரம் தான் அவங்களை சந்தேகப் படவே தூண்டிச்சு. அவருக்கு எதிரா இந்த அம்மா என்ன வேணும்னாலும் செய்யும்'னு எனக்குள்ளே தோன்றுவதை என்னால தடுக்க முடியலே பொய்ரெட். அந்த உயிலை உருத் தெரியாம ஆக்கினதைப் பற்றிக் கூட இவங்களுக்கு ஏதாவது தெரிஞ்சிருக்கும்னு எனக்கு ஒரு நினைப்பு இருந்தது. ஆல்ஃபிரட்டுக்கு சாதகமா எழுதப்பட்ட பழைய உயில்னு நினைச்சுக்கிட்டு புதுசா எழுதின உயிலை இந்த அம்மா சிதைச்சிருக்குமா... இப்படியும் நான் நினைச்சிருக்கேன்! இப்படியெல்லாம் நம்மோட சிந்தனைப் போகுமளவுக்கு அவர் மேலே தாளா கசப்பில இருக்கு அந்த அம்மா!''

''அவங்களுக்கு ஆல்ஃபிரட் மேலே இருக்கிற கடுங்கோபம் --- செயற்கையானதுங்கிறியா....?!''

''வந்து... வந்து... வ...ந்...து...''

''வா...! வா...!''

''ஆ..மா..ம்...! அவரைப் பற்றி பேச்செடுத்தாலே எவி வன்முறையா ஆயிடறாங்க. நிதான புத்தியோட தான் அவங்க ஆல்ஃபிரட் விஷயத்துல நடந்துக்கிறாங்களானு நான் உண்மையா பல தடவை ஆச்சரியப்பட்டிருக்கேன்.''

பலமாய் மறுத்துத் தலையசைத்தான் பொய்ரெட்.

''இல்லை, இல்லை. நீ இந்த விஷயத்துல தவறான பாதையில இருக்கே. மனக் குழப்பமோ... புத்தித் தடுமாற்றமோ... எவி விஷயத்துல கிடையாது. சீரான ஸ்திர புத்திக்கு அற்புதமான எடுத்துக்காட்டு, எவி. அவங்க மூளை மட்டுமில்லே ஹேஸ்டிங்ஸ்.... அவங்களே ஒரு ஸ்திரம் தான்!''

உள் வாங்கிக் கொள்ள சில நொடிகள் ஆயிற்று. ''அவங்களுக்கு ஆல்ஃபிரட் மேலே உள்ள வெறுப்பும் கடுமையும், ஒரு மேனியா! பார்த்தாலே தோன்றும் வியாதி! நான் வெச்சிருந்த ஊகம் --- ஒரு வேளை ஆல்ஃபிரட்டுக்கு இந்த அம்மா விஷம் வைக்கப் போக அதை எமிலி தெரியாம எடுத்துக் குடிச்சிருப்பா, என்பது --- தப்பானது தான்... சந்தேகமில்லாம! ஆனா பொய்ரெட், நடந்துள்ள

சங்கதி எப்படி உண்மையிலே அரங்கேறியிருக்கும்னு எனக்கு ஒரு வழியும் பிடிபட மாட்டேங்குதே! எல்லாம் குழப்பம்... கேலிக் கூத்து... கடைசி வரை...!''

''இருந்தாலும், ஒரு விதத்துல நீ ரொம்ப சரி தான். தர்க்க ரீதியா நிரூபிக்க முடியற வரைக்கும்... நம்ம மனசுக்கு ஒருவர் குற்றமற்றவர் என்று திருப்திகரமா தென்படற வரைக்கும்... ஒவ்வொருத்தரையும் நாம சந்தேகப்பட்டே தீரவேண்டும் என்பதில்!'' என்றவன், ''இப்போ...'' என்று புதிதாய் ஒன்றைத் துவங்கினான்: ''எவிலின் ஹோவோர்ட், திருமதி எமிலிக்கு விஷம் வைத்துச் சாகடிக்க, நம்முன் இருக்கும் காரணங்கள் என்னென்ன?!''

''ஏய்... அவங்க மேல உயிரையே வெச்சிருந்தா இவ'' - நான் கத்தியே விட்டேன்!

''அடடா...'' - எரிச்சலாய் குறிப்பிட்டான் பொய்ரெட். ''குழந்தை மாதிரி வாதம் பண்ணறே. திருமதி எமிலிக்கு விஷம் வைக்கற அளவுக்கு இந்த எவிலின் துணிச்சலானவளா இருந்தா, அதுக்கு இணையா அவங்க மேலே உயிரையே வெச்சிருக்கிற மாதிரி போலியா காட்டவும் திறமை இருந்திருக்கும். இன்னும் வெளியே நாம தேடணும். திரு. ஆல்ஃபிரட் மேலே எவிலின் கட்டுக்கடங்காத குரோதத்துல இயற்கைத் தன்மை இல்லை அப்படினு நீ நினைக்கிறது ரொம்பவும் சரிதான்; ஆனா அதிலிருந்து நீ அடையும் முடிவுகள் தான் தப்பு. நானும் உன்னுடைய இந்தக் கருத்தின்மீது முடிவுகள் கொண்டு வந்திருக்கேன்... அது சரியா இருக்கும்னு நான் நம்பறேன்... ஆனா இப்போதைக்கு சொல்றதுக்கில்லே.'' - சில நொடிகள் நிறுத்தினான். பிறகு ''இப்போ...'' என தொடரலானான்: ''என் முடிவுகளின் படி, எவிலினை ஒரு கொலைகாரியா பார்க்கிறதுல, அடிச்சுக்க முடியாத ஒரு தடுப்பு இருக்கு.''

''அது?''

''அது --- திருமதி எமிலியின் மரணத்தாலே, அவங்களோடயே இருந்த எவிலின் ஹோவோர்ட் எந்த வகையிலாது அனுகூலம் அடைந்திருப்பாங்க என்பதற்கு, சாதகமான ஒரே ஒரு வழி கூட தென்படலே என்பது தான்...! ஸ்திரமான இலக்கு ஒண்ணு இல்லாம, கொலை கிடையாது....!''

எனக்குப் புரிந்தது.

''இவங்களுக்கே எல்லாம் போற மாதிரி ஓர் உயிலை திருமதி எமிலி எழுதியிருக்க முடியாதா?''

பொய்ரெட் மறுத்தான்.

''ஆனா வக்கீல் திரு. வேல்ஸ் கிட்டே பேசிக்கிட்டிருந்த போது நீயே தான் இந்த சந்தேகத்தை எழுப்பினே....!''

பொய்ரெட் புன்முறுவினான். ''அது ஒரு ஒரு காரணத்துக்காக. என் மனசுல யாரை வெச்சுக்கிட்டு அந்தக் கேள்வியைக் கேட்டேனோ, அவரின் பெயரை அப்போ நான் வெளிப்படையா சொல்ல விரும்பலே. எவிலின், ஏறக்குறைய அவரோட அதே ஸ்தானத்துல தான் இருக்காங்க... ஆகவே இவங்க பெயரை அவருக்குப் பதிலா உபயோகிச்சுக்கிட்டேன்.''

''இருந்தாலும்கூட திருமதி எமிலி இவங்க மேலேயே எழுதியிருக்கலாம். அவங்க இறந்த தினத்தன்று மத்தியானம் எழுதப்பட்ட உயிலில்...''

ஆனால் பொய்ரெட் விறுவிறுவென மறுத்துத் தலையசைக்க, நான் நிறுத்த வேண்டியதாயிற்று.

''கிடையாது நண்பா. அந்த உயில் பற்றி சின்னச் சின்னதா ஊகங்கள் என்னிடம் இருக்கு'' என்றவன், ''இப்போதைக்கு ஒண்ணு மட்டும் சொல்ல முடியும். அது - நிச்சயமா எவிலினுக்கு சாதகமானதா எழுதப்பட்டிருக்காது'' என முடித்தான்.

அவனுடைய ஆளுமையான பதிலை ஏற்றுக் கொண்டேன். ஆனாலும், இவ்விஷயத்தில் இத்தனை ஸ்திரமாய் எதை வைத்துக் கொண்டு அவனால் சொல்ல முடிகின்றது என்பதை என்னால் அறிய முடியவில்லை.

''அப்படினா...'' என்று சிறு பெருமூச்சோடு குறிப்பிட்ட நான், ''ஹோவோர்டைக் குற்றவாளி இல்லைனு நாம ஒதுக்கிடலாம். அவங்க மேலே சந்தேகம் வர்ரதுக்கு காரணமே நீ தான். அவங்க மரண விசாரணையின் போது தந்த சாட்சியம் பற்றி நீ சொன்ன கருத்து தான் என்னை இப்படி திசை திருப்பிச்சு.''

பொய்ரெட் புதிர் போடப்பட்டவனாய் பார்த்தான்.

''அவங்களுடைய விசாரணை சாட்சியம் பற்றி நான் என்னத்தை சொன்னேன்டா?''

''ஞாபகமில்லே...? அவங்களையும் ஜானையும் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று நான் சொன்ன போது...?''

Scanned by CamScanner

''ஓஹ்... ஆஹ்... ஆமாம்...'' - சிறு குழப்பமடைந்தவனைப் போலவும், உடனடியாய் அதிலிருந்து விடுவிக்கப்பட்டவனைப் போலவும் தோன்றினான் அவன். ''சரி, ஹேஸ்டிங்ஸ்....'' என்று சொன்னவன், ''எனக்காக நீ ஒண்ணு செய்யணுமே...'' என்றான்.

''ஏதாவது ரூம் வாசல்ல போய் நிக்கணுமா...!'' என ஹாஸ்யமாய் குறிப்பிட்ட நான், ''உனக்கு செய்யாமலா? என்ன செய்யணும்? சொல்லு'' என்றேன் தீவிரமாய்.

''அடுத்த முறை லாரன்ஸோட தனியா இருக்கிற சந்தர்ப்பம் உனக்கு கிடைக்கும் போது, நான் இப்போ சொல்லப் போறதை நீ அவர்கிட்டே சொல்லணும்: 'உங்களுக்கு ஒரு சேதி இருக்கு - பொய்ரெட் கிட்டேயிருந்து. ''அந்தக் கூடுதலான எக்ஸ்ட்ரா காபி கோப்பையைக் கண்டுபிடிச்சா, நீங்க நிம்மதியா இருக்கலாம்!'' அப்படினு சொல்லறார்.'

''இவ்ளோ தான் ஹேஸ்டிங்ஸ். இதைவிட அதிகமா ஒரு வார்த்தை கூடாது. கம்மியாவும் கூடாது.''

'' 'அந்தக் கூடுதலான எக்ஸ்ட்ரா காபி கோப்பையைக் கண்டுபிடியுங்க... நீங்க நிம்மதியா இருக்கலாம்!' - இது சரியா?'' என்றேன் நான், இதன் மர்மம் விளங்காமல்!

''அற்புதம் போ.''

''இதுக்கென்ன அர்த்தம்!''

''ஆஹ்..! அதை நீயே கண்டுபிடிக்க விட்டுடறேன். நடந்துள்ள சம்பவம் சம்பந்தப்பட்ட உண்மைகளோட உனக்கு நல்லா பரீச்சயம் இருக்கு. இதை நீ அவர் கிட்டே சும்மா சொல்லு... என்ன சொல்றார்னு பார்.''

''செய்றேன், செய்றேன். ஆனா இதெல்லாம் ஒரே மர்மமா இருக்கு.''

நாங்களிருவரும் டேட்மினிஸ்டருக்குள் நுழைந்துக் கொண்டிருந்தோம். வாகனத்தை, 'பரிசோதனை அலுவலர்' எனும் பகுதி நோக்கி போகச் சொன்னான் பொய்ரெட்.

உற்சாகமாய் வெளியே குதித்தான் பொய்ரெட். உள்ளே போனான். ஒரு சில நிமிடங்களிலேயே அவன் திரும்பி வந்து விட்டான்.

''இவ்ளோ தான்'' என்றான். ''இவ்ளோ தான் என் வேலை.''

''அங்கே போய் என்ன பண்ணிட்டு வர்ரே?'' என்றேன் நான் ஆர்வம் பொங்க.

''சில சமாச்சாரங்களைப் பரிசோதனை பண்ண தந்திருந்தேன்.''

''எதை?''

''அந்தப் படுக்கையறையின் வால் பாத்திரத்திலிருந்து நான் எடுத்திருந்த கோ-கோ மாதிரியை.''

''அதைத்தான் ஏற்கெனவே பரிசோதிச்சாச்சேப்பா...!'' - திகைப்பாய் கேட்டேன். ''டாக்டர் பௌரீஸ் அதை பரிசோதிச்சார். நீ கூட அதுல ஸ்டிரிச்நைன் எப்படி இருக்கும்னு பரிகசிச்சே.''

''டாக்டர் பௌரீஸ் பரிசோதிச்சிருக்கார் என்பது எனக்குத் தெரியும்'' என்று பொறுமையாய் சொன்னான் அவன்.

''அப்புறம்? இது எதுக்கு?''

''இதை மறுபடியும் பரிசோதிச்சா என்னனு தோணிச்சுப்பா. அவ்ளோ தான்.''

பிறகு இதுகுறித்து ஒரு வார்த்தையைக் கூட அவனிடமிருந்து என்னால் உருவ முடியவில்லை.

கோ-கோ குறித்து பொய்ரெட் எடுத்திருந்த இந்த நடவடிக்கை ஆழமான புதிராய் என்னை ஆட்கொண்டது. இதில், ஒரு தொடர்போ அல்லது காரணமோ எனக்குப் பிடிபடவில்லை. இருந்தாலும், இவ்வழக்கில், ஆல்ஃபிரட் குற்றமற்றவர் என்று சொன்ன ஒரே ஒரு நபரான பொய்ரெட்டின் அந்தக் கணிப்பு முழுக்கமாய் நிரூபண மாகியுள்ளதால், இவ்விஷயத்திலும் அவன் மீதான என் நம்பிக்கை உயர்ந்தே நிற்க வேண்டியதாயிற்று.

அடுத்த நாள், அமரராகி விட்ட எமிலியின் இறுதிச் சடங்குகள் நடந்தேறின. திங்களன்று சற்று தாமதமாக நான் காலை சிற்றுண்டி எடுத்துக் கொள்ள வந்தபோது, ஜான், என்னைத் தரதரவென்று ஓர் ஓரமாய் இழுத்துப் போய், அதிரடியான ஒரு புது விஷயத்தைச் சொன்னார். தனது திட்டங்களெல்லாம் முடியும் வரை, மரண விசாரணை நடைபெற்ற ஸ்டைல்ஸ் கிளையின் ஒரு பகுதியில் தங்கியிருக்கப் போவதாக கூறிக் கொண்டு, மூட்டை முடிச்சுகளோடு ஆல்ஃபிரட் கிளம்பத் தயாராகி விட்டதே அந்த விஷயம்.

''அவர் இங்கே இல்லைனு நினைக்கிறதுல அப்படி ஒரு நிம்மதி பரவுது ஹேஸ்டிங்ஸ்'' என்று தொடர்ந்தான் எனது உண்மை நண்பன்: ''அவர் தான் பண்ணியிருப்பார்னு நாங்க எல்லோரும் அவரை ஓரமாத் தள்ளி வெச்ச அனுபவங்களெல்லாம்... ஓஹ்... கொடுமையான தினங்கள். அவர் மேலே மிருகங்களா நாங்க நடந்துக்கிட்டதை இப்போ நினைக்கும் போது கூட குற்றவுணர்வா இருக்கு. சகிக்கவே முடியாத கேவலமான முறையில நாங்க அவரை நடத்தியிருக்கோம்

என்பது தான் உண்மை. இப்போ அவருக்கு எதிரா சொன்ன எல்லாமும் முறிஞ்சுப் போயிடுச்சு. ஆனாலும்... அத்தனை கொடூரமா நாங்க நடந்துக்கிட்டிருந்தாலும்... அவர் உள்ளே வந்த வழி சரியில்லாததால், யாரும் மனமொப்பி மன்னிப்புக் கேட்கப் போறது கிடையாது. இந்த நிலைமையில, நல்ல வேளையா தானா வெளியேற ஒரு வழியை அவராகவே ஏற்படுத்திக்கிட்டதுக்கு... அவருக்கு நன்றி தான் சொல்லணும். ஸ்டைல்ஸை அவர் கிட்டே விட்டு விடும் படியான முடிவை நல்ல வேளையா அம்மா எடுக்கலே. அவர் இங்கே முதலாளியா உட்கார்ந்திருக்கிறதை... ஊஃப்... நினைச்சுக் கூட பார்க்க முடியலே. எத்தனை பணம் வேணுமோ, அதுக்கு வரட்டும். தடை கிடையாது.''

''நீங்க இந்த எஸ்டேட்டை நல்ல படியா கொண்டு செலுத்து வீங்களா...?'' - நான் கேட்டேன்.

''ஓ, நிச்சயமா. என் அப்பாவுடைய பாதி பணம், இந்த நிலத்தின் மேல இருக்கு. இப்போதைக்கு லாரன்ஸ் எங்க கூட தான் இருக்கப் போறான். அவனுடைய பங்கும் இதுல இருக்கு. சின்ன உரசல் வரலாம்... நான் ஏற்கெனவே உன்கிட்டே சொன்னது போல பயங்கரப் பணமுடைல இருக்கேன். இதனால. பார்ப்போம்.''

ஆல்ஃபிரட் கிளம்பப் போவதாக வந்த சேதி உருவாக்கியிருந்த விடுதலை சூழலால், துயரச் சம்பவம் நடந்த பிறகு நாங்கள் மனமொப்பி எடுத்துக் கொண்ட சிற்றுண்டியாய் அது அமைந்தது. சிந்தியா, அவளுக்கே உரிய உல்லாசமான இளமைப் பூரிப்பிற்குத் திரும்பியிருந்தாள். உற்சாகமற்ற ஏக்க முகத்தோடும், படபடப்புட னுமே, வழக்கம் போல் இருந்தார் லாரன்ஸ். ஏனைய அனைவரும் எதிரே விரிந்துக் கிடக்கும் நம்பிக்கை மிகுந்த புது எதிர்காலத்தை உணர்ந்தபடி உற்சாகமுற்றிருந்தோம்.

செய்தித்தாள்கள் அனைத்துமே, நடந்து முடிந்திருந்த துயரச் சம்பவத்தை மட்டுமே முதல் பக்கத்தில் ரொப்பி வந்திருந்தன. பெரிய தலைப்புச் செய்திகள், இடையிடையே செருகப்பட்டிருந்த குடும்பத்தினர்களின் குறிப்புகள், மறைமுகமாய் கிசுகிசுக்கப் பட்டிருந்த சேதிகள், போலீஸின் கைவசம் முக்கியத் துப்புகள் கிடைத்துள்ளன எனும் வழக்கமான ஆதாரமற்ற தோரணம் கட்டப் பட்ட வாசகங்கள். இப்படி பல. எங்களிருவரையும் குறிப்பிடவே யில்லை. 'ஸ்டைல்ஸ் எஸ்டேட்ஸின் மர்மங்கள்' தான், அத்தனை செய்தித்தாள்களின் நாடித்துடிப்பு!

இது, ஜான் குடும்பத்தினர் அனைவருக்கும் ஒரு பெருந் தொல்லையாய் இருந்துவிட்டதில் ஆச்சரியமில்லை. உள்ளே நுழைய அனுமதி முற்றிலுமாக மறுக்கப்பட்ட போதிலும், மாளிகை, நிருபர்களால் தொடர்ந்து முற்றுகையிடப்பட்டது. பிறகு, எஸ்டேட் மக்கள் யாராவது வெளியே துளியூண்டு தலையைக் காட்டினாலும் அமுக்கி விடுவதற்காக, கிராமத்தின் இண்டு இடுக்கெல்லாம் கேமிராவோடு அவர்கள் மறைந்திருக்கலாயினர். கொலை ஏற்படுத்தித் தந்திருந்த விளம்பரத்தின் பிடியில் நாங்களனைவருமே சிக்குண்டிருந்தோம். ஸ்காட்லாண்டு அதிகாரிகள், வந்தார்கள்... பார்த்தார்கள்... விசாரித் தார்கள்... பரிசோதித்தார்கள்... வாய் திறந்து ஏதும் பேசி விடாமல் போனார்கள். எந்த வாலின் நுனியைப் பிடிக்க அவர்கள் வந்து வந்து போகிறார்கள் என்பது மட்டும் நாங்கள் எவரும் அறிய முடியாததாய் இருந்தது. ஏதாவது துப்பு அவர்களுக்குக் கிடைத்ததா? அல்லது, தீர்க்க முடியாத மர்மம் எனும் பட்டியலில் இதையும் சேர்த்து விடப் போகிறார்களா?

சிற்றுண்டிக்குப் பிறகு, நானி, நான் ஆச்சரியப்படும்படி என்னைத் தேடி தானாக வந்தார். என்னோடு சில வார்த்தைகள் தனியாய் பேச முடியுமா என்று வேறு அவகாசம் கேட்டார்.

''நிச்சயமா நானி. என்ன விஷயம்?''

''விஷயம் இதுதான் ஸார். நீங்க இன்னிக்கு உங்க பெல்ஜியன் குள்ள நண்பரைச் சந்திப்பீங்க, இல்லியா?''

நான் ஆமோதித்தேன்.

''ஸார்.. இந்த வீட்டுல எமிலி அம்மாவோ இல்லேனா வேற யாராவதோ பச்சை உடை அணிவாங்களா'னு அவர் எவ்வளவு முக்கியமா என்னைக் கேட்டார்னு உங்களுக்குத் தெரியும் இல்லையா?''

''ஆமாம், ஆமாம். அப்படி ஏதாவது பார்த்தீங்களா?'' - எனது ஈடுபாடு கூடியது.

''அதில்லே ஸார். உங்க நண்பர் கேட்டதிலிருந்து, முதலாளிங்க (ஜானும், லாரன்ஸும்) அடிக்கடி குறிப்பிடற உடையலங்காரப் பெட்டி நினைவுக்கு வந்தது ஸார். அது மாடியில இருக்கிற சின்ன அறையில இருக்கு. பெரிய பெட்டி. பழைய உடைகள்... அலங்கார உடைகள்... இப்படி.. அந்தப் பெட்டியில ஏதாவது இருக்குமோனு எனக்குள்ளே சட்டென ஒரு வெட்டு. அதான் வந்தேன். முடிஞ்சா, இதை, உங்க பெல்ஜியன் நண்பர்கிட்டே---''

''நிச்சயமா சொல்வேன், நானி'' - உறுதியாய் சொன்னேன்.

''நன்றி ஸார். அவர் ரொம்ப தங்கமான மனுஷன். இவருக்கு நேரெதிர் அந்த ரெண்டு ஸ்காட்லாண்டு கழுகுகள். அவங்களை என்ன அரிக்குதுனே தெரியலே... என்னென்லாமோ கேட்கிறாங்க! சம்பந்தமேயில்லாம!''

அன்பு நானி! எனக்கெதிராய், தனது சத்தியமான முகம் நேராய் என்னைப் பார்த்தபடி! பழங்காலத்திய விசுவாசமான பணியாள்! தர்மம் பிரதிபலிக்கும் எத்தனை பொருத்தமான ஓர் உதாரணம் என நினைத்துக் கொண்டேன், அன்பு நானியை!

உடனடியாக கிராமத்துக்குள் இறங்கிப் போய் துரிதமாக பொய்ரெட்டைச் சந்தித்துவிட வேண்டும் என நினைத்தேன் நான்; ஆனால், ஸ்டைல்ஸுக்கு வந்துக் கொண்டிருந்த அவனை நான் பாதி வழியிலேயே சந்தித்து விட்டேன். உடனே நானி தந்த சேதியை அவனிடம் ஒப்படைத்தேன்.

''ஆஹ்...! தைரியலட்சுமி - நானி! அந்த அலமாரியைப் பரிசோதிக்கணும்... இப்போதேவா?... ஆமாமாம்... பெரிய வித்தியாசமிருக்காது... இப்பவே இருக்கட்டும்! எல்லாம் ஒண்ணு தான்.''

இப்படியெல்லாம் சொல்லிக் கொண்ட அவனோடு நான் திரும்ப, வீட்டுக்குள் நுழைந்தோம். வரவேற்பறையில் ஒருவரும் இல்லை. நேராக மாடியிலிருந்த அந்தச் சின்ன அறைக்குள் போனோம்.

சொன்னது மாதிரியே, பீரோ அளவிலான அந்தப் பெரிய உடையலங்காரப் பெட்டி அங்கிருந்தது. பழையது. ஆணியால் பல இடங்களில் அடிக்கப்பட்டு உயிர் வாழ்ந்த பழைய அலமாரி. கற்பனைக்கெட்டாத பலதரப்பட்ட, பல தினுசான அலங்கார ஆடைகளால் அது பொங்கி வழிந்துக் கொண்டிருந்தது.

பொய்ரெட் அத்தனை மூட்டை முடிச்சுகளையும் இழுத்துத் தரையில் போட்டான். வேறுபட்ட பச்சைகளில் ஒரு சில துணி வகைகள் இருந்தன. ஆனால் அவற்றைப் பார்த்து திருப்தியற்று தலையசைத்துக் கொண்டான் பொய்ரெட். தேடி எதுவும் பெரிசாய் கிடைத்து விடப் போவதில்லை என்று எதிர்பார்த்திருந்தவன் போல, தேடுவதில் ஏனோ அவனுக்கு அதிக அக்கறையில்லாமல் இருந்தது. அப்போது திடுமென அவன் ஓர் ஆச்சரியக் கதறலை வெளியிட்டான்.

''என்னாச்சுடா?''

''பார்!''

Scanned by CamScanner

அலமாரி ஏறத்தாழ காலியாயிருக்க, அங்கு, வலப்புற ஓரமாய், சாய்த்து வைத்திருந்த நிலையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது .... அற்புதமான ஒரு கறுப்பு தாடி.

''ஓஹோஹோ...'' என கண்ணகலச் சொன்னான் அவன். கண்ணுக்கருகில் வைத்துக் கொண்டு திருப்பித் திருப்பி அதனைப் பரீட்சித்தவன், ''ஓஹோஹோ...'' என்றான் மறுபடியும் பிரமிப்பாய். ''இது புதுசு'' என்று குறிப்பு தந்தான். ''ரொம்பப் புதுசு.''

சில தயக்கமான கணங்களுக்குப் பிறகு அதனை அதனிடத்திலேயே வைத்தான். அதன் தலையில் பழையபடி எல்லாவற்றையும் திணித்தான். உற்சாகம் குலையாமல் வெளியேறி கீழே வந்தான். நேராக சமையல் கட்டுக்கு அவன் வழியமைத்துக் கொள்ள.... அங்கே சில சமையல் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தாள் நானி.

மிக சாந்தமான அணுகுமுறையோடு நானிக்கு நல் காலை வணக்கங்களைத் தெரிவித்துக் கொண்ட பொய்ரெட் தொடர்ந்தான்: ''நீங்க சொன்ன அந்த மாடி அலமாரிப் பெட்டியைப் பார்த்தோம், நானி. அது பற்றி எனக்குத் தெரியப்படுத்தினதுக்காக உங்களுக்கு நான் நன்றி தெரிவிச்சுக்கிறேன். அங்கே, குறைவில்லாம, விதவிதமான துணிமணிகள் இருக்கு. அதெல்லாம் அடிக்கடி உபயோகமாகுதா என்ன?''

''இப்போல்லாம் ரொம்ப இல்லே ஸார். அவ்வப்போது மட்டும் முதலாளிங்க 'ராத்திரி ஆட்டத்துக்கு' ஏற்பாடு செய்வாங்க. கோமாளித்தனமா இருக்கும். இந்த லாரன்ஸ்... அற்புதமா இருப்பான்.... கோமாளி வேஷத்துல! 'பெர்ஸிய நாட்டுக் கொடுங்கோலன்'னு சொல்லிக்கிட்டு அவன் வேஷம் கட்டிக்கிட்டு வந்த ராத்திரி பொழுதை என்னால மறக்கவே முடியாது...! அது ராஜா போல இருந்ததாம்... யார் சொல்லறது இதை... அவனே தான்! கையில் நாலடிக்கு ஒரு கத்தி --- பேப்பர்ல! என்னைப் பார்த்து சொல்றான்... 'ஜாக்கிரதை நானி'. எதுக்கு தெரியுமா... 'நீ என்கிட்டே அடிமை மாதிரி மரியாதையா நடந்துக்கணும். தெரிஞ்சுதா! இது இப்பத் தான் தீட்டின பட்டாக்கத்தி. கழுத்தைத் துண்டாக்கிடும், நீ மரியாதைக் குறைவா ஆடினேனா...!' எனக்கு சிரிப்பு தாங்கலே... அப்படி சிரிச்சேன். இந்தப் பொடிசு சிந்தியா... முரட்டு துஷ்டனா வந்தா. துள்ளினா கழுத்தோட வெட்டிக் கடாசிடுவேன்னு ஆடினா. பார்த்திருந்தீங்கன்னா, அதியற்புத அழகியொருத்தியா இப்படி ரௌடியா ஆள் மாறி வந்திருப்பதுனு பிரமிச்சுப் போயிருப்பீங்க. அவதான்னு ஒருத்தருக்கும் அடையாளம் தெரிஞ்சிருக்காது.''

Scanned by CamScanner

''அந்த சாயங்காலப் பொழுதுகளெல்லாம் செம குஷியா இருந்திருக்கணும்'' என்றான் மகிழ்ச்சி கொண்டவனாய். ''பெர்ஸியக் கொடுங்கோலனா லாரன்ஸ் தோன்றிய போது அந்த அலமாரியில இருக்கிற தாடியைத் தான் அவர் ஒட்டிக்கிட்டு வந்திருக்கணும்... இல்லையா..?''

புன்முறுவியபடி; ''அவர் கிட்டே ஒரு தாடி இருந்தது ஸார்'' என்றாள் நானி. ''என்கிட்டேயிருந்த ரெண்டு கறுப்பு கம்பளி நூல் கண்டுகளை வாங்கிக்கிட்டு அதை அவரே தயாரிச்சது எனக்கு நினைவிருக்கு. கொஞ்ச தூரத்திலிருந்து பார்க்கும் போது முகத்துக்கு அழகா பொருந்தித் தெரியற அளவுக்கு அதை இயற்கையா பண்ணியிருந்தார். அங்கே ஒரு தாடியிருக்கிறது எனக்குத் தெரியாது ஸார். சமீபத்துல தான் பண்ணி கொண்டு போய் வெச்சிருக்கணும்னு நினைக்கிறேன். ஒரு சிகப்பு நிறப் பொய்க் கூந்தல்... 'விக்' ... அதுல இருந்தது தான் எனக்குத் தெரியும்... மற்றபடி முடி சம்பந்தமா வேற ஒண்ணு இருக்கிறது எனக்குத் தெரியாது. கார்க் மூடி இருக்கே... அந்தத் தக்கையை எரிச்சுப் பண்றாங்க. அப்புறம் அதைக் கலைக்கிறது தான்... ஊஃப்... படாதபாடு. ஒரு தடவை இந்த சிந்தியா அப்படி ஏதோ தலையில அலங்காரம் பண்ணிக்கிட்டு பிறகு அதைக் கலைக்க பட்ட அவஸ்தை இருக்கே...!''

''ஆக, நானிக்கு, அந்தக் கறுப்பு தாடி பற்றி ஒண்ணும் தெரியாது'' - அங்கிருந்துக் கிளம்பி வரவேற்பறைக்குள் நுழையும்போது சிந்தனையாய் சொல்லிக் கொண்டான் பொய்ரெட்.

''இதுதான் *அதுனு* நீ நினைக்கிறியா?'' - ஆர்வமாய் கிசுகிசுத்தேன் நான்.

பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்தான்.

''நினைக்கிறேன். அது கத்தரிக்கப்பட்டிருப்பதைக் கவனிச்சியா?''

''இல்லை.''

''ஆமாம். திரு. ஆல்ஃபிரட்டின் தாடி போலவே அது கத்தரிக்கப்பட்டிருக்கு. நறுக்கப்பட்ட சில முடித் துண்டுகளையும் அதுல நான் பார்த்தேன். ஹேஸ்டிங்ஸ்... இந்த விஷயம் ரொம்ப ஆழமா போகுதுடா.''

''யார் அதை அந்தப் பழைய அலமாரியில கொண்டு போய் போட்டிருப்பாங்க... ஆச்சரியப்படறேன்.''

''அருமையான புத்திசாலித்தனம் கொண்ட யாரோ ஒருத்தன் தான்'' - வறட்சியாய் குறிப்பிட்டான் பொய்ரெட். ''இந்த மாளிகை

யில, அங்கே ஒண்ணு அப்படி இருக்குனு ஒருத்தரும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத இடமா பார்த்து அவன் தேர்ந்தெடுக்கிறதை கவனிச்சியா...?! ஆமாண்டா... அவன் செம புத்திசாலி. ஆனால் நாம அதி புத்திசாலியாகணும். எந்த அளவுக்குத் தெரியுமா... நாம் அதி புத்திசாலிகள்னு அவனால கண்டுபிடிச்சுட முடியாத அளவுக்கு!''

நான் பூரணமாக ஒத்துக் கொண்டேன்.

''இந்த இடத்துல தான், நண்பா, நீ பெரிய அளவுல எனக்கு உதவிகரமா இருக்கப் போறே.''

இந்தப் பாராட்டுதலில் நான் திளைத்தேன். என்னுடைய உண்மையான மதிப்பை --- தகுதியை --- பொய்ரெட் பாராட்டி உபயோகித்துக் கொள்வதில்லையோ என மனம் நொந்தக் கணங்களெல்லாம் உண்டு.

''ஆமாம்...'' என என்னை முறைத்துப் பார்த்தபடி தொடர்ந்த பொய்ரெட், ''நீ ஒப்புயர்வற்றவனாய் இருக்கப் போகிறாய்'' என்றான்.

இது திருப்திப்படுத்தினாலும் தொடர்ந்து அவன் சொன்ன வார்த்தைகள் அத்தனை உசத்தியா இல்லை.

''இந்த மாளிகையில, என்னோட ஒத்துழைக்க ஒரு கூட்டாளி வேணும்... அவசரமா.''

''உனக்கு நான் இருக்கேன்'' - கண்டனக் குரல் தந்தேன்.

''உண்மைதான். ஆனா நீ பத்தாது.''

நான் உடைந்துப் போனேன்... அதை உணர்த்தவும் செய்தேன். உடனடியாய் அவன் நிலைமையை என்முன் வைக்க அவசரமானான் அவன்.

''நான் என்ன சொல்ல வரேன்னே நீ புரிஞ்சிக்கலே. நீ என் கூடவே நகமும் சதையுமா இருந்து வேலை பண்ணிக்கிட்டு இருக்கேனு இந்த வீட்டின் தூசு தும்புக்குக் கூட தெரியும். ஆனா, எனக்கு, நம்மோட எவ்வகையிலும் சம்பந்தப்படாத ஒருத்தர் வேணும்.''

''ஓ... அப்படியா?''

''அப்படியே. இதைத் தான் நீ செய்யவுள்ள பெரும் உதவினு குறிப்பிட்டேன். கோபப்படாதே.''

''ஜான்?''

''ம்ம். அவர் வேண்டாம்னு நினைக்கிறேன்.''

''அருமையானவன் தான்... ஆனா சூட்டிகையானவனா தோணலே'' என்றேன் நான் சிந்தனையாய்.

Scanned by CamScanner

''இங்கே தான் எவிலின் ஹோவோர்ட் வராங்க'' என்றான் திடீரென்று. ''அவங்க தான் இதுக்கு சரியான நபர். ஆனா நான் அவங்களோட வேண்டாதவங்க பட்டியல்ல இருக்கேன் --- ஆல்ஃபிரட்டை விடுவிச்சதால! பரவாயில்லே. இருந்தாலும் நாம முயற்சிக்கலாம்.''

வேண்டா வெறுப்பாய் தலையசைத்து ஹெர்குல் பொய்ரெட் டோடு சில நிமிடங்கள் பேச ஒப்புக் கொள்ள மனமிறங்கினார் எவி.

அங்கிருந்த ஒரு சிறு அறைக்குள் நாங்கள் மூவரும் நுழைந்துக் கொள்ள பின்னால் கதவினை மூடினான் பொய்ரெட்.

''இத பாருங்க திருமிகு பொய்ரெட்'' என்று பொறுமை யிழந்தவராய் நுழைந்தவுடனேயே அழைத்த எவிலின், ''என்ன விஷயம்? முதல்ல அதைக் கொட்டுங்க. எனக்கு தலைக்கு மேல வேலை'' என்றார்.

''நினைவிருக்கா எவிலின் ஹோவோர்ட்... நீங்க எனக்கு உதவி பண்ண வேண்டும்னு ஒரு தடவை நான் உங்களைக் கேட்டிருக் கேன்.''

''ஆமாம். நினைவிருக்கு'' - பெண்மணி ஒப்புக் கொண்டாள். ''அதுக்கு மனப்பூர்வமா சந்தோஷமா உங்களுக்கு நான் உதவி தருவேன்னு பதில் சொல்லியிருந்தேன் --- இந்த ஆல்ஃபிரட் பெருமகனாரைத் தூக்குலத் தொங்க விடறதா இருந்தா...!''

''ஆஹ்...'' என்ற பொய்ரெட், எவிலினைத் தீவிரமாகப் படித்தான். ''எவிலின்... உங்களை நான் ஒரு கேள்விக் கேட்கப் போறேன். இதுக்கு நீங்க மிக உண்மையா பதில் தரணும்னு உங்களை நான் கெஞ்சிக் கேட்டுக்கிறேன்.''

எவிலினுக்கே உரிய பிரத்யேகமான மிடுக்குடன், ''நான் பொய் சொல்வதே கிடையாது'' என்றார்!

''இதான் கேள்வி: இன்னுமா நீங்க, திரு. ஆல்ஃபிரட் அவருடைய மனைவியை விஷம் வெச்சுக் கொன்னிருப்பார்னு நம்பறீங்க?''

''என்ன பேசறீங்க?'' - குரல் உயர கூர்மையாய் கேட்டார் அவர். ''இன்னுமான்னா? உங்களுடைய விளக்கங்களெல்லாம் என்னை துளியாவது மாற்றியிருக்கும்னு... பாவம், நீங்க எதிர்பார்க்கவே வேண்டாம். மருத்துவக் கிடங்கிலிருந்து ஸ்டிரிச்னைன் வாங்கி வந்த நபர், இந்த ஆளு கிடையாது என்பது வரைக்கும் நான் ஏத்துக்கிறேன். ஆனா கொன்னது இவன் தான். ஈ மொய்க்காம இருக்க உபயோகப் படுத்தற காகிதத்தைக் காபி கோப்பையில முக்கி எடுத்திருப்பான்.

Scanned by CamScanner

முதல்லேயே நான் இதைச் சொல்லலே?! பாவப்பட்ட பலஹீனக் கிழவிக்கு அந்த விஷம் போதும்!''

''அதுல இருக்கிறது ஆர்ஸனிக். நாம் பேசிக்கிட்டிருக்கிறது ஸ்டிரிச்நைன்.''

''என்ன மண்ணோ! ஸ்டிரிச்நைனைப் போலவே ஆர்ஸனிக்கும் எமிலியைக் கல்லறைக்குத் தான் அனுப்பப் போகுது. அந்த ஆளு தான் கொன்னிருக்கான்னு எனக்குள்ளே முடிவாயிட்ட பிறகு, அவன் *எப்படி* செஞ்சாங்கிறது என்னை ஒண்ணும் செய்துடாது.''

''ரொம்பச் சரி. நீங்க அவர்தான் கொன்னிருக்கார்னு *முழுக்க* நம்பினா... ரொம்பச் சரிதான்'' என அடக்கமாய் சொன்னான் பொய்ரெட். ''சரி. என் கேள்வியை வேற இன்னொரு விதமா கேட்கிறேன். உங்க நெஞ்சுக்கு நெஞ்சா சொல்லுங்க... எப்போ தாவது, உங்களுடைய அருமை எமிலி அவரது கணவனால விஷம் வைக்கப்பட்டார்னு நீங்க நம்பினதுண்டா?''

''என்னாச்சு இவருக்கு...! கடவுளே...!'' - கதறினார் ஹோவோர்ட். ''என்னைய குழப்புறியா நீ! அந்த ஆள்தான் வில்லன். நான் உங்ககிட்டே திருப்பித் திருப்பிச் சொல்லலே? அவளுடைய மெத்தையில வெச்சே அவளை இவன் கொல்லத் தான் போறான்னு நான் திரும்பத் திரும்பச் சொல்லலே? அவனையே நான் ஒரு விஷம் போல தீவிரமா வெறுத்து ஒதுக்கலே? இப்போ எதுக்கு நீ தேவையில்லாம மத்தியஸ்தம் பண்ணிக்கிட்டிருக்கே? ம்?''

ரொம்பச் சரியாக பேசுகிறாள் என நான் எவிலினைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் போதே, ''ஆங்... சரியா சொன்னீங்க'' என்று பொய்ரெட் சொன்னான். ''இது, என்னுள்ளே இருக்கும் சிறு ஊகத்தோட அற்புதமா ஒத்துப் போகுது.''

''முடிக்க விடாதீங்க...! என்ன அந்த சின்ன ஊகம்?''

''எவிலின் ஹோவோர்ட்...! என் நண்பன் ஹேஸ்டிங்ஸ் இங்கே வந்து இறங்கின அன்னிக்கு நடந்த ஒரு சிறு உரையாடல் உங்களுக்கு நினைவிருக்கா? அதை அவன் பல தடவை என்கிட்டே திருப்பிச் சொல்லியிருக்கான். அதுல நீங்க பேசினதா வரும் வார்த்தைகள் என்னை ரொம்பவே பாதிச்சிருக்கு. ரொம்ப நிச்சயப்படுத்தி நீங்க சொல்லியிருக்கும் வார்த்தைகள் அவை. ஒரு குற்றம் நடந்தா, அது... நீங்க மிக நேசிக்கும் ஒருவருடைய கொலையா இருந்தா, நிச்சயமான சாட்சிகளைக் கொண்டு வந்து நிறுத்தி நிரூபிக்க முடியாம



Scanned by CamScanner

போனாலும்... அந்தக் கொலையை யார் செஞ்சதுனு உங்களுடைய உள்ளுணர்வின் துணை கொண்டு உங்களால சொல்லிவிட முடியும் அப்படினு மிகுந்த நம்பிக்கையோட நீங்க சொல்லியிருக்கீங்க.''

''ஆமாம். இதே போல நான் சொன்னது எனக்கு நல்லாவே நினைவிருக்கு. இதை நான் நம்பவும் செய்யறேன். இது முட்டாள் தனமான பேச்சுனு நீங்க நினைக்கிறீங்க போல?!''

''நிச்சயமா அப்படி கிடையவே கிடையாது.''

''ஆங்... கிடையாதுனு சொன்னாலும் கூட, ஆல்ஃபிரட்டுக்கு எதிரா குதிக்கும் என்னோட உள்ளுணர்வை நீங்க கவனிக்க மாட்டீங்க.''

''அப்படியில்லை'' - ஒரே வெட்டாய் சொன்னான் பொய்ரெட். ''ஏன்னா... உங்களுடைய உள்ளுணர்வு ஆல்ஃபிரட்டுக்கு எதிரா குதிக்கலே.''

''என்ன?''

''நீங்க அவர்தான் கொலை செய்திருப்பார்னே நம்ப விரும்பறீங்க. அவர் அப்படி செய்யக் கூடியவர் தான்னு மட்டுமே நீங்க அவரை நினைக்கிறீங்க. இதெல்லாம் நினைப்புகள். ஆனா உங்க உள்ளுணர்வு அவர் செய்யலேனுதான் உங்ககிட்டே சொல்லிக்கிட்டு இருக்கு. மேலும் அதிகமா அது உங்ககிட்டே சொல்லுது --- இன்னும் நான் மேலே போகலாமா?''

பொய்ரெட்டின் இந்த வார்த்தைகளுக்கு எவிலின் பிரமித்துப் போய் அவனைக் கண்ணகல பார்த்துக் கொண்டேயிருந்தார். கொஞ்சமாய் சம்மதம் தெரிவிப்பது போல கையசைவு செய்தார்.

''இந்த அளவுக்கு முரட்டுப் பிடிவாதமா அவர் மேல நீங்க ஏன் குரோதமா நடந்துக்கிட்டு வரீங்கன்னு நான் சொல்லட்டுமா? ஏன்னா, எதை நம்பணும்னு நீங்க நினைக்கிறீங்களோ அதையே நம்பிடணும்னு நீங்க செய்யற முயற்சியாலே தான்; உங்க உள்ளுணர்வு வேற ஒருத்தருடைய பெயரைக் கோடிக் காட்டும் போது கூட --- அதை மேற்கொண்டு பேச விடாம பண்ணி, அப்படியே தண்ணிக்குள்ளே முக்கி, மூச்சுத் திணறடிச்சு, அதைக் கொன்றுவிட நீங்க செய்யும் முயற்சியால தான்.''

கைகளைக் காற்றில் குறுக்கு நெடுக்காக ஆட்டியாட்டி, ''இல்லை... இல்லை'' என காட்டுக்கத்தலாய் கத்தினார் எவிலின். ''அப்படிச் சொல்லாதீங்க! ப்ளீஸ்... என் காதுபட அப்படிச் சொல்லாதீங்க! அது உண்மை கிடையாது! அது உண்மையா இருக்கக்

கூடாது! அப்படிப்பட்ட ஓர் எண்ணத்தை... பயங்கர ஊகத்தை... எது என் மண்டைக்குள்ளே போட்டுதுனு எனக்குத் தெரியலே.''

''அப்படினா நான் சரி... இல்லையா?'' - கேட்டான் பொய்ரெட்.

''ஆமாம், ஆமாம்; நீ ஒரு மந்திரவாதியா தான் இருக்கணும்... எப்படி என் மனசைப் படிச்சுட்டே! ஆனா... ஆனா... அது உண்மையா இருக்க முடியாது ஸார், இருக்க முடியாது. அது ஒரு பயங்கர ஊகம். பிசாசு போல. அசாதாரணமானது. சாத்திய மில்லாதது. அதை விட்டுடுவோம்... ப்ளீஸ். கொன்னது ஆல்ஃபிரட்டாத் தான் இருக்கும்.''

அதிருப்தியாய் தலையை மறுத்துத் தலையசைத்தான் பொய்ரெட்.

''அதுபற்றி இனி என்கிட்டே நீங்க பேசக் கூடாது'' - தொடர்ந்துக் .கொண்டிருந்தார் எவிலின். ''ஏன்னா நான் உங்ககிட்டே சொல்ல மாட்டேன். அதை, நான் எனக்கே கூட ஒத்துக்க மாட்டேன். அப்படியெல்லாம் நினைத்துள்ள நான் ஒரு பைத்தியமாத்தானிருக்க முடியும்.''

திருப்தியடைந்து விட்டவனைப் போல தலையசைத்தான் பொய்ரெட்.

''நான் உங்களை ஒண்ணும் கேட்க மாட்டேன். நான் நினைச்ச மாதிரி தான் என்று நிரூபணமானதே எனக்குப் போதும். மேலும், எனக்கு... எனக்கு... எனக்கே கூட உள்ளுணர்வின் தொடர்பு உண்டு. உள்ளுணர்வுகள் பொய்யாகாது. ஆக, நாம ரெண்டு பேருமே சரியான ஒரே முடிவை நோக்கித் தான் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.''

''உங்களுக்கு உதவி செய்யும்படி என்னைக் கேட்காதீங்க --- ஏன்னா... நான் பண்ண மாட்டேன். என் சுண்டு விரலை நிமிர்த்தி... அந்த... அந்த... அந்த நபர் பக்கமா... ... ....''

''நீங்க அறியாமலே எனக்கு உதவி பண்ணுவீங்க. நான் உங்களை ஒண்ணும் கேட்கப் போறதில்லே... என் கூட்டாளியா இருங்க, ப்ளீஸ், என்பதைத் தவிர! உங்க கிட்டேயிருந்து நான் எதிர்பார்க்கும் ஒண்ணே ஒண்ணை மட்டும், என் கூட்டாளியா இருந்தபடி நீங்க செய்தீங்கன்னா போதும்.''

''அது?''

''கவனமா கண்காணிக்கணும்!''

எவிலின் தலை குனிந்துக் கொண்டார். ''ஆமாம்... நான் இதைத் தான் பண்ணிக்கிட்டு இருக்கேன்... கண்காணிச்சுக்கிட்டு இருக்கேன் --- எப்படியாவது நான் நினைப்பது தவறா முடிஞ்சுட ணும்னு எதிர்பார்த்தபடி!''

''நாம நினைச்சது தவறுனு இருந்தால்... மிக மிக நல்லது'' என்றான் பொய்ரெட். ''என்னைவிட சந்தோஷப்படும் இன்னொரு ஜீவன் இருக்க முடியாது. ஆனா, நாம சரி'னு ஆயிட்டா? நாம தான் சரி என்று ஆகிவிட்டா, எவிலின் ஹோவோர்ட், நீங்க யார் பக்கம்?''

''எனக்குத் தெரியலியே... எனக்குத் தெரியலியே... எ..ன...க்கு...''

''சரி. கிளம்புங்க.''

''நாம பேசாம இருந்துடலாம்.''

''பேசாம எல்லாம் இருக்க முடியாது.''

''ஆனா, எமிலி, அவளாகவே...'' - உடைந்தாள் எவிலின்.

''எவிலின்...'' என்ற பொய்ரெட், ''இது உங்களுக்கு யோக்கியம் கிடையாது'' என்றான். ''நேர் கொண்ட பார்வை மிக்க எவியா இப்படி குழம்பி, உடைவது...?''

இதைக் கேட்டதும் சட்டென நிமிர்ந்தார் எவிலின்.

''சரி தான்'' என அமைதியாய் சொன்னவர், ''சற்றுமுன் பேசியது எவிலின் கிடையாது!'' என்று விட்டு தலையைப் பெருமையாய் நிமிர்த்திக் கொண்டார். ''*இது* தான் எவிலின்! அவ எப்பவுமே நீதியின் பக்கம் தான்! என்ன வந்தாலும் வரட்டும்.. பரவாயில்லை!''

இந்த சில வார்த்தைகளோடு முடிவாய் அறையை விட்டு வெளியேறினார் அவர்.

''அதோ போய்க் கொண்டிருக்கிறார்'' என்று செல்லும் எவிலினைப் பார்த்தபடி குறிப்பிட்ட பொய்ரெட், ''விலை மதிப்பற்ற ஒரு கூட்டாளி. அந்தப் பெண்மணிக்கு, அருமை ஹேஸ்டிங்ஸ்... மூளையும் இருக்கிறது... இதயமும் இருக்கிறது.''

நான் பதில் ஏதும் தரவில்லை.

''உள்ளுணர்வு ஓர் அற்புதமான அரிய படைப்பு'' - முணுமுணுத்தான் பொய்ரெட். ''அதைப் பாம்புனு நினைச்சு தாண்டவும் முடியாது... பழுதுனு நினைச்சு மிதிக்கவும் முடியாது.''

''நீ என்னப் பேசறே.... எதைப் பத்திப் பேசறே என்பது, உனக்கும் வந்து போன எவிலினுக்கும் மட்டும் தெரிஞ்சிருக்கு'' - என்றேன் கடுமையாய். ''நான் இன்னமும் இருட்டுக்குள்ளேயே தான் நிறுத்தப்பட்டிருக்கேன் என்பது உனக்குத் தெரியலே.''

''உண்மையா? அப்படியா நண்பா?!''

''ஆமாம். விளக்கு. செய்வியா?''

Scanned by CamScanner

என்னை சில நொடிகளில் கவனமாய் படித்தான் பொய்ரெட். பிறகு, என்னை ஆச்சரியத்தில் தூக்கிப் போடும் வண்ணம், மறுத்துத் தலையசைத்தான் முடிவாய். ''செய்ய முடியாது, அருமை நண்பா.''

''ஏன்.. ஏன்? ஏன் விளக்கக் கூடாது?''

''ரகசியத்துக்கு ரெண்டு பேர் போதும்.''

''எனக்குக் கூட தெரியாமல் நீ உண்மைகளைப் பதுக்கி வைக்க முயலுவது.. அநியாயம் பொய்ரெட். என்னை நீ உதாசீனப் படுத்தறே.''

''நான் எந்த உண்மையையும் மறைக்கலே. எனக்குத் தெரிஞ்ச அத்தனை உண்மைகளும் உன் கட்டுக்குள்ளும் இருக்கு. அவற்றிலிருந்து நீயே உன் முடிவுகளை எடுத்துக் கொள்ளலாம். இந்நேரம்... ஊகங்கள் என்னென்ன என்பதற்கு அல்ல! அவற்றின் மீதான பலதரப்பட்ட கேள்விகளுக்காக.''

''இருக்கலாம். ஆனாலும் ஊகங்களைத் தெரிந்துக் கொள்வதில் ஆர்வமிருக்கக் கூடாதா?''

என்னை மிகவும் உண்மையாக பார்த்த பொய்ரெட், ஆனால் மறுபடியும் மறுத்தே தலையசைத்தான்.

''ஒண்ணு தெரிஞ்சுக்கோ நண்பா'' என பரிதாபப்படுபவனாய் சொன்ன பொய்ரெட், ''உனக்கு உள்ளுணர்வுகள் கிடையாது'' என்றான்.

''துப்பறிவதற்கு புத்திக் கூர்மை தான் வேண்டும்.''

''ஆனா இவையிரண்டும் எப்போதுமே ஒண்ணா கை கோர்த்துக்கிட்டு தான் போகும்'' என்று புரிந்து கொள்ள முடியாதவனாய் பேசினான்.

சம்பந்தா சம்பந்தமில்லாத ஒரு குறிப்பாய் இது எனக்கு தென்பட இதற்கு மறுபதில் கூறும் சிரமத்தையெல்லாம் நான் எடுத்துக் கொள்ளவில்லை. இனி வரும் நாட்களில் ஏதாவது முக்கியமான கண்டுபிடிப்புகளை நான் செய்தால்... செய்யத் தான் போகிறேன்... அவற்றை வழக்கம்போல் நேராகவும் உடனடியாகவும் இவனிடம் போய்க் கொட்டி விடமால், அவை தரும் முடிவுகளைக் காட்டி பிரமிக்கச் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டேன்.

நம்மை நாமே நிலைநிறுத்த வேண்டிய கட்டாய தருணங்களும் உள்ளன தானே!

Scanned by CamScanner

## அத்தியாயம் ஒன்பது

# டாக்டர் பௌரீஸ்

~

**லா**ரன்ஸை சந்தித்து பொய்ரெட் தெரிவிக்கச் சொன்ன தகவலைச் சொல்லி விடும் சந்தர்ப்பம் எனக்கு இதுவரை வாய்த்திருக்கவில்லை. ஆனால், இந்தத் தருணத்தில், என் நண்பனின் மேதாவித்தனமான நடவடிக்கையை எண்ணி நான் கருவிக் கொண்டு எஸ்டேட் மரங்களுக்கிடையே தனியே உலவிக் கொண்டிருக்கும் போது, சற்று தொலைவில் லாரன்ஸையும் கண்டேன். பழைய கழி ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு வழியில் அகப்படுபவற்றை இலக்கின்றி அடித்து எறிந்தவாறு அவரும் உலவிக் கொண்டிருந்தார்.

தகவலைத் தெரிவித்துவிட இதுதான் தகுந்த சந்தர்ப்பம் என்று எனக்குப் பட்டது. அவன் சொன்ன வார்த்தைகளின் பொருளை முழுவதுமாக இன்னும் என்னால் கிரகிக்க முடியவில்லை என்பது நிஜமே. ஆனாலும் --- நான் தகவலைத் தெரிவித்ததும் லாரன்ஸ் சொல்லும் பதிலிலிருந்தும், பிறகு அதன்மீது எனக்குள் நானே செய்துக் கொள்ளும் குறுக்கு விசாரணையின் மூலமாகவும், அதன் கருத்தை விரைவாய் என்னால் அடைந்துவிட முடியும் என நம்பினேன். இந்நினைப்போடு லாரன்ஸை அணுகினேன்.

''நான் உங்களை சந்திக்கத்தான் எதிர் பார்த்துக்கிட்டிருந்தேன்'' - உண்மையில்லாத வார்த்தைகளைச் சொன்னேன்.

''நீங்களா?''

''ஆமாம். காரணம் என்னன்னா, உங்களுக்கு நான் ஒரு சேதி வெச்சிருக்கேன் --- பொய்ரெட் கிட்டேயிருந்து.''

''அப்படியா?''

''உங்களோடு தனியா இருக்கிற சந்தர்ப்பம் வரும் வரை அவன் என்னைக் காத்திருக்கச் சொல்லியிருந்தான்'' - சொன்னேன் நான்.

Scanned by CamScanner

குரலைக் கணிசமாய் தாழ்த்திச் சொன்னேன். அப்படியே கடைக் கண்ணால் அவரை ஆழமாக கவனிக்கவும் செய்தேன். ஒருவரிடம் அப்போது காணப்படாத சூழலை உண்டாக்கி விடுவதில் நான் சமர்த்தன்!

''பிறகு?''

அந்தக் கறுப்பு கடுகடு முக பாவத்தில் எந்தவொரு மாற்றமும் உண்டாகி விடவில்லை. நான் அடுத்து என்ன சொல்லப் போகிறேன் என்பது குறித்த ஊகம் அவருக்கு இருக்கின்றதா?

''இதுதான் அந்த சேதி'' - நான் குரலை இன்னும் கீழே கொண்டு போனேன். ''அந்தக் கூடுதலான இன்னொரு எக்ஸ்ட்ரா காபி கோப்பையைக் கண்டுபிடி... நீ நிம்மதியாகி விடுவாய்.''

''என்ன உளறல்? இதன் மூலமா அவர் என்னத்தை உணர்த் திட்டார்?'' - எவ்வித பாதிப்பும் அற்ற ஆச்சரியத்தோடு என்னை முறைத்தார் லாரன்ஸ்.

''உங்களுக்கே தெரியாதா?''

''துளிகூட தெரியாது. உங்களுக்கு?''

மறுத்துத் தலையசைக்கத் தான் முடிந்தது.

''என்னது அது, எக்ஸ்ட்ரா காபி கோப்பை?''

''எனக்குத் தெரியாது.''

''இந்தக் காபி கோப்பை சமாச்சாரம் பற்றியெல்லாம் தெரிஞ்சுக்க விரும்பினா, அவர் நானி கிட்டே நேரடியா போய் கேட்பது தான் சரி... இல்லேனா ஏதாவது வேலைக்காரி கிட்டே கேட்கச் சொல்லுங்க. இதெல்லாம் அதுங்க வேலை... என்னுது இல்லே. எங்க கிட்டே உபயோகப்படுத்தப்படாத சில கோப்பைகள் இருக்கு என்பதைத் தவிர, இந்த காபி கப் கதையெல்லாம் எனக்கு ஒரு மண்ணும் தெரியாது...! அற்புதமான வேலைப்பாடு நிறைந்தவை. அவை வெகு அழகு தெரியுமா! உங்களுக்குக் கலை நுணுக்க மெல்லாம் பிடிக்குமா ஹேஸ்டிங்ஸ்?''

நான் மறுத்துத் தலையசைத்தேன்.

''நீங்க பாவம், ஹேஸ்டிங்ஸ். கலாரசனை எத்தனை இன்பமானது தெரியுமா! நிஜ சைனா களியில செஞ்சவை. கையாளும் போது அத்தனை பரவசமா இருக்கும்...! ஏன்.. பார்த்தாலே கூட போதும்... பரவசம் தான்!''

''அதிருக்கட்டும். பொய்ரெட்டிடம் நான் என்ன சொல்ல?''

Scanned by CamScanner

''அவர் எதைப் பற்றிப் பேசறாருனே எனக்கு புரியலேனு போய் சொல்லுங்க. ரெட்டைத் தலைவலி.''

''சரி.''

''எதுக்கு?''

''நீங்க இப்போ முதல்ல சொன்னதுக்கு.''

நான் திரும்பி மாளிகை நோக்கி நடக்க ஆரம்பிக்க, திடுமென மீண்டும் என்னை அழைத்தார் லாரன்ஸ்.

''ஏய், ஹேஸ்டிங்ஸ். நீங்க சொன்ன தகவலின் கடைசி என்ன? அதை மட்டும் மறுபடி சொல்லுங்களேன்... முடியுமா?''

'''அந்தக் கூடுதலான இன்னொரு எக்ஸ்ட்ரா காபி கோப்பையைக் கண்டுபிடி... நீ நிம்மதியாகி விடுவாய்'. இது என்ன உணர்த்துதுனு உங்களுக்கு சத்தியமாவே தெரியலியா?'' - நான் விசுவாசமாய் கேட்டேன்.

அவர் மறுத்துத் தலையசைத்தார்.

''இல்லை'' என்றார் முணுமுணுப்பாய். ''தெரியலே. எனக்குத் தெரிஞ்சிருக்கணும்னு நினைக்கிறேன். ஆனா - ம்ம். தெரியலே.''

மாளிகையில் மதிய சாப்பாடு தயார் என்பதற்கான மணி அடிக்கப்பட்டது. இருவரும் திரும்பினோம். மதிய உணவுக்கு இருக்கும்படி ஜானால் பொய்ரெட் கேட்டுக் கொள்ளப்பட்டிருந் தான்... எனவே அவன் அங்கு நாற்காலியில் அமர்ந்திருந்தான்.

நடந்துவிட்ட துயரச் சம்பவம் பற்றி மீண்டும் மீண்டும் நினைவு படுத்தும்படியான உரையாடல்கள், யாரும் அறிவுறுத்தி சொல்லா மலேயே மெள்ள மெள்ள மறைந்துப் போயிருந்தது. இதனால் நாட்டு நடப்பு மேலும் இன்ன பிறவற்றைப் பற்றியெல்லாம் அதிகம் பேசிக் கொள்ளும் வாய்ப்புகள் உணவு மேஜையில் உருவாயின. ஆனாலும், பதார்த்தங்கள் பரிமாறப் பட்டு நானியின் தலை அறையிலிருந்து மறைந்ததும், பொய்ரெட், சட்டென, இதற்கே எதிர்பார்த்திருந்தது போல, திருமதி மேரி ஜானுக்கு நெருக்கமாக தன்னை வளைத்துக் கொண்டான்.

''எதிர்பாராது நடந்துவிட்ட திருமதி எமிலி மரணத்தைப் பற்றிய மனக்கிலேசம் தரும் நினைவுகளை மறுபடியும் இப்போது நான் கிண்டுவதற்கு, மன்னிக்க வேண்டும். எனக்குள் ஒரு சிறு ஊகம் சமீபத்துல விளைந்திருக்கு...'' என்றான். அவன் கொலை பற்றி யாரிடம் கேட்டாலும் அவன்மீது அவர்கள் கோபம் கொண்டு விடாமல் இருக்க உதவும் செமத்தியான கவசமாய் விளங்குகிறது...

Scanned by CamScanner

இந்த 'ஒரு சிறு ஊகம்'! ''... அதனால உங்க கிட்டே ஓரிரு கேள்விகள் கேட்க வேண்டியிருக்கு.''

''என்னிடமா? ம்!''

''நீங்க மிக இனியவர், மேரி! நான் கேட்க எண்ணியது இது தான்: செல்வி சிந்தியா அறையிலிருந்து, திருமதி எமிலியின் அறைக்கு வழி பண்ணித் தரும் கதவு, தாளிடப்பட்டிருந்ததா நீங்க சொன்னீங்க.''

''ஆமாம். அது தாழ்ப்பாள் தான் போட்டிருந்தது'' - ஆச்சரியத்தை வெளிப்படுத்தி மறுபதில் தந்தார் மேரி. ''மரண விசாரணையில் கூட நான் இதே தான் சொன்னேன்.''

''தாழ்ப்பாள் போட்டப்பட்டிருந்தது? இல்லையா?''

''ஆமாம்'' - குழப்பமடைந்தவராய் தெரிந்தார்.

''கதவு தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது என்பதுல உங்களுக்கு சந்தேகமில்லையே...!'' என்றவன், ''நான் என்ன கேட்க விரும்ப றேன்னா...'' என விளக்கினான்: ''அது, பூட்டப்படலியே?''

''ஓ...! இப்போ நீங்க என்ன கேட்கறீங்கன்னு விளங்குது. இது பற்றி எனக்குத் தெரியாது. கதவைத் திறக்க முடியாததாலே, அது தாழ்ப்பாள் போடப்பட்டிருந்ததுனு சொன்னேன். என்னால அதைத் திறக்க முடியலே. எல்லாக் கதவுகளுமே தாழ்ப்பாள் போடப் பட்டிருந்ததா தானே சொன்னாங்க... இல்லே?!''

''அப்படியே இருந்தாலும்... உங்களைப் பொறுத்தமட்டில், இந்தக் கதவு, பூட்டக் கூடப் பட்டிருக்கலாம்.. சரியா?''

''ம். சொல்லலாம்.''

''நீங்க திருமதி எமிலியின் அறைக்குள்ளே நுழைஞ்ச போது, இந்தக் கதவு தாழ்ப்பாள் போடப்பட்டிருந்ததா இல்லையானு நீங்க கவனிக்கும் நிலை ஏற்படலியா, திருமதி மேரி?''

''எ... எ... எனக்கென்னவோ... அது தாழ்ப் போடப்பட்டிருந்த தாகத் தான்... ... ...''

''நீங்க கதவைப் பார்க்கலே?''

''இல்லை. கதவை நான் பார்க்கவே இல்லை.''

''ஆனா நான் பார்த்தேன்'' - லாரன்ஸ் சட்டென இடை புகுந்தார். ''அது *தாழிடப்பட்டிருந்ததை* நான் பார்த்தேன்.''

''ஆஹ்...'' என்ற பொய்ரெட் உற்சாகமிழந்துப் போனான்.

ஒரே ஒரு தடவையாவது அவன் டம்பமடித்துக் கொள்ளும் 'ஒரு சிறு ஊகம்' தவறாய் போய்விட்டதை அறிந்து 'நல்லா வேணும்...' என எனக்குள் நான் மகிழ்வதைக் கட்டுப்படுத்திக் கொள்ளாமல்

Scanned by CamScanner

ஆனது. என்னையே அல்லவா இவன் நம்பாமல் இருக்கிறான்...! நன்றாய் வேண்டும்!

சாப்பிட்டு முடித்ததும் அவனுடன் கூட அவனுடைய ஜாகைக்கு நான் வந்தால் தான் ஆயிற்று என கெஞ்சாதக் குறையாய் சொன்னான். வேண்டாவெறுப்பு காட்டி ஏற்றுக் கொண்டேன்.

''நீ எரிச்சலாயிருக்கே?'' - நாங்கள் வெளியேறி நடந்துக் கொண்டிருக்கும் போது பரபரப்பாய் கேட்டான்.

''கிடையவே கிடையாது'' என்றேன் நான் காட்டமாய்.

''நல்லது. இது என் தலையிலிருந்த பெரிய பளுவைக் குறைக்குது.''

இதல்ல நான் உத்தேசித்தது. அவனுடனான என் நடத்தையில் நான் காட்டும் இறுக்கத்தை அவன் கவனிப்பான் என்பது என் நம்பிக்கை. ஆயினும், அவன் சொன்னதில் அடங்கியிருந்த ஓர் உற்சாகம், எனது அதிருப்தியை சமாதானம் செய்து தணிக்கும் வகையில் இருந்தது. நான் உருகிப் போனேன்.

''லாரன்ஸிடம் நீ சொன்ன சேதியை அப்படியே சொல்லிட் டேன்'' - தொடர்ந்தேன்.

''அதுக்கு அவர் என்ன சொன்னார்? தெரியாத புதிர் போடப் பட்டவரா முழிச்சாரா?''

''ஆமாம். நிச்சயமா சொல்றேன்... நீ எதை எதிர்பார்த்து இப்படிச் சொன்னே'னு அவருக்கு எந்தக் கருத்தும் இல்லை.''

பொய்ரெட் ஏமாற்றமடைவான் என நான் எதிர்பார்த்திருந்தேன். ஆனால், நான் ஆச்சரியப்படும்படி, இதைத்தான் அவன் எதிர்பார்த்திருந்ததாய் சொன்னான். மிகவும் திருப்தியானான். பிறகு வேறொரு சமாச்சாரத்துக்கு மாறினான்.

''இன்றைய மதிய சாப்பாட்டுல சிந்தியா இல்லியே? ஏன் அப்படி?''

''அவ மறுபடியும் மருத்துவமனைக்குப் போக ஆரம்பிச்சுட்டா. இன்னிக்கு மறுபடியும் வேலைல போய் சேர்ந்துட்டா.''

''ஆஹ்....! பணியில முடை வெக்காத சரியான கறார் பேர்வழி போல. கூடவே அழகு வேற. நான் மிக ரசிக்கும் இத்தாலிய ஓவியங்கள் போல இருக்கா. ஆங்... அவளுடைய பணியிடத்தைப் போய் பார்க்கணும்னு ஆவலா இருக்கு. என்னைக் கூட்டிட்டுப் போய் காட்டுவானு நினைக்கிறியா?''

Scanned by CamScanner

''ரொம்ப சந்தோஷமடைவா என்பதுல சந்தேகமே வேண்டாம். நான் போயிருக்கேன். நம்மைக் கவரும் சின்ன அலுவலகம்.''

''அவ தினமும் அங்கே போறாளா?''

''எல்லா புதனும் அவளுக்கு வார விடுப்பு நாட்கள். சனிக்கிழமைகளில் இங்கே மதிய உணவுக்கு வந்துடறா. இவை தான் அவளுக்குள்ள விடுமுறைகள்.''

''ஞாபகம் வெச்சுக்கிறேன். இந்தக் காலத்துப் பெண்கள் பண்ணாத வேலையே கிடையாது போல. செல்வி சிந்தியாவை எடுத்துக்க.... புத்திசாலி.... ஆஹ்.... அவளுக்கு செமத்தியான மூளை இருக்கு...! சின்னவ தான், ஆனாலும்...!''

''ஆமாம். அவ பார்க்கிற வேலைக்குத் தேவையான கடுமையான தேர்வுகளையெல்லாம் எழுதி தேர்ச்சி பெற்றிருக்கானு கேள்விப்பட்டேன்.''

''சந்தேகத்துக்கு இடமில்லாம தேர்வு பெற்றிருக்கணும். அத்தனை பொறுப்புள்ள உத்தியோகம் அது. அங்கே மிக சக்தி வாய்ந்த விஷங்கள் எல்லாம் இருக்குனு நினைக்கிறேன்.''

''ஆமாம். அவ அதை எங்களுக்குக் கூட காட்டினா. பூட்டப் பட்ட ஒரு சிறு அலமாரியில அவை எல்லாம் இருக்கு. அங்கே இருப்பவர்களே கூட மிக மிக ஜாக்கிரதையா இருக்கணும். அந்த அறையை விட்டு வெளியேறும் ஒவ்வொரு முறையும் பூட்டிய அலமாரியின் சாவியைக் கையோட எடுத்துக்கிட்டுப் போயிட றாங்க.''

''பின்னே...?! அந்த அலமாரி ஜன்னலை ஒட்டி இருக்கோ?''

''இல்லை. அறையின் எதிர்பக்கத்துல. ஏன்?''

பொய்ரெட் தோள்களைக் குலுக்கிக் காட்டி, ''இருக்கலாமோனு நினைச்சேன். அவ்ளோ தான். உள்ளே வா.''

அவன் ஜாகையை அடைந்திருந்தோம்.

''இல்லேப்பா. நான் திரும்பிடலாம்னு நினைக்கிறேன். மரங்களுக்கிடையே நடந்து நடந்து வெகு தூரம் போகணும் போல இருக்கு. சந்திப்போம்.''

ஸ்டைல்ஸ் எஸ்டேட் நெடுகிலும் கொழித்து நீண்டு வளர்ந்திருந்த மரங்கள் ஒவ்வொன்றும் வெகு அழகு. பூங்காக்களையெல்லாம் கடந்த பிறகு சில்லென்ற கூடாரமாய் இருந்த காட்டு மரங்களின் இடுக்குகள் வழியே கால் போன போக்கில் திரிவது மிக அலாதியாயிருந்தது. மருந்துக்குக் கூட காற்று இல்லை. சன்னமான

புள்ளின கிறல்கள் தான். கொஞ்சம்தான் உள்ளே போய் நடந்தேன். களைப்புத் தட்டியது. பெருங்குடையாய் விரிந்திருந்த ஒரு மாபெரும் மரத்தினடியே அப்படியே என்னைப் போட்டுக் கொண்டேன். என்ன ஓர் அமைதி. என்னுள் கிடந்த மனிதத்தையும் இரக்க குணத்தையும் இந்த அமைதி தட்டியெழுப்பி அடையாளம் காட்டியது. என்னை ஒதுக்கி வரும் பொய்ரெட்டையே கூட நான் 'போடா, போ' என்று மன்னித்தேன். இந்த உலகத்தோடே நான் அமைதியாய் இணைந்து போனேன். பிறகு நீண்டதொரு கொட்டாவி விட்டேன்.

நடந்த கொலை பற்றி நினைக்க, இப்போது அது ஒரு பொய் என்றும், என்னை விட்டு வெகு தூரம் நிற்கும் ஒரு சமாச்சாரம் என்றும், ஏனோ தோன்றின. மேலும் கொட்டாவி நீண்டது.

இந்த அமைதியில் எல்லாமும் என்னை விட்டு அந்நியமாகி விட, கொலைக் குற்றம் கூட ஏதோ நடக்கவே நடக்காத ஒன்று எனுமளவுக்கு விலகிப் போயிற்று.

இருந்தாலும்...

*'கொலையின் உண்மைக் கரு... லாரன்ஸ்.*

*'ஆல்ஃபிரட்டைப் பெரும் மரச் சுத்தி கொண்டு மண்டை உடையும் அளவுக்கு அடித்தே கொன்றது - லாரன்ஸ் தான்.*

*'இந்த ஜானுக்கு என்னாயிற்று?*

*'ஏன் கத்துகிறார் இப்படி?*

*'என்ன... என்ன சொல்கிறார்...? இதை என்னால அனுமதிக்க முடியாது.*

*'எதுக்காக இப்படி சொல்கிறார்?*

*'அவர் குரல் உயர்ந்தது.... இதை என்னால அனுமதிக்க முடியாது.'*

பய உலுக்கல் உலுக்க, ஒரு நொடியில் கண் விழித்து எழுந்தேன். விக்கித்து உட்கார்ந்தேன்.

ஓஹ்... கனவு!' எப்படியோ தூங்கிப் போயிருக்கிறேன்...! ஆழ் மனத்து எண்ணங்கள்... கனவாய்...!

ஆனால் என்னை எழுப்பியதென்னவோ, 'இதை என்னால அனுமதிக்க முடியாது...' என்று நிஜமாகவே உயர்ந்து ஒலித்த சங்கடமான ஜானின் குரல்தான். என்னிடமிருந்து ஒரு பத்து பதினைந்து அடிகள் தள்ளி, ஜானும் மேரியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு, தீவிரமான வாய்ச் சண்டையில் ஈடுபட்டிருந்தனர். மிக அருகிலேயே நான் இருப்பதை இருவருமே உணராததை

Scanned by CamScanner

என்னால் காண முடிந்தது. நானாக அவர்களிடம் பேச முற்படுவதற்கு முன்னால், என்னைக் கனவுக்குள் வந்து எழுப்பிய அதே வாக்கியத்தை மறுபடியும் சொன்னார் ஜான்:

''நினைவிருக்கட்டும் மேரி.... இதை என்னால அனுமதிக்க முடியாது.''

பதிலுக்கு மேரியின் குரல், துளியும் அசைந்துக் கொடுக்காது வந்தது:

''என்னோட நடவடிக்கைகள்ல தலையிட்டு விமர்சிக்க உங்களுக்கு என்ன உரிமையிருக்கு?''

''நீ பண்றதைப் பற்றி நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி கிராமமே பேசும்டீ. அம்மாவை சனிக்கிழமை தான் புதைச்சிருக்கோம்... நீ இங்கே எவனோ ஒருத்தனுக்கு வக்காளத்து வாங்கிப் பேசிக்கிட்டு நிக்கறே.''

''ஓ....'' என புருவம் தூக்கி ஆத்திரத்தைக் கிண்டி விடும் விதத்தில் தோள்களைக் குலுக்கிய மேரி, ''ஊர் பேசப் போற வம்பைத் தான் நீங்க பெரிசா நினைக்கிறீங்க...ம்?'' என்றாள்.

''இல்லையா பின்னே'' - பற்களைக் கடித்தார் ஜான். ''உன்னோட அந்த நாய் சுத்திக்கிட்டு அலையறதைப் பத்தின கிசுகிசுக்களை நான் என் காது படவே பல தடவைக் கேட்டாச்சு. அவன் ஒரு பொ....''

நிறுத்திக் கொண்டார்.

''ஒரு நல்ல பொ...யோட ரத்தம் என்ன கெட்ட ரத்தமா ஜான்?!'' - இப்படி சொல்லிவிட்டு ஜானை விடாது குத்தீட்டியாய் பார்த்துக் கொண்டிருந்த மேரி, ''அது... ஒரு சுத்த இங்கிலீஷ் காரனோட புளிச்சுப் போன அறிவேயில்லாத முட்டாள்தனத்தை விட... எவ்வளவோ மேல்'' என்றார்.

மேரியின் குரலில் நெருப்பு. கண்களில் ஐஸ் கட்டி கத்தி.

ஜானின் முகத்தில் பாய்ந்து பரவிய சிகப்புக் கோப ரத்தம் எனக்கு ஆச்சரியமாய் படவில்லை.

''மேரீ...!''

''என்ன?'' - மேரியின் குரலின் ஆணவம் கொஞ்சமும் தடுமாறவில்லை.

நியாயத்தை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்த போக்கு, ஜானின் குரலிலிருந்து இப்போது விலகியது.

''முடிவா என்ன சொல்றே?'' என்றார் கறாராய். ''நான் பிடிக்கலேனு எடுத்துச் சொல்லியும் கூட, நீ அந்த டாக்டர்

Scanned by CamScanner

பௌரீஸைத் தொடர்ந்து சந்திச்சுக்கிட்டு தான் இருப்பேனு நான் எடுத்துக்கணுமா?''

''நான் அந்த வழியைத் தேர்ந்தெடுத்தா... அப்படித்தான்.''

''என் கிட்டே சவால் விடறியா?''

''இல்லை. ஆனால் என் நடவடிக்கைகளை விமர்ச்சிக்க நீங்களா எடுத்துக்கிற உரிமையை நான் மறுக்கிறேன். நான் கூடாதுனு மறுத்து ஒதுக்கச் சொன்ன *உங்களுடைய* நண்பர் யாராவது ஒருத்தரை நீங்க காட்ட முடியுமா?''

ஜான் ஓரடி பின்னுக்குத் தள்ளப்பட்டார். அவர் முகத்துக் கோப அலை அப்படியே கொஞ்சம் பின்வாங்கியது.

''என்ன சொல்றே?'' என்று ஸ்திரமற்ற குரலில் கேட்டார்.

நிதானமிழக்காமல், ''கேட்டதுக்கு பதில் எங்கே?'' என்ற மேரி, ''இப்போ, என் நண்பர்கள் யார் யார்னு தேர்ந்தெடுப்பது பற்றியெல்லாம் உத்தரவிட உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாதுனு தெரியுதா...? தெரியுது...! இல்லையா...?! அதெப்படி புரியாம போகும்...?!'' என்று போடாய் போட்டார்.

நியாயத்தைப் புரிந்துக் கொள்ள மறுக்கிறாளே என்ற உணர்வு ஒட்டப்பட்ட முகத்தோடு நின்றுக் கொண்டிருந்த ஜான், ''உரிமையில்லையா? எனக்கு உரிமை *கிடையாதா* மேரி?'' என்றார், அதே ஸ்திரமற்ற குரலில். மனைவியை நோக்கிக் கரங்களை ஆவேசமாய் தூக்கிய ஜான், ''மேரீஈஈஈ....'' என்று கத்தினார்.

அந்த நொடியில் மேரி நடுங்கினது மாதிரி இருந்தது. அடங்கிப் போவது போன்ற ஒரு திரை அவரது முகத்தில் விளைந்தது போல தோன்றினாலும், சட்டென கோபமாய் சற்று விலகிப் போனவர், ஜானின் கேள்விக்கு ''ஒண்ணும் கிடையாது!'' என்று தீவிரமாய் பதில் சொன்னார்.

பிறகு நடந்துப் போக ஆரம்பித்த மேரியின் பின்னாலேயே பாய்ந்த ஜான், அவரை அப்படியே பிடித்து இழுத்து நிறுத்தி னார்.

''மேரி'' என்ற அவரது குரல், வரவழைத்துக் கொண்ட அமைதியில் இருந்தது. ''நீ இந்த டாக்டர் பௌரீஸ் மேல காதல் வயப்பட்டிருக்கியா?''

மேரி தயங்கினார். அப்போது திடுமென அவரது முகத்தில் ஓர் உணர்ச்சி அலை பரிமளித்தது. அது மிக பழைமையானது. தெய்வீகமானது. இளமையானது. காதல் போல! ஜானின்

Scanned by CamScanner

பிடியிலிருந்து லாகவமாய் தன்னை விடுவித்துத் திரும்பிக் கொண்ட மேரியின் தோள்கள் வழியே அவர் பேசிய வார்த்தைகள் கசிந்தன:

''இருக்கலாம்'' - மேரி சொன்னார். உடனே, ஒரு கருங்கல் சிலையாய் ஜான் நின்றுவிட்டதைக் கூட திரும்பிப் பார்க்காமல், துரிதமாய் காட்டு மரப்பகுதியைக் கடந்து வெளியேறி விட்டார்.

சில நொடிகள் கழித்து உடைந்த சில மரக் கிளைகளைக் காலடி பட்டு உடைத்து ஓசையெழுப்பிக் கொண்டே பகட்டாக நான் வெளிப்பட்டேன். ஜான் திரும்பினார். அதிருஷ்டவசமாக, இக்காட்சியில் நான் இப்போது தான் நுழைந்திருக்கிறேன் என நினைத்துக் கொண்டார் ஜான்.

''ஹாய், ஹேஸ்டிங்ஸ். உன்னோட குள்ள நண்பர் பாதுகாப்பா அவரோட ஜாகைக்குப் போய் சேர்ந்துட்டாரா? விந்தையான குள்ளன்! 'ஒரு சிறு ஊகம்...' இதுதான் நான் அவருக்கு வைத்திருக்கிற செல்லப் பெயர். அவரால உண்மையா ஏதாவது சகாயம் இருக்குமா...?!''

''இன்னிக்குத் தேதியில அறியப்பட்டுள்ள ஓர் அசகாய, முதன்மையான, புத்திசாலி துப்பறியும் நிபுணர் - இவன் தான்.''

''ஓஹ்... அப்படியா... அப்படினா அவர்கிட்டே சரக்கு இருக்கத்தான் செய்யணும். ஆனாலும் ஹேஸ்டிங்ஸ்...! 'துப்பறி தல்...' ஓஹ்...! எத்தனை கொடுமையான அனுபவம் இது...!''

''அப்படியா நினைக்கிறீங்க?''

''கடவுள் ஆணையா... ஆமாம். நம்ம வீட்டையே எடுத்துக் குங்க...! உள்ளே இந்த ஸ்காட்லாண்ட் போலீஸுங்க, பொறிக் குள்ளே மாட்டிக்கிட்ட எலி மாதிரி இப்படியும் அப்படியும் என்னமா ஓடறாங்க! அடுத்து செய்ய வேண்டியது என்னனு ஒரு திட்டமே இல்லாம இண்டு இடுக்கெல்லாம் ஓடறாங்க. இதுல இந்தத் துப்பறியும் நிருபணுங்க! சுட்டுப் போடணும் இவனுங்களை! அலற வைக்கிற செய்தித்தாள் தலைப்புங்க! மாளிகை வாசல்ல, உள்பக்கமா முறைச்சுப் பார்த்துக்கிட்டு காலைல ஒரு கூட்டமே இருந்தது. கவனிச்சீங்களா! நிருபணுங்க! பேய்ங்களைப் பார்க்கிற மாதிரி பயமாயிருக்கு!''

''நம்பிக்கையிழக்காதீங்க ஜான்...'' என்றேன் மிருதுவாய். ''இது இப்படியேவா இருந்துடப் போகுது?''

''இது நீடிக்காது தான். மறுபடியும் வீதியில மரியாதையா தலை தூக்கி நிமிர்ந்து நடக்க முடியாதே என்பதைத் தான் என்னால தாங்கவே முடியலே.''

Scanned by CamScanner

''சேச்சே. இதனால நீங்க உங்களுடைய ஆரோக்கியத்தையே கெடுத்துக்கறீங்க.''

''உடம்பு ஏன் கெடாது ஹேஸ்டிங்ஸ்? நம்மை சுத்திக்கிட்டே வட்டமடிக்கும் பேய் நிருபர்கள்... உணர்ச்சியற்ற முகத்தோடு உலவும் துப்பறியும் ஆட்கள்...! சே! இதையெல்லாம் கூட பொறுத்துக் கிட்டாலும் பொறுக்கவே முடியாத ஒண்ணு இருக்கே.''

''எது அது?''

ஜான் தனது குரலைத் தாழ்த்திச் சொன்னார்:

''ஆற அமர உட்கார்ந்து ஒரு தடவையாவது நீ யோசிச்சிருக்கியா ஹேஸ்டிங்ஸ்? *யார் செஞ்சது?* இந்தக் கேள்வி என்னை உலுக்கி எடுக்கும் ஓர் அதி பயங்கர அனுபவமா இருக்கே ஹேஸ்டிங்ஸ்...! ஒரு விபத்தா நடந்த சம்பவம்னு இது முடிவாயிடக் கூடாதானு நான் பல தடவை எதிர்பார்க்கிறேன்டா! ஏன் தெரியுமா? ஏன்னா... ஏன்னா... இதை யாராலடா செஞ்சிருக்க முடியும்? இப்போ ஆல்ஃபிரட்டும் வட்டத்துக்கு வெளியே பாதுகாப்பா போயிட்டார். சந்தேகப்பட பாக்கி ஒருத்தரும் இல்லையே; ஒருத்தரும்... அதாவது... எங்களைத் தவிர...!''

ஆமாம். இது யாராயிருந்தாலும் குடலைப் புரட்டிப் போடும் ஓர் அதிபயங்கர கிலி தான்! நம்மில் ஒருவர்? ஆமாம்... நிச்சயம் இப்படித்தான் இருந்தாக வேண்டும்...

தானாக ஒரு புது எண்ணம் எனக்குள் வந்தது. துரிதமாக அதை நான் ஏற்றுக் கொண்டேன். அதன் பிரகாசம் கூடியது. பொய்ரெட்டின் மர்ம நடவடிக்கைகள், அவை தந்த முடிவுகள், அவன் தந்த குறிப்புகள்... இவை எல்லாமும் எனது இந்தப் புது எண்ணத்தோடு பொருந்தி நின்றன. இந்த சாத்தியக் கூறினை முன்னமேயே நினைத்துப் பார்க்காமல் இது நாள் வரை இருந்திருக்கும் என்னைப் போன்ற ஒரு முட்டாளும் இருக்க முடியுமா? ஓ.... இதனால் எத்தனை பெரிய முடிச்சு விடுபடுகின்றது...!

''உங்க எண்ணம் தவறு ஜான்'' என்றேன் நான். ''அது... நம்மல்ல ஒருத்தர் கிடையாது. அப்படி எப்படி இருக்க முடியும்?''

''எனக்கும் அது தெரியும், ஆனா, சந்தேகப் பட்டியல்ல வேற யாரு இருக்காங்க?''

''இருக்காங்க?.''

''யார்?''

''உங்களால ஊகிக்க முடியலே?''

''இல்லை.''

நான் முன்ஜாக்கிரதையாய் ஒருமுறை சுற்றிப் பார்த்துக் கொண்டேன். குரலைத் தாழ்த்தினேன்.

''டாக்டர் பௌரீஸ்!'' - கிசுகிசுத்தேன்.

''சாத்தியமேயில்லை!''

''கிடையவே கிடையாது.''

''என்ன கிடையாது? என் அம்மாவுடைய மரணத்தின் மேல அப்படி என்ன ஓர் ஈடுபாடு அவருக்கு இருந்திருக்க முடியும் ஹேஸ்டிங்ஸ்?''

''அது எனக்குத் தெரியலே'' என்றேன் நான். ''ஆனா ஒண்ணு தெரிஞ்சுக்குங்க. பொய்ரெட் இப்படித் தான் நினைக்கிறார்.''

துர்சம்பவம் சம்பவித்த இரவன்று டாக்டர் பௌரீஸ் ஸ்டைல்ஸுக்கு வந்திருந்த சேதியைக் கேள்விப்பட்ட உடனேயே தீவிரமாய் பொய்ரெட் கிளர்ந்தெழுந்த விஷயத்தை இப்போது குறிப்பிட்ட நான், தொடர்ந்தேன்: ''அப்போ அவன் ரெண்டு தடவை சொன்னான்: 'இது எல்லாத்தையும் மாற்றுது.' இப்படி அவன் சொன்னதன் மீது நானும் சிந்தித்துப் பார்த்தேன். காபி கோப்பையை அறையில் ஓரிடத்துல வெச்சதா திரு. ஆல்ஃபிரட் சொன்னது உங்களுக்கு தெரியும் இல்லியா? அப்போ தான் டாக்டர் பௌரீஸ் உங்க வீட்டுக்குள்ளே வரார். டாக்டர் பௌரீஸை, ஆல்ஃபிரட் அழைச்சுக்கிட்டு அறையைக் கடந்துப் போகும் போது அங்கிருந்த காபி கோப்பைக்குள்ளே டாக்டர் எதையாவது போட்டிருக்கலா மில்லையா.... இது சாத்தியம் தானே...?''

''ஹூம்'' என்றார் ஜான். ''அது ரொம்பக் கஷ்டமான காரியம்பா.''

''ஆமாம், ஆனா சாத்தியம்.''

''ஹேய்...! அந்த காபி அம்மாவுக்காக வைக்கப்பட்ட காபி தான்னு அவருக்கு எப்படி தெரியும்? இல்லே ஹேஸ்டிங்ஸ்... நீ தப்பு.''

அப்போது எனக்கு வேறு ஒன்று ஞாபகத்துக்குள் வந்தது.

''நீங்க சொல்றதுதான் ரொம்ப சரி. அது அப்படி செய்யப் படலே. கவனியுங்க'' என்ற நான் கோ-கோ மாதிரியை எடுத்துக் கொண்டு பொய்ரெட் பரீட்சை செய்து முடித்துள்ளதைக் குறிப்பிட்டேன்.

முடித்ததும் ஜான் இடைபுகுந்தார்.



Scanned by CamScanner

''ஆனா, ஹேஸ்டிங்ஸ்... டாக்டர் பௌரீஸ் தான் அதை ஏற்கெனவே பரிசோதனை பண்ணிட்டாரே?''

''ஆமாம், ஆமாம். அதுதான் பிரச்னையே. இதுவரைக்கும் இதை ஒரு பிரச்னையா நான் கவனிக்கவேயில்லை. இப்போ தான். இன்னுமா புரியலே? பௌரீஸ் அதைப் பரிசோதனை செய்தார் - அவ்வளவு தான்! அவ்வளவே தான்! பௌரீஸ் தான் கொலைகாரன் எனும் பட்சத்துல, அந்த நிஜ கோ-கோ மாதிரிக்கு பதிலா வேற ஒரு கோ-கோ மாதிரியை மாற்றா வெச்சு பரிசோதனைக்கு அனுப்பறது அவருக்கு ரொம்ப சுலபம் தானே! பிறகென்ன... சந்தேகத்துக்கிட மில்லாம... அதுல ஸ்டிரிச்நைனுடைய தடயமே இருக்காது. பௌரீஸை யாரும் சந்தேகப்படப் போறது கிடையாது...! இல்லே, அதே கோ-கோ மாதிரியை மறுபடியும் பரிசோதனைக்கும் அனுப்பப் போறதும் கிடை யாது....!'' என்று நான் காலந்தாழ்த்திய புரிதலோடு சொன்னேன்: ''பொய்ரெட்டைத் தவிர!''

''கோ-கோவால கூட மறைக்க முடியாத அளவுக்கு கசப்பு இருக்கும்னு கேள்விப்பட்டேனே... அது?''

''இது ஒரு வார்த்தை தான் ஸ்டிரிச்நைன் பற்றி நாமறிந்தது. இது தவிர எத்தனையோ இருக்கலாம். அவர் ஓர் அங்கீகரிக்கப்பட்ட விஷ நிபுணர்.''

''அதனால?''

''வேற யாரையும் விட விஷங்களைப் பற்றி அதிகபட்சமா அவருக்குத் தெரியும்'' என நான் விளக்கினேன். ''அதனால எனக்கு என்ன தோணுதுன்னா... ஸ்டிரிச்நைனை சுவையற்ற ஒன்றா மாற்றுவதற்கு ஏதாவது வழி வகைகளை அவர் கண்டு பிடிச்சிருக் கணும்! அல்லது, அது, ஸ்டிரிச்நைனா இல்லாம, ஆனா அதைப் போன்ற அறிகுறிகளை அப்பழுக்கில்லாம உண்டு பண்ணக் கூடிய ஏதாவது ஒண்ணா... சராசரி மனிதன் அறியாத ஒண்ணா... இருக்கலாம்.''

''ஹூம். ஆமாம். அப்படி இருக்கலாம்'' என்றார் ஜான். ''ஆனா, இதோ பார் ஹேஸ்டிங்ஸ்... அவர் எப்படி கோ-கோவை நெருங்கியிருக்க முடியும்? அது கீழ் தளத்தில் இல்லையே?''

''ஆமாம். அது ... இல்லைத்தான்'' - வெறுப்பாய் ஏற்றுக் கொண்டேன்.

இப்போது, திடுமென்று, ஓர் அபாயமான சாத்தியக்கூறு என்னுள் ஒளிர்ந்து விரிந்தது. இதுவே ஜானுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என

எதிர்பார்த்தேன்... வேண்டினேன். நான் அவனை ஓரப் பார்வை பார்த்தேன். நடுக்கத்தோடு அவர் அல்லாடிக் கொண்டிருந்தார். நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். எனக்குள் ஒளிர்ந்த அந்தக் கடும் அபாயமான ஒளி, இதுதான்: குரூரக் கொலையினை நிறைவேற்றி முடிக்க, டாக்டர் பௌரீஸுக்கு ஒரு துணை இருந்திருக்க வேண்டும்.

அப்படி எதுவும் நிச்சயம் இருக்காது தான்! எந்த அலங்கார அழகியும்... மேரியைப் போல... ஓர் ஈவிரக்கமற்ற கொலைகாரியாக இருக்க முடியாது. இருந்தாலும், அழகுப் பதுமைகள், அந்தக் காரணத்துக்காகவே விஷம் வைக்கப் பயன்படுத்தப்பட்ட கதைகள் பல உண்டே.

இப்போது சட்டெனை, நான் ஸ்டைல்ஸுக்கு வந்த தினத்தன்று டீ பொழுதில் நிகழ்ந்த முதல் உரையாடல் எனக்குள் மீண்டும் வந்தது --- கூடவே --- விஷம் என்பது ஒரு பெண்ணின் பலமான ஆயுதம் என்று அவர் சொன்னபோது அக்கண்களில் மிளிர்ந்த நிஜமும்! அந்தக் கொலைகார மாலைப் பொழுதில் தான் மேரி எத்தனை படபடப்போடும் கலவரத்தோடும் இருந்தார்! ஏன் அது? திருமதி எமிலி, இந்த மேரிக்கும் டாக்டர் பௌரீஸுக்கும் இடையே எதையாவது கவனித்து விட்டாரா? அதனை அப்படியே மேரியின் கணவனிடம் சொல்லிவிடப் போவதாக மிரட்டினாரா? அப்படி சொல்லி விட்டால் மேரியின் பெயருக்கு உருவாகக் கூடிய களங்கத்தைத் தடுக்கத் தான் இந்தக் கொலை செய்யப்பட்டதா?

இப்படி என் நினைப்பு போகத் துவங்கியதும் ஹெர்குல் பொய்ரெட்டும் எவிலின் ஹோவோர்டும் பொடி வைத்துப் பேசிக் கொண்ட உரையாடலின் வாசகங்களை நினைக்க வேண்டிய தாயிற்று. இதைத் தான் அவர்கள் அர்த்தப்படுத்திக் கொண்டு பேசினார்களா? இது தான், எவிலின் பிடிவாதமாக நம்ப மறுத்த அந்த அதி அபாய சாத்தியக்கூறா?

ஆமாம்... அனைத்தும் தான் பொருந்தி நிற்கின்றனவே?

'பேசாம ஒதுக்கித் தள்ளிடலாமே' என்று எவிலின் முடிவாய் சொன்னதில் ஆச்சரியமோ தவறோ இல்லை தான். அவர் அப்போது சொன்ன பூர்த்தி பெறாத வாக்கியத்தின் அர்த்தம் விளங்கியது: 'எமிலியே கூட.....' இப்போது மனமார நான் எவிலினோடு ஒத்துப் போனேன். திருமதி எமிலியே கூட, இது ஒரு தவிர்க்க முடியாத குப்பை என்று விழுங்கிக் கொண்டு தான் போயிருப்பாரே ஒழிய, விளம்பரப்படுத்தி கேவண்டிஷ் பரம்பரையின் மீது களங்கம் வர ஒருபோதும் துணிந்திருக்க மாட்டார்.

Scanned by CamScanner

''இன்னொரு விஷயமும் இருக்கு'' என்றார் ஜான் திடுமென. ''நீ சொல்வது உண்மையா இருக்காதுனு ஒரு விஷயம் என்னை சந்தேகப்பட வைக்குது.''

''என்னது அது?'' என்றேன் நான் --- கோ-கோவுக்குள் விஷம் எப்படி இறக்கப்பட்டிருக்கும் எனும் விவாதத்திலிருந்து ஜானாகவே விலகி விட்டதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு.

''டாக்டர் பௌரீஸ், பிரேதப் பரிசோதனைக்கு மிகவும் பரிந்துரைச்சாரே, அவர் அப்படி செய்திருக்கவே வேண்டாமே...! இந்த வில்கின்ஸ், இதயக் கோளாறினால இறந்தாங்க என்பதிலேயே பூரண திருப்தி அடைஞ்சிருப்பார் இல்லியா?''

''ஆமாம்'' என்றேன் நான் பாதி சந்தேகமாய். ''ஆனா நமக்கு தெரியாது... ஒருவேளை பிரேதப் பரிசோதனைனு ஒண்ணு செஞ்சுட்டா, எத்தனை நாளானாலும் தனக்கு பாதுகாப்பா இருக்கும்னு அவர் எண்ணியிருக்கலாம் இல்லையா...! மரணத்துல சந்தேகம் இருக்குனு யாராவது பிறகு பேசலாம்... இது டேஞ்சர் இல்லியா...? பிறகு கல்லறையைத் தோண்டியெடுக்க சொல்லி ஆணைகள் வரலாம்... எல்லா விஷயங்களும் அப்போது நோண்டப் பட்டு வெளியே வந்து விழும்... அவருக்கு இது தர்ம சங்கடமான நாட்களை உண்டுபண்ணித் தரும்... விஷமிருக்கும்போது எப்படி அந்த ஆளு இதயக் கோளாறுனு மரணச் சான்றிதழ் தந்திருப்பான்னு சந்தேகம் குவியும்... இத்தனை இருக்கு.''

''ஆமாமாம். இது சாத்தியம் தான்'' - ஏற்றுக் கொண்டார் ஜான். ''இருந்தாலும்...'' என்று தொடர்ந்தவர், ''இலக்கு என்னவாயிருக் கும்னு தெரிஞ்சுட்டா திருப்தியாயிருக்கும்'' என்றார்.

இப்போது நான் தடுமாறிச் சொன்னேன்: ''இதோ பாருங்க ஜான்... நான் முழுக்கவும் தவறா கூட இருக்கலாம். நல்லா நினைவிருக் கட்டும்... இது அத்தனையும் தனிப்பட்ட ரகசிய உரையாடல்.''

''ஓ, பின்னே. சொல்லவே வேண்டாம்.''

பேசிக் கொண்டே நடந்து, வாசலில் பரவிக் கிடந்த தோட்டத் துக்குள் வந்தோம். பக்கத்தில் குரல்கள் கேட்டன. நான் வந்த அன்று இருந்தது போலவே மரத்தடியில் டீ பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தது.

சிந்தியா மருத்துவமனையிலிருந்து திரும்பியிருந்தாள். அவளுக் கருகிலேயே என் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டேன். பொய்ரெட் அவள் இருக்கும் மருத்துவமனையையும் மருந்துக் கடையையும் வந்து பார்க்க பிரியப்பட்டதை சொன்னேன்.

Scanned by CamScanner

''அதற்கென்ன!'' என்று புன்னகைத்தாள். ''அவர் வந்து பார்ப்பதில் எனக்கு சந்தோஷம் தான். ஒரு நாள் மதிய சாப்பாட்டுக்கே அவர் அங்கே வரட்டும். நான் தான் அவரோட பேசி அவர் வர்ரதுக்கு ஒரு நாள் சொல்லணும். எனக்கு ரொம்பப் பிடித்த நபர்! குள்ள நபர்! ஆனா அவர் கொஞ்சம் கோமாளி! என் கூந்தலிலிருந்த கிளிப்'பை எடுத்து சரியாக போட்டுக்க வற்புறுத்தினாரு... ஏன்னா அது கோணலா இருந்தது.''

நான் சிரித்து விட்டேன்.

''அது அவனுக்குள்ள மேனியா --- வியாதி! எல்லாமும் சரியா இருக்கணும், அவனுக்கு.''

''ஓஓ... அப்படியா!''

நாங்கள் ஓரிரு நிமிடங்கள் அமைதியாயிருந்தோம். பிறகு, மேரி இருந்த திசையை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே, ''திரு. ஹேஸ்டிங்ஸ்'' என்றாள் சிந்தியா.

''ம்?''

''டீ முடிஞ்ச பிறகு உங்க கூட நான் பேசணும்.''

இதை அவள் மேரியைக் குனிந்து பார்த்தபடி சொன்னது, என்னைச் சிந்திக்க வைத்தது. இவர்களிருவருக்கும் இடையே மிகவும் குறைச்சலான அன்பு-ஆதரவு இருப்பதாய் எனக்கு தோன்றியது. முதல் முறையாக, இந்தக் கன்னியின் எதிர்காலம் பற்றிய வியப்பு எனக்குள் விளைந்தது. திருமதி எமிலி, இவளுக்குப் போய் சேரும்படி எவ்விதமான ஏற்பாடுகளும் செய்யவில்லை. ஆனால் எனக் கென்னவோ ஜானும் மேரியும் இவளை வேறெங்கும் போகவிடாமல் அவர்களுடன் தங்களுடைய வீட்டிலேயே வைத்துக் கொள்வார்கள் என்று தான் தோன்றியது. ஜான் இவள் மீது மிக அன்பு வைத்திருப்பது எனக்குத் தெரியும்... இவளது பிரிவை அவர் விரும்ப மாட்டார்.

வீட்டுக்குப் போயிருந்த ஜான் மறுபடியும் வந்தார். அவரது கனிவான முகம், அவருக்குப் பொருந்தாத கோபத் திரையை அணிந்திருந்தது.

''தூக்கிப் போட்டு மிதிச்சு பிச்சுப் பிச்சுப் போடணும்...'' என்றும், ''...இந்த டிடெக்டிவ்ங்களை...'' என்றும் அலறியவர் தொடர்ந்தார்: ''எதைத் தேடிக்கிட்டு இப்படி. நாயா பேயா அலையறானுங்கன்னு எனக்குத் தெரியலே. ஒரு மூலையை வீட்டுல விட்டு வைக்க மாட்டேங்கறானுங்க. உள்ளேயிருந்து வெளியே எடுத்துப் போடறானுங்க. மேலேயிருந்து கீழே தள்ளி விடறானுங்க. எவன்

அப்புறம் மாளிகையை சுத்தம் செய்யறது? அறிவு கெட்டப் பயலுக. அவனுங்களை உள்ளே விட்டுட்டு நாம எல்லோரும் வெளியே இருக்கிறதை வசதியா எடுத்துக்கிட்டாங்கன்னு நினைக்கிறேன். வரட்டும் அந்த ஜேப்பா ஜோப்பா...! வெட்றேன் அவனை...!''

''இதுங்க மனுஷனுங்க இல்லே ஜான். பேய். பேஏஏஏஏய்'' - இது ஹோவோர்டின் உறுமல்.

ஏதாவது செய்தோம் என்று உயரதிகாரிகளுக்குக் காட்ட அவர்கள் அடிக்கும் கூத்து என்ற கருத்து, லாரன்ஸுடையது.

மேரி, எதுவும் சொல்லவில்லை.

டீ முடிந்ததும், சிந்தியாவை என்னுடன் ஒரு சிறு நடைக்கு வருமாறு நான் அழைத்தேன். பொடி நடையாய் இருவரும் காட்டுக் கூட்டத்துக்குள் கரைந்தோம்.

இலைத் திரை, நோட்டமிடும் கண்களிலிருந்து எங்களை மறைத்துக் காப்பாற்றியதும், ''அப்புறம்?'' என துவங்கினேன் நான்.

ஒரு பெருமூச்சுடன் அருகிலிருந்த மேடான ஒரு பிரதேசத்தில் சிந்தியா உட்கார்ந்துக் கொண்டு, தனது வளமான கூந்தலைக் குவித்து முடித்து வைத்திருந்த தொப்பியைக் கழற்றினாள். சிகப்பான அவளது கூந்தலின் மேல் மர இடுக்குகளின் வழியே வழிந்து வழுந்த சூரியக் கதிர்கள் பட்டபோது அது தங்கமாய் தகதகத்தது.

''திரு. ஹேஸ்டிங்ஸ்... நீங்க எப்போதுமே என்கிட்டே மிக கனிவா நடந்துக்கிட்டு இருக்கீங்க... தவிர, உங்களுக்கு வீட்டின் பல விஷயங்களும் தெரிஞ்சிருக்கு.''

இப்படி என்னைப் பற்றி சிந்தியா சொன்னதும், அவள் இன்னும் அழகான பெண்ணாய் எனக்குப் பட்டது! மேரியை விட ஈர்ப்பானவள் தான்... அவள் இப்படியெல்லாம் என்னைத் தூக்கி வைத்துச் சொன்னதில்லை அல்லவா!

''ம்?'' - அவள் தயங்குவதை உணர்ந்து ஊக்குவிக்கும் விதத்தில் 'ம்' சொன்னேன்.

''உங்களுடைய அறிவுரையைக் கேட்க விரும்பறேன். நான் இப்போ என்ன செய்யணும்?''

''செய்யணும்னா?''

''ஆமாம். இதோ பாருங்க ஹேஸ்டிங்ஸ்.... எமிலி அத்தை எதிர்காலத்துக்குப் பாதுகாப்பா எனக்கும் ஏதாவது விட்டு வைக்கணும்னு என் கிட்டே சொல்லிக்கிட்டு தான் இருந்தாங்க. ஆனா அதை மறந்துட்டாங்கன்னு நினைக்கிறேன்... இல்லே, இப்படி

திடுதிப்புன்னு இறப்போம்னு அவங்க எதிர்பார்த்திருக்க மாட்டாங்க. எப்படியோ, எனக்கு தம்புடி *கிடையாது*. இப்போ... இப்படிப்பட்ட ஒரு கட்டத்துல நான் நிற்கும்போது எனக்கு மேற்கொண்டு என்ன முடிவு எடுக்கிறதுனே தெரியலே. உடனடியா இங்கேயிருந்து நான் வெளியேறிடணும்னு நீங்க கருதுறீங்களா?''

''கடவுளே! ம்ம். அவங்க உங்களைக் கழற்றி விட நினைக்கவே இல்லை. இது நிச்சயம்.''

சிந்தியா சற்று தயங்கினாள். இவளது வெண்டரி விரல்களால் புற்கள் சிலவற்றின் தலைகளைப் பிடுங்கினாள். பிறகு அவள் சொன்னாள்: ''திருமதி மேரி அப்படி நினைக்கறாங்க. அவங்க என்னை வெறுக்கறாங்க.''

''வெறுக்கறாங்களா? உங்களையா?'' - ஆச்சரியத்தில் நான் சற்று உரக்கக் கேட்டேன்.

சிந்தியா ஒப்புதலாய் தலையசைத்தாள், நிலத்தைப் வெறித்தபடி.

''ஆமாம். ஏன்னு எனக்குப் புரியலே. ஆனா அவங்களுக்கு என்னைக் கண்டாலே ஆகலே; இதனால *அவரும்*.''

''நீங்க இந்த இடத்துல தப்புப் பண்றீங்க'' என்றேன் பதமாய். ''மாறாக, ஜானுக்கு உங்கமேலே பாசம் அதிகம்.''

''ஓ ஆமாம், *ஜானுக்கு* உண்டு. நான் சொன்னது லாரன்ஸை. எனக்கு அவர் என்னை வெறுக்கிறாரா இல்லையா என்பது பற்றியெல்லாம் துளியும் கவலை கிடையாது. இருந்தாலும், வீட்டுல பலர் உங்களை வெறுப்பது... கொடுமைதான் இல்லையா?''

''ஆனா நீங்க நினைக்கிற மாதிரி இல்லை செல்வி சிந்தியா. அவங்க விரும்பறாங்க'' என்று உண்மையான ஈடுபாட்டோடு நான் சொன்னேன். ''நீங்க ரொம்பத் தவறுதலா புரிஞ்சுக்கிட்டு இருக்கீங்க. உங்களுக்கு ஜான் இருக்கார். அப்புறம் ஹோவேர்ட்---''

குழப்பமாய் தலையசைத்தார் சிந்தியா. ''ஆமாம். ஜான் என் மேல் அன்பு வைத்திருக்கிறார்னு தான் நினைக்கிறேன். எவியும் தான். அவங்களுக்கு கடுகடு குணமிருந்தாலும் ஓர் ஈக்குக் கூட துன்பம் நினைக்காதவங்க அவங்க. லாரன்ஸ் என்னோட பேசறதே கிடையாது. எனக்கு நல்லது ஏதாவது நடக்கிறதை, இந்த மேரியால தாங்கிக்கவே முடியாது. எவிலினை வீட்டிலேயே இருந்துடுனு கெஞ்சும் மேரிக்கு, நான் இருக்கவே கூடாது. ஓஹ்... ஓஹ்...! எனக்கு என்ன செய்யறதுனே தோணலே.''

என்னை அப்போது எது ஆட்கொண்டது என எனக்கே தெரிய வில்லை. அவள் அழகு? இருக்கலாம். அவள் மீது மட்டும் சூரியக் கதிர்கள் படும்படி அமர்ந்திருந்தாளே, அதுவா?; நடந்துள்ள அசம்பாவிதத்தோடு எவ்விதத் தொடர்பும் கொண்டிருக்க வாய்ப்பற்ற ஜீவன் இவள் என்ற புரிதல் எனக்குள்ளே படர்ந்து விடுதலை உணர்வை உண்டுபண்ணியதே, அதுவா?; அவளது இளமை வீணாய் போவதையும் தனிமை அவளை வாட்டி வதைப்பதையும் மிக அருகில் கண்டேனே, அதுவா?; எதுவோ! முன் வளைந்தேன்... அவளை மிக அருகில் நெருங்கி, அவளது சின்னக் கையை எடுத்தேன். தொடர்பற்று சொன்னேன்:

''என்னைக் கலியாணம் பண்ணிக்க, சிந்தியா.''

எவ்வித சந்தேகமுமின்றி, தொடர் சங்கிலியாய் வழிந்துக் கொண்டிருந்த அவளுடைய கண்ணீருக்கு ஈடு இணையற்ற குணம் உண்டாகியது. அவள் கண்ணீர் நின்றது. ஆயினும், நிமிர்ந்து உட்கார்ந்து, என் கைகளை விடுவித்துக் கொண்டவள், ''பைத்தியக் காரத்தனமா பேசாதீங்க'' என்றாள்.

கொஞ்சம் எரிச்சலானேன்.

''முட்டாள்தனமா நான் பேசலே. என் மனைவியா வந்து என்னை கௌரவிக்கும்படி கேட்டுக்கிறேன்.''

என்னை ஆச்சரியத்தின் உச்சிக்குத் தூக்கிப் போடும் விதமாய் கலகலவென சிரித்து விட்டாள் சிந்தியா. ''என்னருமை கோமாளி'' என என்னை அப்போது சிரித்தபடி அழைக்கவும் செய்தாள்.

பிறகு ''உங்களுடைய கனிவான குணத்துக்கு மிக்க நன்றி ஹேஸ்டிங்ஸ்'' என்றாள். ''ஆனா, ஒண்ணு தெரியுமா. தனிமை வேகத்துல ஏதோ சொல்றீங்களே ஒழிய நிஜமா உங்களுக்கு ---''

''நிச்சயமா என் மனசுல இதுதான் இருக்கு. எனக்கு பல ---''

''உங்க சொத்து பத்து பற்றியெல்லாம் எனக்கு சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது ஹேஸ்டிங்ஸ். உங்களுக்கு அதெல்லாம் ஒரு பொருட்டே கிடையாது--- எனக்கும்.''

''அப்போ என்ன தாமதம்?'' என்றேன் இறுக்கமாய். ''ஆனா இதுல சிரிக்கவோ கோமாளினு சொல்லவோ எதுவும் எனக்குத் தென்படலே. காதலை வெளிப்படுத்தறதுல எங்கேயிருந்து கோமாளித்தனம் வருது?''

''நிச்சயம் கிடையாது'' என்றாள் சிந்தியா. ''வேற யாராவது உங்களை மனப்பூர்வமா ஏத்துப்பாங்க. கிளம்பறேன். பை-பை. நீங்க என்னை ரொம்பவும் சுறுசுறுப்பாக்கிட்டீங்க.''

Scanned by CamScanner

இறுதியான ஒரு வெடிச் சிரிப்போடு மரங்களுக்குள் கரைந்து விட்டாள் அவள்.

நிகழ்ந்த உரையாடலை எண்ணிப் பார்த்துக் கொண்டபோது அது துளியும் திருப்தி அளிப்பதாய் அமையாமல் போய்விட்டதை உணர்ந்தேன்.

ஏனோ தெரியவில்லை.. கிராமத்துக்குள் நுழைந்து நேராக டாக்டர் பௌரீஸைப் போய்ப் பார்க்க வேண்டும் போலத் தோன்றியது. யாராவது ஒருத்தர் தொடர்ச்சியாய் அந்த ஆள்மீது கண்களைப் பதித்துக் கொண்டே இருக்க வேண்டும். அதே சமயத்தில், தான் தொடர்ச்சியாய் கண்காணிக்கப் படுவதை பௌரீஸ் துளியும் கண்டுபிடித்து விடாத அளவுக்கு மறைமுகமாய் நடந்துக் கொள்ள வேண்டியதும் அவசியம். எனவே, டாக்டர் தங்கியிருந்த அடுக்ககத்துக்குப் போய், அவர் தங்கியிருந்த வீட்டின் வாசலுக்குச் சென்று (எனக்கு முகவரி தெரியும்), கதவைத் தட்டினேன்.

ஒரு கிழவி வந்து கதவைத் திறந்தாள்.

''வணக்கம்மா'' என்றேன் நான் அமரிக்கையாய். ''டாக்டர் பௌரீஸ் இருக்காரா?''

இதற்கு அவள் என்னை முறைத்துப் பார்த்தாள்.

காது கேட்காதோ என கருதி, ''பௌரீஸ்மா... பௌரீஸ்'' என்றேன், வாயை அகட்டி அகட்டி.

''நீ கேள்விப்படலே?'' என்று என்னை மறு கேள்வி கேட்டாள் அவள்.

''எதை?''

''அவரைப் பற்றி.''

''அவரைப் பற்றி என்ன?''

''அவரை எடுத்துக்கிட்டுப் போயிட்டாங்க.''

''எடுத்துக்கிட்டா?'' என்ற நான் மிகக் கலவரமானேன். ''இறந்துட்டாரா?''

''இல்லே. பல்லீஸ் எடுத்துக்கிட்டுப் போயிடுச்சு.''

''பல்லீஸா? ஓ, போலீஸ்!'' - நான் நெஞ்சடைத்து நின்றேன். ''அவரைக் கைதா பண்ணிட்டாங்க?''

''ஆமாம். அதுதான். அப்புறம் ---''

மேலும் எதுவும் கேட்க நான் அங்கு இல்லை. கிராமத்தைக் கிழித்துக் கொண்டு பொய்ரெட்டுக்காக ஓடினேன்.

Scanned by CamScanner

## அத்தியாயம் பத்து

# கைது

~

என் மனதினை மேலும் கிலேசப்படுத்தும் வகையில் பொய்ரெட் அவனிடத்தில் இல்லை. அங்கு நான் கதவைத் தட்டியபோது எனக்கு பதிலளித்த ஒரு முதிய பெல்ஜிய ஆசாமி, அவன் கிளம்பி லண்டன் போயிருப்பதாக நினைப்பதாய் சொன்னான்.

நான் ஊமையானேன். லண்டனில் இந்தப் பொய்ரெட்டுக்கு இப்போது என்ன வேலையாம்! அவன் திடுமென எடுத்துக் கொண்ட முடிவா இது... அல்லது, சில மணி நேரங்களுக்கு முன்னால் அவன் என்னிடமிருந்து பிரிந்து சென்ற போதே செய்து வைத்திருந்த முடிவா...?!

மனம் வருந்திய நிலையோடு ஸ்டைல்ஸுக்குத் திரும்பினேன். பொய்ரெட் ஊரிலில்லாத சமயத்தில் எப்படி நடந்துக் கொள்வது என்ற நிச்சயமற்று இருந்தேன். இந்த கைதினை அவன் முன்கூட்டியே அறிந்து வைத்திருந்தானா? ஒரு வேளை அவனே கூட இதற்கு முழு ஜவாப்தாரியாக இருக்குமோ?! வாய்ப்பிருக்கிறது! இதெல்லாம் என்னால் தீர்த்துக் கொள்ள முடியாத கேள்விகள். இருக்கட்டும்.... இப்போது நான் என்ன செய்வது? கைதினை வெளிப்படையாக இங்கு ஸ்டைல்ஸில் நான் அறிவிப்பதா, வேண்டாமா? இப்படி நினைத்தவுடனேயே, நான் அதிகம் முக்கியத்துவம் தராவிட்டாலும், மேரியின் நினைவு ஒரு கனமாய் என்மேல் அமுக்கியது. அவருக்கு இது தாளா அதிர்வாயிருக்காதா? தற்போதைக்கு மேரியின் மீது சந்தேகமே படக்கூடாது என்று முழு முடிவு எடுத்துக் கொண்டேன். அப்படியேதேனும் இருந்தால் சிறு துப்பாவது எனக்குக் கிடைத்திருக்க வேண்டும்.

Scanned by CamScanner

டாக்டர் பௌரீஸின் கைதினை முழுப் பூசணிக்காயை மறைப்பது போல் நிரந்தரமாக மேரியிடமிருந்து மறைத்தே வைப்பதென்பது சாத்தியமே கிடையாது. விடிந்ததும் விடியாததுமாக அத்தனை செய்தித் தாள்களிலும் கைது குறித்து செய்திகள் வெளியாகி விடும். இருந்தபோதிலும் செய்தியை உடைப்பதை நான் அமுக்கியே வைத்தேன். பொய்ரெட் இருந்தால், அவனுடைய ஆலோசனையை விமரிசையாய் கேட்டு இயங்கி விடலாம்... அவன் தான் லண்டனுக்கு உல்லாசப் பயணம் போயுள்ளானே! தேவையேதும் இல்லாமல் இப்போது அவனை லண்டனுக்கு எதுதான் உந்தித் தள்ளியதோ...?!

இந்த நிலையிலும், அவனது புத்திசாதுர்யத்தின் மீது எனக்கிருந்த மதிப்பு, என்னையுமறியாது மலை போல வீரியமாய் வளர்ந்தது. பொய்ரெட் மட்டும் பௌரீஸ் பற்றி என் மண்டைக்குள் ஏற்றாமல் போயிருந்தால், டாக்டரை நான் இந்த ஜென்மத்தில் சந்தேகித்திருக்க மாட்டேன். ஆமாம், அவன் சொல்லி வந்தது போலவே, அந்த டாக்டர் மனுஷன், புத்திசாலியே தான்.

சில சுய ஆலோசனைகளுக்குப் பிறகு ஜானை என்னுடைய நம்பிக்கைக்கு உகந்தவனாய் எடுத்துக் கொள்ளலாம் என முடிவு செய்தேன். அவனுக்கு எப்படி தோன்றுகிறதோ அதன்படி செய்துக் கொள்ளட்டும்--- வேண்டுமானால் விஷயத்தை அறிவிக்கட்டும்... இல்லையானால் விட்டு விடட்டும்.

விஷயத்தைக் கேட்டதும் மாபெரும் விசிலோசையை வெளியிட்டார் ஜான்.

''கிங்கரன்! நீ ரொம்பச் சரியா தான் சொல்லியிருக்கே! இத்தனை நாளா எனக்குத் துளிகூட எட்டவேயில்லையே..?!''

''இப்போ நாம என்ன செய்யறது? நாளைக்கு எப்படியிருந்தாலும் தெரியத்தான் போகுது.''

ஜான் யோசித்தார்.

''கவலை வேண்டாம்'' என்று இறுதியாய் சொன்ன அவர், ''இப்போதைக்கு நாம வாய் திறக்க வேண்டாம். அதுக்குத் தேவையுமில்லை. நீ சொல்ற மாதிரி, துரிதமா தெரியத்தானே போகுது.''

ஆனால், என்னுடைய அளவிட முடியாத ஆச்சரியத்துக்குத் தீனியாக, மறுநாள் காலையில் சீக்கிரமாகவே நான் எழுந்து, வந்திருந்த செய்தித் தாளைப் பிரித்து அவசர அவசரமாக பார்த்த போது, அதில் நேற்றைய கைதினைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை கூட

Scanned by CamScanner

இடம் பெற்றிருக்கவில்லை! இது விளக்க முடியாததே, இருந்தாலும், ஏதோ சில ரகசியக் காரணங்களுக்காக, செய்தித் தாள்களிலிருந்து விஷயத்தை இந்த ஜேப் ஒதுக்கியே வைத்திருப்பதாய் எனக்குத் தோன்றியது. இதனால் மேலும் சில கைதுகள் நேர்ந்து விடுமோ என்ற எண்ணமும் என்னுள் விளைந்த படியால், இது என்னைக் கொஞ்சம் வருத்தமடையத் தான் செய்தது.

காலை சிற்றுண்டி முடிந்ததும், பொய்ரெட் திரும்பி வந்திருப்பானா என்று பார்ப்பதற்காக கிராமம் வரை போக முடிவெடுத்தேன்; இப்படி நான் கிளம்புவதற்கு முன்னால், ஒரு மிக நெருங்கிய முகம் ஜன்னல் ஒளியை மறைத்து நின்று எட்டிப் பார்த்தது... அந்த நான் விரும்பும் குரல் ''நண்பா...' என்றழைத்தது.

''பொய்ரெட்..'' - நான் பீறிட்டுக் கத்தினேன் - அவனை இரு கரங்களாலும் அப்படியே அள்ளி அறைக்குள் இழுத்தபடி. ''இப்போ உன்னைப் பார்ப்பதினால நான் அடையும் சந்தோஷம் மாதிரி இதுவரை நான் அடைஞ்சதே இல்லையடா. ஏய்... கேளு. நான் எதையும் யார்கிட்டேயும் சொல்லலே, ஜானைத் தவிர. சரிதானே?''

''நண்பா'' என்று இதற்கு பதில் தந்த பொய்ரெட், ''நீ எதைப் பற்றி பேசறேனு எனக்கு ஒரு துளியும் விளங்கலே.''

''டாக்டர் பௌரீஸின் கைது பற்றித் தான்'' என்றேன் நான் பொறுமையிழந்து.

''அப்போ டாக்டர் பௌரீஸைக் கைது பண்ணியாச்சா?''

''இது உனக்குத் தெரியாது?''

''ம்ம். கொஞ்சங்கூட தெரியாது.'' ஆனால் நொடிகள் சில தாமதித்து விட்டு, ''இதுல எனக்கு ஆச்சரியமே கிடையாது. இங்கிருந்து நாலே மைல் தான் தெரியுமா... கடற்கரை. மறைக்கவா முடியும்?''

''கடற்கரையா?'' - புதிர் போடப்பட்டவனாய் கேட்டேன். ''அதுக்கும், நடந்துள்ள இதுக்கும் என்ன சம்பந்தமிருக்கு?''

பொய்ரெட் என்னைப் பார்த்தான்.

''அதுக்கு மட்டும் தான் சம்பந்தமிருக்கு. நிச்சயமா.''

''ஒண்ணும் புரியலே. இத்தனை முட்டாள் கிடையாது நான்... ஆனாலும், கடற்கரை பக்கத்துலேயே இருப்பதற்கும் திருமதி எமிலியின் கொலைக்கும் என்ன தொடர்பு இருக்குனு எனக்கு ஒண்ணும் புரியலே.''

''ஒண்ணும் இல்லே தான்'' - புன்முறுவியபடி பதில் தந்தான் பொய்ரெட். ''ஆனா நாம டாக்டர் பௌரீஸுடைய கைதைப் பற்றித் தானே பேசிக்கிட்ருக்கோம்.''

''ஆமாம். அவர் திருமதி எமிலியுடைய கொலை சம்பந்தமாத் தானே கைது ---''

''என்ன...?!'' என்று வெளிப்படையாய் தெரிந்த தாள முடியாத ஆச்சரியத்தோடு குறிப்பிட்டான் பொய்ரெட். ''டாக்டர் பௌரீஸ் திருமதி எமிலியுடைய கொலை சம்பந்தமாகவா கைது செய்யப்பட்டிருக்கார்?''

''ஆமாம்.''

''முடியவே முடியாது! இருக்கவே இருக்காது! அப்படி நடந்திருந்தால், முட்டாள்தனத்துக்கு சிறந்த உதாரணமா வரலாற்றுல பதிஞ்சுடலாம். யார் உன்கிட்டே சொன்னது, ஹேஸ்டிங்ஸ்?''

''அதாவது... யாரும் என்கிட்டே வந்து சொல்லலே'' என்று ஒப்புக் கொண்டேன் நான். ''ஆனா, அவர் கைது ஆகியிருக்கார்.''

''ஓ, ஆமாம், கைது சாத்தியம் தான். அது - ஒற்றன் வேலை செஞ்சதுக்காக.''

''ஒற்றன்?'' - மூச்சே நின்றுப் போனது எனக்கு.

''ஆங்...! ஒற்றனே!''

''திருமதி எமிலிக்கு விஷம் வெச்சதுக்காக இல்லையா?''

''இல்லை. மூளை செயலிழந்துப் போனா தான் ஜேப் நீ சொன்ன காரணத்துக்காக டாக்டரைக் கைது செய்வார்...!'' - மிக சாந்தமாய் சொன்னான் அவன்.

''ஆனால்... ஆனால்... நீ கூட இப்படித்தான் நினைச்சிருந்தேனு... நான்...''

ஆச்சரியமும் பரிதாபமும் கலந்தப் பார்வையை என்மேல் வீசினான் பொய்ரெட். இப்படியெல்லாமா முட்டாள் தனமாக நான் நினைப்பேன் என்ற விட்டேற்றித்தனமும் அவனது பார்வையில் மிளிர்ந்தது.

''அப்போ நீ என்ன சொல்ல வர்ரே?'' என்று மெதுவாய் கேட்டேன் நான். புது சூழலுக்குள் என்னை நானே புகுத்திக் கொண்டேன். ''டாக்டர் பௌரீஸ் ஓர் ஒற்றனா?''

பொய்ரெட் ஒப்புக் கொண்டு தலையசைத்தான். ''இந்தக் கோணத்தில் நீ அவரை சந்தேகப்பட்டதே கிடையாதா?''

Scanned by CamScanner

''இப்படியெல்லாம் என் மண்டைக்குள்ளே தோன்றியதே கிடையாது.''

''நல்லவேளைடா... நீ ஒரு துப்பறியும் மேதைக்கு துணையாளா இருக்கே...! உலகம் தப்பிச்சுது...! நீ மட்டும் துப்பறியும் துறைக்கு நேரா வந்திருந்தா...!!''

அவன் கிண்டலைத் தாங்க முடியாது, ''பொய்ரெட்'' என்றேன். பற்களைக் கடித்தேன்.

என்னை அவன் தோளோடு அணைத்துக் கொண்டு, ''சும்மா நகைச்சுவைக்காக'' என்றவன் தொடர்ந்தான்:

''வசதிகள் ஏதுமற்ற இந்தக் கிராமத்துக்குள்ளே வந்து ஒரு மாபெரும் மருத்துவ மேதை இப்படித் தன்னைப் போட்டு புதைச்சு மறைச்சுக்கிட்டு ஏன் வாழணும்னோ... அகால இரவு நேரங்களில், தன்னந்தனியா, நடை போகிறேன் எனும் போர்வையில், அவர் எதுக்காக வெளியே நடை போகணும்னோ ... உனக்குத் தோணவே இல்லையா?''

''இல்லை'' என்றேன். ''இப்படி ஒரு சாத்தியமே அற்ற ஓர் ஊகம் எனக்குள் எழவேயில்லை.''

''அவர், பிறப்பால் ஒரு ஜெர்மானியர்'' என சிறு சிந்தனையோடு விளக்கினான் பொய்ரெட். ''இத்தனை வருஷமா அவர் இங்கேயே மருத்துவரா இருந்து வந்ததாலே, அவர்மீது இப்படி ஒரு சந்தேகம், இயற்கையா யாருக்கும் எழலே. இங்கே வந்து பதினைஞ்சு வருஷங்களுக்கு முன்னாடியே ஐக்கியமாயிட்டார். மா புத்திசாலி. நம்முடைய ஆங்கில ரகசியங்களை அவர் நாட்டுக்கு அனுப்பும் புத்திசாலி... ஆமாம், மகா புத்திசாலி.''

''பொறுக்கி.''

''அப்படி சொல்லாதே. மாறாக... அவர் ஒரு தீவிர நாட்டுப் பற்றுள்ள பிரஜை. இதனால அவர் எதை இழக்கப் போகிறார்னு கொஞ்சம் சிந்திச்சுப் பார்... அவர் உயிரையே இப்போ இழந்தாலும் ஆச்சரியப்படறதுக்கு இல்லே. அவருக்கு நான் தலை வணங்கறேன்.''

''இவருக்குக் கடற்கரையில் என்ன வேலை?''

''அது நமக்குத் தேவையில்லாதது. அங்கிருந்து எப்படியோ அவரது நாட்டுக்கு உளவுச் செய்திகளை அனுப்பிக்கிட்டு இருக்கலாம். சுதந்திரப் பற்று.''

ஆனால் என்னால் பொய்ரெட்டின் பெருந்தன்மையான முறையில் நினைக்க முடியவில்லை.

Scanned by CamScanner

''இந்த மனுஷன் கூடத் தான் கிராமத்தின் ஓரிடம் விடாம இந்த மேரி சுத்தி அலைஞ்சிருக்கு.''

''ஆமாம், எப்படியோ அந்த அம்மா இவருக்கு மிக உதவியா இருந்திருக்கும்னு நினைக்கிறேன். இல்லேனா எதுக்கு அவளை சுத்திக்கிட்டு இவர் அலையணும்?'' - குறிப்பிட்டான் பொய்ரெட். ''ரெண்டு பேரையும் சேர்த்து இணைச்சு கிசுகிசு ஆரோக்கியமா வளர்ந்துக்கிட்டு இருக்கிற வரைக்கும், டாக்டருடைய வேறெந்த நடவடிக்கைகளும் கவனிக்கப்படாமலே போயிடுது இல்லே...! இதை கவனிச்சியா!''

''ஓ...! அப்படினா ஒரு தடவை கூட, டாக்டர், மேரி மேல அன்புப் பாராட்டலேனு சொல்றியா?'' - ஈடுபாடாக... சொல்லப் போனால் விளைந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை மனதில் நினைக்கும் போது வெகு ஈடுபாடாகக் கேட்டேன்.

''அப்படியெல்லாம் என்னால ஒட்டுமொத்தமா சொல்லிட முடியாது. ஆனா... என்னுடைய தனிப்பட்ட கருத்தை சொல்லட்டுமா, ஹேஸ்டிங்ஸ்?''

''ம்.''

''இதுதான் அது: திருமதி மேரி, துளிகூட... கடுகத்தனை கூட... கிஞ்சித்தும் கூட... இந்த டாக்டர் பௌரீஸை நினைத்தவர் கிடையாது.''

''உண்மையாகவே இப்படி நினைக்கிறியா நீ?'' - என்னுடைய மகிழ்ச்சியை என்னால் மறைக்க முடியவில்லை.

''இதுல நான் ரொம்ப ஸ்திரமா இருக்கேன். ஏன்னும் என்னால சொல்ல முடியும்.''

''ம்.''

''ஏன்னா... திருமதி 'மேரி... வேற யாரையோ நினைச்சுக்கிட்டு இருக்காங்க.''

''ஊஹ்...'' - கண்ணகல நின்றேன். என்ன சொல்கிறான் இவன்? என்னையும் அறியாமல் ஒரு சுகமான இதம் என்னுள் விறுவிறுத்தது. பெண்களுக்குப் பின்னால் நாவில் நீர் சொட்ட அலையும் ரகமில்லை நான்... ஆனாலும் சில நழுவல்கள் என்னுள் நிகழ்ந்தன... அப்போதெல்லாம், அவரைப் பற்றி, மனம் முழுவதும் நிரப்பி, அதெல்லாம் எதைக் குறிக்கின்றன.... ஓ...ஓ...!

ஹோவோர்டின் திடீர் அதிவேகப் பிரவேசத்தால் எனது சுவை மிகும் நினைவுகள் தடைப்பட்டன. உள்ளே வேறு ஒரு நபரும்

Scanned by CamScanner

இல்லை என்பதை ஊர்ஜிதம் செய்துக் கொள்ளும் விதமாய் அறை முழுவதையும் ஒரு முறை நோட்டமிட்டுக் கொண்டவர், பிறகு துரிதமாக ப்ரவுன் நிறத்திலிருந்த ஒரு பழையத் தாளை எடுத்தார். அதனை பொய்ரெட்டிடம் ஒப்படைத்து விட்டு, விட்டு விட்டு நிரப்பிய பின்வரும் தந்தி வார்த்தைகளை முணுமுணுத்தார்:

''துணி அலமாரிக்கு மேலே.''

பிறகு வந்த அதிவேகத்திலேயே வெளியேறினார்.

மடிக்கப்பட்டிருந்த அந்தத் தாளை ஆர்வமாய் விரித்த பொய்ரெட், மிக திருப்தியடைந்து விட்டதைக் குறிக்கும் ஆச்சரியக் குரலை வெளியிட்டான்.

''இங்கே வா ஹேஸ்டிங்ஸ் . வந்து பார். அப்புறம் சொல்லு. அந்த இனிஷியல் எது --- ஜே' வா? எல்' லா?''

அது ஒரு நடுத்தர அளவினாலான தாள். இருந்த இடத்திலேயே கொஞ்ச நாட்கள் கிடந்தது போல தூசாயும் அழுக்காயுமிருந்தது. அதிலிருந்த அடையாளச் சின்னம் தான் --- லேபிள் தான் --- பொய்ரெட்டை வெகுவாய் கவர்ந்திருந்தது. தாளின் தலையில், 'பார்க்ஸன்ஸ்' என்ற கம்பெனி முத்திரை இருந்தது. பார்க்ஸன்ஸ், நாடகம் திரைப்படங்களுக்கு வேண்டிய அனைத்து ஒப்பனை சமாச்சாரங்களையும் செய்து தரும் வெகு பிரபலமான நிறுவனம். வந்திருந்த தபால், 'கேவண்டிஷ்' என்ற பொதுப் பெயருக்கு அனுப்பப்பட்டிருந்தது. கேவண்டிஷ்... இது பரம்பரைப் பெயர். ஜான் கேவண்டிஷ்ஷாகவும் இருக்கலாம்... லாரன்ஸ் கேவண்டிஷ்ஷாகவும் இருக்கலாம். ஜே? எல்?'

''இது ஜே'வாகவும் இருக்கலாம்... எல்'லாகவும் இருக்கலாம்'' - ஒரிரு நிமிடங்கள் எடுத்துக் கொண்ட பிறகு நான் சொன்னேன். ''இது நிச்சயம் ஜே'யாக இருக்க முடியாது.''

''குட்'' என்று இதற்கு பதில் சொன்ன பொய்ரெட், விரித்திருந்த தாளை பழையபடி மடக்கிக் கொண்டான். ''உன்னைப் போலவே தான் நானும் நினைக்கிறேன். இது எல். இதையே சார்ந்திருப்போம்.''

''இது இப்போ எங்கேயிருந்து வருது?'' என்று சற்று ஆர்வம் பொங்கக் கேட்டேன். ''இது முக்கியமானதா?''

''கொஞ்சமா. என்னோட ஓர் உத்தேசிப்பை இது ஊர்ஜிதப் படுத்துது. இது இங்கே எங்கேயோ தான் இருக்குனு நான் கணக்குப் பண்ணியதும், ஹோவோர்டை இதைத் தேடும்படி ஏவி விட்டேன்.

Scanned by CamScanner

இப்போ நீ என் கையில தாளை உண்மையா பார்க்கிற அளவுக்கு, இந்த வேலையை எவிலின் துல்லியமா முடிச்சிருக்காங்க.''

'' 'துணி அலமாரிக்கு மேலே'னு சொன்னாங்களே.... அர்த்தம்?''

இதற்கு, ''இதை துணி அலமாரிக்கு மேலிருந்து கண்டெடுத் திருக்காங்கனு அர்த்தம்'' என சரியாய் விளக்கினான்.

''ஒரு பழையத் தாளைப் போட்டு வைக்க... வேற இடமா கிடைக்கலே?'' - முணுமுணுத்தேன்.

''தப்பா எடை போடாதே. ப்ரவுன் நிறத்துல இருக்கிற அலமாரிங்க தான், அதே நிற சாமான்களைப் போட்டு வைக்க மிகச் சிறந்த இடம். நான் கூட இதுபோன்ற சில சமாச்சாரங்களை அப்படி போட்டு வெச்சிருக்கேன். யாரும் பார்க்க மாட்டாங்க. யாருக்கும் தெரியக் கூடாதுனு போடறோம்... யாருக்கும் தெரியவும் செய்யாது. யாருக்கும் எவ்வித இடையூறும் தராது.''

''பொய்ரெட்'' என சிரத்தையாய் அழைத்த நான், ''இந்தக் கொலையின் முடிவு குறித்து நீ ஒரு முடிவுக்கு வந்துட்டியா?'' என்றேன் நான்.

''ஆமாம் --- அதாவது, இக்கொலை எப்படி நடத்தப்பட்டி ருக்குனு --- எனக்குத் தெரியும்.''

''ஆஹ்!''

''துரதிர்ஷ்டவசமா, என்னோட அந்த ஓர் உத்தேசத்தைத் தவிர எனக்கு வேறு எவ்விதமான நிரூபணங்களும் இல்லை. அந்த ---''

இப்போது கடும் சக்தியோடு என்னை அவன் கைகளுக்குள் அடக்கிக் கொண்டவன், அணைத்தபடி அறை முழுவதும் இழுத்துக் கொண்டு ஆடினான். பிரெஞ்சு முறையில் தன் மனமகிழ்வைக் கொண்டாடுவதாக சொல்லிக் கொண்டான். ''நானி... நானி... நானி...'' என்று இடையிடையே உச்சரித்தான்.

இந்தக் குரலைக் கேட்டு விட்ட நானி, தனது சமையற் பகுதியிலிருந்து வேகமாய் ஓடியே வந்துவிட்டாள்.

எங்கள் ஆட்டத்தை விட்டு விட்டு, ''ஏய் நானி... நானி...'' என்றழைத்த பொய்ரெட், ''எனக்குள்ளே ஒரு சிறு ஊகம் விளைந்துள்ளது--- குட்டி, குட்டி, உன்னைப் போல --- அது மட்டும் சரினு நிரூபணமாயிட்டா... வாஹ்... என்ன ஒரு சந்தர்ப்பம் அமையும்...! சொல்லு நானி... அந்த திங்களன்று, செவ்வாய் கிடையாது. நானி... அந்த திங்களன்று... அதாவது துயரம் சம்பவித்த



Scanned by CamScanner

முந்தைய நாள்... உங்க முதலாளியம்மா உபயோகித்த அழைப்பு மணியில ஏதாவது கோளாறு ஏற்பட்டதா?'' என்று கேட்டான்.

நானி, மிக ஆச்சரியம் அடைந்து விட்டவளாய் தோன்றினாள்.

''ஆமாம், ஸார். ஆமாமாம். இப்போ நீங்க கேட்டீங்களே, அது நடந்தது ஸார், நடந்தது...! இது எப்படி உங்க காது வரைக்கும் எட்டிச்சு?! எலியோ எதுவோ, அதோட ஒயரைக் கடிச்சிருக்கணும். அது செவ்வாய் காலைல தான் சரிசெய்யப்பட்டது. ஒருத்தன் வந்து செஞ்சான்.''

பரவசம் பொங்கும் விதத்தில், வெளியேறலானான் பொய்ரெட்.

''இதோ பார்டா... ஒருத்தன் சாட்சி சாட்சினு உள்ளேயும் வெளியேயும் அலையவே வேண்டாம். சரியா கணக்குப் பண்ணினாலே போதும்.. எதேஷ்டம். ஆஹ்... நண்பா...! இப்போ, களைப்புப் போய் பொங்கியெழுந்திருக்கும் ராட்சஸன் நான். நான் ஓடுவேன். பறப்பேன்.''

சொன்னது போல, நீள நீள அடியெடுத்து வைத்து எகிறி ஓடியவன், பிசாசாய் தோட்டத்துக்குள் இறங்கிப் போகலானான்.

''உங்க அபிமான நண்பன் என்ன பண்றாரு?'' - ஒரு குரல் என் பின்னாலிருந்து கேட்டது. மேரி. சிரித்தார். ''இதெல்லாம் என்ன கூத்து?''

''உண்மையா, எனக்கே சொல்லத் தெரியலே. ஏதோ மணி குறித்து நானி கிட்டே கேள்வி கேட்டான். அவளும் பதில் தந்தாள். அதுல மிகவும் களிப்பானவனா மாறினான். குதிச்சு எப்படி ஓடறான். பாருங்க!''

மேரி சிரித்தார்.

''என்ன பைத்தியக்காரத்தனம்! மாளிகையை விட்டே வெளியே போயிட்டிருக்கார் ஹேஸ்டிங்ஸ். இன்னிக்குத் திரும்புவாரா மாட்டாரா?''

''எனக்கென்னம்மா தெரியும். அடுத்து என்ன பண்ணுவான்னு ஊகிக்கிற முயற்சியையெல்லாம் நான் விட்டுட்டேன். முடியலே!''

''அவர் கொஞ்சம் கிறுக்கா, ஹேஸ்டிங்ஸ்?''

''இதுவும் எனக்கு உண்மையா தெரியலே. சில சமயங்களில அவன் கிறுக்கு தான்னு ஸ்திரமா நம்பறேன்! ஆனாலும், அந்த கிறுக்குத்தனத்தின் உச்சத்திலும், அவன் செயல்கள்ல சிறப்பான ஒரு முறை... ஓர் ஒழுங்கு இருக்கிறதையும் பார்க்கிறேன்.''

Scanned by CamScanner

''ஓஹோ.''

அவரிடமிருந்து சிரிப்புகள் உதிர்ந்துக் கொண்டிருந்த போதிலும், ஏதோ சிந்தனையின் ஆதிக்கத்தில் அவர் புதைந்திருப்பது தெரிந்தது. அவர் விசாரத்தில் இருந்தார். கவலையாயிருந்தார்.

இது தான், மேரியை சிந்தியா விஷயம் குறித்து மடக்குவதற்கு உகந்த நேரம் என எனக்குப் பட்டது. நல்ல முடிவு இது என நான் நினைத்து ஆரம்பித்தாலும், அதிகாரமாய் அவர் கையமர்த்தி என்னை நிறுத்தி விட்டதால், மேற்கொண்டு விஷயத்துக்குள் என்னால் போக முடியவில்லை.

''ஒருத்தருக்குப் பரிந்துப் பேசறதுல நீங்க அசகாயர்னு எனக்குத் தெரியும், ஹேஸ்டிங்ஸ். இருந்தாலும் இந்த விஷயத்துல உங்க திறமை எடுபடாது. போதும். என் பக்கத்திலிருந்து எந்த விதமான கொடூரமான ஈவிரக்கமற்ற நடவடிக்கைகளையும் சிந்தியா எதிர்பார்க்க வேண்டாம்.'' அவரிடமிருந்து பிறகு வந்த வார்த்தைகளும் கூட, என் மனதில் புரண்டுக் கொண்டிருந்த சிந்தியா மற்றும் அவளுடைய எதிர்காலம் குறித்த எண்ணங்களைப் பெருக்கித் தள்ளி விட்டன.

தற்சமயம், ''ஹேஸ்டிங்ஸ்'' என்று அழைத்த மேரி, ''நானும் என் புருஷனும் சந்தோஷமா இருக்கோம்னா நீங்க நினைக்கிறீங்க?'' என, நான் எதிர்பார்த்திராத ஒரு கேள்வியைக் கேட்டார்.

அப்படியே நிலைகுத்தி விட்டேன். என் கட்டுப்பாட்டில் இல்லாமல், இதெல்லாம் நான் கவனிக்க வேண்டிய விஷயங்கள் கிடையாது என்பது போல எதையோ முணுமுணுத்தேன்.

''உங்க சம்பந்தப்பட்டதோ கிடையாதோ...'' என்ற மேரி, ''உங்க கிட்டே, நாங்க சந்தோஷமா *இல்லை* என்பதை சொல்றதுல ஒண்ணும் பாதகம் கிடையாது'' என்றார்.

அவர் சொல்ல இன்னும் ஏதோ உள்ளது என்பது தெரிந்ததால், நான் பதிலேதும் சொல்லவில்லை.

எழுந்தார். அறையின் மேலும் கீழுமாய் நடந்தார். அவரது மெலிந்த அழகு தேகம் அசைந்தாட, தலையை ஒரு பக்கமாய் சற்று சாய்த்தபடி அற்புதத் தேராய் நடந்துக் கொண்டிருந்தார். நான் அந்த அழகினையே வைத்தகண் எடுக்காது பார்த்துக் கொண்டிருந்தேன். சட்டென நின்றார். நிமிர்ந்து என்னை பார்த்தார்.

Scanned by CamScanner

''என்னைப் பற்றிய தகவல்கள் எதுவுமே உங்களுக்குத் தெரியாது ஹேஸ்டிங்ஸ். தெரியுமா?'' - கேட்டார். ''நான் எங்கிருந்து வந்தவள்... ஜானை மணக்குமுன் இருந்த இந்த மேரி யார்? ஏதாவது? பரவாயில்லை. நான் சொல்றேன். என் கவலைகளைக் கேட்கும் தேவாலயத் தந்தையா உங்களை ஏத்துக்கிறேன். நீங்க கனிவானவர்... ஆமாம்... நீங்க கனிவானவர் தான்.''

ஏனோ, இப்பொழுது மேரி சொன்ன கனிவான வார்த்தைகளுக்கு நான் எத்தனை மேலெழும்பிப் பறந்திருக்க வேண்டுமோ, அத்தனை தூரம் புளகாங்கிதம் அடையவில்லை. இப்படித் தான் சிந்தியாவும் தன்னுடைய அந்தரங்கங்களை என்னிடம் விண்டு வைக்க ஆரம்பித்தாள். நான் தந்தை? வயதானவராக அல்லவா அவர் இருந்தாக வேண்டும்? நான் இளைஞன்! காதல் வயப்படத் தகுதியான!

''என் அப்பா ஓர் இங்கிலீஷ் காரர்'' - ஆரம்பித்தார் மேரி. ''ஆனா அம்மா ஒரு ரஷ்யப் பிரஜை.''

''ஆஹ்'' என்றேன் நான். ''இப்போ எனக்கு எல்லாம் புரியுது---''

''என்ன எல்லாம் புரியுது?''

''ஓர் அந்நியச் சாயல்... சற்று மாறுபட்டத் தோற்றம்... உங்க கிட்டே எப்பவும் இருந்தது.''

''என் தாயார் மிக அழகானவராக இருந்திருக்கணும். கேள்விப்பட்டிருக்கேன். பார்த்ததில்லை. நான் மிக சின்னப் பெண்ணா இருந்தபோதே அவங்க இறந்துட்டாங்க. இவங்க மரணத்துல ஏதோ சோகம் இருந்திருக்குன்னு நம்பறேன் --- தவறுதலா, தெரியாம, தூக்க மருந்தை அதிகபட்சமா எடுத்துக்கிட்டு இருக்காங்க. எப்படி நடந்திருந்தாலும், அப்பா மனசொடிஞ்சு போயிட்டார். பிறகு வாழ்க்கை ஓடியாகணுமே... தூதரக வேலையில சேர்ந்தார். மாற்றலாகும்... ஊரூரா போகணும். எங்கெல்லாம் போனாரோ அங்கெல்லாம் நானும் போனேன். எனக்கு இருபத்து மூணு வயசானபோது, கிட்டத்தட்ட உலகின் மூலை முடுக்குகளெல்லாம் நான் போய் வந்திருந்தேன். அது ஓர் அற்புத வாழ்வு --- நான் மிக விரும்பிய... காதலித்த வாழ்வு.''

மேரியின் முகத்தில் சிரிப்பு வந்தது. அவரது முகம் இறுமாப்பாய் நின்றது. கடந்த இனிமையான வாழ்க்கையின் மலரும் நினைவுகளுக்குள் அவர் புதைந்து விட்டதாய் தோன்றியது.

''பிறகு அப்பா இறந்துட்டார். தனியா என்னை விட்டுட்டு. கையில காசில்லே. இதுக்கு அப்பா எந்த ஏற்பாடும் பண்ணல. சில வயசான பெண்கள் இருந்த கூடத்துல போய் ஒண்டி வாழ வேண்டியதாச்சு'' - சொன்ன மேரியிடம் நடுக்கம் இருந்தது. ''எப்படியெல்லாம் நான் வளர்ந்தேன்னு சொன்னேன்... அதை வெச்சுப் பாருங்க... இந்தப் புது வாழ்க்கை எப்படிப்பட்ட ஒரு நரகமா எனக்கு இருந்திருக்கும்! தங்கப் பத்தாத குறுகலான இடம்... தனிமை... எல்லாமும் என்னைப் பைத்தியமாக்கின'' - சில நொடிகள் நிறுத்தியவர், வேறு விதமான பாவத்தில் சொன்னார் : ''அப்போ தான் நான் ஜானை சந்திச்சேன்.''

''அப்படியா?''

''அங்கிருந்த கிழவிகள் கோணத்துல, இது எனக்கு மிகச் சரியான பொருத்தம். ஆனால் மனசுக்கு விரோதமில்லாம சொல்லணும்னா, இப்படி அதுங்க சொன்னது என்னை இயக்கலே. ஆமாம்... அப்போது தாளமுடியாது நான் தவித்த தனிமைப் பேயிடமிருந்து தப்பித்துக் கொண்டு வெளியேற எனக்கு அகப்பட்ட ஒரு வழி தான், இந்த ஜான்.''

ஆயினும் என்ன... ஜானுக்கு என்ன குறைச்சல் என்பதுதான் எனக்குள் ஓடிக் கொண்டிருந்தது. நான் பேசவில்லை. நொடிகள் நழுவின. அவர் தான் தொடர்ந்தார்:

''என்னைத் தப்பாப் புரிஞ்சுக்காதீங்க. நான் அவருக்கு உண்மையா தான் இருக்கேன். அப்போகூட எது மனசுல இருந்ததோ அதே உண்மையை நான் அவர்கிட்டே சொன்னேன்.''

நான் பிரமிப்பானேன். தொடர்ந்த வண்ணமிருந்தார்.:

''அவரை என்னை மிகவும் பிடிக்குது என்பதையும், இன்னும் கூட நாளாவட்டத்துல அவரை நான் அதிகமா நேசிக்கக் கூடும் என்பதையும், ஆனால்... இந்த உலகம் வர்ணிப்பது போன்ற 'காதல்' என்ற ஒன்றின் தாக்கம் அவர் மேல எனக்கு இல்லை என்பதையும், சொன்னேன். இப்படி நான் பேசுவது அவரை மிகவும் திருப்திப்படுத்தியதாகவும் அறிவித்தார். அதனால --- நாங்க கலியாணம் பண்ணிக்கிட்டோம்.''

Scanned by CamScanner

ரொம்ப நேரம் இடைவெளி தந்தார். சிறு சிறு சுருக்கங்கள் அவருடைய முன்நெற்றியில் விளைந்து நின்றன. அந்தக் கடந்த காலத்து தினங்களுக்குள் மிக உண்மையாக மீண்டும் புகுந்து அவர் தேடுவது எனக்கு விளங்கியது.

''நான் நினைக்கிறேன் --- நிச்சயமா --- ஆரம்பத்துல என் மேல அவர் மிகவும் ஆசை வெச்சிருந்தார். இருந்தாலும் நாங்க ரெண்டு பேரும் சரியா பொருந்திப் போகலை என்பது என் கருத்து. ஒரு சமயம், ஏறத்தாழ முழுக்கவும் நாங்க விலகிக் கொண்டோம். அவர், என் அருகாமையின் இனிமையை சீக்கிரத்திலேயே வெறுக்க ஆரம்பிச்சார். அவருக்கு நான் கசந்துட்டேன்... சீக்கிரமே. இது உண்மை. எனது பெருமைக்கு இது ஒரு பெரும் இழுக்கு.''

இந்த இடத்தில் அவருடைய கருத்தில் நான் மாறுபடுவதாக பேசியிருப்பேன்... ஆனால் இதற்கு வழிவிட்டால் தானே... தொடர்ந்தார்:

''ஓ, ஆமாம், மறுக்கப் பார்க்காதீங்க ஹேஸ்டிங்ஸ்...! அவர் செஞ்சார்! இப்போ அது பெரிசா ஒண்ணும் பாதிக்கலே... அவரவர் வாழ்க்கையைப் பார்த்துக் கொண்டு பிரியும் முனைக்கு நாங்க வந்தாச்சு. ஆனா, அப்போ...? சேர்ந்திருக்கணும்னு நினைச்சிருந்த அந்த சமயத்துல...?''

''என்ன சொல்றீங்க?''

மேரி அமைதியாய் பதில் தந்தார்:

''நான் தொடர்ந்து ஸ்டைல்ஸில் இருக்கப் போவதில்லைனு சொல்றேன்.''

''நீங்களும் ஜானும் இங்கே இருக்கப் போறதில்லையா?''

''ஜான் இங்கே இருக்கலாம், ஆனா நான் மாட்டேன்.''

''நீங்க அவரை பிரியப் போறீங்களா?''

''ஆமாம்.''

''ஆனா, ஏன்?''

நெடுநேரம் பேசவில்லை. கடைசியில் சொன்னார்:

''ஏன்னா... நான் சுதந்திரமா இருக்க விரும்பறேன்... அதனால இருக்கலாம்.''

இப்படி அவர் பேசியதும் --- விரிந்து விசாலமாய் மேலே தெரியும் வானம், அகண்டுக் கொண்டே முடிவற்றுப் போகும் கானகப் பாதைகள், எங்கு முடிகிறது என விளங்காத எல்லையற்ற நிலப்

Scanned by CamScanner

பகுதிகள் --- இதெல்லாம் நினைவில் தோன்றி, கூடவே, விடுதலை எனும் பதம் மேரி போன்ற பெண்களால் எப்படி அர்த்தப்படுத்தப் படும் என்ற ஒப்பீடும் விளைந்தன. இப்போது எதிரே நின்றுக் கொண்டிருக்கும் மேரியை அவர் தோன்றிய படியே படித்தேன்... ஒரு மிருகப் படைப்பு. நாகரீக வளர்ச்சிகள் எதுவுமே தொடாமல் அப்படியே கற்காலப் போக்கு நீடித்து வாழும் காட்டுக் கழுகு.

சின்ன அழுகையான குரலில், ஆனால் ஆவேசமாய் சொன்னார்:

''உங்களுக்குத் தெரியாது... தெரியவே தெரியாது...! ஆமாம் ஹேஸ்டிங்ஸ்... இந்தக் கொடூரமான வெறுப்பேற்றும் இடம் எனக்கு எத்தனை பெருஞ்சிறையாய் இருந்தது என்பதெல்லாம், உங்களுக்குப் புரியாது.''

''புரியுது'' என்ற நான், ''ஆனா... ஆனா எதையும் அவசரப்பட்டு செஞ்சிடாதீங்க'' என்றேன்.

''ஓ... அவசரம்...!'' - அவரது குரல் எனது யோசனையைப் பழித்தது.

அப்போது, இப்படிக் கேட்டு விட்டோமே என என்னை நானே தலையிலடித்துக் கொள்ளும் ஒரு கேள்வியை, தன்னிச்சையாகக் கேட்டு விட்டேன்:

''டாக்டர் பௌரீஸ் கைது செய்யப்பட்டு விட்ட விஷயம் உங்களுக்குத் தெரியுமா?''

இத்தனை நேரம் அவரிடமிருந்த அனைத்து உணர்வுக் கலவை யையும் அணைத்துப் போடுவது போல், சில கண நேர இறுக்கம் அவர் முகத்தை முகமூடி போல மூடிப் போனது.

''அவருடனான என் தொடர்பை அறுத்துப் போடச் சொல்லி அறிவுறுத்தியதில், ஜான், மிகக் கனிவாக காலைல என் கூடப் போராடினார்.''

''இதைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?'' - சங்கோஜமாய் கேட்டேன்.

''எது பற்றி?''

''கைது.''

''நான் என்ன நினைக்கணும்? அவர் ஒரு ஜெர்மன் உளவாளினு வெளிப்படையா தெரிஞ்சாச்சு; இப்படித் தான், தோட்டக்காரன், ஜானிடம் சொல்லியிருக்கான்.''

இதைச் சொல்லும் போது அவரது முகமும் குரலும் இறுக்கமாய் எவ்வித உணர்ச்சிப் பிரதிபலிப்பும் அற்று இருந்தன.

Scanned by CamScanner

ஓரிரு அடிகள் நடந்த அவர், அங்கிருந்த பூ ஜாடி மலர்களை விரலால் மெல்ல களைந்தார்.

''இந்த பூக்களெல்லாம் போயாச்சு. நான் புதுசா பண்ணணும். நான் கிளம்பலாமா ... நன்றி திரு. ஹேஸ்டிங்ஸ்'' - இறுக்கமான முகத்தோடு, இது முடிந்தது என்ற போக்கில், என்னைக் கடந்து அறையினின்றும் வெளியேறினார் மேரி.

ம்ம்... நிச்சயமாக இவர் பௌரீஸுக்காக வருத்தப்பட மாட்டார். இந்த அளவுக்கு இறுக்கமாய் துளியும் ஆர்வம் காட்டாத எந்தப் பெண்ணும் ஒருவருடைய இழப்புக்கு வருந்தப்போவது கிடையாது.

பொய்ரெட் மறுநாள் காலையில் வரவில்லை. ஸ்காட்லாண்டு அதிகாரிகளும் காணோம்.

ஆனால், மதிய உணவு வேளையில் ஒரு புது சாட்சி கிடைத்தது... அல்லது, சாட்சி இல்லை என்று சுட்டிக் காட்டும் ஒரு புது சாட்சி கிடைத்தது எனலாம். திருமதி எமிலி அவரது மரணத்துக்கு முந்தைய நாள் சாயங்காலம் வாக்கில் எழுதியிருந்த அந்த நாலாவது கடுதாசியைத் தேடி நாங்கள் தோற்றிருந்தோம். எங்களது தேடும் படலம் வீணாய் போய்விட்ட சூழலில், அது தானாக ஒருநாள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில், அதை நாங்கள் முழுக்கப் புறக்கணித்து விட்டிருந்தோம். இந்த எதிர்பார்ப்பு தான், ஒரு புது தகவல் ரூபமாக அப்போது நிறைவேறியது. பிரெஞ்சு நாட்டு இசைகளை வெளியிடும் ஓர் இசை நிறுவனத்திடமிருந்து வந்திருந்த தகவல் அது. அன்றைய தினம் இரண்டாவது தபாலில் வந்தது. திருமதி எமிலி அனுப்பியிருந்த காசோலைக்கு நன்றி தெரிவித்த கடிதமது. அவர் கேட்டிருந்த சில ரஷ்ய நாட்டுப்புறப் பாடல்களைக் கண்டுபிடித்துத் தர இயலவில்லை என்பதற்கான மன்னிப்பும் அதில் இருந்தது. அந்த துர்மாலைப் பொழுதில் திருமதி எமிலி அனுப்பிய கடிதம் தரவல்ல சாட்சி எதுவும் கிடையாது என புரிய, அதைத் தேடி அல்லாடிய முயற்சியே வீண் என்றானது.

டக்கு முன்னால், புதிதாய் உருவான கடித ஏமாற்றத்தைச் சொல்வதற்காக பொய்ரெட்டைத் தேடி ஓடினேன் நான். ஆனால் எனது வெறுப்பை ஏற்றி விடும் வகையில், அவன் மறுபடியும் கிளம்பி வெளியே எங்கேயோ போயிருப்பதாகச் சொல்லப் பட்டேன்.

''மறுபடியும் லண்டனுக்காப் போயிருக்கிறான்?''

Scanned by CamScanner

''ஓ, இல்லே ஸார். ரயில் பிடித்து டேட்மின்ஸ்டர் வரை போய் வருவதாகச் சொன்னார். ஏதோ ஒரு சின்னப் பெண்ணின் மருந்துக் கடையைப் பார்க்க என்று சொன்னார்.''

''அறிவு கெட்டவன்'' என்று வெடித்தேன் நான். ''புதன் ஒரு நாள் மட்டும் அவ அங்கிருக்க மாட்டானு நான் சொல்லியிருக்கேன். எப்படியோ ஒழியட்டும். ஆங்... நாளை காலைல வந்து என்னைப் பார்க்கச் சொல்லணும், முடியுமா?''

''நிச்சயமா, ஸார்...''

ஆனால், மறுநாள் பொய்ரெட் குறித்த எந்த அறிகுறியும் தெரியவில்லை. எனக்குக் கோபம் கூடியது. என்னை அவனுடைய சேவகன் போல அல்லவா நடத்துகிறான்?

மதிய உணவு முடிந்ததும், ஆளாளுக்கு என்னை இழுப்பது போதாது என்று, இந்த எதுவும் பேசாத லாரன்ஸூம் என்னை ஒரு பக்கமாய் கையைப் பிடித்து இழுத்துப் போய், நான் மெனக்கெட்டுக் கிளம்பி மரியாதை தெரியாத அந்த ஹெர்குல் பொய்ரெட்டைச் சந்திக்கப் போகிறேனா என்று கேட்டார்.

''இல்லை'' என்றேன். ''நானாகப் போகப் போவதில்லை. நம்மளைப் பார்க்கணும்னா அவன் கிளம்பி இங்கே வரட்டும்..''

''ஓஹ்!'' லாரன்ஸ் முடிவெடுக்க இயலாதவனாய் தோன்றினார். அவரிடம் தோன்றிய வழக்கத்துக்கு மாறுபட்ட படபடப்பும் நரம்பதிர்வும், என்னவாயிருக்கும் என்றறியும் ஆர்வத்தை என்னுள் தூண்டின.

''என்ன அது?'' என்ற நான் விரதத்தை முடித்தேன்! ''ஏதாவது ஸ்பெஷலான செய்தியா இருந்தா நான் போறேன்!''

''பெரிசா ஒண்ணும் இல்ல... ஆனாலும் சரி... நீங்க அங்கே போனா, நான் சொல்றதைச் சொல்ல முடியுமா?'' என்றவர், அவரது குரலை ரகசியமாக்கிக் கொண்டு, ''அந்தக் கூடுதலான.. எக்ஸ்ட்ரா... காபி கோப்பையைக் கண்டுபிடிச்சுட்டேன்னு நினைக்கிறேன்'' என்றார்.

பொடி வைத்துப் பொய்ரெட் சொல்லியிருந்த அந்த வாசகத்தை நான் முழுக்க மறந்தே போயிருந்தேன். ஆனால் அதன் மீதான எனது ஆர்வம் மறுபடியும் எழுந்தது.

லாரன்ஸ் மேற்கொண்டு எதுவும் சொல்லவில்லை. என்னாலும் எதுவும் தெரிந்துக் கொள்ள முடியவில்லை. எனது ஆர்வமோ கூடிக்

Scanned by CamScanner

கொண்டேயிருந்தது. ஆகவே, கோபம் எனும் குதிரையிலிருந்து இறங்கி, அவனை அவனது ஜாகையில் பிடிக்கக் கிளம்பினேன்.

இம்முறை நான் முகமலர்ச்சியோடு வரவேற்கப்பட்டேன். அவனிருந்தான். நான் பாயவா? இதென்ன கேள்வி... பாய்ந்தேன்!

பொய்ரெட் மேஜையினருகே அமர்ந்திருந்தான். அவனது தலை கைகளுக்குள் புதைந்திருந்தது. நான் வந்ததும் விருட்டென்று நிமிர்ந்தான்.

''என்னது அது?'' மிக விருப்பமாய் கேட்பது போல் கேட்டேன். ''உடம்புக்கு ஒண்ணுமில்லேனு நினைக்கிறேன்..?''

''இல்லை, இல்லை.. உடம்புக்கு ஒண்ணுமில்லே. ஆனா ஒரு மிக முக்கிய நடவடிக்கை ஒண்ணை நான் முடிக்கணும்.''

''என்னது.. கொலைகாரனைப் பிடிக்கலாமா வேண்டாமா'னா?'' - முகத்தை சிறுத்துக் கொண்டு கேட்டேன்.

இதற்கு ஒப்புக் கொண்டு விசாரமாய் பொய்ரெட் தலையசைத்தது, என்னை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.

'' 'பேசுவதா, வேண்டாமா..?' இப்படிச் சொல்லும் உங்களுடைய ஷேக்ஸ்பியர், கூடவே, 'இது தான் பிரச்சினையே' என்றும் முடிப்பார். என் பிரச்சினையும் அதுதான்.''

''நீ விளையாட்டா சொல்றியா... இல்லே நிஜமா பேசறியா?''

''நான் இப்போ, விளையாட்டே இல்லாத நிஜத்தின் உச்சத்தில் இருக்கேன்'' என்றான் கறாராய். ''என் தராசுத் தட்டுல மிக முக்கியமான ஆபத்தான சமாச்சாரங்கள் தொங்கிக்கிட்டிருக்கு ஹேஸ்டிங்ஸ், இதுவா விளையாடும் நேரம்?''

''என்ன அது?''

''ஒரு பெண்ணின் சந்தோஷம் நண்பா'' - வருத்தம் மிகுந்து சொன்னான்.

இதற்கு என்ன சொல்வது என்று எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

''காத்திருந்த நேரம் வந்தாச்சு'' என்றான் சிந்தனையாய். ''இப்போ போய் என்ன செய்யறதுனு எனக்குத் தெரியலே. பார்டா.. ஒரு பெரிய பந்தயக்காரனோட நான் விளையாடிக்கிட்டு இருக்கேன். இதை ஜெயிக்க யாராலும் முடியாது... நான், ஹெர்குல் பொய்ரெட் தான் வந்தாகணும்'' இப்படிச் சொல்லி விட்டு பெருமையாய் தனது மார்பில் தட்டிக் காட்டினான்.

Scanned by CamScanner

மரியாதையாய், அவனுடைய எண்ணங்களைக் கெடுத்து விடாமலிருக்க நான் சிறிது நேரம் அமைதியாயிருந்தேன். பிறகு லாரன்ஸின் தகவலைத் தந்தேன்.

''ஆஹா'' கத்தினான். ''ஆக, எக்ஸ்ட்ரா காபிக் கோப்பையை அவர் கண்டுபிடிச்சுட்டார். நல்லது, அவரிடம் மேலாகத் தோன்றும் புத்திசாலித்தனத்தை விட அதிகமாகவே சரக்கு இருக்கு. நீள முகம்! கறுப்பன்! உன் நண்பன் இல்லே, இந்த லாரன்ஸ்!''

இப்படி புகழும் அளவுக்கு எனக்கு அப்படி ஒன்றும் லாரன்ஸிடம் புத்திசாலித்தனமெல்லாம் தென்படவில்லை. ஆனால் பொய்ரெட்டிடம் வாக்குவாதம் பண்ண எனக்குத் திராணி கிடையாது. என் குறிப்பையும் மீறி புதன்கிழமை பார்த்து சிந்தியாவைச் சந்திக்கச் சென்றதையும் குறிப்பிட்டு சன்னமாய்க் கோபப்பட்டேன்.

''உண்மைதான், என் மூளை, ஒரு சல்லடைப்பா. போட்றதல்லாம் போயிடுது! இருந்தாலும் அங்கிருந்த அந்த இன்னொரு பெண்ணும் கனிவாத்தான் நடந்துக்கிட்டா. சிந்தியா இல்லாததால் நான் ஏமாந்ததுக்கு அவளும் வருந்தினா. அங்கிருந்த எல்லாத்தையும் முகஞ்சுளிக்காம காட்டினா.''

''ஓ, அப்படியா அப்போ பரவாயில்லே. சிந்தியாவோட டீக்கு நீ இன்னொரு நாள் போய்க்கோ.''

கடிதம் பற்றிய சேதியைப் பிறகு சொன்னேன்.

''இதுக்கு வருந்தறேன்'' என்றான். ''அந்தக் கடிதத்தின் மேல் அதிகம் நம்பிக்கை வெச்சுக் காத்திருந்தேன். ஆனா, ஏமாத்திடுச்சு. இந்த வழக்கு எல்லாத்தையும் உள்ளேயே தான் தோண்டி எடுக்கணும்' - இதற்கு அர்த்தமாய் தனது மண்டையைத் தட்டிக் காட்டினான். ''உள்ளே இருக்கும் சாம்பல் செல்கள்தான் புத்திசாலித் தனத்துக்காம். அதுங்கத் தான் முடிவு தரணும்'' என்றவன், திடுமென ''விரல் பதிவுகளைப் படிப்பதில் உனக்குத் தேர்ச்சியிருக்கா?'' என கேட்டான்.

''இல்லை'' என ஆச்சரியமாய் சொன்னேன். ''ரெண்டு ஒரே மாதிரியான விரல் பதிவுகள் இருக்காது எனும் செய்தி மட்டும் எனக்குத் தெரியும். ஆனா இது ஓர் அறிவியல் குறிப்பு.''

''ரொம்பச் சரி.''

மேஜையின் ஒரு சிறு தட்டினை அவன் திறந்தான். அதிலிருந்து சில புகைப்படங்களை எடுத்து மேஜையின்மீது பரப்பினான்.

Scanned by CamScanner

''இதுக்கெல்லாம் நான் எண்கள் தந்திருக்கேன். 1, 2, 3, இதைப் பார்த்து எனக்கு விவரிக்க முடியுமா?''

அவற்றை எடுத்து கவனமாக ஆராய்ந்தேன். சில நிமிடங்கள் கடந்துப் போயின. என்ன பதில் எதிர்பார்க்கிறான் என்ற புரிதல் சரியாய் இல்லாவிட்டாலும் நான் உணர்ந்ததைச் சொல்ல ஆரம்பித்தேன்.

''எல்லாமும் இயன்ற அளவுக்குப் பெரிசாக்கப்பட்டுள்ளன. இது புரியுது. படம் 1... இதுல உள்ளவை ஓர் ஆணுடைய விரல் பதிவுகள்னு தான் சொல்லணும்... பெரிசா தடிமனா அழுத்தமா இருக்கு. பதிந்துள்ளவை, கட்டை விரல் மற்றும் ஆள்காட்டி விரல். படம் 2 ... ஒரு பெண்ணுடையவை. சின்னதா அடக்கமா மென்மையா பதிஞ்சிருக்கு. படம் 3...'' சற்று நேரம் எடுத்துக் கொண்டேன். ''குழப்பமாய் பதிந்துள்ள பல விரல் ரேகைப் பதிவுகள் இருக்கோ... அப்படித் தான் தோணுது. ஆனா, இதோ இங்கே, இந்தப் பகுதியில, பிரத்யேகமா எண் 1ன் விரல் பதிவுகள் போல, போல என்ன.. எண் 1ன் விரல் பதிவுகள்தான் இருக்கு.''

''அங்கேயிருந்த சில விரல் பதிவுகள் மேலே படிந்திருப்பது போல?''

''ஆங்.. ஆங்... ஆமாம். இருந்த சில விரல் ரேகைகள் மேல வெச்சுப் பதிஞ்சா மாதிரி.''

''அப்படித்தான்னு சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு முடிவா சொல்றியா?''

''ஆமாம்.''

''அப்படி மேலே பதிந்துள்ள விரல் ரேகைகளையும் துளி ஐயமின்றி உன்னால அடையாளம் காண முடியுதா?''

''ஓ, ஆமாம். ரெண்டும் ஒன்றே.''

பொய்ரெட் சிந்தனையாய் தலையசைத்துக் கொண்டே மெதுவாய் புகைப்படங்களை என்னிடமிருந்து வாங்கி அவற்றை அவை இருந்த மேஜைத் தட்டிலேயே வைத்துப் பூட்டினான்.

''பொய்ரெட்'' என்ற நான், ''வழக்கம் போல இந்த முறையும் நீ எதையும் எனக்கு விளக்கப் போவதில்லைன்னு நினைக் கிறேன்.''

''சேச்சே, எண் 1 --- திரு. லாரன்ஸுடைய விரல் ரேகைப் பதிவுகள். எண் 2 --- செல்வி சிந்தியாவுடையவை. இவையிரண்டும்

முக்கியம் கிடையாது. ஓர் ஒப்பீட்டுக்காக நான் பெற்ற பதிவுகள் இவை. எண் 3 --- ரொம்ப சிக்கலானது.''

''அப்படியா?''

''நீயே பார்க்கிறே. முடிஞ்ச அளவுக்கு அது பெரிசுபடுத்தப் பட்டிருக்கு. மங்கலா இருப்பது போன்ற ஒரு தெளிவற்ற நிலை, படம் முழுக்கக் குறுக்கே போவதை நீ கவனிச்சிருக்கலாம். நான் உபயோகிச்ச ஸ்பெஷல் உபகரணங்கள், வேதியியல் தூள்... இது பற்றியெல்லாம் உனக்கு சொல்லப் போவதில்லை. இது போலீஸ் வேலை. இதெல்லாம் பயன்படுத்தி பரிசோதிச்சா, எந்தப் பொருள் மீது பதிந்திருக்கும் கைரேகைகளானாலும் வெகு சுலபமா தரம் பிரிச்சுடலாம்... நீ இப்போ அழகா பண்ணின மாதிரி! சரி.. ஹேஸ்டிங்ஸ்... நாம இப்போ விரல் பதிவுகளை ரொம்பத் துல்லியமா பார்த்தோம்... இவை, எந்த ஒரு குறிப்பிட்ட பொருள் மீது ரேகைகள் பதிந்திருந்தன என்பதையும் விட்டு வைக்காம நமக்குச் சொல்லுகின்றன.''

''ம்.. மேலே சொல்லு, நான் ரொம்ப ஆர்வமாயிருக்கேன்.''

''நண்பா.. படம் 3 மாபெரும் அளவுக்கு பெரிசாக்கப்பட்ட ஒரு சிறு பாட்டிலுடைய மேற்புறத்தை உள்ளடக்கியிருக்கு. டேட்மினிஸ் டரில் உள்ள செஞ்சிலுவைச் சங்க மருத்துவமனையின் மருந்துக் கடையிலிருக்கும் விஷங்கள் வைக்கப்பட்டுள்ள அலமாரியின் மேல் தட்டிலிருக்கும் பாட்டில் இது.''

''ஆ, கடவுளே!'' நான் கத்தி விட்டேன். ''இதுல லாரன்ஸுடைய கைவிரல் பதிவுகளுக்கு என்ன வேலையிருக்கு? நாங்க அங்கே போயிருந்த அன்று அவர் அந்த விஷங்கள் அடங்கிய அலமாரி பக்கத்துல போகவேயில்லையே!''

''ம்ம்..! அவர் போயிருக்கார்!''

''சாத்தியமேயில்லை! அங்கிருந்த நேரம் முழுக்க முழுக்க நாங்க எல்லோரும் ஒண்ணாவேதான் இருந்தோம்.''

பொய்ரெட் மறுத்துத் தலையசைத்தான்.

''இல்லை ஹேஸ்டிங்ஸ். ஒரு குறுகிய காலகட்டம் இருந்திருக்கு... நீங்க எல்லோரும் ஒண்ணா இல்லாத அவகாசம் அது. நண்பா, அது, நீங்க மூன்று பேரும் ஒண்ணா இருந்திருக்க முடியாத காலம்! இல்லேனா நீங்க எதுக்கு திரு. லாரன்ஸைத் தேடி அழைத்து பால்கனிக்கு வரச் சொல்லணும்!''

Scanned by CamScanner

''ஆஹ்.. அதை நான் மறந்துட்டேனே!'' ஒப்புக் கொண்டேன். ''ஆனா அது சில நொடிகள் தான்டா..''

''எதேஷ்டம்!''

''எதேஷ்டம்? எதுக்கு?''

புரிந்துக் கொள்ள முடியாத சிரிப்பினை உதிர்த்தான் அவன்.

''ஒரு காலத்தில் மருத்துவத்தைப் படித்து முடித்துவிட்ட ஒருவன், மருந்துகளுக்கு அருகில் எதேச்சையாய் விடப்படும் போது, அவனுக்குள் வெகு இயற்கையாய் ஊறும் ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் தணித்துக் கொள்ள - அந்த சில நொடிகள் எதேஷ்டம்.''

எங்கள் கண்கள் இப்போது ஊடுருவி சந்தித்து நின்றன. பொய்ரெட்டின் விழிகள் கனிவாக, ஆனால் என்னால் புரிந்துக் கொள்ள முடியாததாக இருந்தன. அவன் எடுத்துக் கொண்ட ஏதோ ஒரு பாட்டின் மெட்டினை முணுமுணுக்கத் துவங்கினான். நானோ அவனை சந்தேகக் கண் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தேன்... கேட்டேன்:

''பொய்ரெட்! இந்தக் குறிப்பிட்ட சின்ன பாட்டிலில் இருந்ததுதான் என்ன?''

இப்போது ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான். ''ஸ்டிரிச்நைனின் ஹைட்ரோ - க்ளோரைட்'' என்றான். மெட்டின் முணுமுணுப்பைத் தொடர்ந்தான்.

மறுபடியும், ''ஆ, கடவுளே!'' என்று எனக்குள் சொல்லிக் கொண் டேன். எனக்கு ஆச்சரியம் எழவில்லை. அதிர்ச்சி எழுந்தது. கேள்வியைக் கேட்கும் போதே இதைத்தான் நான் எதிர்பார்த் திருந்தேன்.

''சில மாத்திரைகளைத் தயாரிக்கும் போது, மாசற்ற தூய நிலையில் இருக்கிற ஸ்டிரிச்நைனின் ஹைட்ரோ - க்ளோரைடைப் பயன்படுத்துகிறார்கள். எப்பவும் இல்லே.. அவ்வப்போது. இது அரசு அங்கீகாரத்தோடு உபயோகப்படுத்த வேண்டிய ஒரு திரவம்... ஸ்டிரிச்நைன் ஹைட்ரோ - க்ளோர்... இது முழு பெயர். இதனாலதான் பதிந்துள்ள விரல் பதிவுகள் கலைக்கப்படாம இத்தனை நாளா அப்படியே இருந்திருக்கு.''

''இந்தப் புகைப்படத்தை எடுக்க உன்னால எப்படி முடிஞ்சது?''

''பால்கனியிலிருந்து என் தொப்பியைக் கீழே போட்டேன்.'' சிரமமின்றி விளக்கினான் பொய்ரெட். ''அந்த நேரத்துல, கீழ்ப் பகுதிக்குள் நுழைய பார்வையாளர்களுக்குக் கட்டாயமா அனுமதி கிடையாது. அதனால, கால்ல விழாத குறையா நான் திருப்பித் திருப்பி வேண்டிக் கேட்ட மன்னிப்பைத் தாங்க முடியாம, சிந்தியாவின் தோழி கீழே இறங்கிப் போய் தொப்பியைக் கொண்டு வர வேண்டியதாச்சு.''

''அப்போ இதைக் கண்டுபிடிக்கப் போறோம்னு உனக்குத் தெரியும்?''

''இல்லே... சுத்தமா கிடையாது. லாரன்ஸ் விஷங்கள் அடுக்கப்பட்டிருந்த அலமாரிக்குப் பக்கத்துல போனதா நீ என்னிடம் சொன்ன கதையிலிருந்து, இது சாத்தியமாயிருக்கலாம்னு நான் சும்மா ஒரு கணக்குப் போட்டுப் பண்ணினேன். நான் நினைத்த இந்த சாத்தியக் கூறு நிரூபிக்கப்பட வேண்டும். அல்லது தள்ளுபடி ஆக வேண்டும்.''

''பொய்ரெட்'' என அழைத்த நான், ''உன்னோட அதி மேதாவித் தனத்துக்கு இது ஒரு சிறப்பான உதாரணம். இது மிக முக்கியமான கண்டுபிடிப்பு.''

''எனக்கு அப்படிப் பெரிசா தோணலே'' என்ற பொய்ரெட், ''ஆனா ஒரு விஷயம் எனக்குத் தனிச்சுத் தெரியுது. இது உனக்கும் தனித்துவமா தென்படணும் என்பதுல சந்தேகம் கிடையாது.''

''என்னது அது?''

''இந்த வழக்கு முழுக்க ஏன் இத்தனை ஸ்டிரிச்நைன்? அதைத் துரத்திக்கிட்டு நாம ஓடுவது, இது மூன்றாவது முறை. திருமதி எமிலியின் டானிக்ல ஸ்டிரிச்நைன் இருந்தது. திரு. மேஸின் மூலமாக மருந்துக் கிடங்கு மூலமா ஸ்டிரிச்நைன் விநியோகமாயிருக்கு. இப்போ பாரு... அதிகமான ஸ்டிரிச்நைன், அந்த வீட்டு நபராலேயே கையாளப்பட்டிருக்கு. இது குழப்புது. உனக்கே தெரியும். குழப்பம் எனக்குப் பிடிக்காது.''

இதற்கு நான் பதில் தருவதற்கு முன், அங்கு தங்கியிருந்த இன்னொரு பெல்ஜிய ஆள் உள்ளே நுழைந்து தலைகாட்டினார்.

''கீழே ஒரு பெண் வந்திருக்கா. திரு. ஹேஸ்டிங்ஸைக் கேட்கிறா.''

Scanned by CamScanner

''பெண்?'' என்று கேட்ட நான் குதித்தெழுந்தேன். அந்தக் குறுகலான படிகளைக் கடந்து என்னைத் தொடர்ந்தான் பொய்ரெட். திருமதி மேரி வாசலில் நின்றிருந்தார்.

''கிராமத்துல ஒரு வயசானப் பெண்மணியைப் பார்த்துட்டு வரேன்'' என்று விளக்கம் தந்த அவர், ''நீங்க திருமிகு பொய்ரெட்டைப் பார்க்க வந்திருப்பதாய் லாரன்ஸ் சொன்னதாலே உங்களை அழைக்கலாம்னு வந்திருக்கேன்'' என்றார்.

இப்போது பேசிய பொய்ரெட் ''மதிப்பிற்குரிய மேரி'' என்று விட்டு, ''என்னோட இடத்துக்கு நீங்களா தேடி, என்னை கௌரவிக்க வந்திருக்கீங்கன்னு நினைச்சேன்'' என்றான்.

''நிச்சயமா இன்னொரு நாள் அதைப் பண்றேன்'' என்றார் அவர் புன்முறுவியபடி.

''ரொம்ப நன்றி. ஆங், உங்களின் குறைகளைக் கேட்டுக் களைய ஒரு தேவாலயப் பெரியவர் வேணும்னா---'', இதற்கு மேரி சட்டென எதற்கோ முன்வந்தார். ''நினைவிருக்கட்டும்... அப்பா பொய்ரெட், எப்போதும் அதற்கு காத்திருக்கிறார்!'' என்று முடித்தான், பொய்ரெட்...!

அவன் சொன்ன வார்த்தைகளின் ஆழமான அர்த்தத்தைப் படிப்பவர் போல், பொய்ரெட்டையே சில நொடிகள் நீளமாய் முறைத்தார் அவர். பிறகு திடுமென விலகிக் கிளம்பினார்.

''வாங்க திரு. பொய்ரெட். நீங்களும் எங்களோட சேர்ந்து இப்போ ஸ்டைல்ஸுக்கு வரமுடியுமா?''

''புளகாங்கிதம் அடைகிறேன், திருமதி மேரி.''

ஸ்டைல்ஸுக்கு நடந்த வழி நெடுகிலும் எப்போதுமில்லாது வேகமாகவும், நடுநடுக்கத்துடனும் பேசினார் மேரி. எதற்காகவோ பொய்ரெட்டின் கண்களுக்கு அவர் தடுமாறி நடுங்குவதாய் எனக்குத் தோன்றியது.

வானிலைக் குலைந்திருந்தது. காற்றுக் குத்தீட்டியாய் நடுங்க வைத்தது. மேரி கொஞ்சமாய் நடுங்கினார். அணிந்திருந்த குளிருக்கான அங்கியை இன்னும் இறுக்கிக் கழுத்து வரைப் பொத்தான்களைப் போட்டுக் கொண்டார். மாபெரும் ராட்சஸன் விடும் பெருமூச்சு போல, மர இடுக்குகளின் வழியே வீசிய குளிர்க் காற்று சோக முனகலாய் இருந்தது.

ஸ்டைல்ஸ் மாளிகையின் விசாலமும் அகலமும் கனமும் கொண்ட மதில் சுவர் இரும்புக் கதவினை அடைந்திருப்போம்.

Scanned by CamScanner

அந்தக் கணத்திலேயே உள்ளே என்னவோ மாபெரும் தப்பு நடந்துள்ளது என்ற புரிதல் எங்களுக்கு விளைந்தது.

எங்கள் தலைகளைக் கண்டதும், நானி, அடித்துப் பிடித்துக் கொண்டு எங்களைச் சந்திக்க ஓடோடி வந்தாள். அவள் அழுதுக் கொண்டு வந்தாள். கைகளைப் பிசைந்துக் கொண்டு நின்றாள். கண்களும் வாயும் பிளந்த நிலையில், ஏனைய வேலைக்காரர்களும் நானிக்குப் பின்னால் குவிந்திருப்பதைக் காண முடிந்தது.

''ஓ.. மேடம்... ஓ.. மேடம்.. ஓ... எனக்கு எப்படி சொல்றதுன்னே தெரியலியே..''

''என்ன இது நானி?'' என நான் பொறுமையிழந்து கேட்டேன். ''உடனே எங்களுக்குச் சொல்லுங்க.''

''எல்லாம் அந்தக் கட்டையில போற துப்பறியும் அதிகாரிங்க சதிதான். அவங்க அவரை கைது செய்துட்டாங்க.. அவங்க திரு. கேவண்டிஷைக் கைது செய்துட்டாங்க.''

''லாரன்ஸைக் கைது பண்ணிட்டாங்களா?'' நான் விக்கித்துப் போய் கேட்டேன்.

இதற்கு, நானியின் கண்களுக்குள் ஓர் அந்நிய உணர்வு படர்வதை நான் கண்டேன்.

''இல்லே ஸார். திரு. லாரன்ஸ் ஐயாவை இல்லே, திரு. ஜானை.''

எனக்கு முன்னாலிருந்த மேரி மாபெரும் கதறலோடு அப்படியே என்மேல் சாய்ந்து மூர்ச்சையாக, அவரைத் தாங்க நான் குனிந்தபோது, பொய்ரெட்டின் கண்களில், ஆரவாரம் தெரியாத ஆனால் *மாபெரும் வெற்றியின் முழக்கத்தை* நான் கண்டேன்.

அத்தியாயம் பதினொன்று

# நீதிமன்றம் சென்ற வழக்கு

~

தன்னுடைய சித்தி முறை வளர்ப்புத் தாயைக் கொன்று விட்டக் குற்றத்துக்காக ஜானின்மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணைத் தொடர், இரண்டு மாதங்களுக்குப் பிறகு தொடங்கியது.

இடைப்பட்ட வாரங்களில் இவ்வழக்குத் தொடர்பாக நடந்தவை அதிகமில்லாததால், அந்நிகழ்வுகளை நேயர்களுக்கு சொல்வதை நான் குறைத்துக் கொள்கிறேன். ஆனால், இந் நேரத்தில் எனது வியப்பு நிறைந்த பாராட்டுதல்களும், மனம் இரங்கிய அனுதாபங் களும், துளியும் மிகைப்படுத்தப்படாமல் திருமதி மேரி ஜான்மீது விளைந்துப் பெருகின என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். அன்பு மேலோங்கிப் பொங்கி வழிய, தனது கணவன் பக்கத்து குற்றமற்ற நியாயத்தை எடுத்து வீசி சீறிப் பாய்ந்தார் அவர். குற்றம் செய்தவர் என்று மட்டும் தம்பட்டம் கட்டிக் கொண்டு அலைந்தால் ஒன்றும் ஆகிவிடாது என போலீஸை விமர்சித்து இகழ்ந்துப் பேசித் தள்ளினார். ஜானுக்காக நுனி முதல் அடி வரை போரிடத் தயாரானார்.

பொய்ரெட்டிடம், மேரியின் இத்தகைய குணத்துக்கு நான் தலைவணங்குவதாக சொன்னபோது, அவன் சிறு சிந்தனையோடு அதனை ஏற்றுக் கொண்டான்.

''கெட்ட காலம் உச்சத்தில் ஆடும்போது தான் மேரி போன்ற பெண்கள் அவங்களுடைய முழு தன்மையையும் பிரகடனப் படுத்துவாங்க. இதுநாள் வரை வெளியே தெரியாம அவங்களுக் குள்ளேயே இருந்த இனிமையான... தர்மமான... உண்மையான குணாதிசயங்க எல்லாம் ஒண்ணு கூடி இடுக்கண் அதிகமாக தாக்கும்போது தான் வெளிப்படும். இதுபோன்ற பெண்களின் தற்பெருமை, மமதை, பொறாமை, எல்லாம்...''

''பொறாமை?'' - சட்டென இடைமறித்தேன்.

''ஆமாம். அவங்க ஓர் அசாதாரண பொறாமைப் பெண் என்பதை நீ கவனிச்சதேயில்லையா? ஆங்... நான் குறிப்பிட்ட மாதிரி, அவங்களுடைய பொறாமை எல்லாம் ஒரு பக்கம் தூக்கி வைக்கப்பட்டாச்சு. அவங்க கணவனைத் தவிர வேற எதையுமே தற்போதைக்கு நினைக்கலே. தன் கணவனின் தலைக்கு மேலே தொங்கிக்கிட்டு இருக்கிற அபாயகரமான விதியைத் தவிர அவங்களுக்கு வேறு சிந்தனை கிடையாது. ஓ.. மேரி!''

மிக உணர்ச்சிபூர்வமாக அவன் பேசிக் கொண்டிருக்க, கடைசி சந்திப்பின் போது 'பேசுவதா.. வேண்டாமா?' என அவன் மேற்கோள் காட்டிச் சொன்னதை நினைத்தபடி நான் கவனமாய் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தேன். தளிர் துளிர் போல மென்மையாய் சொன்னானே... 'ஒரு பெண்ணின் சந்தோஷம்' என்று!

''இப்போ கூட பொய்ரெட்'' என்ற நான், ''என்னால நம்பவே முடியலே'' என்றேன். ''பார்... கடைசி நிமிஷம் வரைக்கும்... ஏன், கடைசி நொடி வரைக்கும்... அது லாரன்ஸ் தான்னே நான் நெனச்சுக்கிட்டிருந்தேன்.''

பொய்ரெட் கேலியாய் சிரித்தபடி, ''எனக்கு அது தெரியும்'' என்றான்.

''ஆனா, அது ஜான்! ஓ... என் பால்ய நண்பன்!''

''எல்லா கொலைகாரர்களும் யாரோ ஒருத்தருடைய பால்ய நண்பனாத் தான் இருக்கான், ஹேஸ்டிங்ஸ்'' - தத்துவக் குரலெடுத்து சொன்னான் பொய்ரெட். ''ஆசாபாசங்களைக் கொண்டு போய் காரண காரியங்களோடு நீ குழப்பிக்கக் கூடாது.''

''இதைப்பற்றி நீ எனக்கு முன்கூட்டியே சிறு குறிப்பாவது தந்திருக்கணும், தெரியுமா?''

''தெரியும். ஆனா நான் அப்படிப் பண்ணலேப்பா, ஏன்னா, அவன், உன்னுடைய பால்ய நண்பன்.''

ஜானுக்கு தண்டனை கிடைக்கும் என்று நினைக்கிறானா, என பொய்ரெட்டைக் கேட்டேன். என் முழு ஆச்சரியத்துக்கு தீனி போடும் விதமாய், நான் கேட்ட கேள்விக்கு முற்றிலும் மாறாக, அவர் குற்றவாளி அல்ல என்று அறிவிக்கப்பட்டு விடுதலை அடையும் வாய்ப்புகள்தான் அதிகம் என்றான் அவன்!

Scanned by CamScanner

''ஆனா, பொய்ரெட்'' என, சாட்சிகள் இல்லாமலா கைதாகியிருப்பார் என்று எதிர்க்க நினைத்தேன் நான்.

''ஓ, நண்பா, காரணம் கேட்காதே!'' என கலவர மனத்தோடு என்னை நிறுத்தி விட்டான் அவன். ''என்னிடம் இதை நிரூபிக்க சாட்சிகள் இல்லேனு எத்தனை தடவை நான் சொல்லியிருக்கேன். ஒருத்தன் கொலை பண்ணியிருக்கான்னு தெரிஞ்சுக்கிறது ஒரு கலை... அவன் அப்படித்தான்னு ஸ்திரமா சாட்சிகளை முன் நிறுத்தி நிரூபிப்பது வேறொரு கலை. இந்த வழக்கிலோ கையிலிருக்கிற சாட்சிகள் ரொம்ப ரொம்பக் கம்மி. முழு சிக்கலே இதுதான். நான், ஹெர்குல் பொய்ரெட்... எனக்கு இந்த நொடியில் முழு சங்கதியும் தெரியும். ஆனா, சங்கிலியைப் பூர்த்தி செய்ய வல்ல கடைசித் தொடர்பு... கையில் இல்லை. அந்தப் பதுங்கியுள்ள தொடர்பினை நான் துரிதமா கண்டுபிடிக்காட்டா...'' கவலையோடு தலையை மறுத்து அசைத்தான் பொய்ரெட்.

சில நிமிடங்கள் கரைந்தோட, ''எந்தச் சந்தர்ப்பத்துல நீ ஜானை முதன் முதலா சந்தேகிச்சே?'' என்றேன் நான்.

''ஏய்.. நீ அவரை சந்தேகிக்கவே இல்லையா?''

''ஆமாண்டா..''

''திருமதி எமிலிக்கும் அவருடைய மருமகனுக்கும் இடையிலான உரையாடலின் அந்த சின்னஞ்சிறு பகுதியை எதேச்சையாக கேட்டியே... அந்த சாராம்சத்தை வெச்சு...! மேலும் மரண விசாரணையில அது தொடர்பா திருமதி மேரி வெளிப்படையா சாட்சி தர தயங்கினாங்களே... அதையும் வெச்சு...! உன்னால முடியலே?''

''இல்லை.''

''ரெண்டுத்தையும் சேர்த்து... ஒண்ணுக்குள்ளே ஒண்ணாக்கி... திருமதி எமிலியோடு சண்டையிட்டது ஆல்ஃபிரட் இல்லேனா - நினைவிருக்கட்டும்... தான் தன்னுடைய அன்பு மனைவியோடு வாய்த் தகராறுல ஈடுபடலேனு ஆல்ஃபிரட் மரண விசாரணையின் போது ஆணித்தரமா மறுத்தார் - அது ஜானோ அல்லது லாரன்ஸோ தான்னு, உன்னால அலசிப் பார்க்க முடியலியா? ஒருவேளை அது லாரன்ஸாயிருந்தா, மேரியுடைய வாக்குமூலத்தை நாம ஒதுக்கிடலாம். கணக்கில் கொள்ள வேண்டாம். லாரன்ஸுக்காக மறைச்சுப் பேச வேண்டிய நிர்ப்பந்தமே மேரிக்குக் கிடையாது. ஆனா, அதுவே ஜானா இருந்தா, மேரியுடைய மரண விசாரணை நடத்தை முழுவதும் சிரமமில்லாம தானா விளக்கப்பட்டுடுது... இல்லையா?''

Scanned by CamScanner

''ஓ... அப்படினா'' என உள்ளுக்குள் லேசாய் உடைந்துக் கத்திய நான், ''அன்று மதியம் திருமதி எமலியோட சண்டையிட்டது ஜான்!''

''அப்படியே.''

''இது உனக்கு முதலிலிருந்தே தெரியும்.''

''சந்தேகமில்லாம. திருமதி மேரியுடைய விசாரணை மன்ற நடத்தையை, இந்த வகையில மட்டும்தான் விளக்க முடியும்.''

''இருந்தாலும் அவர் தண்டனையிலிருந்து விடுவிக்கப் படலாம்னு சொல்றே.''

பொய்ரெட் தோள்களைக் குலுக்கினான்.

''அப்படியே. போலீஸ் காவல் விசாரணை நடவடிக்கைகளின் ஒரு பகுதியா, வழக்கு நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்பட்டு விசாரணை நடத்தப்படுவதை நாம் பார்க்கலாம். இருந்தாலும், அவருடைய வக்கீல் அல்லது வக்கீல்கள் எதிர்வாதம் எதுவும் செய்யாம வாயைப் பொத்திக் கொண்டு பேசாம இருக்கும்படி ஜானை அறிவுறுத்துவாங்கன்னு தான் நினைக்கிறேன். இதற்கான வாய்ப்புகள் தான் அதிகம்! வாத பிரதிவாத விசாரணைகள் தொடங்கும்போது அத்தனை மறுப்புகளும், நீதிபதியின் முன் கொட்டப்படும்! அதுவரை மூச்! அப்புறம், இன்னொன்று... உனக்கு ஒரு முன்னெச்சரிக்கை தர விரும்பறேன் ஹேஸ்டிங்ஸ்... இந்த வழக்குல என் இருப்பு தெரியவே கூடாது.''

''என்ன?''

''சொல்றதைக் கேளு. சட்ட ரீதியா இந்த வழக்குல நான் எவ்வகையிலும் இணைஞ்சவன் கிடையாது. கூப்பிட்டாங்க. வந்திருக்கேன்... இல்லையா! எனது சங்கிலியின் அந்தக் கடைசி இணைப்பை நான் கண்டு எடுக்கிற வரைக்கும் இவ்வழக்கின் காட்சிகளுக்குப் பின்னால நான் மறைஞ்சுதான் நிற்கணும். அவருடைய கணவனுக்கு சாதகமா நான் உழைச்சுக்கிட்டு இருக்கேன்னு தான் திருமதி மேரி நினைக்கணுமே தவிர, பாதகமானு எண்ணக் கூடாது.''

''ஏய்... இது சுத்த ஏமாத்து வேலை...'' நான் எதிர்த்தேன்.

''அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாது. குழம்பாதே... குழப்பிடாதே! நாம இப்போ விளையாடிக் கொண்டிருப்பது, ஒரு மாபெரும் புத்திசாலியான மற்றும் ஈவிரக்கமற்ற ஆளோட. நம்மால எந்த சக்தியையெல்லாம் பிரயோகிக்க முடியுமோ அதையெல்லாம்

Scanned by CamScanner

உபயோகிச்சு முன்னேறணும்... இல்லேனா நம் கண்களுக்கு முன்னாடி நம்முடைய விரல் இடுக்குகளுக்கு நடுவிலேயே நழுவி அவன் மறைஞ்சுடுவான். இதுக்காகத்தான் நான் பின்னணியிலேயே தங்கிட முடிவு செஞ்சிருக்கேன். இப்போ நடந்திருக்கிற போலீஸ் நகர்த்தல்கள் எல்லாமே, இந்த ஜேப் செய்திருப்பவை... ஆக அவரே அத்தனை புகழையும் அள்ளிக் கொண்டு போகட்டும். ஒருவேளை என்னையும் கூப்பிட்டு சாட்சி சொல்ல சொன்னா...'' பெரிதாய் சிரித்த பொய்ரெட், ''குற்றவாளியைக் காக்கப் போராடும் பக்கத்துக் கான... அதாவது எதிர்தரப்புக்கான சாட்சியா தான் அது இருக்கும்'' என்றான்.

என் காதுகளை என்னாலேயே நம்ப முடியவில்லை.

''குழப்பமாதான் இருக்கும்'' என்ற பொய்ரெட் தொடர்ந்தான். ''ஆனா கைது செய்திருப்பது சரியே என வாதிடும் கூட்டத்துக்கு எதிரா, அவங்களுடைய தப்பான எண்ணத்தைத் தவிடு பொடி யாக்குகிற மாதிரி பிரமிக்கத்தக்க சாட்சியை என்னால தர முடியும்.''

''எது அது?''

''அழிக்கப்பட்ட உயிலோடு தொடர்பு கொண்டுள்ள சாட்சி. ஜான் அந்த உயிலை அழிக்கவில்லை.''

பொய்ரெட்டைப் போல ஓர் உண்மையான குறி சொல்லு பவனைப் பார்க்க முடியாது. அவன் சொன்னவை அப்படியே நடந்தன. போலீஸ் காவல் நடவடிக்கைகள் பற்றி இங்கு நான் நேயர்களுக்கு விவரிக்கப் போவதில்லை. போரடிக்கும். உபயோகமற்றப் பல விஷயங்களைத் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருக்கும். ஜான் மறுத்து ஒரு வார்த்தைப் பேசவில்லை என்பதையும், இதன் காரணமாக அவர் வாத பிரதிவாத விசாரணைக்கு அனுப்பப்பட்டார் என்பதையும் மட்டும் நறுக்கென்று சொல்லிக் கொள்கிறேன்.

லண்டனுக்கு வழக்குப் போனது. செப்டம்பரில் அனைவரும் லண்டனில் இருந்தோம். அங்கேயே ஒரு சிறு வீட்டினை எடுத்துக் கொண்டு தங்கினார் மேரி. பொய்ரெட்டும், கேவண்டிஷ் குடும்பத்தோடு இருக்க அனுமதிக்கப்பட்டிருந்தான். எனக்கு வேலை லண்டனில்தான். ஆகையால் அனைவரையும் அடிக்கடி வந்து சந்தித்துப் பேசுவதில் சிரமம் இருக்கவில்லை.

இந்நிலையில் பொய்ரெட்டின் படபடப்புக் கொஞ்சங் கொஞ்சமாக மோசமாகிக் கொண்டே போனது. ''அந்தக் கடைசி

Scanned by CamScanner

தொடர்பு'' என்று அவன் அடிக்கடிப் பேசிக்கொண்டேயிருந்தான். அது அவனால் கண்டுபிடிக்கப்படாமலும் இருந்தது. இப்படியே போய்விடுமோ என்றும் எனக்கு ஒரு பக்கம் மனசில் பட்டது. அப்படி ஏதாவது ஆகிவிட்டால் - ஜானுக்கு விடுதலை என்பது இல்லாமலே போய்விட்டால்... ஓ மேரியின் அதோகதி!

செப்டம்பர் 15 அன்று குற்றவாளி கூண்டில் ஏறி நின்றார் ஜான். ''திருமதி எமிலியை வேண்டுமென்றே கொன்றவர்'' என்ற குற்றச்சாட்டுடனும், ''மறுப்பு சொல்லி நிரூபிக்க மறுக்கிறார்'' என்ற அறிமுகத்தோடும் அவர் கூண்டில் நிறுத்தப்பட்டார்.

லண்டனின் முக்கிய வக்கீலான ஹெவி-வெதர் என்பவர், ஜான் குற்றமற்றவர் என வாதாட நியமிக்கப்பட்டிருந்தார்.

எதிர்தரப்பு வக்கீலான பிலிப்ஸால் தொடங்கப்பட்டு, வழக்கு நீதிபதி முன் ஆரம்பமானது.

''இக்கொலை, செமத்தியாக முன்னேற்பாடு செய்து அரங்கேற்றப்பட்டுள்ள ஈவிரக்கமற்ற கொடுஞ்செயல்'' என்றார். ''தாயை விட அதிக பாசம் செலுத்தி பரிவாய் இருந்து வந்த வளர்ப்புத் தாய்க்கு... அன்பும், நம்பிக்கையும் கலந்து தாய்ப் பாசத்தைப் பொழிந்து வந்த ஒரு முதிய பெண்மணிக்கு... அவருடைய வளர்ப்பு மகனே திட்டமிட்டு விஷம் வைத்துக் கொன்றுள்ள மாபாதகச் செயல். சின்னப் பயலாய் இருந்த காலத்திலிருந்தே, திருமதி எமிலி இவரைத் தூக்கி நெஞ்சில் சார்த்திப் போற்றி வளர்த்துள்ளார். அவருடைய கவனிப்பிலும் உபச்சாரத்திலும் திளைத்து, இதோ இங்கு நிற்கும் ஜானும் அவருடைய மனைவியும், ஸ்டைல்ஸ் எஸ்டேட்டில், உலகின் அனைத்து சொகுசுகளையும் அனுபவித்து வாழ்ந்திருக் கின்றனர். திருமதி எமிலி கருணையும் தயாள குணமும் மிக்க ஒரு பெரும் கொடை வள்ளலும் ஆவார்.''

இத்தனையும் பேசிய பிலிப்ஸ், ''ஒழுக்கமற்று சீர்கெட்டுப் போய், இருந்த பணத்தையெல்லாம் ஊதாரியாய் செலவழித்து தம்புடிக்கு வழியில்லாமல் இங்கு நிற்கும் கைதி, பக்கத்துப் பண்ணையிலுள்ள திருமதி ரமோலா எனும் ஒருத்தியோடு கூட்டுச் சேர்ந்துக் கொண்டு, சதித் திட்டம் தீட்டித்தான் இக் கொலையைச் செய்து முடித்துள்ளார்...'' என்றெல்லாம் குறிப்பிட்டுவிட்டு, சாட்சிகளை அழைத்து இதையெல்லாம் நிரூபிக்கவும் முடியும் என்றார். தொடர்ந்தார்: ''இது கைதியின் வளர்ப்புத் தாயின் காதுகளுக்கு எட்டுகிறது. மரணம் சம்பவித்த தினத்துக்கு முந்தைய

Scanned by CamScanner

நாள் மதியப் பொழுதில் மகனை அழைக்கும் அந்தத் தாய், இவரைக் கறாராகக் கண்டிக்கிறார். வாக்குவாதம் எழுகிறது. அந்த வாய்ச் சண்டையின் சில பகுதிகள்தான் வெளியே இருப்பவர்களால் கேட்கப்படுகின்றன. இது முடிந்ததும், இந்தக் கைதி, கிராமத்து மருந்துக் கிடங்குக்கு நேராகப் போய்... கொலையின் கருவை வேறு ஒரு நபர் மீது திசை திருப்பிவிடும் வகையில் ஆள் மாறாட்டத் தோற்றத்தை ஆயுதமாகக் கையிலெடுத்துக் கொண்டு... ஸ்டிரிச்நைன் விஷத்தினை வாங்குகிறார். கைதி ஜான், ஆரம்பம் முதலே கருவி வந்த திருமதி எமிலியின் கணவரான திரு. ஆல்ஃபிரட் போல தோற்றம் ஏற்படுத்திக் கொண்டு, விஷத்தினை வாங்கி வந்திருக்கிறார். திரு ஆல்ஃபிரட்டாக, துளிகூட மறுக்க முடியாத அளவுக்கு இவரால் மாற முடிந்திருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.''

இத்தோடு நிறுத்திக் கொள்ளாமல், ''ஜூலை 17 மதியப் பொழுதில்'' என்று தொடர்ந்த வண்ணமிருந்தார்.

''மகனோடு மனம் உடைந்துப் பெருமளவுக்கு சர்ச்சையில் அல்லாடிய அந்தத் தாய், உடனடியாக ஒரு புது உயிலைத் தயார் செய்கிறார். அடுத்த நாள் காலையில், இந்த உயில்தான், திருமதி எமிலியின் படுக்கையிலிருந்த கனப்புக்குள் அழிக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்படுகின்றது. ஆனால், அது திருமதி எமிலியுடைய கணவருக்கு சாதகமாக எழுதப்பட்ட ஓர் உயில் என்று சாட்சிகள் கிடைக்கப் பெற்றன. மரணமடைந்த பெண்மணி, திருமணத்துக்கு முன்பே, கைதிக்கே அனைத்தும் போய்ச் சேரும்படி ஓர் உயிலை எழுதியிருக்கிறார். ஆனால் (ஜான் நோக்கி அகங்காரமாய் சுட்டு விரல் நீட்டுகிறார் பிலிப்ஸ்) இந்தக் கைதி அதனை அறிந்திருக்க வில்லை. எதனால் மறுபடியும் ஓர் புதிய உயிலை மரணமடைந்தவர் மீண்டும் செய்திருக்க வேண்டும் என்று இவருக்குப் புரியவில்லை. அவர் மிக முதியவர். அப்படி ஒன்றினை முதலில் செய்ததை அவர் மறந்திருக்கக் கூடும். இதற்கு சாத்தியம் உள்ளது; (இப்போது சொன்ன காரணம் பிலிப்ஸுக்கு மிக பிடித்திருந்தது) அந்த உயில் அவரது புது திருமணத்தால் ரத்தாகியிருக்குமோ என்று கருதியிருக்க லாம். இந்தக் கோணத்தில் வீட்டில் பேச்சு வார்த்தைகள் நடந்திருக்கின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். இந்த சட்ட நுணுக்கங்களிலெல்லாம் அந்தக் காலத்துப் பெண்கள் கட்டுப்பெட்டி

தானே! ஒரு வருடத்துக்கு முன்னால் தான் இந்தக் கைதிக்கு சாதகமான உயில் அவரால் கையெழுத்தாகியிருக்கின்றது.''

இப்படிச் சொல்லிவிட்டு, துர்மரணம் நிகழ்ந்த இரவன்று காபியைக் கொண்டு போய் திருமதி எமிலியிடம் கொடுத்தது கைதி ஜான்தான் என்பதை நிரூபிக்க சாட்சிகளை அழைக்கவுள்ளதாய் சொன்னார். பிறகு எப்படியோ திருமதி எமிலியின் அறைக்குள் செல்லும் ஜான், அந்தப் புது உயிலை நாசமாக்கி விடுவதாயும், அப்போது தானே கைதியின் பெயருக்கு அனைத்தும் செல்வதாய் அறிவிக்கும் பழைய உயில் நிரந்தரமாய் இருந்துவிட வழி பிறக்கும் என்றும் சொன்னார் பிலிப்ஸ்.

திரு. ஆல்ஃபிரட்டாக மாறுவேடத்தில் போயிருந்த ஆசாமி, கொலை நடந்த முந்திய இரவன்று கிராம மருந்துக் கடையிலிருந்து வாங்கி வந்த ஸ்டிரிச்நைன் அடங்கிய சிறு குப்பி போலவே, அப்படியே அச்சு அசலாக வேறொன்றினை, மிகவும் சாதுர்யமான துப்பறியும் அதிகாரி என்று விசாரணையின் போது கூறிக் கொள்ளப்பட்ட ஜேப்'பின் முயற்சியால் ஜானின் படுக்கையறை யிலிருந்து கண்டெடுக்கப்பட்டதால் - ஜான் கைதாகியிருந்தார்.

''மரண விசாரணை செய்த நீதி காவலர்கள்தான், இந்த சாட்சிகளெல்லாம் சந்தேகத்துக்கு அப்பாற்ப்பட்டு கைதியைக் குற்றவாளி நிரூபணம் செய்யத்தக்கவை தானா என்று கண்டு சொல்ல வேண்டும்'' என்றார்.

இது ஒன்றே ஜானைக் கொலையாளி என அடித்துக் கூறும் ஒரே சாட்சியாகி விடாது என்று மரண விசாரணை. அதிகாரி ஒருவர் நுணுக்கமாயும் நயம்படவும் எடுத்துச் சொல்ல, திரு. பிலிப்ஸ் உட்கார்ந்துக் கொண்டு முன் நெற்றியை வழித்து விட்டுக் கொண்டார்.

போலீஸ் தரப்பில் கையாளப்பட்ட ஆரம்ப சாட்சிகள் அனைத் துமே மரண விசாரணையின்போது கடைப்பிடிக்கப்பட்ட வரிசை யிலேயே தான் இருந்தன. மருத்துவச் சான்றுகள் முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

துணிச்சலாய் சாட்சிகளைத் துளைத்து எடுத்து விடுவதில் 'சர்வாதிகாரி' என இங்கிலாந்து முழுவதிலும் பெயர் பெற்றிருந்த ஹெவி-வெதர், இரண்டே இரண்டு கேள்விகளை மட்டும் தான் முன்வைத்தார்.

Scanned by CamScanner

''ஸ்டிரிச்நைன் மிக துரிதமாக இயங்கும் ஒரு மருந்து என்கிறேன் நான்.''

இதற்கு, ''ஆமாம்'' என்றார் டாக்டர் பௌரீஸ்.

''ஆனால் இவ்வழக்கில் இது ஏன் இத்தனை கால தாமதமாக இயங்கியுள்ளது என்பதற்கு உங்களால் விளக்கம் தர முடியவில்லை?''

''ஆமாம்.''

''நன்றி.''

நீதிமன்றத்தில் காட்டப்பட்ட குப்பியைப் பார்த்த திரு. மேஸ், அதனைத் தான், கிடங்குக்கு வந்திருந்த ஆல்ஃபிரட்டிடம் தான் விற்றதாகச் சொன்னான். அழுத்தமாய் இதே கேள்விகளைக் கேட்டபோது, ஆல்ஃபிரட்டோடு, தனக்குப் பழக்கம் இல்லை என்பதையும் தூரத்தில் ஒரு முறை பார்த்த அனுபவம் மட்டும் தான் உள்ளது என்றும் சொன்னான். அவரோடு இவன் பேசவேயில்லை. மேற்கொண்டு, மேல் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

ஆல்ஃபிரட் அழைக்கப்பட, தான் விஷம் வாங்கவேயில்லை என அவர் முழுக்க மறுத்தார். அவரது மனைவியுடன் சண்டையிட்டதாக சொல்லப்பட்டதையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த வாக்குமூலத்தின் நம்பகத் தன்மைக்கு பல்வேறு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

உயிலில் சாட்சி கையொப்பம் இட்டதற்காக தோட்டக்காரர்கள் விசாரிக்கப்பட்டு முடிந்ததும் நானி அழைக்கப்பட்டார்.

தனது முதலாளியின் மீதான மாறாத விசுவாசம் பொங்கி வழிய, தான் கேட்டது நிச்சயமாக ஜானின் குரலாயிருக்காது என ஆவேசமாய் சொன்னார் நானி. தனது எஜமானியம்மாவின் பிரத்யேக அறைக்குள் அப்போது இருந்தது திரு. ஆல்ஃபிரட்தான் என மாற்றமற்ற முடிவாய் அறிவித்தார். இதைத்தான் எதிர்பார்த்துக் காத்திருந்தது போல ஒரு கீற்று சிரிப்பு ஜானின் முகத்தில் படர்ந்து அடங்கியது. திருமதி மேரி ஜான், தனது சொந்தக் கணவனுக்கு எதிராக சாட்சி சொல்ல அழைக்கப்பட வேண்டாம் என அறிவிக்கப்பட்டது.

இதே விஷயம் குறித்த பல கேள்விகளைக் கேட்ட பிறகு திரு. பிலிப்ஸ் கேட்டார்.

''கடந்த ஜூன் மாதம், பார்க்ஸன்னிலிருந்து திரு. லாரன்ஸுக்கு ஒரு பார்ஸல் வந்திருக்கே... அதுபற்றி ஏதாவது ஞாபகமிருக்கா?''

நானி மறுத்துத் தலையசைத்தார்.

Scanned by CamScanner

''எனக்கு நினைவில்லே ஸார். அப்படி ஏதாவது வந்திருக்கலாம். ஆனால் ஜூன் மாசத்துல கொஞ்ச நாள் லாரன்ஸ் ஐயா ஊர்ல இல்லே.''

''அப்படி அவர் வீட்டில இல்லாத காலத்துல அவர் பெயருக்கு ஒரு பார்ஸல் வந்தா, அதை என்ன செய்வீங்க?''

''அவர் அறையில வெச்சிடுவோம். அல்லது, அவர் எங்கே போயிருக்கிறாரோ அங்கேயே அனுப்பிடுவோம்.''

''நீங்கதான் அனுப்புவீங்களா?''

''இல்லே ஸார். வரவேற்பறையிலேயே வெச்சிடுவேன். இது போன்றவையெல்லாம் செய்யும் எவிலின் ஹோரவோர்ட் கவனிச்சுப்பார்.''

இப்போது எவிலின் அழைக்கப்பட்டு, வழக்கு சம்பந்தப்பட்ட சில அறிமுகக் கேள்விகளுக்குப் பிறகு, அவரிடம் பார்ஸல் பற்றி கேட்கப்பட்டது.

''நினைவில்லை. எத்தனையோ பார்ஸல் வருது... போகுது, முக்கியமா எதுவும் நினைவிலில்லே.''

''திரு. லாரன்ஸ் போயிருந்த வேல்ஸ் பகுதிக்கு அது திருப்பி அனுப்பப்பட்டதா... இல்லே, வெறுமனே அவரோட அறையிலேயே போடப்பட்டு விட்டதானு நினைவில்லையா?''

''அவர் போயிருந்த இடத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டதா நினைவில்லே. அப்படி அனுப்பியிருந்தா நிச்சயம் நினைவிருக்கும்.''

''திரு. லாரன்ஸ் பெயருக்கு ஒரு பார்ஸல் வருது.. அப்புறம் அது எப்படியோ காணாமல் போயிடுது... இப்படி காணாமல் போனது குறித்து நீங்க அவர்கிட்டே சொல்வீங்களா?''

''இல்லே, அப்படி செய்வேன்னு தோணலே. அதை மேற் கொண்டு கவனிக்க யாரோ பொறுப்பா தன் வசம் எடுத்துக்கிட்டுப் போயிட்டாங்கன்னு தான் நினைப்பேன்.''

''எவிலின் ஹோரவோர்ட்... இதோ, இந்தத் துண்டு ப்ரவுன் தாளை நீங்க தான் கண்டெடுத்ததா கேள்விப்பட்டேன்.''

''ஆமாம், நான்தான்.''

''இதை ஏன் தேடி நீங்க போனீங்க?''

''இந்த வழக்கைக் கையாள நியமிக்கப்பட்ட பெல்ஜியன் துப்பறியும் அதிகாரி தான் இதைத் தேடிப் பார்க்கும்படி என்னிடம் சொல்லியிருந்தார்.''

''இதை வெகு சரியா எந்த இடத்திலே நீங்க கண்டெடுத்தீங்க?''

''கைதிக் கூண்டில் நிற்பவருடைய துணி... துணி... அலமாரியின் மே.. மே.. மேலிருந்து.''

''கைதியின் துணி அலமாரியின் மேலிருந்ததா?''

''அ... அ.. அ.. அப்படி தான் நினைக்கிறேன்.''

''நீங்களா பார்த்து தானே இதை எடுத்தீங்க?''

''ஆமாம்.''

''அப்போ நீங்க எங்கேயிருந்து எடுத்தீங்கன்னு உங்களுக்கு நிச்சயமா தெரியணுமே... அப்புறம் என்ன திக்கல்?''

''ஆமாம்'' என்றார் சட்டென்று. ''அது கைதியின் துணி அலமாரியில் மேலேதான் இருந்தது.''

''அப்படி...!''

பார்க்ஸன்'னின் பணியாள் விசாரிக்கப்பட்டான். ஜூன் 20 அன்று. எல். கேவண்டிஷ் என்ற பெயருக்கு, அவர் கேட்டு எழுதியதன் பேரில், ஒரு கறுப்பு தாடி அனுப்பப்பட்டதாய் சொன்னான். தபால் மூலம் கேட்கப்பட்டிருந்ததாய் சொன்னான். வந்தக் கடிதம் காட்டப்படவில்லை. எல்லா பட்டுவாடாக்களையும் ஒரு பெரிய நோட்டில் பதிந்து வைத்துள்ளனர். கறுப்பு தாடியை, 'எல். கேவண்டிஷ், ஸ்டைல்ஸ் கோர்ட், எஸ்ஸெக்ஸ்' என்ற முகவரிக்கு அனுப்பியிருந்தார்.

இப்போது ஹெவி - வெதர் பொங்கிக் கொண்டு எழுந்தார், கேட்டார்:

''எங்கிருந்து அந்தக் கடிதம் வந்தது?''

''ஸ்டைல்ஸ் எஸ்டேட்டிலிருந்து.''

''அதாவது நீங்க பார்ஸலை அனுப்பியிருந்த அதே முகவரியிலிருந்து?''

''ஆமாம்.''

''சரி, அந்தக் கடிதமும் அங்கிருந்து தான் வந்திருந்ததா?''

''ஆமாம்.''

இரையின் மீது பாயும் மிருகமாய் பாய்ந்தார் ஹெவி - வெதர்:

''அது எப்படி உனக்குத் தெரியும்?''

''எ..எ.. எனக்குப் புரியலியே!''

''அந்தக் கடிதம் ஸ்டைல்ஸிலிருந்து தான் வந்ததுனு உனக்கு எப்படி தெரியும்னு கேட்டேன். இப்பப் புரியுதா? நீ தபால் முத்திரையை உறையில பார்த்தியா?''

Scanned by CamScanner

''இல்லை..ஆ.. ஆ.. னா..''

''ஆஹ்! நீ தபால் முத்திரையைப் *பார்க்கலே!* ஆனாலும் அப்படியே உண்மையைக் கக்கற மாதிரி ஸ்டைல்ஸிலிருந்துதான் வந்ததுனு நிச்சயப்படுத்தறே! கொன்னுடுவேன்! அது வேற ஊர்லிருந்து கூட வந்திருக்கலாமில்லே? என்ன முழிக்கறே?''

''ஆ...மா.....ம்.....''

''சொல்லப் போனா, ஸ்டைல்ஸ் எனும் எஸ்டேட் முத்திரைத் தாள்ல எழுதப்பட்டிருந்தாலும்கூட, அது வேற ஒரு பிரதேசத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கலாம். உதாரணத்திற்கு, வேல்ஸ் பகுதியிலிருந்து. என்ன?''

''ஆ...மா...ம்....''

''சொல்லு... எல்லாத்துக்கும் ஆமாம், ஆமாம்'' என்ற ஹெவி -வெதர் தனது விசாரணையை முடித்துக் கொண்டார்.

அடுத்து எலிஸபெத் அழைக்கப்பட்டார். இவர், ஸ்டைல்ஸின் மற்றொரு பணியாள். தான் படுக்கப் போன பிறகுதான், திரு. ஆல்ஃபிரட் கேட்டுக் கொண்டதை மறந்துவிட்டு, நிலைக் கதவினைத் தாளிட்டு விட்டதையே தான் உணர்ந்ததாய் சொன்னார். செய்த தவறினை நிவர்த்தி செய்வதற்காக கீழிறங்கி வந்ததாக அவர் சொன்னார். மேற்குப் பக்கத்து அறைகளிலிருந்த பகுதியில் ஏதோ அரவம் கேட்பதால் சற்றே எட்டிப் பார்த்தபோது, அங்கு திரு. ஜான், அவரது தாயாரின் அறைக் கதவினைத் தட்டிக் கொண்டு நின்றதைக் கவனித்ததாகச் சொன்னாள்.

★ ★ ★ ★

**மா**லையில் வீட்டுக்குத் திரும்பியிருந்தோம். போலீஸ் தரப்பு வக்கீல்மீது கடும் கோபத்தை வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தார் திருமதி மேரி.

''மிருகம், மிருகம்! என்னோட ஜானைச் சுற்றி எப்படியாப்பட்ட கொடூர வலையை அவன் பின்னியிருக்கான். ஒவ்வொரு சின்னஞ்சிறு சாட்சியையெல்லாம் கூட எப்படித் திருகி, அந்த ஒவ்வொன்றும் ஜானுக்கு எதிரா ஆகும்படி செஞ்சான்! ஊஃப்!''

''விடுங்க'' என்றேன் ஆதரவாய். ''போலீஸ் தரப்புல, நாளைக்கு எல்லாமும் அப்படியே திரும்பும் பாருங்க.''

''அப்படியே நடக்கட்டும்'' என்றார் பூரணமாக. பிறகு திடுமென குரலைத் தாழ்த்திக் கொண்டு, ''ஹேஸ்டிங்ஸ்'' என்று அழைத்த

மேரி, ''அது லாரன்ஸாயிருக்கும்னு ... நீங்க நினைக்கலே இல்லே... ஓ அது லாரன்ஸ் இல்லே... கிடையாது.''

இது ஒரு பக்கம் எனக்குப் புதிராய் தோன்ற, மறுமுறை நான் பொய்ரெட்டோடு தனியாய் இருக்கும் வாய்ப்புக் கிட்டியபோது, இந்த ஹெவி-வெதர் எதன் வாலைப் பிடிப்பதற்காக இப்படி எல்லோரையும் விரட்டிக் கொண்டிருக்கிறார் எனக் கேட்டேன்.

''ஆஹ்'' என்று பாராட்டுதலாய்ச் சொன்னான் அவன். ''அவர் மகா புத்திசாலி... ஹெவி-வெதர்!''

''அதை விடு. அவர் லாரன்ஸ் குற்றவாளினு நினைக்கிறாரா?'' என கேட்டேன்.

''அவர் எதையும் நம்புவதாகவோ... இல்லே எதைப் பற்றியாவது கவலைப்படுவதாகவோ தெரியலே. மரண விசாரணை செய்தாங்க இல்லியா... அந்த வக்கீல்களுக்கிடையே ஒரு குழப்பத்தை உண்டு பண்ண முனைகிறார். எந்த மகன் செய்திருப்பான் என்பதுல பலதரப்பட்ட புதுப் புதுக் குழப்பங்களை அவர்களுக்குள்ளே உண்டாக்குவதற்காக இப்படி செய்கிறார்னு தோணுது. ஜானுக்கு எதிரா இருக்கிற அளவுக்கு லாரன்ஸுக்கு எதிராகவும் சாட்சியங்கள் இருக்கு என்பதை அறிய, அவர் பிரம்மப்பிரயத்தனம் பண்ணிக் கிட்டிருக்கார். இதுல வெற்றியடைவாரா...? எனக்கு அப்படி தோணலே!''

மறுபடியும் போலீஸ் விசாரணை துவங்கியபோது இன்ஸ் பெக்டர் ஜேப் அழைக்கப்பட்டார். மிகச் சுருக்கமாகவும் நீட்டப்படாமலும் சாட்சி தந்தார் அவர். முதலில் கிடைத்த சாட்சிகளைக் குறிப்பிட்டபடி தொடர்ந்தார்:

''கிடைத்த தகவல்களின் அடிப்படையில், நானும் சூப்பரின் டெண்டெண்ட் சாம்ஸனும், குற்றம் சாட்டப்பட்டுள்ள ஜானின் அறையை சோதனையிட்டோம். அவர் அப்போது வீட்டிலில்லை. அவருடைய அலமாரியில், சில துணிமணிகளுக்கு கீழே நாங்கள் கண்டெடுத்தவை 1. திரு. ஆல்ஃபிரட் அணிந்திருப்பது போன்றே தோன்றும், தங்க முலாம் பூசப்பட்ட ஒரு மூக்குக் கண்ணாடி. (இது காட்டப்பட்டது) 2. இந்தக் குப்பி.''

அந்தக் குப்பி, ஏற்கனவே மருந்துக் கடைக்காரனால் அடையாளம் காணப்பட்டு விட்ட ஒன்றுதான். சிறிய பாட்டில். நீல நிறம். சில பொடிப் பொடி பவுடர் துகள்கள் அதனுள் இருந்தன. சுற்றிவர,

Scanned by CamScanner

*'ஸ்டிரிச்நைன் ஹைட்ரோ க்ளோரைட் - விஷம்'* என்று ஒட்டப் பட்டிருந்தது.

போலீஸ் விசாரணை நீண்டுக் கொண்டே போய்க் கொண்டிருக் கையில், ஸ்காட்லாண்ட் துப்பறியும் அதிகாரிகளால் மற்றுமொரு புத்தம் புது சாட்சி கண்டுபிடிக்கப்பட்டது. அது ஒரு புது மை யுறிஞ்சும் காகிதம் - அதாவது ப்ளாட்டிங் பேப்பர். அது, திருமதி எமிலியின் காசோலைப் புத்தகத்தினுள்ளிருந்து கைப்பற்றப் பட்டிருந்தது. தலைகீழாய் அதில் பதிந்திருந்த வாசகங்களை அப்படியே கண்ணாடியில் காண்பித்துப் படித்தபோது பின்வரும் வார்த்தைகள் மட்டும் விளங்கின:

''.... என்னிடம் இருக்கும் அனைத்தையும் whatever I possessed... சொத்து பணம் ஆகியன அனைத்தையும் என் கணவருக்கே விட்டு வைக்கிறேன்...''

அழிக்கப்பட்ட உயில் உயிரிழந்த பெண்மணியின் கணவன் பெயரில் தான் அத்தனை சொத்துப் பத்துக்களையும் விட்டு வைக்கிறது என்பதை, எந்தக் குறுக்குக் கேள்விகளுக்கும் இடங் கொடுக்காமல் கிடைத்த இப்புது சாட்சி எல்லோர் முன்னமும் வைத்தது. கனப்பிலிருந்து எடுக்கப்பட்ட கிழிந்த ஒரு துண்டு காகிதத்தையும் போலீஸ் விசாரணையில் சமர்ப்பித்தார் ஜேப். இதுவும், மேலும், மேல் அறையிலிருந்து அகப்பட்டிருந்த தாடியும் சேர்ந்து, ஜேப்பின் சாட்சிகளாயின.

இந்நிலையில், ஹெவி- வெதரின் குறுக்கு விசாரணை ஆரம்பித்தப் பாடாயில்லை. பிறகு ஆரம்பித்தார், தடபுடலாய்:

''கைதியின் அறையை நீங்க தோண்டியது எந்தக் கிழமையன்று?''

''செவ்வாய்க்கிழமை, ஜூலை, 24.''

''சரியா மரணம் சம்பவித்து ஒரு வாரம் கழித்து?''

''ஆமாம்.''

''இந்த ரெண்டு சாமான்களையும் பீரோ தட்டுகளில் கண் டெடுத்ததா சொல்றீங்க. அந்தத் தட்டுகள் பூட்டப்படாமலா இருந்தன?''

''ஆமாம்.''

''ஒரு கொலையை செஞ்சவன், அதற்குண்டான சாட்சிகளை, இப்படி ஒரு பூட்டாத மேஜை தட்டுல திறந்தது திறந்தபடி போட்டு வைப்பது, இயலாத விஷயம்னு... உங்க மண்டைக்குத் தோணவே இல்லையா?''

Scanned by CamScanner

''அவன் அந்த ரெண்டுத்தையும் அவசரத்துல அதுக்குள்ளே போட்டுத் திணிச்சிருக்கலாம்.''

''ஆனா இப்போதான் நீங்க கொலை நடந்து ஒரு வாரம் கழிச்சுதான் அவற்றைக் கண்டுபிடிச்சதா சொன்னீங்க. அப்படினா, இவற்றை அமுக்கி யார் கண்ணுக்கும் தெரியாம அழிச்சிட, அவனுக்கு ஏகமா நேரமிருந்திருக்கே!''

''இருக்கலாம்.''

''இதுல 'இருக்கலாம்' என்பதற்கு இடம் கிடையாது கண்ணு! இந்த ரெண்டு சமாச்சாரங்களையும் கையகப்படுத்தி அழிக்க அவனுக்கு அவகாசம் இருந்ததா இல்லையா?''

''இருந்தது.''

''ஏதோ துணிமணிகளுக்குள் கீழே இதைப் பதுக்கி வெச்சிருந் ததா சொல்றீங்களே... அந்தத் துணிகள், கனமானவையா, லேசானவையா?''

''கனமானவை.''

''அப்படினா அவை பனிக்காலத்துல போட்டுக் கொள்ளும் உடை வகை. அடிக்கிற வெயிலுக்கு கைதி அந்த தட்டுப்பக்கமா போறதுக்கு எந்த வாய்ப்பும் தட்டுப்படலே.''

''அப்படி சொல்லலாம்.''

''இருக்கலாம்... சொல்லலாம்! அந்த 'லாம்' 'லாம்'னு பதில் சொல்லாம முற்றுப்புள்ளி வெச்சு உங்களுக்கு பதில் சொல்லத் தெரியாதா?! இந்தக் கைதி, வியர்த்து விறுவிறுக்கும் இந்தக் கோடை காலத்துல, குளிர் காலத்து உடைகள் வைக்கப்பட்டிருக்கும் ஒரு மேஜை தட்டினை நோக்கிப் போயிருப்பாரா, மாட்டாரா?''

''மாட்டார்.''

''அப்படி! அப்படினா, நாம இப்போப் பேசிக்கிட்டிருக்கிற சாமான்கள், அந்தத் தட்டுல இருக்கிற தகவலே கைதிக்கு வராத அளவுக்கு, வேற யாரோ ஒரு மூன்றாவது மனுஷன் மூலமா அங்கே கொண்டு வந்து பதுக்கப்பட்டிருக்காதா?''

''அப்படித் தோணலேனு தான் சொல்வேன்.''

''ஆரம்பிச்சாச்சு... 'லாம்!' ஹலோ, இது சாத்தியம்தான், இல்லையா?''

''ஆமாம்.''

''அவ்வளவுதான்.''

Scanned by CamScanner

மேலும் சாட்சிகள் தொடர்ந்தன. ஜூலை இறுதியில் பணத் தட்டுப்பாட்டின் உச்சத்தில் கைதி இருந்ததற்கான சாட்சிகள் தரப்பட்டன. திருமதி ரமோலாவுடன் கைதி ஜானுக்கு இருந்த சகவாசமும் விவரிக்கப்பட்டது. எனக்கு இப்போது மேரி மீது பெரும் பரிதாபம் கிடைத்தது. அவரைப் போன்ற கர்வம் தலை விரித்தாடும் பெண்ணால் எப்படி இதைத் தாங்க முடியுமோ! எவிலின் ஹோவோர்ட் தனது சாட்சிகளைத் தருவதில் சரியாக இருந்த போதிலும், ஆல்ஃபிரட்டின் மீது அவருக்குள் கனன்றுக் கொண்டிருந்த வெறுப்பு நெருப்பு, அவரையே காரண கர்த்தாவாக முன் நிறுத்திப் பேச வைத்தது.

பிறகு கூண்டில் லாரன்ஸ் ஏற்றப்பட்டார். மிக சன்னமான குரலில், பிலிப்ஸ் கேட்ட ஒரு கேள்விக்கு, பார்க்ஸன் நிறுவனத்திடமிருந்து ஜூன் மாதத்தில் தான் எதைக் கேட்டும் கடிதம் எழுதவில்லை என்றார். ஜூன் 29 அன்று இங்கு இல்லவே இல்லை... வேல்ஸில் இருந்தார்.

உடனேயே ஹெவி - வெதரின் முகம், பிதுங்கிக் கொண்டு முன் வந்துவிட்டது!

''ஜூன் 29 அன்று ஒரு கறுப்பு தாடி கேட்டு நீங்கள் பார்க்ஸன் நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளவில்லை என்கிறீர்களா?''

''அப்படித்தான்.''

''ஆஹா! போகட்டும். உங்க சகோதரருக்கு ஏதாவது எதிர்பாராம நடக்கிற சமயத்துல, யார் கைக்கு ஸ்டைல்ஸ் எஸ்டேட்ஸ் போகும்?''

ஏற்கனவே வெளிறிப் போயிருந்த லாரன்ஸ் முகத்தில், கேட்கப்பட்ட கேள்வியின் கொடூர நோக்கம், அலைகளை உண்டு பண்ணியது. நீதிபதி இந்தக் கேள்வி தொடர்பற்று இப்போது எதற்கு என முணுமுணுக்க... கூண்டிலிருந்த சாட்சி, கோபமாய் கண்களை அகலமாக்கிக் கொண்டு முன் வளைந்து நின்றார்.

ஹெவி - வெதர் சாட்சியின் கோபத்தை, சாவகாசமாக புறங்கையால் தள்ளினார்.

''கேள்விக்குப் பதில்?''

''எனக்கு வரும்னு தான் தோணுது'' என்று அடக்கமாய் சொன்னார் லாரன்ஸ்.

'''தோணுது'னா என்ன? உங்க சகோதரருக்கு பசங்க கிடையாது. உங்களுக்குத்தான் வரும்... வராது?''



Scanned by CamScanner

''ஆமாம்.''

''ஆங்.. அப்படி!'' என்றார் ஹெவி-வெதர் - கோபமான திருப்தியோடு. பிறகு ''நல்ல பெரிய கட்டா பணம் கூட உங்க கைக்கு வரும்... வராது?'' என்றார்.

''தயவு செய்து ஹெவி - வெதர்'' என்று மறுப்புக் குரல் தந்த நீதிபதி, ''இந்தக் கேள்விகள் எவையும் தொடர்பற்றவை'' என்றார்.

அவருக்கு ஒரு பவ்ய வணக்கத்தைத் தெரிவித்து விட்டு, தனது அம்பு எய்தும் வேலையைத் தொடரலானார்:

''செவ்வாய், ஜூலை 17 அன்று, யாரோ ஒருத்தரைக் கூட்டிக்கிட்டு நீங்க டேட் மினிஸ்டர்ல இருக்கிற செஞ்சிலுவை மருத்துவமனைக்கு போயிருக்கிறதா தகவல் இருக்கு!''

''ஆமாம்..''

''அப்போ, அங்கே, நீங்க தனியா இருக்கிற சந்தர்ப்பம் கிடைச்ச ஓரிரு நொடிகளின் போது, விஷங்கள் வைக்கப்பட்டிருந்த அலமாரியைத் திறந்து, சில பாட்டில்களை எடுத்துப் பார்த்தீங்களா?''

''நா.. நா.. நான் செஞ்சிருக்கலாம்.''

''சரியான 'லாம்' பரம்பரைப்பா! நீங்க அப்படிப் பண்ணினீங்கன்னே நான் சொல்றேன்!''

''ஆமாம்.''

''அப்படி!'' என்று தனக்குத்தானே பெருமையாய் குறிப்பிட்டுக் கொண்டவர், தாமதமின்றி, உடனடியாகவே அடுத்த கேள்வியைக் குண்டாய்ப் பாய்ச்சினார் அவர்.

''ஒரு பாட்டிலை ரொம்பக் குறிப்பா எடுத்துப் பார்த்தீங்களா?''

''இல்லை. அப்படி செஞ்சதா எனக்குத் தெரியலே.''

''ஜாக்கிரதை, திரு. எல். கேவண்டிஷ், ஒரு பாட்டில்... முழுவதும் ஸ்டிரிச்நைன் ஹைட்ரோ - க்ளோரைட் அடங்கியிருந்த பாட்டில்... அது பற்றி நான் சொல்லிக்கிட்டிருக்கிறேன்.''

லாரன்ஸ் சட்டென முழுக்க வெளிறி மூர்ச்சையாகும்படி ஆனார்.

''இ.. ல்.. லை! அதை நான் தொடலேங்கிறது நிச்சயம்.''

''அப்போ, சந்தேகத்துக்கிடமில்லாம கண்டுபிடிக்கிற அளவுக்கு உங்களுடைய விரல் பதிவுகளை அதுல விட்டு வெச்சிருக்கீங்களே... இதுக்கு என்ன கணக்குத் தரப் போறீங்க?''

காலை வாரிவிட்டுத் தள்ளும் அணுகுமுறை மிக சக்தி வாய்ந்ததாக இருக்க, லாரன்ஸின் நரம்புகள் செயலிழக்க ஆரம்பித்தன.

Scanned by CamScanner

''நா.. நா.. நான் அந்தப் பாட்டிலை அப்போ எ...டு.. த்..தி.. ரு.. க்... க..ணு..ம்.''

''இப்பவும் 'கணும்' தானா! எடுத்திருக்கீங்க.. ஆமாம்னு சொல்லுங்க. அதுல அடங்கியிருந்த மற்ற வேதிப் பொருட்கள் பற்றி சொல்ல முடியுமா?''

''நிச்சயமா முடியாது.''

''அப்போ எதுக்காக அதைப் போய் எடுத்தீங்க?''

''நான் ஒரு காலத்துல மருத்துவத்துக்காகப் படிச்சேன். அதனால இப்படிப்பட்ட விஷயங்கள்லாம் இயற்கையா என்னை ஈர்த்துடுது.''

''ஆஹ்! ஆக, விஷங்கள் போன்ற விஷயங்களெல்லாம் உங்களை 'இயற்கையா ஈர்த்துடும்' அப்படியா! அந்த உங்களுடைய தாகம் தணிக்கப்படற வரைக்கும் நீங்க அப்படியே நின்னிருக்கீங்க?''

''இது முழுக்க முழுக்க வாய்ப்பின் அடிப்படையில் நடந்த விஷயம். இதுக்குப் பதிலா வேற ஏதாவது அங்கு இருந்திருந்தாலும் அதைத்தான் நான் எடுத்திருப்பேன், ஓ கடவுளே!''

''கண்ணா... இன்னும் பலவும் அங்கே இருந்திருக்குப்பா!''

''ஆமாம்.. ஆமாம்..''

''இதோ பாருங்க.. அந்த முழு மதியமும் நீங்க அங்கே தான் இருந்திருக்கீங்க. ஆனா, அந்தத் தனிமை வயப்பட்ட ஓரிரு நொடிகளில்தான் - நல்லா கவனியுங்க, நீங்க தனிமையாயிருந்த அந்த ஓரிரு நொடிகள்ல தான்... ஸ்டிரிச்நைனின் ஹைட்ரோ கார்பன் மீது உங்களுக்குள்ள இயற்கையான ஈடுபாட்டை நீங்க செயல்படுத்தியிருக்கீங்க, அப்படித்தானே?''

பரிதாபமாய் தடுமாறினார் லாரன்ஸ்.

''நா... நா.... நா.... நா....''

மிக திருப்தியடைந்து விட்ட விசாரணை வக்கீலாய் 'பாவம்' காட்டிய ஹெவி- வெதர், ''இதற்கு மேல உங்களைக் கேட்க எனக்கு எதுவுமில்லை, திரு. எல். கேவண்டிஷ்'' என்றார்.

இந்தக் குறுக்கு விசாரணை, நீதிமன்றத்தில் பெரும் சலசலப்பை உண்டு பண்ணிற்று. அங்குக் கூடியிருந்த நாகரீக போக்கு கொண்ட பெண்கள் அனைவரின் கொண்டைகளும் ஒரு புள்ளிக்குள் குவிந்து முணுமுணுத்தன! 'இப்படி சத்தம் வந்தா உள்ளேயிருக்கும் அத்தனை பேரையும் வெளியே தூக்கிப்போட வேண்டி வரும்' என நீதிபதி கோபமாய் மிரட்டும் அளவுக்கு முணுமுணுப்புகள் பெருகின.

Scanned by CamScanner

மேலும் சில சாட்சிகளும் வந்தன. மருந்துக் கடையின் பதிவேட்டில் விஷம் பெற்றதற்காக ஆல்ஃபிரட் என போடப் பட்டிருந்த கையொப்பத்தை சரிபார்க்க, கையெழுத்து நிபுணர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் ஒரு மனதாக அது ஆல்ஃபிரட்டின் கையொப்பம் கிடையாது என அழுத்தமாய்க் கூறிவிட்டனர். மேலும், அவர்களுடைய கருத்தாய், கைதியாய் இருப்பவர் செய்திருக்கும் பித்தலாட்ட வேலையாக இது இருக்கலாம் என்றும் சொன்னார்கள். இக்கருத்தின் மீது குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, நாசூக்காக கைதி செய்திருக்கவல்ல பொய்க் கையொப்ப மோசடி இது என தெரிவித்தனர்.

இவையெல்லாம் ஆன பிறகு, திரு. ஹெவி - வெதர், எதிர்தரப்பு வாதங்களை, மிக நீளமாகப் பேசி வளர்க்காமல் சுருக்கமாய் முன் வைத்து முடித்தார். ஆனால், இது அவருக்கே உரிய சக்தி வாய்ந்த தடபுடலான பேச்சு சாதுர்யத்தால், மிக முக்கியமான ஒன்று போல அளிக்கப்பட்டது. மிகக் குறைவாகவும், முக்கியமில்லாமலும் தெரியும் சொற்பமான சாட்சிகளின் மேல், எந்த ஒரு கொலை வழக்கும் நின்று நிலைத்ததாய் தனது நெடிய அனுபவத்தில் கண்டதே இல்லை என்று குறிப்பிட்டார். சமய சந்தர்ப்பங்களை வைத்து, ஒரு கொலையின் போக்கு மற்றும் யார் செய்திருப்பார் என்பதுவரை கூட நம்மால் கண்டுபிடித்துவிட முடியும். ஆனாலும் சாட்சிகள் கனமாய் அமையாத வரை, நாம் கண்டுபிடித்து உள்ளங்கையில் வைத்திருக்கும் கொலைகாரனை, நீதிமன்றத்தின் பிடியில் ஒப்படைத்து நிரூபிக்க முடியாது என்று விளக்கினார். பின், இவ்விரு அறிமுக வாக்கியங்களின் அடிப்படையில் திருமிகு எமிலியின் கொலை வழக்கினை அணுகினார்:

''இந்த வழக்கைப் பொறுத்தமட்டில், ஸ்டிரிச்நைனைக் கைதியின் அறையில் கண்டெடுத்ததாய் சொல்லி அவரைக் கொண்டு வந்து இங்கு நிறுத்தியிருப்பது மிக வேடிக்கையான ஒரு சமாச்சாரம். போலீஸ் தரப்பு சொல்லியது போல், அந்த மேஜையின் தட்டு பூட்டப்படாமல் திறந்தே இருந்திருக்கின்றது. கைதி தான் விஷத்தை அங்கு கொண்டு போய் பதுக்கி வைத்திருக்கிறார் என்பதை நிரூபிக்க சாட்சிகள் இல்லை என்றும் சொல்கிறார்கள். ஆக, குற்றத்தைக் கைதியின் தலையில் போட்டு விட்டுத் தப்பி விடுவதற்காக, அவர்மீது நயவஞ்சக பொறாமை கொண்ட யாரோ ஒருவன்

எடுத்திருக்கும் துணிகர முயற்சிதான் இது. பார்க்கின்ஸன் நிறுவனத்திடமிருந்து கைதிதான் அந்தக் கறுப்பு தாடியைக் கேட்டு எழுதி பெற்றுள்ளார் என்ற போலீஸ் தரப்புக் குற்றச்சாட்டை நிரூபிக்கவும், கூர்மையான எந்த சாட்சியையும் போலீஸால் சமர்ப்பிக்க இயலவில்லை. கைதிக்கும் அவருடைய வளர்ப்புத் தாயாருக்கும் இடையே நடந்த வாக்குவாதம் பற்றிப் பேச முழு அனுமதி அளிக்கப்பட்டாலும், இதுவும் மேலும் கைதியின் பணமுடையும், போதும் எனும் அளவுக்கு ஏகமாய் மிகைப்படுத்திப் பேசப்பட்டுள்ளன.

''திரு. ஜேப்பின் பிரபல வக்கீல் (இப்போது திரு. பிலிப்ஸின் பக்கமாய் மிக விட்டேற்றியாகத் திரும்பிக் காட்டினார்), கைதிக் கூண்டில் நிற்கும் ஜான் உண்மையிலேயே குற்றமற்றவராக இருந்தால், மரண விசாரணையின் போது அவராகவே முன்வந்து வாக்குவாதச் சண்டையில் திருமதி எமிலியோடு ஈடுபட்டது தான்தான் என்றும், அது திரு. ஆல்ஃபிரட் இல்லை என்றும் சொல்லியிருப்பாரே என்று குறிப்பிட்டார். வேண்டுமென்றே உண்மைகள் திரித்து அல்லது மறைத்துச் சொல்லப்படுகின்றன என்பதே அவரது எண்ணம். அங்கு நிஜத்தில் என்ன நடந்தது என்பது இதுதான். கேளுங்கள். கைதி, அந்த செவ்வாயன்று மாலைப் பொழுதில், நேரம் கடந்து வீட்டுக்குள் நுழையும் போது, அவரிடம் திரு. ஆல்ஃபிரட்டுக்கும் மறைந்த எமிலிக்கும் இடையே கடும் மோதல் நடந்தது என்று சர்வ நிச்சயமாய் அறிவிக்கப்படுகின்றது. அந்தச் சமயத்தில், தனது குரலைத் தான் ஆல்ஃபிரட்டின் குரல் என தப்பாக இவர்கள் புரிந்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு சந்தேகமே கைதியின் மண்டைக்குள் எழவில்லை. அவரது வளர்ப்புத் தாயார் அன்று இரு வேறு சண்டைகளில் ஈடுபட்டுள்ளார் என குழப்பமின்றி முடிவெடுத்து விடுகிறார் இவர்.

''ஜூலை 16 அன்று, கூண்டில் நிற்கும் கைதி, கிராமத்திலுள்ள மருந்துக் கிடங்குக்கு, திரு. ஆல்ஃபிரட் போல மாறுவேடமிட்டுப் போனதாய், போலீஸ் தரப்பில் வற்புறுத்திச் சொல்லப்பட்டது. மாறாக, அந்தச் சமயத்தில், கைதி ஜான், கிராமத்தின் ஒதுக்குப் புறமான தனிமைப் பிரதேசமான 'ஸ்பின்னி' எனும் இடத்தில் இருந்தார். கேட்பவற்றைக் கொடுக்கா விட்டால், அனைத்து ரகசியங்களையும் அவரது மனைவியிடம் சொல்லி விடுவதாய்

வந்திருந்த ஒரு பெயரிடப்படாத ப்ளாக் மெயில் குறிப்பின் பேரில், இந்தக் கைதி பயந்தடித்துக் கொண்டு அங்கு போயிருக்கிறார். அரைமணி நேரத்திற்கும் மேல் அங்கு கிலியுடன் காத்திருந்து விட்டு, பிறகு யாரும் வராததால் திரும்பி வந்திருக்கிறார். துரதிர்ஷ்டவசமாக, காத்திருந்த இடத்திலோ அல்லது வரும் வழியிலோ, கைதி ஜான் வேறு ஒருவரையும் சந்தித்திருக்கவில்லை... சாட்சிக்குக் கூப்பிட்டு நிறுத்த! ஆனால் அதிர்ஷ்டவசமாக அந்தக் குறிப்பினை ஜான் வைத்திருக்கிறார். அது சாட்சியாக இங்கு தரப்படுகின்றது.

''இப்போது, சிதைக்கப்பட்ட உயிலுக்கு வருவோம்... கைதி, ஏற்கனவே நீதிமன்ற குழுமத்தில் பயிற்சி எடுத்து தொழில் செய்தவர்தான். ஆகவே, ஒரு வருடத்திற்கு முன்னால் இவரின் பெயருக்கு சாதகமாக எழுதப்பட்ட உயிலானது, இவருடைய தாயாரின் மறுமணம் காரணமாக ரத்தாகி விடுகிறது என்ற சட்ட நுணுக்கம் இவருக்கு மிக நன்றாகவே தெரியும். என்னால் உயில் கொளுத்தப்பட்டதன் சம்பந்தமாக பல சாட்சிகளை அழைத்து நிறுத்த முடியும். நிறுத்துவேன். அப்போது இவ்வழக்கில் புதுப்புது கோணங்கள் விரிவதை இந்த நீதிமன்றம் பார்க்கத்தான் போகின்றது!

''நிறைவாக ஒரு முக்கிய குறிப்பு. கைதி ஜான் தவிர, இன்னும் ஏராளமானவர்கள்மீது கூட பலமான பாதக சாட்சிகள் இருக்கின்றன. இதனை நீதிபதி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக திரு. லாரன்ஸ் கேவண்டிஷ். திரு. லாரன்ஸுக்கு எதிராக உள்ள சாட்சிகள், திரு. ஜான் மீது கூறப்பட்டுள்ள சாட்சிகளைவிட மிக அதிகம்.. மிக பலம் வாய்ந்தவை... என்பதை இங்கு கூற பிரியப்படுகிறேன்.

''இனி நான் கைதியுடன் பேசப் போகிறேன்...''

ஹெவி - வெதர் தனது எதிர்தரப்பு வாதத்தினை நீதிமன்றத்துக்கு முன் இவ்வாறு சமர்ப்பித்து முடித்ததும் வந்த ஜான், தனது தரப்பு சாட்சியத்தை மிக அழகாக அளித்தார். ஹெவி - வெதரின் பயிற்சியால், தன் பக்கத்துக் கதையை மிக நன்றாகவும் நம்பகத் தன்மை மிகுந்தும் சொன்னார் அவர். அவருக்குப் பெயர் குறிப்பிடப் படாமல் வந்த அந்தக் குறிப்பு நீதிபதியிடம் தரப்பட்டது. அதனை அவர் மரண விசாரணை செய்த வக்கீல் குழுவிடம் அனுப்பினார். தான் பெரும் பணமுடையில் இருப்பதையும், மேலும், தனது தாயாருடன் அவருக்கு நிகழ்ந்த வாக்குவாதத்தின் உண்மையையும், சற்றும் தாமதமின்றி மளமளவென ஜான் ஒப்புக் கொண்டது, அவரது

Scanned by CamScanner

சாட்சியத்துக்கு அங்கு தனி மரியாதையை உண்டுபண்ணித் தந்தன. நிறைவாக, கூண்டிலிருந்து இறங்குமுன், சற்று தாமதித்து, நிதானித்து பின் சொன்னார்:

''ஒரு விஷயத்தை இந்த நீதிமன்றத்துக்கு நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மறைமுகமாக உணர்த்தி கொஞ்சம் கொஞ்சமாக என் சகோதரரை உள்ளுக்கிழுத்து திரு. ஹெவி - வெதர் பேசிய வார்த்தைகளை நான் அடி ஆழம் வரை மறுத்து ஒதுக்குகிறேன். எனக்கு நன்றாகத் தெரியும்... என்னைவிட அதிக அளவுக்கு இந்தக் கொலையோடு நிச்சயமாய் அவன் சம்பந்தப்பட்டிருக்க முடியாது, ஆமாம்.''

ஹெவி - வெதர் இதற்கு வெறுமனே சிரித்தார். கூடவே, ஜான் பேசிய வார்த்தைகள் நீதிமன்ற அதிகாரிகளிடம் சாதகமான ஒரு நிலையை உண்டு பண்ணிவிட்டதைத் தனது கூரிய கண்களால் கவனித்து அள்ளிக் கொண்டார்!

பிறகு குறுக்கு விசாரணை துவங்கியது.

''மரண விசாரணை நடந்தபோது, உங்கக் குரலைத்தான் திரு. ஆல்ஃபிரட் குரலா நினைச்சுக்கிட்டு சாட்சிகள் பேசினாங்க என்பது, உங்க மூளைக்கு எட்டவேயில்லைனு நீங்க சொல்றீங்க... இது வேடிக்கையாயில்லே?''

''இல்லை. எனக்கு வேடிக்கையா படலே. எனது அம்மாவுக்கும் திரு. ஆல்ஃபிரட்டுக்கும் இடையே சண்டை நடந்ததுன்னு என்னிடம் சொன்னாங்க. அதுல இப்படி ஓர் அர்த்தம் இருக்குன்னு எனக்குத் தோணவேயில்ல.''

''நானி, தன் காதுல விழுந்ததா குறிப்பிட்ட சில வாக்குவாத வார்த்தைகளைக் கேட்ட பிறகுமா...? நானி சொன்னவுடனேயே அவை நீங்க பேசினவை தானா இல்லையானு தெரிஞ்சிருக்குமே...? உங்களால பிரிச்சு அறிய முடியலே?''

''என்னால முடியலே.''

''உங்க ஞாபக சக்தி அசாதாரணக் குறைச்சலா இருக்கு!''

''அப்படியில்லை. நாங்க ரெண்டு பேருமே கோவத்துல இருந்தோம். அப்போ நான் என்ன நினைச்சிருந்தேனோ அதைவிட அதிகமாகவே வார்த்தையில கொட்டிட்டதா நினைக்கிறேன். எங்க அம்மா சொன்ன வார்த்தைகளுக்கு நான் மிகக் கம்மியா தான் காது கொடுத்தேன்.''

Scanned by CamScanner

இப்போது திரு. பிலிப்ஸ் இழுத்த உள் மூச்சு, அவருடைய நோண்டித் துருவும் திறமைக்கு ஒரு முழக்கமாய் இருந்தது. கையிலிருந்து குறிப்பு பற்றிக் கேட்கத் தாவினார்.

''சரியான சந்தர்ப்பவாதி போல இந்தக் குறிப்பை நீங்க தந்திருக்கீங்க. சொல்லுங்க... இந்தக் கையெழுத்துல உங்களுக்கு எதுவும் பிரபலமா தெரிஞ்சா மாதிரி இல்லையா?''

''எனக்குத் தெரிஞ்சு... இல்லே.''

''இதிலுள்ள கையெழுத்துக்கும் உங்களுடைய சொந்தக் கையெழுத்துக்கும், குறிப்பிட்டு சொல்லும்படியான ஒற்றுமை நிறையவே இருக்கே. வேணும்னே கையெழுத்தின் நிஜப் போக்கை மாற்றி எழுதினா மாதிரி! தெரியலே?''

''இல்லே, அப்படி எதுவும் எனக்குத் தெரியலே.''

''இது உங்க சொந்தக் கையெழுத்து தான்னு சொல்றேன்.''

''இல்லை.''

''நீங்க வேறோர் இடத்துல இருந்தீங்கன்னு ஒரு பொய்ச் செய்தியை ஸ்தாபிப்பதற்காக, ஒரு கற்பனை இடத்தையும், 'மிரட்டல்' எனும் கற்பனைக் கதையையும் நீங்களாவே உருவாக்கிக் கிட்டு, இப்படி ஒரு குறிப்பை நீங்களாகவே எழுதியிருக்கீங்க, ஆமாம்.''

''இல்லை.''

''என்ன நொள்ளை! ஆளரவமற்ற ஒரு காட்டுப் பகுதியில போய் காத்திருந்ததா நீங்க சொல்கிற அதே நேரத்துல, ஸ்டைல்ஸ் கிராமத்தில் இருக்கும் மருத்துவக் கிடங்குக்குப் போய், ஆல்ஃபிரட் எனும் முகமூடிப் பெயரில் நீங்க ஸ்டிரிச்நைன் விஷத்தை வாங்கினது தானே உண்மை?''

''கிடையாது. அது பொய்.''

''திரு. ஆல்ஃபிரட்டின் உடைகளை மாட்டிக்கிட்டு, அவரைப் போலவே ஓர் ஒட்டு தாடியையும் வெச்சுக்கிட்டு, அதை அழகா அவருடையது போலவே தெரியும்படி வெட்டிக்கிட்டு, விஷம் வாங்கியிருக்கீங்க... அதற்கான பதிவேட்டிலும் கையொப்பம் போட்டிருக்கீங்க. ஆமாம், ஆமாம்.''

''இது முழுக்க உண்மையற்ற பேச்சு.''

''அப்படியா! சரி, இப்போ உங்க கையொப்பம்... பதிவேட்டில் இருக்கிற கையொப்பம்... மற்றும் இந்தக் குறிப்பிலே இருக்கிற

Scanned by CamScanner

கையெழுத்து... இம் மூன்றுக்கும் இருக்கும் ஒற்றுமைகளை, நான், நீதிமன்றத்தின் பார்வைக்கே விட்டுடறேன்'' என்ற பிலிப்ஸ், தனது கடமையைச் செவ்வனே செய்துவிட்ட ஒரு நபரின் திருப்தியோடு உட்கார்ந்துக் கொண்டார்.

இதற்குப் பிறகு, நேரம் ஆகிக் கொண்டே போனதால், திங்கட்கிழமைக்கு வழக்கு ஒத்திப் போடப்பட்டது.

கவனித்தேன்... பொய்ரெட், ஆழம் வரை அதைரியமாகியிருந்தான். இப்படிப்பட்ட சமயங்களில் புருவம் குறுக்கி அவனது கண்கள் வெளியே பிதுங்கியிருக்கும். ஆகையால் எனக்குப் புரிந்தது.

''என்னாச்சு பொய்ரெட்?'' - நான் விசாரித்தேன்.

''ஆஹ்... நண்பா... எல்லாமும் தப்பாப் போயிட்டிருக்கு... தப்புத் தப்பாப் போயிட்டிருக்கு.''

அப்படியே விட்டு விட்டேன். ஆனால், நானறியாமலே எனக்குள் சிறு ஆதரவும் விடுதலையும் விளைந்தன. ஜான் விடுதலையாகி விடுவதற்கான அறிகுறிகள் வெளிப்படையாகவே தெரிய ஆரம்பித்தன.

வீட்டுக்குள் நாங்கள் நுழைந்ததுமே, மேரி கொடுக்க விழைந்த கோப்பை டீயை வேண்டாம் என ஒதுக்கி விட்டான் பொய்ரெட்.

''நன்றி மேரி, ஆனா இப்போ எதுவுமே எனக்கு வேண்டாம். நான் என் அறைக்குப் போறேன்.''

நான் அவனைத் தொடர்ந்தேன். இன்னும் முகத்தில் கடுகடுப்பும் கோபமும் நிறைந்திருந்த அவன், நேராக தனது மேஜைக்குச் சென்று அதன் ஒரு தட்டுக்குள்ளிருந்து சீட்டுக் கட்டு ஒன்றினை வெளியே எடுத்தான். பிறகு ஒரு நாற்காலியை இழுத்து மேஜைக்கருகே வரும்படி போட்டுக் கொண்டு, எனக்கு அடக்க முடியாத திகைப்பினை உண்டுபண்ணும் விதமாய், அவனாக தனியே அமர்ந்து பயபக்தியோடு சீட்டுக்களில் வீடு கட்டும் வேலையைத் துவங்கினான்!

கடுங்கோபத்திலிருந்தான். இப்போது போய் நான் குறுக்கே பேசினால், அவ்வளவுதான்! தெரிந்திருந்தும், ஒரு வார்த்தைப் பேச நான் என் தாடைகளை விரித்ததுதான் தாமதம்... ''வேண்டாம்டா ப்ளீஸ்'' என அலறி விட்டான் அவன். ''பேசாதே! நான் மறுபடியும் குழந்தையா ஆகிடலே... இப்படி விளையாட! அதிரும் என் நரம்புகளை நிலைப்படுத்தறேன்... அவ்வளவுதான்! இந்தச் சீட்டு

Scanned by CamScanner

வீடு கட்ட, விரல்களின் நடுங்கா நுட்பம் அவசியம். நடுக்கமற்ற, விரல்களென்றால் நடுக்கமற்ற கவனம்... நடுக்கமற்ற மூளை! இப்படி ஸ்திரப்படுத்த வேண்டிய அளவுக்கான தேவையை இதுவரைக்கும் நான் எப்போதுமே எதிர்பார்த்தவனல்ல!''

''ஆனா இப்போ எதுக்கு? என்ன குழப்பம்?''

ஓங்கிக் குத்திய ஒரு குத்தலின் மூலம், சிரமப்பட்டு அவன் சிறிதாய் தூக்கி நிறுத்தியிருந்த சீட்டு வீட்டினை நகர்த்தினான்.

''இதுதான் காரணம் நண்பா! சீட்டுல ஏழு அடுக்கு வரை துச்சமா எழுப்பிடுவேன்'' - குத்து... ''ஆனா...'' - குத்து... ''இப்போ...'' - குத்து... ''உன்கிட்டே சொன்ன கடைசி இணைப்பை என்னால கண்டே பிடிக்க முடியலையேடா...'' - குத்து!

என்ன சொல்வதென்று எனக்குப் புரியவில்லை. ஆகவே அமைதியாயிருந்தேன். கும், கும்மென்று மேஜையைக் குத்திக் கொண்டேயிருந்தான். ஒரு பக்கம் நிஜமாகவே சிரிப்பும் மறுபக்கம் அவன் சிரமப்படுகிறானே... விடை வந்துவிடக் கூடாதா என்ற பரிதவிப்பும் இருந்தன. பிறகு மறுபடியும் மெதுவாக சீட்டு வீட்டினை எழுப்ப ஆரம்பித்தான்... அப்படி செய்யும் போதே இடையிடையே சின்னச் சின்னதாய் பேசிக் கொண்டு!

''இப்படித்தான்... இப்படியேதான்... ஆங்... இப்படித்தான் கட்டணும்... ஒரு சீட்டு... அப்புறம் இன்னொன்று... கணக்கிட ணும்... கணக்குத் தப்பவே கூடாது... கணக்குத் தப்பினா கவுந்துடும்... கனக் கச்சிதமான சுத்தமான கணக்கு!''

அவன் கைத்திறமையால் ஓரடுக்கு விட்டு மற்றோர் அடுக்காய் சீட்டு வீடு வளர்வதை நான் பார்த்த வண்ணமிருந்தேன். அவன் துளியும் தயங்கவில்லை. நிச்சயமற்று திக்கவில்லை... திணறவில்லை! ஏதோ வசியம் தெரிந்தவன் போல அழகாய் கட்டிய வண்ண மிருந்தான்.

''எத்தனை நடுக்கமற்ற கைகள்!'' வியப்பாய் குறிப்பிட்டேன் நான். ''ஒரே ஒருமுறை மட்டும் தான் உன் கை நடுங்கி நான் கவனித்தேன்'' என்றேன்.

''அது, ஒரே ஒரு முறை மட்டும்தான் நிகழும்... நான் தாளா கோபத்தில் இருக்கும்போது'' - சாந்தமாய் தான் சொன்னான்.

''ஆமாம்... தெரியும்! நீ கோபத்தின் உச்சியிலே இருக்கே. உன்னைப் பார்க்கவே பயமா இருக்குப்பா. உனக்கு ஞாபகமிருக்கா?

Scanned by CamScanner

இதுபோல ஏற்கனவே ஒரு தடவை இதே வழக்குல இப்படி கிலேசமா உன்னை நான் கவனிச்சிருக்கேன். அது... திருமதி எமிலியின் கைப்பெட்டியை யாரோ வலிமையா தள்ளி திறந்திருக்கிற உண்மையை நீ கண்டுபிடிச்சப்போ! நீ கண்ணாடி அலமாரிகிட்டே போய் நின்னுக்கிட்டு... குழப்ப சமயங்கள்ல நீ செய்யற மாதிரி அதிலிருந்த பொருட்களை சன்னமாய் நகர்த்தி... அதிலிருந்த ஓர் இலை கூட உன் கையைக் குலுக்கிக்கிட்டு! அதைப் பார்த்தப்போ...''

ஆனால் நான் திடுமென்று நிறுத்தினேன். தீர்க்கமாய் விளங்கிக் கொள்ள முடியாதபடி, கடும் குரலெடுத்து கத்திக் கொண்டு, தான் கட்டிய சீட்டு வீட்டினை மறுபடியும் அழித்துவிட்டு, கைகளால் கண்களை மூடியபடி முன்னும் பின்னும் பொறுக்க முடியாத துன்பத்தை அனுபவிப்பவன் போல அல்லாடினான்.

''ஓ... பொய்ரெட்? என்னாச்சு...? கடவுளே! என்னைப் பாருடா!'' நான் அவனுக்கு மேல் அவசரமாய் கத்தினேன். ''என்ன விஷயம்டா..? உடம்பு முடியலியா? வழக்கு முடியும்போது முடியட்டும்... விடு! மயக்கம் வருதா என்ன?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே'' என மூச்சு விட்டான் அவன். ''எனக்கு... எனக்கு... ஒரு சிறு ஊகம்!''

''பாழாப் போச்சு!'' - சற்று லகுவாகி நான் குறிப்பிட்டேன். ''உன்னோட வழக்கமான ஒரு சிறு ஊகம்?''

''ஆஹ்... இந்தத் தடவை இந்த ஊகம்... ராட்சஸத்தனமானது! பெரிசு! இதன் முக்கியத்துவத்துல, வியக்கத்தக்க அளவு பிரம்மாண்டமானது! இதை... நீ... நீடா, நீ! என் உயிர் நண்பனான நீ எனக்குத் தந்திருக்கே!''

அப்படியே என்னைக் கையிரண்டில் அள்ளிக் கொண்டான். என் நெஞ்சுக்குள் அமுதம் ஊறும்படி, என் இரு கன்னங்களிலும் கனிவாய் முத்தம் தந்தான். இந்த ஆச்சரியத்திலிருந்து நான் முழுவதுமாய் விடுபடுமுன், அறையை விட்டு வேகமாய் வெளியேறிக் கொண்டிருந்தான்.

அப்போது மேரி உள்ளே நுழைந்துக் கொண்டிருந்தார்.

''திருமிகு பொய்ரெட்டுக்கு என்ன ஆயிற்று? போகும்போது கத்திக்கிட்டே போறாரு ஹேஸ்டிங்ஸ். 'மோட்டார் வண்டிகளை நிறுத்தும் இடம்! தாமதிக்காம, காரை நிறுத்தி வைக்கும் இடத்துக்குப் போக எனக்கு வழி காட்டுங்க மேடம்' - இப்படிக் கத்தினார். நான்

அதுக்குப் பதில் சொல்றதுக்கு முன்னாடி, தெருவுக்கு இல்லே ஓடிட்டாரு! ஆஹ்.. என்ன புயல் வேகம்!''

நானும் இயன்ற அளவுக்கு அவன் போன திசையிலேயே பறந்தேன். மேரி சொன்னது நிஜம்தான். சாலையைக் கிழித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தான் அவன். தானாக என்ன வெல்லாமோ சைகைகளைச் செய்துக் கொண்டு விரைந்துக் கொண்டிருந்தான். ஒன்றும் செய்வதற்கில்லை என்ற 'பாவத்தோடு' மேரி பக்கமாய் திரும்பி நின்றேன்.

''இப்படிப் போற போக்கைப் பார்த்தா... இன்னும் சில நிமிடங்கள்ல... போலீஸ்காரன் பிடிச்சு உள்ளே கொண்டு தள்ளப் போறான், பாருங்க...! அதோ போறான்... சந்துல திரும்பிட்டான்... அவ்ளோதான்... அவனைக் காணலே!''

எங்கள் கண்கள் சந்தித்துக் கொண்டன. உதவ இயலாமல் வெறித்தன.

''என்ன விஷயமா இருக்கும்?''

நான் மறுத்துத் தலையசைத்தேன்.

''எனக்குத் தெரியலே, திருமதி மேரி...! சீட்டால வீடு கட்டிக்கிட்டு இருந்தான். ஏதோ பிரமாதமான எண்ணம் ஒன்று உதிச்சதா சொன்னான். நீங்களே இப்போ பார்த்த மாதிரி, தலை தெறிக்க ஓடிட்டான்.''

''இருக்கட்டும்'' என்ற மேரி, ''ராத்திரி சாப்பாட்டுக் குள்ளேயாவது திரும்பி வராறானு பார்ப்போம்'' என்றார்.

ராத்திரி வந்தது. ராத்திரி சாப்பாடும் வந்தது. ஆனால் பொய்ரெட் திரும்பி வரவில்லை.

Scanned by CamScanner

Mohanpreethi0707.mp@gmail.com

அத்தியாயம் பனிரெண்டு

## அந்தக் கடைசி இணைப்பு

அந்தரத்தில் எங்களனைவரையும் விட்டுவிட்டு பொய்ரெட் காணாமல் போனது, உள்ளூர எல்லோரையும் கலவரத்துக்குள் ளாக்கியது. ஞாயிறு காலைப் பொழுது கரைந்துக் காலியாயிற்று. அவன் அதுவரை திரும்பி வரவில்லை. ஆனால், மூன்று மணியையொட்டி தொடர்ச்சியாகவும், நீண்டும் வாசல் பக்கத்தில் கரபுர என ஒலித்த போலீஸ் காலணி ஓசைகள், எங்களை ஒருசேர ஜன்னல் பக்கத்துக்கு இழுத்துப் போயிற்று. பொய்ரெட் ஒரு காரிலிருந்து இறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. உடன் ஜேப்பும் ஸாம்ஸனும். என் குள்ள நண்பன், முழுக்கவும் மாறிப் போயிருந் தான். திருப்தியடைந்து விட்டதால் விளைந்த மதிப்பு கலந்த சந்தோஷம், அவனிடமிருந்து கதிர் வீச்சாய் வெளியாகிக் கொண்டிருந்தது. அதிகப்படுத்தப்பட்ட மரியாதை கலந்து அவன் திருமதி மேரிக்கு வந்தனம் தெரிவித்துக் கொண்டான்.

''திருமதி மேரி... வீட்டு அங்கத்தினர்கள் எல்லாரையும் மறுபடியும் ஒன்று கூட்டி, ஒரு சிறு சந்திப்பினை நடத்த, உங்களுடைய அனுமதி தேவை. வரவேற்பறையிலேயே வெச்சுக்கலாம். ஆனா ஒவ்வொருத்தரும் இதுல கலந்துக்க வேண்டியது அவசியம்.''

மேரி சற்று சோகமாகச் சிரித்தார்.

''திருமிகு பொய்ரெட்... இந்த வீட்டில உங்களுக்கு எல்லா வகையிலும் உரிமை இருப்பது உங்களுக்கே தெரியும். பிறகு என்ன கேள்வி?''

''நீங்க ரொம்ப இனிமையானவர், மேடம்!''

Scanned by CamScanner

இன்னும் அதிகமாய் பிரகாசம் பொங்க இயங்கி, பொய்ரெட் அனைவரையும் வரவேற்பறையில் கூட்டி நிறுத்தினான். அப்படியே நாற்காலிகளை ஒன்றுகூட்டி உட்கார வழி செய்துத் தந்தான்.

''எவிலின் ஹோவார்ட் - இங்கே. செல்வி சிந்தியா - இப்படி. இது - திரு. லாரன்ஸுக்கு. நானி - இங்கே வா. பக்கத்துல ஆனி. ஆங் ... கொஞ்ச நிமிடங்கள் பொறுமை அவசியம். இந்த சந்திப்புக்கு திரு. ஆல்ஃபிரட் வந்து சேர்ந்ததும் ஆரம்பிச்சுடுவேன். அவருக்கு ஆள் அனுப்பியிருக்கேன்.''

உட்கார்ந்த எவிலின் வெடுக்கென்று எழுந்துக் கொண்டார்.

''அந்த மனுஷன் வீட்டுக்குள்ளே நுழைஞ்சான்னா நான் கிளம்பறேன்!''

''ஆஹாஹா... அப்படி சொல்லாதீங்க!'' - அவர் அருகே போன பொய்ரெட் மிகவும் கெஞ்சினான்.

எப்படியோ இறுதியில் தனது இருக்கைக்குத் திரும்ப சம்மதித்தார் எவிலின். சில நிமிடங்கள் கடந்ததும் ஆல்ஃபிரட் உள்ளே நுழைந்தார்.

கூட்டம், அன்று போலவே, மீண்டும் கூடியது. சிறப்பு சொற்பொழிவு நடத்தவுள்ள பேராசிரியரின் வேகத்தோடு எழுந்த பொய்ரெட், குழுமியிருந்த அனைவரையும் நோக்கி மிகக் கனிவாக வணங்கினான்.

''லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்... உங்களுக்கே நல்லா தெரியும். திரு. ஜான் கேவண்டிஷின் வேண்டுகோளுக்கிணங்கத் தான் நான் இந்த வழக்கைத் துப்பறியவே வந்தேன். ஆரம்பித்த உடனேயே, தாமதம் ஏதும் செய்யாம துரதிர்ஷ்டசாலியான திருமதி எமிலியின் அறையைப் பரிசோதனை செய்தேன். டாக்டர்களின் அறிவுறுத்தலின் பேரில் அந்த அறை பூட்டப்பட்டிருந்தபடியால், சம்பவம் நடந்த அன்று எப்படியிருந்ததோ அப்படியே தான் நான் பரிசோதிக்கும் போதும் இருந்தது. அங்கு நான் எடுத்தவை:

1. பச்சைத் துணி ஒன்றின் இழை

2. ஜன்னலை ஒட்டிய தரை விரிப்பருகே ஒரு கறை... அப்போது கூட பிசுபிசுப்பு குறையாது...

3. ப்ரோமைட் தூள் அடங்கியிருந்த ஒரு காலிப் பெட்டி.

''அந்தப் பச்சைத் துணியின் இழை பற்றி முதல்ல பார்ப்போம். திருமதி எமிலியின் அறையையும் அதை ஒட்டி பக்கத்தில் இருக்கும் செல்வி சிந்தியா இருந்த அறையையும் இணைக்கும் கதவின்

Scanned by CamScanner

தாழ்ப்பாளில் அது மாட்டி இழுபட்டிருந்தது. அதை நான் போலீஸிடம் ஒப்படைச்சேன். ஆனா, அவங்க அதுல இருக்கிற முக்கியத்துவத்தைக் கண்டுக்கலே. அது என்ன என்பதை அறியக் கூட அவங்க முயற்சி எடுக்கலே. அது... அலங்காரமா கையில் கட்டிக் கொள்ளும் துணியினாலான கைக்காப்பிலிருந்து உருவின ஓரிரு இழைகள்.''

இச்சமயத்தில் கொஞ்சமாய் பரபரப்புச் சுழல், அறையில், உருவாகியது.

''ஸ்டைல்ஸில் அலங்காரப் பொருட்களை அதிகம் அணியும்படி ஒரே ஒரு நபர்தான் இருக்கார்... திருமதி மேரி ஜான் கேவண்டிஷ். செல்வி சிந்தியாவிலிருந்து நானி, ஆனி வரை... வேற யாரும் அப்படி அலங்காரம் பண்ணிக்கிறது கிடையாது. இது நமக்கே தெரியும். ஆகவே, சிந்தியா அறையையும் மறைந்து விட்ட எமிலியின் அறையையும் இணைக்கும் கதவின் வழியே எமிலியின் அறைக்குள் நுழைந்திருக்கக் கூடியவர், திருமதி மேரியாகத்தானிருக்க முடியும்.''

''ஆனா அந்தக் கதவு தான் உள்பக்கமா தாழிடப்பட்டிருந்ததே!'' அடக்க முடியாமல் நான் கதறி விட்டேன்.

''நான் பரிசோதித்த போது கூட, ஆமாம், அது தாழிடப் பட்டுத்தான் இருந்தது. ஆனா, ஆழ்ந்து பார்த்தோம்னா, இதுக்கு சாட்சியா இருப்பது - மேரியின் வார்த்தை மட்டும்தான். அவங்க தான் அந்தக் கதவைத் திறக்க முயற்சி பண்ணிட்டு அது திறக்க முடியாத நிலையில இருப்பதா நம்மகிட்டே சொன்னவங்க. தொடர்ந்து ஸ்டைல்ஸில் விளைந்தக் குழப்பங்கள், அந்தக் கதவின் தாழ்ப்பாளை ஓசைப்படாம மறுபடியும் போட்டுவிட அவங்களுக்கு ஏகமா அவகாசத்தை உண்டு பண்ணித் தந்திருக்கும். என்னுடைய இந்த உத்தேசங்களை சரிபார்த்துக் கொள்ள சீக்கிரமா இறங்கினேன். முதல்ல... அந்த ஓரிரு பச்சை இழைகள்! அவை அப்படியே திருமதி மேரியின் கையிலுள்ள பச்சை நிறத் துணியாலான நாகரீகக் காப்பு... ப்ரேஸ்லெட் - அதோட, பிரச்னை தராம ஒத்துப் போகுது. மேலும், மரண விசாரணையின் போது, மேஜை கவிழ்ந்த ஓசையை அவங்களுடைய அறையிலிருந்தபடி கேட்டதா மேரி சாட்சி தந்தாங்க. இதை உறுதிப்படுத்திக்கவும், முதல்ல வாய்த்த சந்தர்ப்பத்தைத் தவற விடாம பயன்படுத்திக்கிட்டேன். எனது நண்பன் டாக்டர் ஹேஸ்டிங்ஸை இடப்புற அறைகளிருக்கும் பகுதியில, திருமதி மேரி

அறையின் வாசல்ல நிற்க வெச்சேன். நானும், கூட வந்திருந்த போலீஸோட சேர்ந்து, மறைந்த எமிலியின் அறைக்குப் போயிருந் தேன். அங்கு இருக்கும்போது, வேண்டுமென்றே தெரியாம நடந்தது போல, அந்தக் குறிப்பிட்ட மேஜையைக் கவிழ்த்து விழ வெச்சேன். அது விழுந்து 'கும்'னு ஓசையெழுப்பியது. ஆனா விளைவு? நான் எதிர்பார்த்தது போலவே, எந்தவிதமான பெரும் ஓசையும் ஹேஸ்டிங்ஸ் காதுக்கு விழவில்லை! துயரச் சம்பவம் அரங்கேறிய நேரத்துல தன்னுடைய அறையில ஆடை திருத்திக்கிட்டு இருந்ததா மேரி சொன்ன அத்தனையும், முழு பொய் என்ற என் நம்பிக்கையை இது ஊர்ஜிதப்படுத்தியது. சொல்லப் போனா, தன்னுடைய அறையிலே இல்லாதது மட்டுமில்லே... அலார மணி அடிச்சபோது, மேரி, திருமதி எமிலியின் அறையில தான் இருந்திருக்காங்க என்கிற அளவுக்கு நான் திருப்தியானேன்.''

இப்போது சட்டென திரும்பி நான் மேரியைக் கவனித்தேன். அவர் வெளிறிப் போயிருந்தார்... ஆனால் புன்னகைத்தும் கொண்டி ருந்தார்.

''இதே ஊகத்தைப் பிடிச்சுக்கிட்டே மேற்கொண்டு முன்னேற முடிவு செஞ்சேன். திருமதி மேரி, அவங்களுடைய மாமியாரின் அறையில் இருக்காங்க. அவங்க எதையோ தேடிக்கிட்டு இருக்காங்கனு வெச்சுப்போம். ஆனா அதை இன்னும் அவங்க கண்டுபிடிக்கலே. எதிர்பாராம திருமதி எமிலி எழுந்திருக்கிறாங்க. பார்க்கிறாங்க. படுமோசமா அலறி நடுங்கிடறாங்க. வலிப்பு வந்த மாதிரினு கூட சொல்லலாம். அவங்க கையை அப்படியே தூக்கி வீச, இந்த அவசரத்துல அந்த மேஜையைத் தள்ளி, பிறகு அலார மணியை அடிக்கிறாங்க. திருமதி மேரி... செய்வதறியாது ஆயிடறாங்க. கையிலிருந்த மெழுகுவர்த்தியைப் போட்டுடறாங்க. உருகியிருந்த மெழுகு தரைவிரிப்பு முழுக்க சிதறிடுது. விழுந்த வர்த்தியைத் தூக்கிக்கிட்டு, சிந்தியா அறைக்குள்ளே ஓடி, கதவைக் காலால தள்ளி சாத்திடறாங்க. இப்போ, அவங்க அறைக்கு உடனடியா ஓடிடணும். யாரும் பார்த்துடக் கூடாது. ஆனா இது முடியலே. மாடியின் ரெண்டு பகுதியையும் இணைக்கும் வராந்தா முழுக்க காலடி ஓசைகள் விரைந்து ஓடி வரும் ஓசை உள்ளே எதிரொலிக்குது. இப்போ அவங்க என்ன பண்றது? புரியலே. திரும்பி மறுபடியும் சிந்தியா அறைக் குள்ளே நுழையும் அவங்க, எதுவும் பண்ணத் தெரியாம, சிந்தியாவை

உலுக்கி எழுப்ப ஆரம்பிச்சுடறாங்க! அவசர அவசரமா எழுந்த வீட்டு ஆளுங்க எல்லோரும், ஒரு படையா வராண்டாவில் ஓடி, வர்றாங்க... ஆனாலும் யார் யார் வந்திருக்காங்கன்னு யாரும் கவனிக்கலே... அவசரம்...! மேரி கூட வராததையும் யாரும் கவனிக்கலே... இது மட்டுமா... இப்போ சொல்லப் போவது அதி முக்கியம்... மேரி, அடுத்தப் பகுதியிலிருந்து வருவதையும் யாரும் கவனிக்கலே...!''

இப்போது தலைவணங்கி நன்றி தெரிவிப்பது போல் வணக்கம் சொன்னார் மேரி! மேரி மீது பொய்ரெட் வண்டி வண்டியாக குற்றம் சுமத்திக் கொண்டே போகும் போதா இப்படி வணங்குவது?! அவரே பேசினார்:

''நீங்க சொல்லும் ஒவ்வொன்றும் - நிஜம், திருமிகு பொய்ரெட்...! இந்த உண்மைகளையெல்லாம் சொல்லி என் கணவனைக் காப்பாற்ற நான் விரும்பியிருந்தா, நிச்சயம் செய்திருக்க முடியும்னு உங்களுக்குத் தெரியும். ஆனா, அவரது குற்றமோ அல்லது குற்றமற்ற நிலையோ... அது எதுவோ... அந்த எதுவும் என்னைப் பாதிக்காது... இதுவும், திருமிகு பொய்ரெட் உங்களுக்குத் தெரியும்.''

''பரிபூரணமா ஒத்துக்கறேன். திருமதி மேரி'' என கனிந்து சொன்னான் பொய்ரெட். தொடர்ந்தான்:

''இதனால, எனக்குள் இருந்த பற்பல தவறான ஊகங்களை எல்லாம் என்னால விலக்க முடிஞ்சது. மீதியிருந்த சாட்சிகளையும் அவற்றின் உண்மையான தேவைகளையும் ஆற அமர துளாவ வசதியேற்பட்டது.''

''அதாவது அந்த உயில்'' என கத்தினார் லாரன்ஸ். ''அப்போ அது நீங்கதானா மேரி? அந்த உயிலை எரிச்சு அழிச்சது நீங்கதானா?''

மேரி மறுத்துத் தலையசைத்தார். இந்தப் பக்கம் மறுத்து பொய்ரெட் தலையசைத்துக் கொண்டிருந்தான்.

''இல்லைப்பா'' என்றான் அடக்கமாய். ''உயிலை எரித்துப் போட்டிருக்கவல்ல சாத்தியக் கூறு நிறைந்து ஒரே ஒரு நபர் தான் நம்மகிட்டே இருக்காங்க... அது *திருமதி எமிலி*யே!''

''வாய்ப்பே இல்லை'' - எகிறினேன் நான். ''அன்னிக்கு மத்தியானம் தான் உயிலையே அவங்க சுடச் சுட தயாரிச்சாங்க.''

''இருந்தாலும், நண்பா, அது அவங்கதான்! ஏன்னா... **கொளுத்தும் வெயில் இருக்கிற உக்கிரமான ஒரு கோடை நாளில், தனது அறையில் இருக்கிற கனப்புக்கு அவங்க நெருப்பு மூட்டச் சொல்லி ஆணையிட்ட தற்கான காரணத்தை - நீ வேற எந்த வழியிலும் விளக்க முடியாது!''**

என் மூச்சு நின்றது எனலாம். எத்தனை பெரிய முட்டாள்களாயிருந்தால், பொருந்தவே பொருந்தாத ஒன்றாய் இந்த கனப்பு விவகாரத்தை நாங்கள் ஒதுக்கி வைத்திருப்போம்! பொய்ரெட் தொடர்ந்த வண்ணமிருந்தான்:

''வாடிக்கையாய் 20 இருக்கும் நம் ஊரில். அன்றைய தினம் கொளுத்தும் வெயிலின் அளவு, 35 டிகிரியைத் தாண்டியிருந்தது. இது நினைவிருக்கட்டும்...! இருந்தபோதிலும், கனப்புக் கேட்டிருக்கிறார் அவர்! ஏன்? ஏன்னா, எதையோ அழிக்கணும்.. அதுக்காக...! வேற எதையும் நாம காரணமா காட்டவே முடியாது. ஸ்டைல்ஸ் எஸ்டேட்டில் ஒரு துண்டு குப்பைக் காகிதம்கூட போடும் பழக்கம் கிடையாது. இதுவும் நினைவிருக்கட்டும். ஆக, உயில் போன்ற நல்ல தடிமனான காகிதங்களை அழிக்க வேறு வழியே கிடையாது. திருமதி எமிலியின் அறையில நெருப்பு மூட்டப்பட்டது என்ற சேதி என் காதுகளுக்கு எட்டிய மறுநொடியே... அது, ஏதோ ஒரு முக்கியமான தடிமனான, அதாவது உயில் போன்ற ஓர் ஆவணத்தை அழிப்பதற் காகத்தான்னு நான் பட்டுனு முடிவெடுத்துட்டேன். ஆகவே, கனப்புக்குள்ள கண்டெடுக்கப்பட்ட துண்டு, உயில் காகிதம் என்பதில் எனக்குத் துளியும் ஆச்சரியம் கிடையாது.

''இந்தக் கட்டத்துல, நாம் பேசிக்கிட்டிருக்கிற உயில் அந்த மத்தியானத்துலத்தான் எழுதப்பட்டிருக்குனு எனக்குத் தெரியவே தெரியாது. இந்த உண்மை எனக்குத் தெரிய வந்ததும், மறைக்காம இப்போ ஒத்துக்கறேன்... ஒரு பெரும் தவறை நான் செஞ்சேன். அன்று மதியம் நடந்த ரகளையின் பிரதிபலிப்பாகத் தான் அந்த உயிலை அழிச்சே ஆகணும் எனும் தீவிர சபதம் திருமதி எமிலிக்கு உண்டானாதா நான் முடிவு செஞ்சேன். இதனால, உயில் தயார் செஞ்ச பிறகுதான் ரகளையே நடந்தது என்றும், அதுக்கு முன்னாடி கிடையாது என்றும் முடிவெடுத்தேன்.

''இந்த முடிவுல நான் தப்பா போனது எல்லோருக்கும் தெரியும். இந்த ஊகத்தை மூட்டை கட்ட வேண்டிய நிலை வந்தது. பிறகு, பிரச்சினையை, வேறொரு கோணத்துல நின்று எதிர்கொண்டேன். கவனியுங்க. நல்லா கவனியுங்க. நாலு மணிக்கு, நானி, அவங்க முதலாளியம்மாவான திருமதி எமிலி, கோபமா பேசின சில வார்த்தைகளைக் காத்து வாக்குல கேட்கிறாங்க; 'இதனால எனக்கிருக்கிற பெயருக்கோ அல்லது விளம்பரத்துக்கோ களங்கம்

Scanned by CamScanner

வரும்னோ.. இல்லே, கணவன் மனைவிக்குள்ளே பிரளயம் வெடிக்கும்னோ நினைக்க வேண்டாம்.' இந்த வார்த்தைகளை அவங்களுடைய கணவனை நோக்கி அவங்க பிரயோகிக்கலே... ஜானை நோக்கி பேசியிருக்காங்க அப்படினு, இதைப் பற்றி ஓர் அனுமானம்... மிகச் சரியான அனுமானம்... அப்பவே எனக்கு உருவாயிடுச்சு. இது முடிஞ்சு ஐந்து மணிக்கு, சரியா ஒரு மணி நேரம் கழிச்சு இதே வார்த்தைகளை அவங்க மறுபடியும் உபயோகிக்கிறாங்க... ஆனா, அப்போ அவங்க இருந்த நிலைப்பாடு முழுக்க முழுக்க வேற! நானி கிட்டே ஒத்துக்கிறாங்க: 'என்ன செய்யறதுன்னே எனக்குத் தெரியலே, கணவன் மனைவிக்கு இடையேயான உறவின் பிளவு... ஊஃப்... கடும் பயங்கரமானது..!' நாலு மணிக்கு அவங்க கோபமா இருந்திருக்காங்க.. ஆனா, அவங்களுக்குள்ளே எந்த உலுக்கலும் நிகழலே. அவங்கக் கட்டுப்பாட்டையும் இழக்கலே. ஐந்து மணிக்கு அவங்க, முழு கொதிப்புல வெறியா இருந்திருக்காங்க... சொல்லொணா அதிர்ச்சிக்கு ஆளாகி விட்டதாகவும் சொல்றாங்க.

''இந்த நிலையை உளவியல் ரீதியா பார்க்கும்போது ஒரு முடிவுக்கு என்னால வர முடிஞ்சது. அது ஒரு சரியான முடிவே என்பதுல எனக்குக் குழப்பமில்லை. அவங்க ரெண்டாவதா பேசின கணவன் - மனைவி உறவு முறிவு, முதல்ல பேசின அதே உறவு கிடையாது... இது, அவங்களையே உள்ளடக்கியது!

''ஒழுங்கா வரிசைப்படுத்திப் பார்ப்போம். நாலு மணிக்கு, திருமதி எமிலி அவங்களுடைய பிள்ளையுடன் வாக்குவாதத்துல ஈடுபடுறாங்க. அவருடைய மனைவியிடமே போய் பகிரங்கமா குற்றம் சாட்டி விடுவதாய் பயமுறுத்தறாங்க. இந்த உரையாடலின் பெரும் பகுதியைத்தான் திருமதி மேரி கேட்டுடறாங்க. நாலரை மணி வாக்குல, உயிலின் செல்லுபடித் தன்மை குறித்த உரையாடலின் விளைவாக, தன்னுடைய கணவனின் பெயருக்கு சாதகமாக ஒரு புது உயிலைத் தயார் செய்யறாங்க. அதுக்குத்தான் தோட்டக்காரங்க ரெண்டு பேரும் சாட்சி கையொப்பம் வைக்கிறாங்க. ஐந்து மணிக்கு, தனது முதலாளியம்மா, கையில ஒரு துண்டு காகிதத்தை வெச்சுக்கிட்டு, தாள முடியாத கிளர்ச்சியிலும் கோபத்திலும் இருப்பதை நானி பார்க்கிறாங்க - நானியைப் பொறுத்த வரைக்கும் அது ஒரு கடிதம்! ஆக, நாலரைக்கும் ஐந்துக்கும் இடையே, அவங்க உணர்வுகளுக்குள் பெரும் புரட்சியையே உண்டு பண்ணி விடும்

Scanned by CamScanner

அளவுக்கு, என்னவோ நடந்திருக்கு. ஏன்னா, கொஞ்சம் முன்னாடி இந்த உயிலை உருவாக்க எத்தனை துடிப்பா இறங்கினாங்களோ அதே துடிப்போடு இப்போ இருக்காங்க... அதை அழிக்க! அந்த என்னவோ, எது?

''நமக்குத் தெரிஞ்ச வரைக்கும் அந்த அரைமணி நேரமும் அவங்க தனியாகத்தான் இருந்திருக்காங்க. அந்தப் பிரத்யேக அறைக்குள்ளே யாரும் நுழையலே... வெளியே போகலே... உறவுகளுக்குள் அவங்க வெச்சிருந்த மதிப்புகளை அப்படியே மாற்றிப் போடும் அளவுக்கு திடுமென நடந்தது தான் என்ன?

''இதுக்கு ஊகத்தின் அடிப்படையில தான் விடை கண்டுபிடிக்க முடியும். ஊகித்தேன். அது சரி என்றும் நம்பினேன். அப்போ திருமதி எமிலியிடம் அஞ்சல் தலைகள் இல்லே, இது நமக்கு தெரியும். அவங்க தான் நானியைக் கூப்பிட்டு எப்படியாவது சில அஞ்சல் தலைகள் கொண்டுவரச் சொல்லியிருக்காங்க. இப்போ - அவங்க அறையின் எதிர் மூலையில திரு. ஆல்ஃபிரட்டுடைய மேஜையிருக்கு - பூட்டப்பட்டு. உடனடியா அஞ்சல் தலைகள் தேவைப்பட்டிருக்கு. அவங்களுக்கு அவசரம். என் அனுமானத் தின்படி, அந்த மேஜையைத் தனது சாவிகளில் ஒன்றினை வெச்சு திறக்க முயற்சி செய்திருக்காங்க திருமதி எமிலி. அதுல ஒண்ணு பொருந்தியிருக்கு... இது எனக்குத் தெரியும். ஆகவே மேஜையின் அந்தத் தட்டினை திறக்கிறாங்க. அஞ்சல் தலையைத் தேடும்போது வேற எதையோ அவங்க பார்த்துடறாங்க... அது, நானி அவங்க கையிலே பார்த்த அதே துண்டுச் சீட்டு... திருமதி எமிலியின் கண்களுக்குப் பட்டிருக்கவே கூடாத துண்டுச் சீட்டு! இதைத்தான், பிடிவாதமா தனது மாமியார் கையகப்படுத்தியிருந்த இந்தத் துண்டுச் சீட்டைத்தான், தனது கணவனின் கள்ளத் தொடர்பு குறித்த ஸ்திரமான ஒரு சாட்சியா திருமதி மேரி தப்பா நினைச்சிருக்காங்க. அதைத் தன்கிட்டே கொடுத்தே ஆகணும்னு மேரி தன்னுடைய மாமியார் கிட்டே அதிகாரம் பண்ணியிருக்காங்க. இதுக்கு அவங்க, மிக மிக உண்மையா, இந்தத் தாளுக்கும் ஜான் சங்கதிக்கும் எந்தத் தொடர்பும் கிடையாதுனு விளக்கியிருக்காங்க. திருமதி மேரி அவங்களை நம்பலே. தனது வளர்ப்பு மகனைப் பொத்திக் காக்கத் தான் இப்படி செய்றாங்க என்பதே மேரியின் முடிவு. இந்த மேரியோ, எதிலும் பின்வாங்கும் குணமற்ற ஒரு திடமான பெண். மேலும்,

அவங்களுடைய இந்த முகத்திரையும் தாண்டி, தனது கணவன் மேலே அவங்களுக்குக் கட்டுப்படுத்த முடியாத பொறாமை உண்டு. 'கணவன், தனக்கே' எனும் பொஸஸ்ஸிவ் பொறாமை! ஆகவே எப்படியாவது, எப்பாடுபட்டாவது அந்தத் தாளைக் கைப்பற்றி விடவேண்டும் என்று முடிவு செய்றாங்க. இந்த பிடிவாதத்துக்கு உதவ, சந்தர்ப்பம் துணையா வந்து நின்றது. அன்று காலையில காணாமப் போயிருந்த திருமதி எமிலியின் பிரத்யேக கைப்பெட்டி யின் சாவியை எடுத்தது - மேரியே. அவங்க மாமியார் முக்கியமான அனைத்துத் தாள்களையும் தவறாம அந்தப் பெட்டிக்குள்ளே தான் வைப்பாங்க எனும் உண்மை அறிந்தவங்க தான் மேரி.

''ஆக... பொறாமை எனும் பேயின் கைப்பிடிக்குள் அகப்பட்டுக் கொள்ளும் எந்த ஒரு பெண்ணும் நிறைவேற்றத் துணியும் திட்டங்களை, அவசரமா செயல்படுத்தறாங்க, திருமதி மேரி. அன்றைய மாலைப் பொழுதில் ஏதோ ஒரு சமயத்துல, செல்வி சிந்தியாவின் அறைக்கு வழி பண்ணித் தரும் கதவின் தாழ்ப்பாளைத் திறந்து வெச்சிடறாங்க. அதுக்கு மேரி கொஞ்சம் எண்ணெய் கூட போட்டிருக்கணும்... எப்போதும் மூடியே கிடந்த அந்தத் தாழ்ப்பாள் நான் முயற்சி செய்தபோது துளி சிரமம் தராம சத்தமும் எழுப்பாம லகுவா திறந்ததே! தனது திட்டத்தை நிறைவேற்ற விடிகாலைப் பொழுதுதான் சரியான தருணம்னு அதுவரை தள்ளி வெக்கிறாங்க. தனது அலங்கார ஒப்பனையோடு, ஓசையெழுப்பாம செல்வி சிந்தியா அறை வழியா திருமதி எமிலியின் அறைக்குள்ளே நுழைஞ்சுட றாங்க.''

இப்போது சிந்தியா குறுக்கிட நிறுத்தினான் பொய்ரெட்.

''என் அறைக்குள்ளே ஒருத்தர் உள்ளே நுழைஞ்சு போகும்போது நான் நிச்சயம் எழுந்திருக்கணுமே?''

''ஆனா நீங்க தூக்க மாத்திரை சாப்பிட்டிருந்தீங்கன்னா?''

''தூக்க மாத்திரை?''

''அதே!''

''ஆஹ்!''

''நினைவிருக்கா..'' எங்கள் எல்லோர் பக்கமும் மீண்டும் திரும்பிக் கொண்டு - ''அடுத்த அறையில நடக்கிற அத்தனை சந்தடிக் குழப்பங்களுக்கும் சப்தங்களுக்கும் இடையே, செல்வி சிந்தியா அற்புதமா தூங்கிக்கிட்டு இருந்தாங்க. இதுக்கு ரெண்டு

காரணங்கதான் இருக்க முடியும். ஒண்ணு அவங்கப் பாசாங்கு செஞ்சிருக்கணும். நான் அப்படி நினைக்கலே... அல்லது அவங்களுடைய சிதையா தூக்கம் ஏதோ ஒரு செயற்கை முறையில உண்டு பண்ணப்பட்டிருக்கணும்.

''இந்த ரெண்டாவது ஊகத்தை மனசுல வெச்சுக்கிட்டு மேலும், முந்தைய இரவு சிந்தியாவுக்கு காபி கொண்டு போனது திருமதி மேரி தான் என்பதையும் மனசுல ஸ்திரப்படுத்திக்கிட்டு, அனைத்து காபி கோப்பைகளையும் நான் ஜாக்கிரதையாக பரிசோதிச்சேன். ஒவ்வொரு கோப்பையிலிருந்தும் கொஞ்சம் மாதிரி எடுத்தேன். பரிசோதித்தேன். எந்த விளைவும் தெரியலே. இந்தச் சமயத்துல, ஒரு கோப்பைக் குறையும் எனும் அடிப்படையில் காபி கோப்பைகளை கவனமா எண்ணினேன். ஆறு நபர்கள் காபி சாப்பிட்டிருக்காங்க.. ஆறு கோப்பைகள் இருந்தன. நான் தான் தப்பா நினைக்கிறேன்னு நினைப்பதைத் தவிர வேறு வழி கிடையாது.

''ஆனா, நான் முட்டாள்தனமா ரொம்ப மேலோட்டமா நடந்திருப்பதை பிறகு தான் உணர்ந்தேன். காபி, ஏழு பேருக்குக் கொண்டு வரப்பட்டிருக்கு. ஆறு பேருக்கு அல்ல... அன்று மாலை டாக்டர் பௌரீஸும் இருந்திருக்கார். பிரச்சினையின் முழு நிலையையும் இது மாற்றியது. இப்போ ஒரு கோப்பை - காணவில்லை. இதை எந்தப் பணியாட்களும் கவனிக்கலே. திரு. ஆல்ஃபிரட் குடிப்பதில்லைனு தெரியாம, ஆனி, ஏழு கோப்பைகளைக் கொண்டு வந்திருக்கு... மேலும், மறுநாள் காலையில இதையெல்லாம் சுத்தம் பண்ணின நானிக்கு ஆறு கோப்பைகள் தான் இருந்திருக்கு... சரியா சொல்லணும்னா ஐந்துதான் இருந்திருக்கும்... ஒன்றுதான் எமிலியின் அறையில நொறுக்கப்பட்டு விட்டதே!

''காணாமல் போயிருக்கும் கோப்பை செல்வி சிந்தியாவுடையது தான் என்பதில் நான் ஸ்திரமானேன். இப்படி நம்பறதுக்கு எனக்குக் கூடுதலா ஒரு காரணமும் இருக்கு... கையிலிருந்த அனைத்துக் கோப்பைகளிலும் சர்க்கரை இருந்தது. சிந்தியா சர்க்கரை எடுப்பது கிடையாது. தினசரி ராத்திரி திருமதி எமிலிக்கு கோ-கோ கொண்டு போகும் தட்டுல, சம்பவம் நடந்த அன்றைக்கு முந்தைய நாள் இரவு மட்டும், கொஞ்சம் உப்பு போன்ற தூள் சிதறிக் கிடந்ததா ஆனி சொன்ன கதை என்னை இப்போது ஈர்த்தது. இதனால, அந்த கோ-கோவின் மாதிரிக் கொஞ்சம் எடுத்து பரிசோதிக்க அனுப்பி வெச்சேன்.''

Scanned by CamScanner

''ஆனா, திருமிகு பொய்ரெட்'' என்ற லாரன்ஸ், ''இந்தப் பரிசோதனை தான் ஏற்கனவே டாக்டர் பௌரீஸால செய்தாச்சே!'' என்றார்.

''ம்.ம்.. அதுல ஸ்டிரிச்நைன் இருக்கா இல்லையானு மட்டும்தான் பரிசோதிக்கச் சொன்னார். ஆனா நான் செஞ்சா மாதிரி அதுல 'நார்கோடிக்' இருக்கா இல்லையானு அவர் பார்க்கலே.''

''நார்க்கோடிக்'கா?''

''ஆமாம். இதுதான் அந்தப் பரிசோதனை அறிக்கை. திருமதி மேரி, மிக சக்தி வாய்ந்த ஆனால் ஆபத்தற்ற நார்க்கோடிக் தூளினை, திருமதி எமிலிக்கும் செல்வி சிந்தியாவுக்கும் செலுத்தியிருக்காங்க. இந்தச் சமயத்துல அவங்களுடைய மாமியார் திடீர்னு உடல் நிலை மோசமாகி அதன் விளைவா இறந்து விடுவதும்... உடனேயே 'விஷம்'தான் காரணம்னு வார்த்தைகள் கிளம்புவதும், மேரியை எந்த நிலைமைக்குத் தள்ளியிருக்கும்னு கற்பனை பண்ணிப் பாருங்க! மேரிக்கு, அவங்க கலந்த தூக்க மாத்திரை உயிருக்குத் துளியும் ஆபத்து ஏற்படுத்தாது என்பது நல்லாவே தெரியும். ஆனாலும், சில பல நிமிடங்களுக்கு, நிச்சயமா, தான் கலந்த தூக்க மாத்திரை தன் தலையைத் துண்டிக்கும் தூக்க மாத்திரையா ஆகியிருக்குமோனு, கதி கலங்கித் தான் போயிருப்பாங்க. பரவாயில்லே... அவங்க செய்த அதர்ம செய்கைக்கு கிடைத்த தண்டனை அது! இந்த கிலியும் நடுக்கமும் தந்த தாக்கத்தின் விளைவாக பயந்து நடுங்கிக் கொண்டு யார் கண்ணிலும் பட்டுவிடாமல் கீழே விரையும் மேரி, அங்கே இருந்த ஒரு பெரிய பூ ஜாடியின் வாயில் இருந்த பூக்களைக் கொத்தாப் பிடிச்சுத் தூக்கி அதுக்குள்ளே அந்தக் காபிக் கோப்பையைப் போட்டுட்டு மறுபடியும் பூக்களால மூடிடறாங்க. இதைத்தான் பிறகு லாரன்ஸ் கண்டெடுத்துத் தந்தார். மீதியிருந்த கோ-கோ பிசுபிசுப்புப் பற்றியெல்லாம் அவங்க கவலைப் படவேயில்லை. எல்லா கண்களும் அவங்களையே பார்ப்பதா ஒரு கலக்கல். ஸ்டிரிச்நைன் பற்றி பேச்சு வந்ததும் தான், அவங்களுக்கு மூச்சே திரும்பி வருது. அப்போ தான் கொலைக்கு நாம காரணமில்லே... வேற யாரோ எனும் புரிதலும் அவங்களுக்கு வருது.

''இப்போ, தன்னுடைய விஷ குணங்களை வழக்கம் போல உடனடியா வெளிக்காட்டாம ஏன் அத்தனை தாமதமாயிற்று என்று நம்மால விளக்க முடியும். ஸ்டிரிச்நைனுடன் தூக்க மாத்திரை

Scanned by CamScanner

எடுத்துக் கொள்ளும்போது சில மணி நேரங்களுக்கு விஷத்தின் செயல்பாடும், அதன் அறிகுறிகளும் தாமதிக்கப்படுகின்றன.''

பொய்ரெட் நிறுத்தினான். மேரியைப் பார்த்தான். அவருடைய முகத்தில் வண்ணம் மெல்லக் கூடியது.

''திருமிகு பொய்ரெட்... அத்தனையும் சர்வ நிஜம். அந்த சில மணி நேரங்கள் என் வாழ்வின் நரக மணி நேரங்கள். அவற்றை என்னால் மறக்கவே முடியாது. ஆனா... ஆனா... நீங்க பிரமாதம்... திருமிகு பொய்ரெட்... இப்போ தான் எனக்குப் புரியுது...!''

''ஒரு பயமும் இல்லாம என்ன சொல்லணுமோ அத்தனையையும் ஒரு வயதான பாதிரிகிட்டே கொட்டுவது போல என்னிடம் அதாவது அப்பா பொய்ரெட்டிடம்... சொல்லலாம்னு சொன்னேனே...! அது? ஆனா நீங்க என்னை நம்பலையே!''

''இப்போ எனக்கு எல்லாம் விளங்குது'' என்றார் லாரன்ஸ். ''மயக்க மருந்து கலக்கப்பட்ட கோ-கோ, அதுக்கு மேலே உட்கொள்ளப்பட்ட விஷம் வைக்கப்பட்ட காபி... இவையிரண்டும் தாமதத்துக்கான காரணத்தைப் போதுமான அளவு விளக்குது.''

''அப்படியே. ஆனா, அந்தக் காபியில விஷம் கலக்கப் பட்டிருந்ததா, இல்லையா? இந்த விஷயத்துல பெரும் சர்ச்சையை சந்திச்சேன். ஏன்னா, திருமதி எமிலி, அந்தக் காபியை குடிக்க வில்லை.

''என்ன?'' - ஆச்சரியக் கதறல் அனைவரிடமும் விளைந்தது.

''அவங்க அந்தக் காபியைக் குடிக்கவேயில்லை. திருமதி எமிலி அறையில் தரை விரிப்பில் சிந்தியிருந்த கறை பற்றி நான் குறிப்பிட்டது இன்னும் நினைவிருக்கு இல்லையா? இந்தக் கறை குறித்து சில நுணுக்கமான குறிப்புகள் இருக்கு. அப்போ கூட அது பிசுபிசுப்பா இருந்தது. அந்தக் கறையில் காபித் தூளின் கசப்பான வாசம் தூக்கலாயிருந்தது. மேலும் தரைவிரிப்பின் நுனி குஞ்சங் களுக்கு அடியில சில பீங்கான் சில்லுகளை நான் பார்த்தேன். இவற்றை நான் பார்த்த சில நிமிடங்களுக்கு முன்னாடி எனக்கே அங்கு நேர்ந்த ஓர் அனுபவத்தின் அடிப்படையில, இந்த சாட்சியங் களுக்கான காரணமும்... அந்த அறையிலே என்ன நடந்திருக்கும் என்பதும்... சிரமமின்றி எனக்கு வெளிச்சமாயின. ஜன்னலருகே இருந்த மேஜையில என்னுடைய சிறு உபகரணப் பெட்டியை நான் வெச்சேன்... அந்த சிறு கனத்தைக் கூடத் தாங்காம ஒரு பக்கமா

தூக்கிக் கொண்ட மேஜை, கறை இருந்த இதே இடத்துல என்னுடைய பெட்டியை இறக்கி வெச்சுது! இதே பிரகாரம், முந்தைய நாள் இரவு திருமதி எமிலி உள்ளே வந்ததும் தன் கையிலிருந்த காபி கோப்பையை மேஜை மீது வெச்சிருப்பாங்க.. நம்பிக்கைத் துரோகம் பண்ணப் பழகிய அந்த மேஜை, தன்னுடைய கைவரிசையைக் காட்டியிருக்கும்!

''இப்படி ஓர் உதவாத மேஜை அங்கே ஏன் இருக்குதுனு தெரியலே. இப்படிப்பட்ட ஒரு மேஜை தான் இதுனு திருமதி எமிலிக்கும் தெரிந்திருக்கும்... மறந்து வெச்சிருப்பாங்க.

''அடுத்து என்ன நடந்திருக்கும் என்பது முழுக்க முழுக்க என் ஊகத்தின் அடிப்படையிலானது. இருந்தாலும் பிழையிருக்காது என்பது என் கருத்து. உடைந்தக் கோப்பையை அவங்க எடுத்திருப் பாங்க. படுக்கைக்குப் பக்கத்துல இருக்கிற மேஜையில் வெச்சிருப்பாங்க. முடிஞ்சுதா...! பிறகு ஊக்கம் தர ஏதாவது வேண்டும் எனும் நினைப்புல, அவ்வப்போது கோ-கோவை சூடு படுத்தி குடிச்சிருக்காங்க. இப்போ தான் நம் முன்னால ஒரு புது பிரச்சினை வந்து நிக்குது. கோ-கோவில ஸ்டிரிச்நைன் கலக்கப் படலே என்பது நமக்குத் தெரியும். காபியோ அவங்களர்லே குடிக்கப்படவில்லை. இருந்தாலும்கூட, அன்றைய இரவு ஏழிலிருந்து ஒன்பதுக்குள் ஸ்டிரிச்நைன் அவங்களுக்குள்ளே ஏற்றப்பட்டிருக்க வேண்டும். மூன்றாவது வழி என்ன இருக்கு... ஸ்டிரிச்நைனின் கடும் சுவையை மறைத்து, அதே சமயம் 'இதன்படியா ஸ்டிரிச்நைன் கொடுக்கப்பட்டிருக்கும்..' அப்படினு ஒருவரும் நினைக்க முடியாத ஓர் அசாதாரண வழியா அது இருக்கணும்!'' பொய்ரெட், அறையைச் சுற்றிப் பார்த்து எங்களனைவரையும் கண்களால் நோட்டம் விட்டான். பிறகு அழுத்தமாய் அவனே இதற்கான பதிலையும் சொன்னான்: ''அவங்களுடைய மருந்து!''

''கொலைகாரன், அவங்க மருந்துல விஷத்தைக் கலந்தான்'னா சொல்ல வர்றே?'' நான் உரக்கக் கேட்டேன்.

''விஷத்தைக் கலக்க இங்கே தேவையே இல்லை. ஏற்கனவே அது இருக்கு - அந்த டானிக்ல. திருமதி எமிலியைக் கொன்ற ஸ்டிரிச்நைன், டாக்டர் வில்கின்ஸால் மருந்தாகப் பரிந்துரைக்கப் பட்டிருந்த அதே ஸ்டிரிச்நைன் தான். இதை உங்களுக்கு விளக்க, டேட்மினிஸ்டரில், செஞ்சிலுவை மருத்துவமனையில், ஸ்டிரிச்நைன் குணாதிசயம் பற்றி நான் படித்த குறிப்பினை உங்களுக்குச் சொல்ல விரும்பறேன்.

Scanned by CamScanner

''ஸ்டிரிச்நைன் உள்ள கலவையில் ப்ரோமைட் எனும் வேதியியல் பொருளைக் கலந்தால், இது கலவையிலிருந்து ஸ்டிரிச்நைனை மட்டும் தனியா பிரிச்செடுத்து, அதை, மேற்கொண்டு கரையவே கரையாத துகள்களாக கலவையின் அடியில தங்க வெச்சிடும். இதே போல ஒரு டானிக்கைக் குடிச்சு தன் உயிரையே ஒரு மூதாட்டி இழந்த கதை இங்கிலாந்துல நடந்திருக்கு. இந்த மூதாட்டிக்குத் தரப்பட்ட கலவையில ப்ரோமைட் இருக்கு. அதனால ஸ்டிரிச்நைன், டானிக்'கின் அடியில சேகரமாயிருக்கு. ஒவ்வொரு முறையும் டானிக்'கைக் குலுக்கிக் குடிச்சிருந்தா, துளி துளியாதான் தினமும் ஸ்டிரிச்நைன் உள்ளே போயிருக்கும். விஷமா இயங்குவதற்கு பதிலா, மருந்தா உதவியிருக்கும். எவ்வித பாதிப்பும் இல்லை. ஆனா அவங்க அப்படிப் பண்ணலே. ஆக, கடைசி மடக்கு டானிக்கைக் குடிச்ச அன்று, கீழே தங்கியிருந்த அத்தனை ஸ்டிரிச்நைனையும் ஒட்டுமொத்தமா, தெரியாம குடிச்சிருக்காங்க. முடிவு - மரணம்.

''இப்போ, திருமதி எமிலிக்கு எழுதப்பட்டிருந்த மருத்துவப் பரிந்துரைக்கு வருவோம். அதுல, டாக்டர் வில்கின்ஸனால, ப்ரோமைட் எழுதப்படவேயில்லை. ஆக, கலவை தயாரிக்கும் போது ப்ரோமைட் சேர்க்கப்பட்டிருக்காது. ஸ்டிரிச்நைனும் அடியில தங்கிவிடும் வாய்ப்புகள் இல்லே. ஆனா, ப்ரோமைட் தூள் அடங்கியிருந்த ஒரு காலிப் பெட்டி பற்றி நான் சொன்னது உங்களுக்கு நினைவிருக்கலாம். இப்போ நிலைமையின் ஆபத்து உங்களுக்குப் புரியணும். டானிக்கின் ஸ்டிரிச்நைனை அப்படியே வடிகட்டி பாட்டிலின் கீழே தங்க வெச்சு, கடைசி மடக்கு குடிக்கும் போது மரணத்தை ஏற்படுத்த - இந்தப் ப்ரோமைட் தூளின் ஓரிரு துகள்கள் போதும்! இன்னும் கொஞ்ச நேரத்துல... திருமதி எமிலிக்கு டானிக் மருந்தினை தினமும் தந்து வந்த அந்த நபர், ரொம்பவும் ஜாக்கிரதையா, பாட்டிலைக் குலுக்கவே குலுக்காமல், அடியில் படிந்துக் கிடக்கும் ஸ்டிரிச்நைனுக்கு எவ்வித பாதிப்பும் வராம கண்ணும் கருத்துமா பார்த்துக்கிட்டதை - நீங்க தெரிஞ்சுப்பீங்க!

''இந்த வழக்கின் நெடுகிலும்... நேர்ந்து முடிந்து விட்ட துயரச் சம்பவம், திங்கட்கிழமை இரவுதான் நடக்க வேண்டும் என்று அதிகமா உத்தேசிக்கப்பட்டிருந்ததற்கான சாட்சிகள், நிறையவே இருக்கு. அன்று இரவு பொழுதுக்கு தான் திருமதி எமிலியின் அலார மணியின் ஒயர் படு கச்சிதமா அறுக்கப்பட்டிருந்தது. அன்றுதான்

செல்வி சிந்தியா தனது இரவுப் பொழுதினைத் தன்னுடைய தோழிகளுடன் கழித்தார்... அப்போ தானே திருமதி எமிலி, மாடியின் வலப்புறப் பகுதியில யார் துணையும் இன்றி தனிமையில இருப்பாங்க! அப்போதானே எவ்விதமான உதவிகளும் அவங்களை நெருங்க முடியாம, கடைசியில இறந்துப் போவாங்க! அப்படியே அவங்கத் துடிக்கிறதை யாராவது பார்த்தாலும் - யாரும் அந்த வலப்பக்கத்துல அன்னிக்கு இல்லாததால இதற்கு வாய்ப்பில்லை - மருத்துவ உதவியெல்லாம் வருவதற்குள்ளே அவங்க அடங்கிப் போவாங்க! ஆனா, கிராமத்துக் கலை நிகழ்ச்சியில சரியான நேரத்துக்குப் போய் பங்கெடுத்துக்கணும் எனும் அவசரத்துல, மருந்தினைக் கையில் எடுத்துக்க மறந்துடறாங்க, திருமதி எமிலி. இதனால, அந்தக் கடைசி கொலைகார மடக்கு, 24 மணி நேரங்கள் கழிச்சு குடிக்கப்படுது - கொலைகாரன் திட்டப்படி நடக்காம! இந்தத் தாமதத்தால தான், கடைசி சாட்சி... சங்கிலியின் கடைசி இணைப்பு இப்போ என் கைகளில் இருக்கு.''

மூச்சுக் காற்றின் ஓசை கூட அற்றுப் போன சூழலில், அறை முழுவதும் அனைவர் முகங்களிலும் வெடிக்கும் கிளர்ச்சி பொங்கி வழிந்தது. இதன் மத்தியில், மூன்று சிறு சிறு துண்டுத் தாள்களை அவன் வெளியே எடுத்தான்.

''ஒரு கடிதம்... கொலைகாரனின் சொந்தக் கையெழுத்தில்! இதிலுள்ள பிரத்யேக வார்த்தைகளின் உள்ளர்த்தங்கள் மட்டும் கொஞ்சமாகவாவது புரிந்திருந்தால், சரியான நேரத்துல எச்சரிக்கையை உணர்ந்து, திருமதி எமிலி பிழைச்சிருப்பாங்க. இதன்படி, தனக்கு நேரவுள்ள ஆபத்தினை அவங்க உணர்ந் திருப்பாங்க - எந்த ரூபத்துல வருது என்பதைத் தான் உணர்ந்திருக்க மாட்டாங்க.''

மயான அமைதியின் மத்தியில், அந்த கிழிந்தத் துண்டுகளை ஒன்றாய் சேர்த்து வைத்த பொய்ரெட், தொண்டையைச் செருமிக் கொண்டு வாசித்தான்.

> **'என்ன ஒரு சேதியும் வரலையேனு நீ ஆடிப் போயிருப்பே. பரவாயில்லை. ஒரு நாள் தாமதம்.. நேற்று இரவுக்குப் பதிலா இன்று இரவு. உனக்குப் புரியணும். கிழவி இறந்து வழியிலிருந்து விலகியதும் நமக்கு**

*எப்போதுமே நல்ல நேரமாய் தானிருக்கும். அந்த ப்ரோமைட் பற்றி நீ தந்து உதவிய குறிப்பு.. ஆஹ்.. மகா புத்திசாலித்தனமான ஒரு சாதுர்யம்! நாம் கூர்ந்து கவனித்து படு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்...'*

''இங்கேதான், நண்பர்களே.. கடிதம் உடையுது. சந்தேகம் வேண்டாம்... கடிதம் எழுதியவருக்கு ஏதோ இடைஞ்சல் வந்திருக்கு. ஆனா, இது யார் எழுதினது என்பது குறித்த அடையாளத்தில் எவ்விதக் குழப்பமும் கிடையாது. நம் எல்லோருக்கும் இந்தக் கையெழுத்து தெரியும்.. அது..''

அலறி ஊளையிடும் கதியில் பீறிட்டு எழுந்தக் கதறல், அறையின் அமைதியைக் கிழித்துவிட்டது.

''டேய் நாயே! அதை எங்கேயிருந்துடா பிடிச்சே?''

ஒரு நாற்காலி காலால் எத்தப்பட்டுக் கவிழ்ந்தது. அது எடுத்து வீசப்பட்டது. சுறுசுறுப்பும் வேகமும் சேர்த்து பொய்ரெட் விலகிக் கொண்டான். அவனிடம் நிகழ்ந்த இந்தத் துரித இயக்கத்தால், அவனைச் சிதைக்கப் பாய்ந்தவன் தடுமாறி கீழே சரிந்தான்.

''நண்பர்களே..'' என்று பகட்டாய் கூவிய பொய்ரெட், ''இப்போது உங்களுக்குக் கொலைகாரனை அறிமுகப்படுத்துகிறேன் - *திரு. ஆல்.:பிரட்!''* என்றான்.

## அத்தியாயம் பதின்மூன்று

# பொய்ரெட்டின் விளக்கம்

"பொய்ரெட்.. படு மோசமானவன்டா நீ" என்றேன் நான். "உன்னை ஒரேயடியா அடிச்சு வீழ்த்திட்டா என்னனு கூட எனக்கு வெறியாயிருக்கு. இந்த அளவுக்கு நீ என்னை ஏமாற்றியிருப்பதற்கு என்னதான் அர்த்தம்?"

நாங்கள் ஸ்டைல்ஸ் மாளிகையின் நூலகத்தில் உட்கார்ந்திருந் தோம். உடலாலும் மூளையாலும் கடும் வேலைகளைக் கறந்த பல நாட்கள் எங்களது வெற்றிக்குப் பின்னால் இருக்கின்றன. ஜானும் மேரியும், மறுபடியும் இணைந்து விட்டார்கள். ஆல்ஃபிரட்டும் எவிலின் ஹோவோர்ட்டும் காவலில் வைக்கப்பட்டு விட்டனர். இப்போது, பொய்ரெட், அவனுடைய ஆத்ம நண்பனான எனக்காக மட்டும் எதிரே அமர்ந்திருக்கிறான். என்னுள் இன்னும் கனன்றுக் கொண்டிருக்கும் வழக்கு குறித்த பல ஆர்வத்தைக் கிளறும் சந்தேகங்களை இப்போதுதான் தாராளமாக தீர்த்துக் கொள்ளலாம்.

நான் மேற்கூறிய வார்த்தைகளுக்கு இன்னும் பொய்ரெட் எனக்கு விளக்கம் தரவில்லை. ஆனால் கடைசியில் சொன்னான்:

"உன்னை நான் ஏமாற்றவில்லை, உயிர் நண்பா! நீயே உன்னை ஏமாற்றிக் கொள்ளத்தான் பல வழிகள் செய்து தந்தேன்!"

"ஆமாம், அதுதான் ஏன்?"

"இதை விளக்குவது கொஞ்சம் கஷ்டமாச்சே. நீ இயற்கையிலே மிக மிக உண்மையானவனா எனக்கு இருந்தாலும், உன்னுடைய முகபாவம்... அதே அளவுக்கு மிகவும் வெளிப்படையானதுடா. அதாவது.. உன்னுடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்தி உள்ளேயே வைப்பது உன்னால முடியாத ஒன்று. என் ஊகங்களை உன்னிடம் சொல்லியிருந்தேன்னு வெச்சுக்கோ.. அடுத்த முறை அந்த மகா

Scanned by CamScanner

புத்திசாலியான ஆல்ஃபிரட்டை நீ சந்திக்கும்போது, முதல் முதலா உன் முகம் அத்தனையையும் கொட்டியிருக்கும். அந்தப் பூனை... எலியை முகர்ந்திருக்கும். அப்புறம் என்ன... அவரைப் பிடிக்கும் வாய்ப்புகளே இல்லாமல் போயிருக்கும்.''

''கிடையாது, நீ நினைக்கிறதை விட பல மடங்கு சாமர்த்தியம் எனக்கு இருக்குனு நினைக்கிறேன்.''

மனம் இளகி ''ஹேஸ்டிங்ஸ்' என வேண்டிய பொய்ரெட், ''நான் மன்றாடிக் கேட்டுக்கிறேன்... வீணா கற்பனை பண்ணிக்காதே. உன் உதவிதான் இந்த வழக்கில் நடந்த துப்பறிதல் எல்லாவற்றிலும் விலைமதிப்பற்றது. நான் உன் குணங்களா சொன்ன இரண்டுமே.. மிக அழகானவை. அந்த அழகு குணங்கள் தான் என்னைத் தடுத்தன.''

''எவனாயிருந்தாலும் கவுத்துடற மாதிரி நல்லா பேசறே'' என்று பொருமிய நான், சற்று கோபம் தணிந்தவனாய், ''இப்போ கூட, நீ எனக்கு கண்டுபிடிக்க உதவும்படி ஏதாவது குறிப்புகளாவது தந்திருக்கலாம்னு தான் நினைக்கிறேன்'' என்றேன்.

''ஏய்.. நான் செஞ்சேன்டா. ஒண்ணு ரெண்டு இல்லே. பல பற்பல. நீ அதையெல்லாம் எடுத்துக்கலே. யோசிச்சுப் பார். ஜான் ஒரு குற்றவாளினு நான் நம்பறதா எப்போவாவது உன்கிட்டே சொல்லியிருக்கேனா? கிடையாது... மாறாக, அவர் குற்றவாளி அல்லனு நிச்சயமா முடிவாகும்னு தானே நான் சொன்னேன்?''

''ஆமாம், ஆனாலும்...''

''மேலும், அப்போ... உடனேயே, நீதியின் முன் குற்றவாளியைக் கொண்டு வந்து நிறுத்துவதில் இருக்கிற கடினங்களை நான் உன்கிட்டே எடுத்துச் சொல்லலே...? இரு வேறு நபர்களைக் குறிப்பிட்டுத் தான் நான் பேசிக்கிட்டு இருக்கேன் என்பது உனக்கு வெளிச்சமா... வெளிப்படையா தெரியலே?''

''இல்லை'' - நான் சொன்னேன். ''எனக்கு அது வெளிப்படையா புரியலே.''

''இன்னோர் உதாரணம்...'' - தொடர்ந்தான் அவன்: ''ஆரம்ப கட்டங்கள்ல, *இப்போ* ஆல்ஃபிரட்டுடைய கைது நடந்துடக் கூடாதுனு நான் உனக்குப் பல தடவை சொல்லலை? இது உனக்கு மறைமுகமா எதையாவது உணர்த்தியிருக்கணும், தெரியுமா?''

''எனில், அந்த ஆரம்பக் கட்டங்களிலிருந்தே நீ அவரை சந்தேகிக்க ஆரம்பிச்சுட்டேனா சொல்ல வர்றே?''

Scanned by CamScanner

''ஆமாம். விளக்கறேன். திருமதி எமிலியின் மரணத்துல யாருக்கு லாபம் இருக்கோ இல்லியோ... அவங்களுடைய கணவனுக்கு தான் அதிகபட்சம் லாபம் கிடைக்கும். இதுல பின் நோக்கி பார்க்கவே வேண்டாம். இது நிச்சயம். உன்னோட நான் ஸ்டைல்ஸ் மாளிகை வரைக்கும் வந்த அந்த முதல் நாள்ல, கொலை எப்படி செய்யப்பட்டது என்பது குறித்து எனக்கு எந்த உத்தேசமும் இருக்கலே. ஆனா, திரு. ஆல்ஃபிரட் பற்றி எனக்குத் தெரிஞ்ச கதையையெல்லாம் வெச்சு, அவரை இந்தக் குற்றத்துல இணைத்து வைக்கிற மாதிரி அங்கே துப்புகள் கிடைப்பது மிக மிக கஷ்டம்னு மட்டும் எனக்குப்பட்டது. மாளிகைக்குள்ளே நான் காலடி எடுத்து வெச்சதும், அந்தக் கணத்துல, உயிலை எரிச்சது திருமதி எமிலியே என்று உணர்ந்துட்டேன். இப்பவும் சொல்றேன்டா... அங்கேகூட, கொளுத்தும் வெயில்ல எதுக்கு கனப்பு எரியணும்னு இந்தத் துப்பின் முக்கியத்துவத்தை எப்படியெல்லாமோ முயற்சி செய்து உன் மண்டைக்குள்ளே புகுத்த முயற்சித்தேன். நான் உதவவேயில்லைனு குற்றமே சுமத்த முடியாது!''

''ஆமாம், ஆமாம்'' என்றேன் நான் பொறுமையிழந்து, ''மேலே போ.''

''சரி.. நான் எதிர்பார்த்தது மாதிரியே, திரு. ஆல்ஃபிரட்டே குற்றவாளி என்கிற என் கோணம், ரொம்பவே உலுக்கப்பட்டது. அங்கே அவருக்கு சாதகமா, அத்தனை சாட்சிகள். அவருக்கும் இதுக்கும் சம்பந்தமில்லை என்று முடிவு செய்யும் அளவுக்கு நான் தள்ளப்பட்டேன்.''

''எப்போ உன் எண்ணத்தை நீ மாத்தினே?''

''எத்தனைக்கெத்தனை அவரை நான் இந்த வழக்கிலிருந்து வெளியேற்றி வைக்க முயற்சிக்கிறேனோ, அத்தனைக்கத்தனை அவரே அவரை வலியக் கொண்டு வந்து குற்றவாளினு உள்ளே புகுத்தி கைதாகி விட முயற்சித்தார். அப்போ! இந்தக் கட்டத்துல, திருமதி ரமோலா பிரச்னையில் ஆல்ஃபிரட்டுக்கு எதுவும் கிடையாது. அந்த கள்ளத் தொடர்பிலே ஈடுபட்டிருப்பது திரு. ஜான் என்று நான் கண்டுபிடிச்சதும், விமரிசையா எனக்கு உறுதியாயிடுச்சு.''

''அதெப்படி?''

''சுலபம். ஆல்ஃபிரட் தான் திருமதி ரமோலாவோட அசிங்கமான தொடர்பு வெச்சிருக்கிறதா இருந்தா, அவரோட மௌனம், எளிதா விளக்கப்படுது. ஆனா, அந்தப் பண்ணைக்காரனின் கவர்ச்சி

மனைவியின் மீது விழுந்துக் கிடப்பது ஜான் தான் என்றும், இது கிராமம் முழுக்கவே பலருக்கு அரலும் புரளுமா தெரிஞ்சிருக்கு என்றும் நான் கண்டுபிடிச்ச பிறகு, அவரது மௌனத்துக்கான அர்த்தம் வேறு ஏதோ ஒன்றா ஆகுது. எது அது? இதனால விளையக் கூடிய அவப்பெயருக்கு பயந்து தான் அவர் அமைதியா இருக்காருனு சொன்னா... அது சுத்த மடத்தனம். ஏன்னா, அவருக்கு தான் இந்தக் கள்ளத் தொடர்புல சம்பந்தமே இல்லையே! வாயே திறக்காம அவர் இருந்த இந்த மனோபாவம் என்னை தீவிரமா சிந்திக்க வெச்சது. பிறகு மெதுமெதுவா, அவர் கைதாகணும்னு இருக்கார் எனும் முடிவுக்கு தள்ளப்பட்டேன். அதுதான் உண்மையும் கூட! ஆஹ்.. அப்படியா சேதி...! அப்படினா, அவருடைய நிலைப்பாட்டுக்குக் கொஞ்சமும் இளைக்காம, அந்த மனுஷன், கைதாகவே கூடாது என்று நானும் முடிவா இறங்கினேன்.''

''ஒரு நிமிஷம்.. அவர் கைதாகணும்னு ஏன் அப்படி விருப்பப்பட்டார்னு எனக்குப் புரியலே!''

''ஏன்னா... அருமை ஹேஸ்டிங்ஸ்... உங்களுடைய ஆங்கில மண்ணின் சட்டத்தால..! ஒரு குற்றத்திலிருந்து ஒருவன் குற்றமற்றவன் என அறிவிக்கப்பட்டு விடுதலையாயிட்டா, அவனை மறுபடியும் அதே வழக்குக்கான எந்த விசாரணைக்கும் அழைக்கக் கூடாது என்பது சட்டம்!''

''ஆஹ்!''

''ம்...! அது புத்திசாலித்தனம்டா... அவர் போட்ட திட்டத்தை சொல்றேன்! சத்தியமா ஹேஸ்டிங்ஸ்... எதையும் வழிவகையா செய்து முடிக்கும் மாபுத்திசாலி அவர்! கவனி... வழக்கு நிற்கும் நிலைமையில் நிச்சயமா அவர் பக்கம் சந்தேகம் திரும்பும்னு அவருக்கே தெரியும். அதனால அவருக்கு எதிராகவே இருக்கிற மாதிரி பற்பல சாட்சிகளை உருவாக்க, புத்திசாலித்தனமான பல திட்டங்களை அவர் தயாரிக்க ஆரம்பிச்சார்! அவர் கைதாக்கப் படணும்னு விரும்பினார். அதுதான் அவரைக் காப்பாத்தும் ஒரே ஆயுதம். சம்பவத்தன்று தான் வீட்டிலேயே இல்லேன்னு நிரூபிச்சுடுவார். ஆக, இந்த முதல் கைது அவரை நிச்சயம் விடுதலை செஞ்சுடும். ஹே... பிறகு வாழ்நாள் முழுக்கப் பாதுகாப்புதான்.''

''எனக்கு இன்னும் ஒண்ணு புரியலே.. வீட்டிலே இல்லேனு நிரூபிச்சாலும் அவர் மருந்துக் கிடங்குக்குப் போனதா இருக்கிற நிரூபணங்கள் என்ன ஆகும்?''

Scanned by CamScanner

பொய்ரெட் என்னை ஆச்சரியப் பார்வை பார்த்தான்.

''அவர் வீட்டிலும் இல்லே... கிடங்குக்கும் போகலே... வெகுளிடா நீ... மருந்துக் கிடங்குக்குப் போனது எவிலின் ஹோவோர்ட்டுன்னு நீ இன்னும் உணரலே!''

''எவிலின் ஹோவோர்ட்..?''

''சர்வ நிச்சயமா. வேறு யாரா இருக்க முடியும்? அவங்க ஒருத்தருக்கு தான் இது மிக சுலபம். அவங்க நல்ல உசரம். அவங்க குரலும் ஆழமா ஆண் குரல் மாதிரி. மேலும், நினைவிருக்கா, அவங்களும் ஆல்ஃபிரட்டும் சகோதர முறை. ஆக இருவருக்குள்ளும் தோற்ற ஒற்றுமை, குறிப்பா நடை பாவனையில் ஒற்றுமை நிறையவே இருக்கு. தானா வலிய வந்து வாய்த்துள்ள அதிர்ஷ்டம். ரெண்டு பேருமே புத்திசாலி இணைப்பா!''

''அந்த ப்ரோமைட் பிரச்னை எப்படி கையாளப்பட்டிருக்கும் என்பது இன்னும் எனக்கு தெளிவா தெரியாம பனி மூட்டமாத்தான் இருக்கு'' - நான் குறிப்பிட்டேன்.

''எப்படி உனக்குப் புரியும்படியா அமைக்க முடியுமோ... அத்தனை அளவுக்கு விஷயங்களை மறுபடியும் நான் அடுக்கி விளக்கறேன். கேள். எவிலின் ஹோவோர்ட் தான் இந்தக் குரூர இயக்கத்தின் முதுகெலும்பு அப்படினு நான் நினைக்கிறேன். இது துவக்கம். அவங்களுடைய அப்பா ஒரு டாக்டர்னு அவங்க ஒரு முறை சொல்லியிருக்காங்க. நினைவிருக்கா? தனது தகப்பனாருக்கு துணையா வேதிப் பொருட்களைக் கலந்து மருந்துக் கலவைகளைத் தயாரிப்பதில் இவங்க உதவியிருக்கலாம். அல்லது, இந்த மாபெரும் திட்டத்தை, செல்வி சிந்தியா பரீட்சைக்குப் படிக்க வைத்திருக்கும் பல புத்தகங்கள் ஏதாவது ஒன்றிலிருந்து அவங்க பிடுங்கியிருக்கலாம். எப்படியோ... ப்ரோமைட் துகள்களை ஸ்டிரிச்நைன் அடங்கியக் கரைசலில் சேர்க்கும்போது, அது, ஸ்டிரிச்நைனை அப்படியே ஒரு கரையாப் பொருளாக அடியில தங்க வெச்சுடும் என்பது இவங்களுக்குத் தெரிஞ்சிருக்கு. இந்த ஞானம், எதிர்பாராம திடுதிப்புன்னு தான் அவங்களுக்கு உதவியிருக்கணும். திருமதி எமிலி கிட்டே ப்ரோமைட் அடங்கிய மருந்துப் பெட்டி ஒண்ணு இருந்திருக்கு. அதை அவங்க எப்பவாவது இரவில் எடுத்துக் கிட்டிருக்காங்க. இப்ப கவனி... ஸ்டிரிச்நைன் அடங்கிய மருந்து, திருமதி எமிலிக்கு ஒரு பெரிய பாட்டில் கிடங்கிலிருந்து வரும்போது,



Scanned by CamScanner

அந்த புரோமைட் துகள்கள்ல கொஞ்சத்தை எடுத்து, ஓசைப் படாம பாட்டிலுக்குள்ளே கலந்து விடுவதை விட சுலபமான வேற வழி இருக்கத்தான் முடியுமா...! இதுல எவ்விதமான ஆபத்தும் கலப்பவருக்கு ஏற்படாது. மரணம், கிட்டத்தட்ட ரெண்டு வாரங்களுக்குப் பிறகு தான் இடம்பெறும். அப்படியே யாராவது பாட்டில்ல கலப்பதைப் பார்த்தாலும், ரெண்டு வாரங்களுக்கு அப்புறம் மறந்திருப்பாங்க. மேலும், திருமதி எமிலியோட ஒரு சண்டையை வலுவுக்கு ஏற்படுத்திக் கொண்டு அந்த சாக்குல மரணம் சம்பவிக்கும் நாட்களை ஒட்டி வெளியேறி விடுவதுதான் எவிலின் ஹோவோர்டுடைய திட்டம். இதெல்லாம் ஒண்ணா சேர்ந்து எவிலினை சுலபமா காப்பாத்திடும். சும்மா சொல்லக் கூடாது. நிச்சயமா இது மாபுத்திசாலி திட்டம் தான்! ஹேஸ்டிங்ஸ்... இந்த அத்தனையையும் இதே இடத்துல விட்டிருந்தா, அவங்களை யாராலும் கொலைக்குற்ற வட்டத்துக்குள்ளே கொண்டு வந்திருக்க முடியாது. ஆனா அவங்க ரெண்டு பேருமே திருப்தியடையலே... இன்னும் புத்திசாலித்தனமா நடந்துக்க விரும்பினாங்க. அதுதான் அவங்களை அடையாளம் காட்ட அவங்களே செய்துக் கொண்ட தப்பு!''

இதைச் சொல்லும் போது தனது சிகரெட்டிலிருந்து வட்ட வட்ட புகைகளை விடுவித்துக் கொண்டு விட்டத்தையே பார்த்தபடி யிருந்தான் பொய்ரெட்.

''ஜான் கேவண்டிஷ் மீது அனைத்து சந்தேகங்களையும் அப்படியே திசை திருப்பத் திட்டமிட ஆரம்பிச்சாங்க. கிராம மருந்துக் கிடங்குல ஸ்டிரிச்நைன் வாங்கி, அங்கேயுள்ள பதிவேட்டுல அவருடைய கையெழுத்துலேயே எழுதுவதன் மூலம் இந்தத் திட்டத்தைத் துவங்கினாங்க.

''திங்கள் கிழமையன்று, திருமதி எமிலி, அவங்க டானிக்கின் கடைசி மடக்குகளைக் குடிப்பாங்க. ஆகவே, திங்களன்று, ஆறு மணிக்கு, கிராமத்திலிருந்து மிகவும் ஒதுங்கி எங்கேயோ ஒரு மூலையில் இருக்கும் இடத்துல, அங்கிருக்கும் பலரும் தன்னைப் பார்க்கும்படியான ஓர் ஏற்பாட்டைச் செய்துக் கொள்கிறார் ஆல்ஃபிரட். திருமதி ரமோலாவுக்கும் இந்த ஆல்ஃபிரட்டுக்கும் இடையே ஒரு கட்டுக் கதையைப் பின்னி விட்டு, ஆல்ஃபிரட் வாயே திறக்காம இருப்பதற்கான காரணத்தை ஏற்கனவே எவிலின்

ஏற்படுத்தியாச்சு. ஆறு மணிக்கு, எவிலின் ஹோவோர்ட், ஆல்ஃபிரட்டாக வேடமிட்டுக்கிட்டு மருந்துக் கிடங்குக்குள் நுழையறாங்க. கூடவே ஒரு நாய் கதை. இதைச் சொல்லி ஸ்டிரிச்நைன் வாங்கப்படுது. பிறகு கிடங்கின் பதிவேட்டில், ஜானின் கையெழுத்துல 'ஆல்ஃபிரட்'னு எழுதி கையொப்பம் வைக்கிறாங்க. இதைச் செய்ய ஜானின் கையெழுத்தை முன்கூட்டியே தீவிரமா அலசி கத்துக்கிறாங்க.

''ஆனா, இதுக்கு ஜானும் வேற இடத்துல தான் இருந்ததா சாட்சி ஒண்ணு தந்துட்டா, சுத்தமா உதவாது... ஸோ இந்த விஷயத்துல அவரை முந்திக்கணும்! அதனால, ஜானுக்கு ஜான் கையெழுத் துலேயே ஒரு மிரட்டல் கடுதாசியை எவிலின் எழுதி அனுப்பறாங்க. ஏதோ ஓர் ஆதரவற்ற ஒரு காட்டுக்கு வரச் சொன்னதா அதுல குறிப்பிடறாங்க. அப்போதானே ஜான் அங்கே இருந்தார் என்பதற்கு ஒரே ஒரு நபர் கூட சாட்சி சொல்ல முடியாது. மேலும் அவரே அவருக்கு ஒரு கடுதாசி எழுதிக்கிட்டு பொய் சொல்வதா ஊர்ஜிதமாகும்!

''இதுவரைக்கும், அவங்கத் திட்டப்படி, எல்லாமும் அழகா போகுது. ஹோவோர்ட் சண்டை பிடிச்சிக்கிட்டு கிளம்பிடறாங்க. ஆல்ஃபிரட் பிறகு ஸ்டைல்ஸுக்குத் திரும்பறாரு. ஆல்ஃபிரட்டை எதுவுமே காட்டிக் கொடுக்காது! அந்த ஸ்டிரிச்நைன் பாட்டில்... அதுவும் இப்போதைக்கு ஹோவோர்ட் கையிலதான் இருக்கு – பிறகு ஜான் மேலே ஒரு குருட்டு சந்தேகத்தை உண்டு பண்ண!

''ஆனா, இப்போ ஒரு தடுமாற்றம் ஏற்பட்டுடுது... திருமதி எமிலி அவங்களுடைய கடைசி மடக்குகள் மருந்தை அன்றைக்கு இரவு எடுத்துக்கலே... அலார மணி ஒயரை அறுத்தது... திருமதி எமிலி மூலமாகவே சிந்தியாவை அன்றிரவு வெளியே இருக்குமாறு ஏற்பாடு செஞ்சது... எல்லாமும் வீணாப் போகுது. இப்போ தான் உட்கார்ந்து அந்த சீட்டை எழுதறார், ஆல்ஃபிரட்.

''திருமதி எமிலி வீட்டிலே இல்லே. திட்டம் நிறைவேறும் இரவு, என்ன நடந்துக்கிட்டு இருக்கோ எனும் படபடப்புல தன்னுடைய கூட்டாளி இருப்பாளே எனும் பயத்துல அந்த சீட்டை எழுதறார். அந்தச் சமயத்துல, திரும்ப வேண்டிய நேரத்துக்கு முன்னாடியே திருமதி எமிலி மாளிகைக்குத் திரும்பியிருக்க வேண்டும். திடுக்கிடல். பாதி எழுதும்போது மாட்டிக்கக் கூடாது! பரபரப்பா இயங்கி,

Scanned by CamScanner

தன்னுடைய மேஜையில அந்தக் காகிதத்தைத் திணிச்சுப் பூட்டிடறாரு. அங்கேயே அவர் இருந்திருக்கலாம். ஆனா, படபடப்புல அந்தக் காகிதத் துண்டை எடுக்க அவர் முயற்சிக்கலாம்... எடுத்து அதனை மறைக்கறதுக்குள்ளே அதை எமிலியும் பார்த்துட நேரிடலாம்! எதுக்கு வம்பு... இருந்தாத்தானே இத்தனைக் குழப்பம் என்று கிளம்பி மரங்களுக்கு இடையே ஒரு சிறு நடை நடக்கப் போயிடறாரு. அப்போகூட ஒருவேளை எமிலி மேஜையின் தட்டைத் திறந்துடுவாளோ.. பாதி எழுதின சமாச்சாரத்தைப் பார்த்துடு வாளோ... அப்படினுதான் அவர் பயந்திருக்கணும். பயந்திருக்கார்.

''அவர் பயந்ததுதான் நடந்திருக்கு. திருமதி எமிலி அதைப் படிக்கிறாங்க. தனது கணவன் மற்றும் எவிலினின் நயவஞ்சக நடத்தை அவங்களுக்குத் தெரிய வந்தது. இருந்தாலும், துரதிர்ஷ்டவசமா, ப்ரோமைட் பவுடர்கள் பற்றிய வார்த்தைகள் அவருடைய மூளைக்கு எவ்விதமான முன்னெச்சரிக்கையையும் கொடுக்கலே. அவங்க மாபெரும் ஆபத்தின் நடுவில் இருப்பது அவங்களுக்குத் தெரியுது... ஆனா அந்த ஆபத்து எங்கே, எந்த ரூபத்துல பதுங்கியிருக்கும்னு, பாவம், அவங்களால உணர முடியலே. இனி தனது கணவனிடம் ஒன்றும் வெச்சுக்கக் கூடாதுன்னு முடிவு பண்றாங்க. அதனால் மறுநாள் காலைல தவறாம வந்து தன்னைப் பார்க்கும்படி தன்னுடைய வக்கீலுக்கு ஒரு குறிப்பு எழுதறாங்க. மேலும், அப்போ தான் அவங்க மாற்றி செஞ்சிருந்தப் புது உயிலை அழிச்சிடவும் முடிவு செய்யறாங்க. இந்தக் களேபரத்திலும், மேஜையிலிருந்து எடுத்த அந்தக் கடுதாசியைத் தன்னிடமே வெச்சுக்கிறாங்க.''

''அப்போ, அந்தக் கடுதாசியைக் கண்டெடுக்கத்தான் திருமதி எமிலியுடைய பிரத்யேகக் கைப்பெட்டியின் தாழ்ப்பாளை ஆல்ஃபிரட் உடைச்சிருக்காரா?''

''ஆமாம். இதைப் பண்றதுல இருக்கிற கடும் ஆபத்தையும் மீறி அவர் இயங்கியிருப்பதிலிருந்தே, அந்தத் துண்டுக் கடிதம் எத்தனை முக்கியமானதுனு நமக்குத் தெரியணும். அந்தத் துண்டுச் சீட்டை மட்டும் இல்லாமப் பண்ணிட்டா... அவரை குற்றத்துடன் இணைக்க எதுவுமே கிடையாது. இதுதான்... அந்தக் கடைசி இணைப்பு.''

''இங்கே மறுபடியும் எனக்கொரு நெருடல்.. அது கையில் கிடைச்ச மறுநொடியே ஏன் அவர் அதை ஒழிச்சிருக்கக் கூடாது?''

Scanned by CamScanner

''எல்லா தவறையும் விட மாபெரும் தவறான ஒன்றினைச் செய்ய அவர் துணியலே... அதாவது அந்தக் கடிதத்தை அவரே வைத்துக் கொள்வது.''

''புரியவே இல்லை.''

''அவர் கோணத்துல இருந்து விஷயத்தைப் பார்டா புரியும். அதைக் கையகப்படுத்த அவருக்கு ஐந்தே ஐந்து நிமிடங்கள் தான் அவகாசம் இருந்ததுனு நான் கண்டுபிடிச்சேன். நாம அந்தக் கொலைக் களனுக்குள் வந்ததிலிருந்து ஐந்து நிமிடங்கள்... இதுக்கு முன்னால தான், ஆனி படிக்கட்டுகள் மற்றும் தரையை மெழுகி சுத்தம் செய்துக்கிட்டிருந்திருக்கா... அதனால வலப்புறப் பகுதிக்கு யார் போயிருந்தாலும் அவ நிச்சயமா கவனிச்சிருப்பா. காட்சியை நீயே கண் முன்னாடி கொண்டு வந்து பார்! இன்னொரு கதவின் சாவியைப் பயன்படுத்தி கதவைத் திறந்து அறைக்குள்ளே அவர் நுழையறார் - எல்லா கதவு சாவிகளும் ஒரே மாதிரியே தான் இருக்கு. பிரத்யேகக் கைப் பெட்டியைத் தேடிக்கிட்டு ஓடறார். அது பூட்டியிருக்கு. அதன் சாவியும் எங்கும் தென்படலே. உள்ளே, அவர் அனுபவிச்சது பெரும் மனக்கலவரம். தேடவும் இயலாது. அவர் உள்ளே இருக்கும் விஷயத்தை ரொம்ப நேரம் மறைச்சு வைக்க முடியாதே! ஆனாலும், என்ன எதிர்ப்பு வந்தாலும் சந்திச்சே தீரணும்னு அவர் மனசு உந்தித் தள்ளுது... எல்லாம் அந்தத் துண்டுச் சீட்டுத் தரவல்ல சாட்சிக்காக! வேகமா, ஒரு சிறு பேனா கத்தியால, அந்தப் பெட்டியின் பூட்டை நெம்பறார்... உள்ளே இருக்கிறதையெல்லாம் அவர் தேடறது கிடைக்கிற வரைக்கும் கலையறார்.

''ஆனா இப்போ ஒரு புது குழப்பம் எழுது. அந்தத் தாளை அவரிடமே மறைத்து வைத்துக் கொள்ளக் கூடாது. அவர் அறையை விட்டு வெளியே போவதை யாராவது பார்க்கக் கூடும்... அவர் கிட்டே ஏதாவது இருக்கானு தேடப்படும். அந்தத் தாள் அவர்கிட்டே கண்டுபிடிக்கப்பட்டா கிழிஞ்சுது! இந்த நிமிடத்துல, திரு. வேல்ஸும், திரு. ஜானும் எமிலியின் பிரத்யேக அறையை விட்டு வெளியேறும் ஓசையை இவர் கேட்டிருக்கலாம். உடனடியா ஆல்ஃபிரட் இயங்கியாகணும். இந்த மகா அபாயத்துண்டுக் காகிதத்தை அவர் எங்கே போட்டு ஓடுவார்? குப்பைக் கூடையிலே இருந்தவை கூட பரிசோதனைக்குக் கொண்டு போகப்பட்டிருக்கு! அதுல மேல எதைப் போட்டாலும் அதுகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

Scanned by CamScanner

அதைப் பாழாக்கி ஒழிக்க ஒரு வழியும் இல்லை. அவர் தன்கிட்டேயும் அதை வெச்சுக்கவே முடியாது. சுற்றுமுற்றும் பார்க்கிறார். அப்போ, அவர் பார்க்கிறார் - எதைனு நீ நினைக்கிற ஹேஸ்டிங்ஸ்?''

நான் மறுத்துத் தலையசைத்தேன்.

''ஒரே நொடியில, அந்தத் தாளை நீளமான சிறு சிறு இழைகளா உரிச்சது மாதிரி கிழிக்கிறார். உடனடியா அதையெல்லாம் ஒரு சுருட்டு சுருட்டறார். ஏற்கனவே என்னவெல்லாமோ போடப் பட்டிருந்த பூ ஜாடியில.. அதாவது அந்த அலமாரி அருகிலிருந்த பெரிய பூ ஜாடியில.. இவற்றையும் அவசரமா தூவி விடறார்.''

ஆச்சரியம் தாங்காது விழித்தேன்.

''வேண்டாதது எல்லாம் அவ்வப்போது போடப்பட்டு சிறு குப்பையாயிருந்த அந்தப் பூ ஜாடியின் பரப்பை, யாரும் வந்து எட்டிப் பார்க்கப் போவது கிடையாது'' என தொடர்ந்த பொய்ரெட், ''நேரம் கிடைக்கும்போது சாவகாசமா வந்து அவருக்கு எதிரா உள்ள ஒரே ஒரு தெய்வீக சாட்சியான இதை ஒரு கை பார்த்துக்க அவருக்கு ஏகமா வாய்ப்புகள் இருக்கு'' என் முடித்தான்.

''அப்படினா, நம்ம மோப்ப மூக்குக்கு அடியிலேயே, இத்தனை நாளா அந்தப் பூ ஜாடியிலேயேவா கிழித்தக் காகிதத் துண்டுகள் இருந்திருக்கு?'' நான் அலறினேன்.

பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்தான்.

''ஆமாம், ஆத்ம நண்பா! அங்கே தான் என்னுடைய 'கடைசி இணைப்பை' நான் கண்டெடுத்தேன். இந்த அதிர்ஷ்டவசமான கண்டுபிடிப்பை நான் உனக்குத்தான் அர்ப்பணிக்கிறேன்.''

''எனக்கா?''

''ஆமாம். பூ ஜாடியின் அலங்காரங்களை நான் என் கையாலே சரிசெய்துக் கொண்டிருக்கும்போது, என் கைகளில் அதிக நடுக்கம் இருப்பதாய் நீ என்னிடம் சொன்னது உனக்கு நினைவிருக்கா?''

''ஆமாம். ஆனா எனக்கு அதுல ஒண்ணும்...''

''உனக்கு ஒண்ணும் முக்கியமா தெரியலே. ஆனா, எனக்குத் தெரிஞ்சது. நாம ரெண்டு பேரும் அங்கே போயிருந்தபோது அங்கிருந்த பூ ஜாடியின் கிளைகளையெல்லாம் நான் சரிசெய்து நேர்த்தியாக்கினதைப் பற்றி, இன்னிக்குக் காலையில நான் நினைவுபடுத்திப் பேசியது உனக்கு மறந்திருக்காது. அவை ரொம்ப மடக்கப்பட்டிருந்தன. நிச்சயமா அந்த நிலையில அதை யாரும்

Scanned by CamScanner

வெச்சிருக்க மாட்டாங்க. யாரோ, சமீபத்துல, அதை அவசரமா தொட்டுக் கை போன போக்குலக் கையாண்டதால தான் அது அப்படி கசங்கிப் போயிருக்கு.''

''ஹேய்.. ஹேய்'' நான் முணுமுணுத்தேன். ''அப்போ இதுதான் உன்னுடைய அசாதாரண போக்குக்கு விளக்கமா..! நீ ஸ்டைல்ஸுக்கு விழுந்தடிச்சுக்கிட்டு ஓடியிருக்கே... அங்கே அதைப் பார்த்தியா?'

''ஆமாம்... நழுவிக் கொண்டிருந்த நேரத்துடன் தான் நடத்திய ஓட்டம் அது!''

''அதை அழித்துவிட ஏகமா வாய்ப்புகள் அமைந்திருந்தும், ஒரு முட்டாள் மாதிரி இத்தனை நாளா அதை ஏன் ஆல்ஃபிரெட் அங்கேயே விட்டு வெச்சிருக்கணும்?''

''ஆஹ்! அவருக்கு வாய்ப்புகளே அமையலேடா, அப்படி நான் கவனிச்சிக்கிட்டேன்''

''நீ?''

''ம்! நீர் புகாப் பெட்டி போல, அந்த மாளிகையை என்னுடைய கட்டுப்பாட்டுக்குள்ளே நான் எடுத்துக்கிட்டது நினைவிருக்கா?''

''ஆமாம்..''

''நண்பா... ஒரே ஒரு வாய்ப்புதான் என் முன்னாடி இருந்தது. அந்தச் சமயத்துல ஆல்ஃபிரட் கொலைகாரன்னா இல்லையா என்பது குறித்து எனக்கு நிச்சயப்படுத்தித் தெரியாது. ஒருவேளை அவராயிருந்தால், அவர் கிட்டே அந்தத் தாள் இருக்காது என்பது தெளிவாச்சு... எங்கேயாவது ஒளிச்சு வெச்சிருப்பார். மாளிகை வாசிகளின் நல் அபிப்ராயத்தையும் கருணையையும் சம்பாதிச்சுட்டா, அவர் அதை சிதைப்பதை என்னால அழகா தடுத்துட முடியும். அவர் ஏற்கனவே சந்தேகப் பட்டியல்ல இருக்கார். அதனால பத்து துப்பறியும் ஆட்களின் உதவியை நாடினேன். களத்துல விட்டேன். அவருக்குத் தெரியற மாதிரி அவரைக் கண்காணிக்க ஆணையிட்டேன். இது தெரிஞ்சிருந்தும் எந்தக் காலகட்டத்திலும் துணிஞ்சு அதை சிதைக்க அவர் அடியெடுத்து வைக்க மாட்டார். தன்னை சில புது முகங்கள் மறைவா கண்காணிப்பது தெரிஞ்சதும், பயம் தலைக்கேற, காகிதத் துண்டுகளை அப்படியே மறந்துட்டு, வீட்டை விட்டே வெளியேறிவிடும் நிலைக்கு அவர் தள்ளப்பட்டார். கொலைகாரன் என்ற அவர் மீதான என் சந்தேகம் நீக்கமற நிச்சயமாச்சு.''

Scanned by CamScanner

''ஆனா, இந்த விஷயத்துல அவருக்கு உதவ, எவிலின் ஹோவோர்ட்டுக்கு ஏகப்பட்ட சந்தர்ப்பங்கள் இருந்திருக்கும்.''

''ஆமாம்... ஆனா ஹோவோர்ட்டுக்கு இப்படி ஒரு தாள் இருப்பதே தெரியாதே! முன்கூட்டியே ரெண்டு பேரும் போட்டிருந்த திட்டத்தின்படி, இவங்க அவர் கூட பேசக் கூடாது! அவங்க ரெண்டு பேரும் ஜென்ம விரோதிகள் போல இருக்கணும். ஜான் மேல குற்றம் நிரூபணமாகிற வரைக்கும், இவங்க ரெண்டு பேரும் சந்திக்கிறது, பேசறது போன்ற எதையுமே கையிலெடுக்க துணியலே. இருந்த போதிலும், உடனடியாகவோ அல்லது கொஞ்ச காலம் கழிச்சோ, எனக்கு அவருடைய ரகசிய இடத்தை எப்படியாவது காட்டிக் கொடுத்திடுவார்னு நினைச்சு, அவர் மேல கண்கொத்திப் பாம்பா கண் வெச்சிருந்தேன். ஓஹ்... அவர் தான் மாபுத்திசாலி ஆச்சே... அப்படி ஒரு வாய்ப்பைக் கூட எனக்குத் தரலே! எங்கேயிருந்ததோ அங்கேயே அந்தத் தாள் பத்திரமா இருந்தது. ஆரம்ப நாட்களில் அந்தப் பூ ஜாடி தேடப்படாததால், பிறகு அது கண்டு கொள்ளப் படவில்லை. உன்னுடைய சமயோஜித குறிப்பு மட்டும் இல்லேனா ஹேஸ்டிங்ஸ்... இதுங்க ரெண்டுத்தையும் நீதியின் கரங்கள்ல நம்மால் பிடிச்சுக் கொடுத்திருக்கவே முடியாது.''

''இப்போ அது புரியுது, ஆனா நீ எப்போ ஹோவோர்டை சந்தேகப்படத் துவங்கினே?''

''திருமதி எமிலியிடமிருந்து வந்திருந்த கடிதம் குறித்து, மரண விசாரணையில் எவிலின் பொய் சொன்ன விஷயத்தை நான் கண்டுபிடிச்ச போது..''

''ஏன்.. அதுல பொய் சொல்ல என்ன இருக்கு?''

''நீ அந்தக் கடிதத்தைப் பார்த்தியா? அதோட பொதுப்படையான தோற்றத்தை உன்னால நினைவுக்குக் கொண்டுவர முடியுதா?''

''ம்... ஏறக்குறைய.''

''அப்போ, தனித்துவம் மிக்க கையெழுத்திலும் ஒவ்வொரு வார்த்தைக்கும் இடையிடையே அழகான இடைவெளிகள் விட்டும் அந்தக் கடிதத்தைத் திருமதி எமிலி எழுதியிருந்ததை, உன்னால நினைவுபடுத்த முடியணும். ஆனா, கடிதத்தின் உச்சியில் எழுதப் பட்டிருந்த 'ஜூலை 17' எனும் தேதி மட்டும், இந்த அமைப்புல சேராம தனித்துத் தொக்கி நிற்பதைக் காணலாம். நான் என்ன சொல்ல வர்றேன்னு தெரியுதா?''

''இல்லை'' என ஒப்புக் கொண்டேன் நான். ''எனக்குத் தெரியலே.''

''அந்தக் கடிதம் 17 அன்று எழுதப்படலே. ஆனா, 7 அன்று – ஹோரவோர்ட் மாளிகையை விட்டுக் கிளம்பின மறுநாள் எழுதப் பட்டிருக்குனு உனக்குத் தெரியலே? அந்த '1', அங்கிருந்த '7'க்கு முன்னால் போடப்பட்டு, 17 என ஆக்கப்பட்டிருக்கு.''

''இது எதுக்கு?''

''இதைத்தான் வெகு சரியா என்னை நானே கேட்டுக்கிட்டேன். 17 என்று எழுதப்பட்ட கடிதத்தை மறைத்து விட்டு, அதுக்கு பதிலா, எதுக்காக இந்தப் பொய்க் கடிதத்தை ஹோரவோர்ட் சமர்ப்பிக்கணும்? ஏன்னா, 17 ஆம் தேதி கடிதத்தைக் காட்ட அவங்களுக்கு சம்மத மில்லை. மறுபடியும் ஏன்? இக்கேள்விகள் வந்ததும் உடனே ஒரு சந்தேகம் என் மூளைக்குள் உதயமாச்சு. ஆக - எவிலின் நடவடிக்கை கள்ல ஏதோ தில்லுமுல்லு இருக்கு! நம்மகிட்டே உண்மையைச் சொல்லாத ஒருவரிடம் சர்வ ஜாக்கிரதையாக இருப்பதே சிறந்த புத்திசாலித்தனம்னு நான் அடிக்கடி சொல்வது உனக்கு நினைவிருக்கணும்!''

''அது இருக்கு, ஆனாலும்'' என்று பொறுமையற்று சொன்ன நான், ''இதுக்குப் பிறகும் கூட, ஹோரவோர்ட் இந்தக் குற்றத்துல ஈடுபட்டிருக்க முடியாது என்பதற்கு, நீ இரண்டு காரணங்கள் சொல்லியிருக்கே'' என நினைவூட்டினேன்.

இதற்கு, ''அவை மிகச் சிறப்பான காரணங்கள், தெரியுமா?'' என்றான் பொய்ரெட். ''அந்த இரண்டும் தான், ஒரு குறிப்பிடத் தகுந்த உண்மையை நான் உணரும் வரைக்கும், ரொம்பக் காலத்துக்கு எனக்கு இடையூறா இருந்த தடைக்கற்கள். அந்த உண்மை: ஹோரவோர்ட்டும் ஆல்ஃபிரட்டும், அண்ணன் - தங்கை முறை! தன்னந்தனியா நின்னு ஒரு கொலையைச் செய்யும் வகை அல்ல ஹோரவோர்ட். ஆனா, இந்தக் காரணத்தால், அப்படி ஒரு கொலைக்கு அவங்களால் சிறப்பான உடந்தையாயிருக்க முடியும் எனும் உண்மையை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது! மேலும், எப்போதும் பரிமளித்த மிகைப்படுத்தப்பட்ட அவங்களுடைய குரோதம்.. கோபம்! இவற்றிற்கு நேர் எதிரான உணர்வுகளை மறைத்து வைக்க உதவிய கேடயம் இது! ஆல்ஃபிரட், ஸ்டைல்ஸுக்கு வர்றதுக்கு முன்னாடியே ரெண்டு பேருக்கு இடையேயும் பிரிக்க முடியாத

அன்புப் பிணைப்பு இருக்கத்தான் செய்துள்ளது. அவங்களுடைய திட்டத்தை இங்கே வந்தெல்லாம் ரெண்டு பேரும் தீட்டலே. நல்லா கூரா திட்டம் தீட்டிக்கிட்டுத் தான் உள்ளே நுழைஞ்சிருக்காங்க - இந்தப் பணக்கார, ஆனால் முட்டாள் எமிலியை மணக்கணும்... எவ்வளவு சாத்வீகமா முடியுமோ அத்தனை தூரத்துக்கு அஹிம்ஸாவாதியா நடந்துக்கிட்டு அவங்களுடைய நற்மதிப்பைப் பெறணும்... அதைத் தூண்டுகோலா வெச்சுக்கிட்டு சொத்துக்களை எழுதி உயிலா வாங்கணும்... கடைசியா தங்களுடைய மிகச் சிறப்பான கொலைத் திட்டத்தை அரங்கேற்றி முடிக்கணும்...! இதெல்லாம் ஒழுங்கா முறையா நடந்திருந்தா, ரெண்டு பேரும் இங்கிலாந்தை விட்டே ஓடி வெளியேறி, முட்டாள் எமிலியின் முழுப் பணத்துல ஜாம் ஜாமுனு வாழ்ந்திருப்பாங்க.

''இவங்க ரெண்டு பேரும் ஈவிரக்கமற்ற கொடூர ஜோடி. ஆல்ஃபிரட்டுக்கு எதிரா சந்தேகங்கள் வலுப்பெற்றுக் கொண்டிருக்கும்போது, இந்தம்மா அமைதியா முழுக்க முழுக்க வித்தியாசமான ஒரு புதுக் கதையைத் தயாரிச்சுக்கிட்டு இருப்பாங்க. அந்தக் கதையின் அனைத்து சங்கதிகளையும் சுமந்துக்கிட்டு கோபிச்சுக்கிட்டுப் போனப் பொம்பிளை சில நாட்கள் கழிச்சுத் திரும்பி வரும். அவ மேல தான் சந்தேகமே கிடையாதே... அதனால அவங்க வர்றது போறது எதைப் பற்றியும் மாளிகையில் யாரும் கவனிப்பது கிடையாது. ஸ்டிரிச்நைன், கண்ணாடி எல்லாத்தையும் ஜான் ரூம்ல பதுக்கிடறாங்க. உடனடியாகவோ அல்லது கொஞ்ச காலம் கழித்தோ இதெல்லாம் எப்படியாவது போலீஸ் கைக்கு சிக்கற மாதிரி செய்றதுதான் அவங்களுடைய முழு முதற் நோக்கம்.''

''பொய்ரெட்! இன்னும் கூட, எதுக்காக குறிப்பா ஜான் மேல பழியை நிலைநிறுத்தணும்னு அவங்க துடிச்சாங்க என்று எனக்கு தெரியலே! லாரன்ஸ் மேல பழியை நிறுத்துவதுதானே அவங்களுக்கு சுலபமான ஒன்றா இருந்திருக்கும்?''

''ஆமாம்... ஆனா இது எதேச்சையா நடந்துட்ட ஒன்று. ஜானுக்கு எதிரா விளைந்த அத்தனை சாட்சிகளும் தானா எழுந்தவை.''

''துரதிர்ஷ்டசாலி.''

''ஆமாம். ஆனா உனக்கு ஒண்ணு தெரியுமா... அவர் செல்வி சிந்தியாவை சந்தேகப்பட்டார்.''

''கிடையாது'' - ஆச்சரியத்தால் அலறினேன் நான். ''வாய்ப்பே இல்லை.''

Scanned by CamScanner

''கிடையவே கிடையாது. நானே கூட ஏறத்தாழ அப்படித்தான் நினைச்சேன். என் மூளைக்குள்ளே இப்படி ஓர் ஊகம் இருந்தது. வேல்ஸ் கிட்டே, உயில் பற்றி நான் முதல் கேள்வி கேட்டதே, இதை மனசுல வெச்சுக்கிட்டுத்தான். அப்புறம் அந்த ப்ரோமைட் தூள்கள்... சிந்தியா தான் அதுல பிரசித்தம்! இன்னும் உண்டு. நானி நம்மகிட்ட சொன்னது போல சிறப்பா ஆண் வேடம் போடறதுல கில்லாடி! சொல்லப் போனா வேற யாரையும் விட இந்தப் பொண்ணுக்கு எதிரா தான் ஏகமா சாட்சிகள் இருக்கு! முக்கியமா ஒண்ணு சொல்றேன்... கேளு. தன்னுடைய தாயாரின் அறைக்குள்ளே முதல்ல நுழைஞ்சதும், என்ன காரணத்தால திரு. லாரன்ஸின் முகம் அந்த அளவுக்கு வெளிறி விக்கித்துப் போனது நான் சொல்லட்டுமா?''

''???''

''அவருடைய அம்மா, விஷம் ஏற்றப்பட்டதால அங்கே படுக்கையில் கிடக்க, திரு. லாரன்ஸ், உன்னுடைய தோள்களின் வழியா, உனக்குப் பின்னால, செல்வி சிந்தியாவின் அறைக்கு இங்கிருந்து வழி செய்துத் தரும் கதவு... *தாளிடப்படாம* இருந்ததைக் கவனிக்கிறாரு.''

''ஆனா அவர்தான் அந்தக் கதவு பூட்டப்பட்டிருந்ததா அறிவிச்சாரே?''

''அப்படியே'' என்றான் பொய்ரெட் வறட்சியாய். ''இந்த அறிவிப்புதான், அப்படி இருந்திருக்காது என்ற என் சந்தேகத்தை ஊர்ஜிதமாக்கியது. ஆக, அவர் சிந்தியாவுக்குக் கவசமா நிற்கிறார்.''

''ஏன் அவர் அவளைக் காக்கணும்?''

''ஏன்னா, இவர், அவளைக் காதலிக்கிறார்.''

நான் சிரித்தேன்.

''இதுல நீ ரொம்ப தப்பான முடிவில இருக்கே, பொய்ரெட்! உனக்கு ஓர் உண்மையைச் சொல்றேன். அவ மேல காதலா இருக்கிறதை விட, அவளை முழுக்க முழுக்க இவர் வெறுக்கிறார்னு எனக்குத் தெரியும்.''

''யார் அதை உன்கிட்டே சொன்னது, நண்பா?''

''சிந்தியாவே.''

''அப்படினா, அவ, அவர் மேல உயிரையே வெச்சிருக்கானு அர்த்தம்டா...''

''எப்படி?''

Scanned by CamScanner

''அப்படித்தான். அதுங்க அப்படி ஒரு ஜோடி. இல்லை இல்லைனு சொல்லிக்கிட்டே 'இருக்கும்' ஜோடி.''

''லாரன்ஸைப் பற்றி நீ இப்படி சொல்வது எனக்கு மாபெரும் ஆச்சரியம்!'' - சொன்னேன் நான்.

''என்ன ஆச்சரியம் இதுல? இதுதான் அவர். லாரன்ஸோட சகோதரரான ஜான் கூட சிந்தியா சிரிச்சுப் பேசி மகிழும் ஒவ்வொரு முறையும் இந்த லாரன்ஸின் முகம் களையிழந்து தொய்ந்துப் போகலே? தேவையேயில்லாம, அவருடைய ஒப்பேறாத மூளைக்குள்ளே, சிந்தியாப் பொண்ணு ஜானைத் தான் விரும்புதுனு நல்லா ஏத்திக்கிட்டிருக்காரு, இந்த லாரன்ஸ்! தன்னுடைய தாயாரின் அறைக்குள்ளே நுழைஞ்சு அங்கே அவங்க விஷம் தந்து வீழ்த்தப்பட்டிருப்பதைப் புரிந்துக் கொண்டதும், சிந்திக்கவே செய்யாம, உடனடியா, சிந்தியாவுக்கு இது பற்றி நிச்சயமா ஏதோ தெரிஞ்சிருக்கு எனும் முடிவுக்குள்ளே குதிச்சுடறார் லாரன்ஸ். இந்த சந்தேகத்தாலே அவருக்குக் கை கால் ஓடலே. திக்கற்று ஆயிடறார். முந்தைய ராத்திரி சிந்தியா தான் அவருடைய அம்மாவோடு போனது என்பதை மனதில் கொண்டு, முதல் வேலையா, அந்தக் காபிக் கோப்பையை, அதுல இருந்த ஒரு சொட்டு கூட மேற்கொண்டு பரிசோதனைக்கு உதவாத அளவுக்கு, தனது கால்களுக்கு அடியில போட்டுத் தவிடு பொடியாக்கிடறார்! அப்போ ஆரம்பிக்கிறார்... ஒரு கதையைத் தூக்கிப் பிடிக்க! ரொம்ப சிரமப்பட்டு, 'இயற்கையா தான் அம்மா மரணமடைஞ்சிருக்காங்க' எனும் பைசா பெறாத கதையைத் தூக்கிப் பிடிக்கிறார்...!''

''அந்தக் கூடுதல் எக்ஸ்ட்ரா காபிக் கோப்பை கதை..?!''

''அதை திருமதி மேரிதான் பதுக்கியிருக்காங்கனு எனக்கு ஏறத்தாழ தெரிஞ்சுட்டாலும், அதை நான் ஊர்ஜிதப்படுத்திக்கணுமே! நான் லாரன்ஸிடம் போய் உன்னை சொன்ன சொன்ன வாக்கியத்தின் அர்த்தம் என்பது, எத்தனை யோசிச்சும், அவருக்குத் துளியும் விளங்கலே. ஆனா, அந்த சிந்தனையின் விளைவாக, அந்த எக்ஸ்ட்ரா கோப்பையை மட்டும் கண்டு பிடிச்சுட்டா, தனது இதய ராணியின் மீது இருக்கும் சந்தேகம் பூண்டோடு அழிஞ்சுடலாம் எனும் முடிவுக்கு அவர் தள்ளப்படுகிறார். அவர் நினைத்த இதுவும் சரி தான்.''

Scanned by CamScanner

''இன்னும் ஒண்ணு... மரண வாசலில் நின்னுக்கிட்டு திருமதி எமிலி சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் என்ன?''

''அவர் கணவர் மீதான வெறுப்பின் வெளிப்பாடு, வேற என்ன?''

''ஆஹ்... பொய்ரெட்! நீ எல்லாவற்றையும் விளக்கிட்டே'' என்றேன் நான்... சிறு பெருமூச்சோடு! ''எல்லாமும் மிக சந்தோஷமான முடிவாய் அமைந்து விட்டதுல எனக்கு சந்தோஷமே. ஜானும் அவரது பிடிவாத மனைவி மேரியும் கூட சேர்ந்துட்டாங்களே!''

''எனக்கு தான் இதுக்கு நன்றி சொல்லணும்.''

''அப்படி எப்படி சொல்றே?''

''ஆருயிர் நண்பா! எதேச்சையா.. எதிர்பாராமத் தான் அவங்க ரெண்டு பேரும் மறுபடியும் ஒண்ணு சேர்ந்திருக்காங்கன்னு உனக்குப் புரியலியா? ஜான் அவரது மனைவியை விரும்பிக்கிட்டுத்தான் இருந்தார். அவங்களும் கூடத்தான். ஜானைப் போலவே சமமான அளவுக்கு அன்பு செலுத்துகிற பெண்தான் மேரியும்! ஆனா ரெண்டுபேரும் பாலம் கட்ட முடியாத அளவுக்கு இரு வேறு சமவெளிகளா பிரிஞ்சுட்டாங்க. இதெல்லாம், கருத்து வேற்றுமையின் விளைவுகள். அவங்க ஜானின்மீது காதல் கீதல் எதுவுமே இல்லாமத்தான் கலியாணம் பண்ணிக்கிட்டாங்க. ஜானுக்கும் இது தெரியும். ஜானோ ஓர் உணர்வுபூர்வமான மனுஷன். மனைவியா வந்து காதலைத் தெரிவிக்கிற வரைக்கும் பலாத்காரமா அவங்களைத் தன்வசப்படுத்த ஜான் விரும்பலே. இதனால அவர் விலக ஆரம்பிக்க... மேரியின் காதல், உறக்கம் கலைஞ்சு எழுந்தது. இருந்தாலும், ரெண்டு பேரும் தற்பெருமையும் தலைக்கனமும், அதிகம் உள்ளவங்க. எங்கே சேர்றது...? பிரிஞ்சுக்கிட்டே போனாங்க... அவர் தன்னையறியாம திருமதி ரமோலாவிடம் கலந்துவிட, இதனால, வேண்டும் என்றே டாக்டர் பௌரீஸிடம் நட்பை உருவாக்கிக் கொள்ளும் முயற்சியில் மேரி இறங்கினாங்க. ஜான் கைதான அன்று, ஒரு முக்கியமான முடிவை செயல் படுத்துவதில் எனக்கு நானே அதிகமா ஆலோசனை செய்து, மனசுக்குள்ளேயே போராடி, கடைசியில அதனை உடனடியா நிறைவேற்றாம, நிதானமா யோசித்து நான் ஒத்திப் போட்டது... உனக்கு நினைவிருக்கா?''

''ஆமாம், நீ பெரும் குழப்பத்திலிருந்தே...''

Scanned by CamScanner

''அப்படி கிடையாது. குழப்பமல்ல அது. நிதானம். நீ துளியும் சரியா புரிஞ்சுக்கலே. 'அப்போவே ஜானை விடுதலை செய்து விடுவதா.. வேண்டாமா...?' என்று முடிவெடுப்பதுல நான் யோசிச்சுக்கிட்டு இருந்தேனே ஒழிய, நீ நினைப்பது மாதிரி அல்ல. ஜானை அந்தக் கணத்துல வெளியே கொண்டு வந்திருக்கலாம் - ஆனா, உண்மையான குற்றவாளிகளைக் கம்பிக்குப் பின்னால் அடைப்பதில் தோல்வி கண்டிருப்போம். என்னுடைய அணுகுமுறை என்னனு தெரியாம, கடைசி வரைக்கும் குற்றவாளிகள் முழு இருட்டுல தான் வைக்கப்பட்டிருந்தாங்க. என் வெற்றிக்கு இதன் பங்கு கணிசம்.''

''விசாரணைக்கு வந்து நிற்பதிலிருந்துக் கூட உன்னால ஜானைத் தடுத்திருக்க முடியும்னா சொல்றே?''

''ஆமாண்டா, ஆமா. 'ஒரு பெண்ணின் சந்தோஷத்துக்காக' நான் வெளிப்படையா முடிவெடுக்க வேண்டியதாயிற்று! இந்தத் தலைக்கனம் பிடிச்ச ரெண்டு ஆன்மாக்களையும், உயிர் ஆபத்துல சிக்கி அதனால அணு அணுவாய் அனுபவிச்ச கோர உளவியல் சித்ரவதைக் கற்றுத் தந்த வாழ்க்கைப் பாடம் தவிர, வேறு எதுவும் ஒண்ணு சேர்த்து வெச்சிருக்க முடியாது.''

பொய்ரெட்டை, அமைதியாயும் ஆச்சரியமாயும் பார்த்தேன். கொலை செய்த குற்றத்திற்காக கைது செய்யப்படுவதுதான் இந்த ஜோடி இணை சேர ஒரே வழி என்று இவனைத் தவிர வேறு யார்தான் முடிவு கட்டியிருப்பார்கள்!

''நீ நினைக்கிறது எனக்குப் புரியுது'' என்றான் பொய்ரெட். புன்முறுவினான். ''ஓர் ஆணும் ஒரு பெண்ணும் மறுபடியும் இணைந்துப் பெறும் சந்தோஷத்தைவிட வேறு எதுடா இவ்வுலகில் சாஸ்வதம்?''

பொய்ரெட்டின் இந்த வார்த்தைகள் சமீபத்தில் நடந்த சில நிகழ்வுகளுக்கு என்னை மீண்டும் இழுத்துச் சென்றன. வெளிறிப் போய் உடல் பலமனைத்தும் அற்ற நிலையில் அமர்ந்திருந்தார் மேரி. கீழே அழைப்பு மணி ஒலித்தது. படபடத்தார். பொய்ரெட் கதவினைத் தள்ளித் திறந்து கொண்டு வந்தான். பயக்கலவர மாயிருந்த மேரியின் கண்களைச் சந்திக்கும் அவன், ''மேடம்...'' என அழைத்தான் கனிவாய். ''அவரை உங்களுக்காக மறுபடியும் மீட்டுக் கொண்டு வந்திருக்கேன்.'' ஒதுங்கி விட்டான். நான்

Scanned by CamScanner

இக்காட்சியிலிருந்து விலகிப் போகும்போது, மேரியை ஜான் தனக்குள்ளே ஆழமாய் அணைத்துக் கொள்ள, அங்குப் பளபளத்த மேரியின் கண்கள் இப்போது நினைவுக்கு வந்தன.

''நீ சரியா சொன்னே பொய்ரெட்'' என்றேன் நான். ''ஆமாம், அதுதான் சாஸ்வதம்.''

திடுமென்று திறந்திருந்த வாசல் கதவு தட்டப்பட்டு, சிந்தியா உள்ளே நுழைந்தாள்.

''நா... நா... நான்... தான்...''

''வா'' குதித்தெழுந்து சொன்னேன் நான்.

''நா.. நான் ஒரு விஷயம் சொல்ல வந்தேன்.''

''அப்படியா?''

சிந்தியா தன் கை விரல்களை மடக்கித் திருகிக் கொஞ்ச நேரம் தயங்கிவிட்டு, பிறகு மிக பூரித்தவளாய், ''நீங்க ரெண்டு பேரும் என் உயிர்'' என்றாள். என் கன்னத்தில் முதலிலும் பின் பொய்ரெட்டின் கன்னத்திலும் முத்தங்களைப் பதித்தாள். அறையை விட்டு ஓடி விட்டாள்.

''இதுக்கு என்ன அர்த்தம்?'' அலறினேன் நான். சிந்தியாவால் முத்தம் அடைவது சுகம்தான். ஆனால் உடனேயே அவள் இப்படி ஓடிவிட்டது குழப்பியது.

''இதுக்கு.. அவ நினைத்த அளவுக்கு திரு. லாரன்ஸ் அவளை வெறுக்கலை என்பதைக் கண்டுபிடிச்சுட்டா'னு அர்த்தம்!'' பொய்ரெட் பதிலளித்தான்.

''அப்.. அப்.. அப்படியா?''

''இதோ.. அவரே!''

லாரன்ஸ் இப்போது கதவருகில் நிழலாடினான்.

''வாங்க மாப்பிள்ளை, லாரன்ஸ்'' - என்ற பொய்ரெட், ''உங்களை வாழ்த்த வேண்டிய தருணம் இது! சரிதானே?'' எனக் கேட்டான்.

லாரன்ஸ் வெட்கப்பட்டான். மாள முடியாதபடி புன்னகைத் தான். காதலை வெளிப்படுத்தும் ஆண்மகனைப் போன்ற சேஷ்டை வேறு கிடையாது! இப்போது சிந்தியா பூரித்துத் தெரிந்தாள்.

அவர்கள் அகன்றதும், நான் பெருமூச்சு விட்டேன்.

''எதுக்குடா இத்தனை காத்து?''

Scanned by CamScanner

''ஒண்ணுமில்லே'' – நான் முகம் வாடி வருத்தமாய் சொன்னேன். ''அவங்க ரெண்டு பேருமே கவர்ந்து இழுக்கக் கூடிய பெண்கள்'' என்றேன்.

''அந்த ரெண்டு பேருமே உனக்கு இல்லே'' என்று முடித்தான் பொய்ரெட். ''விட்றா. மனசை ஆத்திக்கோ. ரெண்டு பேருக்கும் அடுத்த வழக்கு வராமலாப் போகும்? அப்போ, உன்கூட, நானும், தீவிரமா, வேட்டையில...''

(முடிந்தது)

Mohanpreethi0707.mp@gmail.com

Scanned by CamScanner

துப்பறியும் புதினத்தின் சக்கரவர்த்தினியாக பிற்காலத்தில் அறியப்பட்டு, இலக்கிய வரலாற்றில் ஷேக்ஸ்பியருக்கு அடுத்து மிக அதிகமான பிரதிகள் விற்கும்படி புதினங்கள் படைத்தவர் என்ற நீங்காப் பெருமையுடன் வரலாற்றில் இடம் பிடித்துள்ள அகதா கிறிஸ்டியின் முதல் நாவல் இது!

ஹெர்குல் பொய்ரெட்- ஒரு மாபெரும் துப்பறியும் நிபுணர். இப்படி ஒரு கற்பனை நபரை உலவவிட்டு, உண்மையில் அவர் இருப்பதாகவே மக்களை நம்ப வைத்தார். அகதா மிகப் பெரிய அளவில், ஷெர்லக் ஹோம் என்ற கற்பனைத் துப்பறியும் நிபுணர் பேசப்பட்டார். இவருக்கு அடுத்த இடத்தில் பொய்ரெட் இருக்கிறார்.

பொய்ரெட் துப்பறியும் நாவல்களில் ஆழமான மர்ம முடிச்சுகள் இருப்பதும் அதைத் தன் திறமையால் அவிழ்ப்பதும் இவரது இயல்பு. அதனால்தான் குறிப்பிடத் தகுந்த நாவல்களில் பொய்ரெட் துப்பறியும் நாவல்கள் இடம் பெறுகின்றன. இந்த நாவல்கள் அனைத்திற்கும் அடிப்படையான ஹெர்குல் பொய்ரெட் என்ற கற்பனைத் துப்பறியும் நிபுணர் பிறந்தது, இந்த நாவலில்தான்...

கதாபதி

ISBN 978-81-8402-461-6
9 788184 024616
Rs: 90

Scanned by CamScanner